வெளியீடு 26-4-2004

Issued 26-4-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, மே 10, 2003 தொகுதி 51

Saturday, the 10th May, 2003 – Volume 51

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

V-11,31'P33
V03·51
317/2004

**10-5-2003**

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 23 மற்றும் 35) (இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது) | I, 73-165 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் அமைச்சர்கள் விடைகளுடன் (பட்டியல்கள் 24 முதல் 34) (இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது) | I, 166-1431 |
| **2. கவன ஈர்ப்பு—** | |
| அனுமதிக்கப்பெற்று, அமைச்சர்கள் விவர அறிக்கைகளுடன் (1 முதல் 29 வரை) (இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது) | 1, 1432-1483 |
| **3. சட்டமுன்வடிவுகளின் நகல்கள் தாமதமாக வந்ததால், படித்து, பேசுவதற்கு நேரமில்லை எனத் தெரிவிக்கப்பட்ட கருத்து—** | 2-5 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு, 2003 | 4, 5 |
| (ஆ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டமுன்வடிவு, 2003 | 6 |

| | பக்கங்கள் |
|---|---|
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—தொடர்ச்சி | |
| (இ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2003 | 6-7 |
| (ஈ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 7-8 |
| (உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 8-9 |
| (ஊ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 9-10 |
| (எ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 10-11 |
| **5. அறிவிப்புகள்**— | |
| (அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.) | 10 |
| (ஆ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.) | 27 |
| (இ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் | 38-64 |
| **6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)** | |
| (அ) குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2003 | 11-13 |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 11, 12-13 |
| (ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 13-15 |
| மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் | 13-14 |





| | பக்கங்கள் |
|---|---|
| **6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி | |
| (இ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகளைக் கொண்டு வருவதன் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 15-17 |
| மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 15-16 |
| (ஈ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 17-19 |
| மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 17-18 |
| (உ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 19-21 |
| மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 19-20 |
| (ஊ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு, 2003 | 23-25 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 23-24 |
| (எ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டமுன்வடிவு, 2003 | 25-27 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 25-27 |
| (ஏ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2003 | 28-29 |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 28-29 |
| (ஐ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 30-31 |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 30-31. |

| | பக்கங்கள் |
|---|---|
| **6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி | |
| (ஒ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 32-33 |
| மாண்புமிகு திரு. ப. மோகன் | 32, 33 |
| (ஓ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 34-35 |
| மாண்புமிகு திரு. ப. மோகன் | 34, 35 |
| (ஔ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 36-37 |
| மாண்புமிகு திரு. எம். சி. சம்பத் | 36, 37 |
| **7. அரசினர் தீர்மானங்கள்**— | |
| (அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் | 21-22 |
| (ஆ) பேரவை விதி 25 (1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் | 65 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— | 66-71 |


226059

தமிழ்நாடு ... காப்பகம்
226059
நூலகம்



## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் - திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்**

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. **முதலமைச்சர்** .. | **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன். |
| 2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. | **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள். |
| 3. **நிதி அமைச்சர்** .. | **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல். |
| 4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. | **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல். |

| | | |
|---|---|---|
| 5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** இந்து சமய மற்றும் அறநிலையங்கள். |
| 6. மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர். |
| 7. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன். |
| 8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு. |
| 9. வேளாண்மைத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு. |



| | | |
|---|---|---|
| 10. சமூக நலத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, உடல் ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம். |
| 11. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன். |
| 12. போக்குவரத்துத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள். |
| 13. மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல். |
| 14. வணிக வரித் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** வணிக வரிகள். |
| 15. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ப. மோகன்:** கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல். |

| | | |
|---|---|---|
| 16. உள்ளாட்சித் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |
| 17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** கால்நடை பராமரிப்பு. |
| 18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம். |
| 19. வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு. |
| 20. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 21. பால் வளத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. எஸ்.இராமச்சந்திரன்:** பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி. |



| | | |
|---|---|---|
| 22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு. |
| 23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** கைத்தறி மற்றும் துணித் தொழில். |
| 24. மீன்வளத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மீன்வளம் |
| 25. சுற்றுலாத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. அ. மில்லர்:** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR - THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation. Prohibition and Excise. Molasses. Prevention of corruption. Prisons. Revenue. District Revenue Establishment, Deputy Collectors. Registration. Stamp Act. Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan :** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar :** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy :** Hindu Religious and Charitable Endowments. |

6. Minister for Health and Education .. **The Hon. Thiru S. Semmalai:** Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

7. Minister for Backward Classes .. **The Hon. Thiru A. Papasundaram:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

8. Minister for Labour .. **The Hon. Thiru A. Anwer Rhazza:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

9. Minister for Agriculture .. **The Hon. Thiru R. Jeevanantham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

10. Minister for Social Welfare .. **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

11. Minister for Adi-Dravidar Welfare .. **The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex Servicemen.



12. Minister for Transport .. **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

13. Minister for Electricity and Industries .. **The Hon. Thiru Nainar Nagenthran:** Electricity, Non-conventional energy development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.

14. Minister for Commercial Taxes .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:** Commercial Taxes.

15. Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection .. **The Hon. Thiru P. Mohan:** Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

16. Minister for Local Administration .. **The Hon. Thiru M.C. Sampath:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

17. Minister for Animal Husbandry .. **The Hon. Thiru P.V. Damodaran:** Animal Husbandry.

18. Minister for Rural Industries .. **The Hon. Thiru R. Vadivel:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

| | | |
|---|---|---|
| 19. **Minister for Forests and Environment** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Enviornment and Pollution Control. |
| 20. **Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority |
| 21. **Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |
| 22. **Minister for Information and Publicity** | .. | **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control. |
| 23. **Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| 24. **Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| 25. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள்*

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

*28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முகஉதவியாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அமீர் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. ம. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |



| | | |
|---|---|---|
| திரு. சு. பாலசந்தர், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திரராஜ் பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ | .. | சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சாஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - | சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். | - | தலைமை நிருபர் (விடுப்பு) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - | தலைமை நிருபர் (பொறுப்பு) |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | - | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. | பொன்னமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | ... | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | - | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சே. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடானை
28. இராமச்சந்திரன், திரு. என். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. பு.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கேசவன். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. பா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. .. போணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்

64. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

65. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்

66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)

67. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)

68. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்

70. கோதண்டராமன், திரு. ஜி. .. முதையூர்

71. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்

73. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி

74. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)

75. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்

76. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

77. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செவ)

78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

79. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி

80. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்

81. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை

82. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி

83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை

84. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)

85. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை



86. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்

87. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பாம்

88. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)

89. சாமி, திரு. ஆர். .. மேலூரர்

90. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

91. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்

92. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)

93. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை

94. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்

95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்

96. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

97. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

98. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

99. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)

100. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்

101. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி

102. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்

103. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

104. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்

105. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)

106. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்

107. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்

108. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்

109. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி

110. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

111. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்

112. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்

113. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்

114. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

115. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்

116. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்

118. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)

119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்

120. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்

121. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்

122. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி

123. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)

124. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்

125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு

126. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்

127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி

128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்

129. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)

130. துரைமுருகன், திரு. .. காட்பாடி



131. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி

132. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு

133. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்

134. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி

135. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்

136. நடராசன், திரு. வ.து. .. இளையான்குடி

137. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி

138. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு

139. நளினி மனோகரன், திருமதி .. போளூர்

140. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு

141. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு

142. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்

143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்

144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்

145. பதினெட்டாம்படியான், திரு. சு. .. முதுகுளத்தூர்

146. பாணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-I

147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)

149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை

150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்

152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர் - தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே. கே. - ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)



173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
177. மணி, திரு. டி. - விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. - கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. - தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. - சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
194. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு. பி.சி. - மொடக்குறிச்சி

152. பன்னீர்செல்வம்,
திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு

155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை

156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)

157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி

158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி

159. பாலசுப்பிரமணியன்,
திரு. எஸ்.ஆர் - தொண்டாமுத்தூர்

160. பாலசுப்ரமணியன், திரு. கே. கே. - ஸ்ரீரங்கம்

161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்

162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி

163. பால் மனோஜ் பாண்டியன்,
திரு. பி.எச். - சேரன்மகாதேவி

164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்

166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)

167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)

168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்

169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்

170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)

171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு

172. போளூர் வாதன், திரு. - செங்கம் (செ.வ.)



173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)

174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)

175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு

176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்

177. மணி, திரு. டி. - விளவங்கோடு

178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்

179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை

180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி

181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி

182. மில்லர், திரு. அ. - கூடலூர்

183. முரளிதரன், திரு. கே.வி. - தளி

184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)

185. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்

186. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை

188. மோகன், திரு. ப. - சின்னசேலம்

189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்

191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை

192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்

193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்

194. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை

195. ராமசாமி, திரு. பி.சி. - மொடக்குறிச்சி

196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ - சிவகாசி
199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். - காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்
205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி



217. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-I
220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
222. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
223. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
225. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
226. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்
227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி
228. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி
231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 27, சுபானு-திருவள்ளுவர் ஆண்டு 2034**

**2003 மே 10, சனிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு*
*இடும்பை படாஅ தவர்."*

*துன்பம் சூழும்போது துவண்டு போகாதவர்கள் அந்தத் துன்பத்தையே துன்பத்தில் ஆழ்த்தி அதனைத் தோல்வியுறச் செய்வார்கள்.*

## 1. வினாக்கள்-விடைகள்

*** (அ) உடுக்குறியிடாத வினாக்கள்**

**(பட்டியல்கள் 23 மற்றும் 35)**
**(இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது)**

**** (ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் அமைச்சர்கள் விடைகளுடன் (பட்டியல்கள் 24 முதல் 34)**
**(இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது)**

## *** 2. கவன ஈர்ப்பு

**அனுமதிக்கப்பெற்று, அமைச்சர்கள் விவர அறிக்கைகளுடன்**
**(1 முதல் 29 வரை)**
**(இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது)**

---

* *73 முதல் 165 வரையிலான பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.*

** *166 முதல் 1431 வரையிலான பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.*

*** *1432 முதல் 1483 வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. சட்டமுன்வடிவுகளின் நகல்கள் தாமதமாக வந்ததால், படித்து, பேசுவதற்கு நேரமில்லை எனத் தெரிவிக்கப்பட்ட கருத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I raise a point of order. அரசினர் சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்வதற்கு முன்பாக, கொடுக்கப்பட்டிருக்கிற சட்டமே—Bill எங்களுக்கு circulate ஆகவில்லை. நான் என்னுடைய கட்சித் தோழர்களிடத்திலே எல்லாம் விசாரித்தேன். அவர்களுக்கும் circulate ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவை கடைசியாகத்தான் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** கொஞ்சம் பேசுவதற்கு அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வது என்ன என்பது புரிகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** On behalf of the Communist Party of India (Marxist) நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். அதாவது, இன்றைக்கு அறிமுகம் செய்யப்படுகிற 7 சட்டங்களும் மிக முக்கியமான சட்டங்கள். மக்களுடைய வாழ்வோடு இன்றியமையாத ரிலேஷன்ஸ் இருக்கிற சட்டங்கள். இந்தச் சட்டங்கள் இன்றைக்குக் காலையில் 8 மணிக்குத்தான் எங்களுக்கு சர்வ் பண்ணப்பட்டது. அவற்றைப் படிப்பதற்கான நேரம் இல்லை. அதிலே பல விஷயங்களில் financial implications இருக்கின்றன. நிலச் சீர்திருத்தங்கள்கூட கொண்டு வரப்படுகின்றன. ஏற்கெனவே இருக்கிற Land Ceiling Act-ஐ எல்லாம் பார்த்து, அதுசம்பந்தமாகக் கருத்துகளைச் சொல்ல வேண்டும். அதற்கான வாய்ப்புகள் இல்லாமல், இன்றைக்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு அஜெண்டாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்டு) சார்பிலே என்னுடைய வேண்டுகோள்



என்னவென்றால், இன்றைக்கு அறிமுகம் செய்யப்படுகிற சட்டங்களை விவாதிப்பதற்கு இன்னொரு நாள், அதாவது அடுத்த திங்கட்கிழமை அல்லது ஒரு short interval-ல் சபையைக் கூட்டி, ஒன்றோ, இரண்டோ நாட்களில் இந்த மாதிரியுள்ள சட்டங்கள்மீது எங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்புத் தர வேண்டும். வாய்ப்புத் தராமல்—உங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது; நீங்கள் நிறைவேற்றலாம். அது வேறு விஷயம். ஆனாலும்—எங்களுக்குள்ள கருத்துகளை நாங்கள் சொல்ல வேண்டும் அல்லவா? அந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. உட்காருங்கள். சொல்லிவிட்டீர்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** We are also representing the...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, சட்டமுன்வடிவு என்பது அவசரத்திற்காகத்தான் கொண்டு வரக்கூடியது. (குறுக்கீடு) இல்லை. சட்டமுன்வடிவுகள் என்ன என்பது, உங்களுக்கு 8 மணிக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. என்ன என்பது தெரியும். அதைப் புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் உங்களுக்கு நிச்சயமாக உண்டு. (குறுக்கீடு) இல்லை. அதுபற்றி உங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்குத் தாராளமாக வாய்ப்பு இருக்கிறது. அந்தச் சட்டத்தின் மீது உங்களுடைய கருத்தைச் சொல்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அவற்றைப் பதிவு செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை. இப்போது அறிமுகம்தான். உட்காருங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அதாவது, இந்தச் சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்வதற்கு...

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டத்தினுடைய பாலிசி என்ன என்பதை—if at all you have got any objection to raise in regard to policy, you are at liberty. கொள்கை அடிப்படையில் எந்தெந்த மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றனவோ, அவற்றை நீங்கள் ரெக்கார்டு செய்யலாம். (குறுக்கீடு) நீங்கள் ரெக்கார்டு செய்யலாம்; அவைக் குறிப்பில் பதிவாக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நான் சொல்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, சட்டங்கள் எந்த விதியின் படி, என்ன என்பதைப் பார்க்க வேண்டாமா? அந்த விதிகளின்

மேலே இருக்கிற கருத்துகளைச் சொல்ல வேண்டாமா? வெறும் பாலிசி மட்டும் இல்லையே! சட்டம் என்று சொல்கிற நேரத்திலே, சட்டத்தின், விதியின்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 8 மணிக்கு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதுபற்றிய உங்களுடைய கருத்தைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

## 3. சட்டமுன்வடிவுகளின் நகல்கள் தாமதமாக வந்ததால், படித்து, பேசுவதற்கு நேரமில்லை எனத் தெரிவிக்கப் பட்ட கருத்து—தொடர்ச்சி

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Honourable Speaker Sir, even without circulating the Bill, how can it be moved?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சர்குலேட் செய்தாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, It is absolutely wrong to say that the Bill is not circulated. Bills have been already circulated on time.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று இரவே கொடுக்கப்பட்டுவிட்டது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, கிடைக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. கிடைக்கவில்லை என்றால் என்னவென்று கேளுங்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (அ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு, 2003—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*முற்பகல் 10-05*

### (ஆ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஈ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஊ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)–

தொடர்ச்சி

### (எ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2003), மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2003)[@] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 9-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2003 மே 10

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முற்பகல் 10-10

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2003 மே 10] [திரு. டி. ஜெயக்குமார்]

"2003 ஆம் ஆண்டு குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2003), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@9-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2003 மே 10

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.



2003 மே 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (இ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகளைக் கொண்டு வருவதன் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகளைக் கொண்டு வருவதன் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2003), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகளைக் கொண்டு வருவதன் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 9-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் சரக்குகளைக் கொண்டு வருவதன் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

முற்பகல் 10–15

## (ஈ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2003), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 9-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2003 மே 10

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2003 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (உ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2003), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 9-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 7. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் பற்றிய அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, இன்று அறிமுகம் செய்யப்பட்ட பின்வரும் 7 சட்டமுன்வடிவுகள் இன்றைக்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்:

(1) 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2003)

(2) 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2003)

(3) 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2003)

*(4) 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2003)*

*(5) 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2003)*

*(6) 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2003)*

*(7) 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2003)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்) (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** I oppose it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2003), மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.*

*முற்பகல் 10—20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், பேசுகிறீர்களா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ *10—5—2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.*

[பேரவைத் தலைவர்] [2003 மே 10

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2003 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஏ) தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2003), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், பேசுகிறீர்களா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை. நான்தான் ஏற்கெனவே என்னுடைய நிலையைத் தெளிவுபடுத்தி இருக்கிறேனே! படிக்காமல் என்ன பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. (குறுக்கீடு) இல்லை, இல்லை, உங்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொன்னது தவறு, ஹேமச்சந்திரன். இரவே எல்லோருக்கும் கொடுக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) இரவே எல்லோருக்கும் வந்துவிட்டது. காலையிலே 8 மணிக்கு உங்களுக்கு...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை...

---

@ 10-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை...

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை...

**திரு. ப. அரசன்:** இல்லை, இல்லை, இரவு வரவில்லை.

**திரு. எச். ராஜா:** காலையிலேதான் வந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிர்வாகத்தில் பொறுப்புடைமைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2003)-ஐப் பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2003.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2003), மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

முற்பகல் 10—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 10-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2003), நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2003 மே 10

**(ஐ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2003), மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2003)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 18 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 18 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 10-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2003 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2003), நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2003 மே 10

**(ஓ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2003), மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 10—5—2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2003 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2003), நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஒ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2003), மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 10–5–2003 ஆம் நாளிட்ட த... ...றப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2003), நிறைவேற்றப் பெறவேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2003 மே 10

## (ஓ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2003), மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2003)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 34 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 34 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 10-5-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2003 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2003), நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டம் 2003 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாள் மேதகு ஆளுநர் அவர்கள் உரையுடன் தொடங்கி, ஜனவரி திங்கள் 31 வரை நடைபெற்றது.

முற்பகல் 10-35

அக்கூட்டத் தொடரின் இரண்டாவது கூட்டம் 2003 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் நாள் மாண்புமிகு நிதியமைச்சரால் வரவு-செலவுத் திட்டம் அளிக்கப்பட்டபோது தொடங்கி, இன்று வரை நடைபெற்று வருகிறது.

இந்தக் கூட்டத் தொடரில் பேரவை கூடிய மொத்த நாட்கள் 35 ஆகும். அவற்றில் பேரவை 12 நாட்கள் மாலையிலும் கூடியது.

பேரவைக் கூட்டம் நடைபெற்ற நேரம்—140 மணி 04 நிமிடம் (9-5-2003 முடிய).

மேதகு ஆளுநர் அவர்கள் 2003 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாள் அன்று பேரவைக்கு உவந்தளித்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது 4 நாட்கள் விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்தில் 25 உறுப்பினர்கள் பங்கேற்றனர். அவ்வுறுப்பினர்கள் உரையாற்றிய மொத்த நேரம் (குறுக்கீடுகள் தவிர) 9 மணி 13 நிமிடம் ஆகும்.

அதில் ஆளுங்கட்சியினர் 7 பேர்தான் பேசியுள்ளனர். அவர்கள் பேசிய மொத்த நேரம் 2 மணி 45 நிமிடங்கள் ஆகும். அதாவது 29.83 விழுக்காடு.

இதர கட்சியினர் 18 பேர் உரையாற்றியுள்ளனர். உரையாற்றிய மொத்த நேரம் (குறுக்கீடுகள் தவிர) 6 மணி 28 நிமிடம் ஆகும். அதாவது 70.17 விழுக்காடு. ஆக, இதர கட்சியினருக்குக் கூடுதலாக 3 மணி 43 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. குறுக்கீடுகளைச் சேர்த்தால் இன்னும் அதிக நேரம் வரும். இதிலிருந்து, பேரவைத் தலைவர் எதிர்க்கட்சிகளுக்குப் போதுமான வாய்ப்பு



அளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்பது நன்கு விளங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தருணத்தில் பேரவையில் உள்ள கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் பேரவைத் தலைவர் தவிர, உறுப்பினர் என்ற முறையில் கட்சியின் சார்பில் விவாதத்தில் கலந்து கொள்ளக்கூடிய உறுப்பினர்கள் எண்ணிக்கை 208 ஆகும்.

இதில் அமைச்சர்கள் மற்றும் பேரவைத் தலைவர் நீங்கலாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 113 ஆகும். அதாவது 54.32 விழுக்காடு. பேரவைத் தலைவர், அமைச்சர்கள் நீங்கலாகக் கணக்கிட்டாலும்கூட, விவாதத்தில் கட்சி சார்பில் பேசக்கூடிய நிலையில் உள்ள உறுப்பினர்களில் ஆளுங்கட்சியினர் 54 சதவிகிதத்திற்கு மேல் இருந்தாலும், விவாதத்தில் ஆளுங்கட்சிக்கு 29.93 சதவிகித அளவுதான் நேரம் அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய நேரம் முழுவதும் எதிர்க்கட்சிகளுக்கே அளிக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 30 பேர். 14.43 விழுக்காடு.

இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் 25 பேர். 12.03 விழுக்காடு.

பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் 19 பேர். 9.13 விழுக்காடு.

இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் 6 பேர். 2.89 விழுக்காடு.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் 5 பேர். 2.40 விழுக்காடு.

பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் 5 பேர். 2.40 விழுக்காடு.

அகில இந்திய பார்வர்ட் பிளாக் உறுப்பினர் ஒருவர். 0.48 விழுக்காடு.

சுயேச்சை உறுப்பினர்கள் இருவர். 0.96 விழுக்காடு.

எக்கட்சியையும் சாராதவர் ஒருவர். 0.48 விழுக்காடு.

நியமன உறுப்பினர் ஒருவர். 0.48 விழுக்காடு.

முற்பகல் 10-40

ஆளுங்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் எதிர்க்கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அகில இந்திய பார்வர்ட் பிளாக், பாரதிய ஜனதா கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், உரையாற்றியோர் எண்ணிக்கை மற்றும் விவரத்தைக் குறிப்பிடுகிறேன்:

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நிகழ்த்தப்பட்ட உரைகள் 7, 2 மணி 45 மணித்துளிகள். 29.83 விழுக்காடு.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நிகழ்த்தப்பட்ட உரை 1, 24 மணித்துளிகள். 4.33 விழுக்காடு.

இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக நிகழ்த்தப்பட்ட உரைகள் 2, 36 மணித்துளிகள். அது 6.50 விழுக்காடு.

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நிகழ்த்தப்பட்ட உரைகள் 3, அது 18 மணித்துளிகள். அது 14.10 விழுக்காடு.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நிகழ்த்தப்பட்ட உரைகள் 3, அது 1 மணி 9 மணித்துளிகள். அது 12.47 விழுக்காடு.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நிகழ்த்தப்பட்ட உரை 1, அது 27 மணித்துளிகள். அது 4.88 விழுக்காடு.

அகில இந்திய பார்வர்ட் பிளாக் சார்பாக நிகழ்த்தப்பட்ட உரை 1, அது 22 மணித்துளிகள். அது 3.97 விழுக்காடு.

பாரதிய ஜனதா கட்சி சார்பாக நிகழ்த்தப்பட்ட உரைகள் 2, அது 30 மணித்துளிகள். அது 5.42 விழுக்காடு.

சுயேச்சை, 2 உரைகள், அது 26 மணித்துளிகள். அது 4.70 விழுக்காடு.

தமிழ் மாநில காமராஜ் காங்கிரஸ் சார்பாக நிகழ்த்தப்பட்ட உரைகள் 3, அது 1 மணி 16 மணித்துளிகள். அது 13.74 விழுக்காடு.

உறுப்பினர்கள் எண்ணிக்கை விகிதாச்சார அடிப்படையில் நேரம் ஒதுக்குவதே நியாயமான நடைமுறையாகும். அப்படி நான் நேரம்



ஒதுக்கினால், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இவ்வளவு நேரம் பேச வாய்ப்புக் கிடைக்காது. தன்னுடைய கட்சி உறுப்பினர்கள் மிக அதிக அளவில் இருந்தாலும், சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அதிக அளவு வாய்ப்புத் தரவேண்டும் என்பதற்காகப் பெருந்தன்மையுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விட்டுக் கொடுத்து, ஆளுங்கட்சிக்குரிய நேரத்தை எதிர்க்கட்சிகளுக்கு ஒதுக்க வழிவகுத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 12-வது பேரவை துவங்கி 2 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் தங்கள் கன்னிப் பேச்சையே ஆற்ற வாய்ப்புக் கிடைக்காமல் இருக்கிறார்கள் என்பதிலிருந்தே இந்த உண்மை தெள்ளத் தெளிவாகும்.

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 மணி 56 நிமிடங்கள் பதிலுரை ஆற்றியுள்ளார்கள். இது தவிர, அவ்வப்போது உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினை மற்றும் கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் விளக்கம் அளிக்கும் வகையில் 75 முறைகளுக்கும் மேல், ஒரு மணி நேர அளவிற்கு விளக்கமளித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2003-2004 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, 2003 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் நாள் அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் பேரவையில் அளிக்கப்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்தின்மீது 7 நாட்கள் பொது விவாதம் நடைபெற்றது.

அந்தப் பொது விவாதத்தில் 37 உறுப்பினர்கள் பங்கேற்றனர். இதில் உறுப்பினர்கள் உரையாற்றிய மொத்த நேரம் (குறுக்கீடுகள் இன்றி) 13 மணி 33 நிமிடங்கள் ஆகும்.

அதில் ஆளுங்கட்சியினர் 10 பேர்தான் பேசியுள்ளனர். அவர்கள் பேசிய மொத்த நேரம் (குறுக்கீடுகள் இன்றி) 4 மணி 20 நிமிடங்கள் ஆகும்.

இதர கட்சியைச் சேர்ந்தவர்கள் 27 உறுப்பினர்கள் உரையாற்றியுள்ளனர். உரையாற்றிய மொத்த நேரம் (குறுக்கீடுகள் தவிர)

[பேரவைத் தலைவர்] [2003 மே 10

9 மணி 13 நிமிடங்கள் ஆகும். ஆக, இதர கட்சியினருக்குக் கூடுதலாக 4 மணி 53 நிமிட நேரம் பேசுவதற்கு அதிக வாய்ப்புக் கொடுக்கப்பட்டது என்பதிலிருந்தே, பேரவைத் தலைவர் எதிர் கட்சிகளுக்கு வாய்ப்பு அளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்பது மட்டுமல்ல, அது நியாயமற்றது என்பதும் விளங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

உண்மை நிலையை வரவு-செலவுத் திட்டப் பொது விவாதத்தில் ஒவ்வொரு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் ஆற்றிய உரைகளின் எண்ணிக்கை மற்றும் நேரம் குறித்த கீழ்க்கண்ட விவரங்கள் தெளிவாக்கும்:

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் — நிகழ்த்தப்பட்ட உரைகள் 10, 4 மணி 20 நிமிடம். 31.98 விழுக்காடு.

திராவிட முன்னேற்றக் கழகம் — நிகழ்த்தப்பட்ட உரைகள் 5, 1 மணி 55 நிமிடம். 14.15 விழுக்காடு.

இந்திய தேசிய காங்கிரஸ் — நிகழ்த்தப்பட்ட உரைகள் 6, 2 மணி 29 நிமிடம். 18.33 விழுக்காடு.

பாட்டாளி மக்கள் கட்சி — நிகழ்த்தப்பட்ட உரைகள் 5, 1 மணி 34 நிமிடம். அது 11.56 விழுக்காடு.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) — நிகழ்த்தப்பட்ட உரைகள் 4, 1 மணி 15 நிமிடம். அது 9.22 விழுக்காடு.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி — நிகழ்த்தப்புட்ட உரைகள் 3, 49 நிமிடம். அது 6.03 விழுக்காடு.

அகில இந்திய பார்வர்ட் பிளாக் — நிகழ்த்தப்பட்ட உரை 1, 26 நிமிடம். அது 3.19 விழுக்காடு.

பாரதிய ஜனதா கட்சி — நிகழ்த்தப்பட்ட உரைகள் 3, அது 45 நிமிடம். அது 5.54 விழுக்காடு.

முற்பகல் 10-45

நான் ஏற்கெனவே தெரிவித்தவாறு, இதிலும் 54 சதவிகிதத்திற்கு மேல் உள்ள ஆளுங்கட்சியினருக்கு 31.98 சதவிகிதம்தான் நேரம் கொடுக்கப்பட்டுள்ளது.



2003 மே 10] [பேரவைத் தலைவர்]

இந்தக் கூட்டத் தொடரில் மொத்தம் 49 மானியக் கோரிக்கைகள் விவாதித்து நிறைவேற்றப்பெற்றன. எந்த ஒரு மானியக் கோரிக்கையும் கில்லட்டின் செய்யப்படவில்லை என்பது உறுப்பினர்கள் அனைவருக்கும் மன நிறைவு அளிக்கக்கூடிய ஒன்று.

இந்த 49 மானியக் கோரிக்கைகள்மீது 20 நாட்கள் விவாதம் நடைபெற்றது. அதில் மாலையிலும் 8 நாட்கள் விவாதம் நடைபெற்றது.

இந்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் மொத்தம் 157 உரைகள் உறுப்பினர்களால் ஆற்றப்பட்டுள்ளன.

உறுப்பினர்கள் உரையாற்றிய மொத்த நேரம் (குறுக்கீடுகள் தவிர) — 37 மணி 35 நிமிடங்கள்.

இதில் ஆளுங்கட்சியினர் ஆற்றிய உரைகள் 47 மட்டுமே. அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் - 10 மணி 36 நிமிடம். அது 28.2 விழுக்காடு.

இதர கட்சியினர் ஆற்றிய உரைகள் 110, பேசிய நேரம் 26 மணி 59 நிமிடம், அது 71.8 விழுக்காடு.

இதர கட்சியினருக்கு ஏறக்குறைய 16 மணி 23 நிமிட நேரம் கூடுதலாகப் பேச ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் முக்கியமான ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தங்களது கட்சி உறுப்பினர்கள்மீது பேரவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டமைக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 10-4-2003 முதல் அவைக்கு வந்து விவாதத்தில் பங்குகொள்ளவில்லை.

அவர்களும் வந்து நடவடிக்கைகளில் பங்குகொண்டிருந்தால், நிச்சயமாக ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போதும், வரவு-செலவுத் திட்டப் பொது விவாதத்தின்போதும் அளிக்கப்பட்டதுபோல், மானியக் கோரிக்கை விவாதத்தின்போதும் பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் அவர்கள் தங்கள் கருத்துகளை முன்வைக்க வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கும்.

அத்தகைய நேர்வில் ஆளுங்கட்சியினருக்கு இந்த அளவுகூட விவாதத்தில் பங்குகொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்காது என்பதை அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மானியக் கோரிக்கை விவாதத்தில் ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் எத்தனை உரைகள் ஆற்றப்பட்டுள்ளன, எவ்வளவு நேரம் (குறுக்கீடுகள் நீங்கலாக) எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது என்ற விவரங்களைக் குறிப்பிடுகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்— நிகழ்த்தப்பட்ட உரைகள் 47, 10 மணி 36 மணித்துளிகள். அது 28.20 விழுக்காடு.

திராவிட முன்னேற்றக் கழகம் — நிகழ்த்தப்பட்ட உரைகள் 7, அது 1 மணி 48 மணித்துளிகள். 4.79 விழுக்காடு.

இந்திய தேசிய காங்கிரஸ் — நிகழ்த்தப்பட்ட உரைகள் 19, அது 5 மணி 26 மணித்துளிகள். 14.46 விழுக்காடு.

பாட்டாளி மக்கள் கட்சி — நிகழ்த்தப்பட்ட உரைகள் 19, அது 5 மணி 10 மணித்துளிகள். 13.75 விழுக்காடு.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி — நிகழ்த்தப்பட்ட உரைகள் 18, அது 4 மணி 44 மணித்துளிகள். 12.59 விழுக்காடு.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி — நிகழ்த்தப்பட்ட உரைகள் 18, அது 3 மணி 48 மணித்துளிகள். 10.11 விழுக்காடு.

அகில இந்திய பார்வர்ட் பிளாக் — நிகழ்த்தப்பட்ட உரைகள் 5, அது 1 மணி 8 மணித்துளிகள். 3.02 விழுக்காடு.

பாரதிய ஜனதா கட்சி — நிகழ்த்தப்பட்ட உரைகள் 18, அது 3 மணி 41 மணித்துளிகள். 9.80 விழுக்காடு.

சுயேச்சை — நிகழ்த்தப்பட்ட உரைகள் 2, அது 31 மணித்துளிகள். 1.37 விழுக்காடு.

எக்கட்சியையும் சாராத உறுப்பினர் — நிகழ்த்தப்பட்ட உரைகள் 3, அது 38 மணித்துளிகள். 1.69 விழுக்காடு.

மானியக் கோரிக்கை விவாதத்திற்கு, தொடர்புடைய அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம் — 20 மணி 09 நிமிடம்.

இவை தவிர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தனது பொறுப்பிலுள்ள துறைகள் சம்பந்தமாக பதில் அளித்த நேரம் — 1 மணி 25 நிமிடம்.



மிகக் குறுகிய காலமே தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்கு வந்திருந்தாலும்கூட, இந்தக் கூட்டத் தொடரில் அவர்கள் கலந்துகொண்ட நாட்களில் அவர்களுக்கு அதிக அளவு நேரம் ஒதுக்கி தங்கள் கருத்துகளை முன்வைக்க வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஒரு சில புள்ளிவிவரங்களை முன்வைக்க விரும்புகிறேன்.

உதாரணமாக, டாக்டர் பொன்முடி அவர்கள் 28-1-2003 அன்று ஆளுநர் உரை மீதான விவாதத்தில் 38 நிமிடங்கள் பேசியுள்ளார். இதில் குறுக்கீடுகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாவிட்டாலும்கூட, அவர் பேசிய நேரம் 24 நிமிடங்களாகும்.

அதே உறுப்பினர் 28-3-2003 அன்று வரவு-செலவுத் திட்டப் பொது விவாதத்தில் 34 நிமிடங்கள் பேசியுள்ளார். குறுக்கீடுகளைக் கணக்கில் கொள்ளாமலேகூட அவரது உரை 22 நிமிடங்கள் நீடித்தது.

அதேபோன்று, தி.மு.க. துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் 1-4-2003 அன்று வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் 43 நிமிடங்கள் பேசியுள்ளார். அதில் குறுக்கீடுகள் வெறும் 5 நிமிடங்கள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. இதுமட்டுமல்லாமல், மற்ற உறுப்பினர்கள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் உரைகளில் குறுக்கீடு என்ற முறையில் திரு. துரைமுருகன் அவர்கள் 63 முறை குறுக்கிட்டு 22 நிமிடம் பேசியுள்ளார்.

தி.மு.க. உறுப்பினர் திரு. ஆர். சக்ரபாணி அவர்கள் 7-4-2003 அன்றைய மானியக் கோரிக்கை விவாதத்தில் 28 நிமிட நேரம் உரையாற்றினார். குறுக்கீடுகளுக்கான நேரத்தைக் கழித்தாலும்கூட 18 நிமிடங்கள் பேசியுள்ளார்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் அதன் தலைவர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் 1-4-2003 அன்று வரவு-செலவுத் திட்டப் பொது விவாதத்தில் 1 மணி 18 நிமிடங்கள் உரையாற்றியுள்ளார். குறுக்கீடுகள் நீங்கலாகப் பார்த்தாலும், 57 நிமிடங்கள் உரையாற்றியுள்ளார். இதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் உரைகளில் 53 நேர்வுகளில் அவர் குறுக்கிட்டு 23 நிமிடங்கள் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று, அக்கட்சியின் உறுப்பினர் திரு. விநாயகமூர்த்தி அவர்கள் 29-4-2003 அன்று மானியக் கோரிக்கை விவாதத்தில் 41 நிமிடங்கள் பேசியுள்ளார். இதில் குறுக்கீடுகள் வெறும் 8 நிமிடங்கள் மட்டுமே.

முற்பகல் 10-50

அக்கட்சி உறுப்பினரான திரு. ஞானசேகரன் அவர்கள் 24-3-2003 அன்று வரவு-செலவுத் திட்டப் பொது விவாதத்தில் 48 நிமிடங்கள் பேசியுள்ளார்கள். அதில் குறுக்கீடுகள் போக சுமார் 30 நிமிடம் அவர் உரையாற்றியுள்ளார். அதே உறுப்பினர் 8-5-2003 அன்று மானியக் கோரிக்கை விவாதத்தில் 24 நிமிடங்கள் உரையாற்றியுள்ளார். குறுக்கீடுகள் என்று பார்த்தால் வெறும் 4 நிமிடங்கள் மட்டுமே.

அக்கட்சியைச் சேர்ந்த திரு. ஜெயக்குமார் அவர்களைப் பொறுத்தவரை, அவர் 22-4-2003 அன்று மானியக் கோரிக்கை விவாதத்தில் 22 நிமிடங்கள் உரையாற்றியுள்ளார்கள். அதில் குறுக்கீடுகள் 3 நிமிடங்கள் மட்டுமே.

பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரையில், 29-1-2003 அன்று ஆளுநர் உரை விவாதத்தில் திரு. ஐ. கணேசன் அவர்கள் 56 நிமிடங்கள் உரையாற்றினார்கள். குறுக்கீடுகள் 29 நிமிடங்கள்.

அக்கட்சியின் சார்பில் திரு. ஜி.கே. மணி அவர்கள் வரவு-செலவுத் திட்டப் பொது விவாதத்தில் 1-4-2003 அன்று 1 மணி 1 நிமிட நேரம் பேசியுள்ளார். குறுக்கீடுகள் என்ற வகையில் 13 நிமிடங்களைக் கழித்தாலும், அவர் உரையாற்றிய நேரம் 48 நிமிடங்கள். திரு. மணி அவர்கள் 9-4-2003 அன்று மானியக் கோரிக்கை விவாதத்தில் 38 நிமிடங்கள் உரையாற்றியுள்ளார். அவரது உரையில் குறுக்கீடுகள் 9 நிமிடங்கள் மட்டுமே.

குறுக்கீடுகள் என்ற வகையில் திரு. மணி அவர்கள் 44 நேர்வுகளில் 19 நிமிடம் மொத்தமாகப் பேசியுள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் மற்றொரு உறுப்பினரான திரு. தி. வேல் முருகன் 23-4-2003 அன்று மானியக் கோரிக்கை விவாதத்தில் 22 நிமிடங்கள் பேசியுள்ளார். அதில் குறுக்கீடுகள் 4 நிமிடங்கள் மட்டுமே.



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை, அக்கட்சியின் தலைவர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள், 31-3-2003 அன்று வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் 38 நிமிடங்களும் (குறுக்கீடு—7 நிமிடம்), 8-4-2003 அன்று மானியக் கோரிக்கை விவாதத்தில் 28 நிமிடங்களும் (குறுக்கீடு - 6 நிமிடம்), 5-5-2003 அன்று 32 நிமிடங்களும் (குறுக்கீடு-7 நிமிடம்) உரையாற்றியுள்ளார்.

இது தவிர, திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் 33 முறைகள் குறுக்கிட்டு 9 நிமிடங்களுக்கு மேல் பேசியுள்ளார்.

29-1-2003 அன்று அக்கட்சியைச் சேர்ந்த திரு. கே. மகேந்திரன் அவர்கள் 33 நிமிடங்கள் உரையாற்றியுள்ளார். அவரது உரையில் குறுக்கீடுகள் 5 நிமிடங்கள் மட்டும்தான்.

அதேபோன்று, உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன் அவர்கள் 30-1-2003 அன்று ஆளுநர் உரை விவாதத்தின்போது 32 நிமிடங்கள் உரையாற்றியதில் 3 நிமிடங்கள் குறுக்கீடுகள் போக, அவர் பேசிய நேரம் 29 நிமிடங்களாகும். 7-5-2003 அன்று அவர் உரையாற்றிய 24 நிமிடங்களில் குறுக்கீடுகள் 4 நிமிடங்களே.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை, திரு வை. சிவபுண்ணியம் அவர்கள் 29-1-2003 அன்று ஆளுநர் உரை விவாதத்தில் 36 நிமிடங்கள் உரையாற்றியுள்ளார். குறுக்கீடுகள் 9 நிமிடங்கள் போக அவர் பேசிய நேரம் 27 நிமிடங்கள்.

அக்கட்சியின் தலைவர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் குறுக்கீடு என்ற வகையில் 35 நேர்வுகளில் குறுக்கிட்டு 11 நிமிடங்கள் பேசியுள்ளார்.

அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியைப் பொறுத்தவரை, திரு. சந்தானம் அவர்கள் 30-1-2003 அன்று ஆளுநர் உரை மீதான விவாதத்தில் 23 நிமிடங்கள் உரையாற்றியதில், குறுக்கீடு 1/2 நிமிடம்.

இவ்வளவு நேரம், நான் இத்தனை விவரங்களையும் விரிவாக எடுத்துரைப்பதன் நோக்கம், இந்தப் பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எந்த அளவுக்கு ஜனநாயக முறையில் விவாதத்தில் பங்குகொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதை ஆதாரத்தோடு சுட்டிக்காட்டுவதற்குத்தான். விவாதத்தில் பங்குகொள்வது மட்டுமல்லாது, குறுக்கீடு என்ற முறையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவ்வளவு

நேரம் பேசியுள்ளார்கள் என்பதையும் நான் சில உதாரணங்களோடு சுட்டிக்காட்டினேன்.

எதிர் வரிசையில் இருக்கின்ற ஒரே காரணத்தால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைத்து விவாதங்களிலும் தினந்தோறும் பங்குகொள்வதை இந்தப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். இது தவிர, தகவல் கோரல் என்ற முறையிலும், சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையிலும், தினந்தோறும் முக்கியப் பிரச்சினைகள் குறித்து எழுப்பவும் எதிர்க் கட்சியினருக்கு வாய்ப்பு இருக்கிறது. மேலும், ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, அதன்மீது கருத்துகளைத் தெரிவிக்கவும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு உள்ளது.

அதற்கு மாறாக, எண்ணிக்கையின் அடிப்படையில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இருந்தாலும், அவர்களுக்குப் பேசக்கூடிய வாய்ப்பு மிக அரிதாகவே கிடைக்கிறது. இதன் காரணத்தால்தான், ஆளுங்கட்சியினர் இந்த ஐந்தாவது கூட்டத் தொடரில்கூட கன்னிப் பேச்சை ஆற்றவேண்டிய நிலை உள்ளது.

எனவே, இந்தப் பேரவை எந்த அளவுக்கு, எதிர்க்கட்சியினருக்கு மற்றவர்களைவிடக் கூடுதல் வாய்ப்பளிக்கிறது, அனைத்து விதமான அவை நடவடிக்கைகளிலும் அவர்கள் உரையாற்றுவதற்கு ஜனநாயக அடிப்படையில் வாய்ப்புகள் வழங்குகிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. தனது கட்சி உறுப்பினர்களுக்கு உண்டான நியாயமான வாய்ப்பைத் தியாகம் செய்து, அதனை எதிர்க்கட்சிகளுக்கு வழங்க உதவி செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நன்றி தெரிவிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-55*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் முதல் உறுப்பினர்கள் வரை, அவரவர்கள் எழுப்பும் பிரச்சினைகளுக்கு, குறுக்கிட்டு விளக்கம் அளித்துள்ளார்கள். சில கோரிக்கைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றி அறிவிப்புச் செய்துள்ளார்கள். உதாரணமாக,

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர்

திரு. துரைமுருகன்

திரு. மு.க. ஸ்டாலின்



டாக்டர் க. பொன்முடி

திரு. இ. புகழேந்தி

திரு. மீ.அ. வைதியலிங்கம்

திரு. ஆர். சக்ரபாணி

திரு. எ.வ. வேலு

திரு. ஜெ. அன்பழகன்

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்

திரு. சோ. பாலகிருஷ்ணன்

திருமதி டி. யசோதா

திரு. வி.கே. லட்சுமணன்

திரு. சி. ஞானசேகரன்

திருமதி எஸ். மகேஸ்வரி

திரு. ஜி.கே. மணி

திரு. ஐ. கணேசன்

திரு. அ.இரா. மலையப்பசாமி

திரு. இ. பாரிமோகன்

திரு. ஜே. ஹேமச்சந்திரன்

திரு. என். நன்மாறன்

செல்வி க. பாலபாரதி

திரு. ஜி. பழனிசாமி

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி

திரு. கே.என். இலட்சுமணன்

திரு. ஜெக. வீரபாண்டியன்

திரு. லா. சந்தானம்

ஆகிய எதிர்க்கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் குறுக்கிட்டு விளக்கம் அளித்துள்ளார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

இந்த அளவுக்கு நடுநிலையுடனும், ஜனநாயகத்துடனும் பேரவையை நடத்தி வரும்போதே, இவ்வளவு வாய்ப்புகள் வழங்கி வரும்போதே, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பு அளிப்பதில்லை தாங்கள் பேசுவதைக் கேட்பதற்கு ஆளுங்கட்சியினர், மாண்புமிகு முதலமைச்சர் தயாராக இல்லை என்று எதிர்க்கட்சியினர் கூறுவது மிகுந்த வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கிறது.

**வெட்டுத் தீர்மானங்கள்—**

பெறப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் .. 9064

அனுமதிக்கப் பெற்றவை .. 8520

எதிர்க்கட்சி உறுப்பினர்களால் பேரவையில் முன்மொழியப்பட்டவை .. 1132

**வினாக்கள்-விடைகள்—**

சென்ற ஆண்டு மூன்றாவது கூட்டத் தொடர் முடிவுற்ற 10-5-2002-க்குப் பின், நேற்று (9-5-2003) வரை 17,677 வினாக்கள் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

அளித்த உறுப்பினர்களுடைய எண்ணிக்கை .. 137

அனுமதிக்கப் பெற்றவை .. 13,928

உடுக்குறியிட்டவை .. 3,815

உடுக்குறியிடாதவை .. 5,830

குறுகிய கால வினா .. 84

**அனுமதிக்கப் பெற்ற வினாக்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்:**

1. திரு. ஐ. கணேசன், பாட்டாளி மக்கள் கட்சி .. 2364 வினாக்கள்

2. திரு. நா. சந்திரமோகன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் .. 2191 வினாக்கள்



3. டாக்டர் சி. விஜயபாஸ்கர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் .. 1531 வினாக்கள்

4. திரு. ப. அரசன், பாரதிய ஜனதா கட்சி .. 859 வினாக்கள்

5. திரு. கோவை தங்கம், இந்திய தேசிய காங்கிரஸ் .. 767 வினாக்கள்

**அனுமதிக்கப் பெற்ற வினாக்களில் 1000—க்கு மேல் கொடுத்துள்ள கட்சிகள் விவரம்:**

1. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் .. 6377

2. பாட்டாளி மக்கள் கட்சி .. 4337

3. இந்திய தேசிய காங்கிரஸ் .. 1104

**உடுக்குறியிட்ட வினாக்கள்:**

அவையில் விடையளிக்கப்பட்டவை .. 278

அவற்றில் அதிக அளவில் மூல வினா கேட்டு **முதல் மூன்று நிலைகளில்** இருப்பவர்கள்:

1. திரு. பி.கே. சேகர்பாபு .. 7 வினாக்கள்

2. திரு. பிஎச். பால் மனோஜ் பாண்டியன் .. 6 வினாக்கள்

3. திரு. வெ. ஏழுமலை மற்றும் திரு. நா. சந்திரமோகன் .. 5 வினாக்கள்

**20 மூல வினாக்களுக்கு மேல் விடையளித்த அமைச்சர்கள்:**

1. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் .. 29 வினாக்கள்

2. மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் .. 24 வினாக்கள்

3. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் .. 22 வினாக்கள்

கேட்கப்பட்ட துணை வினாக்கள் .. 567

இதில் ஆளுங்கட்சியினர் கேட்டவை .. 266

மற்ற கட்சியினர் கேட்டவை .. 301

**15 துணை வினாக்களுக்கு மேல் கேட்டவர்கள்:**

1. திரு. லா. சந்தானம் மற்றும் திரு. சி. ஞானசேகரன் .. 20 வினாக்கள்
2. திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் திரு. வை. சிவபுண்ணியம் .. 19 வினாக்கள்
3. திரு. ஜி.கே. மணி .. 16 வினாக்கள்

**வினாக்கள்—விடைகள்**

எடுத்துக்கொள்ளப்பெற்ற நாட்கள் .. 21

**வினாக்கள்-விடைகள் நேரம்**

நீட்டிக்கப்பட்ட நாட்கள் .. 10

நீட்டிக்கப்பட்ட நேரம் .. 20 நிமிடம்

**உடுக்குறியிடாத வினாக்கள்—**

அவைமுன் வைக்கப்பெற்றவை .. 1386

உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் .. 2100

முற்பகல் 11—00

**சிறப்புக் கவன ஈர்ப்பு—**

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கிய மான பொருள்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற வகையில் எடுத்துக் கொள்ளப் பெற்றவை .. 6



மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை .. 5

இதர அமைச்சர்கள் பதிலளித்தது .. 1

உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள் .. 24

உறுப்பினர்கள் பேசிய நேரம் .. 1 மணி 13 நிமிடம்

எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நேரம் .. 2 மணி 3 நிமிடம்

**கவன ஈர்ப்பு—**

வரப்பெற்ற அறிவிப்புகள் .. 541

அனுமதிக்கப் பெற்றவை .. 89

பேரவையில் விளக்கம் அளிக்கப் பெற்றவை .. 23

அவற்றில் ஆளுங்கட்சியினர் அளித்தவை .. 15

விளக்கம் கேட்டோர் .. 15

இதர கட்சியினர் அளித்தவை .. 15

விளக்கம் கேட்டோர் .. 9

பேரவைமுன் வைக்கப்பெற்றவை .. 35

**உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்—**

எழுப்பப் பெற்றவை .. 8

தீர்ப்பளிக்கப் பெற்றவை .. 2

உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றவை .. 6

**அரசினர் சட்டமுன்வடிவுகள்—**

வரப் பெற்றவை .. 29

நிறைவேற்றப் பெற்றவை .. 29

**விதி 110-ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்—**

மொத்தம் அளிக்கப் பெற்றவை .. 15

மாண்புமிகு முதலமைச்சர் அளித்தவை .. 12

**விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை— .. 1**

**பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்—**

பொது நிறுவனங்கள் குழு .. 62

பொதுக் கணக்குக் குழு .. 53

மதிப்பீட்டுக் குழு .. 10

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு .. 20

மனுக்கள் குழு .. 18

அரசு உறுதிமொழிக் குழு .. 15

**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—**

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும் .. 137

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் .. 381

**உறுப்பினர்கள் வருகை—**

இப்பன்னிரண்டாவது பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடர் தொடங்கிய 23-1-2003 முதல், இன்று வரை அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை தந்த உறுப்பினர்கள் பட்டியல்:

**திருவாளர்கள்**

1. செ. அண்ணாதுரை
2. கு. அண்ணாமலை
3. ப. அண்ணாவி
4. பி.எஸ். அருள்
5. வி. அழகம்மாள்
6. கு. அன்பழகன்
7. கே.பி. அன்பழகன்
8. ஆஸ்டின்



திருவாளர்கள்

9. சி. இராசேந்திரன்
10. மா. இராஜசேகர்
11. பி.ஜி. இராஜேந்திரன்
12. கே.பி. இராஜேந்திர பிரசாத்
13. இரா.தா. இன்பத்தமிழன்
14. வெ. ஏழுமலை
15. ந. கணபதி
16. க.ரா. கந்தசாமி
17. கே.சி. கருப்பணன்
18. டாக்டர் ஆ. கருப்பாயி
19. கு. கலாவதி
20. செல்வி சி. கனகதாரா
21. எஸ். கனிதா சம்பத்
22. வெ. கோவிந்தராஜ்
23. எம். சக்திவேல் முருகன்
24. ஆர். சசிகலா
25. எஸ்.பி. சண்முகநாதன்
26. சி.வி. சண்முகம்
27. லா. சந்தானம்
28. எம்.எஸ். சந்திரசேகரன்
29. நா. சந்திரமோகன்
30. வீ. சந்திரன்
31. இரா. சரோஜா
32. ப. சிதம்பரம்
33. கே.கே. சிவசாமி
34. சி. சிவசாமி
35. கே. சுதர்சனம்
36. பி.ஆர். சுந்தரம்
37. செ. சுந்தராம்பாள்

திருவாளர்கள்

38. வீ. சுப்பிரமணியன்

39. சி.எம். சூரியகலா

40. வி.ஏ. செல்லையா

41. எஸ்.கே. செல்வம்

42. ஏ.கே. செல்வராஜ்

43. செல்வி முருகேசன்

44. பி.கே. சேகர்பாபு

45. கே.ஜி.பி. ஞானமூர்த்தி

46. தமிழ்மொழி ராஜதத்தன்

47. செ.கு. தமிழரசன்

48. டாக்டர் மு. தம்பிதுரை

49. க. தவமணி

50. ந. தளவாய் சுந்தரம்

51. செ. தாமோதரன்

52. எஸ்.எஸ். திருநாவுக்கரசு

53. சி. துரைராஜ்

54. கே.எஸ். தென்னரசு

55. அ. நடராஜன்

56. பி.கே.டி. நடராஜன்

57. பி.எம். நரசிம்மன்

58. நளினி மனோகரன்

59. ப. நீலகண்டன்

60. தா. பச்சைமால்

61. க. பதினெட்டாம்படியான்

62. கே. பவானி கருணாகரன்

63. கே.எஸ். பழனிசாமி

64. பெ. பழனியப்பன்



திருவாளர்கள்

65. கே. பாண்டுரங்கன்

66. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்

67. எஸ்.எம். பாலன்

68. ஏ. பூவராகமூர்த்தி

69. என்.கே. பெருமாள்

70. ப. பொன்னம்பலம்

71. எஸ். மகாலிங்கம்

72. லெ. நீலமேகவர்ணம்

73. மல்லிகா சின்னசாமி

74. எஸ். மாணிக்கராஜ்

75. ஆ.கு. முருகேசன்

76. கா.பூ. முனுசாமி

77. என். ரெங்கநாதன்

78. எஸ்.எஸ். ரமணீதரன்

79. ஜெமினி கே. ராமச்சந்திரன்

80. ச. ராமராஜ்

81. எஸ். ராஜம்மாள்

82. வி.ஆர். ராஜாங்கம்

83. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்

84. வளர்மதி ஜெபராஜ்

85. பெ. வாசுதேவன்

86. இரா. வில்வநாதன்

87. டாக்டர் சி. விஜயபாஸ்கர்

88. ப. விஜயலட்சுமி பழனிச்சாமி

89. செ. வெங்கடாஜலம்

90. வி. ஜெயராமன்

91. எம்.ஏ. ஹக்கீம்

92. ஆர். சாமி

அவர்களுக்கு என்னுடைய அன்பான பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருகைப் பதிவேட்டில் உறுப்பினர்கள் கையொப்பம் இட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு இப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதால், பேரவைக்கு வந்திருந்தாலும்கூட, வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடத் தவறியிருந்தால் அவ்வுறுப்பினர்களுடைய பெயர்கள் இப்பட்டியலில் இடம் பெறாது.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் அனைத்து நாட்களும் அவைக்கு வந்திருந்தாலும் அவர்கள் இப்பதிவேட்டில் கையெழுத்திடுவதில்லை என்பதால், அவர்களின் பெயர்கள் இப்பட்டியலில் இடம் பெறவில்லை.

**பார்வையாளர்கள்—**

| | |
|---|---|
| பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள் | .. 8420 பேர் |
| ஆண்கள் | .. 7771 பேர் |
| பெண்கள் | .. 649 பேர் |
| பேரவைத் தலைவர் மாடம் மற்றும் பேரவைத்தலைவர் அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள வரிசைகளில் அனுமதிக்கப் பெற்றவர்கள் | .. 4519 பேர் |

**நூலகம்—**

| | |
|---|---|
| சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர் | .. 646 |
| வழங்கப் பெற்ற நூல்கள் | .. 709 |
| இவ்வாண்டு புதியதாக வாங்கப் பெற்ற நூல்கள் | .. 271 |



**நடவடிக்கைக் குறிப்புகள்—(9-5-2003 வரை)**

| | |
|---|---|
| இக்கூட்டத் தொடரில் உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர) | .. 580 |
| தட்டச்சு செய்யப் பெற்ற மொத்தப் பக்கங்கள் | .. 8341 |
| மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | .. 1937 |
| தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | .. 458 |

*முற்பகல் 11-05*

சட்டமன்றப் பேரவை வரலாற்றிலேயே முதல் முறையாக உறுப்பினர்கள் நவீன கணினி யுகத்தில் சிறந்து விளங்க உதவும் வகையில் இலவசமாக கணினிப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களுக்கும் பேரவைத் தலைவர் என்ற முறையில் உறுப்பினர்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு மைல் கல்லாக அமையும் அளவிற்கு பெண்களைக் குறிக்க தமிழில் 'குடிமகள்' என்ற சொல் பயன்படுத்தப்படுவதற்கும், தாய்மைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தந்தையின் பெயரின் முதல் எழுத்தைத் தலைப்பெழுத்தாகப் போட்டுக்கொள்வதுபோல் தாயாரின் பெயரின் முதலெழுத்தையும் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும்போது பதிவு செய்யலாம் என்றும் ஆணையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தாயுள்ளத்தைப் பெண்கள் சமுதாயம் என்றும் மறக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

தலைமைச் செயலகத்தைப் புதிய இடத்தில் விரிவாகவும், கர்நாடக மாநில விதான் சௌதாவைக் காட்டிலும் சிறப்பாக வடிவமைத்துக் கட்டிக் கொடுப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, பேரவை உறுப்பினர்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றியையும், பாராட்டையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு மாதமாக அனைவரையும் பீதிக்குள்ளாக்கி, பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சார்ஸ் நோய்க்கு நமது சித்த மருத்துவத்தில் சிறந்த மருந்துகள் இருப்பதைப் பேரவைக்கு அறிவித்ததோடு, அந்நோய் தொற்றிக்கொள்ளக் காரணம், அதற்கு மருந்து, அந்த மருந்தைத் தயாரித்து உட்கொள்ளும் விதம் உள்ளிட்ட விவரங்களை மிகத் துல்லியமாக விளக்கி, தான் அனைத்துத் துறைகளிலும் வித்தகர் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

இக்கூட்டத் தொடர் மிகச் சிறப்பாக நடந்தேற உதவி செய்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களில் முதன்மையாக, பேரவையை நடத்துவதில் எனக்கு வழிகாட்டுதலும், ஊக்கமும், ஆதரவும் அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் எனது நன்றியினையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, விவாதங்களில் அவ்வப்போது விரிவான விளக்கங்களை எடுத்து வைத்ததோடு, பேரவையை நல்ல முறையில் நடத்திச் செல்லத் துணை புரிந்த மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

பேரவையைச் சிறப்பாக நடத்துவதற்கு நாள்தோறும் எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை நடவடிக்கைகளில் உறுப்பினர்கள் சிறந்த முறையில் பங்கேற்க வாய்ப்பளிப்பதில் எனக்கு உதவிகரமாக இருந்த கட்சிகளின் தலைவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், இதர கட்சிகளின் கொறடாக்களுக்கும், பேரவை விவாதங்களில் ஒளியும்,



நகைச்சுவையும் மிளிரச் செய்த உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

பிரதான எதிர்கட்சியான தி.மு.க.வைப் பொறுத்தவரை, இரண்டு உறுப்பினர்கள் விதிகளுக்குப் புறம்பாகவும், பேரவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலும் நடந்து கொண்டதால், இக்கூட்டத் தொடர் முழுவதற்கும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அதற்காக அக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமல் புறக்கணிப்புச் செய்திருப்பது வருந்தத்தக்கது.

அவர்கள் அவைக்கு வந்திருந்து, மற்ற கட்சித் தலைவர்களையும் சேர்த்து, முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வந்து விண்ணப்பித்திருப்பார்களானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பெருந்தன்மையோடு அதனை ஏற்று, பரிந்துரை செய்திருப்பார். அவர்களது பரிந்துரையின் அடிப்படையில் அந்த உறுப்பினர்களை மீண்டும் அவைக்கு அழைத்திருக்க முடியும். அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தாமல், அனைத்து உறுப்பினர்களும் வராமல் இருந்தது உள்ளபடியே வருத்தத்திற்குரியது, வேதனைக்குரியது.

பேரவையினுடைய அலுவல்களைச் செம்மையாக நிறைவேற்றிட முழு ஈடுபாட்டுடனும், உற்சாகத்துடனும் எனக்கு உதவி புரிந்த பேரவைச் செயலர் திரு. வெ. இராசாராமன் அவர்களுக்கும், பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும், பேரவை நிருபர்களுக்கும், இதர பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை நடக்கும் காலத்தில் குளிர் சாதன வசதி, மின் வசதி, ஒலிபெருக்கி வசதிகள் செய்த பொதுப் பணித் துறையினருக்கும், போக்குவரத்துத் துறையினருக்கும், பேரவைக் காவலர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை நிகழ்ச்சிகளைத் தினமும் ஒளிப்பதிவு செய்து ஒளிபரப்புச் செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், பேரவை நடவடிக்கைகளை உடனுக்குடன் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சென்ற அகில இந்திய வானொலி, இந்தியத் தொலைக்காட்சி, இதர தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், செய்தி நிறுவனங்கள்,

செய்தியாளர்கள் மற்றும் நிருபர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெட்டிழையும் குறுக்கிழையும் சேர்ந்தால்தான் ஆடை. ஆளுங்கட்சியையும் எதிர்க்கட்சியையும் உள்ளடக்கியதுதான் ஜனநாயகம். இந்த உணர்வோடுதான் இந்தச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்புகள் தாராளமாகவும், ஏராளமாகவும் தரப்பட்டன. அதற்காக, தங்கள் நேரத்தையும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்காக வழங்கி, அதை நான் செயல்படுத்த முழு ஒத்துழைப்பு வழங்கிய ஆளுங்கட்சிக்கும், செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்போடு அதற்குத் துணை நின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என் தலைதாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் உள்ள உறவு, மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளைத் தோழனுக்கும் உள்ள உறவைப் போன்றிருக்க வேண்டும்' என்று அண்ணா அவர்கள் சொல்வார்கள். அரசின் நடவடிக்கைகள், செயல் திட்டங்கள் போன்றவற்றில் ஆளுங்கட்சியைப் போலவே எதிர்க்கட்சிக்கும் பங்குண்டு. அதனால்தான் இங்கிலாந்து நாட்டில் எதிர்க்கட்சித் தலைவரையேகூட, 'நிழல் பிரதமர்' என்று அழைக்கிறார்கள். எதிர்க்கட்சி ஆளுங்கட்சிக்கு எதிராகச் செய்கின்ற திறனாய்வு, பூனை குட்டியைக் கவ்வுவதைப்போல் இருக்க வேண்டுமே தவிர, பூனை எலியைக் கவ்வுவதைப்போல் இருக்கக்கூடாது என்பது அண்ணாவின் கருத்து. எதிர்க்கட்சியினரின் பேச்சு சில நேரங்களில் ஆளுங்கட்சிக்கு எரிச்சலை உண்டாக்கலாம். ஆனால், அந்த எரிச்சல் என்பது, வரவேற்பின்போது திருமண வீட்டு வாசலிலே நின்று பன்னீர் தெளிக்கும்போது, அந்தப் பன்னீர் கண்ணில் பட்டுவிடுவதைப் போலிருக்க வேண்டும் என அண்ணா தெளிவுபடுத்தினார்.

*முற்பகல் 11-10*

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு கருத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஓர் எதிர்க்கட்சி உறுப்பினர் பேசும்போது, அமைச்சர்களோ, மாண்புமிகு முதல்வரோ எழுந்து பதில் சொன்னால், அதற்குப் பொருள், அந்த உறுப்பினரையும், அவர் சொல்லும் கருத்தையும் அரசு மதிக்கிறது; அவர் கருத்தைச் செவி கொடுத்துக் கேட்கிறது என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பேசுவதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், அவர் அலட்சியப்படுத்தப்பட்டார் என்பதுதான்





பொருள். அதிலும் ஓர் உறுப்பினர் பேசும்போது, முதலமைச்சர் குறுக்கிட்டுப் பேசினால், அந்த உறுப்பினருக்குத் தனிப்பட்ட செய்தி முக்கியத்துவம் கிட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கருத்துக்கு அழுத்தமும், அது மக்கள் மன்றத்திற்குச் சென்று சேரும் தகுதியும் கிடைக்கிறது. நான் இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறேன். அப்படி நான் பணியாற்றியபோது, நான் எவ்வளவு கருத்துகளை, சீரிய கருத்துகளைப் பேசினாலும் அன்றைக்கு இருந்த முதல்வர் அவர்கள் அதைக் கவனிப்பதே கிடையாது. அதற்கு பதிலும் அவர் சொல்லமாட்டார். மற்ற அமைச்சர்கள் பதில் சொல்ல எழுந்தாலும் தடுத்துவிடுவார். இத்தனைக்கும் என்னை மாணவப் பருவத்திலிருந்தே அவர் நெருக்கமாக அறிந்தவர். ஆக, ஓர் உறுப்பினருடைய பேச்சில் முதல்வரோ, அமைச்சர்களோ குறுக்கிடாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று நான் அப்போதே எண்ணிப் பார்த்தேன். அப்படிக் குறுக்கிடாமல் இருந்தால், அந்த உறுப்பினருக்கும், அவர் பேசும் கருத்துக்கும் முக்கியத்துவம் இல்லாமல் ஆக்கப் பயன்படுத்தக்கூடிய உத்தி அது என்பதை, பின்னாளில்தான் நான் புரிந்து கொண்டேன். ஆனால் எந்த உறுப்பினர் பேசினாலும், அவர் பேசுவதை எழுத்து, எழுத்தாக உன்னிப்பாகக் கவனித்து, அவர் பேச்சுக்கு உடனடியாகப் பதிலளிக்கக்கூடிய தாயுள்ளம் கொண்ட ஒரே தலைவி, முதல் முதலமைச்சர் தமிழ்நாட்டில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து உறுப்பினர்களையும், அவர்கள் பேச்சுக்களையும் இந்த அளவு மதித்துப் பதில் சொல்லக்கூடிய அந்த ஜனநாயகப் பாங்கிற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை சில நாட்களில் காலை, மாலை இரண்டு வேளைகளிலும் கூடியபோதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து நாட்களும் அவைக்கு வந்திருந்ததோடு, காலை முதல் மாலை வரை பேரவையில் இருந்து, தன் துறைகள் தொடர்பான விவாதங்களுக்குப் பதிலுரை அளித்த நிகழ்வுகள் அல்லாமல், இதர துறைகள் தொடர்பான விவாதங்களிலும் எதிர்க்கட்சியினர் எழுப்பிய ஐயங்களுக்கு, புள்ளிவிவரங்களை விரல்நுனியில் வைத்துக்கொண்டு நொடிப் பொழுதில் மாண்புமிகு முதலமைச்சரே விளக்கங்கள் அளித்து, தான் ஒரு அரசியல் ஞானி என்பதை மட்டுமல்ல. மிகச் சிறந்த ஆட்சியாளர்

என்பதையும் நிரூபித்ததைப் பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் பாராட்டாமல் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அவ்வாறு அவர்கள் விளக்கம் அளித்த நேர்வுகள் மொத்தம்— கணக்கில் எடுத்துக் கொள்ளுங்கள் — 365 நேர்வுகள் (மேசையைத் தட்டும் ஒலி)

விளக்கம் அளித்த நேரம் 3 மணி 51 நிமிடங்கள்.

முன்னர் முதலமைச்சராக இருந்தவர்கள் முன் வரிசையிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் எழுப்பும் பிரச்சினைகளுக்கு மட்டுமே பதிலளிப்பது வழக்கமாக இருந்தது. ஆனால், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு மட்டுமல்லாமல், மற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் விளக்கமளித்ததோடு மட்டுமல்லாமல், அவர்கள் முன்வைத்த பல கோரிக்கைளை நிறைவேற்ற உடனடியாக ஆணையிட்டுள்ளார்கள். அந்த ஆணையினை அடுத்து அரசாணைகள் வெளியிடப்பட்ட உடனே, அவை குறித்துப் பேரவைக்குத் தெரிவித்துள்ளார்கள்.

சட்டமன்றப் பேரவையின்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுள்ள மதிப்பிற்கும், ஈடுபாட்டிற்கும் இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அவருக்குப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் பாராட்டுகளையும், என் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவரையே மற்ற உறுப்பினர்கள் அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று பேரவைத் தலைவர் என்ற முறையில் விரும்புகிறேன்.

பேரவையின் அனைத்து அலுவல்களையும் முன்நின்று நடத்துவதற்குப் பெரிதும் துணை புரிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை தனியே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் அனைவர் சார்பிலும் அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைக் கூறி முடிக்கிறேன்.



## 7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை விதி 25 (1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

முற்பகல் 11-15

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெற வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுகிறது. அனைவருக்கும் வணக்கம்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் அடுத்த முறை கூடுகிறபோது, கோபத்தையெல்லாம் விட்டுவிட்டு வந்துசேர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11-15 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெற்றது.

# 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*118.* யாதொரு மாநில அரசு அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி அல்லது மாநில அரசு நிறுவனங்கள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் நிறுவனங்களால் வழங்கப்பட்ட தாள்களை, அவற்றுக்காக மேற்கொள்ளப்படும் யாதொரு அச்சுப் பணியில் பயன்படுத்துவதற்காக யாதொரு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொண்டுவரும் யாதொரு அச்சிடுபவர் வரி விதிப்பு அதிகாரிக்கு சில ஆவணங்களை அளிப்பதற்கு உட்பட்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ், அந்த அச்சிடுபவர் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்த வரையில், விலக்களிப்பது குறித்தும் மற்றும் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையிடப்பட்ட பொருட்கள் உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொண்டுவரப்படும்போது அவற்றுக்கு மேற்சொன்ன சட்டத்தின்கீழ், அந்த அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வீதங்களில் வரி விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட வேண்டும் என்று வரையறுப்பது குறித்தும் வணிக வரித் துறையின் 21-3-2003 ஆம் நாளிட்ட 27 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*119.* 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (சட்டத்திற்குப் புறம்பாக மரங்களை வெட்டுவதற்கு எதிரான நடவடிக்கை) விதிகள் இயற்றியது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 13-8-2001 ஆம் நாளிட்ட 179 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).]

*120.* 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 21-8-2001 ஆம் நாளிட்ட 213 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)]



*121.* 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 24-9-2001 ஆம் நாளிட்ட 241 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).]

*122.* 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஊராட்சிகளில் பொது ஏலம், குத்தகை மற்றும் விற்பனை நடத்துவதற்கான நடைமுறை) விதிகள் இயற்றியது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 22-11-2001 ஆம் நாளிட்ட 277 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)]

*123.* வணிக வரித் துறையின் 13-8-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(1)/வவ/44(d-2)/2002 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை ரத்துச் செய்தது குறித்தும் மற்றும் நொய், அரிசி உட்பட, அரிசி விற்பனை செய்யும் எந்தவொரு வணிகரும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 4 மற்றும் 4 எஃப் ஆகிய பிரிவுகளின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்தும் வணிக வரித் துறையின் 28-10-2002 ஆம் நாளிட்ட 124 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)]

*124.* வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 19-11-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட II(1)/வணிக வரி மற்றும் அறநிலையத் துறை /90/97 ஆம் எண் அறிவிக்கையை 12-11-2002 ஆம் நாளன்றும், அந்நாளிலிருந்தும் ரத்துச் செய்தது குறித்து வணிக வரித் துறையின் 12-11-2002ஆம் நாளிட்ட 130 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)]

*125.* 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிட்டு நிதிகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரித் துறையின் 18-2-2003 ஆம் நாளிட்ட 14 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம்

*ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 40/1982) 89(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).]*

*126. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125(2)(a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)]*

*127. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*128. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 2001-2002 ஆம் ஆண்டின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை (1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 4/1996) 89(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)] (தமிழ், ஆங்கிலம்)*

*129. 2001-2002 ஆம் ஆண்டிற்கான கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*130. 2001-2002 ஆம் ஆண்டிற்கான புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).] (தமிழ், ஆங்கிலம்)*

*131. 2001-2002 ஆம் ஆண்டிற்கான சிவகங்கை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).] (தமிழ், ஆங்கிலம்)*

*132. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தூத்துக்குடி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).] (தமிழ், ஆங்கிலம்)*





*133. 2001-2002 ஆம் ஆண்டிற்கான திருவாரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).] (தமிழ், ஆங்கிலம்)*

*134. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கையும், கணக்குகளும் [1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).] (தமிழ், ஆங்கிலம்)*

*135. 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. (வருவாய் வரவினங்கள்) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)*

*136. 2002 ஆம் மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. (சிவில்) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)*

*137. 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. (வணிகம்) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)*

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*361. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 2001-2002 ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)*

*362. 2001-2002 ஆம் ஆண்டிற்கான "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை" என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)*

*363. 2000-2001 ஆம் ஆண்டிற்கான பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு - ஆண்டு ஆய்வு அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)*

*364. 2001-2002 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)*

365. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். 2003-2004. (தமிழ்)

366. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ்)

367. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - சுற்றுலா மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

368. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (23-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

369. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (24-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

370. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (25-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

371. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (26-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

372. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (27-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

373. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (28-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)



374. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (29-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

375. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (30-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

376. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (31-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

377. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (32-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

378. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (33-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

379. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (34-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

380. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (35-வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 86 வரை)

381. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழ் அனுமதிக்கப் பெற்ற கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகளின்மீது பெறப்பட்ட அறிக்கைகளின் பட்டியல் (வரிசை எண்கள் 1 முதல் 29 வரை)

---

# இணைப்பு I

( 1 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க )

## @ உடுக்குறியிடாத வினாக்கள்

**(பட்டியல்கள் 23 மற்றும் 35)**

**பட்டியல் 23**

**1—**

**அறங்காவலர் நியமனம்**

**வினா எண் 21326—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக கோயில் அறங்காவலர்கள் நியமிக்கும்போது அப்பகுதி தெய்வ பக்தர்களின் கருத்தறிந்து, தரமானவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகக் கோயில்களில் அறங்காவலர்களை நியமனம் செய்யும்போது, வரப்பெற்ற விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து நியமனம் செய்யப்படுகிறது. தெய்வ பக்தி உள்ளவர்கள், தகுதியின் அடிப்படையில், அதாவது தமிழ்நாடு இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 26-ன்படி கூறப்பட்டுள்ள தகவின்மைகள் ஏதும் இல்லாத நபர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். அறங்காவலர்கள் நியமனத்திற்கு விண்ணப்பங்கள் கோரி விளம்பரம் செய்யப்பட்டவுடன், வரப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் விசாரணை செய்து பரிசீலித்து

---

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவை தெய்வ பக்தி உள்ளவர்களிடமிருந்து வரப்பெற்றதாகவே கருதப்படுகிறது. ரூ.10/- இலட்சத்திற்கு மேல் வருமானம் வரும் கோயில்களுக்கு அரசாலும், ரூ.10/- இலட்சத்திற்கு குறைவாக வருமானம் உள்ள திருக்கோயில்களுக்கு, அரசால் நியமிக்கப்பட்ட மாவட்டக் குழுக்களாலும் அறங்காவலர்கள் நியமனம் செய்யும் முறை கடை பிடிக்கப்பட்டு வருகிறது.

2—

**உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 16254—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பூம்புகார் தொகுதி, சேமங்கலம் ஊராட்சி, எருமல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, சேமங்கலம் ஊராட்சி, எருமல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக அரசாணை எண் 139, பள்ளிக் கல்வித் துறை, நாள் 23-8-2002-ல் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.*

3—

**சஞ்சாயிகா சேமிப்புத் திட்டம்**

**வினா எண் 22318—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அனைத்துப் பள்ளிகளிலும், சஞ்சாயிகா சேமிப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) சேலம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் எவ்வளவு தொகை சேமிப்பு ஆனது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மாணவர்களிடத்தில் சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு அனைத்துப் பள்ளிகளிலும் பெரும்பான்மையான மாணாக்கர்கள் சஞ்சாயிகா சேமிப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தில் சேராத மாணவர்களை உடனடியாக சேர்க்க மாவட்டந்தோறும் நடைபெறும் அனைத்து தலைமை ஆசிரியர் கூட்டத்தில் அவ்வப்போது அறிவுறுத்தப்பட்டு மாணவர்கள் தொடர்ந்து சேர்க்கப்பட்டு பயன்பெற்று வருகின்றார்கள்.*

*(ஆ) சேலம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் சேமிக்கப்பட்ட தொகை ரூ.16,52,194 ஆகும்.*

4—

**உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 32016—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பெரகம்பி 97 வலையூர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பெரகம்பி 97 வலையூர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 97, பள்ளிக் கல்வித் துறை, நாள் 4-7-2002-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

5—

## பட்டா

**வினா எண் 17516—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழைய பாளையம் ஊராட்சியிலுள்ள பிற்பட்டோர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. பாப்பா சுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழைய பாளையம் ஊராட்சியிலுள்ள பிற்பட்டோர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.*

6—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 17517—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சியிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*





விடை—

**மாண்புமிகு திரு. அ. பாப்பா சுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சியிலுள்ள பிற்பட்டோர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.*

7—

## குளிர்சாதனக் கிடங்கு

**வினா எண் 22712—திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*நிலக்கோட்டை தொகுதியில் விளையும் தக்காளியை கெடாமல் பாதுகாக்க அங்கு குளிர்சாதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*குளிர்ப்பதன கிட்டங்கிகள் அமைக்க விற்பனைக் குழுக்களின் நிதிநிலை போதுமானதாக இல்லாததால், விற்பனைக் குழுக்களுக்குப் பதிலாக தனியார் மூலம் அமைக்க அரசு ஆணைகள் வழங்கி, தமிழ்நாட்டில் 9 இடங்களில் குளிர்ப்பதன கிட்டங்கிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் குளிர்ப்பதன கிட்டங்கி ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர மதுரை-திண்டுக்கல் சாலையில் பரவை, நகரி போன்ற இடங்களில் தற்போது தனியார் குளிர்ப்பதன கிட்டங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றை நிலக்கோட்டை விவசாயிகளும், வியாபாரிகளும் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு உள்ளது. தனியார் துறையினர் ஆர்வம் உள்ளவர்கள் குளிர்ப்பதன கிட்டங்கி அமைக்க முன்வந்தால் மாவட்ட தொழில் மையம் மூலமாக புதிய அண்ணா மறு மலர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் வசதி மற்றும் மானியம் பெற்று குளிர்ப்பதன கிட்டங்கி அமைக்க வசதிகள் உள்ளன. குளிர்ச்சாதன கிட்டங்கி அரசு அமைக்க வாய்ப்பில்லை.*

[2003 மே 10

8—

### கேழ்வரகு பயிரிடல்

**வினா எண் 26595—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கேழ்வரகு பயிர் எத்தனை ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்படுகிறது?*

*(ஆ) ஒவ்வொரு ஒன்றிய வாரியாக பயிடப்படும் பரப்பளவு எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 905 ஹெக்டேர் பரப்பளவில் கேழ்வரகு பயிரிடப்படுகிறது.*

ஒன்றிய வாரியாக விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | ஒன்றியத்தின் பெயர் | பரப்பளவு (ஹெக்டேர்) |
|---|---|---|
| 1 | சிறுகாவேரிப்பாக்கம் | 71 |
| 2 | வாலாஜாபாத் | 120 |
| 3 | உத்திரமேரூர் | 45 |
| 4 | திருகழுக்குன்றம் | 120 |
| 5 | மதுராந்தகம் | 200 |
| 6 | அச்சரப்பாக்கம் | 225 |
| 7 | சித்தாமூர் | 30 |
| 8 | செய்யூர் | 14 |
| 9 | திருபெரும்புதூர் | 75 |
| 10 | சிட்லபாக்கம் | 5 |



2003 மே 10]

9 —

### கதிர் அடிக்கும் களம்

**வினா எண் 29412—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கானமேடு ஊராட்சி காரைமேட்டில் கதிர் அடிக்கும் களம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 2003-04 ஆம் நிதியாண்டில் காரைமேட்டில் சிமெண்ட் களம் கட்டிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

10—

### யோஜனா திட்டம்

**வினா எண் 32150—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கிஷோரி சக்தி யோஜனா திட்ட செயல்பாடுகள் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

இளம் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை பல்வேறு வகையில் ஊக்கப்படுத்தும் பொருட்டு கிஷோரி சக்தி யோஜனா என்ற திட்டம் இந்திய அரசால் 2001-2002 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2003 மே 10

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் வளர் இளம் பெண்களிடையே தன்னம்பிக்கை, சுய ஒழுங்குணர்வு ஆகியவற்றை அதிகரித்து சுயமரியாதையினை ஊக்கப்படுத்தி அவர்கள் வாழ்வில் முன்னேறுவதற்கான அவசியத்தை வலியுறுத்துவது ஆகும்.

2001-2002-ல் இத்திட்டத்தில் முதல் கட்டமாக 11-15, வயது வரம்புள்ள 33,000 வளர் இளம் பெண்களுக்கு 2 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த இரண்டு நாள் பயிற்சியில் அசுத்தமான நீர் மற்றும் உணவு உட்கொள்வதால் ஏற்படும் நோய்கள், அதைத் தடுக்கும் முறை, தன் சுத்தம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம், வளர் இளம் பருவத்தில் உடல்/மன ரீதியாக ஏற்படும் மாற்றங்கள், மாதவிலக்கு சுழற்சி, கருவுறுதல், எச்.ஐ.வி. நோய் பரவும் விதம் மற்றும் அதற்கான தடுப்பு வழிமுறைகள் மற்றும் பெண்களின் சட்ட உரிமைகள் ஆகியவை குறித்தும் விளக்கம் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி ஒவ்வொரு திட்டத்திலும் 30 முகாம்கள் வீதம் 37 திட்டப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

இரண்டாவது கட்டமாக 16-18 (2001-2002) வயது வரையிலான 110 வளர் இளம் பெண்களுக்கு, தொழிற்பயிற்சி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் நடத்தப்பட்டது.

2002-2003 ஆம் ஆண்டில் கிஷோரி சக்தி யோஜனா திட்டத்தை 9 மாவட்டங்களில் 37 திட்டங்களில் செயல்படுத்த ரூ.40,14,500.00 ஒதுக்கீடு அளிக்கப்பட்டு 34,400 வளர் இளம் பெண்கள் பயன் பெறுகின்றனர்.

**11—**

**வருமானம்**

**வினா எண் 21567—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் மின்வாரியத்திற்கு மின்சாரம் விற்பனை விநியோகம் மூலம் வருமானம் எவ்வளவு?

(ஆ) அந்த ஆண்டில் பணியாளர் சம்பள வகைக்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அரசு தெரிவிக்குமா?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்சார விற்பனை விநியோக வருமானம் ரூ.8058.23 கோடி.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் மின்வாரியத்தின் பணியாளர் சம்பள வகைக்கான செலவினம் ரூ.1,598.76 கோடி.

**12—**

**பணி நிரந்தரம்**

**வினா எண் 26752—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அனல் மின் நிலையத்தில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களை உடனே பணி நிரந்தரம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையின்படி 4 அனல் மின் நிலையங்களிலும் பணிபுரிந்த ஒப்பந்த தொழிலாளர்களை வரையறுக்கப்பட்ட சில நிபந்தனைகளுடன் 1-5-1999 முதல் பணி நிரந்தரம் செய்யவும், அனல் மின் நிலையங்களில் ஒப்பந்த முறையில் ஒப்பந்தத் தொழிலாளர்களை பணி அமர்த்தும் முறையினை 1-5-1999 முதல் ரத்து செய்தும், உத்தரவு இடப்பட்டது. அதன்படி மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 1,816 தகுதி உள்ள ஒப்பந்தத் தொழிலாளர்கள் 1-5-1999 முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்டு தகுதி அற்றவர்கள் பணி

நிறுத்தம் செய்யப்பட்டனர். தற்சமயம் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் எவரும் இல்லை.

13—

**காலிப் பணியிடங்கள்**

**வினா எண் 27377—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் மின்சாரத் துறை அலுவலகங்களில் காலியாக உள்ள இளநிலை மின் பொறியாளர்கள் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

ஈரோடு மின் பகிர்மான வட்டத்தில் உதவி மின் பொறியாளர்/ இளநிலை மின் பொறியாளர்/ முதல் நிலை 13 காலியிடங்கள் உள்ளன. அவற்றில் 4 இடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டு விட்டன. மீதமுள்ள 9 காலியிடங்கள் ஈரோடு மின் பகிர்மான வட்டத்திற்கு விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள் வரப்பெற்றதும் பரிசீலிக்கப்பட்டு நிரப்பப்படும்.

14—

**நியாய விலைக் கடைக்குக் கட்டடம்**

**வினா எண் 22415—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சியைச் சேர்ந்த புதூரிலும், ஒருவாய்ப்பட்டியிலும் நியாய விலைக் கடைக்கான





கட்டடம் அமைத்துத்தர அரசுக்கு பொதுமக்கள் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவைகளைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, சித்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஒருவாய்ப்பட்டி நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்படுவதால் அரசு திட்டங்களின்கீழ் கட்டடம் கட்டித்தர மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. புதூர் நியாய விலைக் கடை ஒரு பகுதிநேரக் கடையாகும். ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்துதர வேண்டும் என்ற வரையறையின் அடிப்படையில்தான் பகுதிநேரக் கடை அமைக்க அனுமதி அளிக்கப்படுகிறது. எனவே, பகுதிநேரக் கடைக்கு அரசுத் திட்டங்களின்கீழ் கட்டடம் கட்டித்தர வழிவகை இல்லை.

15—

**சொந்தக் கட்டடம்**

**வினா எண் 22416—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு ஊராட்சி, அருவாப்பட்டி, நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய தகவல் அரசு தெரிவிக்குமா?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள பக்கநாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியானது பக்கநாடு மற்றும் மேட்டுத்தெரு ஆகிய இடங்களில் முழுநேரக் கடைகளையும் அருவாய்ப்பட்டி என்ற இடத்தில் பகுதிநேரக் கடையும் நடத்தி வருகிறது. பக்கநாடு முழுநேர நியாய விலைக் கடை சொந்தக் கட்டடத்திலும் மேட்டுத்தெரு நியாய விலைக் கடை அரசு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன.

பகுதிநேரக் கடைக்கு ஊர் மக்கள் இலவசமாக இடவசதி செய்து தர வேண்டும் என்ற நிபந்தனையின்படி கடை ஆரம்பிக்கப்படுவதால் அரசு திட்டத்தின்கீழ் அருவாய்ப்பட்டி நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

16—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 22417—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், வெள்ளரி வெள்ளி ஊராட்சி, வேட்டுவபட்டி நியாயவிலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் பொதுமக்கள் வேண்டுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், வெள்ளரிவெள்ளி ஊராட்சி, வேட்டுவபட்டி நியாய விலைக் கடை பகுதிநேரக் கடையாக உள்ளதால் அரசு உதவித் திட்டங்களின்கீழ் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

17—

## மாநாடு

**வினா எண் 28751—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத் துறையின் வளர்ச்சியை முன்னிட்டு பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்திட மாவட்டம், வட்டாரந்தோறும் மாநாடு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் மாவட்டம், வட்டாரந்தோறும் உறுப்பினர் கல்வித் திட்டம் மூலமாக மாணவர்கள், மகளிர் சுய சேவைக்குழுவினர் மற்றும் பொதுமக்களுக்கு உறுப்பினர்கள் கல்வித் திட்டம் நடத்தப்பட்டும், திரைப்படம் மூலமாகவும், கூட்டுறவுத் துறையின் வளர்ச்சியை முன்னிட்டு பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி உருவாக்கப்பட்டு வருகின்றது. மாவட்டம், வட்டாரந் தோறும் தனியே மாநாடு நடத்துவதற்கு பெரும் பொருட்செலவு ஏற்படும் என்பதால் தற்போது மாநாடு நடத்தும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2003 மே 10

18—

## நியாய விலைக் கடை

**வினா எண் 28772—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சாணாரப்பட்டியில் ஒரு புதிய நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய தகவல் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட கடையாம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, கோரணம்பட்டி-1 நியாய விலைக் கடையை 398 குடும்ப அட்டைகளுடன் நடத்தி வருகிறது. பகுதிநேரக் கடை கேட்கப்படும் சாணாரப்பட்டியில் 102 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. கோரணம்பட்டி-1, நியாய விலைக் கடைக்கும், சாணாரப்பட்டிக்கும் இடைப்பட்ட தொலைவு 1.5 கி.மீ. ஆகும். சாணாரப்பட்டியில் பகுதிநேரக் கடை அமைத்தால் தாய்க்கடையில் 296 குடும்ப அட்டைகளே மிஞ்சும். பகுதிநேரக் கடை பிரித்த பின் தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகளுக்கு குறையாமலும் பகுதிநேரக் கடையில் குறைந்தது 200 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட வேண்டும். மற்றும் இரு கடைகளுக்கும் இடைப்பட்ட தொலைவு 2 கிலோ மீட்டருக்கு குறையாமல் இருக்க வேண்டும் என்ற வரையறைகள் நிறைவு பெறாததால் சாணாரப்பட்டியில் பகுதிநேரக் கடை திறக்க வாய்ப்பில்லை.



2003 மே 10]

19—

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 32662—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தை சேர்ந்த கருமாண்டபதி ஊராட்சிக்குட்பட்ட முத்தம்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட கருமாண்டபதி ஊராட்சியில் 538 குடும்ப அட்டைகள் உள்ளன. கருமாண்டபதி தாய் நியாய விலைக் கடையிலிருந்து 1 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள முத்தம்பட்டியில் 125 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடையுடன் இணைக்கப்பட வேண்டிய குடும்ப அட்டைகள் மற்றும் தாய்க்கடைக்கும், அமையவிருக்கும் பகுதிநேரக் கடைக்கும் இடையே இருக்க வேண்டிய தொலைவு குறித்த வரையறைகள் பொருந்தாததால் முத்தம்பட்டியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

20—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 1330—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, மாட்டையாம்பட்டி 1-வது வார்டில் குடிநீர் பற்றாக்குறை உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட 1-வது வார்டு மாட்டையாம்பட்டியில் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் 22 பொது குழாய்கள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 6 ஆழ்துளைக் கிணறுகள் மூலமாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது 2002-2003ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் மாட்டையாம்பட்டி மாரியம்மன்கோவில் பின்புறம் ஒரு ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.*

**21—**

**படித்துறைகள் பழுதுபார்த்தல்**

**வினா எண் 6152—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி வழி கன்னடியன் கால்வாய் கரையோரம் பழுதடைந்துள்ள படித்துறைகள் அமைத்து சீரமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மண்டல சேரன்மகாதேவி கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி, வழி கன்னடியன் கால்வாய் கரையோரம் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள சில படித்துறைகள் பழுது ஏற்பட்டுள்ளது. படித்துறை கட்ட பேரூராட்சி மன்றம் இசைவு அளிக்கப்படவில்லை. பொதுப் பணித் துறை மூலம் பழுதுபார்க்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.*



**22—**

**கழிவு நீர் இணைப்பு வழங்குதல்**

**வினா எண் 7670—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 10வது வட்டம், ஜெ.ஜெ. நகரில் "ப" வடிவத்தில் அமைந்துள்ள 18 வீடுகளுக்கு கழிவுநீர் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*ஜெ.ஜெ. நகரில் 10வது வட்டத்தில் சுமார் 50 தெருக்கள் உள்ளன. அத்தனை தெருக்களுக்கும் 3500 மீட்டர் நீளத்தில் 250 மி.மீட்டர் விட்டமுள்ள சுட்ட மண்குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. 364 மீட்டர் நீளத்திற்கு 300 மி.மீட்டர் விட்டமுள்ள இரும்புக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து வீடுகளுக்கும் கழிவுநீர் இணைப்பு கொடுக்க ஏதுவான முறையில் 100 மி.மீட்டர் விட்டமுள்ள சுட்ட மண்குழாய்கள் 3600 மீட்டர் நீளத்திற்கு வீட்டுவாசல் வரை, கழிவு நீர் குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. விடுபட்ட "ப" வடிவத்தில் அமைந்துள்ள 18 வீடுகளுக்கு கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**23—**

**கழிவு நீர் அகற்றும் பணி**

**வினா எண் 7962—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 12 வது வட்டம், அம்மையப்பன் தெரு மற்றும் சுப்பம்மாள் தெருக்களில் கழிவு நீர் தேங்கியிருப்பதை போக்க கழிவு நீர் அமைப்பில் ஆள் நுழைவாயில்கள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*ஆர்.கே. நகர் தொகுதி, 12வது வட்டம், அம்மையப்பன் தெரு மற்றும் சுப்பம்மாள் தெருக்களில் பொதுமக்கள் திடக்கழிவு பொருட்களை குழாய்களில் அதிகமாக விடுவதால் அடிக்கடி அடைப்பு ஏற்படுகிறது. எனவே சுலபமான முறையில் அடைப்பு எடுக்க அதிகப்படியாக 2 ஆள்நுழைவாயில்கள் கழிவு நீர் அகற்றும் அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன.*

**24—**

**புதிய இணைப்பு**

**வினா எண் 8431—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேலச்செவல் பேரூராட்சியில் குடிநீர் விநியோகத்தை ராஜிவ்காந்தி நகர் கரிசல்பட்டி சாலை முதல் புதுக்காலனி முடிய குழாய் இணைப்பு போட்டு விஸ்தரிப்பு செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேலச்செவல் பேரூராட்சி, கரிசல்பட்டி சாலையிலுள்ள புதுக்காலனியிலிருந்து 400 மீட்டர் தூரத்தில் குடிநீர் பொது நல்லி மற்றும் ஆழ்குழாய் அடிப்பம்பு உள்ளது. தற்போது பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் புதிய இணைப்பு விஸ்தரிப்பு செய்ய இயலாது.*





**25—**

**கழிவு நீரை அகற்றுதல்**

**வினா எண் 9673—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 3வது வட்டம், கழிவுநீர் குழாய்களிலும், ஆள் நுழைவாயில்களிலும் மணல் குப்பைகள், ஜல்லி ஆகியவை நிரம்பி கழிவு நீர் வெளியேற முடியாமல் உள்ளதால் அக்கழிவை நீக்கி கழிவு நீர் சுலபமாக வெளியேற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 3வது வட்டத்தில் உள்ள அனைத்து தெருக்களிலும் கழிவு நீர் குழாய்கள் மற்றும் ஆள் நுழைவாயில்களில் உள்ள மணல், குப்பைகள் அகற்றப்பட்டு, தூர்வாரி சுத்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது கழிவு நீர் குழாய்களில் தடைப்படாமல் இருக்க சீராக பராமரிக்கப்பட்டு வருகிறது.*

**26—**

**குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 10227—திரு. சி. சண்முகம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், ஆவடி நகராட்சி, கோவில்பதாகை கிராமப் பகுதியிலுள்ள குடிநீர் பஞ்சம் போக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆவடி நகராட்சி கோயில் பதாகை கிராமப் பகுதியில் உள்ள குடிநீர் பஞ்சத்தைப் போக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(1) இப்பகுதியில் 14 ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய கைப்பம்புகள் உள்ளன.

(2) இப்பகுதியில் கலைஞர் நகர், டாங்கு தெரு மற்றும் பணிக்கர் கிணறு ஆகிய மூன்று திறந்த வெளிக் கிணறுகளில் மின்மோட்டார் பொருத்தப்பட்டு தெருக்களில் பொதுக்குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

(3) வடக்கு மாட வீதி தெருவில் ஒரு ஆழ்துளைகிணறு அமைத்து, அதே இடத்தில் சின்டெக்ஸ் தொட்டியும் அமைத்து குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் இதே ஆழ்துளை கிணற்றிலிருந்து 7 தெருக்களுக்கு பொதுக்குழாய் அமைக்கவும் மற்றும் சிறிய தொட்டிகள் அமைக்கவும் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

(4) இதுவன்றி குடிநீர் தட்டுப்பாடு உள்ள இடங்களுக்கு வாரத்திற்கு இருமுறை 7 லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

(5) மேலும் ஆவடி நகராட்சிக்கு முழுமையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் மூலம் ரூ.38 கோடி செலவில் குடிநீர் திட்டம் அமைக்க திட்டம் தயார் செய்யப்பட்டு வருகிறது.

**27—**

## பொதுக் கழிப்பிட வசதி

**வினா எண் 10345—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2வது தொகுதி, கன்னங்குறிச்சி பேரூராட்சி, 15வது வார்டு, கோவிந்தராஜா பட்டணத்தில் பொது கழிப்பிட வசதி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னங்குறிச்சி பேரூராட்சி, 15வது வார்டு, கோவிந்தராஜா பட்டணத்தில் பொது கழிப்பிடம் ரூபாய் 2.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு பேரூராட்சி மன்றம் 25-2-2002ஆம் தேதியில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆனால் மேற்படி பகுதியில் கழிப்பிடம் கட்டுவதற்கு அரசு நிர்ணயம் செய்துள்ள அளவு இடம் இல்லாததால் பணி நிறைவேற்றப்படாமல் உள்ளது.

**28—**

## திண்காரை சாலை

**வினா எண் 11797—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி பேரூராட்சி, அரசடி 2வது தெரு மற்றும் அனவரதநல்லூர் தெரு மற்றும் வைத்தி மேலத்தெரு சந்து ஆகிய தெருக்களில் திண்காரை சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சியின் முக்கியப் பகுதியாக இல்லாத இப்பகுதியில் திண்காரை சாலை கூடாது என அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளதால் திண்காரை சாலை அமைக்க இயலாது.

[2003 மே 10

29—

திண்காரை சாலை

**வினா எண் 11801—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி பேரூராட்சி, ஆஸாத் தெரு மேல்பகுதி இரண்டு பாகங்கள் மற்றும் காயிதே மில்லத் தெரு கீழ்புறம் ஆகிய சாலைகளில் திண்காரை சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சியின் முக்கியப் பகுதியாக இல்லாத இப்பகுதியில் திண்காரை சாலை கூடாது என அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளதால் திண்காரைச் சாலை அமைக்க இயலாது.

30—

தார்ச் சாலை

**வினா எண் 11942—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சிக்குட்பட்ட கொழுமடை புதுக்காலனி தெற்குரதவீதி தென்புறம் முதல் காடாபேரி குளம் முடிய ஆகிய இடங்களில் தார்ச்சாலை போடுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சிக்குட்பட்ட கொழுமடை புதுக்காலனி, தெற்குரத வீதி தென்புறம் முதல் காடாபேரி



2003 மே 10]

குளம் முடிய சுமார் 540 மீ.நீளம் உள்ளது. இத்தார் சாலை அமைக்க ரூ.2.50 லட்சம் செலவு ஆகும். தற்போது பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை என்பதால் இப்பணி மேற்கொள்ள இயலாது.

31—

வாறுகால் அமைத்தல்

**வினா எண் 11944—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சிக்குட்பட்ட சொக்கலிங்கபுரம் பிரதான சாலைக்கு வாறுகால் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சிக்குட்பட்ட சொக்கலிங்கபுரம் பிரதான சாலைக்கு வாறுகால் அமைக்க தற்போது பேரூரராட்சியில் போதுமான நிதி வசதியில்லாததால் இப்பணி மேற்கெள்ள இயலாது.

32—

வடிகால் வசதி

**வினா எண் 12137—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி 4வது வார்டு, பத்திரகாளியம்மன் கோவில் தெற்கு தெருவிற்கு வடிகால் அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி, வார்டு 4, பத்திரகாளியம்மன் கோவில் தெற்கு தெருவில் 1999 ஆம் ஆண்டு சுவர்ண ஜெயந்தி திட்டத்தில் வடிகால் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பயன்படுத்துப்பட்டு வருகிறது.

**33—**

**வடிகால் வசதி**

**வினா எண் 12138—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி, சீனிவாசபெருமாள் நடுத்தெருவில் வடிகால் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* வீரவநல்லூர் பேரூராட்சி வார்டு 8, சீனிவாசப்பெருமாள் நடுத்தெருவில் 1999ஆம் வருட சுவர்ணஜெயந்தி திட்டத்தில் வடிகால் கட்டும் பணி செய்து முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரப்பட்டுள்ளது என்பது தெரிவிக்கப்படுகிறது.





**34—**

**பெண்கள் கழிப்பிடம்**

**வினா எண் 12450—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில் வாரச்சந்தை பகுதியிலும், ரங்கம்பாளையம் பகுதியிலும் நீர் வசதியுடன் கூடிய பெண்கள் கழிப்பிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சி, வாரச்சந்தை பகுதியில் தற்பொழுது 3 சீட்டுகள் கொண்ட பெண்கள் கழிப்பிடம் தண்ணீர் வசதியுடன் ஏற்கனவே கட்டப்பட்டு பெண்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் கொங்கணாபுரம் பேரூராட்சி, ரங்கம்பாளையம் அருந்ததியர் தெருவில் 4 சீட்டுகள் கொண்ட பெண்கள் கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது.

**35—**

**கழிப்பிடம்**

**வினா எண் 12451—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில் நீர் வசதியுடன் கூடிய பெண்கள் கழிப்பிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) பூலாம்பட்டி பேரூராட்சியில் போதுமான இடவசதி மற்றும் நிதி வசதி இல்லை என்பதால் தற்போது பெண்களுக்கு கழிப்பிடம் கட்டும் பணியை மேற்கொள்ள இயலாது.

**36—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 12737—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணச்சாலை பேரூராட்சிக்கு அருகில் மேல்நிலைத் தொட்டி கட்டி சுமார் 3 வருடங்கள் ஆகியும் குடிநீர் ஏற்றவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக குடிநீர் ஏற்றி மக்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இடங்கணச்சாலை பேரூராட்சிக்கு அருகில் காளயாம்பட்டியில் 60,000 லிட்டர் கொள்ளளவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேல்நிலைத் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு இதற்கான போர்வெல் அமைக்கப்பட்டதில் தனியார் வழக்கு தொடர்ந்து ஆட்சேபித்ததால் குடிநீர் ஏற்ற இயலவில்லை என்பதையும், ஆனால் தற்போது இந்த மேல்நிலை தொட்டிக்கு காவிரி குடிநீரேற்றம் செய்யப்பட்டு அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் நல்லமுறையில் செய்யப்பட்டு வருகிறது.



2003 மே 10]

**37—**

**சாக்கடை வசதி**

**வினா எண் 13377—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சியில் முறையான சாக்கடை வசதிகளை செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சியில் முறையான சாக்கடை வசதிகளை செய்ய தற்போது பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் இப்பணி மேற்கொள்ள இயலாது.

**38—**

**டிராக்டர்**

**வினா எண் 13381—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சியில் தெருக்களை சுத்தம் செய்த கழிவுகளை எடுத்து செல்ல கூடுதலாக ஒரு டிராக்டர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சியில் தற்போது பொது சுகாதாரப் பணிக்காக ஒரு டிராக்டரும், ஒரு பவர் டில்லரும் உள்ளது. இவைகள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றைக் கொண்டு தற்போது பேரூராட்சியின் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பேரூராட்சியின் நிதி நிலை திருப்திகரமாக இல்லாததால் கூடுதலாக ஒரு டிராக்டர் வாங்க இயலாது.

**39—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 15048—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், 94ஏ, நாரணம்மாள்புரத்தில் இருந்து மினி பேருந்து செல்லும் மங்கம்மா சாலையும், புறநகர் சாலையும் சீர் செய்து தார்ச்சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், 94ஏ, நாரணம்மாள்புரத்தில் இருந்து மினி பேருந்து செல்லும் மங்கம்மா சாலையும், புறநகர் சாலையும் சீர் செய்து தார்ச் சாலையாக மாற்ற தற்போது பேரூராட்சியில் நிதி வசதி போதுமானதாக இல்லை என்பதால் தற்போது இப்பணி மேற்கொள்ள இயலாது.

**40—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 16403—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி, சண்முகபுரம் பகுதியில் பல்நோக்கு சமுதாயக்கூடம் கட்டிக் கொடுத்திட அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி, சண்முகபுரம் பகுதியில் பல்நோக்கு சமுதாயக்கூடம் கட்டிக் கொடுத்திட கருத்துரு ஏதும் நிலுவையில் இல்லை. அப்பேரூராட்சிக்கு சொந்த இடமோ அல்லது புறம்போக்கு இடமோ எதுவும் இல்லாததாலும் சமுதாயக்கூடம் கட்ட இயலாது.

**41—**

### ஈமச்சடங்கு மண்டபம்

**வினா எண் 16521—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் உப்பனாற்று கரையில் ஈமச்சடங்கு மண்டபம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சி, உப்பனாற்றுக் கரையில் ஈமச்சடங்கு மண்டபம் கட்ட மயிலாடுதுறை தொகுதி, பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**42—**

### சாலை வசதி

**வினா எண் 17198—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சியில் வசிக்கும் நரிக்குறவர்களுக்கு சாலை வசதி செய்து தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை. பேராவூரணி பேரூராட்சியை சேர்ந்த சேது சாலையில் வட்டாட்சியர் அலுவலகத்தில் கிழ்புற சுவர் ஓரமாக தனியாருக்கு சொந்தமான இடத்தில் நடைபாதை அமைத்து பயன்படுத்தப்படுகிறது. மேற்படி நரிக்குறவர்கள் தனியார் நிலத்தினை பயன்படுத்தி வருவதால் இது குறித்து பரிசிலனை செய்ய இயலாது.

**43—**

**கிராம சுத்தம்**

**வினா எண் 18495—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கிராமங்களில் குப்பைகள், கழிவு நீர் தேங்கி இருப்பதால் மாதம் இரண்டு முறையாவது சுத்தம் செய்து, பிளீச்சிங் பவுடர் தெருக்கள் தோறும் தெளிக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* பேரூராட்சித் துறையினைப் பொறுத்த வரையில், அனைத்து பேரூராட்சிகளிலும் குப்பைகள் மற்றும் கழிவு நீர் தேங்காமல் சுத்தம் செய்து தெருக்கள் தோறும் பிளீச்சிங் பவுடர் மற்றும் பினாயிலை பயன்படுத்தி பேரூராட்சி தெருக்கள் சுத்தமாக பராமரிக்கப்பட்டு பொது சுகாதாரம் பேணப்பட்டு வரப்படுகிறது.

*(ஆ)* கேள்வி எழவில்லை.



**44—**

**சிமெண்ட் சாலை**

**வினா எண் 19680—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கருமாத்தூர் பஞ்சாயத்து, கோட்டையூர் பகுதிக்கு சிமெண்ட் சாலை, கழிவு நீர் கால்வாய் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம் கருமாத்தூர் ஊராட்சி, கோட்டையூர் பகுதியில் உள்ள மண் சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றி கழிவு நீர் வாய்க்கால் கட்டித்தர ரூ. 8.50 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஊராட்சியில் தற்போது உபரிநிதி இல்லாததால் இவ்வேலையை தற்போது செய்ய வாய்ப்பில்லை.

**45—**

**அடிகுழாய் அமைத்தல்**

**வினா எண் 20567—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரிலுள்ள முத்துகிருஷ்ணாபுரம், இல்லத்தார் தெரு, குமந்தாபுரம் 1-வது வார்டு, 8-வது வார்டு உலகாம்பள்ளி மற்றும் மலம்பேட்டை சாலை பகுதிகளில் அடிகுழாய் அமைத்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூரிலுள்ள முத்துகிருஷ்ணாபுரம் 9-வது வார்டு இல்லத்தார் வடக்கு தெரு, 1-வது வார்டு குமந்தாபுரம் 8-வது வார்டு உலகாழ்பள்ளி மற்றும் 31-வது வார்டு மலம்பேட்டை சாலை வண்ணார் குடியிருப்பு பகுதியில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.*

**46—**

**தொகுப்பு விடுகள் கட்டுதல்**

**வினா எண் 22095—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடங்கணசாலை பேரூர் பகுதியிலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அது சார்ந்த விவரங்களை அரசு அறியுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், பேரூர் பகுதி, எடங்கணசாலை பேரூராட்சியை சார்ந்ததாகும். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில், ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மட்டுமே தொகுப்பு வீடுகள் கட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது.*



2003 மே 10]

**47—**

**தொகுப்பு விடுகள்**

**வினா எண் 22099—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த வீரப்பம்பாளையத்தில் அருந்ததியர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த வீரப்பம்பாளையத்தில், அருந்ததியர்களுக்கு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் மூன்று தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில் அக்கிராமத்திற்கு ஒதுக்கீடு ஏதும் வழங்கப்படவில்லை.*

**48—**

**கைபம்பு சீர்செய்தல்**

**வினா எண் 26950—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகராட்சியில் செயல்படாமல் உள்ள கைபம்புகளை சீர் செய்ய (ஹேண்ட் பம்ப்) அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில் எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சியில் செயல்படாமல் உள்ள கைபம்புகள் உடனுக்குடன் நகராட்சியால் சீர் செய்யப்பட்டு வருகின்றன.*

[2003 மே 10

**49—**

### காவிரி நீர் திட்டம்

**வினா எண் 26967—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட இணைப்புகள் எத்தனை?

(ஆ) கட்டணம் முறையாக வசூலிக்கப்படுகிறதா? அதன் மூலம் வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின்கீழ் டிசம்பர் 2002 வரை 10657 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) இந்நகராட்சியில் குடிநீர் கட்டணம் முறையாக வசூலிக்கப்படுகிறது. குடிநீர் குழாய் இணைப்புகள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 86,96,112/- வருமானம் கிடைக்கின்றது.

**50—**

### குடிநீர் வசதி

**வினா எண் 26972—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் வியாபார ஸ்தலங்களுக்கு குடிநீர் கட்டணம் எவ்வளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

(ஆ) மொத்த இணைப்புகளின் விவரம்? இதன் மூலம் நகராட்சிக்கு கிடைக்கும் ஆண்டு வருமானம் என்ன?

(இ) இணைப்பு கேட்டு விண்ணப்பம் செய்து காத்திருப்போர் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் வியாபார ஸ்தலங்களுக்கு 1000 லிட்டர் குடிநீர் ரூ.15.75 வீதம் மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்ச கட்டணமாக ரூ.217/- வீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) புதுக்கோட்டை நகராட்சியில் மொத்தம் 10657 குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ரூ.86,96,112/- ஆண்டு வருமானமாக கிடைக்கிறது.

(இ) புதுக்கோட்டை நகராட்சியில் குடிநீர் இணைப்புக் கேட்டு விண்ணப்பித்துள்ளோர் எண்ணிக்கை 25. தற்போது அரசு அறிவித்துள்ளபடி குடிநீர் இணைப்பு கேட்டு விண்ணப்பம் செய்திருப்போரில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு மட்டுமே முன்னுரிமையுடன் உடனுக்குடன் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

[2003 மே 10

## பட்டியல் 35

1—

### சார்பு நீதிமன்றம்

**வினா எண் 14106—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியில் துணை நீதிமன்றம் துவக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

எடப்பாடியில் சார்பு நீதமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

2—

### கோயில் குளம் பழுது பார்த்தல்

**வினா எண் 12121—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதியிலுள்ள தியாகராய சுவாமிகள் (வடிவுடையம்மன்) ஆலயத்திலுள்ள குளத்தை ஆழப்படுத்தியும், சுற்றுப்புறத்தை சீர்செய்தும் சரி செய்யப்படுமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சென்னை, திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலின் கோபுரத்துக்கு வெளியே அமைந்துள்ள திருக்குளத்தை பழுதுபார்த்திடும் நடவடிக்கையாக, முதற்கண் நீராழி மண்டபத்தை பழுதுபார்ப்பதற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது. திருக்குளத்திற்கு நீர் வருவதற்கு வழி வகுத்து, மதிற்சுவர்களை செப்பனிடுவதற்கு மதிப்பீடு தயார் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3—

### அறங்காவலர் குழு

**வினா எண் 21327—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து கோயில்களுக்கும் அறங்காவலர் குழுக்களை அரசு நியமித்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டம் 1959, சட்டப்பிரிவு 46(3)-ன்கீழ், ஆண்டு வருமானம் ரூ.10 இலட்சத்திற்கு மேல் உள்ள திருக்கோயில்களுக்கு, பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்கள் அரசால் நியமனம் செய்யப்படவேண்டும். அறங்காவலர்கள் நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளன. இதேபோன்று சட்டப்பிரிவு 46(2) மற்றும் 46(1) 49(i)-ன்வீ கீழ் உள்ள திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமனத்திற்கான நபர்களை தேர்வு செய்வதற்கான மாவட்டக் குழுக்கள் அரசால் அமைக்கப்படுதல் வேண்டும். மாவட்டக் குழுவிற்கான கருத்துருவும் பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2003 மே 10

4—

## பெண்கள் அரசு கலைக் கல்லூரி

**வினா எண் 16858—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மொத்தம் எத்தனை அரசு கலைக் கல்லூரிகள் பெண்களுக்கென்று தனியாக உள்ளன?

(ஆ) இவற்றில் எத்தனை கல்லூரிகளில் முதுகலைப் பாடம் பயிற்றுவிக்கப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 19 அரசு கலைக்கல்லூரிகள் பெண்களுக்கென்று தனியாக உள்ளன.

(ஆ) இவற்றில் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள 12 அரசு கல்லூரிகளில் முதுக்லைப்பாடம் பயிற்றுவிக்கப்படுகிறது.

5—

## கலைமாமணி விருது

**வினா எண் 20317—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இசைக் கல்லூரியின் மூலம் கலைமாமணி விருது வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆமெனில், எந்தெந்த துறைகளில் இசை பயின்றவர்களுக்கு வழங்கப்படுகிறது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள் மூலம் விருது ஏதும் வழங்கப்படுவதில்லை. இயல், இசை, நாட்டியம், நாடகம், திரைப்படத் துறை, கிராமியக் கலை முதலியவற்றில் சிறந்து விளங்கும் கலைஞர்களை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலமாக பரிந்துரை செய்து அரசால் தேர்வு செய்யப்பட்ட கலைஞர்களுக்கு கலைமாமணி விருது வழங்கப்படுகிறது.

(ஆ) தேவை எழவில்லை.

6—

## இசைக் கல்லூரி

**வினா எண் 20318—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இசைக் கல்லூரியில் மாலை நேர வகுப்பு என்னென்ன இசைகளுக்கு நடத்தப்பட்டு வருகிறது?

(ஆ) இப்பயிற்சி வகுப்பில் பணியாற்றும் ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) சென்னை அரசு இசைக் கல்லூரியைச் சார்ந்த மாலை நேர இசைக் கல்லூரிகள், சென்னையில், மயிலாப்பூர், புரசைவாக்கம், தியாகராயநகர் மற்றும் திருவல்லிக்கேணி ஆகிய இடங்களில் மாநகராட்சிப் பள்ளிகளில் மாலையில், 6.00 மணி முதல் 8.00 மணி முடிய செயல்படுகின்றன. மயிலாப்பூர், புரசைவாக்கம், தியாகராயநகர் ஆகிய மையங்களில் குரலிசை, வயலின் மற்றும் வீணை இசை வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. திருவல்லிக்கேணியில் குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம் ஆகிய இசை வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மதுரை இசைக் கல்லூரியைச் சார்ந்த மாலை நேர

மையம் ஒன்று மதுரை நகரிலுள்ள ஒரு மாநகராட்சிப் பள்ளியில் செயல்பட்டு வருகிறது. மதுரை மாலை நேர இசைக் கல்லூரியில், குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம் மற்றும் பரதநாட்டியம் ஆகிய இசை வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) மாலை நேர இசைக் கல்லூரிகளில் பணிபுரியும் பகுதிநேர இசையாசிரியர்கள் தொகுப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 1,100/- பெற்று வருகின்றனர். மாலை நேர இசைக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பகுதிநேரமாக இரண்டு மணிநேரம் மட்டுமே பணிபுரிந்து வருவதால், பணி நிரந்தரம் குறித்த வாய்ப்பு எழவில்லை.

7—

### விளையாட்டு மைதானம் மேம்படுத்துதல்

**வினா எண் 20747—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் காந்தி விளையாட்டு மைதானத்தில் மழைக் காலங்களில் மழை நீர் தேங்காதவண்ணம் மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் காந்தி விளையாட்டு மைதானத்தில் மழை காலங்களில் மழை நீர் தேங்காத வண்ணம் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், 400 மீ. தடகளபாதை, கால்பந்து மைதானம், புதிய கூடைப்பந்து மைதானம் மற்றும் கைப்பந்து விளையாட்டு மைதானங்களும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. சேலம் காந்தி விளையாட்டு அரங்கில் மழைநீர் தேங்கி நிற்பதை சரிசெய்வது தொடர்பாக 3x2x1½ மீ. அளவில் ஒரு சம்ப் அமைத்து நிரந்தரமாக ஆயில் இன்ஜின் மூலமாக மழை நீரை அருகில் உள்ள கால்வாயில் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த சம்பின் மூலம் விளையாட்டு அரங்கில் மழை காலங்களில் தேங்கி நிற்கும் மழை நீரை வெளியேற்றுவதால் மழைநீர் தேங்குவதற்கு வாய்ப்பில்லை.



8—

### விடுதி கட்டுமானப் பணிகள்

**வினா எண் 16795—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் செய்யப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் எத்தனை?

(ஆ) அவற்றின் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைகளின் மூலம் கீழ்க்கண்ட விடுதிகளுக்கு கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன:—

| | | |
|---|---|---|
| 1. | அரசினர் பள்ளி மாணவர் விடுதி, (பிந), ஆலூர் | கட்டிடப் பணி முடியும் தருவாயில் உள்ளது. |
| 2. | அரசினர் பள்ளி மாணவர் விடுதி, (பிந), திருக்களம்பூர் | கட்டிடப் பணி முடியும் தருவாயில் உள்ளது. |
| 3. | அரசினர் பள்ளி மாணவர் விடுதி, (பிந), புதுக்கோட்டை | கட்டிடப் பணி முடியும் தருவாயில் உள்ளது. |
| 4. | அரசு கல்லூரி மாணவியர் விடுதி, (பிந), புதுக்கோட்டை | தரைத்தளம் கட்டுமானப் பணி நடைபெறுகிறது. |

9—

**கூடுதல் பள்ளிக் கட்டடம்**

**வினா எண் 22177—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி அரசு கள்ளர் பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*உசிலம்பட்டி தொகுதி அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை.*

10—

**உலமா ஓய்வூதியம்**

**வினா எண் 34319—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு 2002-2003 ஆம் ஆண்டில் வறிய நிலையிலுள்ள உலமாக்களுக்கு உலமா ஓய்வூதியம் பெற்ற பயனாளிகள் எத்தனைபேர்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*2002-2003 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் யாருக்கும் உலமா ஓய்வூதிய ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை.*



11—

**இலவச தென்னங்கன்றுகள் வழங்கல்**

**வினா எண் 21143—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் தென்னை வளர்ப்பை ஊக்கப்படுத்த விவசாயிகளுக்கு இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்க அரசு பரிசீலிக்குமா?*

*(ஆ) ஆமெனில், குறுகிய காலத்தில் பலன் கொடுக்கும் தென்னங்கன்றுகள் வழங்க அரசு முன்னுரிமை வழங்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) விவசாயிகளுக்கு இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*

*(ஆ) தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறை மூலம், ஆண்டுதோறும் சுமார் 6.30 இலட்சம் கன்றுகள் குறுகிய காலத்தில் பலன் கொடுக்கவல்ல நெட்டை X குட்டை இரக தென்னங்கன்றுகளும் 10.08 இலட்சம் நெட்டை இரக கன்றுகளும் விநியோகம் செய்யப்படுகிறது.*

*கன்றுகள் நெட்டை இனம் ஒன்றுக்கு ரூ.12 வீதமும் நெட்டை X குட்டை இனத்திற்கு ரூ.20 வீதமும் வசூல் செய்யப்படுகிறது.*

*கன்றுகளின் விநியோக விலை கடந்த 4 ஆண்டுகளாக உயர்த்தப்படவில்லை.*

12—

**அங்கன்வாடி மையங்கள்**

**வினா எண் 26984—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2003 மே 10

(அ) புதுக்கோட்டை தொகுதியில் எத்தனை அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) எத்தனை குழந்தைகள் பயன்பெறுகின்றன?

(இ) அரசுக்கு ஆகும் மொத்த செலவு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 1266 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) 6 மாதம் முதல் 24 மாதம் வயது பிரிவில் 32066 குழந்தைகளும், 2 வயது முதல் 5 வயது பிரிவில் 35475 குழந்தைகளும் பயன் பெறுகின்றனர்.

(இ) இதனால் அரசுக்கு ஆகும் செலவு ரூ.2,29,98,000/-.

**13—**

**ஆதிதிராவிடர் மாணவ விடுதி**

**வினா எண் 2763—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் நடத்தப்படும் மாணவர் விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் எத்தனை பேர்?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

| | |
|---|---|
| ஆதிதிராவிட மாணவர்கள் | 52930 |
| ஆதிதிராவிட மாணவிகள் | 24579 |
| பழங்குடியின மாணவர்கள் | 878 |
| பழங்குடியின மாணவிகள் | 393 |
| மொத்தம் | 78780 |

**14—**

**மயானக் கொட்டகை கட்டுதல்**

**வினா எண் 17620—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகைக் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வேட்டங்குடி ஊராட்சியைச் சேர்ந்த வடக்கு காலனிகளில் சுமார் 50 ஆதிதிராவிடர் குடும்பங்கள் உள்ளன. ஆதிதிராவிடர்களுக்கு பயன்படுத்த மயானத்திற்கு கொட்டகை அவசியம் தேவைப்படுகிறது. மேற்படி மயானக் கொட்டகை கட்டுவதற்கு ரூ.30,000/- ஆகும். மேற்படி தொகையினை எதிர் வரும் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் நிதி ஒதுக்கீடு

பெற்று மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**15—**

**ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்புதல்**

**வினா எண் 18971—திரு. பெ. பழனியப்பன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சித்தேரி மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் காலிபணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதி, சித்தேரி உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்ட போது, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஆறு அனுமதிக்கப்பட்டு, அதில் மூன்று பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மீதம் உள்ள மூன்று முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், தேர்ந்த பட்டியலைக் கொண்டும், பதவி உயர்வு மூலமாகவும் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாகவும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**16—**

**ஆதிதிராவிடர் மாணவ விடுதி**

**வினா எண் 19384—திரு. வெ. கோவிந்தராஜ்:** *மாண்புமிகு ஆதி திராவடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட சிக்கபூவத்தி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் துவக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.*

**17—**

**பள்ளி தலைமை ஆசிரியர் நியமனம்**

**வினா எண் 31105—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம் கவரை ஆதிதிராவிடர் நலத் துறை மேனிலைப் பள்ளிக்கு தலைமை ஆசிரியர் இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிரப்பப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம் கவரை அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடம் பூர்த்தி செய்யப்பட்டு தலைமை ஆசிரியர் 27-1-2003 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.*

**18—**

**மணல் குவாரி**

**வினா எண் 11526—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆறுகளில் திருட்டுதனமாக மணல் எடுப்பதால் அரசுக்கு ஏற்படும் நிதி இழப்பினை தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆறுகளில் திருட்டுத்தனமாக மணல் எடுப்பதால் அரசுக்கு ஏற்படும் நிதி இழப்பினை தடுக்க அரசு கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:*

*அனுமதி இல்லாமல் மணல் குவாரி செய்பவர்கள் மீதும், உரிய நடைச்சீட்டு இன்றி மணல் ஏற்றிச் செல்லும் வாகன உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை மேற்கொண்டு 1959-ம் வருடத்திய தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதி 36-ன்கீழ் அபராதம் விதிக்கப்படுகிறது. அவ்விதிகளில் விதிகள் மீறலுக்காக குறைந்த பட்ச அபராதம் ரூ.25,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அபராதத் தொகை கட்ட சம்மதிக்காதவர்கள் மீது நீதிமன்றம் மூலம் வழக்கு தொடரப்படுகிறது. குத்தகைதாரர்கள் குவாரிப் பணிகளில் விதி மீறல்கள் செய்தால் அக்குத்தகையை ரத்து செய்வதற்கும் விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் நிதி மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆறுகளில் மணல் எடுப்பதை கண்காணிக்கப்படுகிறது. அதிகமாக மணல் உள்ள பகுதிகளைக் கண்டறிந்த பொதுப் பணித் துறையின் அறிவுரையின்படியும் கிராம மற்றும் நகர குடிநீர் ஆதாரங்கள் பாதிக்காத பொது ஏலம் விடுவதன் மூலம் மணல் திருட்டு குறைக்கப்படுகிறது.*

*கள்ளத்தனமாக மணல் ஏற்றிச் சென்ற வகையில் 1999-2000-ம் ஆண்டில் 1265 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு, அபராதத் தொகையாக ரூ.3.16 கோடியும் 2000-2001-ம் ஆண்டில் 1746 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு ரூ.4.36 கோடியும், 2001-2002 ஆண்டில் 2675 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு ரூ.5.43 கோடியும் அரசுக்கு வருவாய் ஈட்டப்பெற்றுள்ளது.*



2003 மே 10]

**19—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 21571—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், பூலாம்பட்டி பேரூராட்சி பில்லுக்குறிச்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா?*

*(ஆ) ஆமெனில், அதை இந்த நிதியாண்டில் அமைக்க அரசு முன் வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) சேலம் மாவட்டம், பூலாம்பட்டியில் உள்ள பில்லுக்குறிச்சியில் பூலாம்பட்டி 110/22 கி.வோ. துணை மின் நிலையம் நிறுவுவதற்கான திட்ட மதிப்பீடு 10-வது ஐந்தாண்டு திட்டப் பகுதி-III (2003-2007)-ல் வாரிய ஒப்புதல் அளிப்பதற்காக பரிசீலனையில் உள்ளது. ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் அப்போதைய நிதிநிலைமையைப் பொறுத்து 10-வது ஐந்தாண்டு திட்டப்பகுதி-III-ன் காலத்திற்குள் (2002-2007) அமைக்கப்படும்.*

*மேற்படி துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான நிலம் எடப்பாடி தாலுகா, பில்லுக்குறிச்சி கிராமம் சர்வே எண்.491/4சி-ல் 3.84 ஏக்கர் பரப்பளவு தேர்வு செய்யப்பட்டுள்ளது. நில ஆர்ஜிதம் முடிந்து உரிய அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் வாரியத்தின் அப்போதைய நிதிநிலைக்கேற்ப மேற்கண்டவாறு 10-வது ஐந்தாண்டுத் திட்டப்பகுதி-III (2003-2007)-ல் இத்துணை மின் நிலையம் நிறுவப்படும்.*

[2003 மே 10

20—

### தனியார் மின் திட்டங்கள்

**வினா எண் 22788—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை தனியார் மின்சார உற்பத்தி நிலையங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது?

(ஆ) எத்தனை நிலையங்கள் இயங்கி வருகிறது?

(இ) அவைகளின் மின்சார உற்பத்தி அளவு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் தனியார் மின்சார உற்பத்தி நிலையங்கள் எதற்கும் அரசு அனுமதி அளிக்கவில்லை.

(ஆ) தற்போது மொத்தம் ஐந்து தனியார் மின் திட்டங்கள் இயங்கி வருகின்றன. அவைகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வ.எண். | தனியார் மின் திட்டங்களின் பெயர் | திறன் (மெகாவாட்) | மின் உற்பத்தி துவங்கிய நாள் |
|---|---|---|---|
| 1 | பேசின் பாலம் | 196.0 | 15-2-1999 |
| 2 | காமல்பட்டி | 105.66 | 1-3-2001 |
| 3 | பிள்ளைபெருமாள்நல்லூர் | 330.5 | 26-4-2001 |
| 4 | சமயநல்லூர் | 106.0 | 22-9-2001 |
| 5 | நெய்வேலி ஜீரோ யூனிட் | 250.0 | 15-12-2002 |
| | மொத்தம் | 988.16 | |



2003 மே 10]

(இ) தனியார் மின் திட்டங்கள் 2002-2003 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ள மின்சார அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ.எண். | தனியார் மின் திட்டங்களின் பெயர் | 2002-03ல் உற்பத்தி செய்யப்பட வேண்டிய மில்லியன் யூனிட்டுகள் | 1-4-02 முதல் உற்பத்தி செய்த மில்லியன் யூனிட்டுகள் | |
|---|---|---|---|---|
| 1 | பேசின் பாலம் | 1400 | 1043 | (9-2-03 வரை) |
| 2 | காமல்பட்டி | 740 | 577 | (11-2-03 வரை) |
| 3 | பிள்ளைபெருமாள் நல்லூர் | 2284 | 1836 | (13-2-03 வரை) |
| 4 | சமயநல்லூர் | 740 | 636 | (15-2-03 வரை) |
| 5 | நெய்வேலி ஜீரோ யூனிட் | 500 | 150 | (1-2-03 வரை) |
| | மொத்தம் | 5664 | 4242 | |

21—

### நியாய விலைக் கடை

**வினா எண் 14154—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் இருளங்குப்பத்தில் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படாமல் உள்ள நியாய விலைக் கடையை விரைவில் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரம், திருவதிகை கடை எண் 6-ல் 789 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து 240 குடும்ப அட்டைகளைப் பிரித்து ஆண்டிக்குப்பம் மற்றும் இருளங்குப்பம் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆண்டிக்குப்பத்தில் ஒரு பகுதி நேரக் கடை அரசுக்கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. பகுதி நேரக் கடைகளில் 200 குடும்ப அட்டைகளுக்கு குறையாமல் இருக்க வேண்டும் என்பது அரசின் வரையறை. இந்த 240-ல் 99 குடும்ப அட்டைகளைப் பிரித்து இரண்டாவது பகுதி நேரக் கடை அமைக்க அரசு வரையறைப் பொருந்தாததால் இருளங்குப்பத்தில் நகராட்சியால் கட்டப்பட்ட கட்டடம் பகுதி நேரக் கடையாக செயல்பட வாய்ப்பில்லை.*

**22—**

**நியாய விலை கிளைக் கடை**

**வினா எண் 17317—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, நக்கனேரி கிராமத்திற்கு நியாய விலை கிளைக் கடை அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், 130 குடும்ப அட்டைகளை கொண்டுள்ள நக்கனேரி பகுதி மக்கள் தற்சமயம் சிவசுப்பிரமணியபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நடத்தும் கணக்கர்குளம் நியாய விலைக் கடையிலிருந்து உணவுப் பொருட்கள்



பெற்றுவருகின்றனர். பகுதி நேரக் கடையுடன் இணைக்கப்பட வேண்டிய குடும்ப அட்டைகள் குறித்த வரையறை நிறைவு பெறாததாலும் பிற பகுதி குடும்ப அட்டைதாரர்களை இணைக்க வாய்ப்பில்லாததாலும் நக்கனேரி பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**23—**

**கல்வி நிறுவன அலுவலர்**

**கூட்டுறவு சிக்கன மற்றும் நாணயச் சங்கம்**

**வினா எண் 21245—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களின் அலுவலர் கூட்டுறவுச் சிக்கன மற்றும் நாணயச் சங்கம் 2000-2001 ஆம் நிதியாண்டில் எவ்வளவு லாபகரமாக இயங்கியது?

(ஆ) இதில் எவ்வளவு உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) 2000-2001 ஆம் நிதியாண்டில் ரூ. 23,17,679.70 நிகர இலாபம் ஈட்டியுள்ளது.*

*(ஆ) 1-4-2000-ல் இச்சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 1427 ஆகும். 2000-2001 ஆம் ஆண்டில் 93 உறுப்பினர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். 100 உறுப்பினர்களின் பங்குத்தொகை திரும்ப அளிக்கப்படுள்ளது. 31-3-2001-ல் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 1420 ஆக உள்ளது.*

[2003 மே 10

24—

### மகளிருக்கு நகர கூட்டுறவு வங்கி

**வினா எண் 22952—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியில் மகளிருக்காக புதிய நகர கூட்டுறவு வங்கி துவங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

எடப்பாடி வட்டாரத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வரும் சங்ககிரி நகர கூட்டுறவு வங்கியின் கிளை மற்றும் சேலம் மாவட்ட மகளிர் கூட்டுறவு வங்கியின் கிளை ஆகியவை மூலம் மகளிருக்கு தேவைப்படும் அனைத்து கடன்களும் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில், எடப்பாடியில் மகளிருக்கென தனியாக வங்கி துவங்கப்பட்டால், தன்னாற்றலுடன் செயல்பட போதிய வாய்ப்பு இல்லை. எனவே, எடப்பாடியில் மகளிருக்காக புதிய கூட்டுறவு வங்கி துவங்க இயலாது.

25—

### நியாய விலைக் கடைக்கு கட்டட வசதி

**வினா எண் 23099—திரு க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, தவசி ஊராட்சியில் உள்ள கூட்டுறவு கடைக்கு புதிதாக கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், அனக்காவூர் ஒன்றியத்தைச் சார்ந்த தவசி ஊராட்சியில் உள்ள தவசி நியாய விலைக் கடைக்கு பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து புதியதாக கட்டடம் கட்டப்பட்டு 14-11-2001 முதல் செயல்பட்டு வருகிறது.

26—

### பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 23288—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி மங்களப்பள்ளி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடைத் திறக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள தோரணம் பதிகொரட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் சின்னாரப்பட்டி முழுநேரக் கடையோடு இணைந்துள்ள மங்களப்பள்ளி பகுதியில் 157 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. தாய்க் கடைக்கும் மங்களப்பள்ளி பகுதிக்கும் இடையே 1 கிலோ மீட்டர் தொலைவே உள்ளது. தொலைவு மற்றும் குடும்ப அட்டைகள் தொடர்பான வரையறைகள் பொருந்தாததால் மங்களப்பள்ளி பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

[2003 மே 10

27—

**நியாய விலைக் கடை**

**வினா எண் 25164—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தை சேர்ந்த ஆவணிப் பேரூர் கீழ் முகம் மசையன் தெருவில் ஒரு நியாய விலைக் கடை துவக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆமெனில், அது பற்றிய விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்தில் சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையால் மந்தையன் வளவு முழு நேரக் கடை 718 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. 104 குடும்ப அட்டைகளை மட்டுமே கொண்டுள்ள மசையன் தெரு தாய்க் கடையிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. பகுதி நேரக் கடையுடன் இணைக்கப்பட வேண்டிய குடும்ப அட்டைகள் மற்றும் தொலைவு குறித்த வரையறைகள் நிறைவு பெறாததால் மசையன் தெருவில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

28—

**தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டம்**

**வினா எண் 25945—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

செங்கல்பட்டு தொகுதியில் தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதியில் தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டம் காட்டாங்குளத்தூர் மற்றும் திருக்கழுக்குன்றம் ஆகிய வட்டாரங்களில் 2002-2003 ஆம் ஆண்டு, நெல்I (கார்/குறுவை/சொர்ணவாரி), நெல்II(சம்பா/தாளடி/பிஷாணம்) மற்றும் நெல் III (நவரை/கோடை) ஆகிய பயிர் பருவங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

29—

**அத்தியாவசியப் பொருட்கள்**

**வினா எண் 29678—திரு. சோ. இராசேந்திரன்:**—மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி குருவிகுளம் ஒன்றியம் முக்கூட்டுமலை ஊராட்சியைச் சேர்ந்த கஸ்தூரி ரெங்கபுரம் கிராம மக்கள் அத்தியாவசியப் பொருட்கள் (ரேஷன் பொருட்கள்) நடுவப்பட்டியில் வாங்க ஏற்பாடு செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், முக்கூட்டுமலை ஊராட்சியைச் சேர்ந்த கஸ்தூரி ரெங்கபுரம் பகுதி மக்கள், தங்கள் குடும்ப அட்டைகளுக்குரிய அத்தியாவசியப் பொருட்களை சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் ஒன்றியம், நடுவப்பட்டி நியாய விலைக் கடையில் 1-3-2003 முதல் பெற்றிட திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ஆணை வழங்கியுள்ளார்.

30—

**நியாய விலைக் கடை**

**வினா எண் 30517—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை தொகுதி அரியானிப்பட்டியில் நியாய விலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வகோட்டை தாலுகா அரியானிப்பட்டியில் 262 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடை 10-12-99 முதல் செயல்பட்டு வருகிறது. மற்றொரு கடை திறக்கும் தேவை எழவில்லை.

31—

**புதிய நியாய விலைக் கடை**

**வினா எண் 33256—திரு வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், வீரணகுப்பம் ஊராட்சி, வேலம்பட்டிக்கு புதிய நியாய விலைக்கடை திறக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அரூர் தொகுதி, வீரணகுப்பம் ஊராட்சியில் 320 குடும்ப அட்டைகள் உள்ளன. வேலம்பட்டி பகுதியில் 85 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. வீரணகுப்பம் ஊராட்சிக்கும் வேலம்பட்டி பகுதிக்கும் இடைப்பட்ட தொலைவு 1 1/2 கிலோ மீட்டர் மட்டுமே. பகுதி நேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகளும், தாய்க்கடைக்கும் பகுதி நேரக் கடைக்கும் இடையை 2 கிலோ மீட்டர் தொலைவும் இருக்க வேண்டும் என்கிற வரையறைகள் பொருந்தாததால் வேலம்பட்டிக்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

32—

**தெரு விளக்கு அமைத்தல்**

**வினா எண் 107—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடங்கணசாலை பேரூராட்சியைச் சேர்ந்த கே.கே.நகர் பகுதியில் போதுமான அளவு தெரு விளக்கு அமைத்து குறை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட கே.கே.நகர் பகுதிகளில் 2001-2002 ஆம் ஆண்டு அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ் கூடுதலாக 10 தெரு விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இத்திட்டத்தில் நிதி உதவி ஏதும் கிடைக்கப் பெறாததாலும் பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததாலும் தெரு விளக்குகள் அமைக்க இயலவில்லை.

33—

### குடிநீர் வசதி

**வினா எண் 4152—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட கெங்குப்பட்டி ஆதிதிராவிடர் தெரு மக்களுக்கு போதுமான அளவு குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட ஆதிதிராவிடர் தெருவில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு பொது குடிநீர் குழாய் 4 அமைக்கப்பட்டு 24-6-2002 முதல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குருவம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட தளவாய்ப்பட்டி செல்லும் பைப் லைனில் இருந்து மேல்நிலை தொட்டிக்கு நீர் ஏற்றம் செய்யப்பட்டு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் சீராக விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது எவ்வித குடிநீர் பிரச்சினையும் இல்லை

34—

### படித்துறைகள் சீரமைத்தல்

**வினா எண் 6153—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி பத்தமடை பேரூராட்சி வழி கன்னடியன் கால்வாய் கரையோரம் பழுதடைந்துள்ள படித்துறைகள் அனைத்தும் சீரமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?



**விடை—**

**மாண்புமிகு திரு எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மண்டல சேரன்மகாதேவி பத்தமடை பேரூராட்சி வழி கன்னடியன் கால்வாய் கரையோரம் பழுதடைந்துள்ள படித்துறைகள் உடனடியாகப் பராமரிக்க பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

(ஆ) கருத்துரு ஏதுமில்லை.

35—

### படித்துறைகள் அமைத்தல்

**வினா எண் 6205—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, செல்விபுரம் மேல்புறம் ரயில்வே கேட் அருகே மற்றும் திலகர் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள கால்வாய் கரையோரம் படித்துறைகள் அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

**விடை—**

**மாண்புமிகு திரு எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மண்டல சேரன்மகாதேவி பேரூராட்சி, செல்வபுரம் மேல்புரம் ரயில்வே கேட் அருகே மற்றும் திலகர் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள கால்வாய் கரையோரம் படித்துறைகளில் ஒரு படித்துறை மட்டும் பழுக்கல் உடைந்து பழுதாகி உள்ளது. இதனை உடனடியாக பழுது பார்க்க பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

(ஆ) கருத்துரு ஏதுமில்லை.

53-85—11a

[2003 மே 10

**36—**

**படித்துறைகள் அமைத்தல்**

**வினா எண் 6206—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சியில் மாவடி மேற்புறம் வைத்தி வடக்கு வீதி, போஸ்டாப்பீஸ் எதிர்ப்புறம் உள்ள சந்தில் உள்ள கால்வாய் கரையோடு படித் துறைகள் அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மண்டலம், சேரன்மகாதேவி பேரூராட்சியில் மாவடி மேற்புறம் வைத்தி வடக்கு வீதி போஸ்டாப்பீஸ் உள்ள சந்தில் உள்ள கால்வாய் கரையோடு ஆகிய படித் துறைகளில் இரண்டு படித்துறைகள் மட்டும் பழுதடைந்துள்ளது. இப்பழுதுகள் உடனடியாக செய்யப்பட வேண்டியதில்லை. மேலும் இப்பணியினைச் செய்ய தற்போது பேரூராட்சியில் போதுமான நிதி வசதியில்லை.

(ஆ) கருத்துரு ஏதுமில்லை.

**37—**

**சாக்கடைகள் அமைத்தல்**

**வினா எண் 8918—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியிலுள்ள குறிச்சி பேரூராட்சி பகுதி எண் 2, நஞ்சுண்டாபுரம் இட்டேரி பகுதியிலுள்ள 5 வீதிகளில் புதிய சாக்கடைகள், திண்காரைத் தளம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம், உள்ளது.

(ஆ) கோவை மாவட்டம், குறிச்சி பேரூராட்சி பகுதி எண் 2-ல் நஞ்சுண்டாபுரம் இட்டேரி பகுதியில் 5-வது வீதியில் வடிகால் மற்றும் கான்கிரீட் தளம் அமைக்க ரூபாய் 2.38 லட்சம் செலவில் தீர்மானிக்கப்பட்டு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

**38—**

**நவீன கழிப்பிடம் அமைத்தல்**

**வினா எண் 9010—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி, 4-வது மற்றும் 17-வது வார்டு பொது மக்களுக்காக 17-வது வார்டு நியாய விலைக் கடை அருகாமையில் உள்ள திறந்தவெளி கழிப்பிடத்தை நவீன கழிப்பிடமாக மாற்ற அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி சட்டமன்ற தொகுதி வீரவநல்லூர் பேரூராட்சி 4-வது வார்டு மற்றும் 17-வது வார்டு செட்டியார் கிழத்தெருவில் நியாய விலைக் கடை அருகில் பேரூராட்சிக்குச் சொந்தமான திறந்த வெளிக் கழிப்பிடம் ஏதுமில்லை. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினரால் சொந்த இடத்தில் சுற்றுச் சுவர் கட்டி நெடுங்காலமாக பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

39—

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 10342—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி பேரூராட்சிக்கு உட்பட்ட புது ஏரி ரோடு முதல் கோவிந்தராஜப்பட்டணம் வரை தார் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கன்னங்குறிச்சி பேரூராட்சியில் போதுமான நிதி வசதியில்லாததால் இப்பணி தற்போது மேற்கொள்ள இயலாது.

40—

**நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 10347—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் 2வது தொகுதி கன்னங்குறிச்சி பேரூராட்சி 15 வது வார்டில் 100000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த் தேக்கத் தொட்டியை அரசு அமைத்துத் தருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கன்னங்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட 15 வது வார்டு பகுதிக்கு தற்போது 7000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 20 பொது குடிநீர் குழாய் ஆகியவற்றின்



மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதுவே மேற்படி பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய போதுமானதாக உள்ளது.

41—

**சாலை சீரமைத்தல்**

**வினா எண் 11782—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சி பத்தமடை பேருந்து நிலையத்திலிருந்து தாமிரபரணி ஆறு வரையுள்ள சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை. சேரன்மகாதேவி தொகுதி பத்தமடை பேரூராட்சி பேருந்து நிலையத்திலிருந்து தாமிரபரணி ஆறு வரையுள்ள சாலை சுமார் 290 மீ. நீளம் உள்ளது. இச்சாலையைச் சீரமைக்க சுமார் ரூ.1.50 லட்சம் செலவாகும். தற்போது பேரூராட்சியில் போதுமான நிதி வசதியில்லாததால் இப்பணி மேற்கொள்ள இயலாது.

42—

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 11784—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சி கரிசூழ்ந்தமங்கலம் ரத வீதியில் தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சி கரிசூழ்ந்தமங்கலம் ரத வீதியில் தார்ச் சாலை அமைக்க ரூ.1.36 லட்சம் செலவாகும். இதனை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் செய்ய இயலாமல் உள்ளது.

**43—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 11785—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, ரத்னா திரையரங்கு அருகே செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி ஜெயந்தி நகரில் உள்ள தெரு 245 மீட்டர் நீளமும் 4 மீட்டர் அகலமும் உள்ளது. தற்போது மெட்டல் சாலையாக இங்கு சுமார் 50 வீடுகளும் உள்ளன. மேலும் இத்தார்ச் சாலை அமைக்க ரூ.2.00 லட்சம் செலவாகும். தற்போது பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் இப்பணியை மேற்கொள்ள இயலாது.



2003 மே 10]

**44—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 11787—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேரன்மகாதேவி பேரூராட்சி சூரப்புரம் சாலையை தார்ச் சாலையாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சி சூரப்புரம் சாலையை தார்ச் சாலையாக்க ரூபாய் 0.80 லட்சம் செலவாகும். இதற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் செய்ய இயலாமல் உள்ளது.

**45—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 11788—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, பழைய பேருந்து நிலையம் ரயில்வே லைன் சாலையை தார்ச் சாலையாக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி பழைய பேருந்து நிலையம் ரயில்வே லைன் சாலை 110 மீட்டர் நீளம் 4 மீ. அகலம் உள்ளது. இங்கு சுமார் 25 வீடுகள் உள்ளன. தார்ச் சாலை அமைக்க சுமார் ரூ. 160 லட்சம் வரை செலவாகும். தற்போது பேரூராட்சியில் நிதி வசதி இல்லை என்பதால் இப்பணி மேற்கொள்ள இயலாது.

**46—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 11789—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி பேரூராட்சி, சத்தியமூர்த்தி காலனி சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சி, சத்தியமூர்த்தி காலனி சாலையை தார்ச் சாலையாக அமைக்க ரூ. 2.50 லட்சம் செலவாகும். இதனைச் செய்ய பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் செய்ய இயலாமல் உள்ளது.

**47—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 11792—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி மேலச்செவல் பேரூராட்சி, கோலியர் தெருவில் தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சி பால்பண்ணை அருகேயுள்ள அம்மன் கோயில் முன்புறமும் பின்புறமும் உள்ள சாலையை திண்காரை சாலையாக மாற்ற ரூ. 2.00 லட்சம் செலவாகும். இதற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் செய்ய இயலாமல் உள்ளது.



**48—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 11793—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி பேரூராட்சி அரசு பெரியார் விளையாட்டுத் திடல் ஆர்ச்சிலிருந்து காலனி வரை தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சி அரசு பெரியார் விளையாட்டுத் திடல் ஆர்ச்சிலிருந்து காலனி வரை தார்ச் சாலை அமைக்க போதுமான நிதி வசதி இல்லாததால் இப்பணி தற்போது மேற்கொள்ள இயலாது.

**49—**

**திண்காரை சாலை அமைத்தல்**

**வினா எண் 11796—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி பேரூராட்சி-பால்பண்ணை அருகேயுள்ள அம்மன் கோயில் முன்புறமும், பின்புறமும் உள்ள சாலையை திண்காரை சாலையாக மாற்ற அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சி-பால்பண்ணை அருகேயுள்ள அம்மன் கோயில் முன்புறமும், பின்புறமும் உள்ள சாலையை திண்காரை சாலையாக மாற்ற ரூ.2.00 லட்சம் செலவாகும். இதற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் செய்ய இயலாமல் உள்ளது.

[2003 மே 10

50—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 11798—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் 11-வது வார்டு காந்தி நகரில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வீரவநல்லூர் பேரூராட்சியில் 11-வது வார்டு காந்தி நகரில் பேரூராட்சி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அவசியம் இல்லாத நிலை மற்றும் பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத நிலை ஆகிய காரணங்களினால் இப்பணி மேற்கொள்ள இயலாது.

51—

## திண்காரை சாலை அமைத்தல்

**வினா எண் 11799—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் 12-வது வார்டு இந்திரா நகர் பகுதிகளில் திண்காரை சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சி முக்கியப் பகுதியாக இல்லாத இப்பகுதியில் திண்காரை சாலை கூடாது என அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளதால் திண்காரை சாலை அமைக்க இயலாது.

52—

## திண்காரை சாலை அமைத்தல்

**வினா எண் 11800—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி பேரூராட்சி பஞ்சாயத்து யூனியன் சமுதாயக்கூடம் அருகில் திண்காரை சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சியின் முக்கியப் பகுதியாக இல்லாத இப்பகுதியில் திண்காரை சாலை கூடாது என அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளதால் திண்காரை சாலை அமைக்க இயலாது.

53—

## திண்காரை சாலை அமைத்தல்

**வினா எண் 11802—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி பேரூராட்சி தெற்கு 4 ஆம் தெரு காலனி ரயில்வே லைன் கீழ்புறம் மற்றும் சுண்ணாம்புக்கல் தெரு கீழ்ப்புறமுள்ள சந்து ஆகிய தெருக்களில் திண்காரை சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சி முக்கியப் பகுதியாக இல்லாத இப்பகுதியில் திண்காரை சாலை கூடாது என அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளதால் திண்காரை சாலை அமைக்க இயலாது.

**54—**

**வடிகால் அமைத்தல்**

**வினா எண் 12136—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி 8-வது வார்டு சுப்பிரமணிய சுவாமி சன்னதி தெருவிற்கு வடிகால் அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீரவநல்லூர் பேரூராட்சி வார்டு எண் 8, சுப்பிரமணிய சுவாமி சன்னதி தெருவில் 1998-99-ஆம் வருடம் சுவர்ண ஜெயந்தி திட்டத்தின்படி வடிகால் கட்டி முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**55—**

**சாலை பழுது பார்த்தல்**

**வினா எண் 12736—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி கே.கே. நகரிலிருந்து மாரிமுத்தான்வளைவு வரையுள்ள பழுதுபட்டு போக்குவரத்துக்கு சிரமமாக உள்ள சாலையை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி கே.கே. நகரிலிருந்து மாரிமுத்தான்வளைவு வரையுள்ள பழுதுபட்டு போக்குவரத்துக்கு சிரமமாக உள்ள சாலையை பழுதுபார்க்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால், சாலை பராமரிப்பு செய்ய இயலாமல் உள்ளது.

**56—**

**துப்புரவுப் பணியாளர் நியமனம்**

**வினா எண் 13358—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் போதுமான துப்புரவுப் பணியாளர்கள் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட 17 துப்புரவுப் பணியாளர்களில் 16 துப்புரவுப் பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். ஒரு பணியாளர் இறந்துவிட்டார்.

**57—**

**திண்காரை சாலை அமைத்தல்**

**வினா எண் 13461—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பென்னாகரம் தொகுதி பாப்பாரப்பட்டி பேரூராட்சியிலுள்ள தெருக்களில் திண்காரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் பல தெருக்களில் திண்காரை சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் திண்காரை சாலை அமைக்கும் பட்சத்தில் பேரூராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. மேலும் அரசால் திண்காரை சாலை அமைப்பதற்கு சில வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளது. எனவே திண்காரை சாலை அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

58—

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்

**வினா எண் 16372—திரு. டி. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், பாலமேடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வரும் உப்பு கலந்த குடிநீரை மாற்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், பாலமேடு பேரூராட்சியில் 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூபாய் 79.00 லட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட, பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்திலிருந்துதான் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு குடிநீர் வழங்கப்படுகிறது.



59—

### குடிநீர் இணைப்பு

**வினா எண் 16472—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, சுப்பிரமணிய நகர் 1 வது வார்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து கம்பர் தெரு சுப்பிரமணிய நகர் 2 வது தெருவிற்கு குடிநீர் இணைப்பு கேட்டிருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர் இணைப்பு வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி பேரூராட்சி 1 வது வார்டைச் சேர்ந்த சுப்பிரமணிய நகரின் இரண்டாவது தெருவாகிய கம்பர் தெருவில் 150 குடியிருப்புகள் அமைந்துள்ளது. இதில் 25 இணைப்பும் 20 பொது குழாய்கள் மூலமாக இப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வீட்டு இணைப்புகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஒன்றரை மணி நேரம் திருத்தணி குடிநீர் திட்டம் மூலமும், பொது குழாய்கள் மூலம் தினசரி 1 1/4 மணி நேரம் சுப்பிரமணிய நகர் மேல்நிலைத் தொட்டி மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

60—

### மகளிர் மேம்பாட்டு குழுக்கள்

**வினா எண் 20335—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் மகளிர் மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனைபேர் பயனடைந்துள்ளார்கள்?

(இ) அரசு உதவித் தொகை மொத்தம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம், இம்மாநகராட்சியில் மகளிர் மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) மொத்தம் 959 மகளிர் பயனடைந்து உள்ளனர்.

(இ) இக்குழுக்களுக்கு அரசு மொத்தம் ரூ. 9,59,000/- உதவித்தொகை அளித்துள்ளது.

61—

**குளம் தூர் வாருதல்**

**வினா எண் 21600—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலி பேரூராட்சிப் பகுதிகளுக்கு உட்பட்ட காவலர்கள் குடியிருப்புக்கு அருகிலுள்ள குளத்தினை தூர் வாரி சுற்றி சுவர் எழுப்பிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மணலி பேரூராட்சியிலடங்கிய காவலர் குடியிருப்புக்கும், ஜலவர் அம்மன் கோயிலுக்கும் அருகிலுள்ள குளத்தை மழை நீரை சேகரிக்கும் திட்டத்தில் தூர் வாரி படிக்கட்டுகளுடன் கூடிய சுற்றுச் சுவர் அமைத்திடவும் அப்பேரூராட்சி தனது தீர்மானம் எண் 208 நாள் 30.7.2002-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பணியினை 2003-2004 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என்ற விவரத்தினை தகவலுக்கு தெரிவிக்கப்படுகிறது.



62—

**கிராம நிர்வாக அலுவலகம்**

**வினா எண் 23022—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணியகாரர் அலுவலகம் வாஸ்து சாஸ்திரப்படி இல்லாமல் 14X12க்கு அறை கட்ட அரசு முன் வந்திருப்பதை மாற்றி 16X10க்கு அறை கட்ட கோருவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்வறையை மாற்றி கட்ட முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாஸ்து சாஸ்திரம் அரசு அலுவலக கட்டடங்களுக்கு பார்ப்பது இல்லை. மேலும் 2002-2003-ல் புதிய வடிவமைப்பின்படி கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தின் வெளி அளவுகள் 3.30X3.30 மீ. தாழ்வாரம் 3.30X2.40 மீ. என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

63—

**பேரூராட்சிக்கு நிதி ஒதுக்கீடு**

**வினா எண் 26897—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப்பகுதியான வால்பாறை பேரூராட்சிக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) வால்பாறை பேரூராட்சிக்கு 2002-2003 வரை மாநில நிதி பங்கீட்டு தொகையிலிருந்து மாதத்திற்கு ஒரு தவணை வீதம் 7 தவணைகளாக மொத்தம் ரூபாய் 1,00,84,528/- தொகை வழங்கப்பட்டுள்ளது.*

*(ஆ) அரசாணைக்கேற்ப மாதாமாதம் பகிர்வு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.*

**64—**

**சிறுபாலம் கட்டுதல்**

**வினா எண் 27197—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகராட்சியில் 55, 56 மற்றும் 57 கோட்டங்களை இணைக்கும் ஓடையில் சிறுபாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி 55, 56 மற்றும் 57 ஆம் கோட்டங்களை இணைக்கும் ஓடையில் சிறுபாலம் கட்டும் உத்தேசம் ஏதும் இல்லை.*

**65—**

**குப்பைமேடு இடம் மாற்றுதல்**

**வினா எண் 7218—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாநகராட்சி நகரின் மையப் பகுதியில் கிச்சிப்பாளையம் அருகே உள்ள கழிவுப் பொருட்கள் குப்பை மேட்டை நகரின் வெளிப்புறப் பகுதிக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*முன்பு நகராட்சியாக இருந்தபோது நகரின் ஒதுக்குப்புறத்தில் இருந்த குப்பைமேடு, நகரைச் சுற்றியுள்ள பகுதிகள் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதால் மையப்பகுதியில் அமைந்துவிட்டது. இங்கு குப்பை கொட்டப்படுவதனால் சுகாதார பாதிப்பு ஏற்படாமல் கிருமிநாசினிகள் தெளிப்பு மற்றும் பொதுமக்களுக்கு மருத்துவ சிகிச்சை உட்பட அனைத்து தற்காப்பு நடவடிக்கைகள் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படுகிறது. எனினும் குப்பைமேட்டை நகரின் வெளிப்புறப் பகுதிக்கு மாற்ற வேண்டி செட்டிச்சாவடி கிராமம், சின்னகவுண்டாபுரம் ஏரி, சிலநாய்க்கன்பட்டி, பி. நாட்டாமங்கலம் ஏரி ஆகிய இடங்கள் கண்டறியப்பட்டு உரிய நடவடிக்கை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**66—**

**நுழைவு வாயில்**

**வினா எண் 27219—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் புதிய பேருந்து நிலையம், நுழைவு வாயில் முன்புற வளைவு பணி முழுமை பெற நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*சேலம் புதிய பேருந்து நிலைய நுழைவு வாயில் முன்புற வளைவு பணி ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் முழுமை பெற சேலம் மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

**67—**

**சாலை சீரமைத்தல்**

**வினா எண் 27450—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீரவநல்லூர் பேரூராட்சிக்கு பஜாரில் உள்ள பஜார் சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**
(அ) சேரன்மகாதேவி சட்டமன்ற தொகுதி வீரவநல்லூர் பேரூராட்சியின் பஜாரில் உள்ள 1200 மீட்டர் நீளமுள்ள சாலையை சீரமைக்க ரூபாய் 5.00 இலட்சம் செலவாகும். தற்போது போதிய நிதி வசதி இல்லாததால் இப்பணியை செய்ய இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

**68—**

**படித்துறை கட்டுதல்**

**வினா எண் 29281—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் 21 வது வார்டில் உள்ள பாசியான் திடல் பகுதியில் கழுமலையாற்றில் படித்துறை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**
(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் கழுமலையாற்றில் பாசியான் திடல் பகுதியில் படித்துறை கட்ட மயிலாடுதுறை தொகுதி



பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 50,000/- செலவிட பரிந்துரை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**69—**

**சாலை பழுதுபார்ப்பு**

**வினா எண் 30154—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரத்தில் சாலை பழுது பார்க்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**
(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள சாலைகள் பல்வேறு திட்டங்களின்கீழ் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன. இந்நகராட்சியின் மூலம் நடப்பு நிதியாண்டில் 11வது நிதிக்குழு பரிந்துரையின் பேரில் ரூ.27.75 இலட்சத்திற்கும், தேசிய குடிசை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.3.75 இலட்சத்திற்கும் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் நிதயாண்டில் ஐடிஎஸ்எம்டி (IDSMT) திட்டத்தின்கீழ் ரூ.100 இலட்சத்திற்கு 13.07 கி.மீ. நீளத்திற்கு, சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. மேலும், அரசு நிதி ஒதுக்கீடு செய்வதற்கேற்பவும், நகராட்சி நிதி நிலைமைக்கேற்பவும், சாலைகளைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**70—**

**ஆடுகள் வளர்ப்பு மையம்**

**வினா எண் 31637—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளத்தில் கலப்பின ஆடுகள் வளர்ப்பு மையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) விளாத்திகுளத்தில் கலப்பின ஆடுகள் வளர்ப்பு மையம் அமைப்பது குறித்து, தற்போது அரசிடம் திட்டம் ஏதும் பரிசிலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**71—**

**குடியிருப்புகள் கட்டுதல்**

**வினா எண் 20750—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறப்பு நல நிதியின்கீழ் சேலம் மாநகர குடிசைப் பகுதி வாழ் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டம் எப்போது துவங்கப்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**72—**

**பங்காய்வுத் தொகை**

**வினா எண் 21632—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) எடப்பாடியில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் (வரையறுக்கப்பட்டது) என்.எஸ்.எல்.எஸ்.பி.எல். 120 கடந்த 10 வருடமாக உறுப்பினர் கட்டிய பங்கு தொகைக்கு பங்காய்வு (டிவிடென்ட்) தரவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக பங்காய்வுத் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி கூட்டுறவு சங்கத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நட்டம் ரூபாய் 63.21 இலட்சமும் சங்கத்தின் தவணை தவறிய உறுப்பினர்களிடமிருந்து வரவேண்டிய தொகை, நிலுவையின்றி வசூலிக்கப்படும் பட்சத்தில் அத்தொகை சங்கத்திற்கு லாபத்தை ஈட்டித்தரக்கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே உறுப்பினர்களின் தவணைத் தவறிய தொகையினை வசூல் செய்ய சங்கம் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொண்டு வசூல் பணியில் முனைப்பாக ஈடுபட்டுள்ளது. சங்கம் தனது அங்கத்தினர்களுக்கு பங்காய்வு (Divident) வழங்கத்தக்க வகையில் தவணை தவறிய கடனை வசூல் செய்து சங்கத்தினை லாபத்தில் செயல்பட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

**73—**

**குடிசைப்பகுதி மேம்பாடு**

**வினா எண் 22139—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் குடிசைப்பகுதி மேம்பாடு செய்ய மத்திய அரசு வழங்கியுள்ள நிதி எவ்வளவு?

(ஆ) அந்த நிதி எவ்வகையான குடிசைப்பகுதிகளில் மேம்பாடு செய்யப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு.அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மைய அரசின் 11வது நிதிக்குழுவினரால் 2002-2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு சிறப்பு மானியமாக ரூ.20.00 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை ரூ.15.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மைய அரசின் 11வது நிதிக்குழு ஒப்புதல் அளித்துள்ள ரூ.49.00 கோடி செலவில் மொத்த சிறப்பு மான்ய உதவியினைக் கொண்டு 4652 வீடுகள் ரூ.49.00 கோடி செலவில் கீழே கூறப்பட்டுள்ள நகரங்களில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

| வரிசை எண் | நகரத்தின் பெயர் | குடியிருப்புகள் | செலவினம் (ரூ. கோடி) |
|---|---|---|---|
| (1) | சென்னை | 2820 | 35.250 |
| (2) | மதுரை | 916 | 6.875 |
| (3) | கோவை | 916 | 6.875 |
| | மொத்தம் | 4652 | 49.00 |

இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக சென்னை நகருக்கு அருகாமையில் உள்ள ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 1620 வீடுகள் ரூ.19.44 கோடி செலவில் அமைக்க கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகள் 31-12-2003-க்குள் முடிவுறும்.

**74—**

## வீடு கட்ட நிதி ஒதுக்கீடு

**வினா எண் 22279—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மூலமாக சேலம் மாவட்டத்திற்கு வீடு கட்ட எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டிற்கு சேலம் மாவட்டத்திற்கு நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மூலமாக ரூ.5940.05 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**75—**

## குடியிருப்பு கட்டுதல்

**வினா எண் 30115—திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூரில் உள்ள அறிஞர் அண்ணா கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தினர் அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் திட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ஆத்தூர் அறிஞர் அண்ணா கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் அடுக்குமாடி குடியிருப்பு திட்டத்திற்காக சங்கப்பேரவை தீர்மான எண் 12.13 நாள் 8—5—1999ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆத்தூர் வடக்கு உடையார்பாளையம் 41 நேரு நகர் அ.பு.ச.எண். 463/4ஏ மற்றும் 463/5ஏ சர்வே எண்ணின்படி 66272 சதுரடி நிலம் கொள்முதல் செய்ய துணைப் பதிவாளர் (வீட்டுவசதி) நிலம் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் இடம் கொள்முதல் செய்ய தேவையான நிதி ஆதாரத்தை சங்க நிர்வாகக்குழு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் இருந்து இட்டு வைப்பதற்காக 1.39 கோடி பெற்றும், சங்கநிதியை பயன்படுத்தியும் நிலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் கொள்முதல் செய்யப்பட்ட நிலத்தில் அடுக்குமாடி வீடுகள் திட்டம் செயல்படுத்த ஏ.பி.சி.டி. என நான்கு பிளாக்குகளில் தரை பகுதி முதல் மாடி, 2-ம் மாடி, 3-ம் மாடி மற்றும்

[2003 மே 10

4-ம் மாடி என்று மொத்தம் 124 வீடுகளுக்கு 104328 சதுர அடியில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கட்டடம் கட்ட தேவையான நிதி ஆதாரங்களைப் பெற தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் மூலம் ஹட்கோ நிறுவனத்திடம் கடன் கோரி விண்ணப்பம் செய்யப்பட்டதில் சம்பந்தப்பட்ட ஹட்கோ மேலாளர் அறிவுரை வழங்கியதன் அடிப்படையில் கட்டட பணி 'ஏ' மற்றும் 'சி' 2-ம் மாடி மாடி மேல்தளம் கட்டட பணியும் 'பி' மற்றும் 'டி' முதல் மேல்தளமும் முடிக்கப்பட்டுள்ளது என்றும் அதற்காக ரூ.110 கோடி கட்டுமான செலவுக்கு பில் வழங்கப்பட்ட நிலையில் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின்மூலம் ஹட்கோ நிறுவனத்திடம் கடன் பெற சங்கம் நடவடிக்கை மேற்கொண்டதில், ஹட்கோ நிறுவனம் சங்கத்திற்கு கடன் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதால் திட்டப்பணி தொடரப்படாமல் உள்ளது. நிதி ஆதாரம் இல்லாத நிலையிலும் சங்கத்திற்கு நட்டம் ஏற்படுவதை தவிர்க்கும்பொருட்டு கட்டடங்கள் தற்போது உள்ள நிலையிலேயே விற்பனை செய்ய அறிவுரை வழங்கப்பட்டு திறந்த வெளிச் சந்தையில் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு கட்டுமான பிரிவு பொறியாளரின் மதிப்பீடு பெறவும், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் வெளிச்சந்தை மார்க்கெட் மதிப்பும் பத்திரம் பதிவு அலுவலகத்தின்மூலம் அரசு வழிகாட்டி மதிப்பீடு பெறவும் விண்ணப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. மதிப்பீடு கிடைக்கப்பெற்றவுடன் பதிவாளரின் அனுமதி பெற்று வெளிச் சந்தையிலோ அல்லது பொது ஏலத்தின் மூலமாகவோ விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**76—**

**வீட்டு வசதி சங்கம்**

**வினா எண் 31043—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி நகர வீடு கட்டும் சங்கத்தில் கடனாளிகளிடம் அதிக வட்டி வசூலிக்கப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வசூலிக்கப்பட்ட வட்டித் தொகை கட்டியவர்களுக்கு திருப்பி கொடுக்கப்படுமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செஞ்சி கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் அதிக வட்டி வசூலிக்கப்பட்டவர்களின் கணக்கில் அதிகமாக வசூலிக்கப்பட்ட வட்டித் தொகை நேர் செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்சங்கத்தில் வாங்கிய கடனை முழுமையாக திரும்பச் செலுத்திய 8 அங்கத்தினர்களிடம் அதிகமாக வசூலிக்கப்பட்ட வட்டித் தொகை உரியவர்களுக்கு திருப்பிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**77—**

**திரைப்படங்கள்**

**வினா எண் 34606—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சினிமாவில் சண்டைக் காட்சிகளில் காய்கறி, கனிகள் மற்றும் உணவுப் பொருட்கள் அழிந்துபோகும் வகையில் உள்ள படக் காட்சிகளை தடை செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்பிரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

சினிமாவில் சண்டைக் காட்சிகள் மைய அரசினால் அமைக்கப்படும் தணிக்கைக் குழுவினால் தணிக்கை செய்யப்படுகின்றன. எனவே இக்காட்சிகளை மாநில அரசு தடை செய்ய இயலாது.

[2003 மே 10

78—

நெசவு தொழிற் பயிற்சி நிலையம்

**வினா எண் 16530—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் நெசவுத் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி சட்டமன்ற தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் நெசவுத் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

79—

வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகை

**வினா எண் 16814—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர்கள் 60 வயதிற்கு முன்பாகவே இறக்க நேரிட்டதால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகை எத்தனை பேருக்கு அரசு வழங்கியுள்ளது?

(ஆ) கோ-ஆப்டெக்ஸ் கருணைத் தொகை எவ்வளவு?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் 60 வயதிற்கு முன்பாகவே இறக்க நேரிட்ட 335 கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகையாக ரூ. 1.50 கோடி அரசு வழங்கியுள்ளது.

(ஆ) கோ-ஆப்டெக்ஸ் கருணைத் தொகையாக ரூ.17.73 இலட்சம் வழங்கியுள்ளது.

80—

தள்ளுபடி மானியம்

**வினா எண் 22281—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு சேரவேண்டிய 1999-2000 ஆம் ஆண்டிற்கான தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டுவிட்டதா?

(ஆ) இல்லையெனில், அதை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆம் ஆண்டிற்கு எடப்பாடி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட வேண்டிய தள்ளுபடி மானியம் ரூ.6,01,723 வழங்கப்பட்டுவிட்டது.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2003 மே 10

81—

## கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள்

**வினா எண் 22288—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டத்தில் கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் எத்தனை உள்ளன?*

*(ஆ) இலாபத்தில் இயங்குபவை எத்தனை?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டத்தில் 63 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.*

*(ஆ) சேலம் மாவட்டத்தில் மொத்தமுள்ள 63 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 14 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இலாபத்தில் இயங்குகின்றன.*

82—

## தள்ளுபடி பாக்கித் தொகை வழங்குதல்

**வினா எண் 22290—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*எடப்பாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்க வேண்டிய மொத்த தள்ளுபடி பாக்கித் தொகையை உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?*



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*எடப்பாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ஆகஸ்ட் 2002 முடிய உள்ள காலத்திற்கு தள்ளுபடி மானியம் ரூ.98,464/- ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது. மேலும் செப்டம்பர் 2002 முதல் அக்டோபர் 2002 வரையிலான காலத்துக்கு இச்சங்கம் கோரியுள்ள தள்ளுபடி மானியத் தொகையான ரூ.1,06,725/- நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு பெற்ற பிறகு வழங்கப்படவுள்ளது.*

83—

## துணி கொள்முதல்

**வினா எண் 26785—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் தேங்கிக் கிடக்கும் நெசவாளர்களால் நெய்யப்பட்ட துணி வகைகளை அரசு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் ஜவுளிகளின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அரசு ஏற்கெனவே வழங்கி வரும் தள்ளுபடி மானியத்துடன் 10 விழுக்காடு கூடுதலாக தள்ளுபடி மானியம் வழங்கி 15-9-2002 முதல் 31-1-2003 வரை விற்பனை செய்வதற்கு ஆணையிடப்பட்டு, அதன் மூலம் சங்கங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஓராண்டு மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பட்டு மற்றும் பருத்தி ரகங்களுக்கு முறையே 45 விழுக்காடு மற்றும் 55 விழுக்காடு சிறப்பு கழிவு வழங்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், அரசின் இவ்வாறான சிறப்பு நடவடிக்கைகள் மூலம் விற்பனை செய்யப்படுவதால், அரசே கொள்முதல் செய்ய வேண்டிய தேவை எழவில்லை.*

**84—**

### சலுகை விலையில் நூல் வழங்குதல்

**வினா எண் 2691[illegible]—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நெசவாளர்களுக்கு நீண்ட கால கடனாக சலுகை விலையில் நூல் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்ந்து தொழில்புரியும் நெசவாளர்களுக்கு தொடர்ந்து நூல் மற்றும் கூலி வழங்கி வேலை வாய்ப்பளிக்க ஏதுவாக, நபார்டு வங்கி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் காசுக் கடன் வழங்கி வருகிறது. எனவே, நெசவாளர்களுக்கு நீண்ட கால கடனாக சலுகை விலையில் நூல் வழங்க வழிவகை ஏதும் இல்லை.*

**85—**

### கைத்தறி கண்காட்சி

**வினா எண் 26934—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகர் போஸ் மைதானத்தில் ஆண்டு முழுவதும் கைத்தறி கண்காட்சி கடைகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாநகர் போஸ் மைதானத்தில் ஆண்டு முழுவதும் கைத்தறி கண்காட்சி கடைகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**86—**

### மீன் கடை அமைத்தல்

**வினா எண் 26905—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதி டாப்சிலிப்பில் சுற்றுலா பயணிகளுக்கென மக்களின் நன்மையைக் கருதி மீன் கடை ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) வால்பாறை தொகுதி டாப்சிலிப்பில் சுற்றுலா பயணிகளுக்கென மீன் கடை ஏற்படுத்த திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழாது.*

[2003 மே 10

# இணைப்பு-II

(1 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## @ உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப் பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் அமைச்சர்கள் விடைகளுடன் (பட்டியல்கள் 24 முதல் 347)

## பட்டியல் 24

1—

### சி.டி. ஸ்கேன் வசதி

**வினா எண் 464—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தலைநகர் அரசு மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதிகளும் மற்றும் இரத்த வங்கி வசதியும் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தருமபுரி தலைமை அரசு மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் வசதி செய்யப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. இரத்த வங்கி வசதி 1997 முதல் செயல்பட்டு வருகின்றது. இம்மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ. .ஸ்கேன் வசதி அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 789—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை ஒன்றியம், சிறுநல்லிகோவில் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார மையம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யும்?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், சிறுநல்லிகோவில் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

3—

### மருத்துவக் கல்லூரி

**வினா எண் 853—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் அரசு மருத்துவக் கல்லூரி நடப்பாண்டில் துவங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) அதனை காட்பாடி ஏரியில் கட்டுவதை தவிர்த்து தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி வேலூரிலேயே அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூரில் புதிய அரசு மருத்துவக்கல்லூரி தொடங்க அரசாணை வெளியிடப்பட்டு மைய அரசின் ஒப்புதல் வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டது. மைய அரசு கல்லூரி அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள நிலம் தொடர்பாக சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்து மைய அரசின் ஒப்புதல் பெறுவதற்கான புதிய செயற்குறிப்பு அனுப்ப எல்லா முயற்சிகளையும் அரசு செய்து வருகிறது.

4—

### மருத்துவமனை தரம் உயர்த்துதல்

**வினா எண் 949—திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்களை நியமித்து, அறுவை சிகிச்சை அரங்கத்துடன் கூடிய மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையாக உயர்த்தி, மருத்துவர்கள் நியமனம் செய்வதுடன் அறுவை அரங்கமும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவனைக்கு அனுமதிக்கப்பட்ட 11 (பதினொன்று) மருத்துவர்கள் பணியிடங்களிலும் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். இரண்டு அறுவை அரங்குகள் செயல்பட்டு வருவதால், புதிதாக அறுவை அரங்குகள் கட்டத் தேவையில்லை. மேலும் அரியலூர் மாவட்டத்தை பெரம்பலூர் மாவட்டத்துடன் ஒன்றாக இணைக்க அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளதால் அரியலூர் மருத்துவமனையை தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை.

**5—**

### கூடுதல் மருத்துவர் நியமித்தல்

**வினா எண் 954—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதலாக மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதுமான அளவில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உள்ளனர். எனவே, கூடுதலாக மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் நியமனம் செய்ய அவசியம் எழவில்லை.



2003 மே 10]

**6—**

### ஆரம்ப சுகாதார நிலையங்கள்

**வினா எண் 1001—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மருத்துவமனைகள் எத்தனை மற்றும் அவற்றுள் எத்தனை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன?

(ஆ) கட்டட வசதி இல்லாத ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளுக்குக் கட்டடம் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் மொத்தம் 47 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. வாடகை அடிப்படையில் எந்த ஆரம்ப சுகாதார நிலையமும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இயங்கவில்லை.

(ஆ) ஆம்.

**7—**

### ஆம்புலன்ஸ் வசதி

**வினா எண் 1002—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு, அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் வசதி போதுமானதாக இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய ஆம்புலன்ஸ் வாங்க திட்டம் உள்ளதா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 273 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை நாள் 26-9-2001-ல் 2001/2002 பகுதி II திட்டத்தின் கீழ் கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு பதிலாக மருத்துவ நிலையங்களுக்கு புதிய வாகனங்கள் வாங்குவதற்கு ரூ80,00,000/- அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வாகனங்கள் வாங்கப்படும்பொழுது செங்கற்பட்டு அரசு மருத்துவமனைக்கும் ஒரு ஆம்புலன்ஸ் வாகனம் வழங்கப்படும்.*

**8—**

**பெண்கள் கல்லூரி**

**வினா எண் 1185—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதியில், உசிலம்பட்டி செல்லம்பட்டி ஒன்றியம் மற்றும் ஒரு நகராட்சி உள்ளதால் பெண்கள் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக, புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் துவக்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, உசிலம்பட்டி தொகுதியில் புதிய பெண்கள் கல்லூரி துவக்கும் வாய்ப்பு இல்லை.*



2003 மே 10]

**9—**

**மருத்துவர் நியமித்தல்**

**வினா எண் 1391—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆண்டிமடம் தொகுதி, அழகாபுரம் கிராம ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவரை நியமனம் செய்ய அரசு பரிசீலனை செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, அழகாபுரம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் மட்டும் இயங்கி வருகிறது. அரசு நெறிமுறைகளின்படி துணை சுகாதார நிலையத்திற்கு என்று தனியாக மருத்துவர் பணியிடம் வழங்கப்படுவதில்லை. எனவே, இத்துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவர் நியமனம் செய்ய இயலாது.*

**10—**

**மருத்துவமனை கட்டட வசதி**

**வினா எண் 1392—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆண்டிமடம் தொகுதி, பெரியதத்தூரில் மகப்பேறு மருத்துவமனைக்கு கட்டட வசதி இருந்தும் இயங்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், மருத்துவமனை இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?*

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, பெரியதத்தூரில் சுகாதார மையத்திற்கு மின் இணைப்பு இல்லாததால் பகல் நேரத்தில் கிராம சுகாதார செவிலியர் மையத்தில் தங்கி கிராம மக்களைப் பார்வையிட்டு வருகிறார். மின் இணைப்பு பெற மருத்துவ அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

11—

**கலைக் கல்லூரி**

**வினா எண் 1467—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி நகரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் துவக்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, செஞ்சி நகரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவக்குவதற்கு வாய்ப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

12—

**அரசு கலைக் கல்லூரி**

**வினா எண் 1611—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் துவக்குவதில்லை என அரசு முடிவெடுத்துள்ளது. எனவே நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் அரசு கலைக்கல்லூரி ஏற்படுத்தும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

13—

**மருந்து வழங்குதல்**

**வினா எண் 1814—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூவிருந்தவல்லி தொகுதி, ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளில் நாய்கடி ஊசி மருந்து கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

பூவிருந்தவல்லி துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் கட்டுப்பாட்டில் மொத்தம் 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. உயிர்காக்கும் மருந்தான நாய்கடி மருந்துகள் தேவையான அளவு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வழங்கப்பட்டு தேவையான அளவு இருப்பு வைக்கப்படுகிறது.

**14—**

**போதைப் பொருட்கள் தடை செய்தல்**

**வினா எண் 1951—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மக்களின் நலன் கருதி பான்பராக், குட்கா போன்ற போதைப்பொருட்களின் உற்பத்தி விற்பனையை அரசு தடை செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தடை செய்துள்ளது.

**15—**

**புகை பிடிக்கத் தடை**

**வினா எண் 1961—திருவாளர்கள் க. முருகவேல் ராஜன் மற்றும் ஜெ. குரு என்கிற குருநாதன் மற்றும் பி.ஆர். சுந்தரம் மற்றும் ஆஸ்டின்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொது இடங்களில் புகை பிடிப்பதை தடை செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

பொது இடங்களில் புகை பிடிப்பதையும், புகையிலைப் பொருட்களை மென்று பொது இடங்களில் எச்சில் உமிழ்வதையும் தடை செய்யும் மசோதா சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இம்மசோதா விரைவில் சட்டமாக்கப்படவுள்ளது.



**16—**

**காலிப் பணியிடங்கள் நிரப்புதல்**

**வினா எண் 1968—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் காலியாக உள்ள மருத்துவர், செவிலியர் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், மற்றும் துணை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் மற்றும் கிராம சுகாதார செவிலியர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு முழு அளவில் செயல்பட்டு வருகின்றன.

**17—**

**விழிப்புணர்வு முகாம்கள்**

**வினா எண் 1969—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எய்ட்ஸ் மற்றும் காசநோய் பாதிப்புக்கு எதிராக ஊராட்சி அமைப்புகளுடன் இணைந்து முகாம்கள் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எய்ட்ஸ் நோய் பாதிப்புக்கு எதிராக ஊராட்சி மற்றும் பேரூராட்சி அமைப்புகளுடன் இணைந்து மாவட்ட ஆட்சியர்கள் மூலம் குடும்ப நல விழிப்புணர்வு முகாம்களை தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு கழகம் நடத்தி வருகிறது. இத்தகைய முகாம்கள் 2001 ஆம் ஆண்டில் 1-7-2001 முதல் 15-7-2001 முடியவும், நடப்பு ஆண்டில் 1-3-2002 முதல் 15-3-2002 முடியவும் நடத்தப்பட்டது.

காசநோய் பாதிப்புக்கு எதிராக விழிப்புணர்வு முகாம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில் மாவட்ட காச நோய் கட்டுப்பாடு அலுவலரால் நடத்தப்படுகிறது.

**18—**

**உணவு விலைக் கட்டுப்பாடு**

**வினா எண் 2122—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலை ஓர உணவு விடுதிகளில் விலை மற்றும் தரக்கட்டுப்பாடு ஆய்வு செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**19—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 2605—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பேரணாம்பட்டு தொகுதி, பெனிகுண்டா, வெலத்திகமாபெனிபெண்டா பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், சிந்தகமா பெனிகுண்டா மற்றும் வெலத்திகமாபெனிபெண்டா கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**20—**

**புதிய பாடப் பிரிவுகள் துவங்குதல்**

**வினா எண் 2688—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு கலைக் கல்லூரிகளில் பி.எஸ்.சி., எம்.சி.ஏ., பி.பி.ஏ., எம்.பி.ஏ., போன்ற பாடப்பிரிவுகளை அரசு தொடங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

அரசு கல்லூரிகளில் தற்சமயம் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளதால் புதிய பாடப்பிரிவுகளைத் துவக்குதல் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ளும்.

**21—**

**மகளிர் கல்லூரி**

**வினா எண் 2890—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

பேரணாம்பட்டில் அரசு மகளிர் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக புதிய அரசு கலைக்கல்லூரிகளைத் துவக்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, பேரணாம்பட்டில் அரசு மகளிர் கல்லூரி அமைக்கும் வாய்ப்பு இல்லை.*

**22—**

**பள்ளி தரம் உயர்த்துதல்**

**வினா எண் 2906—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி, கெண்டையன அள்ளி புதூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2002-2003 ஆம் கல்வியாண்டில் 'அனைவருக்கும் தொடக்கக்கல்வி' என்ற மைய, மாநில அரசின் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி கெண்டயன அள்ளி ஊராட்சி, புதூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 135, பள்ளிக் கல்வித் துறை, நாள் 23-8-2002-ல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.*



2003 மே 10]

**23—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 3119—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், சிந்தமா பெனிகுண்டா மலைக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், சிந்தமா பெனிகுண்டா கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**24—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 3274—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதிக்குட்பட்ட வெள்ளிசந்தையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளிச்சந்தை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**25—**

**பாடப்பிரிவுகளின் எண்ணிக்கை அதிகரித்தல்**

**வினா எண் 3331—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு கல்லூரிகளில் நுண் உயிரியல், உயிர் வேதியியல், கணினி போன்ற பாடப்பிரிவுகளில் மாணவர்கள் சேர தனியார் கல்லூரிகளில் உள்ளதைவிட குறைவான இடங்களே இருப்பதால், இப்பாடப்பிரிவை அதிகரிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

அரசு கல்லூரிகளில் உள்ள பாடப்பிரிவுகளை பொறுத்தமட்டில், தேவையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களுக்கு 10 விழுக்காடு அதிகமாக இடங்களை அதிகப்படுத்திக்கொள்ள சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு கல்லூரி முதல்வர்கள் விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்படுகின்றன. எனவே, சம்பந்தப்பட்ட பாடங்களுக்கு கூடுதல் இடங்கள் தேவைப்படின் அந்தந்த கல்லூரி முதல்வர்களே விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.



2003 மே 10]

**26—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 3550—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி செட்டிசாவடி கிராமத்தில் தாய்சேய் நல விடுதி வசதியுடன் கூடிய சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் ஊராட்சி ஒன்றியம், செட்டிசாவடி கிராமத்தில் தாய்சேய் நல விடுதி வசதியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**27—**

**முதுகலை பட்டப் படிப்பு**

**வினா எண் 3960—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் உள்ள முதுநிலைப் பட்டப் படிப்பு வகுப்புகளில் இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். (i) 2001-2002 மற்றும் 2002-2003 கல்வி ஆண்டுகளில் கீழ்க்கண்ட அரசு மருத்துவக் கல்லூரிகளில் முதுநிலை பட்டப் படிப்பு பிரிவுகளின் இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன/புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

| மருத்துவக் கல்லூரியின் பெயர் | முதுநிலை பட்டப் படிப்பின் பெயர் | கூடுதலான இடங்கள்/புதிய பட்டப் படிப்பு |
|---|---|---|
| ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை | எம்டி., (மயக்க மருந்தியல்) | 4 |
| மதுரை மருத்துவக் கல்லூரி | எம்டி., (மயக்க மருந்தியல்) | 3 |
| சென்னை மருத்துவக் கல்லூரி | எம்டி., (மயக்க மருந்தியல்) | 2 |
| கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை. | எம்சிஎச்., (புற்றுநோய் அறுவை) | 2 |
| கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி | எம்டி., (மகளிர் மற்றும் மகப்பேறு நலம்) | 2 |

(ii) அரசு மருத்துவக் கல்லூரிகளில் ஏறக்குறைய 29 பட்டம்/பட்டயப் பிரிவுகளில் புதிதாக இடங்கள் உருவாக்க மற்றும் ஏற்கனவே உள்ள இடங்களை அதிகரிக்க கருத்துருக்கள் மைய அரசு/இந்திய மருத்துவக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றில் மொத்த இடங்கள் 99 ஆகும்.



2003 மே 10]

**28—**

**ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்**

**வினா எண் 4040—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில், திருநகரி பஞ்சாயத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதியதாக கட்டடம் கட்டி மருத்துவர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருநகரியில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படவில்லை. துணை சுகாதார நிலையம்தான் செயல்படுகிறது. இந்நிலையம் அரசு கட்டடத்தில் இயங்கிவருகிறது. துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவதில்லை.

**29—**

**பணியாளர்கள் நியமனம்**

**வினா எண் 4420—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியிலுள்ள அரசு மருத்துவமனைக்கு போதுமான மருந்தாளுநர், மகப்பேறு உதவியாளர் மற்றும் ஆண், பெண் செவிலியர்கள் மற்றும் துப்பரவுப் பணியாளர்கள் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், போதுமானவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் தேவையான பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

30—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 4432—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சி மற்றும் பூலாம்பட்டி கிராம மக்கள், ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டி, 1 ஏக்கர் நிலம் வாங்கி சுகாதாரத் துறைக்கு வழங்கி ஒரு வருடம் ஆகியும் அது அமைக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பூலாம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க பூலாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் மற்றும் அவரது மகன் திரு. பாலாஜி அவர்கள் 1 ஏக்கர் நிலம் ஆளுநர் பெயரில் 24-8-1998 அன்று தானாகவே தான பத்திரப் பதிவு செய்துள்ளார்கள். ஆனால், தமிழ் நாட்டில் மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் 1411 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் பூலாம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.



31—

**மருத்துவர்கள் நியமனம்**

**வினா எண் 4434—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதுமான அளவு மருத்துவர்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெறிமுறைகளின்படி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இரண்டு மருத்துவர் பணியிடங்கள் அனுமதிக்கப்படுகின்றன. எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரண்டு மருத்துவர்கள் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு பணியிடங்களிலும் இரண்டு மருத்துவர்கள் பணி புரிகின்றனர். தற்போது சிகிச்சை பெறும் நோயாளிகள் எண்ணிக்கை அடிப்படையில் தற்போது உள்ள இரண்டு மருத்துவர்கள் எண்ணிக்கையே போதுமானதாகும்.

32—

**பெண் மருத்துவர் நியமனம்**

**வினா எண் 4631—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மருதமுத்தூர் அரசு ஆஸ்பத்திரியில் பெண் டாக்டர் நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) சேரன்மகாதேவி தொகுதியில் உள்ள மருதமுதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு பெண் மருத்துவ அலுவலர் 31-1-2002-லிருந்து பணிபுரிந்து வருகிறார்.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**33—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 4818—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் அரசு மருத்துவமனை கட்ட பணமும் ஒரு ஏக்கர் நிலமும் அவ்வூர் பொதுமக்களால் மருத்துவத் துறையினருக்கு கொடுக்கப்பட்டதா?*

*(ஆ) ஆம் எனில், உடனடியாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க திரு. சண்முகம் அவர்கள் 1 ஏக்கர் நிலத்தினை தானமாக வழங்கியுள்ளார். ஆனால் ஊர் பொதுமக்கள் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட பணம் ஏதும் அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தவில்லை.*

*(ஆ) தமிழ் நாட்டின் மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் 1411 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால்*





*பூலாம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**34—**

**மருந்துகள் வழங்குதல்**

**வினா எண் 5153—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், இடும்பாவனம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு போதுமான மருந்துகள் வரவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் நிறைவேற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தொகுதியில் உள்ள இடும்பாவனம் ஆரம்ப சுகாதார நிலையத்தால் பயன்பெற்ற வெளிநோயாளிகளின் எண்ணிக்கையை கருத்திற்கொண்டு, மருந்துகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.60,000/- வழங்கப்பட்டு தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் வாயிலாக மருந்துகள் போதுமான அளவு வழங்கப்பட்டுள்ளது.

**35—**

**மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 5298—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூன்றும் (அதாவது சாரம், ஒட்டம்பட்டு, மேல்சித்தாமூர்) மருத்துவமனைகளாக நிலை உயர்த்தி, உள்நோயாளி படுக்கைகளுடன் செயல்பட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதியிலுள்ள சாரம், ஒட்டம்பட்டு மற்றும் மேல்சித்தாமூர் ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனைகளாக உயர்த்தும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**36—**

### ஆரம்பப் பள்ளி அமைத்தல்

**வினா எண் 5455—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வடகடம்பாடி ஊராட்சியிலுள்ள நல்லான்பிள்ளைபெற்றாள் கிராமத்தில் ஆரம்பப் பள்ளி ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

2002-2003 ஆம் கல்வியாண்டில் 'அனைவருக்கும் கல்வி' என்ற மைய மாநில அரசின் திட்டத்தின்கீழ் 304 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதில் காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வடகடம்பாடி ஊராட்சியிலுள்ள நல்லான்பிள்ளைபெற்றாள் கிராமமும் இடம் பெற்றுள்ளது.



**37—**

### தியாகிகள் ஓய்வூதியம்

**வினா எண் 5484—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தை தாய்த் தமிழகத்தோடு இணைக்க நடந்த போராட்டத்தில் கலந்துகொண்டு இன்னமும் ஓய்வூதியம் பெறாமல் இருக்கும் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

இதுவரை நிதியுதவி பெறாதவர்கள் விண்ணப்பம் அளிக்கும் நேர்வில் நிதியுதவி விதிமுறைகளின்படியும், உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளுக்கிணங்கவும் உரியவாறு கருதி பார்க்கப்படும்.

**38—**

### கல்வி கற்க உதவி

**வினா எண் 5569—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்கள் தகுதி அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் பயில இடம் கிடைத்தும் ஏழ்மையின் காரணமாக அக்கல்வியைத் தொடர முடியாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், உதவிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பட்டப் படிப்புகளுக்கு தகுதியின் அடிப்படையில் படிக்க தேர்வு செய்யப்பட்டு, படிப்புக் கட்டணம் கட்டமுடியாத ஏழ்மை நிலையில் உள்ள 26 மாணவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொரு மாணவருக்கும் ஆண்டு 2001-2002-ல் ரூ.25,000/- அரசு அளித்துள்ளது. இதுவரை ரூ.6,50,000/- வழங்கப்பட்டுள்ளது.

39—

### தமிழ் மொழி வளர்ச்சி

**வினா எண் 5570—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கை ஏதேனும் அரசு எடுத்து இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அதன் விவரம் பின்வருமாறு:

தமிழ் மொழி வளர்ச்சிக்கு தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக ஆக்கப்பூர்வமான பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்து அரசு அலுவலகங்களிலும் தமிழ் ஆட்சி மொழித் திட்டம் செயல்படும் முறை குறித்து அலுவலர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. அரசு அலுவலகங்களில்





தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதுவோருக்குப் பரிசுகள், கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசுத் தொகையாக ரூ.10,000/-மும், நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பகத்தார்க்கு ரூ.2,000-மும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. சிறந்த நூல்களை வெளியிட ரூ.25,000/-மும் நிதியுதவி வழங்கப்படுகிறது. அதேபோல் அரிய நூல்களை வெளியிட ரூ.20,000/-மும் நிதியுதவி வழங்கப்படுகிறது. சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிட ரூ.25,000/-மும் நிதியுதவி வழங்கப்படுகிறது. பள்ளி மாணவியர்களுக்கிடையே "தமிழ் மன்றம்" என்ற அமைப்பு ஏற்படுத்தி அதன் மூலம் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி ஆகியவை நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு திங்கள்தோறும் ரூ.500/- நிதியுதவி வழங்கப்படுகிறது. மொழிக் காவலர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. தமிழ் வளர்ச்சிக்கென பாடுபட்டுவரும் தமிழறிஞர்களை ஆண்டுதோறும் தெரிவு செய்து திருவள்ளுவர் விருது, பாவேந்தர் விருது, பாரதிதாசன் விருது, திரு.வி.க. விருது, பாரதியார் விருது மற்றும் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகியன வழங்கி சிறப்பிக்கப்பட்டு வருகிறது. தமிழில் எழுதுவோருக்கு துணைபுரியும் வகையில் தமிழில் கருவி நூல்கள், ஆட்சித் தமிழ், தமிழ் சுருக்கெழுத்து நூல் ஆகியவை அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் வகையில் வெளிவரும் தமிழ் நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்களுக்கு மூன்று பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கப்படுகிறது. திருக்குறளை முற்றோதல் செய்த 23 மாணவர்களுக்கு திங்கள்தோறும் ரூ.1,000/-மும் வழங்கப்படுகிறது. சொல் வங்கி செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 'தமிழ் நூல் விவர அட்டவணை' என்னும் பெயரில் இணையத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும் ஆண்டுதோறும் நல்கை வழங்கப்படுகிறது. தமிழுக்குத் தொண்டுபுரிந்த, மறைந்த தமிழ் மேதைகளுக்கு அரசு சார்பில் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டு வரலாற்று வரைவுத் திட்டத்தின் கீழ் நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் நூல்களும், தேசிய தமிழ் எழுத்தாளர்களின் நூல்களும் அவ்வப்போது அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டு, உரியவர்களுக்கு அல்லது அவர்களின் மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகைகள் பிரித்து வழங்கப்படுகின்றன.

[2003 மே 10

40—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 5739—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வந்தவாசி தொகுதி, வாச்சனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், வாச்சனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

41—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 5740—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வந்தவாசி தொகுதி, உக்கல் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், உக்கல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



2003 மே 10]

42—

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம்

**வினா எண் 5741—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*வந்தவாசி தொகுதி, உளுந்தை கிராமத்து ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதி, உளுந்தை கிராமத்து ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

43—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 5747—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி, கொள்ளிடம் ஒன்றியம், கூழையாரில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், கூழையார் கிராமத்தில் துணை சுகாதார நிலையம்

உள்ளது. புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை. எனவே இங்கு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட அவசியம் இல்லை.

**44—**

**விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சை**

**வினா எண் 5752—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி நகரில் மோட்டார் வாகன விபத்துக்களில் காயமடைந்தவர்களை போலீஸ் புகார் இல்லாமல் மருத்துவர்கள் சிகிச்சை அளிக்க மறுப்பதைத் தவிர்த்து உடனடியாக சிகிச்சை அளிக்க அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டு வரும் நோயாளிகளுக்கு போர்க்கால நடவடிக்கையில் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு தேவைப்பட்டால் உடனடியாக மேல் சிகிச்சைக்காக பெரிய மருத்துவமனைக்கு அவசர ஊர்தி மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றனர். சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு வரும் எந்த நோயாளியும் போலீஸ் புகார் பெற்று வந்த பின்பே சிகிச்சை அளிக்கப்படும் என்று மறுக்கப்பட்டதில்லை. மாறாக காவல் குறிப்பு* (Police Memo) *பெற்று வராத நிலையிலும் (MLC) எவ்வகை சட்ட மருத்துவ நோயாளிகள் வந்தாலும் அவர்கட்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் காவல் நிலையத்திற்கு தகவல் அனுப்பி வைக்கப்படுகிறது.*

*(ஆ) இவ்வினா எழாது.*



**45—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 5753—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி ஒன்றியம், திருப்பங்கூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், திருப்பங்கூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**46—**

**மருத்துவமனை**

**வினா எண் 6041—திருமதி எஸ். கனிதா சம்பத்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் பகுதிக்கு புதிய அரசு மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) திருப்போரூர் தொகுதி, திருப்போரூரில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அங்கு புதிய மருத்துவமனை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*

*(ஆ) வினா எழாது.*

**47—**

**மருத்துவமனை**

**வினா எண் 6064—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, வல்லம் கிராமத்தில் 1991-ல் கட்டப்பட்ட பொது சுகாதார நிலைய மருத்துவமனை திறக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வல்லம் துணை சுகாதார நிலையம் ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்டது. இந்த துணை சுகாதார நிலையக் கட்டடத்தில் மின் இணைப்பு, சுகாதார கழிப்பிடம், தண்ணீர் வசதி முதலியன செய்யப்படவில்லை. மேற்படி கட்டடம் பேர்பெரியாங்குப்பம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலரிடம் இதுவரை ஒப்படைக்கவில்லை. துணை சுகாதார நிலைய பழுதுகளை சரிசெய்து கட்டடத்தை ஒப்படைக்குமாறு பண்ருட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் வலியுறுத்தப்பட்டுள்ளார். எனினும், கிராம சுகாதார செவிலியர், வல்லம் கிராமத்தில் வாடகைக் கட்டடத்திலிருந்து பணிபுரிகிறார்.*

**48—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6095—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெட்டவயல் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், ரெட்டவயல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**49—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6098—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொள்ளுக்காடு ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கொள்ளுக்காடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**50—**

**அவசர சிகிச்சைப் பிரிவு**

**வினா எண் 6188—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேரன்மகாதேவியில் உள்ள அரசு மருத்துவமனையில் 24 மணி நேர அவசர சிகிச்சைப் பிரிவு புதிதாக துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**51—**

## ஆரம்பப் பள்ளி

**வினா எண் 6348—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், பொம்மிநாயக்கன்பட்டி கிராமத்தில் ஆரம்பப் பள்ளி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*அலங்காநல்லூர் ஒன்றியம், பொம்மிநாயக்கன்பட்டி கிராமத்தில் 'அனைவருக்கும் தொடக்கக் கல்வி' என்ற மைய, மாநில அரசின் திட்டத்தின்கீழ் புதிய ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி 21-3-2002-ல் துவக்கப்பட்டு அதில் 26 மாணவர்கள், 18 மாணவிகள் மொத்தம் 44 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள்.*

**52—**

## மருத்துவமனை விரிவாக்கம்

**வினா எண் 6483—திரு. க. பாரமலை:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2003 மே 10]

*(அ) மானாமதுரை தொகுதி, திருபுவனம் அரசு சுகாதார நிலையத்தில் இரத்தம், மலம், நீர் மற்றும் சளி பரிசோதனைகள் செய்வதற்கு ஆய்வக உதவியாளர் நியமிக்கவும், எக்ஸ்ரே வசதி அமைக்கவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு, மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திரு. இஸ்மாயில் என்ற ஆய்வக உதவியாளர் சிவகங்கை மாவட்டம் திருபுவனம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பணிமாற்றம் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளார். நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குதான் எக்ஸ்ரே வசதிகள் வழங்கப்படுகின்றன. திருபுவனம் ஆரம்ப சுகாதார நிலையம் சமுதாய சுகாதார நிலையம் என்பதால் எக்ஸ்ரே வசதிகள் அவ்விடத்திற்கு வழங்க இயலாது.*

**53—**

## குடியிருப்பு

**வினா எண் 6485—திரு. க. பாரமலை:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருபுவனத்தில் உள்ள அரசு சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் குடியிருப்பு புதியதாக கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருபுவனத்தில் இயங்கி வரும் சமுதாய சுகாதார நிலையத்தில் புதிய மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.*

**54—**

**புதிய உபகரணங்கள்**

**வினா எண் 6486—திரு. க. பாரமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை தொகுதி, திருபுவனத்தில் உள்ள அரசு சுகாதார நிலையத்தில் சவப் பரிசோதனைக்கான புதிய உபகரணங்களை வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருபுவனம் ஆரம்ப சுகாதார நிலையம் சமுதாய நல ஆரம்ப சுகாதார நிலையமாகும். சவப் பரிசோதனை செய்ய போதுமான உபகரணங்கள் உள்ளன. மேலும் புதிய உபகரணங்கள் வாங்கப்பட உள்ளன.*

**55—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6522—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

*(அ) கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூரணி, சின்னதம்பி நாடானூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், கல்லூரணி மற்றும் சின்னதம்பி நாடானூர் கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**56—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 6548—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு வட்டம், தென்னலக்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், தென்னலங்குடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

57—

துணை ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 6549—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதியில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதியில் துணை சுகாதார நிலையம் சொந்தக் கட்டடத்தில் (ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில்) செயல்படுகிறது.

58—

ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 6550—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், புங்கனூர் வட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், புங்கனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



59—

ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 6584—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், நெடுங்குளம் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், டி.வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், நெடுங்குளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

60—

சுகாதார நிலையம்

**வினா எண் 6585—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், வலசை கிராமத்தில் சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம், வலசை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**61—**

### விளையாட்டுத் திடல்கள்

**வினா எண் 6683—திரு. எஸ்.எம். பாலன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) லால்குடி தொகுதியிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் விளையாட்டுத் திடல்கள் அமைத்துத் தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) லால்குடி தொகுதியிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*

**62—**

### ஆசிரியர் நியமனம்

**வினா எண் 6702—திரு. எம். சக்திவேல் முருகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு முழுவதும் உள்ள தனியார், நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்ய உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*அரசாணை (நிலை) எண் 559, கல்வி, நாள் 11-7-95-ல் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்யக்கூடாது என்ற அரசாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில், சென்னை உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்சின் 29-6-2001 நாளிட்ட ஆணையைச் செயல்படுத்தும்பொருட்டு 11-7-95 முதல் 19-5-98 முடிய சிறுபான்மை மற்றும் சிறுபான்மையற்ற தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட நிரந்தர இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில்* (Sanctioned regular posts) *நியமிக்கப்பட்ட பட்டதாரி/தமிழாசிரியர் தகுதி பெற்ற நபர்களுக்கு ஒப்புதல் வழங்கி அரசாணை (நிலை) எண் 155, ப.க.துறை, நாள் 3-10-2002-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 19-5-98-க்குப் பிறகு, அரசு உதவிபெறும் தனியார் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் நியமனங்களுக்கு ஏற்பளிக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

**63—**

### கலைக் கல்லூரி

**வினா எண் 6954— டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டையில் கலைக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*அரசின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாக, புதிய அரசு கலை, அறிவியல் கல்லூரிகளைத் துவக்குதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, தற்போது கந்தர்வகோட்டையில் கலைக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் இல்லை.*

[2003 மே 10

**64—**

### புதிய கல்லூரி

**வினா எண் 7034—திருமதி காசாம்பு பூமாலை:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கராபுரம் தொகுதியில் புதியதாக கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*. (அ) அரசின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாக புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் துவக்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, சங்கராபுரம் தொகுதியில் அரசு கல்லூரி துவக்குவதற்கான உத்தேசம் இல்லை. எனினும், அரசின் நிதியுதவியின்றி சுயநிதிக் கல்லூரிகளைத் திறக்க, தனியார் கல்லூரி முகமையிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டால் அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**65—**

### கல்லூரிகள் அமைத்தல்

**வினா எண் 7082—திரு. மா. இராஜசேகர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராஜபாளையம் தொகுதியில், அரசு கலைக் கல்லூரியும், பொறியியல் கல்லூரியும் அமைக்கப்படுமா?*



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக, புதிய அரசு கலைக் கல்லூரியோ, பொறியியற் கல்லூரியோ துவக்குவதில்லை என அரசு முடிவு எடுத்துள்ளது. எனவே, இராஜபாளையம் தொகுதியில் புதிய அரசு கலைக் கல்லூரியோ, அரசு பொறியியற் கல்லூரியோ துவக்க வாய்ப்பு ஏதுமில்லை.*

**66—**

### மருத்துவமனை

**வினா எண் 7202—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலம் ஒன்றியம், மேற்குப் பகுதி முகாசபருரில் மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியம், முகாசபரூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**67—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 7234—திரு. என். ரெங்கநாதன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், தில்லையாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவ அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், தில்லையாடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**68—**

**பொது மருத்துவமனை**

**வினா எண் 7236—திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி தொகுதி, வள்ளியூர் பேரூராட்சியில் 32 படுக்கை வசதி கொண்ட அரசு பொது மருத்துவமனை ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

நாங்குநேரி தொகுதி, வள்ளியூரில் செயல்பட்டு வந்த ஆரம்ப சுகாதார நிலையம், ஏற்கெனவே அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. அம்மருத்துவமனைக்கு 30 படுக்கை வசதிகள் கொண்ட புதிய கட்டடம் கட்ட நபார்டு வங்கியின் நிதி உதவி கோரப்பட்டுள்ளது.

**69—**

**துணை சுகாதார நிலையம்**

**வினா எண் 7494—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், தோரணபதி கிராமத்தில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், தோரணபதி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. தோரணபதி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**70—**

**கலைக் கல்லூரி**

**வினா எண் 7526—திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் தனியார் கலைக் கல்லூரி மட்டுமே இயங்கி வருவதால் அங்கு அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் திறப்பதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, தூத்துக்குடியில் புதிய அரசு கலைக் கல்லூரி அமைக்கும் வாய்ப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**71—**

### கல்லூரிகள் அமைத்தல்

**வினா எண் 7550—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூரில் அரசு கலைக் கல்லூரியும், பாலிடெக்னிக்கும் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக, புதிய அரசு கலைக் கல்லூரியும், பாலிடெக்னிக்கும் துவக்குவதில்லை என அரசு முடிவு எடுத்துள்ளது. எனவே, மேட்டூரில் புதிய அரசு கலைக் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் அமைப்பதற்கான வாய்ப்புகள் ஏதும் இல்லை.

**72—**

### பொது நூலகம்

**வினா எண் 7662—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 4வது வட்டம், அன்னை இந்திரா நகரில் வசிக்கும் இளைஞர்களுக்குப் பயன்படும் வகையில் பொது நூலகம் அமைத்துத்தர அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சி, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 4வது வட்டம், அன்னை இந்திரா நகர் மக்கள், ஒரு நூலகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யாததால், அவ்விடத்தில் நூலகம் அமைக்க இயலவில்லை.

**73—**

### உடற்பயிற்சிக் கூடம்

**வினா எண் 7662அ—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 4வது வட்டம், அன்னை இந்திரா நகரில் வசிக்கும் இளைஞர்கள் பயன்படும் வகையில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 4வது வட்டம், அன்னை இந்திரா நகரில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத்தர திட்டம் ஏதும் இல்லை.

**74—**

### பாடப் பிரிவு தொடங்குதல்

**வினா எண் 7956—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசுக் கல்லூரியில் இளநிலையில் வேதியியல் பாடப் பிரிவு தொடங்க பல ஆண்டுகளாக வைத்துள்ள இக்கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில் இக்கல்வியாண்டில் அனுமதி வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசுக் கலைக் கல்லூரியில் இளநிலை வேதியியல் புதிய பாட வகுப்பு 2002-2003 ஆம் ஆண்டில் துவங்கக் கோரும் கருத்துரு எதுவும் பெறப்படவில்லை. கடுமையான அரசின் நிதி நெருக்கடி காரணமாக செலவினம் ஏற்படக்கூடிய பாடப் பிரிவுகளை அரசுக் கல்லூரிகளில் துவக்குவதில்லை என அரசு முடிவு எடுத்துள்ளது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**75—**

### கட்டட வசதி

**வினா எண் 8008—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டி ஒன்றியம், மேலக்கால் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, வாடிப்பட்டி ஒன்றியம், மேலக்கால் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் இல்லை.



**76—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 8215—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ரொட்டிக்கடை பகுதியில் கட்டப்பட்டு இயங்காத ஆரம்ப சுகாதார நிலையத்தைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி, ரொட்டிக்கடை பகுதியில் ஊராட்சி ஒன்றியம் மூலமாக மகப்பேறு மையமாக கட்டப்பட்ட துணை சுகாதார நிலையம் செயல்பட்டுக் கொண்டுதான் உள்ளது.

**77—**

### மருத்துவர் நியமனம்

**வினா எண் 8576—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அ. புதூர் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஒரு மருத்துவரை உடனடியாக பணி அமர்த்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், வைகுந்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்த அ. புதூர் ஊராட்சியில், துணை சுகாதார நிலையம் மட்டுமே செயல்படுகிறது. தற்போதுள்ள அரசு நெறிமுறைகளின்படி துணை சுகாதார நிலையங்களுக்குத் தனியாக மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிக்கப்படவில்லை. எனவே, அ. புதூர் துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலரை நியமனம் செய்ய இயலாது.

**78—**

### நோயாளிகள் விவரம்

**வினா எண் 8594—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சராசரியாக ஒரு நாளைக்கு வருகை தரும் புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் எவ்வளவு பேர்?

*(ஆ)* அவர்களுக்காக அரசு செலவிடும் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு (அரசு பொது மருத்துவமனை, சென்னை-3) சராசரியாக ஒரு நாளைக்கு வருகை தரும் புறநோயாளிகள் எண்ணிக்கை 5,999; மற்றும் உள்நோயாளிகள் எண்ணிக்கை 1,789 ஆகும்.

*(ஆ)* அவர்களுக்காக 2000-2001 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.16,12,78,167/- செலவிடப்பட்டுள்ளது.



**79—**

### பயிற்சி நிலையம்

**வினா எண் 8605—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தில் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சேலத்தில் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் பயிற்சி நிலையம் அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**80—**

### அவசர சிகிச்சைப் பிரிவு

**வினா எண் 8609—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி அரசு மருத்துவமனையில் ஒரு அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* அவ்வாறான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

[2003 மே 10

81—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 8668—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, அழகப்பசமுத்திரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், அழகப்பசமுத்திரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

82—

**அரசுப் பணி**

**வினா எண் 8950—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மொழிப்போர் போராட்டத்தில் பங்குபெற்று சிறையிலிருந்து, வயது முதிர்ந்த மொழிப்போர் தியாகிகளை கௌரவிக்கும் பொருட்டு அன்னார் குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ் மொழிக் காவலர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணி வழங்கும் திட்டம் ஏதும் செயற்பாட்டில் இல்லை.*

83—

**கலைக் கல்லூரி**

**வினா எண் 9008—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவியில் மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசின் தற்போதைய நிதிநிலைமையின் காரணமாக புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் துவக்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, சேரன்மகாதேவியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி துவக்கும் வாய்ப்பு ஏதுமில்லை.*

84—

**கலைக் கல்லூரி**

**வினா எண் 9070—திரு. ஆஸ்டின்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரி புதிதாக தொடங்குவதற்கு அரசு முன்வருமா?*

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தற்போதைய அரசின் நிதிநிலை காரணமாக, புதிய அரசு கல்லூரிகளைத் துவக்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக அரசு கல்லூரியைத் தொடங்கும் திட்டம் ஏதும் இல்லை.

85—

**நடுநிலைப் பள்ளி**

**வினா எண் 9156—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, கொத்தட்டை தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2002-2003 கல்வியாண்டில் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்ற மைய மாநில அரசின் திட்டத்தின்கீழ் 479 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாணையில் புவனகிரி தொகுதி, கொத்தட்டை தொடக்கப் பள்ளியும் ஒன்றாகும்.

86—

**ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்**

**வினா எண் 9460—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, பச்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அரசு வழங்கிய நிலத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?



2003 மே 10]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பச்சூர் கிராமத்தில் திரு. சின்னபையன் குமாரர் சி. பங்கநூராஜன் என்பவர் பச்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தமான 3.61 ஏக்கர் நிலத்தினை ஆக்கிரமித்து வருகிறார். வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரையின் பேரில் நாட்ராம்பள்ளி காவல் நிலையத்தில் ஆக்கிரமிப்பினை அகற்றக் கோரி புகார் கொடுக்கப்பட்டு சமுதாயப் பணிப் பதிவேட்டில் வரிசை எண் 102/98-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. நாட்ராம்பள்ளி காவல் நிலையத்திலிருந்து முடிவான அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

87—

**மேல்நிலை நீர்த்தொட்டி**

**வினா எண் 9465—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, புதுப்பேட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தண்ணீர் மேல்நிலை நீர்த்தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், புதுப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய ஆழ்துளைக் கிணறு ஒன்றும், ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தின் மேல் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத்

தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளது. போதுமான தண்ணீர் வசதி உள்ளதால், மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தொட்டி அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**88—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 9893—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, நன்செய் இடையாறு பகுதி மக்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், நன்செய் இடையாறு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**89—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 9930—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பங்குநத்தம் ஊராட்சி இராஜகொல்ல அள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், இராஜகொல்லஅள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**90—**

**செவிலியர் பயிற்சி**

**வினா எண் 9961—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி துவங்கிட அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.*

**91—**

**மருத்துவர்கள் நியமனம்**

**வினா எண் 9964—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிரந்தர மருத்துவர்களைப் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி சுகாதார மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 105 மருத்துவர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுவிட்டன.*

**92—**

**பல் மருத்துவக் கல்லூரி**

**வினா எண் 9969—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு பல் மருத்துவக் கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு பல் மருத்துவக் கல்லூரி துவங்கும் கருத்துரு தற்போது பரிசிலனையில் இல்லை.*

**93—**

**கலைக் கல்லூரி**

**வினா எண் 10211—திரு. சி. சண்முகம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*





*திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி பகுதியில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி பகுதியில் புதிய அரசுக் கல்லூரி அமைக்கும் வாய்ப்பு ஏதுமில்லை.*

**94—**

**நூலகம்**

**வினா எண் 10260—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் பகுதியில் நூலகம் அமைத்துக் கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சியில் ஒரு நூலகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்யாததால் அவ்விடத்தில் நூலகம் அமைக்க இயலவில்லை.*

[2003 மே 10

95—

### மருத்துவக் கல்லூரி

**வினா எண் 11517 திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்று துவங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி துவங்கும் திட்டம் தற்போது இல்லை*

96—

### ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்துதல்

**வினா எண் 11634—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, நாட்றாம்பள்ளி குனிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் உள்ளதாக உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாட்றாம்பள்ளி தொகுதி, நாட்றாம்பள்ளி குனிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் உள்ளதாக உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.*

97—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 11636—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்றாம்பள்ளி தொகுதியிலுள்ள மேற்கத்தியனூர் கிராமத்திற்கு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், மேற்கத்தியனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

98—

### தனி சிகிச்சை நிலையம்

**வினா எண் 11685—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2003 மே 10

தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்தபடியாக சேலம், நாமக்கல் மாவட்டங்களில் எய்ட்ஸ் நோய் அதிகமுள்ளதாக அரசு கண்டறிந்துள்ளதால், அவர்களுக்கு தனியாக சிகிச்சை நிலையம், மறுவாழ்வு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு தனியாக சிகிச்சை நிலையம்/மறுவாழ்வு நிலையம் இல்லை. நாமக்கல் மருத்துவமனையில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோயாளிகளுக்கென தனிப் பிரிவு உள்ளது. சேலம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்படும் குழந்தைகள், நோயாளிகளுக்கென தனியாக ஒரு வார்டு அமைக்க அரசு பரிசீலித்து வருகிறது.

**99—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 11728—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள கோவிலாம்பூண்டி கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கோவிலாம்பூண்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



2003 மே 10]

**100—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 11729—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பின்னத்தூர் மேற்கு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பின்னத்தூர் மேற்கு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**101—**

**மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி**

**வினா எண் 11744—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் அரசு மருத்துவ மனைக்கு இ.சி.ஜி. ஸ்கேன் மற்றும் அவசர ஊர்தி வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் அரசு மருத்துவமனைக்கு இ.சி.ஜி. மற்றும் ஸ்கேன் வசதி செய்யப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. அவசர ஊர்தி ஒன்று நல்ல முறையில் நோயாளிகளுக்கு சேவை செய்து வருகிறது.*

**102—**

**செவிலியர் பயிற்சிப் பள்ளி மற்றும் பல் மருத்துவக் கல்லூரி**

**வினா எண் 11746—திரு. என்.கே. பெருமாள்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் செவிலியர் பயிற்சிப் பள்ளி மற்றும் பல் மருத்துவக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசின் தற்போதைய நிதிநிலைமையில் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் செவிலியர் பயிற்சிப் பள்ளி மற்றும் பல் மருத்துவக் கல்லூரி அரசு சார்பில் தொடங்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.*

**103—**

**மருத்துவமனை**

**வினா எண் 11747—திரு. என்.கே. பெருமாள்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2003 மே 10]

*(அ) விளாத்திகுளம் தொகுதி, வேம்பாரிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதி, வேம்பாரிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.*

**104—**

**உயர்மட்டக் குழு**

**வினா எண் 12416—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழக அரசு ஆணைப்படி அரசு அலுவலகங்களில் முழுமையாகத் தமிழ் மொழியைக் கையாளுகிறார்களா என்பதைக் கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினர்களடங்கிய உயர் மட்டக் குழு அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆமெனில், அது பற்றிய விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழக அரசு ஆணைப்படி அரசு அலுவலகங்களில் முழுமையாகத் தமிழ் மொழியைக் கையாளுகிறார்களா என்பதை தலைமைச் செயலகத் துறைகளில் தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசு செயலாளராலும், துறைத் தலைமை/ தன்னாட்சி நிறுவனத் தலைமை மற்றும் மாவட்ட ஆட்சியர்*

அலுவலகங்களை தமிழ் வளர்ச்சி இயக்குநராலும், மண்டல/மாவட்ட மற்றும் சார்நிலை அலுவலகங்களை தமிழ் வளர்ச்சித் துறையின் மண்டலத் துணை இயக்குநர்கள் மற்றும் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களாலும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பெறுகின்றன. எனவே, இதன்பொருட்டு சட்டமன்ற உறுப்பினர்களடங்கிய உயர் மட்டக் குழு அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**105—**

**விளையாட்டு வீரர்களுக்குப் பணி**

**வினா எண் 12438—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறந்த விளையாட்டு வீரர்களுக்காக அரசுப் பணியில் எத்தனை சதவீதம் ஒதுக்கீடு வழங்கியுள்ளது?

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் எத்தனை பேருக்குப் பணி வழங்கப்பட்டு உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) சிறந்த விளையாட்டு வீரர்களுக்காக அரசு காவல் துறை பணியில் 10 சதவீதம் ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டு முதல் 23 விளையாட்டு வீரர்கள் இரண்டாம் நிலை காவலர் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**106—**

**மருத்துவமனை**

**வினா எண் 12874—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



ராணிப்பேட்டை தொகுதி, மேல்பாடியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

ராணிப்பேட்டை தொகுதி, மேல்பாடியில் இயங்கிவரும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**107—**

**மருத்துவமனை**

**வினா எண் 12882—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை வேளச்சேரி பகுதியில் ஒரு கீழ்மட்ட மருத்துவமனையினை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

வேளச்சேரி பகுதிக்கு அருகாமையில் உள்ள மேடவாக்கத்தில் முதன்மை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால் வேளச்சேரி பகுதியில் ஒரு கீழ்மட்ட மருத்துவமனை அவசியமில்லை.

**108—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 12892—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) பேரணாம்பட்டு தொகுதி, சிந்தகமான பெணிகுண்டா, வெளித்தமான பெணிகுண்டா மற்றும் மாத கடப்பு ஆகிய ஆலங்காய ஒன்றியத்தில் வாழும் மலைவாழ் பகுதி மக்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், சிந்தகமான பெணிகுண்டா, வெளித்தமான பெணிகுண்டா மற்றும் மாத கடப்பு ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் திட்டம் இல்லை.

**109—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 12910—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, வரிச்சியூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், வரிச்சியூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



2003 மே 10]

**110—**

**மருத்துவமனை**

**வினா எண் 13081—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பண்டஅள்ளிக்கு மருத்துவமனை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், பண்டஅள்ளியில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அதனை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

**111—**

**உயர்மட்டக் குழு**

**வினா எண் 13131—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு பொது மருத்துவமனைகளில் சரியாக பராமரிக்கும் பொருட்டு உயர்மட்டக் குழு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தற்பொழுது அரசு மருத்துவமனைகள் நிறைவாக இயங்கி வருகின்றன. எனவே, அரசு மருத்துவமனைகளை பராமரிக்கும் பொருட்டு உயர்மட்டக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது ஏதுமில்லை.

**112—**

**தனியார் மருத்துவமனை**

**வினா எண் 13135—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் மருத்துவமனைகளை முறைப்படுத்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தனியார் மருத்துவமனைகளை முறைப்படுத்த 1997 ஆம் ஆண்டு அரசு, தமிழ்நாடு தனியார் மருத்துவமனைகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இதற்கான வரைவு விதிகள் அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**113—**

**சிறந்த படைப்புகளை அரசுடைமையாக்குதல்**

**வினா எண் 13313—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) தமிழகத்தில் புகழ் பெற்ற தமிழறிஞர்களான சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையனின் சிறந்த படைப்புகளை அரசுடைமையாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**114—**

**கலைக் கல்லூரி**

**வினா எண் 13557—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு இந்நிதியாண்டில் முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் துவக்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவக்குவதற்கு வாய்ப்பு ஏதும் இல்லை.

**115—**

**நூலகம்**

**வினா எண் 13931—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) பண்ருட்டி தொகுதி, திருவாமூர் ஊராட்சியில் நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, திருவாமூர் ஊராட்சி திருவாமூர் சமத்துவபுரத்தில் ஒரு பகுதி நேர நூலகம் 15-8-1998 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும் திருவாமூர் ஊராட்சியில் மேலும் ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்ட கீழ்க்கண்ட நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் பூர்த்தி செய்யாததால், அவ்விடத்தில் ஒரு பகுதி நேர நூலகம் திறக்க இயலவில்லை.

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்படவேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனைகளை கடலூர் மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாகப் பத்திரப் பதிவு செய்து தரப்படவேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ.2,000 மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(5) தலா ரூ.1,000 வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**116—**

**விளையாட்டு அரங்கம்**

**வினா எண் 13979—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**117—**

**பரிசோதனை வசதி**

**வினா எண் 14121—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தில் பள்ளிக் குழந்தைகள் கண் பரிசோதனை திட்டத்தின்கீழ் அனைத்து பள்ளிக் குழந்தைகளுக்கும் பரிசோதனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளி சிறார் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் எல்லா பள்ளி குழந்தைகளும் இருதயம், கண், காது, பல், வைட்டமின் குறைபாடு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பரிசோதிக்கப்படுகின்றனர். இத்திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தில் அனைத்து பள்ளிக் குழந்தைகளுக்கும் கண் பரிசோதனை செய்யப்பட்டு குறைபாடுள்ளவர்களுக்குத் தக்க சிகிச்சை அளிக்கப்பட்டது.

**118—**

**பல் மருத்துவக் கல்லூரி**

**வினா எண் 14132—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளத்தில் அரசு பல் மருத்துவக் கல்லூரி ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளத்தில் அரசு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**119—**

**தங்கும் விடுதி**

**வினா எண் 14583—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களை சுகாதார நிலையத்திலேயே தங்க அனுமதி அளித்து அரசு ஆணை பிறப்பிக்க திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

ஆரம்ப சுகாதார நிலையங்களில் அரசு குடியிருப்பு உள்ள இடங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் தவறாமல் குடியிருப்புகளில் தங்கி பணிபுரியவும், அவ்வாறு அரசு குடியிருப்புகள் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களை ஆரம்ப சுகாதார நிலையப் பகுதிக்குள் குடியிருக்க வேண்டுமென பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.





**120—**

**மருத்துவமனை**

**வினா எண் 14668—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் செயல்படும் பத்தமடை ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. எனவே, பத்தமடை ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டிய அவசியமில்லை.

**121—**

**மருத்துவ ஊர்தி**

**வினா எண் 15083—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் - கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் அதிகப்படியான விபத்துக்கள் நடப்பதால் இச்சாலையில் நடமாடும் மருத்துவ ஊர்தி ஒன்று இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓசூர் மற்றும் கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் சாலை விபத்தில் சிக்கி தவிப்பவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கும் பொருட்டு ஓசூர் மற்றும் கிருஷ்ணகிரி மருத்துவமனைகளில் தற்போது செயல்பட்டு வரும் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை சாலைப் போக்குவரத்து பாதுகாப்பு நிதியிலிருந்து ரூ.68 லட்சம் செலவில் (ஆம்புலன்ஸ் ரூ.9 லட்சம் உட்பட) மேம்படுத்திட உள் துறையால் அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

**122—**

### மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 15084—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூர் அரசு மருத்துவமனையில் போதுமான மருத்துவர்களை நடப்பாண்டில் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தர்மபுரி மாவட்டம், ஓசூர் அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட பதினொன்று மருத்துவர் பணியிடங்களிலும் மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2003 மே 10]

**123—**

### பொது மருத்துவமனை

**வினா எண் 15109—திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, திருமுட்டம் பேரூராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொது மருத்துவமனையாக மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, திருமுட்டம் பேரூராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**124—**

### மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

**வினா எண் 15126—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, பசுவந்தனை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக விரிவுபடுத்தவும், அங்கு நடமாடும் மருத்துவப் பிரிவு தொடங்கவும் அரசு முன்வருமா?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, பசுவந்தனை ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடமாடும் சிறப்பு மருத்துவச் சிகிச்சை குழுக்கள் அமைப்பது பற்றி உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

**125—**

**தமிழ் அகதிகள்**

**வினா எண் 15143—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இவர்களுக்குச் சரியான குடியிருப்புகள் மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகிறதா?

(இ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 31-12-2002 அன்றைய நிலவரப்படி தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 63,020 ஆகும்.

(ஆ) அவர்கள் தங்குவதற்குத் தேவையான குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கு உணவுப் பொருட்களும் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன.

(இ) (1) வீட்டு வசதி: இலங்கை அகதிகளுக்காக ரூ.6.90 கோடி செலவில் கட்டிக் கொடுக்கப்பட்ட 19,664 வீடுகளில் பெரும்பான்மையான வீடுகள் சேதமடைந்ததால் மைய அரசின் ஒப்புதலுடன் அவை புதுப்பித்து, கட்டித் தரப்பட்டுள்ளன.



2003 மே 10]

(2) உணவுப் பொருட்கள்: முகாமில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு, பெரியவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 400 கிராம் அரிசி வீதமும், சிறியவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 200 கிராம் அரிசி வீதமும் கணக்கிடப்பட்டு, சலுகை விலையில் கிலோ ஒன்றுக்கு 0.57 காசு வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. இதைத் தவிர, மண்ணெண்ணெய், சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்படுகின்றன. இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.5.40 கோடி முதல் 5.60 கோடி வரையும் (முகாம் ஜனத்தொகைக்கேற்ப) மற்றும் மாதத்திற்கு ரூ.45 இலட்சம் வரையும் சராசரியாகச் செலவிடப்படுகின்றது.

**126—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 15817—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, திருவேங்கடம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கத் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், திருவேங்கடம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**127—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 15822—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கன்னங்குளம் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், கன்னங்குளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**128—**

**முழு நேர மருத்துவமனை**

**வினா எண் 15897—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தை முழு நேரமும் செயல்பட வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) 1999 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து இச்சுகாதார நிலையத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள அறைகளைத் திறக்க அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தை முழு நேரமும் செயல்படும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) மற்றும் (இ) 1999 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து புதிதாகக் கட்டப்பட்ட 10 படுக்கைகள் கொண்ட கட்டடம் 10-5-2000 அன்று பொதுப் பணித் துறையினரிடமிருந்து மருத்துவ அலுவலரால் பொறுப்பேற்கப்பட்டு, உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.



2003 மே 10]

**129—**

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 15900—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச் சுவர் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**130—**

**கிளை சுகாதார நிலையம்**

**வினா எண் 15903—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நல்லிதேவன்பட்டி, கிளை சுகாதார நிலையம் பழுதடைந்துள்ளதைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், நல்லிதேவன்பட்டி, துணை சுகாதார நிலையத்தினைச் சீர் செய்ய 2001-2002 ஆம் ஆண்டில், ரூ.1,85,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, மார்ச் மாதம் கடைசியில் பணி தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை சுகாதார நிலையத்திற்காக ஆழ்துளைக் கிணறு தோண்டப்பட்டுள்ளது. மேலும், ஜன்னல்கள் மற்றும் கதவுகள் அமைக்கும் பணி, சுற்றுச் சுவர் பணிகள் முதலியன பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**131—**

### பிரசவ வார்டு

**வினா எண் 15918—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூரில் உள்ள மருத்துவமனையிலேயே பிரசவ வார்டு கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெத்தநாயக்கனூரில் உள்ளது மருத்துவமனையல்ல, ஆரம்ப சுகாதார நிலையம் ஆகும். கடந்த ஓராண்டில் நடைபெற்ற பிரசவங்களின் எண்ணிக்கை 2 ஆகும். நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கை அடிப்படையில் தற்போதுள்ள வசதிகளே போதுமானதாகும். கூடுதலாகப் பிரசவ வார்டு தேவையில்லை.

**132—**

### மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி

**வினா எண் 15981—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

சீர்காழி தொகுதி, வைதீஸ்வரன் கோயில், அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே யூனிட், அவசர ஊர்தி மற்றும் தொலைபேசி வசதி ஆகியவை உடனே செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

இம்மருத்துவமனைக்குத் தேவையான எக்ஸ்ரே யூனிட், அவசர ஊர்தி மற்றும் தொலைபேசி ஆகிய வசதிகள் செய்து கொடுக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**133—**

### கட்டட வசதி

**வினா எண் 16100—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, உளுந்தை ஊராட்சி, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் உளுந்தை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்போது புதிய கட்டடம் கட்டும் திட்டம் இல்லை.

**134—**

### உணவு விநியோகம்

**வினா எண் 16122—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியிலுள்ள வேட்டைகாரன்புதூர் அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்குக் கொடுத்து வந்த ரொட்டி, பால் போன்றவற்றை தடையின்றி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதியிலுள்ள வேட்டைகாரன்புதூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் உள்நோயாளிகளுக்கு உணவுப் பொருட்கள் தடையின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

**135—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 16174—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருநகரி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், திருநகரி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



**136—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 16181—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, நக்கனேரி கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், நக்கனேரி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**137—**

**மருத்துவமனை**

**வினா எண் 16187—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், செட்டிகுளம் கிராமத்தில் மருத்துவமனை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், செட்டிகுளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

[2003 மே 10

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், புளியந்துறை கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், புளியந்துறை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**141—**

**நூல் நிலையம்**

**வினா எண் 16710—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பி.ஆண்டிக்குப்பம் கிராமத்தில் நூல் நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பி.ஆண்டிக்குப்பம் கிராம மக்கள், ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால், அவ்வூரில் நூலகம் திறக்க இயலவில்லை.



2003 மே 10]

**142—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 16748—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பி. ஆண்டிக்குப்பம் கிராமத்தில் மக்கள் நல்வாழ்விற்காக ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், பி. ஆண்டிக்குப்பம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை

**143—**

**மருத்துவமனை**

**வினா எண் 16753—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நத்தம் கிராமத்திற்கு ஓர் அரசு மருத்துவமனை அமைத்துத்தர இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி தொகுதி, நத்தம் கிராமத்தில் அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**144—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 16761—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, மல்லப்பள்ளி ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மல்லப்பள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**145—**

**கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 16771—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதிக்குட்பட்ட கந்திலி ஒன்றியம், பெரியகரம் கிராமத்திற்கு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேலூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், பெரியகரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**146—**

**மூலிகைப் பண்ணை**

**வினா எண் 16972—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு பேரூராட்சியில் அரசு மருத்துவமனையில் மூலிகைப் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது, தமிழ்நாட்டில் மூலிகைத் தோட்டங்கள் அதிகப்படுத்துவது குறித்து நாமக்கல், சேலம், தருமபுரி, வேலூர், கோவை, நீலகிரி, திண்டுக்கல், தேனி, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் அரசு சார்பில் விவசாயிகளின் தோட்டங்கள் மூலமாக மூலிகை உற்பத்தி செய்வது தொடர்பாக விரிவான திட்டம் தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்து கழகத்தால் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்படி திட்டம், மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் இத்திட்டம் தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்து கழகத்தால செயல்படுத்தப்படும்.

[2003 மே 10

150—

**கூடுதல் படுக்கை வசதி**

**வினா எண் 17255—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, அழகியநாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் படுக்கை வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, அழகிய நாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தின் சென்ற வருட பிரசவ நிகழ்வுகளின் எண்ணிக்கை 35 மட்டுமே. ஆதலால் அழகியநாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் படுக்கை வசதி ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

151—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 17758—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுதொண்டமாதேவி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சிறுதொண்டமாதேவி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

152—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 17796—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, திருவாமூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், திருவாமூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

153—

**கட்டுமானப் பணி**

**வினா எண் 17920—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, அத்திப்பட்டு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டும், கட்டுமானப் பணி தொடங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம், கனகம்மா சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த அத்திப்பட்டு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அத்திப்பட்டு கிராமத்தில் சர்வே எண் 295/2ல் ஒதுக்கப்பட்ட 5 சென்ட் நிலத்தில் துணை சுகாதார நிலையம் கட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நிலம் பொது சுகாதாரத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டவுடன் துணை சுகாதார நிலையத்தை கட்ட அரசால் பரிசீலிக்கப்படும்.

**154—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 17921—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி விடையூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், விடையூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.



**155—**

## புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 17974—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் ஊராட்சி ஒன்றியம், பாலவிடுதி ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கடவூர் ஊராட்சி ஒன்றியம், பாலவிடுதி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**156—**

## மருத்துவ வசதி

**வினா எண் 17982—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாய்ப்பாலின் முக்கியத்துவத்தைப் பரப்பும் வகையில் அரசு மருத்துவமனைகளில் தாய்ப்பால் வங்கி அமைக்க வேண்டுமென்ற தாய்சேய் நல மருத்துவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உலக தாய்ப்பால் வாரம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் முதல் வாரம்

கொண்டாடப்படுகிறது. தற்போது எச்.ஐ.வி./எய்ட்ஸ் போன்ற நோய்கள் தாய்ப்பால் மூலம் பரவ வாய்ப்பு இருப்பதால் தாய்ப்பால் வங்கி அமைப்பது குறித்த கோரிக்கையை ஏற்க இயலாது.

**157—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 18072—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, கீழ்கொவளைவேடு ஊராட்சிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், கீழ்கொவளைவேடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**158—**

**நுழைவுக் கட்டணம்**

**வினா எண் 18128—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் நுழைவாயில் கட்டணம் ரூ.5 என்றும், உள்ளே (x-ray) எக்ஸ்ரே கட்டணம் ஒரு நகலுக்கு ரூ.20 என்றும் வாங்குவதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நுழைவு வாயில் கட்டணம் என தனியாக அரசு மருத்துவமனைகளில் வசூலிக்கப்படவில்லை. அரசு மருத்துவமனைகளில் பார்வையாளர்கள் நேரம் தவிர மற்ற நேரங்களில் மருத்துவமனையில், உள்நோயாளிகளை காண வரும் நபர்களிடம் மட்டும்தான் ரூ.5/- பார்வையாளர்கள் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. மேலும், சிறப்புப் பிரிவுகளில் சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகளுக்கு, சிறப்புப் பிரிவு புறநோயாளிகள் சீட்டு வழங்குவதற்கு ரூ.5/- கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

**எக்ஸ்ரே:**

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகளில் மருத்துவரின் ஆலோசனையின் பேரில், எக்ஸ்ரே தேவைப்படும் நோயாளிகளுக்கு இலவசமாக எக்ஸ்ரே எடுக்கப்படுகிறது. நோயாளிகள் எக்ஸ்ரே படங்களை தங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும் எனக் கோரினால் ரூ.20/- அரசுக்குச் செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

**159—**

**சித்த வைத்தியர்கள்**

**வினா எண் 18129—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த வைத்தியர்கள் புதியதாக பதிவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) புதுடெல்லியில் உள்ள மத்திய இந்திய மருத்துவக் கழகத்தின் 1970-ம் ஆண்டு சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் கண்டுள்ள பட்டம் மற்றும் பட்டயப்படிப்பு படித்துள்ளவர்களுக்கு மட்டும் சித்த மருத்துவப் பதிவு வழங்கப்படுகிறது. புதியதாக பரம்பரை சித்த மருத்துவர்கட்கு சித்த மருத்துவப் பதிவு வழங்கப்படுவதில்லை.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*

**160—**

**சித்த மருத்துவர்கள் நியமனம்**

**வினா எண் 18142—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் சித்த மருத்துவர்கள் உள்ளார்களா?*

*(ஆ) சித்த மருத்துவர்கள் இல்லாத மருத்துவமனைகளில் சித்த மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில், சென்னை மற்றும் கோவை ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் சித்தா பிரிவு இயங்குகிறது. அங்கு ஒவ்வொரு மருத்துவமனையில் உள்ள சித்தா பிரிவிலும் ஒவ்வொரு சித்தா உதவி மருத்துவ அலுவலர் பணிபுரிந்து வருகிறார்கள்.*



*(ஆ) சித்தா பிரிவுகள் அங்கீகரிக்கப்படாத தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சித்தா பிரிவு தொடங்க இ.எஸ்.ஐ. கழகத்தால் ஆணை வழங்கும்பட்சத்தில் அங்கு சித்த மருத்துவர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**161—**

**பிணவறையை மாற்றம் செய்தல்**

**வினா எண் 18381—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனையின் மையப் பகுதியில் உள்ள பிணவறையை வேறு பகுதிக்கு மாற்றும் எண்ணம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனையின் மையப் பகுதியில் உள்ள பிணபரிசோதனை அறையை மாற்றி வேறு ஒதுக்குப்புறமான இடத்தில் கட்டுவதற்கு அரசின் நிதி நெருக்கடி சீர் அடைந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.*

**162—**

**விழிப்புணர்வு இயக்கம்**

**வினா எண் 18528—திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புகையிலை, பான்மசாலா மற்றும் குட்கா பொருள்கள் விற்க தடைசெய்து இயற்றப்பட்ட சட்டம் பற்றிய விழிப்புணர்வு இயக்கம் நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழக அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம், அனைத்து பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு தடை செய்யப்பட்ட புகையிலை, பான்மசாலா மற்றும் குட்கா போன்ற பொருட்களை உட்கொள்வதால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வை கல்லூரி, பள்ளி முதல்வர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் மூலம் ஏற்படுத்த கேட்டுக்கொண்டுள்ளது.

**163—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 18575—திருமதி சி.எம். சூரியகலா**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், அணங்காநல்லூரிலும், பங்கரிஷி குப்பத்திலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், அணங்காநல்லூர் மற்றும் பங்கரிஷிகுப்பம் கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



**164—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 18644—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, ஆயலவாடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார மையம் ஒன்று துவக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஆயலவாடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**165—**

**குடியிருப்புகளை செப்பனிடுதல்**

**வினா எண் 18763—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஆண்டியப்பனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள ஊழியர் குடியிருப்பு சேதமடைந்துவிட்டதால் ஊழியர்கள் தங்கி பணிபுரிவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டியப்பனூர் ஆரம்ப சுகாதார நிலைய குடியிருப்புகள் பழுதுபட்டிருப்பினும், மருத்துவ அலுவலர்கள் மற்றும்

பிற பணியாளர்கள் குடியிருப்புகளில் தங்கி பணி புரிந்து வருகின்றனர். மேலும், குடியிருப்பு பழுதுகளை, 2002-2003 ஆம் ஆண்டில் சுகாதார நிலையக் கட்டடங்களின் பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கட்டடப் பழுதுகளை முன்னுரிமை அடிப்படையில் சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**166—**

**கூடுதல் வசதி**

**வினா எண் 18772—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள ஆண்டியப்பனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட நவீன வசதியுடன், அறுவை சிகிச்சை அரங்கத்துடன் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஆண்டியப்பனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தற்போது தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**167—**

**இரத்த வங்கி**

**வினா எண் 18783—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) திருப்பத்தூர் அரசு பொது மருத்துவனையில் 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட இரத்த வங்கி செயல்படாமல் உள்ளதை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் உள்ள குருதி வங்கிக்கு உரிமம் பெற கட்டணம் ரூ.1000/- செலுத்தப்பட்டுள்ளது. வேலூர் சரக மருந்தாய்வாளர் தணிக்கை செய்து உரிமம் வழங்க பரிந்துரை செய்துள்ளார். ரத்த வங்கிக்கான உரிமக் கட்டணம் ரூ.1000/-லிருந்து ரூ.7500/- ஆக தற்போது உயர்த்தப்பட்டதால், எஞ்சிய உரிமக் கட்டணத் தொகை ரூ.6500/-ஐ செலுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உரிமத் தொகை செலுத்தியபின் இந்த ரத்த வங்கிக்கு உரிமம் பெற்று செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

**168—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 18857—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, வேப்பனப்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட குப்பச்சிப்பாறையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், குப்பச்சிப்பாறை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**169—**

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 19000—திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியில் உள்ள அறிஞர் அண்ணா கலைக் கல்லூரிக்கு நான்கு பகுதியிலும் சுற்றுச் சுவர் கட்டிட அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செய்யாறு, அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியின் முன்புறம் வடக்கு தெற்காக 332 மீட்டர் நீளத்திற்கு 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.4.00 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது.

**170—**

**நிதி உதவி**

**வினா எண் 19402—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து சிறுநீரக அறுவை சிகிச்சைக்கு நிதி உதவி அளிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்:**

ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகாமல் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழை நோயாளிகளுக்கு அரசு அங்கீகாரம் செய்துள்ள தனியார் மருத்துவமனைகளில் செய்து கொள்ளும் சிறுநீரக அறுவை சிகிச்சைகளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது.

**171—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 19437—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலம் தொகுதி, அ. வாசுதேவனூர் ஊராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சின்ன சேலம் ஊராட்சி ஒன்றியம், அ. வாசுதேவனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**172—**

**மகப்பேறு மருத்துவமனை**

**வினா எண் 19463—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 13-வது வட்டத்தில் 20 படுக்கைகள் கொண்ட அரசு மகப்பேறு மருத்துவமனை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆர்.கே. நகர் தொகுதி, 13-வது வட்டத்தில் 20 படுக்கைகள் கொண்ட அரசு மகப்பேறு மருத்துவமனை கட்ட செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**173—**

### கூடுதல் மருத்துவ வசதி

**வினா எண் 19546—திரு. கே. சி. கருணாகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் அரசு பொது மருத்துவமனைக்கு, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் இருதய அறுவை சிகிச்சை வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) கோவை அரசு பொது மருத்துவமனையில் மிக விலையுயர்ந்த கருவியான எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி வழங்கும் திட்டம், இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.



**174—**

### சுற்றுப்புறச் சுவர்

**வினா எண் 19786—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, வெள்ளக்கிணறு பேரூராட்சி, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுப்புறச் சுவர் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட தற்போது அரசால் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே சிங்காநல்லூர் தொகுதி, வெள்ளக்கிணறு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

**175—**

### மருத்துவக் கல்லூரிகள்

**வினா எண் 20046—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002 ஆம் ஆண்டு இந்திய மருத்துவக் கழகத்தின் ஒப்புதல் கோரி ஆரம்பிக்கப்பட உள்ள மருத்துவக் கல்லூரிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவைகளின் தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏதுமில்லை.

**176—**

**இரத்த சேமிப்பு வங்கிகள்**

**வினா எண் 20059—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் இரத்த சேமிப்பு வகை தொடர்பான அரசு வங்கிகள் எத்தனை செயல்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் தற்போது 70 அரசு மருத்துவமனைகளில் இரத்த வங்கி செயல்படுகிறது.

**177—**

**சித்த மருத்துவக் கல்வி**

**வினா எண் 20068—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவப் பட்டப்படிப்பு ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவப் பட்டப்படிப்பு தொடங்கும் செயற்திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

**178—**

**சிறப்பு மருத்துவ நிபுணர்கள்**

**வினா எண் 20106—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாலுக்கா அளவிலான மருத்துவமனைகளில் வாரம் ஒரு முறை இருதயம், சிறுநீரகம் போன்ற சிகிச்சை அளிக்க சிறப்பு மருத்துவ நிபுணர்கள் அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இருதயம் மற்றும் சிறுநீரக நோய்களுக்கான சிகிச்சைகள் கூடுமானவரை தாலுக்கா மருத்துவமனைகளிலேயே அளிக்கப்படுகிறது. இந்நோய்களால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தால், சிறப்பு மருத்துவ நிபுணர்களால் தீவிர சிகிச்சை அளிக்க வேண்டி, அருகாமையிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு நோயாளிகள் அனுப்பப்படுகிறார்கள். இதைத் தவிர, பொது சுகாதார மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறையால் இது போன்ற நோய்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள் ஒன்றிய அளவிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

53-85—20

[2003 மே 10

**179—**

**போலி மருத்துவர்கள்**

**வினா எண் 20492—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் போலி மருத்துவர்கள் கண்டறியப் பட்டுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு தண்டனையை அதிகரிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தனியார் மருத்துவமனைகளை முறைப்படுத்த அரசு தமிழ்நாடு தனியார் மருத்துவ அமைப்பு (வரன்முறை) சட்டம், 1997 என்பதனை இயற்றியுள்ளது. இதற்கான தமிழ்நாடு தனியார் மருத்துவ அமைப்புகள் (வரன்முறை) விதிகள் 2002-க்கான மாதிரி வடிவம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பொழுது இப்பொருள் தொடர்பான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**180—**

**பிரேத அறுவைப் பரிசோதனை**

**வினா எண் 21115—திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், ஊட்டியில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் பிரேத அறுவைப் பரிசோதனை மாலை 5.30 மணி



2003 மே 10]

வரை மட்டும் நடைபெற்று வருவதை, விதிமுறையை மாற்றி இரவு 10.00 மணி வரை நீடிக்க அரசு ஒரு சிறப்புத் திட்டத்தை அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ., செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், அரசு தலைமை மருத்துவமனை, உதகமண்டலத்தில் தற்பொழுது பிரேத பரிசோதனை மாலை 5—30 மணி வரை மட்டுமே நடைபெற்று வருகிறது. மேலும் பிரேத பரிசோதனை இயற்கை வெளிச்சத்தில் செய்ய வேண்டியுள்ளதால் இரவு 10 மணி வரை நீடிக்க சிறப்புத் திட்டம் கொண்டு வர இயலாது.

**181—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 23216—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, முளகுமூடு பேரூராட்சியில் கூட்டமாவு என்னும் இடத்தில் அரசுக்கு சொந்தமான இடத்தில் புதிதாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஊராட்சி ஒன்றியம், முளகுமூடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

[2003 மே 10

182—

**ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துதல்**

**வினா எண் 23219—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதியில் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தி, மாற்றித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது செயல்படாத நிலையில் உள்ள வாட்டாத்திக்கோட்டை மற்றும் ஒட்டங்காடு பகுதி நேர அலோபதி மருந்தகங்கள் ஊராட்சி ஒன்றிய நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ளன. இவைகளை ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தி மாற்றும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

183—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 23430—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அம்பலவாணனேந்தலில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை -மாவட்டம், மணல்மேல்குடி ஊராட்சி ஒன்றியம், அம்பலவாணனேந்தல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

184—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 23431—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டம், திருப்புனவாசலில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், திருப்புனவாசல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

185—

**நூல்களை அரசுடைமையாக்குதல்**

**வினா எண் 23522—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆராய்ச்சிப் பேரறிஞர் சதாசிவப்பண்டாரத்தார் நூல்கள் அரசுடைமையாக்கப்படுமா?

[2003 மே 10

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**186—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 23752—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, எலையமுத்தூர் பஞ்சாயத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் எலையமுத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**187—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 23753—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) உடுமலைப்பேட்டை, மானுப்பட்டி பஞ்சாயத்தில் அரசு சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மானுப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**188—**

**குடியிருப்பு வசதி**

**வினா எண் 23756—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சைக் கூடம் மற்றும் எக்ஸ்ரே கதிர் வசதி இவற்றுடன் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் தங்குவதற்குக் குடியிருப்புகளும் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டுமே அறுவை சிகிச்சைக் கூடம் மற்றும் எக்ஸ்ரே வசதி ஏற்படுத்தித் தரப்படுகிறது. கோயம்புத்தூர் மாவட்டம், குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டடங்கள் கட்ட போதுமான இடவசதி இல்லை என்று கூறி நபார்டு வங்கியால் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் கருத்துரு ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

[2003 மே 10

எனவே, அறுவை சிகிச்சைக் கூடம் மற்றும் எக்ஸ்ரே வசதி இவற்றுடன் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் தங்க குடியிருப்புகள் கட்டும் கருத்துரு தற்சமயம் அரசின் பரிசிலனையில் இல்லை.

**189—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 23867—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள வீராணத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், வீராணம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**190—**

**கட்டட வசதி**

**வினா எண் 23874—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி, கபிஸ்தலம் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே அதனை சரிசெய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாபநாசம் தொகுதி கபிஸ்தலம் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டடம் பழுதுகள் சரிசெய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் உள்ளது.

**191—**

**மருத்துவமனை**

**வினா எண் 23969—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் அண்டகுளம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சிறிய மருத்துவமனையாக உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அண்டகுளம் ஆரம்ப சுகாதார நிலையம் 2002-2003-ம் ஆண்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசாணை எண் 210, சுகாதாரம், நாள் 24-10-2001-ல் உத்தரவிடப்பட்டு, பொதுப் பணித் துறையினால் தற்போது கட்டுமானப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2003 மே 10

192—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 24475—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், மிளிதேன் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம் கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், மிளிதேன் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

193—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 24672—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டியில் ஏற்கனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதால் பேரூராட்சி பகுதியில் மேலும் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

194—

## விளையாட்டரங்கம்

**வினா எண் 26803—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் விளையாட்டரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம் மேட்டூரில் விளையாட்டரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

195—

## ஒய்வறை கட்டுதல்

**வினா எண் 27215—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் உள்ள காந்தி விளையாட்டரங்கத்தை மேம்படுத்த, விளையாட்டு வீரர்கள் ஓய்வறை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகரில் உள்ள காந்தி விளையாட்டு அரங்க வளாகத்தில் தற்போது பயிற்சிக்கு வருவோருக்கு உடை மாற்றுவதற்காக ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் தனித்தனியே அறைகள் உள்ளன. இவற்றை தவிர போட்டியில் பங்கேற்கின்ற அணிகள் தங்குவதற்காக அறைகள் உள்ளன. வெளி விளையாட்டு அரங்கத்தில் உள்ள முதல் மாடியில், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்குவதற்காக பெரிய அறைகள் உள்ளன. இது தவிர விளையாட்டு வீரர்கள் ஓய்வறை கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**196—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 27445—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபாலசமுத்திரம் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், கோபாலசமுத்திரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**197—**

### மருத்துவக் கல்லூரி

**வினா எண் 27612—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான கந்தர்வகோட்டையில் மருத்துவக் கல்லூரி ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டையில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**198—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 28789—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் தொகுதி புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கண்ணூர்பட்டியில் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், கண்ணூர்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**199—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவு படுத்துதல்**

**வினா எண் 29093—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சட்டமன்ற தொகுதி, சூழியார் நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை சட்டமன்ற தொகுதியில் சூழியார் நகர் என்று ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2003 மே 10]

**200—**

**கொசுவை ஒழித்தல்**

**வினா எண் 30000—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் கொசுவை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பட்டியல் 25

**1—**

**குடிமைப் பொருட்கள்**

**வினா எண் 28511—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசின் குடிமைப் பொருள்கள் வழங்கும் திட்டம் மாற்றி அமைக்க அரசு முயற்சி எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

பொது விநியோகத் திட்டத்தில் கீழ்க்காணும் மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன:

(1) போலி பில்கள் மூலமாக அரிசி கடத்தப்படுவதைத் தடுப்பதற்காகவும், உண்மையிலேயே அரிசி வாங்க விரும்பும் மக்களுக்கு

[2003 மே 10

உதவி செய்யும் பொருட்டும் அரிசிக்கு மட்டும் கூப்பன் முறை அறிமுகப்படுத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அல்லது அவர்களது குடும்ப அங்கத்தினர்களுக்கு மட்டும் அரிசி வழங்கப்படுவதுடன், கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

(2) ஏழை எளிய மக்களுக்கு உதவும் பொருட்டு குடும்ப அட்டைக்கு வழங்கப்படும் அரிசியின் முதல் 10 கிலோவிற்கு, கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 வீதமும் 10 கிலோவிற்கு மேல் தகுதியினடிப்படையில் வழங்கப்படும் அரிசிக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.6/- என்றும் விலை நிர்ணயிக்கப்பட்டு 1-10-2002-லிருந்து வழங்கப்படுகிறது.

2—

### சாலைகள் மேம்பாடு

**வினா எண் 89—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி கிராம சாலைகளை மேம்பாடு செய்ய நிதிப் பற்றாக்குறை உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவைகளை மேம்பாடு செய்ய குடிசை மாற்று வாரிய திட்டம் போன்றவைகள் மூலம் அரசு நடவடிக்கை எடுக்குமா

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பேரூராட்சி சாலைகளை குடிசை மாற்று வாரிய திட்டம் வழியாக செயல்படுத்த வழிவகை இல்லை எனவும், மேலும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வாயிலான திட்டம் ஏதும் கிராம பஞ்சாயத்துகளில் செயல்படுத்தப்படவில்லை.



2003 மே 10]

3—

### குடிநீர் வசதி

**வினா எண் 95—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியைச் சேர்ந்த கிராமத்தில் மேல்நிலைத் தொட்டி இருந்தும், சரியான விநியோக முறை இல்லாமையால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியைச் சேர்ந்த கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பேரூராட்சிப் பணியாளரால் தற்போது இயக்கப்பட்டும் பகுதிவாரியாக அட்டவணையிட்டு குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டும் வருகிறது.

4—

### பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி

**வினா எண் 400—திரு. டி. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், கடையால் பேரூராட்சி பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், கடையால் பேரூராட்சியில் மேல்பாரூர் வேளார்குடி மற்றும் ஆம்பாடி குடிநீர் திட்டங்களிலிருந்து தினசரி குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

5—

## குடிநீர் வசதி

**வினா எண் 409—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கோத்தகிரி பேரூராட்சி, காத்துக்குலி பகுதியில் உள்ள குடிநீர் பிரச்சினையை தீர்க்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோத்தகிரி பேரூராட்சிக்குட்பட்ட காத்துக்குலி பகுதிக்கு தினந்தோறும் குடிநீர் வழங்கப்படுவதால் தற்போது பிரச்சினை ஏதும் இல்லை.

6—

## ஊராட்சிகள்

**வினா எண் 503—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பொருளாதார பற்றாக்குறையினால் சரிவர இயங்க இயலாத பேரூராட்சிகளை, ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளாக பிரிக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) அதன் விபரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பொருளாதார பற்றாக்குறையினால் உள்ள பேரூராட்சிகளை ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சியாக பிரிக்கும் திட்டம் ஏதும் இல்லை. எனினும் பேரூராட்சியின் மக்கள்தொகை 20 ஆயிரமும் ஆண்டு சாதாரண வருமானம் ரூபாய் 30 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள பேரூராட்சிகளை ஊராட்சியாக வகைப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



7—

## பேருந்து நிலையம்

**வினா எண் 597—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், குத்தாலம் நகரத்தில் உள்ள பேருந்து நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றி விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குத்தாலம் பேரூராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றி விரிவுபடுத்தும் திட்டம் ஏதுமில்லை.

8—

## பயணிகள் நிழற்குடை

**வினா எண் 609—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு நிழற்குடை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு நிழற்குடை அமைக்க கருத்துரு ஏதும் இல்லை.

**9—**

**கால்வாய் வசதி**

**வினா எண் 912—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பேரூராட்சியில் உள்ள அனைத்து தெருக்களுக்கும் கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்துதர அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் பேரூராட்சியில் கட்டப்பட வேண்டிய வடிகால்களின் நீளம் 25.20 கி.மீ. பேரூராட்சியில் நிதி நிலைமை சரியில்லாததால் கட்ட இயலாது.

**10—**

**மகப்பேறு விடுதி**

**வினா எண் 955—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, 6-வது டிவிசன் பெரியகொல்லப்பட்டியில் மகப்பேறு விடுதி இருந்தும் செவிலியர் இல்லாததால் இயங்காமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?



2003 மே 10]

(ஆ) ஆம் எனில், இக்குறைபாடுகளைக் களைய செவிலியர்கள் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெரியகொல்லப்பட்டி துணை சுகாதார நிலைய கட்டடம் (மகப்பேறு விடுதி) பழுதுபட்டிருப்பதால் அங்கு பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் பணியமர்த்தி பணிபுரிய இயலவில்லை.

பெரியகொல்லப்பட்டி துணை சுகாதார நிலையக் கட்டட மராமத்துப் பணிகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்நிலையத்திற்கு மற்ற நகர் நல மையத்தில் இருந்து பணிபுரியும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளரை மாற்றம் செய்து நலப்பணிகள் கவனிக்க உள்ளதால் தனியாக செவிலியர் நியமனம் தேவையில்லை.

**11—**

**குடிநீர்க் குழாய் அமைத்தல்**

**வினா எண் 1043—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சியில் திருச்சி சாலையில் உள்ள தர்காவிற்கு சிறுவாணிக் குடிநீர்க் குழாய் அமைத்துக் கொடுக்க மாநகராட்சியை அரசு கேட்டுக்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தர்கா நிர்வாகத்திடமிருந்து சிறுவாணி குடிநீர்க் குழாய் இணைப்பு கேட்டு இதுவரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் மேற்படி நிர்வாகத்தாரால் சமர்ப்பிக்கப்பட்ட பின் தல ஆய்வு செய்து விதிமுறைகளுக்குட்பட்டு குடிநீர்க் குழாய் இணைப்பு தர நடவடிக்கை எடுக்கப்படும்.

12—

குடிநீர் வசதி

**வினா எண் 1048—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி பேரூராட்சியில் வழங்கப்படும் குடிநீர், குடிக்க தகுதியற்ற நீர் என்று சான்றுகள் வந்த பின்பும் அதே தரமற்ற குடிநீர் வழங்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) அங்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி பேரூராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன. இப்பணி மே 2003-க்குள் முடிந்து மக்கள் பயனுக்கு கொண்டு வரப்படும்.

13—

மின் விளக்குகள்

**வினா எண் 1138—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பதி - காஞ்சிபுரம் அரக்கோணம் மேம்பாலம் சாலையில் நடுப்புறமாக உள்ள மின் விளக்குகள் எரியவில்லை. அதை சரிசெய்ய அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரக்கோணம் காஞ்சிபுரம் மேம்பாலம் சாலையில் எரியாமல் இருந்த மின் விளக்குகள் சரிசெய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் உள்ளன.

14—

குடிநீர் வசதி

**வினா எண் 1163—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகர், காமராஜபுரத்திற்கு வாரத்தில் மூன்று நாள் மட்டும் குடிதண்ணீர் கிடைப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தினமும் குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகர், காமராஜபுரம் மற்றும் மச்சுவாடி பகுதிக்கு குடிநீர் வழங்க தற்போது ஐந்து இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டியும் 10.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டியும் உள்ளன. தற்போது இப்பகுதிகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

15—

தொகுப்பு வீடுகள்

**வினா எண் 1259—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ரங்காபுரம் ஆதிதிராவிடர் காலனியில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ரங்காபுரம் ஆதிதிராவிடர் காலனிக்கு ஏற்கனவே தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதால் நடப்பு நிதி ஆண்டில் தொகுப்பு வீடுகள் கட்டும் பணி அரசு பரிசீலனையில் இல்லை.

**16—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 1275—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சி, காமராஜபுரத்திற்கு தனியாக இந்த நிதியாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**17—**

**சாலை மற்றும் குடிநீர் வசதி**

**வினா எண் 1325—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில் சாலை வசதி மற்றும் குடிநீர் வசதிக்காக, நமக்கு நாமே திட்டத்தில் பொது மக்கள் பணம் செலுத்தியுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில் கொசப்பட்டியில் சாலை வசதி மற்றும் குடிநீர் வசதிக்காக நமக்கு நாமே திட்டத்தில் பொதுமக்கள் பணம் ஏதும் செலுத்தவில்லை.

**18—**

**இந்திரா நினைவு குடியிருப்பு**

**வினா எண் 1335—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001-ம் ஆண்டில் எடப்பாடி தொகுதியில் கட்டப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வீடுகள் எத்தனை?

(ஆ) அதற்கான மதிப்பீட்டு தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதியில் 2000-2001-ம் நிதியாண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வீடுகள் 162 கட்டப்பட்டன. அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.51,84,000/- ஆகும்.

19—

### மயான கொட்டகை

**வினா எண் 1365—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட மயானங்களான 1. சின்ன ஏரி சுடுகாடு 2. புதூர் சுடுகாடு 3. வெள்ளாண்டிவலசை சுடுகாடு 4. கவண்டம்பட்டி சுடுகாடு ஆகிய இடங்களில் எரி ஊட்டும் மயான கொட்டகை அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விபரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

20—

### பாதாள சாக்கடை வசதி

**வினா எண் 1463—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



21—

### சோடியம் ஆவி விளக்கு

**வினா எண் 1481—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், வேலூர் பகுதியிலும், டவுனிலும் மற்றும் புறவழிச் சாலைகளிலும் சோடிய ஆவி விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், வேலூர் பேரூராட்சி பகுதிக்குட்பட்ட டவுனில் சாலையோரங்கள் மற்றும் புறவழிச் சாலையிலும் போதுமான அளவுக்கு சோடியம் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

22—

### குடிநீர் விநியோகம்

**வினா எண் 1490—திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகருக்கு மிக அருகிலுள்ள கருப்பன்பட்டி கண்மாயை சரிசெய்து மழைக்காலங்களில் நீர் சேமித்து, விருதுநகர் நகராட்சி குடிநீர் விநியோகம் அதிகரிக்கும் திட்டம், நகராட்சியால் பரிந்துரை செய்யப்பட்டு அரசின் நிலுவையில் உள்ளதை உடனடியாக நிறைவேற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கருப்பன்பட்டி கண்மாயைச் சரிசெய்யும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் நிலுவையில் இல்லை.

[2003 மே 10

**23—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 1496—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சி, 35-வது வார்டு காமராஜ்புரத்தில் உள்ள பாழடைந்த கென்வின் பள்ளியை இடித்து சமுதாயக் கூடம் கட்டித் தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மாநகராட்சி, 35-வது வார்டு காமராஜ்புரத்திலுள்ள பாழடைந்த கென்வின் பள்ளியை இடித்து சமுதாயக் கூடம் கட்டித் தரும் திட்டம் தற்பொழுது மாநகராட்சி வசம் ஏதுவும் இல்லை.

**24—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 2326—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பனகுடி பேரூராட்சி 4-வது வார்டு, காந்தி தெற்கு தெருவிற்கும், பிரதான சாலைக்கும் இடையே செல்லும் அனுமான் நதியின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



2003 மே 10]

**25—**

**பழைய வீராணம்**

**வினா எண் 2374—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழைய வீராணம் திட்டத்திற்காக முன்பு செலவிட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழைய வீராணம் திட்டத்திற்காக ரூ.23.02 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**26—**

**சாலை வசதி**

**வினா எண் 2536—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் நங்கவல்லி பேரூராட்சி எல்லையில் உள்ள என். பழக்காரனூருக்கு தற்போது பட்டா நிலத்தில் உள்ள சாலையை கையகப்படுத்தி பொது சாலை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கருத்துரு ஏதும் நடவடிக்கையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2003 மே 10

27—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2689—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், கஸ்தூரி ரெங்கபுரம் ஊராட்சி, குட்டி நயினார்குளம் காலனி, பொன்னாத்தி காலனி, புதுக்குறிச்சி காலனி ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், கஸ்தூரி ரெங்கபுரம் ஊராட்சியிலுள்ள குட்டிநயினார் குளம் குடியிருப்புக்கு தற்போது அமைந்துள்ள 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் வழங்கப்படும் குடிநீர் போதுமானதாகும். பொன்னாத்தி மற்றும் புதுக்குறிச்சி ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கும் சேர்த்து குடிநீர்த் திட்டம் நிறைவேற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

28—

### சிமென்ட் தளம்

**வினா எண் 2715—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் பேருந்து நிலையத்திற்கு சிமென்ட் தளம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

29—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2738—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள தையல் குணப்பட்டினம் காலனிக்கு மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட அவசியம் எழவில்லை.

30—

### சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 2828—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2-வது தொகுதி, ஏற்காடு மெயின் ரோடு, 5-வது டிவிசனுக்குட்பட்ட ஏடிசி நகர் செல்லும் வழியில் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை நடப்பாண்டில் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் 2-வது தொகுதி, ஏற்காடு மெயின் ரோடு, 5-வது டிவிசனுக்குட்பட்ட ஏடிசி நகர் செல்லும் வழியில் பழுதடைந்த சாலை சீரமைக்கப்பட்டுள்ளது.

**31—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2867—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட புக்குழி, பழங்குடி இருளர் தெரு, கூவாகம் ஆதி திராவிடர் காலனி ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், திருக்கோணம் ஊராட்சியைச் சேர்ந்த புக்குழி, பழங்குடி இருளர் தெரு, கூவாகம் ஆதிதிராவிடர் காலனி ஆகிய குடியிருப்புகள் ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் பயன்பெற உள்ள குடியிருப்புகளாகும். நடப்பு நிதியாண்டு இறுதியில் இக்கூட்டு குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவுறும்பொழுது இக்குடியிருப்புகளும் முழுமையான குடிநீர் வசதி பெறும்.

**32—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2876—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஆண்டிமடம் தொகுதி, ஸ்ரீராமன் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம் ஒன்றியத்தைச் சார்ந்த ஸ்ரீராமன் கிராமத்திற்கு ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் (2002-03) கூடுதலாக 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டுள்ளது.

ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் 4/2003-ல் முடிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**33—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 2879—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, அக்னேஸ்வரம் மடத்து தெரு மற்றும் வில்லாநத்தம் பழங்குடி இருளர் காலனி ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, அக்னேஸ்வரம், மடத்து தெரு மற்றும் வில்லாநத்தம் பழங்குடி இருளர் [illegible] ஆகிய குடியிருப்புகள் அனைத்தும் தற்பொழுது [illegible]லாக்கத்திலுள்ள ஆண்டிமடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில்

சேர்க்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டு இறுதியில் இக்கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவுறும்போது மேற்குறிப்பிட்ட குடியிருப்புகள் முழுமையான குடிநீர் வசதி பெறும்.

**34—**

**இலவசத் தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 2902—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சியில் வசிக்கும் அருந்ததியர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியில் வசிக்கும் அருந்ததியர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு நடப்பு நிதியாண்டில் தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யும் வாய்ப்பு இல்லை.

**35—**

**இலவசத் தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 2974—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சியில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு நடப்பு நிதியாண்டில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை.

**36—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 3237—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி, பூங்கா நகரில் குடிநீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி, பூங்கா நகரில் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

**37—**

**குடிநீர் மற்றும் சாலை வசதி**

**வினா எண் 3244—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டியிலுள்ள திருவதிகை 16-வது வார்டு உறையூரான் சந்தில் வசிக்கும் நகர மக்களுக்கு குடிநீர் வசதி மற்றும் சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சி திருவதிகை 16-வது வார்டு உறையூரான் சந்தில் வசிக்கும் நகர மக்களுக்கு குடிநீர் வசதி மற்றும் சாலை வசதி செய்யப்பட்டுள்ளது.

**38—**

**கட்டட வசதி**

**வினா எண் 3325—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தேர்வு நிலைப் பேரூராட்சி பழைய கட்டடத்திலேயே இடப் பற்றாக்குறையுடன் இயங்குவதால், புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டிணம் தேர்வு நிலைப் பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்க இயலாது.

**39—**

**கழிவுநீர்க் கால்வாய்கள்**

**வினா எண் 3334—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதியை உள்ளடக்கிய மெயின் காலனியைச் சேர்ந்த பாக்ரஉசேன் வீதி எண் 2, 3, 4-ல் கழிவுநீர்க் கால்வாய்கள் அமைக்கவில்லையாதலால், சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டு நோய் பரவுவதைக் களைய அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரணாம்பட்டு தொகுதியை உள்ளடக்கிய மெயின் காலனியைச் சேர்ந்த பாக்ரஉசேன் வீதி எண் 2, 3, 4-ல் கழிவுநீர்க் கால்வாய்கள் அமைக்கவில்லையாதலால், சுகாதாரக் கேடுகள் ஏற்படா வண்ணம் பேரூராட்சியில் சுகாதாரப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**40—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 3345—திரு.லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி நகராட்சி, 10-வது வார்டு, பசும்பொன் நகர் பகுதியில் குடிநீர் பற்றாக்குறையுள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) விரைவில் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி நகராட்சி, 10-வது வார்டு பசும்பொன் நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**41—**

**கழிவுநீர்க் கால்வாய்**

**வினா எண் 3346—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி, 10-வது வார்டு பசும்பொன் நகர் பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி, 10-வது வார்டு பசும்பொன் நகர் பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் கட்டும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

42—

**பாதாள சாக்கடை**

**வினா எண் 3355—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட திருமுல்லைவாயில் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படத் துவங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2005-ம் ஆண்டுக்குள் பணிகள் முடிக்கப்பட்டு செயல்படத் துவங்கும்.

43—

**சோடியம் ஆவி விளக்கு**

**வினா எண் 3356—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட திருமுல்லைவாயில் பகுதியில் சோடியம் ஆவி விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2003 மே 10]

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆவடி நகராட்சி, திருமுல்லைவாயில் பகுதியில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

44—

**குடிநீர் வசதி**

**வினா எண் 3410—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டியிலுள்ள சிரங்குப்பம் தொடக்கப் பள்ளியின் பின்புறம் சுமார் 25 குடும்பங்கள் எந்த அடிப்படை வசதியுமின்றி குறிப்பாக, குடிநீர் வசதியின்றி இருப்பதால், இவ்வசதி கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

45—

**காவிரி குடிநீர்**

**வினா எண் 3457—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் கிடைக்கும் காவிரி குடிநீர் ஒரே சீராக கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சி நிதிநிலைமையில் மிகவும் பின்தங்கியுள்ளதால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து நாளொன்றுக்கு 14 இலட்சம் லிட்டர் குடிநீர் பெற்று பொதுமக்களுக்கு 3 நாட்களுக்கு ஒரு முறை அத்தியாவசிய தேவைக்கு போதுமான குடிநீர் விநியோகம் செய்து வருகிறது.

**46—**

**காவிரி குடிநீர்**

**வினா எண் 3491—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, மாநகராட்சி 5-வது டிவிசனில் இதுவரை காவிரி குடிநீர் வழங்கப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், காவிரி குடிநீர் எப்போது வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி 2வது தொகுதி, 5-வது டிவிசன் பகுதிகளில் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் வீட்டு இணைப்புகள் மூலமாகவும், பொது குடிநீர் குழாய்கள் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

**47—**

**துப்புரவுப் பணிகள்**

**வினா எண் 3492—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் துப்புரவுப் பணிகள் முழுமையாக நடைபெறவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?



2003 மே 10]

(ஆ) ஆம் எனில், எப்போது சரி செய்யப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் துப்புரவுப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. குப்பைகள் தேக்கம் எதுவும் இல்லை.

**48—**

**சுற்றுச் சூழல் பாதுகாப்பு**

**வினா எண் 3496—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் அருகில் மாநகராட்சி குப்பைகளை கொட்டுவதால் சுற்றுச் சூழல் கெடுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், குப்பை கொட்டுவதை நிறுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் 2-வது தொகுதிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் குப்பைகள் கொட்டப்படுவதில்லை.

**49—**

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் வசதி**

**வினா எண் 3524—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி 2-வது டிவிசனில் ஜாகீர் அம்மாபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவர், செவிலியர் மற்றும் மருந்துகள் இல்லாதது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மருத்துவர்கள், செவிலியர்கள் நியமனம் மற்றும் மருந்துகள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஜாகீர் அம்மாபாளையம் பகுதி மக்களுக்கு தாய், சேய் நலம், குடும்ப நலம், தடுப்பூசிப் பணிகள் மற்றும் இதர மருத்துவ சிகிச்சை தொடர்பான நலப்பணிகள் அனைத்தும் சேலம் மாநகராட்சியில் இயங்கும் சூரமங்கலம் தாய், சேய் மற்றும் நகர் நல மையத்தின் மருத்துவ அலுவலர், செவிலியர் மற்றும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) சூரமங்கலம் நகர் நல மையத்தில் இருந்து ஒரு பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் ஜாகீர் அம்மாபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையப் பணிகள் அனைத்தும் கவனிக்கப்படுகின்றன. சூரமங்கலம் மைய மருத்துவ அலுவலர் இந்த ஆரம்ப சுகாதார நிலையப் பணியையும் சேர்த்துக் கவனித்து வருவதால் தனியாக மருத்துவ அலுவலர் மற்றும் செவிலியர் நியமனம் தேவையில்லை.

**50—**

### குடிநீர் வழங்கல்

**வினா எண் 3674—டாக்டர் திருமதி. ஆ. கருப்பாயி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதியில் குடிநீரின்றி மக்கள் அவதிப்படுவதால் காவிரி குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம், உலக வங்கி உதவியால் 1994 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இது ஒரு





வரையறுக்கப்பட்ட திட்டமாகும். இதன்படி இத்திட்டத்தின் மூலம் காவிரி குடிநீர் புதுக்கோட்டை நகராட்சி, இலுப்பூர் பேரூராட்சி, கீரனூர் பேரூராட்சி, அன்னவாசல் பேரூராட்சி மற்றும் 15 வழியோர குடியிருப்புகளுக்கு மட்டும் குடிநீர் வழங்க இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை, விரிவுபடுத்தி குளத்தூர் சட்டமன்ற தொகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க இதில் வழிவகை இல்லை.

**51—**

### குடிநீர் வசதி

**வினா எண் 3687—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் ஒன்றியம், பேரட்டி ஊராட்சி அருள் நகரில் குடிநீர் வசதி இல்லையென்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் ஒன்றியம், பேரட்டி ஊராட்சியிலுள்ள அருள் நகரில் (சேனிடோரியம்) குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு 3/2002-ல் ஊராட்சியிடம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**52—**

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 3732—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், நெடுகுளா ஊராட்சி, பேரகணியில் குடிநீர் தட்டுப்பாடு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் பிரச்சினையை தீர்க்க அரசு எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம் நெடுகுளா ஊராட்சி, பேரகணியில் பகுதியில் உள்ள 350 மக்கட்தொகைக்கு தினசரி நபர் ஒன்றுக்கு 30 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**53—**

**பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி**

**வினா எண் 3757—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி; இடையப்பட்டி மக்களுக்கு [illegible] வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியம், வாகவாசல் ஊராட்சியைச் சார்ந்த இடையப்பட்டி குடியிருப்பில் தற்சமயம் மூன்று கையிறைப்பான்கள் மற்றும் குழாய் விஸ்தரிப்பு மூலம் அத்தியாவசிய தேவைகளுக்குப் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

கூடுதல் குடிநீர் வசதிக்கு, ஊரக குடிநீர்த் திட்ட கோட்பாடுகளுக்குட்பட்டு, தேவை, தகுதி மற்றும் நிதி ஆதார அடிப்படையில் இக்குடியிருப்புக்கு வரும் நிதியாண்டுகளில் புதிய மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்ற பரிசீலிக்கப்படும்.



**54—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 3760—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, மேட்டுப்பட்டி பஞ்சாயத்தில் எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வசதி இல்லை?

(ஆ) குடிநீர் வசதி இல்லாத கிராமங்களுக்கு எப்போது குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியம், மேட்டுப்பட்டி ஊராட்சியில் மொத்தம் 10 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் தற்சமயம் 5 குடியிருப்புகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 5 குடியிருப்புகளுக்கு அத்தியாவசிய தேவைகளுக்கு போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஐந்து குடியிருப்புகளுக்கு, ஊரக குடிநீர்த் திட்ட கோட்பாடுகளுக்கு உட்பட்டு தேவை, தகுதி மற்றும் நிதி ஆதாரா அடிப்படையில் வரும் நிதியாண்டுகளில் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்ற பரிசீலிக்கப்படும்.

**55—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 3892—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், மலையனூர் ஊராட்சியில் மோட்டார் மூலம் வீட்டிற்கு தண்ணீர் எடுப்பதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், மலையனூர் ஊராட்சியில் எந்த ஒரு வீட்டிலும் மோட்டார் மூலம் குடிநீர் எடுக்கப்படவில்லை.

**56—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 4087—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கடலூர் மெயின்ரோடு (பழைய ரோடு) அமைந்துள்ள சக்கரபாணி நகருக்கு குடிநீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கடலூர் மெயின் ரோடு (பழைய ரோடு) அமைந்துள்ள சக்கரபாணி நகருக்கு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.



2003 மே 10]

**57—**

**குடிநீர்க் குழாய்**

**வினா எண் 4120—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட மோட்டூர் அருள்மிகு காளியம்மன் திருக்கோயிலுக்கு அருகிலுள்ள மக்கள், குடிநீருக்காக மிகவும் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு குடிநீர்க் குழாய் அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட மோட்டூர் அருள்மிகு காளியம்மன் திருக்கோயிலுக்கு அருகிலும், முன்புறமும் தலா ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு அவற்றின்மூலமாக அப்பகுதி மக்களுக்குப் போதுமான குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

**58—**

**திருமண மண்டபம்**

**வினா எண் 4231—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே குமரலிங்கத்தில் கிழக்கு குமரலிங்கத்தின் கீழ்புறம் அமராவதி ஆற்றின் அருகே பெரிய திருமண மண்டபம் கட்ட அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**59—**

**திண்காரை சாலை**

**வினா எண் 4247—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே குமரலிங்கம் பேரூராட்சியில் ஆத்தோரம் வெங்கட் ராமசாமி கோயிலிலிருந்து மேற்கு அக்ரஹாரம் வழியாக ஆனைமலை பூலாங்கிணர் சாலை வரை 7 மீட்டர் அகலத்திற்கு திண்காரை (கான்கிரீட் சாலை) அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை அருகே குமரலிங்கம் பேரூராட்சியில் ஆத்தோரம் வெங்கட் ராமசாமி கோயிலிலிருந்து மேற்கு அக்ரஹாரம் வழியாக ஆனைமலை பூலாங்கிணர் சாலை வரை 7 மீட்டர் அகலத்திற்கு திண்காரை சாலை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**60—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 4270—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், வேப்பிலான்குளம் ஊராட்சி, ரெங்கநாதபுரம் கிராமம், தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், வேப்பிலான்குளம் ஊராட்சி, ரெங்கநாதபுரம் குடியிருப்பை தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட நான்குநேரி-திசையன்விளை மற்றும் 342 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்க எந்தவித தொழில்நுட்ப சாத்தியக் கூறுகளும் இல்லை. இக்குடியிருப்பை மேற்கண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்துடன் இணைப்பது பரிசீலனையில் இல்லை. இக்குடியிருப்பிற்கு ஒரு கையிறைப்பான் மூலம் அத்தியாவசிய தேவைக்கு வேண்டிய அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**61—**

**கழிப்பிட வசதி**

**வினா எண் 4273—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி பேரூராட்சி 9, 10-வது வார்டு பகுதி, சத்யா நகர் கக்கன் தெருவில் வசிக்கும் மக்களுக்குக் கழிப்பிட வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

[2003 மே 10

**62—**

### திண்காரை சாலை

**வினா எண் 4330—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 13வது வார்டில் பழனி ஆண்டவர் கோவில் வடக்கு தெரு, முனுசாமி கோயில் தெரு ஆகிய இடங்களில் திண்காரை சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 13-வது வார்டில் பழனி ஆண்டவர் கோவில் வடக்கு தெரு, முனுசாமி கோயில் தெரு ஆகிய இடங்களில் திண்காரை சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

**63—**

### சாலை அமைத்தல்

**வினா எண் 4332—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் பேரூராட்சியில் 3வது வார்டு, அகிலாண்ட பார்வதி அம்மன் கோயில் தெரு, 10-வது வார்டு, செங்குளம் தெற்கு தெரு ஆகிய இடங்களில் திண்காரை சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் பேரூராட்சியில் 3வது வார்டு அகிலாண்ட பார்வதி அம்மன் கோயில் தெரு, 10வது வார்டு செங்குளம் தெற்கு தெரு ஆகிய இடங்களில் திண்காரை சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

**64—**

### பணகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 4334—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களுக்காக பணகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) துரித நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களுக்கான பணகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஒப்பந்த காலம் 18 மாதங்களென நிர்ணயிக்கப்பட்டு, ஒப்பந்த உடன்படிக்கை 31-05-2002 அன்று மேற்கொள்ளப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகளை ஒப்பந்த காலத்திற்குள் முடித்து, மக்கள் பயனுக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2003 மே 10

65—

**திண்காரை சாலை**

**வினா எண் 4342—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 1வது வார்டு சுடலைசாமி கோவில் தெருவில் திண்காரை சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) இப்பணி நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

66—

**சாலை வசதி**

**வினா எண் 4343—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 6வது வார்டு மூப்பிடாதி அம்மன் கோவில் தெருவிலிருந்து பெருமாள் கோவில் தெரு வரை திண்காரை சாலை அமைப்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



2003 மே 10]

67—

**திண்காரை சாலை வசதி**

**வினா எண் 4344—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 7வது வார்டு காந்திஜி தெருவில் திண்காரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 7வது வார்டு காந்திஜி தெருவில் திண்காரை சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

68—

**சாலை அமைத்தல்**

**வினா எண் 4345—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 5வது வார்டு மேல் ஓமநல்லூர் மூப்பிடாதி அம்மன் கோவில் தெருவில் திண்காரை சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[2003 மே 10

69—

**சாலை வசதி**

**வினா எண் 4346—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 6வது வார்டில் பிள்ளையார் கோவிலில் இருந்து நீர்த்தொட்டி வரை திண்காரை சாலை அமைப்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

70—

**சாலை அமைத்தல்**

**வினா எண் 4347—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 8வது வார்டு, கஸ்தூரிபாய் தெருவில் திண்காரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*



2003 மே 10]

71—

**சாலை வசதி**

**வினா எண் 4348—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 3வது வார்டு பாரதியார் தெருவில் திண்காரை சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

72—

**திண்காரை சாலை**

**வினா எண் 4356—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 10வது வார்டு செங்குளம் நடுத் தெரு, 4வது வார்டு கொத்தங்குளம் இந்திரா காலனி, 9வது வார்டு, செங்குளம் ஆகிய இடங்களில் திண்காரை சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

[2003 மே 10

73—

### சாலை அமைத்தல்

**வினா எண் 4359—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, முக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சியில் ராமசாமி கோவில் சந்து, தேவமாதா கோவில் மேலத் தெரு, காந்தி மைதானம் சந்து, கிழக்கு சின்னையா தெரு ஆகிய இடங்களில் திண்காரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

74—

### திண்காரை சாலை

**வினா எண் 4364—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 8வது வார்டு மூப்பிடாதி அம்மன் கோவில் தெருவில் திண்காரை சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*



2003 மே 10]

75—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 4365—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரத்தில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க மேலும் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் ஏற்படுத்தப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சிக்கு தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 1981 முதல் குடிநீர்த் திட்டம் பயனில் உள்ளது. இத்திட்டத்திலிருந்து இப்பேரூராட்சிக்குத் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், புதிய குடிநீர்த் திட்டத்திற்கான கோரிக்கை எதுவும், உள்ளாட்சி அமைப்பிடமிருந்து பெறப்படவில்லை.*

*(ஆ) எழவில்லை.*

76—

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 4366—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி யூனியனில் நந்தன் காலனி, காதபுரம், பிரம்பு கலிங்கநகர், காமராஜ் நகர், இருதயபுரம், சின்னயன்குளம், கிருஷ்ணாபுரம், புதுப்பட்டி ஏ.டி. காலனி,*

குத்தாலிங்கபுரம் ஆகிய கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் வழங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாகுடி யூனியனிலுள்ள (1) நந்தன் காலனி குடியிருப்பிற்கு 2001-02ஆம் நிதியாண்டில் சிறிய மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

(2) காதபுரம், இருதயபுரம், கிருஷ்ணாபுரம், காமராஜ் நகர் ஆகிய குடியிருப்புகளுக்கு நடப்பு நிதியாண்டில் சிறிய மின்விசைத் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.

(3) பிரம்பு கலிங்கநகர் குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்ற பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

(4) புதுப்பட்டி ஆதிதிராவிடர் காலனிக்கு குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு, பராமரிப்பிற்காக 29-5-2002 அன்று ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குத்தாலிங்கபுரம், சின்னயன்குளம் ஆகிய குடியிருப்புகளில் தற்போது அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், வரும் நிதியாண்டுகளில் தகுதி, தேவை மற்றும் நிதியாதார அடிப்படையில் குடிநீர்த் திட்டங்கள் பரிசீலிக்கப்படும்.

**77—**

**ஐந்தாம் கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 4367—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் யூனியனிலுள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கான கீழப்பாவூர் மற்றும் ஐந்தாம் கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) இப்பணியைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் யூனியனிலுள்ள கீழப்பாவூர் நகரப் பேரூராட்சி, கடையம் மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களைச் சேர்ந்த குடியிருப்புகளுக்கான ஐந்தாம் கட்டளை மற்றும் 31 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் அனைத்தையும் 31-12-2003-க்குள் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

**78—**

**ஆழ்குழாய்க் கிணறு**

**வினா எண் 4368—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, வீரவநல்லூர் நகரப் பஞ்சாயத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2003 மே 10

79—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 4370—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடையில் 2.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி பத்தமடை நகரப் பேரூராட்சிக்கு தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 1981 முதல் குடிநீர்த் திட்டம் பயனில் உள்ளது. இத்திட்டத்திலிருந்து இப்பேரூராட்சிக்குத் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், புதிய குடிநீர்த் திட்டத்திற்கான கோரிக்கை எதுவும் உள்ளாட்சி அமைப்பிடமிருந்து பெறப்படவில்லை.

80—

### திண்காரை சாலை வசதி

**வினா எண் 4374—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 14வது வார்டு அம்மன் கோவில் தெற்கு தெருவில் திண்காரை சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 14வது வார்டு அம்மன் கோவில் தெருவில் திண்காரை சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

81—

### தார்ச் சாலை

**வினா எண் 4375—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, முக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சியில் சுப்பையா தெரு, ஆதிமூலனார் தெரு, பாலகன் தெரு, சாஸ்தான் கோயில் தெரு ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, முக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சியில் சுப்பையா தெரு, ஆதிமூலனார் தெரு, பாலகன் தெரு, சாஸ்தான் கோயில் தெரு ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

82—

### சுய உதவிக் குழுக்கள்

**வினா எண் 4676—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) 2000 ஆம் ஆண்டில் கிராமப்புறத்தில் உள்ள மகளிர் மேம்பாட்டிற்காக சேலம் மாவட்டத்தில் எத்தனை சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன?

(ஆ) அவற்றில் எத்தனை நல்ல முறையில் இயங்கி வருகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 2000 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் மகளிர் சுய முன்னேற்றத்திற்காக 1146 சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

(ஆ) 1146 குழுக்களுமே நன்றாக இயங்கி வருகின்றன.

**83—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 4696—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசினால் கட்டிக் கொடுக்கப்பட்ட இடிந்து பழுதுபட்டுப்போன தொகுப்பு வீடுகளைப் புதுப்பிக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தரம் வாய்ந்த வீடுகள் கட்ட அரசினால் வழங்கப்படும் தொகையை உயர்த்துவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் குடியிருக்கும் பழுதடைந்த தொகுப்பு வீடுகளைப் புதுப்பித்துத் தர அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) பதில் எழவில்லை.



2003 மே 10]

**84—**

**தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

**வினா எண் 4868—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**85—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 4979—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கீழ்மாம்பட்டு ஊராட்சியில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கீழ்மாம்பட்டு ஊராட்சிக்கென 1996-97-ல் 16 தொகுப்பு வீடுகளும், 2000-01-ல் 20 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, நடப்பு ஆண்டில் கூடுதலாக தொகுப்பு வீடுகள் கட்டித்தர வாய்ப்பு இல்லை.*

**86—**

**சாலை மற்றும் குடிநீர் வசதி**

**வினா எண் 5073—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி நகரில் வி.எஸ்.பி. நகரில் சாலை வசதி மற்றும் குடிநீர் வசதி செய்து தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**87—**

**தார்ச் சாலை**

**வினா எண் 5147—திரு. கா. கந்தசாமி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியிலிருந்து அணையட்டி வரையுள்ள சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**88—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 5375—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் நகரப் பஞ்சாயத்தில் தார்ச் சாலைகள் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**89—**

**திண்காரை சாலை வசதி**

**வினா எண் 5379—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 12 வது வார்டு சந்தன மாரியம்மன் கோயில் தெருவில் திண்காரை சாலை அமைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

*(ஆ) ஆம் எனில், உடனடியாக இப்பணி துரிதப்படுத்தப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

[2003 மே 10

**90—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 5394—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, ஏ.பி. நாடானூர் முருகாண்டியூர் கிராமம், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டும் பணி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முடிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், ஏ.பி. நாடானூர் ஊராட்சியைச் சேர்ந்த முருகாண்டியூர் குடியிருப்பில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு பராமரிப்பிற்காக 9-1-2002 அன்று ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

**91—**

### குடிநீர் வசதி

**வினா எண் 5396—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், புதுக்கிராமம் பகுதிக்கு குடிநீர் தேக்கத் தொட்டி மூலம் ஆற்றுத் தண்ணீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், புதுக்கிராமம் குடியிருப்பிற்கு 2000-2001 ஆம் ஆண்டில் நந்தன்தட்டையில் அமைக்கப்பட்டுள்ள நீருறிஞ்சிக் கிணற்றிலிருந்து தாமிரபரணி ஆற்றுநீர் ஏற்கெனவே அக்குடியிருப்பில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் ஏற்றப்பட்டு, பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

**92—**

### கைப்பம்புகள் அமைத்தல்

**வினா எண் 5400—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சியில் அனைத்து வார்டுகளிலும் கைப்பம்புகள் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயற்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**93—**

### தார்ச் சாலைகள்

**வினா எண் 5401—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, முக்கூடல் நகரப் பஞ்சாயத்தில் தார்ச் சாலைகள் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, முக்கூடல் நகரப் பஞ்சாயத்தில் தார்ச் சாலைகள் அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

**94—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 5449—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், கருப்புகிளார் ஊராட்சி, காடுவாகுடி கிராமத்தில் வசித்துவரும் சுமார் 50 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், கருப்புகிளார் ஊராட்சியில் இதுவரை 72 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கூடுதல் தொகுப்பு வீடுகள் கட்ட செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

**95—**

**குடிநீர் இணைப்புக் கட்டணம்**

**வினா எண் 5489—திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் பேரூராட்சி, அவனியாபுரம் பேரூராட்சியில் வீட்டுக்கு குடிநீர் இணைப்புக்கு கட்டணமாக ரூ.4000/- வசூலிப்பதை ரூ.2,000/- ஆகக் குறைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பரங்குன்றம் பேரூராட்சி, அவனியாபுரம் பேரூராட்சியில் நகர்புற குடிநீர்த் திட்டத்தின்கீழ் கடன் பெற்று குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கான கடனை திருப்பி செலுத்த வேண்டும். மேலும் மின் கட்டணம், பராமரிப்புக் கட்டணம் போன்றவற்றையும் சமாளிக்க வேண்டும். எனவே, வீட்டுக்கு குடிநீர் இணைப்புக்கு கட்டணமாக ரூ.4,000/- வசூலிப்பதை ரூ.2,000/- ஆகக் குறைக்க இயலாது.

**96—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 5509—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கானாங்குப்பம் கிராமத்திலுள்ள ஏழை குடும்பங்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கானாங்குப்பம் கிராமம் அடங்கிய கீழ்மாம்பட்டு ஊராட்சிக்கு 1996-97-ல் 16 தொகுப்பு வீடுகளும் மற்றும் 2000-2001-ல் 20 தொகுப்பு வீடுகளும் கட்டித் தரப்பட்டுள்ளன.

**97—**

**கூடுதல் வைப்புத் தொகை**

**வினா எண் 5525—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

உள்ளாட்சி மன்றங்கள் பொதுமக்களிடமிருந்து தண்ணீர் வரியுடன் கூடுதல் வைப்புத் தொகையும் வசூலிப்பதை தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமையைக் கருதி தண்ணீர் வரியுடன் கூடுதல் வைப்புத் தொகை வசூலிப்பதை தடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**98—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 5535—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, சத்தியவாடி கிராமம், காட்டு காலனியில் ஆழ்துளை கிணறும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஒன்றியத்தைச் சார்ந்த சத்தியவாடி கிராமம், காட்டு காலனிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் தற்போது வழங்கப்படுகிறது. எனவே, சத்தியவாடி கிராமம், காட்டுக் காலனியில் ஆழ்துளை கிணறும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**99—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 5547—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

வந்தவாசி தொகுதி, கீழ்வில்லிவனம் கிராமத்தில் ஆழ்துளை கிணறும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம், கீழ்வில்லிவனம் குடியிருப்பிற்குத் திறந்தவெளி கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் தற்போது குடிநீர் வழங்கப்படுவதால், மேலும் ஒரு ஆழ்துளை கிணற்றுடன் கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை.

**100—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 5549—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, துறையூர் கிராமத்தில் ஆழ்துளை கிணறும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். துறையூர் கிராம குடியிருப்பிற்கு, வரும் நிதியாண்டுகளில் ஊரகக் குடிநீர்த் திட்ட குடியிருப்பிற்கு, ஊரக குடிநீர்த் திட்ட கோட்பாட்டின்படி தகுதி, தேவை மற்றும் நிதி ஆதாரத்திற்கேற்ப ஆழ்துளை கிணறுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப் பரிசீலனை செய்யப்படும்.

**101—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 5550—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

வந்தவாசி தொகுதி, பையூர் ஊராட்சி, மதுரா, திடீர்புரம் கிராமத்தில் ஆழ்துளை கிணறும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். திடீர்புரம் குடியிருப்பிற்கு வரும் நிதியாண்டுகளில் ஊரகக் குடிநீர் கோட்பாட்டின்படி தகுதி, தேவை மற்றும் நிதி ஆதாரத்திற்கேற்ப இக்குடியிருப்பிற்கு ஆழ்துளை கிணறுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க பரிசீலனை செய்யப்படும்.

**102—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 5577—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டையங்காடு உக்கடை பகுதி மக்களுக்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டையங்காடு உக்கடை பகுதி மக்களுக்கு 2000-2001 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் மூலம் தற்பொழுது வழங்கப்பட்டுவரும் குடிநீர் அளவு போதுமானதாக உள்ளது. எனவே புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.



2003 மே 10]

**103—**

**ஆழ்குழாய் கிணறு**

**வினா எண் 5578—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, வெள்ளாளங்காடு கீழ்பாதி, பழுக்காடு, ஆண்டாங்கொல்லை ஆகிய இடங்களில் புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ருத்திரசிந்தாமணி ஊராட்சியைச் சார்ந்த வெள்ளாளங்காடு கீழ்பாதி, ஆண்டாள்கொல்லை மற்றும் பழுக்காடு ஆகிய மூன்று குடியிருப்புகளுக்கு முறையே 1989 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**104—**

**தொகுப்பு வீடு**

**வினா எண் 5694—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் வாட்டார் ஊராட்சி, வடக்கு வாட்டார் ஆதிதிராவிடர் தெருவிற்குத் தொகுப்பு வீடு கட்டும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோட்டூர் ஒன்றியம், வாட்டார் ஊராட்சிக்கு 1987-88-ல் 20 வீடுகளும் 1996-97-ல் 15 வீடுகளும் ஆதிதிராவிட மக்களுக்கு

கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் தொகுப்பு வீடுகள் கட்ட தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**105—**

**தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

**வினா எண் 5695—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் 75 அக்கரைக் கோட்டகம் ஊராட்சி, கரம்பகுடி மேல்சாலை கிராமத்தில் சுமார் 40 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் 75 அக்கரைக் கோட்டகீம் ஊராட்சியில் 1987-88-ல் 20 தொகுப்பு வீடுகளும் 1996-97-ல் 20 தொகுப்பு வீடுகளும் ஆக மொத்தம் 40 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எனவே, மேற்படி ஊராட்சியில் 2001-2002 ஆம் ஆண்டில் வீடு கட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**106—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் சீரமைத்தல்**

**வினா எண் 5889—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், பள்ளக்கால், புதுக்குடி ஊராட்சி, பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், பள்ளக்கால் புதுக்குடி ஊராட்சியின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் பழுது ஏதும் இல்லை. எனவே, சீரமைப்பது குறித்த கேள்வி எழவில்லை.

**107—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 5896—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜெல்லிபட்டி கிராமத்தில் அரசு மூலம் ஆதிதிராவிடர் காலனியில் கட்டிய தொகுப்பு வீடுகள் பழுது அடைந்துள்ளதைச் சரி செய்து தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள நிதி நெருக்கடியின் காரணமாக உடுமலைப்பேட்டை வட்டம், ஜெல்லிபட்டி கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் காலனியில் கட்டிய தொகுப்பு வீடுகளைத் தற்போது பழுது பார்க்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**108—**

**தொகுப்பு வீடுகளைச் செப்பனிடுதல்**

**வினா எண் 5958—திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆ. திருமலாபுரம் ஊராட்சி, இந்திரா காலனியில் பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்த தொகுப்பு வீடுகளை செப்பனிடுவது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**109—**

### பொதுக் குடிநீர்க் குழாய்

**வினா எண் 6334— திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, மாவடி நடுத்தெரு, திருவள்ளுவர் தெரு, மேல 4 ஆம் தெரு, மேல 3 ஆம் தெரு ஆகிய பகுதிகளில் பொதுக் குடிநீர்க் குழாய் அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொதுக் குடிநீர்க் குழாய் அமைக்கப்பெற்று பணி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

**110—**

### தொகுப்பு விடுகள்

**வினா எண் 6474—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், சிங்கம்பாறை இந்திரா காலனிவாழ் மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாப்பாக்குடி ஒன்றியம், சிங்கம்பாறை இந்திரா காலனி, முக்கூடல் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியாகும். ஊரக வளர்ச்சித்



துறை மூலம் பேரூராட்சி பகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு விதிகளில் இடமில்லை.

**111—**

### தொகுப்பு விடுகள்

**வினா எண் 6633—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, அண்ணாநகர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு கட்டிக் கொடுத்த தொகுப்பு வீடுகள் பழுது பார்க்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**112—**

### தார்ச் சாலை

**வினா எண் 6778— திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் நகர புதிய பேருந்து நிலையத்திலிருந்து பழைய பேருந்து நிலையத்திற்கு செல்ல தார்ச் சாலை போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தாராபுரம் நகர புதிய பேருந்து நிலையத்திலிருந்து பழைய பேருந்து நிலையத்திற்கு தார்ச் சாலை போடும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

**113—**

### தொகுப்பு விடுகள்

**வினா எண் 6785—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, வெள்ளியம்மாள்புரம் கிராமத்தில் உள்ளவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெங்கடாம்பட்டி ஊராட்சிக்கு 2001-2002 ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர்களுக்கு 6 தொகுப்பு வீடுகளும் பிற இனத்தவருக்கு 4 தொகுப்பு வீடுகளும் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**114—**

**தொகுப்பு விடுகள் கட்டுதல்**

**வினா எண் 6792—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, கடையம் ஊராட்சி ஒன்றியம், அ.பெ. நாடானூர் ஊராட்சி, சிவஞானபுரம் கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆ.பெ. நாடானூர் ஊராட்சிக்கு 2001-2002 ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர்களுக்கு 5 தொகுப்பு வீடுகளும் பிற இனத்தவருக்கு 5 தொகுப்பு வீடுகளும் ஒதுக்கப்பட்டு வீடுகட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**115—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 6942—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

வந்தவாசி தொகுதி, இரும்பிலி கிராமத்தில் புதிதாக ஆழ்துளை கிணறும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை —**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளாறு தொகுதி, தெள்ளார் ஒன்றியம், இரும்பிலி கிராம குடியிருப்பிற்கு 15,000 லிட்டர் கொள்ளளவு மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மூலம் அத்தியாவசிய தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, இக்குடியிருப்பிற்கு புதிதாக ஆழ்துளைக் கிணறும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**116—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 6951—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, விராலிப்பட்டி ஊராட்சி, மேல கொத்தம்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், விராலிப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த மேலகொத்தம்பட்டி (கொத்தம்பட்டி) குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது திட்டப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. விரைவில் திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்படும்.

[2003 மே 10

117—

குடிநீர் விநியோகம்

**வினா எண் 6952—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தாறு கோட்டை பகுதியில் சிவந்தம்பட்டி கிராமத்திலிருந்து கந்தர்வக்கோட்டைக்கு குடிநீர் கொண்டுவரும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கந்தர்வக்கோட்டை ஊராட்சியைச் சார்ந்த கந்தர்வக் கோட்டைக்கு தற்சமயம் 5 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் 19 கையிறைப்பான்கள்மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால் சிவந்தம்பட்டி கிராமத்திலிருந்து இக்குடியிருப்புக்குக் குடிநீர் கொண்டுவரும் புதிய திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

118—

குடிநீர் இணைப்பு

**வினா எண் 6975—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோயில் நகராட்சியில் வைப்புத் தொகை பெற்ற பின்பும் திருப்பூர் குமான் காலனி, முல்லைநகர் போன்ற பகுதிகளில் குடிநீர் இணைப்பு வழங்காதது ஏன்?



2003 மே 10]

(ஆ) காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

(இ) இவர்களுக்கு அரசாங்கம் சொல்லும் தீர்வு என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) சங்கரன்கோவில் நகராட்சியில் திருப்பூர் குமரன் காலனி, முல்லைநகர் போன்ற பகுதிகள் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவைச் சேர்ந்ததால், அப்பகுதிகளுக்கு நகராட்சியால் குடிநீர் இணைப்பு வழங்க விதிகளில் இடமில்லை.

119—

நிதி ஒதுக்கீடு

**வினா எண் 6978—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூராட்சிகளுக்கு 1999-2000, 2000-2001-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்படாமல் வளர்ச்சித் திட்டப் பணிகள் நடைபெறாததால் இவ்வாண்டில் மேற்கண்ட ஆண்டுகளுக்கான நிலுவை தொகையுடன் சேர்த்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

120—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல்

**வினா எண் 7148—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, திருவொற்றியூர் நகரத்தில் 37,12,43 மற்றும் 9வது வட்டங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டைக் களைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

121—

**பைப்பாஸ் சாலை**

**வினா எண் 7179—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சேலம் மாநகராட்சியில் திருமணிமுத்தாறு திட்டம் பொதுப்பணித் துறை அனுமதியுடன் நடைபெறுகிறதா?

(ஆ) இத்திட்டம், சேலம் மாநகரால் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, தொலைநோக்கோடு கந்தம்பட்டி மாற்று வழி பைபாஸ் வரை நீட்டிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் திருமணிமுத்தாறு திட்டம் பொதுப்பணித் துறையின் அனுமதியுடன் நடைபெறுகிறது. இத்திட்டத்தினை நீட்டிப்பு செய்வதற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

122—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தோட்டி**

**வினா எண் 7323—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஒன்றியம், உறுமன்குளம் ஊராட்சி, பெட்டைக்குளம் மேலத்தெருவில் வசிக்கும் மக்களுக்கு



மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், உறுமன்குளம் ஊராட்சி, பெட்டைக்குளம் குடியிருப்பிற்கு பெட்டைக்குளத்தின் ஓர் பகுதியாகிய ஹரிஜன் காலனியில் அமைந்துள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் ஏற்றி விநியோகம் செய்யும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. விரைவில் திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

123—

**குடிநீர்த் தொட்டி கட்டுதல்**

**வினா எண் 7326—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உறுமன்குளம் ஊராட்சி, பெட்டைக்குளம் அரிசன காலனி பகுதிக்கு குடிநீர்த் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், உறுமன்குளம் ஊராட்சி, பெட்டைக்குளம் ஆதிதிராவிடர் காலனிக்கு புதிய நீருறிஞ்சுக் கிணற்று நீராதாரத்துடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு 21-10-2002 முதல் ஊராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

124—

**சாலை வசதி**

**வினா எண் 7383—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், ஆவடி நகராட்சியில் கோயில் பதாகை கிராமப் பகுதியில் சாலை வசதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், ஆவடி நகராட்சியிலுள்ள கோயில் பதாகை கிராமப் பகுதியில் தார்ச் சாலைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**125—**

**மேல்நிலைத் தொட்டி அமைக்கும் பணி**

**வினா எண் 7522—திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி தொகுதி, சங்கரப்பேரியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி தொகுதி, சங்கரப்பேரி குடியிருப்பிற்கு தூத்துக்குடி ஒன்றியத்திலுள்ள 82 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**126—**

**கூட்டுக் குடிநீர் திட்டம்**

**வினா எண் 7597—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) திருநெல்வேலி மாவட்டம், மானூர் மேலநீலிதநல்லூர், சங்கரன்கோவில் மற்றும் குருவிகுளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் நடவடிக்கையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட மானூர், மேலநீலிதநல்லூர், சங்கரன்கோவில் மற்றும் குருவிகுளம் ஒன்றியங்களிலுள்ள 417 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு ரூ. 84.50 கோடிக்கு திட்ட விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இம்மதிப்பீட்டிற்கு வாரியக் குழு மற்றும் அதிகாரம் அளிக்கப்பெற்ற குழு ஆகியவற்றின் பரிந்துரை பெறப்பட்டு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பெற்று பணிகள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**127—**

**அடிப்படை வசதிகள்**

**வினா எண் 7615—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரிலுள்ள பதிவு செய்யப்படாத வீட்டுமனை பிரிவு வீடுகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பதிவு செய்யப்படாத வீட்டுமனை பிரிவு வீடுகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க நகராட்சி சட்டத்தில் வழிவகை இல்லை. ஆகவே திருப்பூர் நகரிலுள்ள பதிவு செய்யப்படாத வீட்டுமனை பிரிவுகளுக்கு அடிப்படை வசதி செய்ய இயலவில்லை.

**128—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 7619—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகருக்கு முதல் மற்றும் இரண்டாவது குடிநீர்த் திட்டங்கள் மூலம் வருகின்ற குடிதண்ணீர் முறையாக விநியோகிப்பது இல்லை என்பது உண்மையா?

(ஆ) அதன் விவரங்கள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

திருப்பூர் நகரில் முதல் மற்றும் இரண்டாவது குடிநீர்த் திட்டத்தில் விநியோகிக்கப்படும் குடிநீர், மேல்நிலைத் தொட்டி மற்றும் நிலத்தடித் தொட்டி ஆகியவற்றிலிருந்து 5 கி.மீ. தூரம் வரை விநியோகிக்கப்படுகிறது. ஆனால் நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து சுமார் 1 கி.மீ. வரை உள்ள இணைப்புகளுக்கு அதிக நேரமும் ஒரு கி.மீ. முதல் மூன்று கி.மீ. வரை அதைவிடக் குறைந்த நேரமும் கடைசிப் பகுதியில் இரண்டு மணி நேரம் மட்டுமே விநியோகிக்கப்படுவதால் சீரான விநியோகம் கொடுக்க முடியாத நிலை உள்ளது.

**129—**

**பின்தங்கிய வகுப்பினருக்குத் தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 7773—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொகுப்பு வீடுகள் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு பேரூராட்சியில் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**130—**

**சுடுகாடு அமைத்தல்**

**வினா எண் 7959—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் மணிமுத்தாறு நதியின் கிழக்குப் பகுதியில் சுடுகாடு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் இல்லை.

**131—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 7987—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி சட்டமன்றத் தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, கோதண்டராமபுரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சிக்குட்பட்ட கோதண்டராமபுரம் குடியிருப்பிற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆற்று நீர் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன. இத்திட்டத்தை ஜூலை 2003-க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**132—**

### நிதி உதவி

**வினா எண் 8005—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி மருத்துவமனைகளுக்குப் போதிய நிதி உதவி வசதி இல்லாததால் பராமரிப்பின்றி உள்ளதால் அரசே ஏற்று நடத்த முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சி மருத்துவமனைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து, போதிய பராமரிப்புடன் நல்ல முறையில் நடத்தி வருகிறது.

**133—**

### ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள்

**வினா எண் 8271—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை ஒன்றியம், அகரகீரங்குடி கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம், அகரகீரங்குடி ஊராட்சியில் 1997-98 ஆம் ஆண்டு 20 தொகுப்பு வீடுகளும், 2000-2001 ஆம் ஆண்டு 10 தொகுப்பு வீடுகளும், ஆக மொத்தம் 30 தொகுப்பு வீடுகள் ஆதிதிராவிடர் மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**134—**

### குடிநீர் விநியோகம்

**வினா எண் 8414—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், சல்லக்குளம் கிராமத்தில் குடிதண்ணீர் உப்பு நீராகவும், மாசுபட்டும் உள்ளதால் பழனியாண்டவர் கோவில் நீர்த்தேக்கத் திட்டம் அல்லது பெரியார் கால்வாய்த் திட்டத்திலிருந்தாவது குடிநீர் விநியோகிக்க வழிவகை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சல்லக்குளம் கிராமம், வாடிப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட ஒரு பகுதியாகும். இங்கு விநியோகிக்கப்படும் குடிநீர் குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது. மற்றும் அப்பகுதி மக்களின் தேவைக்குப் போதுமான அளவுக்குக் குடிநீர் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. வாடிப்பட்டி பேரூராட்சிக்கான மேம்பாட்டுத் திட்டம் ஒன்று நிறைவேற்ற ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளும்போது பழனி ஆண்டவர் கோவில் நீர்த்தேக்கத் தொட்டித் திட்டம் மற்றும் பெரியார் கால்வாய்த் திட்டம் ஆகியவையும் பரிசீலிக்கப்படும்.

[2003 மே 10

**135—**

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 8432—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலச்செவல் பேரூராட்சி - கீழச்செவல் நாடார் தெரு - அரிஜன தெரு, தேசமாணிக்கம் சன்னதித் தெரு, கான்சாபுரம் மயானச் சாலை ஆகிய இடங்களில் பாலம் அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**136—**

**பொதுக் குடிநீர்க் குழாய்**

**வினா எண் 8439—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவ நல்லூர் பேரூராட்சியில் 4-வது வார்டு, கடையம்மன் கோவில் தெருவில் ஒரு பொதுக் குடிநீர்க் குழாய் அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் 4-வது வார்டு, கடையம்மன் கோவில் தெருவில்



2003 மே 10]

போதுமான தண்ணீர் வழங்கப்படுவதால் பொதுக் குடிநீர்க் குழாய் அமைக்க அவசியம் எழவில்லை.

**137—**

**தார்ச் சாலை**

**வினா எண் 8446—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபால சமுத்திரம் பேரூராட்சி—சந்தன மாரியம்மன் கோயில் தெரு, பிரானசேரியில் முப்பிடாதிபதி அம்மன் கோயில் தெரு மற்றும் ஆதிதிராவிடர் கீழத் தெரு ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தார்ச் சாலை அமைக்கும் பணி முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

**138—**

**தார்ச் சாலை வசதி**

**வினா எண் 8449—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபால சமுத்திரம் பேரூராட்சி—ஓமநல்லூர் சாலை மற்றும் ஊருக்குள் செல்லும் சாலை, தென்னம் பிள்ளை சாலை ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, கோபால சமுத்திரம் பேரூராட்சி—ஓமநல்லூர் சாலை மற்றும் ஊருக்குள் செல்லும் சாலை தென்னம் பிள்ளை சாலை ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் இப்பணியை ஏற்பதற்கு இல்லை.

**139—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 8451—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோபால சமுத்திரம் பேரூராட்சி, 10-வது வார்டு, செங்குளம் சாலையில் தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* கோபால சமுத்திரம் பேரூராட்சி, 10-வது வார்டு, செங்குளம் சாலையில் தார்ச் சாலை அமைக்கும் செயற் குறிப்பு ஏதுமில்லை.

**140—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 8465—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

*(அ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம், 15 வது வார்டில் வசிக்கும் சுமார் 50 அருந்ததியர் குடும்ப மக்களுக்கு இந்த நிதியாண்டில் தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* தாரமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சிப் பகுதியாகும். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி பேரூராட்சிப் பகுதிகளில் தொகுப்பு வீடுகள் கட்டித் தர வழிவகை செய்யப்படவில்லை.

**141—**

**மருந்துகள் விநியோகம்**

**வினா எண் 8640—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகராட்சி மருத்துவமனைகளில் மருந்துகள் இல்லாமல் செயல்பாடற்று இருப்பதை அரசு அறியுமா?

*(ஆ)* மாநகராட்சி மருத்துவமனைகளை அரசே ஏற்று நடத்த முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மாநகராட்சி மருத்துவமனைகளுக்கு 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.2,00,000/-க்கு மருந்துகள் வாங்கப்பட்டு, அந்த மருந்துகள் 2000-2001 வரை வழங்கப்பட்டு வந்தன. மேலும் தற்போது மருத்துவமனைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து போதிய பராமரிப்புடன் நல்லமுறையில் நடந்து வருகின்றன.

*(ஆ)* மாநகராட்சி மருத்துவமனைகளை அரசு ஏற்று நடத்துவதற்கான செயற்குறிப்புகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 மே 10

142—

### அடிப்படை வசதிகள்

**வினா எண் 8772—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி பேரூராட்சி, ஆதித்தனார் நகருக்கு அடிப்படை வசதிகளாகக் குடிநீர், சாலை, தெரு விளக்கு செய்து கொடுக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி பேரூராட்சியில் நிதிநிலைக்கேற்ப அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும். பொது நிதியில் ஓர் ஆழ்குழாய் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தெரு விளக்குகள் 5 எண்ணிக்கை புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இப்பகுதியில் சாலை போடுவதற்குப பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் இப்பணியைச் செய்ய இயலாது.

143—

### ஆழ்குழாய்ப் பம்பு அமைத்தல்

**வினா எண் 8774—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், தெற்கு வீரவநல்லூர், காந்தி நகர் மேற்குப் பகுதியில் புதிய ஆழ்குழாய்ப் பம்பு அமைத்துத் தர அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2003 மே 10]

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட காந்தி நகர் என்பது தெற்கு வீரவநல்லூர் ஊராட்சியைச் சார்ந்த ஒரு பகுதியாகும். செங்குளம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய்கள் பதித்து, காந்தி நகர் பகுதியில் நான்கு பொது நல்லிகள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், காந்தி நகர் பகுதிக்கு 2001-2002-ல் ஒரு கையிறைப்பானும் அமைத்துக் கொடுக்கப்பட்டு தற்பொழுது பயனில் உள்ளது. எனவே, புதிய ஆழ்குழாய் அமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

144—

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 8781—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சான் கிராமத்திற்கு ஆற்றுக் குடிநீர் வழங்கும் திட்டத்தைத் துரிதமாக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சான் குடியிருப்பிற்கு குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு பராமரிப்புக்காக 16-05-2002 அன்று ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

145—

### கூடுதல் நீர்த்தேக்கத் தொட்டிகள்

**வினா எண் 8783—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், திருவிருந்தான்பள்ளி மற்றும் ஓடைக்கரையில் கூடுதல் நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், திருவிருந்தான்பள்ளி ஊராட்சியைச் சேர்ந்த திருவிருந்தான்பள்ளி குடியிருப்பிற்கும், கரிசல்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த ஓடைக்கரைக் குடியிருப்பிற்கும் தனித் தனியாக ஆழ்குழாய்க் கிணற்று நீராதாரம் அமைத்து 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நடப்பாண்டில் நிறைவேற்றப்படவுள்ளது.

**146—**

### குடிநீர் வசதி

**வினா எண் 8799—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், சிங்கம் பாறை, இந்திரா காலனிக்குக் குடிநீர் கிடைக்க அரசு செயல்பாட்டில் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிங்கம் பாறை, இந்திரா காலனி ஆகிய குடியிருப்புகள் முக்கூடல் தேர்வுநிலைப் பேரூராட்சியைச் சேர்ந்தவை. சிங்கம் பாறை பகுதிக்குத் தற்போது உள்ளாட்சி அமைப்பின் மூலம் போதுமான



அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்திரா காலனி பகுதிக்கு உள்ளாட்சி அமைப்பின் மூலம் இரண்டு பொது நல்லிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், அனைத்து வீட்டு இணைப்புகளும் குழி அமைத்துக் (Pit tap) குடிநீர் எடுப்பதால் இந்திரா காலனிக்குப் பொது நல்லிகளில் நீர் வருவது இல்லை. எனவே, இந்தக் குழிகளை (Pit tap) அகற்றி பொது நல்லிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தவிர இந்திரா காலனியில் ஒரு கையிறைப்பான் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. முக்கூடல் பேரூராட்சிக்கென குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**147—**

### குடிநீர் விநியோகம்

**வினா எண் 8800—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், காசிநாதபுரம் மக்களுக்கு சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி நகரியம், காசிநாதபுரம் குடியிருப்பு, புதுப்பட்டி ஊராட்சியில் பாப்பாக்குடி ஒன்றியத்தில் அடங்கியுள்ள ஒரு தனிக் குடியிருப்பு ஆகும். மேற்படி காசிநாதபுரம் குடியிருப்பு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்ட மதிப்பீட்டில் இடம் பெறாததால் இக்குடியிருப்பிற்கு சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்க சாத்தியக்கூறு இல்லை.

[2003 மே 10

148—

**தார்ச் சாலை**

**வினா எண் 8804—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, அம்பாசமுத்திரம் பிரதான சாலை, மாவடி மேல்பக்கம் கடைசி வரை தார்ச் சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி, அம்பாசமுத்திரம் பிராதான சாலை, மாவடி மேல்பக்கம் கடைசி வரை தார்ச் சாலை அமைக்கும் பணி எடுக்கப்பட்டு 30-4-2002ஆம் தேதி பணி முடிக்கப்பட்டுள்ளது.

149—

**தார்ச் சாலை வசதி**

**வினா எண் 8805—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சி, வாணியக்குடி தெரு, தெற்கு ரத வீதி, பெரியசாமி காலனி, கொழுமடை, புதுக் காலனிப் பகுதி ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2003 மே 10]

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சி, வாணியக்குடி தெரு, தெற்கு ரத வீதி, பெரியசாமி காலனி, கொழுமடை, புதுக் காலனிப் பகுதி ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் நடவடிக்கையில் இல்லை.

150—

**தார்ச் சாலை**

**வினா எண் 8808—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலச்செவல் பேரூராட்சி, தெற்கு ரத வீதி தென்புறம் முதல் காடாபேரிகுளம் கரை முடிய தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலச்செவல் பேரூராட்சி, தெற்கு ரத வீதி தென்புறம் முதல் காடாபேரிகுளம் கரை முடிய தார்ச் சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

151—

**தார்ச் சாலை வசதி**

**வினா எண் 8809—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சி, கீழச்செவல் காந்தி தெரு, கீழச்செவல் பாலம் முடிய இல்லத்தார் வடக்குத் தெரு ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சி, கீழச்செவல் காந்தி தெரு, கீழச்செவல் பாலம் முடிய இல்லத்தார் வடக்குத் தெரு ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க கருத்துரு ஏதும் இல்லை.

**152—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 8811—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலச்செவல் பேரூராட்சி, சாத்தான் தெரு, தேசமாணிக்கம் சன்னதித் தெரு ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மேலச்செவல் பேரூராட்சி, சாத்தான் தெரு, தேசமாணிக்கம் சன்னதித் தெரு ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் நடவடிக்கையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**153—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 8813—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, கம்பர் தெரு, ராஜாஜி தெரு, திருவள்ளுவர் தெரு, பள்ளிவாசல் சன்னதித் தெரு ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**154—**

**தார்ச் சாலை வசதி**

**வினா எண் 8817—திரு பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தேர்வுநிலைப் பேரூராட்சி, விவசாய வங்கி மேல்புறமிருந்து ராஜாஜி தெரு தொடக்கம் வரை தார்ச் சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தேர்வு நிலைப் பேரூராட்சி விவசாய வங்கி மேல்புறமிருந்து ராஜாஜி தெரு தொடக்கம் வரை தார்ச்சாலை அமைக்க கருத்துரு ஏதும் நடவடிக்கையில் இல்லை.

**155—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 8818—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, புத்தாராயாதவர் தெரு, மேல 3-ம் தெரு, கீழ 3-ம் தெரு ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி, புத்தாராயாதவர் தெரு, மேல 3 ஆம் தெரு, கீழ 3 ஆம் தெரு ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் நடவடிக்கையில் இல்லை.

**156—**

**தார்ச் சாலை**

**வினா எண் 8821—திரு. பி.எச் பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, ராமசாமி கோவில் மேல வடக்குத் தெரு, நேதாஜி நகர், ஆலடி மணி நகர் பகுதி ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**157—**

**குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 9078—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) திருவொற்றியூர் நகரத்தில் 5 குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**158—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 9082—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர், சுமார் 3 லட்சம் மக்கள்தொகை கொண்ட நகராட்சியில் மேலும் 20 இலட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்க அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் நகராட்சியில் சென்னைப் பெருநகர குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 15 லட்சம் லிட்டர் குடிநீர் பெற்று விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கூடுதலாக 20 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க திட்டம் எதுவும் தற்போதைக்கு இல்லை.

**159—**

**பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி**

**வினா எண் 9095—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சி, 21 மற்றும் 14வது வார்டுகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமல் நேரடி நீர் வழங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இதை மாற்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க "ஊர்க்காடு குடிநீர்த் திட்டம்" உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அம்பாசமுத்திரம் பேரூராட்சி, 21 மற்றும் 14 வது வார்டுகளில் ஊர்க்காடு, கோடரங்குளம் திட்டம் மூலமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**160—**

**குடிநீர் மேல்நிலைத் தொட்டி**

**வினா எண் 9120—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், கொணவக்கரை ஊராட்சி, சக்கத்தா பகுதியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.



2003 மே 10]

**161—**

**கூடுதல் துப்புரவுப் பணியாளர்கள்**

**வினா எண் 9124—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**162—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்**

**வினா எண் 9417—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூத்தன்குளி ஊராட்சி, நா.கூத்தன்குளி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், கூத்தன்குளி ஊராட்சி, நா.கூத்தன்குளி கிராமத்திற்குக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு பராமரிப்புக்காக 24-6-2002 அன்று ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

[2003 மே 10

163—

### மாற்று இடம்

**வினா எண் 9649—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 6-வது வட்டம், அண்ணாநகர் பகுதி மக்கள் கடற்கரை ஓரமாக பாதுகாப்பற்ற நிலையில் வாழ்வதால் மாற்று இடம் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போதைக்கு இல்லை.

164—

### அங்காடிகள் அமைத்தல்

**வினா எண் 10103—திரு. பீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் நகராட்சி, சேனடோரியத்தில் திண்டுக்கல் நெடுஞ்சாலை ஓரத்தில் தொழுநோய் மருத்துவமனையின் சுகாதாரத்தைக் கெடுக்கும் வகையில் உள்ள மீன் வியாபாரிகளுக்கு வேறு இடத்தில் அங்காடிகள் கட்டித்தரும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



2003 மே 10]

165—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 10162—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, குறிப்பேடு கிராம மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

166—

### குடிநீர் வசதி

**வினா எண் 10163—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, எரமலூர் கிராம மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அத்தகைய செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

**167—**

**கூடுதல் குடிநீர் வசதி**

**வினா எண் 10169—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, உக்கல் ஊராட்சி, உயர்நிலைப் பள்ளி தெருவில் ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**168—**

**மாநகராட்சி வருவாய்**

**வினா எண் 10332—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் எத்தனை தனியார் திரையரங்குகள் உள்ளன?

(ஆ) இதன் மூலம் 2000-2001 ஆம் ஆண்டில் மாநகராட்சிக்கு வருவாய் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் மொத்தம் 44 திரையரங்குகள் உள்ளன. இதன் மூலம் மாநகராட்சிக்கு 2000-2001-ல் கிடைக்கப் பெற்ற வருவாய் ரூ.2,72,21,873/-.



**169—**

**கூட்டுக் குடிநீர்**

**வினா எண் 10429—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், தளவாய் கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தைச் சேர்ந்த தளவாய் கிராமம், கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு அரியலூர், செந்துறை, வேப்பூர் ஆகிய மூன்று ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள ஆய்வு செய்யப்பட்டு இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

**170—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 10432—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், அங்கனூர், பழைய அங்கனூர் ஆகிய இரு கிராமங்களுக்கும் வெள்ளாற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தைச் சேர்ந்த அங்கனூர் மற்றும் பழைய அங்கனூர் குடியிருப்புகள் கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு அரியலூர், செந்துறை, வேப்பூர் ஆகிய மூன்று ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள ஆய்வு செய்யப்பட்டு இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

171—

குடிநீர் வசதி

**வினா எண் 10549—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட அம்பலவாணன்பேட்டை ஊராட்சியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின் கீழ் மக்களின் பங்கேற்புடன்கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அம்பலவாணன்பேட்டை ஊராட்சி கிராம குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மூலமாக மக்கள் பங்கேற்புத் தொகை பெறப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2003 மே 10]

172—

கடன் உதவி

**வினா எண் 10599—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (IRDP) பேரூராட்சிகளில் வாழும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கடனுதவி வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

173—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10758—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகூர்கூடல் ஊராட்சி, அவ்வை நகர் கிராமத்திற்கு குடிநீர் வசதி இல்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், நாகூர் கூடல் ஊராட்சி, அவ்வை நகர் குடியிருப்பிற்கான 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய

[2003 மே 10

குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு தற்போது பொது மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் 7-5-2002-ல் ஊராட்சியிடம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**174—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 10879—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆனைகுளம் ஊராட்சி, சின்னம்மாள்புரம் கிராமத்திற்கு தனியாக மேல்நிலைத் தொட்டி கட்டி தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், ஆனைகுளம் ஊராட்சி, சின்னம்மாள்புரம் குடியிருப்பில் மேல்நிலைத் தொட்டி கட்டி அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு திட்டம் பராமரிப்பிற்காக ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**175—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 10890—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், தெற்கு வள்ளியூர் ஊராட்சிக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களிலும் குடிநீர்ப் பிரச்சினை அதிகமான அளவில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், தெற்கு வள்ளியூர் ஊராட்சிக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களிலும் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**176—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 10897—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், லெவிஞ்சிபுரம் ஊராட்சி, மகாராஜபுரம் கிராமத்திற்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், லெவிஞ்சிபுரம் ஊராட்சி, மகாராஜபுரம் குடியிருப்பிற்கு லெவிஞ்சிபுரம் ஊராட்சி அலுவலகம் அருகே உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அத்தியாவசியத் தேவைக்காக குடிநீர் வழங்கப்படுகிறது. இக்குடியிருப்பு நாங்குனேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் முழுவதுமாக முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

177—

### குடிநீர் விநியோகம்

**வினா எண் 10899—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், கண்ணநல்லூர் ஊராட்சி, தளவாய்புரம் கிராமத்தில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகட்டி குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், கண்ணநல்லூர் ஊராட்சி, தளவாய்புரம் குடியிருப்பிற்கு சிறு மின் விசைத்திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

178—

### அடிப்படை வசதிகள்

**வினா எண் 11066—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி, 14-வது வார்டு பகுதிக்குட்பட்ட நந்தன்குளம் கிராம மக்களுக்குக் குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு வசதி ஆகியன ஏற்படுத்திக்கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி 14-வது வார்டு பகுதிக்குட்பட்ட நந்தன்குளம் கிராம மக்களுக்கு குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு வசதி ஆகியன ஏற்கெனவே செய்து தரப்பட்டுள்ளது.



179—

### தொகுப்பு விடுகள்

**வினா எண் 11209—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பளிஞ்சரஅள்ளி மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பளிஞ்சரஅள்ளி மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு நடப்பு ஆண்டில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர வாய்ப்பில்லை. அடுத்துவரும் ஆண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் இங்கு தொகுப்பு வீடுகள் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

180—

### இலவசத் தொகுப்பு விடுகள்

**வினா எண் 11243—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, ஒகேனக்கல் அருகில் காட்டில் உள்ள இருளர்களுக்கு (மலைவாழ் மக்கள்) இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**181—**

### இலவசத் தொகுப்பு இல்லங்கள்

**வினா எண் 11270—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, நடுமேட்டுக் குப்பத்தில் இலவச தொகுப்பு இல்லங்கள் கட்டித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, நடுமேட்டுக் குப்பத்தில் இலவச தொகுப்பு வீடுகள் நடப்பு ஆண்டில் கட்டித்தர வாய்ப்பு இல்லை. இருப்பினும் அடுத்த நிதியாண்டில் இவ்வூராட்சிக்கு தொகுப்பு வீடுகள் வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**182—**

### சாலை வசதி

**வினா எண் 11795—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேரன்மகாதேவி பேரூராட்சி, பாரதிதாசன் தெரு, கடையத் தெரு, ராமசாமி கோவில் மேல தெற்குத் தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**183—**

### சிமெண்ட் சாலை

**வினா எண் 11805—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேரன்மகாதேவி தேர்வு நிலைப் பேரூராட்சி, பாரதியார் தெரு, லாலாமியான் தெரு, பழைய வாணி ஸ்டுடியோ முதல் பள்ளிவாசல் வரையுள்ள தெருக்களில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**184—**

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 11854—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், முப்பிலியூர், கட்டளையூர், கோதண்டராமபுரம், ஏ.பி. நாடானூர், ஐந்தாங்கட்டளை, சொக்கநாதன்பட்டி, தெற்கு மாடத்தூர், சிவஞானபுரம் ஆகிய கிராமங்களுக்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள முப்பிலியூர், கட்டளையூர், கோதண்டராமபுரம், ஐந்தாங்கட்டளை, சொக்கநாதன்பட்டி, தெற்கு மடத்தூர், சிவஞானபுரம் ஆகிய குடியிருப்புகளுக்கு, ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் கடனா ஆற்று நீர் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசிலனையில் உள்ளன. கடையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஏ.பி. நாடானூர் குடியிருப்பிற்கான குடிநீர்த் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு ஊராட்சிவசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

**185—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 11862—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோவிந்தபேரி, இடையான்குளம், வடக்கு இடையான்குளம், புதத்தான் குடியிருப்பு, புலவன் குடியிருப்பு ஆகிய கிராமங்களுக்கு பணக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், கோவிந்தபேரி, இடையான்குளம், வடக்கு இடையான்குளம், புதத்தான் குடியிருப்பு, புலவன் குடியிருப்பு ஆகிய குடியிருப்புகள் பணக்குடி, வள்ளியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பயனடைய உள்ளன. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. 9/2003-ல் அனைத்துப் பணிகளும் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது.



**186—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 11867—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கீழஉப்பரணி, மேலஉப்பரணி, ஓடக்கரை, கரிசல்பட்டி, பிள்ளைகுளம், பட்டன்காடு, வேலையார்குளம் ஆகிய கிராமங்களுக்கு பணக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட பணக்குடி-வடக்கு வள்ளியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேரன்மகாதேவி தொகுதி கீழ உப்பரணி, மேல உப்பரணி, ஓடக்கரை, கரிசல்பட்டி, வேலையார்குளம் பட்டன்காடு மற்றும் பிள்ளையார் குளம் ஆகிய குடியிருப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. 30-11-2003-க்குள் முடித்து பயனுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

**187—**

**மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி**

**வினா எண் 11893—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சிக்குட்பட்ட மடத்தூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, தெற்கு மடத்தூர் ஊராட்சி, தெற்கு மடத்தூர் கிராமத்திற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் *30,000* லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படவுள்ளது. இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் ஜூலை 2003-க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**188—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 11894—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், அடைச்சாணி ஊராட்சிக்குட்பட்ட கீழ அரிசன தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, அடைச்சாணி ஊராட்சிக்குட்பட்ட கீழ அரிசன தெரு என்பது அடைச்சாணி குடியிருப்பிலுள்ள ஒரு தெருவாகும். அடைச்சாணி குடியிருப்பிலுள்ள *10,000* லிட்டர்



2003 மே 10]

கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அடைச்சாணி கிராமத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, கீழ அரிசன தெருவிற்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட கருத்துரு இல்லை.

**189—**

**பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தொட்டி**

**வினா எண் 12014—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கடையம் ஊராட்சி ஒன்றியம், அ.பெ. நாடானூர் ஊராட்சி, சொக்கலிங்கபுரத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், அ.பெ. நாடானூர் பஞ்சாயத்து, சொக்கலிங்கபுரம் குடியிருப்பிற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் *10,000* லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படவுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன. விரைவில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**190—**

**குடிநீர்த் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 12015—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, மேல்கோவிலூத்து கிராமத்திற்கு குடிநீர்த் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, மேல்கோவிலூத்து குடியிருப்பிற்கு 2001-2002-ல் ரூ.4.30 இலட்சம் மதிப்பீட்டில் 10000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**191—**

**பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தொட்டி**

**வினா எண் 12021—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, மைலப்பபுரம் கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த (மயிலபுரம்) மைலப்பபுரம், குடியிருப்புக்கு ரூ.4.73 இலட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் 2002-2003 ஆம் நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**192—**

**குடிநீர்**

**வினா எண் 12035—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, அடைச்சாணி பஞ்சாயத்து ஒன்றியம், கே.சா. அரிசனத் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கே.சா. அரிசனத் தெரு என்பது அடைச்சாணி குடியிருப்பிலுள்ள ஒரு தெருவாகும். அடைச்சாணி குடியிருப்பிலுள்ள 100000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அடைச்சாணி கிராமத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, கே.சா. அரிசனத் தெருவில் தனியாக புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது குறித்த கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**193—**

**மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 12042—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் பஞ்சாயத்து ஒன்றியம், சோடியலிங்கபுரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் சோடியலிங்கபுரம் என்ற பெயரில் எந்த ஒரு

கிராமமுமில்லை. ஆனால், ஏ.பி. நாடானூர் பஞ்சாயத்தில் சொக்கலிங்கபுரம் என்ற குடியிருப்பு உள்ளது. ஏ.பி. நாடானூர் சொக்கலிங்கபுரம் குடியிருப்பிற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 10000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படவுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன. விரைவில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**194—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 12065—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, வெங்கடாம்பட்டி பஞ்சாயத்து ஒன்றியம், கோவிலூத்து கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, வெங்கடாம்பட்டி ஊராட்சி, கோவிலூத்து குடியிருப்பில் தற்போது 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் கருத்துரு இல்லை.

**195—**

### குடிநீர் வசதி

**வினா எண் 12067—திரு. பி.எச். பால்மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், குத்தப்பாஞ்சான் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், குத்தப்பாஞ்சான் ஊராட்சியில் மேலகுத்தப்பாஞ்சான், கீழக்குத்தப்பாஞ்சான் என இரண்டு குடியிருப்புகள் உள்ளன. இவ்விரு குடியிருப்புகளுக்கும் பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்று நீர் வழங்க பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

**196—**

### நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 12068— திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், மருதமுத்தூர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், மருதமுத்தூர் கிராமம், ஆதிதிராவிடர் காலனி குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

197—

## குடிநீர்த் தொட்டி கட்டுதல்

**வினா எண் 12069—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், மைலாப்புரம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், மைலாப்புரம் ஊராட்சி, மைலாப்புரம் குடிநீர் திட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டு 27-5-2002 அன்று ஊராட்சியிடம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

198—

## குடிநீர் வசதி

**வினா எண் 12071—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, ஐந்தாம்கட்டளை பஞ்சாயத்து ஒன்றியம், சொக்கநாதன்பட்டி கட்டளை குடியிருப்பு கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**



**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், ஐந்தாம்கட்டளை ஊராட்சி, சொக்கநாதன்பட்டி, கட்டளையூர் ஆகிய குடியிருப்புகளுக்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் சொக்கநாதன்பட்டி குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி அதிலிருந்து சொக்கநாதன்பட்டி, கட்டளையூர், சங்கரலிங்கபுரம் மற்றும் முத்தம்மாள்புரம் ஆகிய நான்கு குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்பட உள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

199—

## குடிநீர் வசதி

**வினா எண் 12072—திரு. பி.எச். பால்மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, வெங்கடாம்பட்டி பஞ்சாயத்து ஒன்றியம், மேலகோவிலூத்து கிராமத்திற்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, மேலகோவிலூத்து குடியிருப்பிற்கு 2001-2002 ஆம் நிதியாண்டில் 10000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த் தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**200—**

**மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல்**

**வினா எண் 12073—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, தெற்கு மாடத்தூர் பஞ்சாயத்து ஒன்றியம், தெற்கு மாடத்தூர் கிராமத்தில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்கு மாடத்தூர் ஊராட்சிக்குட்பட்ட மாடத்தூர் கிராமத்திற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படவுள்ளது. இக்கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு உள்ளது. இத்திட்டம் ஜூலை 2003-க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பட்டியல் 26

**1—**

**அறுவை சிகிச்சைக் கூடம்**

**வினா எண் 8042—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், புவனகிரியில் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள அறுவை சிகிச்சைக் கூடம் இயக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சைக் கூடம் உட்பட கட்டடப் பழுதுகளை சரி செய்ய ரூ. 7.00 இலட்சம் மதிப்பில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே பழுதுகள் சரிபார்க்கப்பட்டு அறுவை அரங்கம் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2—**

**கண்காணிப்புக் குழு அமைத்தல்**

**வினா எண் 24371—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் உள்ள ஏழை எளிய நோயாளிகளுக்கு மருத்துவ வசதிகள் கிடைக்கின்றனவா என்பதை அறிய சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுக்கள் நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட, வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் அந்தந்த சட்டமன்ற உறுப்பினரை உறுப்பினராகக்கொண்டு அந்தந்த மருத்துவமனை அதிகாரியின் தலைமையின்கீழ் ஆலோசனை குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும்,

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மருத்துவமனைகளின் பணியினைக் கண்காணித்து ஆலோசனைக் கூற ஒரு மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்களில் அந்தந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுகின்றனர். எனவே மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கு மருத்துவ வசதிகள் கிடைக்கின்றனவா என்பதை அறிந்து ஆலோசனைகளை வழங்குவதற்கென தனியாக வேறு ஒரு குழு அமைக்க வேண்டிய, அவசியம் இல்லை.

3—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 29803—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்று கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, லஷ்மிநாராயணபுரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், லஷ்மி நாராயணபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

4—

### ஆரம்ப துணை சுகாதார நிலையம்

**வினா எண் 30003—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம் குன்னத்தூர் கிராமத்தில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், குன்னத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

5—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 30004—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொன்விளைந்தகளத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம் பொன்விளைந்தகளத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

[2003 மே 10

6—

## விளையாட்டுத் திடல்

**வினா எண் 30420—திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி தொகுதி பள்ளபட்டி பேரூராட்சியில், இளைஞர்களுக்காக பல்நோக்கு விளையாட்டு திடல் அமைக்க செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது தொடங்கப்படும்? திட்ட மதிப்பீடு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) அரவக்குறிச்சி தொகுதி, பள்ளபட்டி பேரூராட்சியில், இளைஞர்களுக்காக பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

7—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 6467—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பொட்டல் ஊராட்சியில் உள்ள பிற்பட்ட வகுப்பினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது பொட்டல் ஊராட்சியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.

8—

## மாணவர் விடுதிக் கட்டடம்

**வினா எண் 7837—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் பிற்பட்டோர் மிகவும் பிற்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதிக்கு கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) செஞ்சி தொகுதி ஒலக்கூரில் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள் ஏதும் இயங்கவில்லை.

(ஆ) கட்டடம் கட்டும் வினா எழாது.

9—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 7863—திரு. மா. ராஜசேகர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதியில் சீர்மரபினருக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா?

(ஆ) சீர்மரபினர் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச சைக்கிள் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**10—**

**மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

**வினா எண் 11090—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், மெனசியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மொரப்பூர் தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், மெனசியில் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு கட்டடம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.



**11—**

**மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம்**

**வினா எண் 11461—திரு. பீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அனகாபுத்தூரிலுள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கும் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தொகுதி, அனகாபுத்தூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை.

**12—**

**வீட்டு மனைப் பட்டா**

**வினா எண் 13260அ—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதியில், சொந்த வீடற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதியில், சொந்த வீடற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

13—

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 13638—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள ஒ.டி.அள்ளி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திட்டம் ஏதுமில்லை.

14—

### மாணவர் விடுதி அமைத்தல்

**வினா எண் 13812—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் திறக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

15—

### தொகுப்பு வீடுகள்

**வினா எண் 16790—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை இனத்தவருக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இத்துறையால் செயல்படுத்தப்படவில்லை.

16—

### இட ஒதுக்கீடு

**வினா எண். 17300—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மக்கள்தொகை அடிப்படையில் சாதிவாரியாக கணக்கெடுத்து இடஒதுக்கீடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மக்கள் தொகை அடிப்படையில் இடஒதுக்கீடு அளிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**17—**

**மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்**

**வினா எண் 18602–திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி—பனிக்கன்குப்பம் கிராமத்திலுள்ள கிருஸ்த்துவ வன்னிய சமுதாய மக்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம்—பனிக்கன் குப்பம் கிராமத்தில் வாழும் கிறித்துவ வன்னியர்ளை மட்டுமின்றி தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் கிறித்துவ வன்னியர்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் ஆய்வில் உள்ளது. மரபுப்படி ஆணையத்தின் பரிந்துரையினை பரிசீலித்து அரசாணை வெளியிடப்படும்.



**18—**

**மாணவர் விடுதி அமைத்தல்**

**வினா எண் 22458—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி அம்பலவாணனேந்தலில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

திட்டம் எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**19—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 22462—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, நாகுடியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

புதிய விடுதிகள் திறக்கும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை.

**20—**

**சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

**வினா எண் 22477—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் நிதிநிலை மற்றும் இலாபத்தினை மேம்படுத்தும் பொருட்டு அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகள் யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக நிதிநிலை மேம்பாட்டைப் பொறுத்தவரையில், இக்கழகத்தை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்துடன் ஒன்றிணைத்திட அரசு முடிவெடுத்து, அவ்விணைப்பு முழுமை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் சூழ்நிலையில் இதுவரைத் தனித்தே செயல்பட்டு வருகிறது. தற்போது, அதற்கு தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும் நிதிக் கழகம் இவ்வாண்டில் *(2002-2003)* மூன்று கோடி ரூபாயை காலக்கடனாக அளிக்க முன் வந்துள்ளது. அந்நிதியுதவியைக் கொண்டு 1000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிப்பதற்கும் சுய தொழில் கடன் வழங்குவதற்கும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறு கடன் வழங்குவதை நுணுகிய முறையில் திட்டமிட்டு விரைவாகச் செயல்படுத்த ஏதுவாக, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திடமுள்ள நிதியை மாவட்ட ஆட்சியர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இக்கழகம் இலாபம் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டதல்ல.



**21—**

**மாணவர் விடுதி கட்டுதல்**

**வினா எண் 22480—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, மஞ்சகொல்லை கிராம பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி புதிதாக கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம் புவனகிரி தொகுதி, மஞ்சகொல்லை பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக் கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டது.

**22—**

**மாணவிகள் விடுதி கட்டுதல்**

**வினா எண் 22628—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசியில் பயின்று வரும் பிற்படுத்தப்பட்டோர் மாணவிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவிகள் விடுதி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

[2003 மே 10

(அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் திறக்கும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை.

**23—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 23137—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நலத் துறையில் வழங்கப்படுவது போல் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**24—**

**இட ஒதுக்கீட்டைப் பின்பற்றி பதவி உயர்வு வழங்குதல்**

**வினா எண்—23596—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு வழங்குவது போல் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும் பதவி உயர்வு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**



2003 மே 10]

(அ) மற்றும் (ஆ) 1995 ஆம் ஆண்டு அரசமைப்பு (77வது திருத்தம்) சட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குப் பதவி உயர்வில் இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்ததைப் போன்று ஒரு அரசமைப்பு சட்டத் திருத்தம் கொண்டுவந்து பிற்படுத்தப்பட்ட / மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யுமாறு மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அரசமைப்பு சட்டத் திருத்தம் கிடைத்த பிறகே மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீட்டினைப் பின்பற்றி பதவி உயர்வு வழங்குவது குறித்து பரிசீலிக்க இயலும்.

**25—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 25157—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை அரசு கல்லூரி பிற்படுத்தப்பட்டோருக்கான மாணவர் விடுதியில் உள்ள இடங்களை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையில் உள்ள 3 கல்லூரி மாணவர் விடுதிகளில் 2002-2003 ஆம் ஆண்டிற்கு மட்டும் கீழ்க்கண்ட அளவில் மாணவர் எண்ணிக்கையை உயர்த்த ஆணையிடப்பட்டுள்ளது:—

1. அரசு கல்லூரி மாணவர் விடுதி (பிந), புதுக்கோட்டை-1 - 10
2. அரசு கல்லூரி மாணவர் விடுதி (பிந), புதுக்கோட்டை-2 - 10

3. அரசு கல்லூரி மாணவர் விடுதி (பிந), புதுக்கோட்டை-3 - 5

மாணவர் எண்ணிக்கையை நிரந்தரமாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**26—**

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 28606—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட திருவிதாங்கோடு, பலியர்குறிச்சி, வாள்வச்ச கோட்டம், மேக்காமண்டபம், புலியிறங்கி, மிடாலம் போன்ற இடங்களில் பிற்படுத்தப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்குரிய நிலம் கையகப்படுத்த நிதியுதவி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிலம் கையகப்படுத்த திட்டம் ஏதும் இல்லை.

**27—**

### சீர்மரபினர் நல விடுதி

**வினா எண் 30949—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புதிய சீர்மரபினர் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் தொடங்கும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

புதிய விடுதிகள் துவங்கும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

**28—**

### குரும்பர் இனத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்

**வினா எண் 33232—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டம், கோவிந்தாபுரம் ஊராட்சியிலுள்ள குரும்பர் இன மக்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டம் கோவிந்தாபுரம் ஊராட்சியிலுள்ள குரும்பர் இன மக்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது தொடர்பான குறிப்பான செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**29—**

### இலவச வீடுகள்

**வினா எண் 33610—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோருக்கும், சீர்மரபினருக்கும் இலவசமாக வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பிற்படுத்தப்பட்டோருக்கும், சீர்மரபினருக்கும் இலவசமாக வீடு கட்டித்தரும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**30—**

**வேலைவாய்ப்பு**

**வினா எண் 4811—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேலை கோரி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 2000-2001 ஆம் ஆண்டு முடிய பதிவு செய்துள்ள பட்டதாரி பொறியாளர்கள் எத்தனை பேர்? சிவில் பட்டயதாரி பொறியாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களது வேலைவாய்ப்புக்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் வேலை கோரி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 31-12-2001 ஆம் நாள் முடிய பதிவு செய்துள்ள பட்டதாரி பொறியாளர்கள் (Degree Holders) 32,541. அவர்களில் சிவில் பட்டதாரி பொறியாளர்களின் எண்ணிக்கை 7,190. பதிவு செய்துள்ள பட்டயதாரிகள் (Diploma Holders) 98,923. அவர்களில் சிவில் பட்டயதாரிகளின் எண்ணிக்கை 25,375.

(ஆ) வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு வேலையளிப்போரால் தெரிவிக்கப்படும் பணியிடங்களுக்கு, மனுதாரர்களின் பணிமூப்பு / வயது / கல்வித் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் பரிந்துரை



2003 மே 10]

செய்யும் பணியை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மேற்கொள்கின்றன. வேலைவாய்ப்பகங்கள் தன்னிச்சையாக வேலை காலியிடங்களை உருவாக்க வழியில்லை.

**31—**

**கல்வி முன்பணம்**

**வினா எண் 7513—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், டெக்ஸ்டூல் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு போனஸ், ஊதிய உயர்வு, மாதச் சம்பளம், பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி முன்பணம் ஆகியவை வழங்கப்படாமல் உள்ள குறையை உடனடியாகப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், டெக்ஸ்டூல் ஆலையில் மொத்தம் 1084 தொழிலாளர்களும், 5 அப்ரண்டிஸ்களும், 121 பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இத்தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யூ.சி., ஏ.ஐ.சி.சி.டி.யூ., உட்பட 11 தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள் ஆவர். 1084 தொழிலாளர்களில் 675 தொழிலாளர்கள் நிர்வாகம் அறிவித்த தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தினை ஏற்றுக்கொண்டு சென்றுவிட்டனர். இந்த ஆலையில் இயக்கம் 2-9-2001 முதல் நிறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தரப்பில், தொழிற் சங்கங்களும், நிர்வாகமும் சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிமை மனுக்கள் தாக்கல் செய்து அவை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இந்நிலையில், அரசு இப்பிரச்சினையில் தலையிட இயலாத நிலை உள்ளது.

[2003 மே 10

32—

## இலவச ஆயுட் காப்பீடு வசதி

**வினா எண் 11047அ—திரு என்.கே. பெருமாள்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பனைத் தொழிலாளர்களுக்கு இலவச ஆயுட் காப்பீடு வசதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பனைமரத் தொழிலாளர்களுக்கு இலவச ஆயுட் காப்பீடு வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

33—

## தையல் தொழிலாளர் வாரியம்

**வினா எண் 12902—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் வாரியத்தில் சேலம் மாவட்டத்திலுள்ள தையல் தொழிலாளர்கள் அனைவரையும் உறுப்பினர்களாக சேர்க்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் உறுப்பினர்களாக உள்ளனர்?

(இ) அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத் திட்டங்கள் என்னென்ன?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 6655 பேர்.

(இ) தனி நபர் முழு காப்பீடு திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை, ஈமச்சடங்கு உதவித் தொகை, பிள்ளைகளின் கல்வி உதவித் தொகை, பதிவு பெற்ற தொழிலாளர் மற்றும் பிள்ளைகளின் திருமண உதவித் தொகை, பெண் தொழிலாளர்களின் மகப்பேறு அல்லது கருச்சிதைவு அல்லது கருக்கலைப்புக்கான உதவித் தொகை முதலியன ஆகும்.

34—

## தனியார் துறைகளில் ஓய்வூதியம் வழங்குதல்

**வினா எண் 15178— திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல் தனியார் துறைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வழிவகைக்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை ஒதுக்கீடு சட்டம், 1952-ல் உள்ளடங்கிய தனியார் துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

35—

## குறைந்தபட்ச ஊதியம்

**வினா எண் 17745—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் தங்க நகைகள் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகளில் குறைந்தபட்ச கூலியை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் நகரில் 1948-ம் வருட தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற தங்க நகைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

36—

## வேலை வாய்ப்பு

**வினா எண் 18463—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தகுந்த சிகிச்சைகள் மூலமாக தொழுநோயின் பிடியிலிருந்து விடுபட்டவர்களில் 50 சதவீதம் பேர்கள் பணியாற்றக்கூடிய தகுதி படைத்தவர்களாக உள்ளவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தற்போது அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

37—

## வேலைவாய்ப்பு அலுவலகம்

**வினா எண் 19657—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் வேலைவாய்ப்பு அலுவலகம், தனியார் கட்டடத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தற்போது காலியாக உள்ள "விக்டோரியா வணிக வளாகம்" உள்ள இடத்தில் அந்த அலுவலகத்தை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாகத்திற்கு சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாற்றுவதால், அரசுக்குக் கூடுதல் செலவினம் ஏற்படுவதால், தற்போது இம்மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கிவரும் தனியார் கட்டடத்திலேயே தொடர்ந்து இயங்கி வரும்.

38—

## பிராவிடண்ட் பண்ட் நிதி

**வினா எண் 19793—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூரில் உள்ள தனியார் தேயிலை எஸ்டேட் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்பட்ட பிராவிடண்ட் பண்ட் நிதி அலுவலகத்தில் கட்டாமல் இருப்பது பற்றி அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் மத்திய அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளதாகும். மத்திய அரசு ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**39—**

**தனியார் தொழில் பயிற்சி**

**வினா எண் 20513—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தனியார் தொழில் பயிற்சி நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் எவரேனும் தொழிற் பயிற்சி நிலையங்கள் நடத்த முன்வந்தால் தகுதிக்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

**40—**

**அரசு தொழிற் பயிற்சி நிலையம்**

**வினா எண் 20962—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) அவிநாசியில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் (ஐ.டி.ஐ.) அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**41—**

**நேரு ஓய்வு இல்லம்**

**வினா எண் 22506—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரத்திலுள்ள தொழிலாளர் நலத் துறை மூலம் நிர்வகிக்கப்படும் நேரு ஓய்வு இல்லத்தை மீண்டும் சிறப்பாக நடத்த அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

மாமல்லபுரத்திலுள்ள நேரு ஓய்வு இல்லம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**42—**

**நலவாரியம் அமைத்தல்**

**வினா எண் 23894—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் லாரி பாடி கட்டும் தொழிலில் தொடர்புடைய தொழில்களை செய்து வரும் தொழிலாளர்களை உள்ளடக்கி தனி நல வாரியம் ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) லாரி பாடி கட்டும் தொழிலில் தொடர்புடைய தொழில்கள் "பொறியியல் தொழில்" என்ற இனத்தின் கீழ்வரும் தொழில்களாகும்.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணிவரன்முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம் 1982-ன் கீழான அட்டவணையில் (Schedule) பொறியியல் தொழில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்தொழில் புரிபவர்கள் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு செய்துகொண்டு பயன் பெறலாம். எனவே, லாரி பாடி கட்டும் தொழில் மற்றும் அது தொடர்புடைய தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கான தனி நல வாரியம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**43—**

**தொழிற் பயிற்சி நிலையம்**

**வினா எண் 24357—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூரில் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பெரம்பலூரில் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**44—**

**தையல் தொழிலாளர்களுக்கு வாரியம்**

**வினா எண் 24442—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தையல் தொழிலாளர்களுக்கு தனி வாரியம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசு ஆணை (நிலை) எண் 114, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 20-7-2000-ன்படி ஏற்கெனவே தையல் தொழிலாளர்களுக்கு என தனி நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

**45—**

**அரசு ஈட்டுறுதி மருத்துவமனை**

**வினா எண் 24548—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமி தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக் விடையளிப்பாரா—

(அ) சேலம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளி இதயநோய், நரம்பியல் மற்றும் சிறுநீரகவியல் துறைகள் ஏற்படுத்து திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2003 மே 10

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் எப்போது செயல்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இதயநோய், நரம்பியல் மற்றும் சிறுநீரகவியல் துறைகள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**46—**

**சித்த மருத்துவர் நியமனம்**

**வினா எண் 24549—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சித்த மருத்துவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்களா?

(ஆ) இல்லை எனில், சித்த மருத்துவர் நியமனம் செய்ய என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தமிழ்நாட்டில் சென்னை, அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் ஒரு சித்த மருத்துவரும், கோவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் ஒரு சித்த மருத்துவரும் பணிபுரிந்து வருகிறார்கள்.

(ஆ) எழவில்லை.



2003 மே 10]

**47—**

**அரசு ஈட்டுறுதி மருத்துவமனை**

**வினா எண் 24550—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு வேண்டிய மருத்துவக் கருவிகள் மற்றும் மருந்துப் பொருட்கள் எவ்வாறு வாங்கப்படுகின்றன?

(ஆ) நடப்பாண்டில் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கும், மருந்தகங்களுக்கும் வேண்டிய மருத்துவக் கருவிகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலம் மத்திய கொள்முதல் குழுவினால் (Central Purchase Committee), ஒப்புதல் அளிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கப்படுகின்றன. புதுடெல்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்படும் மருந்துப் பொருட்கள், மருந்து தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்திடமிருந்தும் வாங்கப்படுகின்றன.

(ஆ) சேலம் மாநகரத்தில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு நடப்பு நிதியாண்டில் ரூ. 6,36,847-க்கு மருந்துகளும், சேலம் மாவட்டத்தில் இயங்கும் 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்கு நடப்பு நிதியாண்டில் ரூ. 23,47,345-க்கு மருந்துகளும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மருத்துவமனைக்கோ அல்லது மருந்தகங்களுக்கோ நடப்பு நிதியாண்டில் மருத்துவக் கருவிகள் ஏதும் வாங்கப்படவில்லை.

[2003 மே 10

48—

**சிறுவர் நலன்**

**வினா எண் 27101—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவகங்களில் சிறுவர்களை பயன்படுத்துவோர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உணவு நிறுவனங்களில் சிறுவர்களைப் பயன்படுத்துவது சட்டரீதியாக தடை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக 1958 ஆம் வருடம் தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

49—

**தோட்டத் தொழிலாளர்களுக்கு போனஸ்**

**வினா எண் 27616—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 20 சதவீதம் போனஸ் வழங்க கட்டாயச் சட்டம் கொண்டுவர மாநில அரசு மத்திய அரசிடம் வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) போனஸ் பட்டுவாடாச் சட்டம், 1965, அனைத்து தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் பொதுவானது



2003 மே 10]

என்பதால், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் 20 சதவீதம் போனஸ் வழங்க கட்டாயச் சட்டம் கொண்டுவருவதற்கு மத்திய அரசிடம் வலியுறுத்த இயலாது.

(ஆ) இவ்வினா எழாது.

50—

**நல வாரியம் அமைத்தல்**

**வினா எண் 29815—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு தொழிற்சாலைகளில் (சேகோ பேக்டரி) வேலை செய்யும் தொழிலாளர்களின் நலன் கருதி தனி நல வாரியம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு தொழிற்சாலைகளில் (சேகோ பேக்டரி) வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

51—

**டன்லப் தொழிற்சாலை**

**வினா எண் 30078—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூரில் உள்ள டன்லப் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படுவதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை, அம்பத்தூரில் டன்லப் தொழிற்சாலையை மீண்டும் திறப்பது தொடர்பாக, மேற்படி நிர்வாகத்திற்கும், டன்லப் பேக்டரி எம்ப்ளாயீஸ் யூனியன் என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தமிழ்நாடு தொழிற் தகராறுகள் சட்டம் 1947, பிரிவு 12 (3)-ன்கீழ் விரிவான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தத்தில் தொழிலாளர்களுக்கான தன் விருப்பத் திட்டம், தேவைப்படும் தொழிலாளர்களின் அளவு, நிலுவை சம்பளம் வழங்குதல், கேண்டீன் வசதி, போக்குவரத்து வசதி, தொழிற்சாலையை செப்பனிட்டுத் திறப்பது குறித்த அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

**52—**

**வேலைவாய்ப்பு துணை பதிவு அலுவலகம்**

**வினா எண் 30976—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், காஞ்சிபுரத்தில் இயங்கி வருவதனால், தொலைதூர வட்டங்களில் உள்ளவர்கள் பதிவு செய்ய மிகவும் சிரமப்படுவதால், செங்கற்பட்டில் வேலைவாய்ப்பு துணை பதிவு அலுவலகம் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**53—**

**வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு கணினி வழங்குதல்**

**வினா எண் 31658—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் கூடுதலாக கணிப்பொறி (Computer) வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் கணினி நிறுவப்பட்டு நான்கு ஆண்டுகளே 1998-99 ஆம் ஆண்டில் கணினி நிறுவப்பட்டு நான்கு ஆண்டுகளே ஆகியுள்ள நிலையில் தற்சமயம் அவ்வலுவலகத்திற்கு கூடுதலாக கணிப்பொறி வழங்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**54—**

**குளிர்பதனக் கிடங்கு**

**வினா எண் 243—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வேளாண்மை விளைபொருட்கள் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை 2001-2002 ஆம் நிதி ஆண்டில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தலைவாசல் என்ற இடத்தில் தனியார் மூலம் குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு கடித (நிலை) எண் 120, வேளாண்மை (வேவி 2) துறை, நாள் 7-5-2002-ல் அனுமதி அளிக்கப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

55—

## விவசாய பொறியியல் கல்லூரி

**வினா எண் 907—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில் விவசாய பொறியியல் கல்லூரி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

56—

## வேளாண் பொருட்கள் விலை நிலவரம்

**வினா எண் 2132—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பங்குச் சந்தை நிலவரம் போல் தொலைக்காட்சியில் நெல், கரும்பு, பயறு வகைகளின் விலை நிலவரம் ஒளிபரப்பப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஒளிபரப்பும் திட்டம் ஏதுமில்லை.

57—

## தென்னை பாதுகாப்பு

**வினா எண் 3711—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னையைத் தாக்கும் "யூரோமைட்ஸ்"-ஐக் கட்டுப்படுத்த அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் தென்னை மரங்களில் 'எரியோபைட்' சிலந்திப் பூச்சித் தாக்குதல் காணப்படுகிறது. இப்பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்யும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் களப் பணியாளர்கள் மற்றும் விளம்பர சாதனங்கள் மூலம் தென்னை விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது. இப்பூச்சியைக் கட்டுப்படுத்த 2000-2001-ம் ஆண்டில் ரூ. 19 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு மாதத்திற்கு ஒரு வருடத்திற்கு மூன்று முறை வேர் மூலம் 200 மி.லி. நுண்ணூட்டச் சத்துக் கரைசல் (micro-nutrient solution) செலுத்தும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

58—

## மானிய விலையில் மருந்து வழங்குதல்

**வினா எண் 4055—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் கார்போசல்பான் மருந்து கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் கார்போசல்பான் மருந்து அளிக்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

59—

## சிறுமலை வாழைப் பழ இன பாதுகாப்பு

**வினா எண் 4722—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

"பஞ்சிடாப்" என்னும் வைரஸ் நோயால் அழிந்துவரும் "சிறுமலை வாழைப் பழ" இனத்தைக் காக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

'பஞ்சிடாப்' என்னும் வைரஸ் நோயால் அழிந்து வரும் சிறுமலை வாழைப் பழ இனத்தைக் காக்க திசு வளர்ப்பு முறையில் இந்நோய் தாக்காத, தரமான வாழைக் கன்றுகளை தயார் செய்து தோட்டக்கலைத்



துறை விவசாயிகளுக்கு மான்ய விலையில் வழங்குகிறது. பயிற்சியளிக்கப்பட்ட களப் பணியாளர்கள் இந்நோய் தாக்கினால் எவ்வாறு ஒழிக்க வேண்டும் என்ற விவரத்தினை விவசாயிகளுக்குத் தெரிவித்து வருகின்றனர்.

60—

## தோட்டக்கலைக் கல்லூரி அமைத்தல்

**வினா எண் 4729—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், உதயகிரிக்கோட்டை அருகே தோட்டக்கலைக் கல்லூரி (horticultural college) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

61—

## விவசாய நிலங்கள் பாதுகாப்பு

**வினா எண் 6289—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

. (அ) தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இறால் பண்ணைகளால் அப்பகுதி விவசாய நிலங்கள் மிகவும் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இறால் பண்ணைகளால் அப்பகுதி விவசாயிகளுக்கு வடிகால் சம்பந்தமாக பிரச்சினை உள்ளது. இறால் பண்ணை தண்ணீர் கசிவினால் அருகில் உள்ள நெல் வயல்களில் சிறிது அபாய உவர் தன்மை ஏற்படுகிறது. இந்த உவர் தன்மையால் பெரிய மகசூல் இழப்பு இல்லை. நல்ல வடிகால் உள்ள இடங்களில் இந்தப் பிரச்சினை இல்லை.

**62—**

**வேளாண்மை வருமானம்**

**வினா எண் 6292—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் வருமானத்தில் வேளாண்மை மூலம் எத்தனை சதவீதம் வருமானம் வருகிறது?

(ஆ) அதை உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டின் மொத்த வருமானம் ரூ.1,15,644.16 கோடி. இதில் வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழில் மூலம் வருமானம் ரூ.21,172.98 கோடி. வருமான சதவீதம் 18.30%



(ஆ) வேளாண் வருமானத்தை உயர்த்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அத்திட்டங்களின் விவரம் பின்வருமாறு:—

1. பெரும் வேளாண் திட்டம்
2. தேசிய நீர்பிடிப்பு அபிவிருத்தித் திட்டம்
3. தானிய அபிவிருத்தித் திட்டம்
4. இயந்திரமயமாக்கும் திட்டம்
5. தென்னை அபிவிருத்தித் திட்டம்
6. கரும்பு மேம்பாடு
7. ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டம்
8. எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம்
9. எண்ணெய் பனை அபிவிருத்தித் திட்டம்
10. தேசிய பயறு உற்பத்தித் திட்டம்
11. விரைவு மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம்.

**63—**

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா எண் 6628—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை வறட்சி மாவட்டமாக இருப்பதால் மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களிலும் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து விவசாயம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களிலும் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து விவசாயம் செய்யும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**64—**

**விவசாய நவீன திட்டங்கள்**

**வினா எண் 6843—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளின் உழைப்புக்கு உரிய வருமானம் கிடைக்க நவீன திட்டங்கள் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உணவு உற்பத்தியைப் பெருக்கிடவும், அதன்மூலம் வருமானத்தைப் பெருக்கிடவும், மாநில, மைய அரசு மற்றும் வெளிநாட்டு உதவியுடன் செயல்படும் பல்வேறு திட்டங்கள் வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

**65—**

**பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை**

**வினா எண் 7503— திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





பழனியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பழங்கள் ஏராளமாக உற்பத்தி ஆவதைக் கருத்தில் கொண்டு பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை (Cold Storage) வசதியுடன் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பழனி பகுதியில் பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை குளிர்பதன (Cold Storage) வசதியுடன் அமைத்திட கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**66—**

**விவசாயிகள் நிலுவைத் தொகை**

**வினா எண் 7583—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குருங்குளம் அண்ணா சர்க்கரை ஆலையில் சென்ற நிதியாண்டில் நிலுவைத் தொகை அனைத்தும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2000-2001-ல் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை அரவை செய்த 4,31,587 மெட்ரிக் டன் கரும்பிற்கு வழங்க வேண்டிய சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையாகிய ரூ.2805.79 இலட்சம் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டது. மேலும், இவ்வாலை வழங்கவேண்டிய மாநில அரசு பரிந்துரை விலையில் ஏற்பட்ட வித்தியாச கரும்பு விலை ரூ.849 இலட்சம் நிலுவைத் தொகை அனைத்து விவசாயிகளுக்கும் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் துவங்கி 2002 பிப்ரவரி மாதத்திற்குள் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. சென்ற

[2003 மே 10

ஆண்டு விவசாயிகளுக்கு வழங்கவேண்டிய நிலுவைத் தொகை எதுவும் இல்லை.

**67—**

**விவசாய திட்ட அதிகாரி நியமனம்**

**வினா எண் 7826—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியுடன் வறுமை ஒழிப்பு திட்டமாகிய நீர்வடிப்பகுதி திட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் செயல்படுத்தும்பொழுது மத்திய அரசின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாக வழிகாட்டுதலின்படி மேற்படி திட்டத்திற்கு விவசாயத் துறையிலிருந்து நேரடியாக தனியாக திட்ட அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளாரா?

*(ஆ)* இல்லையெனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை —**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* நடவடிக்கை ஏதுமில்லை.

**68—**

**போலி பூச்சிக்கொல்லி மருந்துகள்**

**வினா எண் 8740—திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போலி பூச்சிக்கொல்லி மருந்துகள் அதிகமாக விற்பனையில் உள்ளதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம். போலி பூச்சி மருந்துகள் விற்பனையில் உள்ளதைத் தடுப்பதற்கு வேளாண்மைத் துறை மூலம் பல்வேறு வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**69—**

**மறுசீரமைப்பு நடவடிக்கை**

**வினா எண் 8892—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள "டான்காப்" மற்றும் எண்ணெய்வித்து உற்பத்தியில் கூட்டுறவு சங்கங்கள் "மறுசீரமைப்பு" நடவடிக்கையை அரசு மேற்கொள்ள திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

டான்காப் இணையம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததாலும், எதிர்காலத்தில் இதனைத் தொடர்ந்து இலாபகரமாக இயக்க வாய்ப்புகள் ஏதுமில்லை என்பதாலும், அரசாணை (நிலை) எண் *345*, நாள் *30.11.2001*, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், *1983*, பிரிவு *137*-ன்கீழ் டான்காப் சம்பந்தப்பட்ட அலுவல்கள் குறித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு வேளாண்மை ஆணையர் மற்றும் பதிவாளர் அவர்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, டான்காப் மற்றும் கூட்டுறவு எண்ணெய்வித்து சங்கங்களை மறுசீரமைப்பு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

[2003 மே 10

70—

**பணியிடங்கள் நிரப்புதல்**

**வினா எண் 9636—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையில் சுமார் 100 வேளாண்மை உதவி இயக்குநர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலத்தில் பணியிடங்கள் நிரப்பப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேளாண்மைத் துறையிலுள்ள வேளாண்மை உதவி இயக்குநர் பணியிடங்களில் சில பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன.

(ஆ) அப்பணியிடங்களை நிரப்ப தக்க நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டு வருகிறது.

71—

**பழப்பண்ணை அமைத்தல்**

**வினா எண் 9741—திரு. ஆ.கு. முருகேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதி, முள்ளுவாடி அரசுத் தோட்டக்கலைப் பண்ணையில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு தரிசு நிலங்களாக உள்ளதால் அங்கு பழப்பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

முள்ளுவாடி தோட்டக்கலை பண்ணையின் மொத்த பரப்பு 119.55 ஏக்கர். இதில் 56 ஏக்கர் நிலத்தில் பழப்பயிர் நாற்றங்கால்பகுதி மற்றும், பழச்செடிகள் உற்பத்திக்குத் தேவையான செடிகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள நிலத்தில் 15 ஏக்கரில் புளி (உரிகம்) நடவு செய்யவும், 15 ஏக்கர் நிலத்தில் பெருநெல்லி நடவு செய்யவும், 15 ஏக்கர் நிலத்தில் சப்போட்டா, நாவல் போன்ற பழச்செடிகள் நடவு செய்யவும் மீதமுள்ள நிலத்தில் வேலி ஓரங்களில் வேம்பு, இலவம் பஞ்சு மரங்கள் நடவு செய்வதுடன், மழைநீர் சேகரிப்பு குட்டை ஒன்று அமைத்தலின் மூலம் நீர் ஆதாரத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. போதிய நிதி ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றதும் இதர பகுதிகளையும் முழுமையாக பயன்படுத்தி பழப்பண்ணை அமைக்கப்படும்.

72—

**மலர் உற்பத்தி பெருக்குதல்**

**வினா எண் 10923—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாச்சலம் பகுதியில் மலர் உற்பத்தி மேலும் பெருகிடத் திட்டங்கள் வகுத்திடவும், அம்மலர்களைக் கொள்முதல் செய்யும் நிலையம் அமைக்கவும் அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாச்சலம் பகுதியில் மலர் உற்பத்தி பெருகிட மாநில அரசின் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 50 சத மானிய விலையில் டெல்லிகனகாம்பரம், ரோஜா

[2003 மே 10

மற்றும் முல்லை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு மலர் பயிர்களில் புதிய பரப்பு கொண்டுவர விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். மேலும் மைய அரசின் வணிக மலர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் மலர்ச் செடிகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கி நிரூபண தளைகள் அமைக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2. மலர்களைக் கொள்முதல் செய்யும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடமில்லை.

**73—**

**கசிவு நீர்க்குட்டை அமைத்தல்**

**வினா எண் 11043—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், ஈட்டியம்பட்டியை ஒட்டியுள்ள நடைபாதை பள்ளம் என்னும் இடத்தில் கசிவு நீர்க்குட்டை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கசிவு நீர்க்குட்டை கட்ட நிதி ஒதுக்கீடு இல்லாததால், தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், ஈட்டப்பட்டியை ஒட்டியுள்ள நடைபாதைப் பள்ளம் என்னும் இடத்தில் கசிவு நீர்க்குட்டை அமைக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2003 மே 10]

**74—**

**மிளகாய் வற்றலுக்கு விலை நிர்ணயம் செய்தல்**

**வினா எண் 11049—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் மாவட்டங்களில் குறிப்பாக விளாத்திகுளம் தொகுதியில் அதிகம் விளையும் மிளகாய் வற்றலுக்கு அரசு விலை நிர்ணயம் செய்திட ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை —**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மிளகாய் வற்றலை அரசு கொள்முதல் செய்து விநியோகம் செய்யாததாலும், உற்பத்தியாளரும், வர்த்தகரும் நேரடி வியாபாரத்தில் ஈடுபடுவதாலும் மிளகாய் வற்றலுக்கு அரசு விலை நிர்ணயம் செய்ய இயலாது.

**75—**

**கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல்**

**வினா எண் 11050—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதியில் அதிக அளவில் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) விளாத்திக்குளம் தொகுதியில் அதிக அளவில் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்க நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே அதிக அளவில் கசிவு நீர்க்குட்டைகள் கட்ட வாய்ப்பு இல்லை.

(ஆ) எழவில்லை.

**76—**

**விவசாய உற்பத்தி பெருக்குதல்**

**வினா எண் 11107—திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஹரியானா மாநிலம் நம்மைவிட 3 மடங்கு விவசாய பொருட்கள் உற்பத்தி செய்யும்போது தமிழக விவசாயத்தை தற்பொழுது உள்ளதுபோல 9 மடங்கு அதிகரிக்கும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண் உற்பத்தியில் எண்ணெய்வித்து மற்றும் பருத்தி பயிர் தவிர இதர பயிர்களில் தமிழ்நாடு மாநிலம் ஹரியானா மாநிலத்தைவிட அதிக உற்பத்தி செய்து வருகிறது. எனினும், தமிழக விவசாய உற்பத்தியை தற்போது இருப்பதுபோல 9 மடங்கு அதிகரிக்கும் திட்டம் ஏதும் இல்லை.



**77—**

**வேளாண்மை மையக் கிடங்கு அமைத்தல்**

**வினா எண் 11120—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, வள்ளிக்கோட்டை கிராமத்தில் வேளாண்மை மையக் கிடங்கு அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் நிர்வாகச் செலவுகளைக் கட்டுப்படுத்த அனைத்துத் துறைகளும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், அனைத்துச் செலவினங்களிலும் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்றும் நிலை நிதிக்குழு முடிவு செய்துள்ளதால் வரவு செலவு திட்டத்தில் சேர்க்கப்படாத அல்லது சட்டமன்றப் பேரவையில் இதுவரை அறிவிக்கப்படாத புதிய திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளிக்க இயலாது என முடிவு செய்துள்ளதால், மன்னார்குடி தொகுதி, வள்ளிக்கோட்டை (உள்ளிக்கோட்டை) கிராமத்தில் வேளாண்மை மையக் கிடங்கு (வேளாண்மை விரிவாக்க மையம்) அமைத்திட தற்போது வாய்ப்பில்லை.

**78—**

**மானிய விலையில் உரங்கள் வழங்குதல்**

**வினா எண் 11442—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் இரசாயன உரங்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்கள் கிடைக்க தமிழக அரசில் செயல் திட்டம் ஏதும் தற்போது செயலாக்கத்தில் இல்லை.

**79—**

**வேளாண்மைக் கல்லூரி**

**வினா எண் 11443—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் வேளாண்மைக் கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**80—**

**புதிய ரக கரும்பு**

**வினா எண் 11453—திரு. கா. பூ. முனுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் கோவை வேளாண் பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ள புதிய ரக கரும்பு என்ன?

(ஆ) இப்புதிய ரக கரும்பால் ஏக்கருக்கு எத்தனை டன் கரும்பு கூடுதலாக கிடைக்கும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கரும்பு ஆராய்ச்சி நிலையங்களின் மூலம் சுமார் 30 உயர் விளைச்சல் மற்றும் அதிக சர்க்கரைச் சத்து கொண்ட கரும்பு இரகங்கள் வெளியிடப்பட்டு உள்ளன. இவற்றில், கோ.க. 671, கோக. 85061, கோக. 90063, கோக. 91061, கோக. 92061, கோக. 99061, கோசி 8607, கோசி 9507, கோக 98061, கோசி 96071, கோசி 98071, கோகு 93076 மற்றும் கோகு 94077 ஆகிய இரகங்கள் குறிப்பிடத் தக்கவையாகும்.

(ஆ) மேற்படி இரகங்கள் எக்டருக்கு சுமார் 120 முதல் 144 டன்வரை கரும்பு விளைச்சல் தரவல்லது. மேலும் இந்த இரகங்களை பயிர் செய்வதால், ஒரு ஏக்கருக்கு கூடுதலாக சுமார் 8 முதல் 10 டன் வரை கரும்பு கிடைக்க வாய்ப்புள்ளது (எக்டருக்கு 20 முதல் 25 டன்).

**81—**

**சூரியகாந்தி எண்ணெய் தொழிற்சாலை**

**வினா எண் 13099—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் தற்போது சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

82—

### வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்

**வினா எண் 13653—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் தொடங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

83—

### விவசாய நிலங்கள் மேம்படுத்துதல்

**வினா எண் 13656—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பயிர் செய்யக்கூடிய தரிசு நிலங்கள் மற்றும் குறு விவசாயிகளின் வேளாண் நிலங்களை வருவாய் தரும் வகையில் மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* சேரன்மகாதேவி பேரூராட்சி திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் விரிவான தரிசு நில திட்டத்தின் கீழ் (Comprehensive Wasteland Development Programme) நடப்பு ஆண்டில் பாளையங்கோட்டை ஆலங்குளம், மானூர் மேல்நீலிதநல்லூர் ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதி இவ்வாண்டில் சேர்க்கப்படவில்லை. தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதித் திட்டம் (NWDPRA) மற்றும் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்திலும் (DPAP) இப்பகுதி சேர்க்கப்படவில்லை. எனினும், மாநில நிதியின் கீழ் விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் முதற்பகுதியாக 10 மாவட்டங்களில் இந்த ஆண்டு 50,000 எக்டர் தரிசு நிலங்கள் மேம்பாடு செய்ய நீர்ப்பிடிப்பு அணுகுமுறையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இனிவரும் ஆண்டில் இத்திட்டம் படிப்படியாக விரிவு செய்யும்பொழுது சேரன்மகாதேவி தொகுதி தரிசு நிலங்களும் மேம்படுத்த பரிசீலிக்கப்படும்.

*(ஆ)* குறு விவசாயிகள் தங்களது வேளாண் நிலங்களில் மண் தன்மை மற்றும் அங்குள்ள வேளாண்மை உதவி அலுவலரின் ஆலோசனைப்படி வருவாய் தரும் பணப் பயிர்களான, பருத்தி, கரும்பு ஆகியவற்றை பயிர் செய்து வருவாய் பெறலாம்.

84—

### நிலங்களை மேம்படுத்துதல்

**வினா எண் 13658—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மண் அரிப்பைத் தடுக்கவும், ஈரம் காக்கவும் வளம் குன்றிய நிலங்களை மேம்படுத்தவும் அரசு உடனடி நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* நடப்பு நிதியாண்டில் காவிரி டெல்டா பகுதி தவிர ஏனைய மாவட்டங்களில் மண்வளப் பாதுகாப்புத் திட்டப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**85—**

**நுண்ணிய நீர்ப்பாசனம்**

**வினா எண் 13659—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நுண்ணிய நீர்ப்பாசன முறையை அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஆம், சேரன்மகாதேவி உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து தொகுதி தோட்டக்கலை பயிர் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் மத்திய மாநில நிதி உதவியுடன் சொட்டுநீர்ப்பாசன மானிய திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக செயலாக்கப்பட்டு வருகிறது.

**86—**

**ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்**

**வினா எண் 13661—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* இவ்வினாவிற்கு இடமில்லை.

**87—**

**எண்ணெய் பனை அபிவிருத்தி**

**வினா எண் 13697—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, எல்லைக்குட்பட்ட பகுதியில் எண்ணெய் பனை அபிவிருத்தித் திட்டத்தினை அரசு உடனடியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி உட்பட திருநெல்வேலி மாவட்டத்தில் எண்ணெய் பனை அபிவிருத்தித் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

88—

**தரிசு நில மேம்பாடு**

**வினா எண் 14139—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் பாளையங்கோட்டை, ஆலங்குளம், மானூர், மேலநீலிதநல்லூர் ஆகிய ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) வரும் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம் தேர்வு செய்ய பரிசீலிக்கப்படும்.

89—

**காய்கறி உற்பத்தி**

**வினா எண் 14160—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம் பசுமைக்குடில்களில் மலர்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி செய்யும் திட்டத்தின்கீழ் மலர்கள் மற்றும் காய்கறிகளின் உற்பத்தி அதிகரிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பசுமைக் குடில்கள் அமைக்க அதிக முதலீடு தேவைப்படுவதாலும், விவசாயிகள் முன் வராததாலும், சேரன்மகாதேவி தொகுதி கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் மலர்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியை அதிகரிக்க பசுமைக் குடில்கள் அமைக்கும் கருத்துரு அரசிடம் தற்போது இல்லை.

90—

**மானாவாரி நீர்வடிப் பகுதி திட்டம்**

**வினா எண் 14162—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி திட்டத்தினை அரசு செயல்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு ஆண்டில் (2002-2003) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தின் வெங்கடாம்பட்டு 1,2, ஏ.பி. நாடானூர், ராவுத்தப்பேரி கிராமங்களில் தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

91—

**மண் பரிசோதனை நிலையம்**

**வினா எண் 14166—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில், திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு, ஏற்கெனவே ஒரு மண் பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தினையும் உள்ளடக்கி இந்த மண் பரிசோதனை நிலையம் பணிபுரிந்து வருவதால், தற்போது சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்கென தனியே ஒரு மண் பரிசோதனை நிலையம் அமைப்பதற்கான உத்தேசம் ஏதும் இல்லை.

**92—**

**ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்**

**வினா எண் 14404—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை —**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



2003 மே 10]

**93—**

**தென்னை வளர்ப்பு**

**வினா எண் 14427—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் அதிதீவிர தென்னை வளர்ப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்த முன்னுரிமை அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் அதிதீவிர தென்னை வளர்ப்புத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.

**94—**

**வேளாண்மை விற்பனைக்கூடம்**

**வினா எண் 14776—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, நகரத்தில் வேளாண்மை விற்பனைக்கூடம் அரசு அமைக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

95—

## விவசாயிகளுக்குப் பயிற்சி

**வினா எண் 14780—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மலர்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற வகையில் உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு இலவசப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தோட்டக்கலைத் துறையில், மைய அரசு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் மலர்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், மலர்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற வகையில், உற்பத்திச் செய்வதற்கு விவசாயிகளுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

96—

## மானிய விலை உரம்

**வினா எண் 14781—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்கள் கிடைக்க தமிழக அரசின் செயல் திட்டம் ஏதும் தற்போது செயலாக்கத்தில் இல்லை. அனைத்துத் தரப்பு விவசாயிகளுக்கும் தேவைப்படும் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடு நீக்கம் செய்யப்பட்ட உரங்களுக்கு வழங்கப்படும் சலுகைத் தொகை முழுவதையும் மைய அரசே ஏற்கிறது.

97—

## மரவள்ளிக் கிழங்கு நோய் தடுப்பு

**வினா எண் 14782—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மரவள்ளிக் கிழங்கில் புதிதாக தாக்கும் நோயினைக் கண்டுபிடித்து விவசாயிகளுக்கு விளைச்சல் பாதிக்காமல் இருக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மரவள்ளியில் தேமல் நோய், போமோ எனப்படும் நோய் மற்றும் கிழங்கு அழுகல் நோய் போன்றவை தமிழ்நாட்டில் பொதுவாகத் தென்படுகின்றன. இதில் தேமல் நோயின் பாதிப்பு அதிக அளவில் காணப்படுகிறது. இந்நோய் ஒரு வைரஸ் நோயாகும். இந்நோயைக் கட்டுப்படுத்த வைரஸ் நோய் தாக்காத செடிகளிலிருந்து எடுக்கப்பட்ட விதைக்கரணைகளையும் நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த இரகங்களையும் பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டு வருகிறது. கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் திருவனந்தபுரம் மத்திய அரசு கிழங்கு ஆராய்ச்சி நிலையங்களும் பரிந்துரை செய்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை தோட்டகலைத் துறை களப் பணியாளர்கள் வாயிலாகவும் அந்தியூர் வேளாண்மை பல்கலைக்கழக வேளாண் அறிவியல் நிலையம் மூலமும் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்படுகின்றன. மைய அரசு உதவியுடன் செயல்படுத்தும் காய்கறி மற்றும் கிழங்குகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மரவள்ளியில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாள எக்டர் ஒன்றிற்கு ரூ.1,500 மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

98—

### வேலைவாய்ப்பு

**வினா எண் 14784—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தோட்டக்கலையில் பட்டயப் படிப்பும் பட்டப் படிப்பும் படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு அரசு உடனடியாக வேலை வாய்ப்பு வழங்க திட்டம் தீட்டியுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தோட்டக்கலையில் பட்டயப் படிப்பும் பட்டப் படிப்பும் படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

99—

### காப்பீட்டு வசதி

**வினா எண் 14790—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா வேளாண்மைப் பயிர்களுக்கும் காப்பீட்டு வசதி அளிக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைத்து வேளாண் பயிர்களுக்கும் காப்பீட்டு வசதி அளிக்க இயலாது.

100—

### தென்னை மர நோய்த் தடுப்பு

**வினா எண் 15220—திரு. டி. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை மரங்களில் குருத்தோலைகள் நுனிகள் கரிந்து அழியும் நோயினால் தென்னை மரங்கள் மற்றும் காய்கள் பாதிப்படைவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தென்னை மரத்தில் குருத்தோலைகள் அழுகி பின்னர் குருத்து முழுவதும் வாடும் நிலை குருத்தழுகல் நோயினால் ஏற்படுகிறது. இது மிகச் சில இடங்களில் மட்டுமே காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் தடுப்பு முறைகள் கருத்தரங்குகளிலும் களப் பணியாளர்கள் மூலம் விவசாயிகள் தோட்டத்தில், செயல் விளக்கமாக செய்து காண்பிக்கப்படுவதுடன் துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைச் செய்தி, வானொலிச் செய்தி மூலமாகவும் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது.

101—

### அரசு மானியம்

**வினா எண் 15222—திரு. டி. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக நல்ல மிளகு பயிரிடும் விவசாயிகளுக்கு அரசு மானியமாக கடந்த 1999-2000, 2000-2001-ல் எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக நல்ல மிளகு பயிரிடும் விவசாயிகளுக்கு அரசு மானியமாக 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.4.718 இலட்சமும் 2000-2001ஆம் ஆண்டில் ரூ.5.46 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

**102—**

**ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்**

**வினா எண் 15263—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பத்தமடை பேரூராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



2003 மே 10]

**103—**

**மானிய விலையில் பழச்செடிகள்**

**வினா எண் 16792—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு பழச்செடிகளை மானியத்துடன் கூடிய விலையில் வழங்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம். புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 50 சதவீத மானிய விலையில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த வெப்ப, வறண்ட மற்றும் குளிர் மண்டல பழ அபிவிருத்தித் திட்டம் மூலம் தோட்டத் துறையினரால் பழச்செடிகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**104—**

**இலவச தென்னங்கன்றுகள்**

**வினா எண் 17111—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் தென்னை வளர்க்கும் விவசாயிகளுக்கு இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி உட்பட மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

**105—**

**விதைப் பண்ணை**

**வினா எண் 17838—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் புதிதாக விதைப்பண்ணை ஒன்று நிறுவ அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான ஆதார விதைகள் டேனிஷ்பேட்டை மற்றும் மேட்டூர் டாம் அரசு விதைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படுவதால் புதிதாக பூலாம்பட்டியில் அரசு விதைப்பண்ணை நிறுவும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

**106—**

**புதிய வேளாண்மைக் கல்லூரி**

**வினா எண் 17851—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மேலும் ஒரு வேளாண்மைக் கல்லூரியை புதியதாக ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எந்த இடத்தில் எப்பொழுது நிறுவலாம் என அரசு தீர்மானித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**107—**

**இலவச தென்னங்கன்றுகள்**

**வினா எண் 17855—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள தென்னை வளர்க்கும் விவசாயிகளுக்கு இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தென்னை வளர்க்கும் விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**108—**

**மண் பரிசோதனை நிலையம்**

**வினா எண் 17857—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் மண் பரிசோதனை நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்திற்கு சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு மண் ஆய்வுக்கூடம் செயல்பட்டு வருகிறது. இது, எடப்பாடி தொகுதி விவசாயிகளும் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருவதால், தனியே ஒரு மண் பரிசோதனை ஆய்வுக்கூடம் எடப்பாடியில் ஏற்படுத்த தற்போது அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை.

**109—**

**மலிவு விலையில் வேளாண் பொருட்கள்**

**வினா எண் 17861—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு விதை மற்றும் இடுபொருட்கள் குறைந்த விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கரும்பு விவசாயிகள் அடிப்படை நாற்றங்கால் அமைப்பதற்கு மானியம் வழங்கப்படுகிறது. மற்றும் இடுபொருட்களும் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. சேலம் மாவட்டம், எடப்பாடித் தொகுதியில் உள்ள கரும்பு சாகுபடி விவசாயிகள் தங்கள் கரும்பை சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குப் பதிவு செய்வதால் இவர்களுக்கு மேற்படி விதை மானியம் மற்றும் இடுபொருட்கள் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகின்றது.

**110—**

**கடன் உதவி**

**வினா எண் 17862—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள விவசாயிகள் எவ்வளவு பேர் நிலச்சமன் செயற்பொறி (Bulldozer) உழுவை (Tractor) ஆகியவை சொந்தமாக வாங்க மானியத்துடன் கடன் கேட்டு அரசிற்கு விண்ணப்பம் அனுப்பியிருந்தார்கள்?

(ஆ) விண்ணப்பத்தில் எவ்வளவு பேருக்கு அரசு கடன் வழங்கியது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரத்தில் 2000-2001-ல் டிராக்டர் வாங்கிட விண்ணப்பித்தவர்:-

ஒருவர் மட்டும்

(ஆ) ஒருவருக்கு மட்டும்.

**111—**

**சமுதாயக் கிணறு**

**வினா எண் 18347—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதியில் வறட்சிக்கு இலக்காகும் திட்டத்தின் (டிபிஏபி)—கீழ் 1982 முதல் 1987 வரை செயல்படுத்தப்பட்ட சமுதாய ஆழ்குழாய் கிணறு திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

1995-96 ஆம் ஆண்டிற்கு முன்னர், அதாவது வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் நீர்வடிப்பகுதி அணுகுமுறையில் செயல்படுத்துவதற்கு முன்னதாக, சமுதாய ஆழ்குழாய் கிணறுகள் 1982-87 வரை வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தில் அப்பொழுது நடைமுறையில் இருந்த வழிகாட்டியின்படி அமைக்கப்பட்டு வந்தன. 1992 ஆம் ஆண்டில் மத்திய அரசின் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்ட வழிகாட்டியின்படி சமுதாய ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க இயலாது.

[2003 மே 10

அதற்குப் பதிலாக வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தில் தற்பொழுது, மழைநீரை சேமிக்கும் முறைகளான கசிவுநீர் குட்டைகள், பண்ணைக் குட்டைகள், கால்நடை குட்டைகள் மற்றும் ஏற்கெனவே உள்ள குட்டைகளைப் புதுப்பித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தில் சமுதாய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம் மீண்டும் செயல்படுத்த இயலாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**112—**

**உரம் மானியம்**

**வினா எண் 18425—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்திலுள்ள விவசாயிகளுக்கு அளிக்கப்படும் உரங்களில் எவ்வளவு மானியம் தமிழக அரசு வழங்கி வருகிறது?

*(ஆ)* இந்த மானியத்தில் மத்திய அரசின் பங்கு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* விவசாயிகளுக்கு உர விநியோகத்திற்கான மானியம் மத்திய அரசு வழங்குகிறது. மாநில அரசு வழங்குவதில்லை.

*(ஆ)* கேள்வி எழாது.

**113—**

**தரிசு நில மேம்பாடு**

**வினா எண் 18917—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தரிசு நிலங்களை மேம்படுத்த கோவை மாவட்டத்தை தத்தெடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் *2001-2003* ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும் முன்னோடியத் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டம் தேர்வு செய்யப்படவில்லை. இத்திட்டம் வரும் ஆண்டுகளில் *(2003-2006-க்குள்)* கோவை மாவட்டத்தில் செயல்படுத்தும்போது, தரிசு நிலங்கள் மேம்படுத்தப்படும்.

**114—**

**தரிசு நில மேம்பாடு**

**வினா எண் 19584—திரு. பீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அரசு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்டம் இணைக்கப்பட்டுள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எத்தனை ஏக்கர் நிலம் மேம்படுத்தப்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* *2002-2003* ஆம் ஆண்டில் *55,000* எக்டேர் பரப்பில் மரக்கன்றுகள் நடவு செய்யத் திட்டமிடப்பட்டதில் காஞ்சிபுரம் மாவட்டம் இடம் பெறவில்லை.

**115—**

**அரசே கொள்முதல் செய்தல்**

**வினா எண் 19585—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில், பச்சூர், கொத்தூர் பகுதியில் விளையும் காய்களை அரசே கொள்முதல் செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, பச்சூர், கொத்தூர் பகுதியில் விளையும் காய்களை அரசே கொள்முதல் செய்யும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

**116—**

**தேங்காய் விலை நிர்ணயம்**

**வினா எண் 19596—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தேங்காய் விலை வீழ்ச்சி அடைவதைத் தடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆமெனில் அது குறித்த விவரங்களை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தேங்காய் விலை வீழ்ச்சியடைவதைத் தடுக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை. எனினும் தேங்காயிலிருந்து உபபொருட்களை தயாரிப்பதன் மூலம் தேங்காய் விலை வீழ்ச்சியினால் ஏற்படும் இழப்பினை ஈடு செய்யலாம்.

**117—**

**பயிற்சி முகாம்கள்**

**வினா எண் 22459—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

வேளாண்மைத் துறையில் விவசாயிகள் சிறந்த முறையில் விவசாயம் செய்ய பயிற்சி முகாம்கள் நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் மொத்தம் 12 உழவர் பயிற்சி நிலையங்களில் விவசாயிகள் பயன்படும் வகையில் அவ்வப்போது நவீன வேளாண் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகள் சிறந்த முறையில் விவசாயம் செய்யும் பயிற்சி முகாம்கள் அமைத்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

**118—**

**மண் பரிசோதனை**

**வினா எண் 22494—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மைத் துறையினரால் விவசாயிகளுக்கு இலவசமாக மண் பரிசோதனை செய்து தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைத் துறையினரால் விவசாயிகளுக்கு இலவசமாக மண் பரிசோதனை செய்து தருவது தற்போது செயலாக்கத்தில் இல்லை.

**119—**

**வேளாண் உபகரணங்கள்**

**வினா எண் 22496—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு மானிய விலையில் ஸ்பிரேயர், பவர் ஸ்பிரேயர் இரும்பு கலப்பை, மண்வெட்டி, சேறுகலக்கி ஆகிய உபகரணங்கள் வழங்கப்படுமா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மானிய விலையில் இரும்பு கலப்பை, மண்வெட்டி, சேறுகலக்கி ஆகிய கருவிகள், விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அமலில் இல்லை. எனினும் ஸ்பிரேயர் மற்றும் பவர் ஸ்பிரேயர்ஸ், மத்திய, மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டங்களான தேசிய பயறு பெருக்குத் திட்டம், எண்ணெய்வித்து உற்பத்தி பெருக்குத் திட்டம், மற்றும் பருத்தி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

**120—**

**பூக்கள் அங்காடி**

**வினா எண் 22498—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலத்தில் பூக்கள் அங்காடி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலத்தில் பூக்கள் அங்காடி தொடங்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

**121—**

**டிராக்டர்கள் வழங்குதல்**

**வினா எண் 22688—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு பாதி விலையில் வேளாண் துறையினரால் டிராக்டர்கள் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு பாதி விலையில் வேளாண் துறையின் மூலம் டிராக்டர்கள் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**122—**

**விவசாயிகள் குறைகேட்கும் கூட்டம்**

**வினா எண் 22689—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வருடந்தோறும் விவசாயிகள் விவசாயப் பணிகளைத் தொடங்குவதற்கு முன்பாக, தேவையான இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர், வேளாண் துறை அதிகாரிகள், விவசாயிகள் அடங்கிய விவசாயிகள் குறை கேட்கும் கூட்டம் நடத்தும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாதந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட அளவிலான அனைத்துத் துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொள்ளும், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஏற்கெனவே நடைபெற்று வருகிறது.

**123—**

**மருந்து விநியோகம்**

**வினா எண் 22705—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னையை தாக்கக்கூடிய சிகப்பு கூன்வண்டு, காண்டாமிருக வண்டு இவற்றைப் போக்க இனக்கவர்ச்சிப் பொறியில் வைக்கக்கூடிய செப்டா என்ற மருந்தை நேரடியாக தமிழக அரசு தயாரித்து விவசாயிகளுக்கு கொடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தென்னையைத் தாக்கக்கூடிய சிகப்பு கூன்வண்டு, காண்டாமிருக வண்டு இவற்றைப் போக்க இனக்கவர்ச்சிப் பொறியில் வைக்கக்கூடிய செப்டா என்ற மருந்தை தமிழக அரசு தயாரித்து வழங்குவதில்லை.

(ஆ) எழவில்லை.

**124—**

**விளைச்சலைப் பெருக்கத் திட்டம்**

**வினா எண் 22894—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல், சிறுமலையில் வாழை, பலா போன்ற கனி வகைகளை பாதுகாக்க, விளைச்சலைப் பெருக்க, தனித் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல், சிறுமலையில் வாழை, பலா முதலியவற்றின் விளைச்சலைப் பெருக்கவும் பரப்பு விரிவாக்கம் செய்திடவும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த தோட்டக்கலை



அபிவிருத்தித் திட்டம் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இடுபொருட்கள் வழங்கிடும் போதும் தொடர் கவனிப்பு பணியின்போதும் விளைச்சலைப் பெருக்குவதற்கான தொழில்நுட்ப செய்திகளும் விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்படுகிறது.

**125—**

**மரம் வளர்ப்பு**

**வினா எண் 22982—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரம் வளர்ப்புத் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டு எவ்வளவு மரக்கன்றுகள் நடப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மரம் வளர்ப்புத் திட்டம் தனியாக ஏதும் அரசு நடைமுறையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**126—**

**செஸ் வரி**

**வினா எண் 22983—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் பயிரிடும் மரவள்ளி கிழங்கு அழுகும் தன்மை கொண்டதால், விவசாயிகளின் நலன் கருதி அக்கிழங்கிற்கு விதித்துள்ள செஸ் வரியை நீக்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

செஸ் வரியை நீக்கும் உத்தேசமில்லை.

**127—**

**அரசு கொள்முதல்**

**வினா எண் 23008—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் பகுதியில் 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பயிராகும் சீசனின்போது தக்காளியை அரசு/கூட்டுறவு அமைப்புகளின் மூலம் கொள்முதல் செய்து பக்குவப்படுத்தி சாஸ் போன்ற பொருட்களை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் பகுதியில் பயிராகும் தக்காளியை அரசு/கூட்டுறவு அமைப்புகளின் மூலம் கொள்முதல் செய்து பக்குவப்படுத்தி சாஸ் போன்ற பொருட்கள் செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**128—**

**கரும்பு பண்ணைகள்**

**வினா எண் 23127—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடபாதி மங்கலத்தில் உள்ள தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தைக் கலைத்துவிட அரசு உத்தரவிட்டது ஏன்?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தின் வசமுள்ள நிலங்களில் போதிய பாசன வசதிகள் கால நிலைமைக்கேற்றவாறு இல்லாததாலும், பண்ணைக் கழகத்துத் தொழிலாளர்கள் கழகத்தின் சீரிய செயல்பாட்டிற்குத் தகுந்த ஒத்துழைப்பு நல்காததாலும் 1977-78 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல், 1982-83-ல் ஏற்பட்ட வறட்சி 1983-84, 1985-86-ல் ஏற்பட்ட வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களாலும் கழகத்தைத் தொடர்ந்து நடத்துவதில் பெரும் சிரமம் இருந்த காரணத்தினால் தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தைத் தொடர்ந்து நடத்துவது குறித்து அதன் நிலைத் தன்மை மற்றும் அதன் பயன்கள் குறித்து ஆய்வு செய்வது குறித்து ஒரு குழு அமைக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண் 1857, வேளாண்மைத் துறை, நாள் 20-12-1988-ன் வாயிலாக தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தைக் கலைத்து அரசு ஆணை வெளியிட்டது.

**129—**

**விவசாயக் கல்லூரி**

**வினா எண் 23164—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**130—**

## கொள்முதல் நிலையம்

**வினா எண் 23169—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, சங்கராபுரத்தில் வாழைத்தார் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதி, சங்கராபுரத்தில் வாழைத்தார் கொள்முதல் நிலையம் அமைக்க தற்போது அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**131—**

## விவசாயக் கருவிகள்

**வினா எண் 23190—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு ஊராட்சியின் மூலம் நவீன விவசாயக் கருவிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது துவக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



**132—**

## வேளாண்மைப் பட்டதாரிகள்

**வினா எண் 23330—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மைக் கல்லூரியில் பட்டம் பெற்ற மாணவர்கள் அரசு பதவிக்காகக் காத்திருக்காது நேரடியாக வேளாண்மையில் ஈடுபட அறிவுறுத்தப்படுவார்களா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைப் பட்டம் பெற்ற மாணவர்கள் வேளாண் துறையை அணுகி பணி சார்பாக விவரங்களைக் கேட்டால் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட அறிவுரை வழங்கப்படும். பொதுவாக வேளாண்மைப் பட்டதாரிகளுக்குத் தனியாக ஆலோசனை மையம் அமைக்கவும் தனியார் அல்லது பொது நிறுவனங்களில் பணிக்கு சேரவும் (உரம், பூச்சி மருந்து, உயிர் உரங்கள் தயாரித்தல், விதை உற்பத்தி செய்தல்) தனியார் தொண்டு நிறுவனங்களில் சேர்ந்து பணியாற்றவும் அல்லது தனியாக வேளாண்மை சார்ந்த தொழில் தொடங்க வங்கிகளில் கடன் பெறவும், பயிர் மருத்துவ ஆலோசனை நிலையம் அமைத்து பணி செய்யவும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் நபார்டு (NABARD) வங்கி மூலமாக கடனுதவி பெறலாம். இதுமட்டுமல்லாமல் படித்த பட்டதாரிகள் தங்களுடைய வயல்களில், தாங்கள் பெற்ற தொழில்நுட்பத் திறனைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியினை இரண்டு மடங்காக்கி ஏற்றுமதி செய்யவும் ஆலோசனை வழங்கப்படும்.

**133—**

## கரும்பு விலை நிர்ணயம்

**வினா எண் 23356—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) கரும்பு உற்பத்தியாளர்களுக்கு அரசு நிர்ணயித்த விலையை தனியார் சர்க்கரை ஆலைகள் தராமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கரும்பு உற்பத்தியாளர்களுக்கு நிர்ணயித்த சரியான விலை கிடைக்க தக்க நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1998-99 கரும்பு அரவைப் பருவத்திலிருந்து மாநில அரசு பரிந்துரை விலையைத் தனியார் ஆலைகள் வழங்குவதில்லை. மாநில அரசு பரிந்துரை விலையை வழங்க தனியார் ஆலைகளை நிர்பந்திக்கக் கூடாது என தனியார் ஆலைகள் தொடுத்த நீதிமன்ற வழக்கில் இடைக்கால உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. நிலுவையில் இருக்கும் வழக்கைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**134—**

**பருத்தி விதை ஆராய்ச்சி மையம்**

**வினா எண் 23371—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் பருத்தி விதை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூரில் பருத்தி விதை ஆராய்ச்சி மையம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.



2003 மே 10]

**135—**

**வேளாண்மைக் கல்லூரி**

**வினா எண் 27708—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் ஓர் வேளாண்மைக் கல்லூரி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**136—**

**வாடகை குறைப்பு**

**வினா எண் 27709—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் நெல் அறுவடை இயந்திரம் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படுவதில் வாடகை குறைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) நெல் அறுவடை இயந்திரங்களுக்கான வாடகைக் கட்டணம் குறைக்க அரசுக்கு உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**137—**

**மானிய விலையில் கருவிகள்**

**வினா எண் 27715—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை அதிக அளவில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசன உபகரணங்களை மானிய விலையில் வழங்கி தென்னை சாகுபடியைப் பெருக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தென்னை அதிக அளவில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசன உபகரணங்கள் மானிய விலையில் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இத்திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 1991-92 ஆம் ஆண்டு முதல் மத்திய மாநில அரசுகளின் மானிய திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**138—**

**தூர் வாரும் பணி**

**வினா எண் 27719—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியிலுள்ள ஏரி, குளம் மற்றும் குட்டைகளை வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆழப்படுத்தி மற்றும் தூர் வார அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதியிலுள்ள ஏரி, குளம் மற்றும் குட்டைகளை வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆழப்படுத்தி தூர் வார தனித் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**139—**

**தனி நிதியம் ஏற்படுத்துதல்**

**வினா எண் 27726—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடர்ந்து இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் மாவட்ட விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் வகையில் தனி நிதியம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் தஞ்சாவூர், நாகப்பட்டினம் திருவாரூர், கடலூர் மாவட்ட விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் வகையில் தனி நிதியம் ஏற்படுத்த, செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**140—**

**கசிவு நீர்க் குட்டைகள்**

**வினா எண் 27736—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மலைப்பகுதியாகவும், அதிக நீரோடைகள் கொண்ட பகுதியாகவும் இருப்பதால், இப்பகுதியில் கசிவு நீர்க் குட்டைகள் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கசிவு நீர்க் குட்டைகள் அமைப்பதற்கு திட்டம் ஏதும் வேளாண்மைப் பொறியியல் துறையில் தற்பொழுது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**141—**

**நவப்ரா திட்டம்**

**வினா எண் 28756—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மைத் துறை நவப்ரா திட்டம் சரிவர செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைத் துறை நவப்ரா திட்டம் சரிவர செயல்படுத்தப்பட்டு வருகிறது.



**142—**

**கரும்புச் சாலை**

**வினா எண் 29943—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் முக்கிய போக்குவரத்து சாலையான அத்திகீழ் நீர்க்குன்றம் சாலை 3.6 கி.மீ. சாலையை கரும்புச் சாலை திட்டம் மூலம் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் முக்கிய போக்குவரத்து சாலையான அத்திகீழ் நீர்க்குன்றம் சாலை 3.6 கி.மீ. சாலையை கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**143—**

**பால்வாடி**

**வினா எண் 1383—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், அப்பியம்பேட்டை கிராமத்தில் பால்வாடி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் அப்பியம்பேட்டை கிராமத்தில் பிராதன மையமே (ஊட்டச் சத்து மையம் மற்றும் குழந்தை வளர்ச்சி நல மையம் இரண்டும் இணைந்த மையமாக) செயல்படுத்துவதால் வினா எழ அவசியம் ஏற்படாது.

[2003 மே 10

144—

**முதியோர் இல்லங்கள்**

**வினா எண் 3320—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதரவற்ற முதியோர்களைப் பாதுகாக்க முதியோர் இல்லங்களை நடத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

ஆதரவற்ற முதியோர்களைப் பாதுகாக்க முதியோர் இல்லங்கள் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகிறது.

145—

**ஊட்டச் சத்து**

**வினா எண் 3332—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கருவுற்றிருக்கும் பெண்களுக்கான ஊட்டச் சத்துத் திட்டம் மீண்டும் தொடர அரசு நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3வது திட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள கர்ப்பிணி/ பாலூட்டும் தாய்மார்களுக்கு அவர்களின் பேறு காலத்திற்கு ஆறு மாதங்கள் முன்னரும் பின்னரும் ஊட்டச் சத்துணவு கொடுக்கப்பட்டு வருகிறது.



2003 மே 10]

146—

**இடம் ஒதுக்கீடு**

**வினா எண் 3351—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம் ஆவடி நகராட்சிக்குட்பட்ட திருமுல்லைவாயில் பகுதியில் மகளிர் மன்றம் செயல்பட இடம் ஒதுக்கீடு குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படத் துவங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) திருமுல்லைவாயில் பகுதியில் சமூக நலத் துறை சார்பாக மகளிர் மன்றம் ஏதும் இயங்கவில்லை. மகளிர் மன்றம் மற்றும் மகளிர் குழுக்கள் செயல்பட இட ஒதுக்கீடு கேட்டு கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) திட்டம் செயல்பட தற்போது சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

147—

**கட்டட வசதி**

**வினா எண் 3887—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஓலக்கூர் ஒன்றியத்தில் பாதிரி ஊராட்சி சத்துணவு மையத்திற்கு கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* செஞ்சி தொகுதி, ஓலக்கூர் ஒன்றியத்தில் பாதிரி ஊராட்சி சத்துணவு மையத்திற்கு சமையல் கூடம் இன்றைய நிலையில் இல்லை என்றாலும் 2002-2003 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ.68,000/- மதிப்பீட்டில் மேற்படி பணி செய்யப்படும்.

*(ஆ)* வினா எழவில்லை.

**148—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 5088—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டித் தொகுதி, அழகப்பசமுத்திரம் ஊராட்சியில் சத்துணவுக் கூடம் அமைத்துத்தர இயலுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* பண்ருட்டித் தொகுதி ஊராட்சியில் (1) அழகப்பசமுத்திரம் என்றும், (2) அழகப்பசமுத்திரம் காலனி என்றும், இரண்டு சமுதாய ஊட்டச் சத்து மையங்கள் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அழகப்பசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 48 பிள்ளைகளுக்குப் பழைய பள்ளிக் கட்டடத்தில் உணவு தயாரிக்கப்பட்டு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டில் இம்மையத்திற்கு புதிய கட்டடம் கட்டிக் கொடுக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது. மேலும், அழகப்பசமுத்திரம் ஊராட்சியைச் சேர்ந்த மோழாண்டிகுப்பம் கிராமத்தில் ஆர்.சி. நடுநிலைப் பள்ளியில் 440 பிள்ளைகளுக்குச்



சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இம்மையத்திற்குப் பள்ளி நிர்வாகமே கட்டடம் கட்டிக் கொடுத்துள்ளது.

*(ஆ)* வினா எழவில்லை.

**149—**

**சத்துணவு**

**வினா எண் 5554—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, எட்டிக்குட்டை கிராம ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி மாணவர்/மாணவியர்களுக்கு மதியம் சத்துணவு உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த எட்டிக்குட்டை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 33 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளி 2-1-2001 முதல் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குப் புதிய சத்துணவு மையம் துவங்க பிரேரணைகள் வந்தவாசி ஊராட்சி ஒன்றிய ஆணையரால் பெறப்பட்டு, 26-4-2002 முதல் சத்துணவு மையம் துவங்க ஆணை வழங்கப்பட்டு, 33 மாணவ/மாணவிகளுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

**150—**

**அனாதைப் பெண்களுக்கு உதவி**

**வினா எண் 6353—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதரவற்ற அனாதைப் பெண்களுக்கு வாழ்வளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) (i) ஆதரவற்ற அனாதைப் பெண் குழந்தைகளைப் பராமரிக்க குழந்தைகள் காப்பகங்களும், ஆதரவற்ற பெண்களுக்கு 18 முதல் 40 வயது வரை சேவை இல்லங்களில் மேற்படி மகளிருக்கு இலவச உணவு, உடை, இருப்பிடம், தொழிற் கல்வி மற்றும் உயர் கல்வியும் அளிக்கப்படுகின்றன. அன்னை தெரசா ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ.10,000/- திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டு வருகின்றது.

(ii) ஆதரவற்ற விதவைகளுக்கும், ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் 18 வயதிற்கு மேல் வாரிசுகள் இருந்தாலும் முதியோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ் மாதம் உதவித் தொகையாக ரூ.200/- வழங்கப்பட்டு வருகிறது.

**151—**

**பால்வாடி**

**வினா எண் 6716—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கொரநாட்டுக்கருப்பூர், நத்தம் கிராமத்தில் பால்வாடி அமைத்துத்தர அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, கொரநாட்டுக் கருப்பூர், நத்தம் கிராமத்தில் புதிய பால்வாடி மையம் துவங்க வாய்ப்பில்லை. காரணம் மேற்படி கிராமத்தில் மக்கள் தொகை குறைவாக உள்ளது. 600 நபர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, மக்கள் தொகை, பயனாளிகள் மற்றும் தற்போது உள்ள மையத்திற்கும், அருகிலுள்ள மையத்திற்கும் இடைப்பட்ட தூரம் குறைவாக இருப்பதால் அரசு விதிகளின்படி புதிய ஊட்டச் சத்து மையம் (பால்வாடி) ஏற்படுத்த வாய்ப்பில்லை.

**152—**

**பால்வாடி கட்டடம்**

**வினா எண் 6983—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி வட்டம், கே.ஏ. கண்டிகை கிராமத்தில் உடனடியாக பால்வாடி கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருத்தணி வட்டம், கே.ஏ. கண்டிகை கிராமத்தில் 2002-2003 ஆம் நிதியாண்டில், "சம்பூரண கிராம ரோஜ்கார் யோஜனா" (S.G.R.Y) திட்டத்தின்கீழ் அங்கன்வாடி மைய கட்டடம் (பால்வாடி) கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

**153—**

**அரசு ஊழியர்களாக்குதல்**

**வினா எண் 7141—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவுத் திட்டத்தின்கீழ் தொகுப்பூதியம் பெறும் ஊழியர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரித்து பாதுகாக்கும் திட்டம் உண்டா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சத்துணவுத் திட்டத்தின்கீழ் தொகுப்பூதியம் பெறும் ஊழியர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரித்து பாதுகாக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**154—**

**கட்டடத்தைப் புதுப்பித்தல்**

**வினா எண் 7159—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி 14-வது வார்டு பாரக்கல்லூரியில் இருக்கும் கிராம பாலர் பள்ளி இடிந்துவிழும் நிலையில் உள்ளதை இந்த நிதியாண்டில் புதுப்பித்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி 14-வது வார்டு பாரக்கல்லூரியில் இருக்கும் கிராம பாலர் பள்ளி இடிந்துவிழும் நிலையில் உள்ளதைப் புதுப்பித்து கொடுக்க உரிய முன்மொழிவுகள் பெற்று, இந்தப் பணி 2002-2003 ஆம் நிதி ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

**155—**

**உதவித் தொகை**

**வினா எண் 7564—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



45 வயதுக்குட்பட்ட ஊனமுற்றோருக்கான உதவித் தொகை வருடத்திற்கு 260 பேர்களுக்குதான் வழங்க வேண்டும் என்ற அரசாணை விதியை மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

2001-2002ஆம் ஆண்டு பயனாளிகளின் எண்ணிக்கை 7400-லிருந்து 8400-ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளதால், மாவட்டங்களின் தேவைக்கேற்ப உயர்த்தி வழங்கப்படும்.

**156—**

**ஊனமுற்றோர்களுக்கு உதவித் தொகை**

**வினா எண் 7565—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊனமுற்றோருக்கான திருமண உதவித் தொகை ரூ.7,000-லிருந்து ரூ.10,000 ஆக அரசு உயர்த்துமா?

(ஆ) 45 வயதுக்கு மேற்பட்ட ஊனமுற்றோருக்கான உதவித் தொகை வழங்கி வரும் பணியை மேற்கொள்ளும் வருவாய்த் துறையிடமிருந்து எடுத்து மறுவாழ்வுத் துறையிடம் ஒப்படைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) நிதி நெருக்கடியின் காரணமாக, ஊனமுற்றோருக்கு தற்போது வழங்கப்படும் திருமண உதவித் தொகை ரூ7,000/- தொடர்ந்து வழங்கப்படும்.

(ஆ) இது தொடர்பான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 மே 10

**157—**

### கடனுதவியை உயர்த்துதல்

**வினா எண் 7566—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊனமுற்றோருக்கான கடனுதவித் திட்டத்தில் ரூ. 2000/- மானியம் வழங்குவதை ரூ. 5000/- ஆக அதிகப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஊனமுற்றோர் நல்வாழ்வுத் துறைக்கு வாகன வசதி போன்ற அடிப்படை வசதியை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஊனமுற்றோருக்கான கடனுதவி திட்டத்தில் ரூ.2,000/- மானியம் வழங்குவதை ரூ.5,000/- ஆக அதிகப்படுத்துவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) ஏற்கெனவே 11 மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலகங்களில் ஈப்பு உள்ளது. ஈப்பு வசதி இல்லாத 16 மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலகங்களுக்காக, 16 ஈப்புகள் வாங்க படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

**158—**

### சத்துணவுக் கூடம்

**வினா எண் 10523—திரு. தி. வேல் முருகன் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட அப்பியம்பேட்டை கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூகநலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட அப்பியம்பேட்டை கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைக்க, ஊராட்சி ஒன்றிய ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படித் தொகுதியில் 132 சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 21,456 பிள்ளைகள் பயன்பெற்று வருகிறார்கள். 2002-2003 ஆம் ஆண்டில் பொது நிதியின்கீழ் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில், மேற்படி அப்பியம்பேட்டை கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைத்துதர நடவடிக்கையில் உள்ளது.

**159—**

### சத்துணவுக் கூடம்

**வினா எண் 10525—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி வட்டம், புலியூர்- பெத்தனான்குப்பம் ஊராட்சியில் சத்துணவுக் கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி. பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், புலியூர் பெத்தனான்குப்பம் என்பது ஒரு குடியிருப்பு. இக்குடியிருப்பு பகுதிக்கு பள்ளிக்கூடம் ஏதும் இல்லை. இங்கு 43 வீடுகளும் மொத்தம் 98 மக்கள் தொகை மட்டுமே உள்ளது. எனவே, மக்கள் தொகை குறைவாக உள்ளதாலும், இங்கு பள்ளிக்கூடம் ஏதும் இல்லாததாலும் சத்துணவுக் கூடம் அமைக்க வாய்ப்பில்லை.

[2003 மே 10

**160—**

### தொட்டில் குழந்தை திட்டம்

**வினா எண் 12118—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக தொட்டில் குழந்தை திட்டத்தை விரிவாக்கிட சிறப்பு திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொட்டில் குழந்தை திட்டம் 1992 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் பெண் சிசுவதை அதிகமாக நிலவும் சேலம் மற்றும் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் விரிவாக்கமாக 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.1296 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒன்றாக நான்கு வரவேற்பு மையங்கள்; ஈரோடு மற்றும் நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் மொத்தம் 188 தொட்டில் மையங்கள் ஆகியன அமைக்கப்பட்டும்; பெண் சிசுவதை மற்றும் பெண் கருகலைப்பு ஆகியவற்றை தடுக்கும் ஆய்வுக் கூட்டங்கள் விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் விளம்பரங்கள் மூலமும் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**161—**

### ஊட்டச் சத்து மையம்

**வினா எண் 12134—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், இடைக்கால் கிராமத்தில் ஊட்டச்சத்து மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி வட்டாரத்தில் இடைக்கால் கிராமத்தில் ஏற்கனவே ஊட்டச்சத்து மையம் மற்றும் சத்துணவு மையமும் இணைந்து, இணைந்த மையம் செயல்படுவதாலும், கிராம பயனாளிகள் 0-36 மாதக் குழந்தைகளும், 3-5 வயதுக் குழந்தைகளும் விடுபடாமல் பயன் பெற்று வருவதாலும், கூடுதலாக புதிய மையம் ஆரம்பித்திட அவசியம் எழவில்லை.

**162—**

### கட்டடங்களைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 12486—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள சத்துணவு மையங்கள் எத்தனை?

(ஆ) அவைகளில் பழுதடைந்துள்ள கட்டடங்களை பழுதுபார்க்க சிறப்பு நிதி ஒதுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள சத்துணவு மையங்களின் எண்ணிக்கை 184.

(ஆ) அவைகளில், 2002-2003 ஆம் ஆண்டிற்கு பழுதடைந்துள்ள 22 சத்துணவு மையங்களை சீரமைக்க ரூ.1,91,000/- இலட்சம் மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

163—

**முதியோர் உதவித்தொகை**

**வினா எண் 12904—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர் உதவித்தொகை தொடர்ந்து ஆறுமாத காலமாக வழங்கப்படாமல் உள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இத்தொகை வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(இ) சேலம் மாவட்டத்தில் எவ்வளவு பேர் முதியோர் உதவித் தொகை பெறுகிறார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இக்கேள்விகளுக்கு இடமில்லை. ஏனென்றால், பிப்ரவரி 2002 மாதத்திற்கான (முடிய) முதியோர் உதவித்தொகை பயனாளிகளுக்கு 19-03-2002 அன்று அனுப்பப்பட்டுவிட்டது.

(இ) 71,261.

164—

**விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

**வினா எண் 14708—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமூக நலத் துறை மூலம் ஏழைப் பெண்களுக்கு வழங்கப்படும் உதவிகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு சார்பில் ஒரு குழு அமைக்கப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சமூக நலத் துறை மூலம் ஏழைப் பெண்களுக்கு வழங்கப்படும் உதவிகள் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்த, பல்வேறு விழிப்புணர்ச்சி நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. எனவே அரசு சார்பில் தனியாக ஒரு குழு அமைக்கத் தேவை ஏற்படவில்லை.

165—

**உதவித் தொகையை உயர்த்துதல்**

**வினா எண் 14760—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது விதவைகளுக்கு வழங்கி வரும் உதவித்தொகையை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

அரசு (நிலை) ஆணை எண் 86, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 2-6-2000-ல் முதல் மாத ஓய்வூதியத்தொகை 1-4-2000 முதல் ரூ.150-லிருந்து ரூ.200-ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. எனவே, இதனை அதிகப்படுத்த இயலாது.

166—

**கணிப்பொறி இயந்திரம்**

**வினா எண் 14947—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்த விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு கணிப்பொறி அளித்து மானியத்துடன் கூடிய கணிப்பொறி இயந்திரம் வழங்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் பின்தங்கிய விதவையர், கணவனால் கைவிடப்பட்டவர் மற்றும் ஆதரவற்ற மகளிர் தனது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட சமூக நலத் துறை வாயிலாக ஆறு சேவை இல்லங்கள் மாநிலமெங்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் சேவை இல்லத்தில் ஆறுமாத கால கணிப்பொறி பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு மானியத்துடன் கூடிய கணிப்பொறி வழங்க நிதி ஒதுக்கீடு இல்லை.

**167—**

**விழிப்புணர்வு**

**வினா எண் 14950—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சமூக நலத் துறை மூலம் ஏழைப் பெண்களுக்கு வழங்கப்படும் உதவிகள் பற்றி கிராமசேவகிகளாக பணிபுரிபவர்கள் மூலம் கிராம மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சமூக நலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் ஏழைப் பெண்களுக்கான உதவித் திட்டங்கள் பற்றிய விவரங்கள் கிராம சேவிகாக்கள் மூலமாகத்தான் கிராம பொதுமக்களிடம் தெரிவிக்கப்பட்டு உதவிகள் வழங்கப்படுகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.



2003 மே 10]

**168—**

**குழந்தைகள் காப்பகங்கள்**

**வினா எண் 14996—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகள் காப்பகங்களை அடிப்படை வசதிகளுடன் குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவும் மையங்களாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்காக தமிழ்நாடு அரசின் மானியத்துடன் தமிழ்நாடு மாநில சமூக நல வாரியத்தின்கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் 185 குழந்தைகள் காப்பகங்கள் அடிப்படை வசதிகளுடன், குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவும் மையங்களாக செயல்பட்டு வருகின்றன.

**169—**

**பெண் சிசுக் கொலை**

**வினா எண் 14998—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பெண் சிசுக் கொலைகளைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

**170—**

### நிவாரண உதவிகள்

**வினா எண் 15166—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகவும் ஊனமடைந்து வெளியில் வரமுடியாத நிலையிலுள்ளவர்கள் உதவி வேண்டி விண்ணப்பம் அனுப்பினால் அதிகாரிகளே நேரடியாக சென்று அவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மிகவும் கடுமையாக ஊனத்தால் பாதிக்கப்பட்டு நடக்க இயலாதவர்கள் விண்ணப்பம் அனுப்பினால் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலரோ அல்லது இதர அலுவலர்களோ அவர்களை நேரில் சென்று பார்த்து அவர்களின் நிலைமை அறிந்து அவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகள் வழங்கப்படும். ஆனால் 75% மேல் ஊனமுற்ற நபர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளை தேர்வு செய்ய மருத்துவக் குழுவின் முன் இந்த பராமரிப்பு உதவித்தொகை ரூ.150/- பெற அவர்கள் நேரில் ஆஜராக வேண்டியிருக்கும்.



**171—**

### குழந்தைகள் நல மையம்

**வினா எண் 16467—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூடங்குளம் ஊராட்சி, வைராவிகிணறு கிராமத்தில் குழந்தைகள் நல மையம் (பால்வாடி) அமைத்துக் கொடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூடங்குளம் ஊராட்சி, வைராவிகிணறு கிராமத்தில், குழந்தைகள் நல மையம் (பால்வாடி) அமைப்பதற்கு இது போன்று விடுபட்ட கிராமங்களுடன் வைராவிகிணறு கிராமமும் கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இம்மையம் அமைக்க ஒப்புதல் பெற்றபின் செலவினத் தொகை உலக வங்கி நிதி உதவி பெறும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணி-3 திட்டத்தின்கீழ் செலவு மேற்கொள்ளப்படும்.

**172—**

### முதியோர் இல்லம்

**வினா எண் 19182—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் வறுமையில் உழலும் முதியோர் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் முதியோர் இல்லம் துவங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூகநலத் துறை அமைச்சர்:**

(அ) குடியாத்தம் நகரில் முதியோர் இல்லம் துவங்குவதற்கு அரசிடம் திட்டம் எதுவும் இல்லை. ஆனால் மத்திய அரசு மானிய உதவியுடன், செயின்ட் அன்ஸ் பாதி ஏஜ்டு என்ற தொண்டு நிறுவனம், குடியாத்தம் சத்தியா நகரில் 25 முதியோர்களை உள்ளுரைவோராக கொண்டு, ஒரு இல்லம் நடத்தி வருகிறது. இன்னும் ஏதாவது தொண்டு நிறுவனம் முதியோர் இல்லம் நடத்தி மானியம் வேண்டி விண்ணப்பித்தால் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**173—**

**மகளிர் விடுதி**

**வினா எண் 20299—திரு செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் அரசு பணிபுரியும் மகளிர் விடுதி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் பயன் அடைந்துள்ளனர்?

(இ) இல்லை எனில், விடுதி எப்போது கட்டப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

(இ) சேலம் மாநகரில் தனியார் தொண்டு நிறுவனம் மூலம் பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் அரசால் புதிதாக பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்படுத்த வேண்டுமெனில் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவேண்டும். இதற்காக கூடுதல் நிதி தேவைப்படும். பணியிடங்கள் இன்றியும், அரசின் நிதி நெருக்கடி காரணமாகவும், சேலத்தில் தற்பொழுது அரசால் பணிபுரியும் மகளிர் விடுதி துவங்க வாய்ப்பில்லை.



**174—**

**கல்வி வசதி**

**வினா எண் 20302—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகத்தின் மூலம் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு கல்வி வசதி அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் பயன் அடைந்துள்ளார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 240 பேர்.

**175—**

**சத்துணவுக் கூடங்களைப் புதுப்பித்தல்**

**வினா எண் 23500—திரு சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, உடுமலை ஒன்றியத்திலுள்ள பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடங்களை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை, உடுமலை ஒன்றியத்திலுள்ள, பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடங்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது ரூ.1,00,000/- மதிப்பீட்டில் 20 மையங்களை பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**176—**

**சத்துணவுக் கூடங்களைப் புதுப்பித்தல்**

**வினா எண் 24117—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவுக் கூடங்கள் பழுதடைந்துவிட்டால், அதை பொதுப் பணித் துறை பழுதுபார்த்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சத்துணவுக் கூடங்கள் பராமரிக்கும் பணி பொதுத் துறையின் பொறுப்பில் இல்லை. என்றாலும், 2002-2003-ம் ஆண்டில் சத்துணவுக் கூடங்களை சீரமைக்க ரூ.12.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர அ.ஆ. (நி) எண் 75, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 19-6-2002-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையில், ஊரகம் மற்றும் நகரப் பகுதிகளில் (பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி) முன்னுரிமைப் பணிகளான புதிய சத்துணவுக் கூடம்/புதிய சமையல் கூடம் கட்டுதல் மற்றும் பழைய சத்துணவுக் கூடங்கள்/பழைய சமையல் கூடங்கள் பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகளை சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு திட்ட வழிகாட்டி நெறிமுறைகளுக்கு உட்பட்டு பரிந்துரைக்க வகைசெய்யப்பட்டுள்ளது.

**177—**

**சுய உதவிக் குழுக்கள்**

**வினா எண் 30117—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) நீலகிரி மாவட்டத்தில் எத்தனை சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன?

(ஆ) அவற்றில் எத்தனை மகளிர் அங்கம் வகிக்கிறார்கள்?

(இ) எத்தகைய பணிகளை அந்தக் குழுக்கள் ஏற்று நடத்தி வருகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டத்தில் 31-12-2002 முடிய 2,576 சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) அவற்றில் மொத்தம் 38,262 மகளிர் அங்கம் வகிக்கிறார்கள்.

(இ) நீலகிரி மாவட்டத்தில் ரூ.709.929 இலட்சம் செலவில் பொது விநியோகக் கடை, மலர் சாகுபடி, காகித பைகள் தயாரித்தல், ஊதுபத்தி தயாரித்தல், ரொட்டி தயாரித்தல் போன்ற பல்வேறு தொழில்களை ஏற்று நடத்தி வருகின்றன.

**178—**

**கட்டட வசதி**

**வினா எண் 1150—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டத்தில் அலமேலுமங்காபுரத்தில் உள்ள ஆதி திராவிடர் நலத் துறை மேல்நிலைப் பள்ளிக்கு போதுமான கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் எப்போது கட்டப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், அலமேலுமங்காபுரத்தில் உள்ள ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு ரூ. 29.50 இலட்சம் செலவில் 9 வகுப்பறைகள்

கொண்ட புதிய பள்ளிக் கட்டடம் கட்ட அனுமதி அளித்து கடந்த 15-10-2001 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. தற்போது அதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**179—**

**விடுதிகள்**

**வினா எண் 1473அ—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஒலக்கூரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதி தனித்தனியாக கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதியதாக மாணவ, மாணவியர் விடுதிகள் துவங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**180—**

**சாதிச் சான்றிதழ்**

**வினா எண் 1600—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் வசிக்கும் குரும்பன்ஸ், குறிச்சான் பழங்குடியின மக்களுக்கு பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாதிச் சான்று கோருபவர் அவர் கோரும் சான்றுக்கு ஆதாரம்/ஆவணங்கள் ஒப்படைக்கும் நிலையில் அவைகளின் மெய்த்தன்மை குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உண்மை எனக் கண்டறியப்படும் நேர்வுகளில் பழங்குடியின சாதிச் சான்றுகள் விரைவாக வழங்கப்படும்.

**181—**

**தாட்கோ தனி வங்கியாக்குதல்**

**வினா எண் 2731—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ தனி வங்கியாக மாற்றப்படுமா?

(ஆ) தாட்கோ அலுவலகங்களை ஆக்கிரமித்திருக்கும் இடைத் தரகர்களை ஒழிக்க தனிப்படை அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 'தாட்கோ' நிறுவனம் ஏற்கனவே தேசிய ஆதிதிராவிடர் நிதி மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து கடன் தொகை பெற்று, குறைந்த வட்டிக்கு அதாவது 7 முதல் 9 சதவீத வட்டிக்கு நேரடியாகவே பருவக் கடன் அளித்து வருகிறது. எனவே, தாட்கோவை தனி வங்கியாக மாற்றத் தேவையில்லை.

(ஆ) விண்ணப்பிக்கப்படும் கடன் தொகைக்கேற்ப கடன் விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சியர்/கூடுதல் ஆட்சியர் மற்றும் திட்ட அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் மூலம் பரிசீலிக்கப்பட்டு பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுவதால் இடைத் தரகர்கள் புகுவதற்கு வாய்ப்பில்லை. எனவே தனிப்படை அமைக்க தேவை ஏற்படவில்லை.

**182—**

## கட்டட வசதி

**வினா எண் 2889—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளியில் ஆண்/பெண் தனித்தனியே கட்டடம் கட்டப்படுமா?

(ஆ) துவக்கப் பள்ளிக்கான கட்டடம் தனியே கட்டப்படுமா?

(இ) கணினி மையம் அமைத்துத்தரவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பேரணாம்பட்டு அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி ஆண்—பெண் இரு பாலரும் சேர்ந்து பயிலும் பள்ளியாகும். எனவே மாணவர், மாணவியருக்கென தனித்தனியே கட்டடம் கட்டப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

(ஆ) பேரணாம்பட்டு ஆரம்பப் பள்ளிக்கென தனியே கையகப்படுத்தப்பட்ட இடத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாகவும், பெற்றோர்-ஆசிரியர் கழக நன்கொடை மூலமாகவும் 4 தற்காலிக கட்டடங்கள் கட்டப்பட்டு அதில் பள்ளி நடைபெற்று வருகிறது.

(இ) பேரணாம்பட்டு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு கணினி மையம் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**183—**

## சாதிச் சான்றிதழ்

**வினா எண் 3393—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



பழங்குடியினர் பட்டியலில் முதலில் இனம் ஆதியன். இவ்வினத்தவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

பழங்குடியினர் இனப்பட்டியலில் முதலில் உள்ள இனம் ஆதியன் ஆகும். இவ்வினம் தமிழ்நாடு முழுவதும் உள்ளதாக எந்தவித எல்லை-வரையறையுமில்லாமல் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வின மக்கள் சாதிச் சான்று கோரி வருவாய் கோட்டாசியர்/மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஆகியோரிடம் விண்ணப்பம் செய்யும் நிலையில் உரிய விசாரணைக்கு பின்னர் சான்றுகள் வழங்கப்படும். தான் சார்ந்த சாதி குறித்து மனுதாரர்கள் தெளிவான சாட்சியங்களை அளிக்கும் நிலையில் உடனுக்குடன் சான்றுகள் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**184—**

## உணவுக் கட்டணத்தை உயர்த்துதல்

**வினா எண் 3745—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் ஆதிதிராவிட மாணவ, மாணவிகளின் உணவுக் கட்டணத்தை அரசு உயர்த்திக் கொடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளி விடுதி மாணவர்/மாணவியருக்கு வழங்கப்பட்டுவரும் உணவுக் கட்டணம், 5-12-2001 முதல் மாதம் 225/-லிருந்து மாதம் ரூ.300/-ஆக ஏற்கனவே உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

[2003 மே 10

**185—**

**விடுதி அமைத்தல்**

**வினா எண் 3837—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசியில் ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் தங்கும் வடுதி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அவினாசியில் ஆதிதிராவிடர் மாணவியருக்கான விடுதி ஒன்று ஏற்கனவே இயங்கி வருகிறது. மாணவர்களுக்கான புதிய விடுதி துவக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**186—**

**டியூட்டர்கள்**

**வினா எண் 4905அ—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிடர் வகுப்பு மாணவர்கள் தங்கும் விடுதியில் அங்குள்ள வார்டன்களே மாணவர்களுக்கு டியூட்டர்களாகவும் பணியாற்ற வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் தங்கும் விடுதியில் அங்குள்ள வார்டன்களே மாணவர்களுக்கு டியூட்டர்களாக பணியாற்றுவது ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.



2003 மே 10]

**187—**

**மேல்நிலைப் பள்ளி**

**வினா எண் 5366—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, கவரை ஆதிதிராவிடர் நலத் துறை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, கவரை ஆதிதிராவிடர் நலத் துறை உயர்நிலைப் பள்ளி 11-10-2001 நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசாணை (நிலை) எண் 70-ல் வெளியிடப்பட்ட ஆணையின்மூலம் மேல்நிலைப் பள்ளியாக தற்போது நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

**188—**

**வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 6201—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் வட்டம், சேரன்மகாதேவி பேரூராட்சியில் வாழ்ந்து வருகின்ற வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அம்பாசமுத்திரம் வட்டம், சேரன்மகாதேவி பேரூராட்சியில் பகுதி சேரன்கோவில்பத்து கிராமத்தில் புல எண் 183, 184-ல், 10.16 ஏக்கர் நிலம் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் கையகப்படுத்தப்பட்டு சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள சொந்த வீடு, வீட்டுமனை இல்லாத ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**189—**

### கல்விக் கடன் உதவி

**வினா எண் 6676—திரு. க. பாரமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999 முதல் 2001 வரை கல்லூரிகளில் படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மாணவர்களில் கல்விக் கடன் உதவி கேட்டு விண்ணப்பித்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்?

(ஆ) அதில் எத்தனை மாணவர்களுக்கு கல்வி கடன் உதவி வழங்கப்பட்டது?

(இ) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1999 முதல் 2001 வரை கல்லூரிகளில் படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் கல்விக் கடன் உதவி கேட்டு விண்ணப்பித்தவர்கள் மொத்தம் 23,741.



(ஆ) மேற்குறிப்பிட்டுள்ள மாணவர்களின் 1999-2000-ம் ஆண்டில் 6,733 மாணவ, மாணவியர்களுக்கும், 2000-2001 ஆம் ஆண்டில் 14,102 மாணவ, மாணவியர்களுக்கும் ஆக மொத்தம், 20,835 மாணவர்களுக்கு கல்விக் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(இ) வழங்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்)

| | |
|---|---|
| 1999-2000-ல் | 454.70 |
| 2000-2001-ல் | 960.60 |
| மொத்தம் | 1415.30 |

**190—**

### கட்டட வசதி

**வினா எண் 6741—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, இல்லோடு கிராமத்திலிருக்கும் ஆதிதிராவிடர் நலத் துறை மாணவர் விடுதிக்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, இல்லோடு கிராமத்தில் ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் மாணவர் விடுதி எதுவும் செயல்படவில்லை. எனவே புதிய கட்டடம் கட்டும் நிலை ஏற்படவில்லை.

**191—**

### கட்டட வசதி

**வினா எண் 6742—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, மேல்ஒலக்கூர் ஊராட்சியில் ஆதிதிராவிடர்

நலத் துறை மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் கட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மைய அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் இவ்விடுதியினைக் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு கட்டடப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

**192—**

**உதவித் தொகையை உயர்த்துதல்**

**வினா எண் 7037—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மாணவ/மாணவிகளுக்கு கல்வி நிறுவனங்களில் அரசு வழங்கி வரும் உதவித்தொகையை அதிகப்படுத்தித் தரும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**193—**

**மாணவிகள் விடுதி**

**வினா எண் 7974—திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சிதம்பரம் தொகுதி, பாளையங்கோட்டை கிராமத்தில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நலத் துறை மாணவிகள் விடுதியைத் திறப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தொகுதி, பாளையங்கோட்டை ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, தாட்கோ நிறுவனம் மூலம் கட்டிமுடிக்கப்பட்டு 8-8-2001 அன்று சிதம்பரம் தனி வட்டாட்சியரிடம் (ஆதிந) ஒப்படைக்கப்பட்டு, தற்போது இந்த விடுதியில் 50 மாணவியர்கள் அனுமதிக்கப்பட்டு விடுதி இயங்கி வருகிறது.

**194—**

**மனைப் பட்டா**

**வினா எண் 10301—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட வெள்ளலூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்பு மனைப் பட்டா வழங்க 18 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பட்டா எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட வெள்ளலூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு மனைப் பட்டா வழங்க 13.50 ஏக்கர் நிலம் கையப்படுத்தி வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

[2003 மே 10

195—

**இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 12711—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர் மக்களுக்கு, அவர்கள் குடியிருக்கும் இடத்தையே இலவச வீட்டுமனைப் பட்டாவாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

பேராவூரணி வட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு கிராமத்தில் வசித்துவரும் ஆதிதிராவிட மக்களுக்கு ஏற்கனவே அவர்கள் குடியிருக்கும் இடம் நத்தம் புறம்போக்காக இருந்தவைகளுக்கு பேராவூரணி வட்டாட்சியரால் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

196—

**கட்டட வசதி**

**வினா எண் 13168—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் ஆதிதிராவிடர் நலத் துறை மாணவர் விடுதிக்கு சொந்த கட்டடம் புதியதாக கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் ஆதிதிராவிடர் நலத் துறை விடுதிகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்குள் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதைத் தொடர்ந்து 143 விடுதிகளுக்கு உடனடியாக இடத்தேர்வு செய்து முடித்து தற்போது முதல் கட்டமாக கட்டடப் பணிகள் துவக்கப்படவுள்ள விடுதிகளில் விளாத்திக்குளம் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியும் ஒன்று விரைவில் கட்டுமானப் பணிகள் துவங்கப்படும்.

197—

**மாற்று இடம்**

**வினா எண் 13184—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, கடப்பேரியிலுள்ள ஆதிதிராவிடர் நலத் துறை நடுநிலைப் பள்ளிக்கு மாற்று இடம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, கடப்பேரி ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டத் தேவையான இடம் வழங்குவது குறித்து மாவட்ட ஆட்சியரால் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**198—**

**மாணவர் இல்லம்**

**வினா எண் 15133—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் ஒன்றியம், கீழமுடிமன் ஆர்.சி. உயர்நிலைப் பள்ளியில் ஆதிதிராவி ர் ம ணவர் இல்லம் திறக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

புதியதாக மாணவ/மாணவியர் விடுதிகள் திறக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**199—**

**கட்டட வசதி**

**வினா எண் 16431—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, செங்காடு அரசினர் ஆதிதிராவிடர் நல விடுதி தனியார் கட்டடத்தில் உள்ளதால், அந்த ஆதிதிராவிடர் நல விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். வாடகை கட்டடத்தில் இயங்கிவரும் செங்காடு அரசு ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிக்கு ரூ.31.50 இலட்சம் மதிப்பீட்டில் அரசு கட்டடம் தற்போது கட்டப்பட்டு வருகிறது.



**200—**

**இட ஒதுக்கீடு**

**வினா எண் 16602—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத் துறையில் ஆதிதிராவிடர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவது போல் தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு வழங்க அரசு திட்டம் தீட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுத் துறையில் ஆதிதிராவிடர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவது போல் தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

# பட்டியல் 27

**1—**

**சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம்**

**வினா எண் 77—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூரில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு அவர்தம் தொகுதிகளில் அலுவலகம் கட்ட ரூ.4.85 இலட்சம் வீதம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கான அலுவலகம் கட்டும் பணித்தளம் மலை பிரதேசத்தில் உள்ளதால் மேற்கண்ட அரசாணையில் அனுமதிக்கப்பட்ட ரூ.4.85 இலட்சம் போதாது என்ற காரணத்தால் குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.7.26 இலட்சத்திற்கு தலைமைப் பொறியாளர் அனுமதி கோரியுள்ளார். மேற்கண்ட திருத்திய மதிப்பீட்டிற்கு அரசின் திருத்திய நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட உடன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மூன்று மாத காலத்திற்குள் முடிக்கப்பெறும்.

**2—**

**பாலம்**

**வினா எண் 214—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்ட பளுகல் வருவாய் கிராமம், நெய்யாறு இடதுக்கரைக் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பரக்குன்று பாலம் உடைந்திருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை புதிதாகக் கட்ட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) நபார்டு நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெற்று இப்பாலத்தையும் அது அமைந்துள்ள மருதங்கோடு சாலையையும் சுமார் ரூபாய் 112.00 இலட்சம் செலவில் சீரமைப்பதற்கான செயற்குறிப்பு பரிசிலனையில் உள்ளது.

**3—**

**உயிர் இழப்பு**

**வினா எண் 221—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தோர் எத்தனை பேர்?

(ஆ) அதனால் கள்ளச்சாராயத்தைக் கட்டுப்படுத்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் அருந்தியதால் 2000 ஆம் ஆண்டு 16 நபர்கள் மரணம் அடைந்துள்ளனர். 2001 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் வரை கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தோர் எவரும் இல்லை.

(ஆ) கள்ளச்சாராயக் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு மதுவிலக்குச் சட்டப் பிரிவு 4(1)(எஎ)-இல் ஆறுமாதங்கள் கடும் சிறைத் தண்டனை அல்லது ரூபாய் 2,000/- அபராதம், பிரிவு 4(1)(எஎஎ)-இல் மூன்று ஆண்டுகள் வரை கடுங்காவல் மற்றும் ரூபாய் 10,000/- வரை அபராதமும் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[2003 மே 10

4—

### கிருஷ்ணா நதிநீர்

**வினா எண் 286—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2000 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து கிருஷ்ணா நதிநீர் கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து எத்தனை டி.எம்.சி. நீர் திறந்துவிடப்பட்டது?*

*(ஆ) அதில் பூண்டி ஏரியிலிருந்து புழல் ஏரிக்கு எத்தனை டி.எம்.சி. தண்ணீர் வந்தது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சென்னை நகருக்கு குடிநீர் போதுமானதாக இல்லாததால் ஆந்திரா மாநிலத்திலுள்ள கிருஷ்ணா நதிநீரில் 15 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க ஆந்திர அரசும் தமிழ்நாடு அரசும் 18-4-1983 அன்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டன. இதன்படி கிருஷ்ணா நீரை ஆந்திராவில் உள்ள ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து தமிழ்நாட்டிலுள்ள பூண்டி நீர்த்தேக்கத்திற்கு ஆண்டு தோறும் 15 டி.எம்.சி. தண்ணீரை விடுவதென்று முடிவு செய்யப்பட்டது. 2000 ஆம் ஆணடு மே மாதத்திலிருந்து 2001 மே மாதம் வரை ஒரு வருடத்தில் கிருஷ்ணா நதிநீர் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து 6,688 டி.எம்.சி. நீர் திறந்து விடப்பட்டது.

(ஆ) 6,688 டி.எம்.சி. தண்ணீரில் இழப்பு போக மீதமுள்ள நீர் பூண்டி ஏரியிலிருந்து புழல் ஏரிக்கு வந்தது.

5—

### சாலையை அகலப்படுத்துதல்

**வினா எண் 483—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், மன்னார்புரம் விலக்கிலிருந்து திசையன்விளை செல்லும் சாலையினை அகலப்படுத்திட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

6—

### நெடுஞ்சாலையை செப்பனிடுதல்

**வினா எண் 676—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) செஞ்சி தொகுதியில் உள்ள நெடுஞ்சாலைகள் (O.D.R. சாலைகள்) செப்பனிடப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சாலைகள் மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7—

**சாலையைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 689—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், கொக்குளம்-உத்தப்பநாயக்கனூர் சாலை, கட்டக்கருப்பன்பட்டி, இடையப்பட்டி, புதுக்கோட்டை, பசுக்காரன்பட்டி, இலக்குவீரன்பட்டி, கோவிலாங்குளம், திம்மநத்தம் சாலை (பகுதிகளில் மிகவும் பழுதடைந்துள்ளதை) செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கோவிலாங்குளம்-திம்மநத்தம் சாலையை மட்டும் நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைப்பதற்கான செயற்குறிப்பு தற்போது பரிசீலனையில் உள்ளது. ஏனைய நான்கு சாலைகளையும் தற்போது சீரமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

8—

**சாலை செப்பனிடுதல்**

**வினா எண் 786—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், வத்தலகுண்டு ரோடு பிரிவிலிருந்து இடையப்பட்டி, நாதம்பட்டி, பெருமாள் கோவில்பட்டி, உ.புதுக்கோட்டை, துபுதூர், பாப்பாபட்டி விலக்கு வரையிலுள்ள சாலையை செப்பனிட அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

9—

**சாலை சீரமைத்தல்**

**வினா எண் 788—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜேடர்பாளையம் - சித்தாளந்தூர் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை உடனடியாக சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

எதிர் வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலை கணிசமாக பெருகும் போது பழுதடைந்த சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும்.

10—

**அணைத் திட்டப் பணி**

**வினா எண் 791—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெள்ளக்கோவில் தொகுதி, நல்லதங்காள் ஓடையின் இடையில் கட்டப்பட்டு வரும் அணைத் திட்டப் பணியை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இப்பணியை துரிதப்படுத்த, அரசு இத்திட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**11—**

**பயணியர் விடுதி**

**வினா எண் 798—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டையில் புதிதாக பயணியர் விடுதி அமைக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**12—**

**தேசிய நெடுஞ்சாலையாக மாற்றல்**

**வினா எண் 805—திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் இருந்து கடலூர் செல்லும் மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

**13—**

**கால்வாய் வெட்டுதல்**

**வினா எண்: 845—திரு. சி ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணா குடிநீர் திட்டத்திற்கு அரசு இதுவரை செலவழித்த தொகை எவ்வளவு?

(ஆ) ஸ்ரீசைலம் சோமசிலா வரை எத்தனை கிலோமீட்டர் நீளம் இன்னும் கால்வாய் வெட்டப்படவில்லை? இத்திட்டம் எப்போது முழுமை பெறும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) கிருஷ்ணா குடிநீர் திட்டத்திற்காக தமிழ்நாட்டின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் செய்யப்படும் பணிகளுக்காக ரூ.185 கோடியும், ஆந்திர மாநில எல்லைக்குள் செய்யப்படும் பணிகளுக்காக ரூ.512 கோடியும் இதுவரை தமிழக அரசு செலவழித்துள்ளது. 1994 ஆம் ஆண்டு நிலவரப்படி, தெலுங்கு கங்கை திட்டத்தின் திருத்திய மதிப்பீடு ரூ.2190.00 கோடியாகும். அவற்றில் தமிழக அரசின் பங்கு ரூ.521.00 கோடி ஆகும். தமிழ்நாடு ஏற்கனவே ரூ.512 கோடியை ஆந்திரப் பிரதேச அரசுக்கு அளித்துள்ளது.

(ஆ) நீதிமன்றத் தடையினால் 13.81 கி.மீ. நீளம் (சோமசிலா அணையில் மேற்புறம்) கால்வாய் வெட்டப்படாமல் உள்ளது. இதுகுறித்து 5-2-2002 அன்று திருப்பதியில் நடைபெற்ற இருமாநில தலைமைச் செயலாளர்கள் கலந்து கொண்ட 38-வது தொடர் குழு

[2003 மே 10

கூட்டத்தில் மேற்கூறிய பணியை குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றது. முடிவில் படிப்படியாக 2 ஆண்டுகளுக்குள் வேலை முடிக்கப்படவேண்டும் என பேசி முடிவெடிக்கப்பட்டுள்ளது.

14—

**தார்ச் சாலை**

**வினா எண் 864—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, சேத்திரபாலபுரம் - ஸ்ரீகண்டபுரம், கோமல், நச்சிணக்குடி வழியாக செல்லும் சாலையை தார்ச் சாலையாக்கித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசின் பரிசீலனையில் இல்லை.

15—

**புதிய பாலம்**

**வினா எண் 865—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, மங்கநல்லூர் வீரசோழன் ஆற்றில் புதிய பாலம் கட்டி சாலையினை சீரமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.



2003 மே 10]

16—

**கிராமச் சாலை**

**வினா எண் 878—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி மங்கநல்லூரில் இருந்து வேலங்குடி வழியாக பொரும்பூர் செல்லும் சாலை கிராமச் சாலையாக எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்த சாலை கிராமச் சாலை திட்டத்தில் இதுவரை எடுத்துக் கொள்ளவில்லை.

17—

**சாலையைச் சீர் செய்தல்**

**வினா எண் 894—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், அல்லிகுண்டம், ராஜாச்சாயடி, தும்மலப்பட்டி சாலையைச் சீர்செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

18—

## தேசிய நெடுஞ்சாலை

**வினா எண் 959—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* காஞ்சிபுரம்-திருப்பதி (அரக்கோணம் வழி) சாலை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மேலே குறிப்பிட்டுள்ள சாலையில் திருத்தணி-திருப்பதி வரையிலான பகுதி, ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. தற்சமயம் மாநில நெடுஞ்சாலையாக உள்ள கல்பாக்கம்-செங்கல்பட்டு, காஞ்சிபுரம்-திருத்தணி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

19—

## பாலம் விரிவுபடுத்துதல்

**வினா எண் 972—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம்—பாபநாசம் நெடுஞ்சாலையில் சிலந்திபுரம் அலங்காரி அம்மன் குளம் அருகில் உள்ள 6/2 எண்ணுள்ள பாலத்தை விரிவுபடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு அண்டு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.



*(ஆ)* எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப இப்பணிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

20—

## சாலை பராமரித்தல்

**வினா எண் 987—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமச் சாலைகள் திட்டத்தில் (Rural Roads) போடப்படுகின்ற சாலைகளை நெடுஞ்சாலைத் துறை பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கிராமச் சாலைகள் திட்டத்தில் (Rural Roads) எடுத்துக் கொள்ளப்படுகிற சாலைகள் இதர மாவட்ட சாலையின் (ODR) தரத்திற்கு மேம்பாடு செய்யப்படுகின்றன. இவ்வாறு மேம்பாடு செய்யப்படும் சாலைகளை ஊராட்சி ஒன்றியங்களே பராமரிக்கலாம் என அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இவ்வாறு கூடுதலான சாலைகளைப் பராமரிக்க நெடுஞ்சாலைத் துறைக்குக் கூடுதல் நிதி ஆதாரம் இல்லாததால் நெடுஞ்சாலையில் பராமரிக்க சாத்தியமில்லை.

21—

## ஐந்துகண் பாலம்

**வினா எண் 994— திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வந்தவாசி நகரிலுள்ள பழுதடைந்த ஐந்துகண் பாலத்தை இருவழிப்பாதை பாலமாக கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைமை கணிசமாக பெருகும்போது இப்பணிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**22—**

### கழிவுநீர்க் கால்வாய்

**வினா எண் 997—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செஞ்சி-விழுப்புரம் சாலையில் இரண்டு பக்கங்ச ப் கழிவுநீர்க் கால்வாய் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அரசின் நிதிநிலைக்கேற்ப செஞ்சி - விழுப்புரம் சாலையில் இரண்டு பக்கங்களிலும் கழிவுநீர்க் கால்வாய் கட்ட பரிசீலிக்கப்படும்.

**23—**

### தார்ச் சாலை

**வினா எண் 988—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உள்ளாட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், நாடாளுமன்ற



உறுப்பினர் திட்டத்தில் போடப்படுகின்ற தார்ச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறை பராமரிக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தார்ச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள சாத்தியக்கூறுகள் இல்லை.

**24—**

### மேம்பாலம் கட்டுதல்

**வினா எண் 1408—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம், தாபழூர், மதனத்தூர், தஞ்சாவூர் மாவட்டம், நீலத்தநல்லூர் இடையே உள்ள கொள்ளிடத்தில் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தனியார் பங்கேற்புடன் கட்டுதல், இயக்குதல் மாற்றுதல் (B.O.T) முறையில் செயல்படுத்த ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**25—**

### சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம்

**வினா எண் 1549—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) அரக்கோணம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான அலுவலகம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு அண்டு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசு சட்டமன்ற உறுப்பினர் அலுவலர் தொகுதியில் அலுவலகம் கட்ட ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ. 4.95 லட்சம் வீதம் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகுதிக்கான பணித்தளம் தீர்மானிக்கப்பட்டபின் பணியை மேற்கொள்ள இயலும்.

**26—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 1737—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, திண்டிவனம் உபக்கோட்டம் நெடுஞ்சாலை மற்றும் ஊரகச்சாலை பிரிவின் மூலம் ஆவணிப்பூர் சாலை கி.மீ. 0/0/-10/0 செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாலையைச் சீர்செய்யும் திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.



2003 மே 10]

**27—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 1739—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில், நெடுஞ்சாலை மற்றும் ஊரகச் சாலை, திண்டிவனம் உபக்கோட்டம் தாதாபுரம்-செங்கோணிக்குப்பம் சாலை கி.மீ. 0/0-3/2 செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதிநிலைக்கேற்ப சாலையைச் செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**28—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 1742—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, திண்டிவனம் உபக்கோட்டம், நெடுஞ்சாலை ஊரகச் சாலை திட்டத்தில் வெள்ளிமேடுபேட்டை முதல் செம்பாக்கம் 0/0-6/0 புதுப்பித்து செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இச்சாலையை முழுமையாகச் செப்பனிட தோராயமாக ரூ. 32.00 இலட்சம் தேவைப்படும். எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**29—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 1743—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில் செங்கற்பட்டு கோட்டம் கிராமச் சாலை திட்டத்தில் செம்பாக்கம்-மாம்பாக்கம் சாலை கணேசபுரம் வழியாக மாம்பாக்கம் சாலை 0/0-2/0 புதுப்பித்து செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

**30—**

**அணை கட்டும் திட்டம்**

**வினா எண் 1780—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரம் தொகுதி, கொத்தயம் என்ற இடத்தின் அருகே நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஒட்டன்சத்திரம் தொகுதி, கொத்தயம் என்ற இடத்தின் அருகே நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

**31—**

**அணையைத் தூர் வாருதல்**

**வினா எண் 1785—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் பரப்பலாறு அணையைத் தூர் வாரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**32—**

**அணை கட்டுதல்**

**வினா எண் 1797—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) அரூர் தொகுதி, சிங்காரப்பேட்டையை அடுத்துள்ள ஜவ்வாது மலையிலிருந்து வழிந்தோடும் கடப்பாறை ஆற்றின் குறுக்கே அணை கட்டித் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, சிங்காரப்பேட்டையை அடுத்துள்ள ஜவ்வாது மலையிலிருந்து வழிந்தோடும் கடப்பாறை ஆற்றின் குறுக்கே அணை கட்டித் தரும் திட்டம் எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**33—**

**தார் சாலையைச் சீரமைத்தல்**

**வினா எண் 1800—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, ஈச்சம்பாடியிலிருந்து மருதிப்பட்டிக்குச் செல்லும் கிராமப்புறத் தார்ச் சாலையை சீரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அரூர் தொகுதி, ஈச்சம்பாடியிலிருந்து மருதிப்பட்டிக்குச் செல்லும் கிராமப்புறத் தார்ச்சாலை போக்குவரத்துக்கு ஏற்றவாறு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.



2003 மே 10]

**34—**

**புறவழிச் சாலை**

**வினா எண் 1928— திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகருக்கு ஒரு புறவழிச் சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது ஏதுமில்லை.

**35—**

**அணை கட்டுதல்**

**வினா எண் 1935—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட ஆண்டியப்பனூர் அணை கட்டும் திட்டத்தின் நிலையென்ன?

(ஆ) எப்போது கட்டி முடிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட ஆண்டியப்பனூர் அணை கட்டும் திட்டத்திற்கு ரூ.27.38 கோடி செலவிலான திருத்திய மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் 2001 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் அளிக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. சாலை மற்றும் கட்டடங்கள் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய பணிகளான மண்கரை அமைக்கும் பணி, நீர் வழிந்தோடி மற்றும் நீர்வழிந்தோடி மதகு போன்ற பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

[2003 மே 10

(ஆ) டிசம்பர் 2003-க்குள் நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**36—**

**சிறு அணை**

**வினா எண் 2003—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்ட அள்ளி ஊராட்சி மத்தாளப்பள்ளம் ஆற்றின் குறுக்கே சிறு அணை ஒன்று கட்ட அரசு நடப்பாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தாலுகா, இராமகொண்ட அள்ளி ஊராட்சி, மத்தாளப்பள்ளம் ஆற்றின் குறுக்கே சிறு குளம் (Tank) ஒன்றினை ரூ.14.15/- இலட்சம் செலவில் கட்ட 4-10-2001 அன்று இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**37—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 2055—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம்—மாடன்பிள்ளை தர்மம் (என்.எச்.7 முதல்) வரையுள்ள சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



2003 மே 10]

(ஆ) நிதி நெருக்கடி காரணமாக இப்பணியினைத் தற்போது செய்யும் வாய்ப்பில்லை.

**38—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 2301— திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், சின்னக்கட்டளை, தும்மக்குண்டு சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை ரூ.12.00 இலட்சம் செலவில் நபார்டு வங்கி உதவியுடன் (RIDF-7) 2001-2002-ல் செப்பனிட பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**39—**

**ரவுண்டானா அமைத்தல்**

**வினா எண் 2323—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், காஷ்மீர்-கன்னியாகுமரி என்.எச்.7-ல் நாங்குனேரி பெட்ரோல் பங்க் அருகில் அடிக்கடி விபத்து ஏற்படுவதால் ரவுண்டானா அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தேசிய நெடுஞ்சாலை என்.எச்.7-ல் நான்குனேரி பெட்ரோல் பங்க் அருகில் ரவுண்டானா அமைக்க தற்போது இயலாது. எனினும் விபத்து ஏற்படாமல் தடுக்க எச்சரிக்கைப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

40—

### பாலத்தை அகலப்படுத்துதல்

**வினா எண் 2324—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—தூத்துக்குடி செல்லும் நெடுஞ்சாலையில் முறப்பாடு கிராமத்தின் அருகே உள்ள தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தை அகலப்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

பாளையங்கோட்டை—தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலை 7ஏ சாலையினை மேம்பாடு செய்யும் ஆய்வுப் பணியானது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பெரிய துறைமுகங்கள் இணைப்புச் சாலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களால் மேற்படி பாலப்பணி நிறைவேற்றப்படும்.

41—

### பாலம்-சாலை இணைத்தல்

**வினா எண் 2325—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—தூத்துக்குடி செல்லும் நெடுஞ்சாலையில் வல்லநாடு கிராமத்தின் அருகே புதியதாக பாலம் கட்டப்பட்டு நீண்ட காலமாக சாலையுடன் இணைக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி—தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் வல்லநாடு கிராமத்தின் அருகே கட்டப்பட்டுள்ள பாலத்தை சாலையுடன் இணைக்கும் அணுகுச் சாலை அமைக்க தேவையான நிலங்களை கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மொத்தமுள்ள 6 கிராமங்களில், 5 கிராமங்களில் அடங்கிய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு கிராமத்தைச் சார்ந்த நிலம் (வசவபுரம் - விவசாய நிலம்) கையகப்படுத்த அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. 4(1) அறிக்கையான கெசட் (Gazette Notification) மாவட்ட ஆட்சித் தலைவரால் வெளியிடப்படவுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்தவுடன் சாலைப் பணி நடைபெறும்.

42—

### மேம்பாலம் கட்டுதல்

**வினா எண் 2330—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காஷ்மீர் - கன்னியாகுமரி என்.எச்.7-ல் காவல்கிணறு இரயில்வே கேட்டில் மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை 7-ல் கி.மீ. 210/6-8-ல் அமைந்துள்ள இரயில்பாதைக் கடவின் மீது மேம்பாலம் அமைக்கும் பணி தென்னக இரயில்வேயால் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, இதுகுறித்து தலைமைப் பொறியாளர் (தேநெ) அவர்களால் தென்னக இரயில்வே-க்குக் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

[2003 மே 10

43—

சாலையைச் சீர்செய்தல்

**வினா எண் 2550—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை கொம்பாடியூர் வழியாக வைத்தாள் வரையிலான சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இச்சாலை சீர்செய்து செப்பனிடப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

44—

சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 2554—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர்—பவானி வரையிலான சாலை மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடன் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தொப்பூர்—மேட்டூர்—பவானி—ஈரோடு சாலை கி.மீ. 59/2, 60/2, 70/4, 71/0, 71/2-71/8, 72/0-72/6, 73/4-74/0 மற்றும் கி.மீ. 81/0-82/2 ஆகிய பகுதிகளை காலமுறை புதுப்பித்தலின்கீழ் புதுப்பிக்கும் பணி முடிவடைந்துவிட்டது.

45—

புறவழிச் சாலை

**வினா எண் 2611—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு &ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியில், வந்தவாசி நகரின் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த வந்தவாசி—செய்யாறு புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது ஏதுமில்லை.

46—

புதிய நீர்த்தேக்கங்கள்

**வினா எண் 2706—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகர குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய இரண்டு புதிய நீர்த்தேக்கங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகர குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:

(1) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுக்காவில் உள்ள பள்ளிக்கரணையில் ரூ.66 கோடியில் (2001-2002 விலை விகிதப்படி) நீர்த்தேக்கம் அமைப்பதற்கும்,

(2) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் தாலுக்காவில் பாலாற்றின் குறுக்கே வயலூரில் ரூ.80 கோடி செலவில் தடுப்பணை கட்டி நீர்த்தேக்கம் அமைக்கவும்,

திருவள்ளூர் மாவட்டம், ஜமீன் கொரட்டூரில் ரூ.42 கோடியில் (2001-2002 விலை விகிதப்படி) நீர்த்தேக்கம் அமைக்கவும்,

இவை தவிர, திருவள்ளூர் மாவட்டம், திருக்கண்டலத்தில் கொரட்டலையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**47—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 2891—திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு—காஞ்சிபுரம் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ரூ.11.80 இலட்சத்திற்கு சீரமைப்புப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் செய்து முடிக்கப்படும்.

**48—**

**புதிய பாலம்**

**வினா எண் 3257—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், குழித்துறை தாமிரபரணி ஆற்றின் குறுக்கே முளமூட்டுக்கடவு என்ற இடத்தில் புதிய பாலம் அமைக்கும் பணி எப்போது துவங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இப்பாலம் அமைக்க தோராயமாக ரூ.3.00 கோடி தேவைப்படுவதால் அண்மைக்காலத்தில் இப்பணியினைச் செய்திடும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**49—**

**கிருஷ்ணகிரி அணை**

**வினா எண் 3278—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி அணையிலிருந்து உபரி நீரை திண்டல் ஏரி வரை கொண்டு செல்லும் பணி இந்த நிதியாண்டிலேயே எடுத்துக் கொள்ள அரசு ஆவன செய்யுமா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கிருஷ்ணகிரி அணையிலிருந்து தர்மபுரி மாவட்டத்தில் பாலக்காடு மற்றும் கிருஷ்ணகிரி வட்டங்களுக்கு உபரி நீரைக் கொண்டு செல்லும் பணி இந்த நிதியாண்டிலேயே எடுத்துக் கொள்ளச் சாத்தியக்கூறு இல்லை.

**50—**

**சாலைகளைச் சீர் செய்தல்**

**வினா எண் 3526—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளையிலிருந்து காளிகோயில் மற்றும் திசையன்விளை—கரைகந்தப்புதூர் சாலைகள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நிதி நெருக்கடி காரணமாக இப்பணியை தற்போது செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**51—**

**கால்வாயை நவீனப்படுத்துதல்**

**வினா எண் 3903—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காவிரி பாயும் படுகையில் ஆறு, வாய்க்கால்களை நவீனப் படுத்தும் திட்டம் (மாஸ்டர் பிளான்) அரசிடம் உள்ளதா?*



2003 மே 10]

*(ஆ) ஆம் எனில், எப்போது, எந்தவகையில் செயல்படுத்தப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**52—**

**சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 3928—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நெடுஞ்சாலை எண் 26-ல் (திருச்சி-மீமிசல்) புதுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கி வரை (கி.மீ. 52 முதல் 84.2வரை) மத்திய அரசின் சாலை வசதி நிதியிலிருந்து (சி.ஆர்.எப்.) அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது இப்பணி துவங்கும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்படி வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையினை அகலப்படுத்துவதற்கு ரூ.284.00 இலட்சத்திற்கு மைய சாலை நிதியின்கீழ் செயல்படுத்த அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, மதிப்பீடு தயாரிப்பதற்கான தள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மதிப்பீடு ஒப்புதல் வழங்கியபின் ஒப்பந்தம் மூலம் பணிகள் செயல்படுத்தப்படும்.

-53—

## கிழக்குக் கடற்கரைச் சாலை

**வினா எண் 3933—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிழக்குக் கடற்கரைச் சாலை இரண்டாம் கட்டப் பணிகள் எப்போது தொடங்கப்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

2002-2003 ஆம் ஆண்டு இறுதியில் உலக வங்கி ஆய்வு மதிப்பீட்டுக் குழு வருகை தந்து, திட்ட ஆய்வு செய்து வங்கிக் கடன் நிதி உதவி தர உடன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக வங்கி நிதி உதவி கிடைத்தவுடன் திட்டம் செயலாக்கப்படும்.

54—

## ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பராமரித்தல்

**வினா எண் 3967—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிதி வசதி பற்றாக்குறை காரணமாக பராமரிக்கப்படாமல் உள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் கொண்டுவர அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

நிதி நெருக்கடி காரணமாக நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் வரும் அரசு சாலைகளுக்கு போதிய பராமரிப்பு நிதி



ஒதுக்கீடு செய்ய இயலாத சூழ்நிலை நிலவுகிறது. இந்நிலையில் ஊராட்சி ஒன்றிய சாலைகளை நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் கொண்டு வரும் சாத்தியக் கூறுகள் இல்லை.

55—

## சாலையைச் சீர் செய்தல்

**வினா எண் 3977—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பொதுப் பணி மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியில் கீரனூர்-அன்னவாசல் (சித்துப்பட்டி வழி கீழக்குறிச்சி) இலுப்பூர் (ராப்பூசல் வழி இருந்திரப்பட்டி) விராலிமலை (நீர்ப்பழனி, ஆலங்குளம் வழி) ஆதனக்கோட்டை (குன்னாண்டார் கோவில் வழி) புலியூர் கிள்ளுக்கோட்டை (புலியூர் வழி) ஆகிய மிகவும் பழுதடைந்துள்ள சாலைகளைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கீரனூர்—அன்னவாசல் சாலை சீர் செய்யும் பணி நபார்டு நிதிநிலை காரணமாக இதுவரை எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. இனிவரும் காலங்களில் நபார்டு நிதி உதவியைப் பொறுத்து எதிர்காலத் திட்டங்களில் எடுத்துக் கொள்ள பரிசீலக்கப்படும். மற்ற நான்கு சாலைப் பணிகளும் சீர் செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறது.

56—

## மராமத்துப் பணி

**வினா எண் 3988—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

கடையநல்லூர் தொகுதி, இளாங்காடு பெரியகுளத்தை மராமத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

**57—**

**கடல் அரிப்பு**

**வினா எண் 4018—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், வாயலூர் ஊராட்சியைச் சார்ந்த ஒய்யாலிக்குப்பம் மீனவர் பகுதியில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலரிப்பால் பாதிக்கப்பட்ட ஒய்யாலிக்குப்பம் மற்றும் புதுப்பட்டினம் ஆகிய கடற்கரை கிராமங்களை கடலரிப்பிலிருந்து பாதுகாக்க ஒரு (1) கி.மீ. நீளத்திற்கு தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்காக சுமார் 170 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டிற்காக அனுப்பப்பட்டு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.



2003 மே 10]

**58—**

**மேம்பாலம்**

**வினா எண் 4019—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டிலிருந்து மகாபலிபுரம் செல்லும் சாலையில் உள்ள இரயில்வே கேட் இருக்கும் இடத்தில் மேம்பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**59—**

**சிமெண்ட் பாலம் கட்டுதல்**

**வினா எண் 4023—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், விரிஞ்சிபுரம் ஊராட்சி, விரிஞ்சிபுரம்—வடுகந்தாங்கல் மாவட்ட சாலையில் பாலாற்றின் குறுக்கே பழுதடைந்துள்ள சிமெண்ட் பைப் பாலத்தைச் செப்பனிட்டு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது ஏதுமில்லை.

**60—**

**வாய்க்காலில் மடை கட்டுதல்**

**வினா எண் 4486—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்திலுள்ள குட்டைக்கு பி.ஏ.பி. வாய்க்காலில் புதிதாக மடை ஒன்று கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், ஜல்லிபட்டி பஞ்சாயத்திலுள்ள குட்டைக்கு பி.ஏ.பி. வாய்க்காலில் புதியதாக மடை கட்டி நீர்தரும் திட்டம் ஏதும் இல்லை.

**61—**

**மாவட்டச் சாலையாக மாற்றல்**

**வினா எண் 4453—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதியில் சுவாமிமலை—திருவையாறு வரை செல்லும் சாலையை அகலப்படுத்தி மாவட்டச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்சமயம் அரசின் பரிசீலனையில் ஏதுமில்லை.

**62—**

**வாய்க்காலில் மடை கட்டுதல்**

**வினா எண் 4487—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், அந்தியூர் பஞ்சாயத்து சடையபாளையம் குட்டைக்கு பி.ஏ.பி. பாசன வாய்க்காலில் மடை வைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், அந்தியூர் பஞ்சாயத்து, சடையபாளையம் குட்டைக்கு பி.ஏ.பி. பாசன வாய்க்காலில் மடை வைத்துக் கொடுக்க இயலாது.

**63—**

**குடிநீர் வழங்கல்**

**வினா எண் 4490—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை ஒன்றியம், கொடுங்கியத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளதால் அங்குள்ள குளம் குட்டைக்கு பி.ஏ.பி. தண்ணீர் விட அரசு ஆவன செய்யுமா?

[2003 மே 10

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டமானது குளங்களை நிரப்பி அதன் மூலமாக பாசனத்திற்கு நீர் தரும் வகையில் வடிவமைக்கப்படவில்லை. எனவே, குளம், குட்டைகளுக்குப் பாசனம் அல்லது பிற உபயோகத்திற்கு நீர் அளிப்பதற்கு சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.*

**64—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 4509—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டு-ஒமலூர்-மணிப்பாக்கம் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், பழுதுநீக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(இ) இதற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இச்சாலை முழுவதும் நபார்டு திட்டம்-I-ல் எடுத்துக்கொள்ளப்பட்டு தார்த்தளம் புதுப்பிக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது.*

*(இ) ரூ.27.85 இலட்சங்கள்.*



2003 மே 10]

**65—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 4546—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, வெங்கம்பட்டியிலிருந்து நெல்லையப்பபுரம் சாலை வரை (0/0-1/6 கி.மீ) செப்பனிட்டு புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**66—**

**சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 4554—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவலிலிருந்து பந்தமடை வரை (89/0-71/4 கி.மீ. 2.4) சாலையை அகலப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

67—

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4555—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம்-முக்கூடல் சாலை கி.மீ.8/0-9/0, 17/0-18/0, 15/0-16/0, 26/0-28/6 கி.மீ.5.6 சாலையைப் புதுப்பித்துப் பராமரிக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கடையம்—முக்கூடல் சாலை கி.மீ.0/6-3/0, 6/2-8/0, 14/0-16/0, 18/0-24/0, 26/0-28/0 வரையிலான பகுதிகளை நபார்டு திட்டத்தில் ரூ.99 இலட்சம் கடனுதவி பெற்று மேம்பாடு செய்ய உத்தேசித்து நபார்டு வங்கியின் இசைவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இசைவு பெறப்பட்டதும் பணி துவக்கப்படும்.

68—

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4557—திரு. பி.எச் பால் மனோஜ் பாண்டின்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சுப்பிரமணியபுரம் முதல் பிரான்சேரி வரை (65/0-67/0) (கி.மீ. 2.00) சாலையைப் புதுப்பித்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

69—

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4562—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி-மருதப்புத்தூர் (0/0-6/0 கி.மீ) 6.0 கி.மீ சாலையைப் புதுப்பித்து பராமரிப்பு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசின் நிதி நிலைமை சீரடைந்தபின்னர்.

70—

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4565—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி - காருகுறிச்சி (75/0-76/0) (77/0-78/0) மற்றும் வேலன்குடி (82/0-84/0) - சாலையைப் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**71—**

**ஆலங்குளம் சாலை**

**வினா எண் 4567—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேரன்மகாதேவி-அம்பாசமுத்திரம்-ஆலங்குளம் சாலையினை அகலப்படுத்தி புதுப்பிக்க அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயற்படுத்தப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**72—**

**சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 4568—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடியிலிருந்து கபாலிபாறை வரை கி.மீ. 22/0-24/0 சாலையை அகலப்படுத்தி புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**73—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4574—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் (கி.மீ. 2/0-4/2—2.2 கி.மீ.) சாலையைப் புதுப்பித்துப் பராமரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**74—**

**சாலையைச் சீரமைத்தல்**

**வினா எண் 4575—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, அரியநாயகிபுரம், மேற்குச் சாலையை (கி.மீ. 16/8-17/6—கி.மீ. 9.8) அகலப்படுத்தி புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

ஆ) ஆம் எனில், எப்போது?

டை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அ) மற்றும் (ஆ) இல்லை.

–

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4579—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** ண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் ருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு டையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, இராமசாமி கோவில் வடக்கு முதல் லான் குடியிருப்பு (கி.மீ. 0/0-2/6 - கி.மீ. 2.6) சாலையைப் புதுப்பித்து ாமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**76—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 4585—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் கோவிலூத்து (கி.மீ. 5/8-9/4) சாலையைச் செப்பனிட்டு புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**77—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 4592—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வடயம்புலி மாறாந்தை (கி.மீ. 0/0-1/6-1.4 கி.மீ.) சாலையைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நிதி நிலைமை சீரடைந்தபின்.

**78—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 4598—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, காலிபாறை-இலும்பக்குறிச்சி

0/0-1/1 (1.1 கி.மீ.) சாலையைச் செப்பனிட்டு புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

**79—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 4601—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல்-கரிசல்பட்டி சாலையைப் புதுப்பித்து பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**80—**

**பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம்**

**வினா எண் 4616—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் உலகன் குளத்தையும், அதிசயப்பேரி குளத்தையும், கீழ்வெள்ளந்தாங்கி குளத்தையும் பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதியில் உள்ள உலகன் குளத்தையும், அதிசயப்பேரி குளத்தையும், கீழ்வெள்ளந்தாங்கி குளத்தையும் பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் சேர்க்க இயலாது.

**81—**

**நெடுஞ்சாலையைச் சீரமைத்தல்**

**வினா எண் 4636—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி - பாப்பாக்குடி ஒன்றியம் நந்தன்தட்டை நெடுஞ்சாலையைச் சீரமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**82—**

**எரிசாராய வழக்கு**

**வினா எண் 4806—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வெளி மாநிலத்திலிருந்து சென்னைக்கு எரிசாராயம் கடத்தப்பட்டதாக 2000-2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை எவ்வளவு பேர் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) கையகப்படுத்தப்பட்ட எரிசாராயத்தின் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2000 ஆம் ஆண்டில் வெளி மாநிலங்களிலிருந்து சென்னைக்கு எரிசாராயம் கடத்தியது தொடர்பாக 227 பேர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு 6,71,150 லிட்டர் எரிசாராயம் கைப்பற்றப்பட்டது. இவ்வாண்டு மார்ச் மாதம் வரை 94 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களிடமிருந்து 1,23,166 லிட்டர் எரிசாராயம் கைப்பற்றப்பட்டுள்ளது.*

*2000 ஆம் ஆண்டு பறிமுதல் செய்யப்பட்ட எரிசாராயத்தின் மதிப்பு ரூ.6,71,15,000/- மற்றும் இவ்வாண்டு மார்ச் மாதம் வரை பறிமுதல் செய்யப்பட்ட எரிசாராயத்தின் மதிப்பு ரூ.1,23,16,600/- ஆகும்.*

**83—**

### கள்ளச் சாராய விற்பனை வழக்கு

**வினா எண் 4812—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் முடிய கள்ளச் சாராயம் விற்பனை செய்ததாக எவ்வளவு பேர் கைது ஆனார்கள்?*

*(ஆ) இவர்களில் ஆண்கள் எவ்வளவு பேர்? பெண்கள் எவ்வளவு பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் முடிய 42,324 மதுவிலக்கு குற்றவாளிகள் கள்ளச்சாராயம் விற்பனை செய்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டனர்.*



*இவர்களில் 25,734 பேர் ஆண்களும், 16,590 பேர் பெண்களும் அடங்குவார்கள். ஆனால், தமிழ்நாடு மதுவிலக்கு &சட்டத்தின்கீழ் மதுவிலக்கு குற்றங்களில் ஈடுபட்டதற்காக மொத்தம் 1,53,560 மதுவிலக்கு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 1,19,464 ஆண்களும், 34,096 பெண்களும் அடங்குவார்கள்.*

**84—**

### கள்ளச் சாராய புகார்

**வினா எண் 4815—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சி, கே.கே. நகர் பகுதிகளில் கள்ளச் சாராயம் விற்பதாக அரசிடம் புகார் ஏதேனும் வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அந்த புகார் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

## அறிக்கை

*(அ) 2000 ஆம் ஆண்டில் எடப்பாடி ஒன்றியத்தில் எட்டு புகார் மனுக்களும், நடப்பு ஆண்டு இம்மாத இறுதிவரை மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் சாராய விற்பனை செய்வதாக ஒரு புகார் மனுவும் அரசுக்கு வரப்பெற்று அவற்றின்மீது உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடி, இடங்கணசாலை மற்றும் கே.கே. நகர் பகுதியிலிருந்து கள்ளச்சாராயம் விற்பதாக எந்தப் புகாரும் அரசுக்கு வரப்பெறவில்லை.*

[2003 மே 10

(ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சி, கே.கே. நகர் பகுதியில் கடந்த ஆண்டு (2000)-ல் பெறப்பட்ட புகாரின் தொடர்ச்சியாக 35 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 35 மதுவிலக்கு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 324 லிட்டர் சாராயம் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு ஆகஸ்டு மாதம் வரை மதுவிலக்கு சம்பந்தமாக 55 மதுவிலக்கு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 1830 லிட்டர் சாராயம் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளது. 4000 லிட்டர் சாராய ஊறல்களும் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளன.

**85—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 5148—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், அரவேலு ஜக்கனாரை சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதி நிலைமை மேம்பட்ட பின்னர், இப்பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



2003 மே 10]

**86—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 5224—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி நெடுஞ்சாலை கோட்டம், கல்லாபுரம் அமராவதி நகர் சாலை கி.மீ. 0/0-4/4 வரை மிகப் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆணையிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பழுதடைந்துள்ள சாலையில் தற்போது தார் நறுக்குகள் போடப்பட்டு போக்குவரத்து தடையின்றிச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**87—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 5225—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலைக் கோட்டம், ஆண்டிப்பட்டி கிராமச் சாலை கி.மீ. 0/0-5/4 வரை பழுதடைந்துள்ளதை உடனடியாகப் புதுப்பிக்க அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் கி.மீ. 1/0-3/0 மற்றும் கி.மீ. 4/0-5/4 ஆகிய பகுதிகள் பழுதடைந்துள்ளன. இதைப் பழுது பார்க்க ரூ.12 இலட்சம் தேவைப்படும். மேற்கண்ட சாலையில் போக்குவரத்து தடையின்றி இயங்குவதற்கு ஏற்ற வகையில் தற்காலிகமாக தார் நறுக்குகள் போடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**88—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 5231—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலை கோட்டம், தேவலூர் புதூர் நல்லார்காலனி கி.மீ. 0/0-7/8 வரை மிகப் பழுதடைந்துள்ளதை புதுப்பித்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சுமார் ரூ.10.00 இலட்சம் தேவைப்படும். இப்பணியினை அண்மைக்காலத்தில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.



**89—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 5233—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை அருகே ஜக்கம்பாளையம்-கிழுவன்காட்டூர் செல்லும் சாலையில் மிகப் பழுதடைந்துள்ள பகுதிகளை உடன் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசின் அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இப்பணி இடம் பெறவில்லை.

**90—**

**சாலையைப் பராமரித்தல்**

**வினா எண் 5244—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டையிலிருந்து பழனிக்கு குமரலிங்கம் வழியாகச் செல்லும் கி.மீ. 0/0 முதல் 86/6 சாலை எம்.டி.ஆர். வகையாகவும், அதற்கு கிழக்கே பழனி வரை செல்லும் சாலை ஓ.டி.ஆர். வகையாகவும் உள்ளதில் ஓ.டி.ஆர். வகை நெடுஞ்சாலைத் துறை சாலை மிக நன்றாகவும், எம்.டி.ஆர். வகை சாலை தரம் குறைவாகவும் பராமரிக்கப்பட்டு வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இக்குறை களைய அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் 9.8 கி.மீ. சாலை நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள பழுதடைந்துள்ள 9 கி.மீ. சாலையை எதிர்வரும் நிதி ஆண்டில் நிதிநிலைமைக்கேற்ப புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

91—

### ஏற்றுமதிக் கட்டணம்

**வினா எண் 5276—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்றுமதி எரிசாராயத்திற்கு அரசு நிர்ணயித்துள்ள ஏற்றுமதிக் கட்டணம் (Export Pass Fee) லிட்டர் ஒன்றுக்கு ரூ.6-க்கு பதில் ரூ.3 மட்டும் செலுத்த வழங்கப்பட்ட தற்காலிக உத்தரவு 23-5-2001-ம் தேதியுடன் முடிவடைந்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இச்சலுகையை மேலும் நீட்டிக்க, அரசு பரிசீலித்து உரிய ஆணை வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை (இருபதாண்டு) எண் 27, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, நாள் 13-5-2002-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.



92—

### புறவழிச் சாலை

**வினா எண் 5292—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சி, சத்திர தெரு புறவழிச் சாலையாக நெடுஞ்சாலைத் துறை மூலம் மாற்ற நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

93—

### இருவழிப் பாதை

**வினா எண் 5597—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநில நெடுஞ்சாலை எண் 26 திருச்சி-மீமிசல் சாலையில் (வழி புதுக்கோட்டை, அறந்தாங்கி) அறந்தாங்கி-மீமிசல் வரையிலான சாலையை இருவழிப்பாதையாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2003 மே 10

94—

### கிழக்குக் கடற்கரைச் சாலை

**வினா எண் 5601—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிழக்குக் கடற்கரைச் சாலையின் இரண்டாம் கட்டப் பணிகள் (கடலூர்-தூத்துக்குடி) தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். உலக வங்கி ஆய்வுக் குழுவின் வருகைக்குப்பின் ஒப்புதல் பெறப்பட்டதும் பணிகள் துவங்கப்படும்.

95—

### தார்ச் சாலை

**வினா எண் 5735—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வெண்குன்றம் கிராமச் சாலை, ஆரணி மாவட்ட நெடுஞ்சாலையையும், காஞ்சிபுரம் மாவட்ட நெடுஞ்சாலையையும் இணைக்கும் முக்கிய சாலையான வெங்குன்றம் சாலையைச் செப்பனிட்டு தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது ஏதுமில்லை.



2003 மே 10]

96—

### தார்ச் சாலை

**வினா எண் 5736—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, கம்கொடுங்காலூர், கிளியா நகர், சாலவேடு-உளுந்தை கிராமச் சாலைளைப் பழுதுநீக்கம் செய்து, தார்ச் சாலைகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது ஏதுமில்லை.

97—

### சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 5743—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசபாளையம் வட்டம், கொல்லாங்கொண்டான் முதல் தெற்கு வெங்காநல்லூர் முடிய உள்ள சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதி ஆதாரம் கிடைத்ததும் செப்பனிடப்படும்.

**98—**

### கள்ளச் சாராய விற்பனை வழக்கு

**வினா எண் 5771—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செஞ்சி தொகுதி, செஞ்சி காவல் நிலையம் மற்றும் வளத்தி காவல் நிலைய எல்லைகளில் கள்ளச்சாராயம் விற்பவர்கள்மீது எத்தனை வழக்குகள் 2001 மே முதல் ஜூன் 27, 2001 வரை போடப்பட்டுள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* செஞ்சி தொகுதி, செஞ்சி மற்றும் வளத்தி காவல் நிலைய எல்லைகளில் மே 2001 முதல் ஜூன் மாதம் 27-ம் தேதி வரை நடத்தப்பட்ட மதுவிலக்கு வேட்டைகளில் செஞ்சி காவல் நிலையத்தில் 48 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 48 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களிடமிருந்து 1,275 லிட்டர் நாட்டுச் சாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. வளத்தி காவல் நிலையத்தில் 37 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 37 நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், 1,640 லிட்டர் நாட்டுச் சாராயம் கைப்பற்றப்புட்டு அழிக்கப்பட்டுள்ளது.

**99—**

### சாராய வழக்கு வருமானம்

**வினா எண் 5773—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, செஞ்சி காவல் நிலையத்தில் 2001 மே முதல் ஜூன் 27, 2001 வரை சாராய வழக்கில் அரசுக்கு வந்த வருமானம் எவ்வளவு?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

செஞ்சி தொகுதி, செஞ்சி காவல் நிலையத்தில் மே முதல் ஜூன் 27, 2001 வரை 50 வழக்குகள் மதுவிலக்கு குற்றவாளிகளின் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து ரூ.42,250 அரசுக்கு வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

**100—**

### நெடுஞ்சாலைத் துறையில் மாற்றுதல்

**வினா எண் 5780—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளி கிராமத்திலிருந்து பஞ்சப்பள்ளி அணை ஆய்வு மாளிகை வரை உள்ள பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் இருக்கும் சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளி கிராமத்திலிருந்து பஞ்சப்பள்ளி அணை ஆய்வு மாளிகை வரை உள்ள பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் இருக்கும் சாலையை, நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றும் திட்டம் தருமபுரி மாவட்டம் ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

**101—**

### தார்ச் சாலையாக மாற்றுதல்

**வினா எண் 6039—திருமதி எஸ். கவிதா சம்பத்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) திருப்போரூர் தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், நெடுங்குன்றம்—ஆலப்பாக்கம் கிராம சாலையை தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பணி முழுவதும் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டது.

**102—**

**நீர்த்தேக்கம்**

**வினா எண் 6080—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, அலிவலம் அருகே நரி ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, அலிவலம் அருகே பைங்காட்டு வயல் கிராமத்தில் நரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை. அதிகாரிகள் மட்டத்தில் ஆய்வில் உள்ளது.



2003 மே 10]

**103—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 6081—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், விளாங்குளம் பெரிய ஏரியில் ஒரு பாலம் கட்டி நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது இல்லை.

**104—**

**தடுப்புச் சுவர்**

**வினா எண் 6090—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி, ஆணைக்காடு குளத்திற்கு தடுப்புச் சுவர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி, ஆணைக்காடு குளத்திற்கு தடுப்புச் சுவர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

[2003 மே 10

**105—**

**சாலை மராமத்துப் பணி**

**வினா எண் 6112—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, செறுபாலக்காடு ஆண்டிக்காடு சாலையை அகலப்படுத்தி மராமத்து செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது இல்லை.

**106—**

**சாலை மராமத்துப் பணி**

**வினா எண் 6115—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆணைக்காடு - கல்லூரணிக்காடு சாலையை மராமத்து செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.



2003 மே 10]

**107—**

**பாலத்தை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 6157—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், ராஜகுத்தாலம் பேரியில் கன்னடியன் கால்வாய் குறுக்கே ஏற்கெனவே உள்ள பாலத்தைச் சற்று விரிவுபடுத்தி அகலமாக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலத்தினைக் கட்ட ரூ.35 இலட்சம் தேவைப்படும். இப்பணியானது அரசால் அனுமதிக்கப்பட்ட எந்தவொரு திட்டத்திலும் இடம்பெறவில்லை.

**108—**

**பாசன வசதி**

**வினா எண் 6209—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பொட்டல் கிராம மக்கள் நலன்கருதி மணிமுத்தாறு அணையிலிருந்து பெருங்கால் மூலம் நிரந்தர பாசன வசதி ஏற்படுத்தித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்கொள்ள இயலாது.

**109—**

கடல் அரிப்பு

**வினா எண் 6518—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல ஆண்டு காலமாக கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள இராயபுரம் முதல் திருவொற்றியூர் வரையிலான வடசென்னை பகுதி மக்களுக்கு நிரந்தரத் தீர்வு காண அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

வடசென்னையில் கடலரிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிரந்தரத் தீர்வாக கடலுக்குக் குறுக்கே கற்குறடுகள் (Groyne) அமைப்பதற்கான திட்ட வடிவமைப்புகள் செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மற்றும் அரசின் தேசிய கடற்கரை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வடசென்னையில் இராயபுரம் மற்றும் திருவொற்றியூர் பகுதியில், கடலரிப்பால் பாதிக்கப்பட்டு தற்காலிகமாக திட்டங்கள் செயல்படுத்தி வரும் பகுதியில் சுமார் 3.50 கி.மீ. நீளத்திற்கு நிரந்தரத் தீர்வு காணும் உத்தேசத்தில் கற்குறடுகள் (Groyne) அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு சுமார் 95.20 கோடியாகும். இது மட்டுமின்றி தமிழகத்தின் ஏனைய கடலரிப்பு திட்டங்களையும் சேர்த்து சுமார் 169.39 கோடி அளவிற்கு மதிப்பீடு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.



2003 மே 10]

**110—**

**நெடுஞ்சாலையை செப்பனிடுதல்**

**வினா எண் 6530—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை-மேலூர்-கண்ணுப்புளிமேடு குண்டாறு அணை வரையிலான பழுதடைந்துள்ள நெடுஞ்சாலையை செப்பனிட்டுத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பணி நடைபெற்று வருகிறது.

**111—**

**கால்வாய் தூர்வாருதல்**

**வினா எண் 6532—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடசென்னை பகுதியில் உள்ள ஓட்டேரி நல்லா கால்வாய் தூர்வாரி நீரோட்டத்தை சரிவர இயக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஒட்டேரி நல்லா கால்வாய் தூர்வாரி நீரோட்டத்தை சரிவர செல்ல ஏற்கெனவே அரசு ஆணை (G.O.Ms.No.) நிலை எண் 348, பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு 27-6-1997-ல் ரூ.112.00 இலட்சங்களுக்கு ஒப்புதல் அளித்து இதை 5 பகுதிகளாகப் பிரித்து தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு தற்போது இக்கால்வாயில் நீரோட்டம் தங்கு தடையின்றி செல்லக்கூடிய நிலையில் உள்ளது.*

*(ஆ) பதில் எழாது.*

**112—**

**தார்ச் சாலையாக அமைத்தல்**

**வினா எண் 6569—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) லால்குடி தொகுதி, பல்லபுரம் கிராமத்திலிருந்து பெருவளநல்லூர் செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**113—**

**யாத்ரிகா திட்டம்**

**வினா எண் 6592—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், குருவித்துறை வல்லபர்கோயில்-அணைப்பட்டி ரோடு இணைக்கும் பாலம் மற்றும் சாலை ஒன்றினை யாத்ரிகா திட்டத்தின்கீழ் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**114—**

**பாலத்தை சீர்செய்தல்**

**வினா எண் 6594—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றிய அலுவலக சாலைக்கும் - ஆற்றுக்கும் இடையே செல்லும் பாலத்தை அகலப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சுமார் 60.00 இலட்சம் தேவைப்படும் இப்பணியினை அண்மைக்காலத்தில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.*

**115—**

**கண்மாயை மராமத்துப் பணி செய்தல்**

**வினா எண் 6600—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், அச்சம்பட்டி கிராமத்தில் உள்ள கண்மாயின் ஆழத்தைக் கூடுதலாக்கி மராமத்து செய்து தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஒருங்கிணைந்த நீர்வள ஆதார திட்டப் பணிகளின்கீழ் செய்ய வேண்டிய பணிகளுள் அச்சம்பட்டி கிராமத்தில் உள்ள கண்மாயை ஆழப்படுத்தும் பணிக்கான திட்டமும் சேர்க்கப்பட்டு அதற்கான அறிக்கை உலக வங்கியின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அனுமதியும், நிதி ஒதுக்கீடும் கிடைக்கப்பெற்றபின் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**116—**

**சாலை அமைத்தல்**

**வினா எண் 7219—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) புவனகிரி தொகுதியில் தடைப்பட்டு உள்ள சாத்தப்பாடி வயலாமூர் சாலை அமைத்திடும் பணியினைத் தொடர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சாலையில் மிகவும் பழுதடைந்த சாலைப்பகுதிகளை ரூ.37.00 இலட்சம் மதிப்பில் மேம்பாடு செய்ய ஒப்பந்தப்புள்ளி வாயிலாக பணி ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**117—**

**கால்வாய் வெட்டுதல்**

**வினா எண் 7468—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாளையம்புதூர் ஜெகந்நாதன் கொம்பை மாரியம்மன் கோயில் அணைக்கட்டில் இருந்து கால்வாய் வெட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாளையம்புதூர் ஜெகந்நாதன் கோம்பை மாரியம்மன் கோவில் அணைக்கட்டில் இருந்து கால்வாய் வெட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**118—**

**மதகு பழுதுபார்த்தல்**

**வினா எண் 7498—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கூவம் ஊராட்சி, பெரிய ஏரியை தூர்வாரி மதகுகள் பழுதுபார்க்கும் பணியை அரசு செயல்படுத்த முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் திட்டமேதுமில்லை.*

**119—**

**ஏரிகளை நிரப்புதல்**

**வினா எண் 7542—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



மேட்டூர் அனல்மின் நிலையத்திலிருந்து வெளியேறும் சாம்பல் நீரை மின்இயக்கி வைத்து நீரேற்றி வனவாசி மலைக்கு பின்புறம் உள்ள நங்கவள்ளி, வனவாசி, ஜலகண்டாபுரம் ஏரிகளை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இத்திட்டம் நடைமுறைக்கு உகந்ததல்ல. மேலும் இதனை நிறைவேற்றிட பொருளாதார ரீதியாக போதிய சாத்தியக்கூறுகள் இல்லை.

**120—**

**வைகை ஊற்றுக்கண்**

**வினா எண் 7686—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டி ஒன்றியம், திருவேடகம் கிராம விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் பெரியார் அல்லது நிலையூர் கால்வாய் வழியாக வைகை ஊற்றுக்கால் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

வைகை ஆற்றின் இடதுபுற நேரடி வாய்க்கால் மற்றும் பெரியாறு பாசனத்திட்டத்தின்கீழ் திருவேடகம் பகுதியும், வைகை ஆற்றின் வலது புற நேரடி வாய்க்கால் மூலம் நிலையூர் கால்வாயும் பாசன வசதி பெறுகின்றன. ஆதலால், பெரியாறு அல்லது நிலையூர் கால்வாய் வழியாக வைகை ஊற்றுக்கால் பாசனத்திற்கு தண்ணீர் வழங்க இயலாது.

121—

**சாலை செப்பனிடுதல்**

**வினா எண் 7900—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, பெள்ளகர்—பெரும்பூண்டி சாலையை செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாலை நல்ல நிலையில் உள்ளது.

122—

**வினா எண் 7902—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஓலக்கூர் சாலையை நெடுஞ்சாலைத் துறை மூலம் செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



123—

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 7904—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, மேல்பாக்கம்—வைராபுரம் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப வரும் நிதியாண்டுகளில் மேற்குறிப்பிட்ட சாலையை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

124—

**இணைப்புச் சாலை அமைத்தல்**

**வினா எண் 7905—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஓலக்கூர் ஒன்றியம், வைராபுரம் காலனியில் இணைப்புச்சாலை அமைத்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**125—**

**கள்ளச்சாராயம் விற்பனையைத் தடுத்தல்**

**வினா எண் 7915—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதியிலுள்ள செஞ்சி, வளத்தி காவல் நிலைய எல்லைக்குள் கள்ளச்சாராய விற்பனை நடைபெறுவதைத் தடுக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

வளத்தி மற்றும் செஞ்சி காவல் நிலைய சரகங்களில் தொடர்ந்து தீவிர மதுவிலக்கு வேட்டை நடத்தப்பட்டு வருகிறது. 2001 ஆம் ஆண்டில் வளத்தி மற்றும் செஞ்சி காவல் நிலைய சரகங்களில் 746 மதுவிலக்கு வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டதில் 166 வழக்குகள் கள்ளச்சாராயம் விற்பனை செய்ததற்காகப் போடப்பட்ட வழக்குகளாகும். 674 ஆண் குற்றவாளிகளும், 72 பெண் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். 29,982 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டு



அழிக்கப்பட்டுள்ளது. கள்ளச்சாராயத் தொழிலில் தீவிரமாக இருந்த ஒரு நபர் தடுப்புக் காவல் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார். மேலும், கள்ளச்சாராயத்தைக் கடத்தப் பயன்படுத்திய 11 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

2. 2002 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வளத்தி மற்றும் செஞ்சி காவல் நிலைய சரகங்களில் மதுவிலக்கு அமல் பிரிவு மற்றும் உள்ளூர் காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட 172 கள்ளச்சாராய வழக்குகளில் 63 வழக்குகள் கள்ளச்சாராய விற்பனைக்காகப் போடப்பட்ட வழக்குகளாகும். 161 ஆண் குற்றவாளிகளும், 11 பெண் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு 6,381 லிட்டர் கள்ளச்சாராயம் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. 2 கள்ளச்சாராயக் குற்றவாளிகள் தடுப்புக் காவல் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மேலும் செஞ்சி, வளத்தி காவல் நிலைய சரகங்களில் கள்ளச்சாராயம் கடத்தப் பயன்படுத்தப்பட்ட 5 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

3. இவ்வாறாக மதுவிலக்கு குற்றங்களைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**126—**

**கிராமச் சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 7916—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியிலுள்ள கிராமச் சாலைகளை நில அளவு செய்து மீண்டும் அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கிராமச் சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின் வாயிலாக அகலப்படுத்தும் திட்டம் ஏதுமில்லை.*

**127—**

**மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 7921—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, மொடையூர் கிராமம் அருகே தரைப்பாலம் பழுதடைந்துள்ளதை மேம்பாலமாக அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**128—**

**விஷச் சாராய விற்பனை**

**வினா எண் 7927—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதி, வளத்தி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அம்மாகுளம் பகுதியில் விஷச் சாராயம் மொத்தமாக விற்பனை செய்வதைத் தடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

***அறிக்கை***

*(அ) மற்றும் (ஆ) வளத்தி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அம்மாக்குளம் பகுதியில் விஷச் சாராயம் எதுவும் [illegible]கப்படவில்லை. ஆனால் அப்பகுதியில் தொடர் தீவிர மதுவிலக்கு [illegible]டை செய்ததில் கள்ளச்சாராய வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2001-ம் ஆண்டில் 12 கள்ளச்சாராய விற்பனை வழக்கு பதிவு செய்யப்பட்டு, 12 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். 1,319 லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்டது. கள்ளச் சாராயத் தொழிலில் தீவிரமாக ஈடுபட்ட ஒரு நபர் தடுப்புக் காவல் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.*

*2002 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை அம்மாக்குளம் பகுதியில் 5 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 5 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். 213 லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்டது. அம்மாக்குளம் பகுதியில் மட்டும் ஒரு கள்ளச்சாராய குற்றவாளி தடுப்புக் காவல் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.*

*இவ்வாறாக, கள்ளச் சாராய குற்றங்களை அப்பகுதியில் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**129—**

**நெடுஞ்சாலைகள் பராமரிப்பு**

**வினா எண் 8022—திரு. ஆஸ்டின்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதிய சாலைகள் போடப்படும்போது தரத்தைக் கண்காணிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?*

*(ஆ) தேசிய, மாநில நெடுஞ்சாலைகளை சிமெண்ட் சாலையாக மாற்றும் திட்டம் உள்ளதா?*

*(இ) சில மாநிலங்களில் உள்ளதுபோல முக்கிய நெடுஞ்சாலைகள் சிலவற்றை தனியாரின் பராமரிப்பில் விடும் யோசனை அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சாலைகள் அமைக்கும் பணி நடைபெறும்போது பணியின் தரத்தினை கண்காணிப்பதற்காக ஒவ்வொரு வட்ட கண்காணிப்புப் பொறியாளரின் தலைமையிலும் ஒரு தரக் கட்டுப்பாடு உட்கோட்டம் இயங்கிவருகிறது. இப்பொறியாளர்கள் மூலம் சாலை போட உபயோகப்படுத்தப்படும் பொருள்கள், பரிசோதனைகள் மூலம் தர நிர்ணயம் செய்யப்படுகின்றன. மேலும் வேலை நடைபெறும்போது தரத்தின் அளவுகளுக்கு உட்பட்டு நடைபெறுகிறதா என்றும் வேலைப்பாடு மற்றும் வேலைத்திறனும் கண்காணிக்கப்படுகிறது. மேலும் நடைபெறும் வேலையின் தரம் களப் பொறியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதைத்தவிர மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் அளவு நிர்ணயங்களுக்கு உட்பட்டே வேலை அமைவதால் தர உத்தரவாதம் பெறுகிறது. மேலும் நெடுஞ்சாலை ஆய்வு மையத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் மூலமாகவும் பணியின் தரம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) தேசிய/மாநில நெடுஞ்சாலைகளை சிமெண்ட் சாலையாக மாற்றும் திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை. எனினும் சென்னை-தாம்பரம் வரையிலான தேசிய நெடுஞ்சாலை 45-ஐ சிமெண்ட் சாலையாக மாற்றுவதற்கான விவரத் திட்ட அறிக்கை திருவாளர்கள் எல்.ஆர். கடியாலி அசோசியேட்ஸ் நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்டது. இதற்கு மைய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெறவில்லை.

(இ) தேசிய நெடுஞ்சாலை 45 சென்னையிலிருந்து திண்டிவனம் வரை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமத்தால் தனியார் பராமரிப்பிற்கு விடப்பட்டுள்ளது. மேலும் தேசிய நெடுஞ்சாலை-68 மற்றும் 209-ல் சில பகுதிகள் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பிற்கு விட மத்திய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அரசின் முக்கிய நெடுஞ்சாலைகளை தனியாரின் பராமரிப்பில் விடும் யோசனை தற்போது இல்லை.





**130—**

**மதுக்கடைகளில் பார் வசதி**

**வினா எண் 8062—திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதி, மதுக்கடைகளில் அனுமதியில்லாத பார் வசதியும் செய்யப்பட்டு இயங்கி வருகின்றதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தாராபுரம் தொகுதி மதுக் கடைகளில் அனுமதியில்லாத பார் வசதி செய்யப்பட்டு இயங்கி வருவது குறித்து அரசுக்கு புகார் ஏதும் வரப்பெறவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**131—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 8079—திரு. பே.ப. காமராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சி, ரெட்டிப்பட்டி பெரியேரிப்பட்டி வரை உள்ள மிகவும் பழுதடைந்துள்ள சாலையை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**132—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 8090—திரு. எம்.ப. [illegible]ஜ.** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பச்சணம்பட்டி ஊராட்சி, தாரமங்கலம் பிரதான சாலையில் இருந்து பாப்பான் காட்டூர் வழியாக எம். செட்டிப்பட்டி வரை சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பணி ,அரசின் திட்டப் பணிகள் எதிலும் இடம்பெறாததால் வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப இச்சாலையை மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**133—**

**புதிய சாலை வசதி**

**வினா எண் 8091—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஆரூர்ப்பட்டி கிராமம், பெரியாண்டியூரில் இருந்து வெள்ளகரட்டூர் வழியாக ஜலகண்டபுரம் பிரதான சாலைக்கு கிராம மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதிய சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**134—**

**பாலம் புதுப்பித்தல்**

**வினா எண் 8180—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதியில் அரிச்சந்திரா நதி பிரியும் இடத்திலுள்ள போக்குவரத்துப் பாலத்தை புதுப்பித்துக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது பரிசீலனையில் இல்லை.

**135—**

**புதிய பாலம்**

**வினா எண் 8503—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1992 ஆம் ஆண்டு கடும் வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளான பாபநாசம் முண்டன்துறையில் புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் அதன் நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ரூ.200 இலட்சம் தேவைப்படும் இப்பணியினை அண்மைக்காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

136—

**சாலையை மேம்படுத்துதல்**

**வினா எண் 8515—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சி, சேவான்காடு பிள்ளையார் கோவில் முதல் வடுகப்பட்டி வரை கி.மீ. 0/0-2/0 உள்ள நெடுஞ்சாலைக்கு உட்பட்டது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப இப்பணி எடுத்துச் செய்யப்படும். அதுவரை இச்சாலையில் அவ்வப்பொழுது ஏற்படும் குண்டு குழிகளை ஒட்டுப்பணிகள் செய்து வாகனப் போக்குவரத்து தடையின்றிச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

137—

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 8517—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி முதல் சங்ககிரி வரையுள்ள சாலையில் கேட்டுக்கடை, வீரப்பம்பாளையம் இடையே அகலமான பாலம் அமைக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

138—

**அகலமான பாலம் கட்டுதல்**

**வினா எண் 8518—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி முதல் மகுடஞ்சாவடி சாலையில் தானமூர்த்தியூர் ஆரம்பப்பள்ளி அருகில் உள்ள குறுகிய தாழ்வுப் பாலத்திற்குப் பதிலாக அகலமான பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதி ஆதாரமின்மையால் அண்மைக்காலத்தில் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

139—

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 8524—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சி, புதுப்பாளையம் முதல்

அய்யனாரப்பன் கோவில் சாலை கி.மீ.0/0-1/0 நெடுஞ்சாலைக்கு உட்பட்ட சாலை மிகவும் பழுந்தடைந்துள்ள நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையை பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எதிர்காலத்தில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப இப்பணியினை எடுத்துச் செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் இச்சாலையில் ஏற்படும் குழி, பள்ளங்களுக்கு அவ்வப்போது ஒட்டுப்பணிகள் செய்து வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ப பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**140—**

**சாலையைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 8525—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் ஊராட்சி, அம்மன்காட்டூர் பிரிவுரோடு-கோணங்குட்டையூர் வழியாக சங்ககிரி பிரதான சாலை 0/0-5/0 நெடுஞ்சாலை பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) இனிவரும் நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப சாலைகளின் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரை இச்சாலையில் ஏற்பட்டுள்ள குழி பள்ளங்களுக்கு ஒட்டுப்பணிகள் செய்து தடையின்றி வாகனப் போக்குவரத்து நடைபெற சாலையினைப் பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**141—**

**தார்ச் சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 8539—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கோனேரிப்பட்டி-பூலாம்பட்டி (வழி) தம்பாகவுண்டலூர் கரட்டுப்புதூர் சாலை. கி.மீ 0/0-1/0, 4/0-4/6 தார்ச் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சாலையில் தார் நொடிகள் போட்டு போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**142—**

**தார்ச் சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 8550—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி, தாராபுரம் சாலை 4/0-7/2 3.20 கி.மீ. தூரம் வரை உள்ள தார்ச் சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

எடப்பாடி - தாராபுரம் சாலை முதல் கட்சுப்பள்ளி புதுப்பாளையம் சாலை கி.மீ. 0/0-10/0-ல் கி.மீ. 6/0-7/0 வரை 2001-02 ஆம் ஆண்டுக்கான பராமரிப்பு நிதியின்கீழ் ரூ.4.00 லட்சம் செலவில் தார் தளம் இடப்பட்டு 16-2-2002-ல் பணி முடிவடைந்துவிட்டது. மீதியுள்ள பகுதிகள் பழுதடைந்த சாலைகள் பழுது பார்த்தல் 3 ஆம் கட்டப்பணிகளின்கீழ் நிதியுதவி கிடைக்கும்போது எடுத்துச் செய்யப்படும்.

**143—**

**தார்ச் சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 8551—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி-வாச்சாம்பள்ளி 0/0-1/2 கி.மீ. 1.2 தூரம் வரை தார்ச் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். சாலை செப்பனிடப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**144—**

**தார்ச் சாலைகளைச் சீர் செய்தல்**

**வினா எண் 8553—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஜலகண்டாபுரம்-வேம்பனேரி சாலை (வழி) சௌரிபாளையம் சாலை 0/0-1/4 மற்றும் 2/8-3/6, 6/250-7/250 ஆகிய தார்ச் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். சாலையின் பெரும்பாலான பகுதி சீர் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதியும் நிதிநிலைமைக்கேற்ப புதுப்பிக்கப்படும்.

**145—**

**இருவழிப் பாதை**

**வினா எண் 8563—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் முதல் கோயம்புத்தூர் வரையுள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு உயிர்ச்சேதம் ஏற்படுவதால், அதை இருவழிப் பாதையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், மத்திய அரசின் நிதி உதவி அதற்குக் கோரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இப்பணிக்கான மத்திய அரசின் நிதி உதவி, தேசிய நெடுஞ்சாலைப் பிரிவினால் கோரப்படுவதில்லை.

[2003 மே 10

**146—**

**பக்கிங்காம் கால்வாய்ப் பணிகள்**

**வினா எண் 8646—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பக்கிங்காம் கால்வாய், கொசத்தலை ஆறு, ஓட்டேரிக் கால்வாய், வீராங்கால் ஓடை போன்ற நீர்நிலைகளைச் சுத்தப்படுத்த மத்திய அரசின் உதவியோடு கொண்டு வந்த திட்டப் பணிகள் தற்போது நடைபெறுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் இன்றைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பக்கிங்காம் கால்வாய், கொசத்தலை ஆறு, ஓட்டேரிக் கால்வாய் போன்ற நீர்நிலைகளைச் சுத்தப்படுத்த மத்திய அரசின் நிதி உதவி ஏதும் பெறப்படவில்லை. மேற்படி நீர்நிலைகளில் வெள்ளத் தடுப்புப் பணிகள் மாநில அரசின் திட்டப் பணியில் ஹட்கோ நிறுவன நிதி உதவியின்கீழ் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) இப்பணிகள் நிறைவேற்றப்பட மார்ச் 1999-ல் உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு நான்கு சிப்பங்களாக பணிகள் 9/99-ல் ஒப்பளிக்கப்பட்டன. பக்கிங்காம் கால்வாய் தூர்வாரும் பணிகள், அடையாறு தூர்வாரும் பணிகள் பெருநகரில் உள்ள தணிகாசலம் நகர், மாதவரம் பகுதி, பள்ளிக்கரணைப் பகுதி பணிகள் நடைபெற்று வருகின்றன. கூவம் ஆறு மேம்படுத்துதல் பணி, விருகம்பாக்கம் கால்வாய், ஓட்டேரி நல்லா கால்வாய்ப் பணிகள் இன்னும் துவங்கப்பட வேண்டும்.

**147—**

**பாலங்கள் அமைத்தல்**

**வினா எண் 8678—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) கிருஷ்ணராயபுரம் வட்டம், மகாதானபுரம் பகுதியில் இரண்டு பாலங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**148—**

**பாசன வாய்க்காலைத் தூர்வாருதல்**

**வினா எண் 8681—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் வட்டம், பாலராஜபுரம், சின்னமநாயக்கன்பட்டி பாசன வாய்க்கால் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் வட்டம், பாலராஜபுரம், சின்னமநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள பாசன வாய்க்காலைத் தூர்வாருவதற்கு நடப்பு நிதியாண்டில் அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

[2003 மே 10

149—

நபார்டு திட்டத்தில் சாலையைப் புதுப்பித்தல்

**வினா எண் 9297—மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வரகூர் தொகுதி, பெரம்பலூர்-மானாமதுரை சாலை முதல் பெரியம்மாபாளையம் வழியாக மூங்கில்பட்டி வரையான சாலையை (0/0-6/0) முன்னுரிமை கொடுத்து நபார்டு திட்டத்தில் சேர்த்து புதுப்பிக்க அரசு பரிசீலிக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒப்புதல் அளிக்கப்பட்ட நபார்டு திட்டங்களில் இடம் பெறவில்லை. இருப்பினும், இனிவரும் காலங்களில் நபார்டு வங்கியின் நிதி ஆதாரத்தைப் பொறுத்து பரிசீலிக்கப்படும்.

150—

பாசன ஏரி

**வினா எண் 9311—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சித்துடையார் கிராமத்திலுள்ள பாசன ஏரியை ஆழப்படுத்தி கரையைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், சித்துடையார் கிராமத்திலுள்ள பாசன ஏரியை ஆழப்படுத்தி கரை கட்டுவதற்கு அரசு ரூ.13.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது.

151—

சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 9321—திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தொகுதி, சோழத்தரம்—திருமுட்டம், குமாரகுடி—திருமுட்டம், ஸ்ரீராப்பாளையம்—சேத்தியாதோப்பு ஆகிய நெடுஞ்சாலைத் துறை சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதை உடனடியாக செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

செப்பனிடப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்றதாக உள்ளது.

152—

சாலைகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 9322—திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தொகுதி, கீரப்பாளையம்—சேத்தியாதோப்பு, திருமுட்டம், இராஜேந்திரபட்டினம், கருவேப்பிலங்குறிச்சி மற்றும் கூடலையாத்தூர், குளமங்கலம் ஆகிய சாலைகளைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். இச்சாலைகள் செப்பனிட்டு சீர்செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**153—**

**கள்ளச்சாராய விற்பனை**

**வினா எண் 9355—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதியில் கள்ளச்சாராய விற்பனை நடப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசின் உடனடி நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

(அ) மற்றும் (ஆ) பூவிருந்தவல்லி தொகுதியில் தீவிர தொடர் மதுவிலக்கு வேட்டைகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2001 ஆம் ஆண்டில் 962 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 681 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். 15,915 லிட்டர் கள்ளச்சாராயம் மற்றும் 2,03,080 லிட்டர் சாராய ஊறல்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. 7 தீவிர கள்ளச்சாராயக் குற்றவாளிகள் தடுப்புக் காவல் சட்டத்தின் சிறையில் அடைக்கப்பட்டனர். கள்ளச்சாராயம் கடத்தப் பயன்படுத்திய 6 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.



2002 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, 295 கள்ளச்சாராய வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 192 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 7,480 லிட்டர் கள்ளச்சாராயம் மற்றும் 19,840 லிட்டர் சாராய ஊறல்கள் கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்டுள்ளன. கள்ளச்சாராயத் தொழிலில் தீவிரமாக ஈடுபட்ட கருணா (வயது 32/02) த/பெ. செல்லன், சித்துக்காடு என்பவர் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டார். கள்ளச்சாராயம் கடத்தப் பயன்படுத்தப்பட்ட ஒரு வாகனம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக, பூவிருந்தவல்லி தொகுதியில் கள்ளச்சாராயக் குற்றங்களை அறவே ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**154—**

**தடுப்பணை**

**வினா எண் 9386—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், நாயக்கனள்ளி பஞ்சாயத்து, வெங்கட்டானூரில் ஒரு தடுப்பணை (Check dam) கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், நாயக்கனள்ளி பஞ்சாயத்து, வெங்கட்டானூரில் ஒரு தடுப்பணை கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**155—**

**தடுப்பணை**

**வினா எண் 9387—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், நாயக்கனள்ளி பஞ்சாயத்து, சப்பூட்டுக்கொட்டாய் மற்றும் ஜடையன்கொட்டாய் கிராமங்களில் தடுப்பணை (Check Dam) கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், நாயக்கனள்ளி ஊராட்சி, சப்பூட்டுக்கொட்டாய் மற்றும் ஜடையன்கொட்டாய் கிராமங்களில் தடுப்பணைக் கட்ட சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை. எனினும், ஜடையன்கொட்டாய் கிராமத்தின் அருகே ஒரு தடுப்பணை கட்டும் திட்டம் சென்னை மண்டல தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

**156—**

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 9389—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மிட்டாரெட்டிஹள்ளி பஞ்சாயத்து, மிட்டாரெட்டிஹள்ளி, ஆத்துமேடு பேருந்து நிறுத்தம் அருகில் பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.



**157—**

**வாய்க்கால் தூர்வாருதல்**

**வினா எண் 9450—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், அன்னியூர் ஊராட்சி செம்மங்குடி கிராமத்திலுள்ள கோரை வாய்க்கால் தூர்வார அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மேற்கண்ட பணியை இவ்வாண்டு எடுத்துச் செய்ய வாய்ப்பு இல்லை.

**158—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 9454—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, பூந்தோட்டம் முதல் நாச்சியார்கோவில் வரையுள்ள சாலை 20 கி.மீ. மேல் மிகவும் பாதிப்படைந்து உள்ளதை சி.ஆர்.எப். மூலம் நிறைவேற்றி செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

[2003 மே 10

**159—**

**அரசியல் கைதிகளுக்கு வசதிகள்**

**வினா எண் 9582—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்படும் அரசியல் கைதிகளுக்கு விதிப்படி அவர்களுக்கு வழங்க வேண்டிய வசதிகள் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்படும் அரசியல் கைதிகளுக்கு தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் தொகுதி 2 விதி எண் 826-ன்படி நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் தகுதிகளுக்கேற்ப வசதிகள் மற்றும் சலுகைகள் சிறைகளில் வழங்கப்படுகின்றன. அவர்கள் சாதாரண வகுப்பு சிறைவாசிகளாக இருப்பின் அவர்களுக்கு ‘பி’ வகுப்பு சிறைவாசிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளும், சிறப்பு வகுப்பு சிறைவாசிகளாக இருப்பின் ‘அ’ வகுப்பு சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் வசதிகள் போன்று உணவு உட்பட கீழ்க்கண்ட வசதிகளும் அளிக்கப்படுகின்றன:—

1. கட்டில் 1
2. மேஜை 1
3. நாற்காலி 1
4. கரிகலன் 1

தமிழ்நாடு சிறை நடைமுறை விதி எண்868-(2)-ன்படி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தவிர்த்து



2003 மே 10]

பிற அரசியல் சிறைவாசிகள் அவர்கள் ஈடுபட்ட நடவடிக்கைகள் இந்திய தண்டனை சட்ட பிரிவுகளிலோ அல்லது பிற குற்றவியல் சட்டப் பிரிவுகளில் உள்ளடங்கியதாக இருப்பின் அவர்கள் சாதாரண வகுப்பு சிறைவாசிகளாகவே நடத்தப்படுவர்.

**160—**

**கைதிகளுக்கு அடிப்படை வசதிகள்**

**வினா எண் 9584—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மத்திய சிறைச்சாலையில் வேறு மாவட்டத்திலுள்ள கைதிகளும் நிரப்பப்படுவதால் அங்குள்ள அடிப்படை வசதிகளைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மத்திய சிறையில் 1431 சிறைவாசிகள் அடைக்க போதுமான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது அச்சிறையில் 1,275 சிறைவாசிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் பெரும்பாலான சிறைவாசிகள் சேலம் மாவட்டம் அருகிலுள்ள தருமபுரி, நாமக்கல், கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சார்ந்தவர்கள், இதர மாவட்டங்களைச் சேர்ந்த 94 சிறைவாசிகள் மட்டுமே சேலம் மத்திய சிறையில் நிர்வாக நலன் கருதி அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சிறையில் தண்ணீர், கழிப்பிடம் மற்றும் தங்குமிட வசதிகள் போதுமான அளவில் அமைந்துள்ளன. எனவே, அங்குள்ள அடிப்படை வசதிகளை பெருக்கவேண்டிய அவசியம் ஏதும் தற்போது இல்லை.

**161—**

**புதிய பாலம் கட்டுதல்**

**வினா எண் 9826—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) விருத்தாச்சலம் நகரின் முக்கிய இணைப்புப் பாலம் மணிமுத்தாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. மிக பலவீனமான நிலையில் உள்ளதால் இதற்கு மாற்றாக புதிய பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்செய்யப்பட்டு பாலம் நல்ல நிலையில் உள்ளது.

**162—**

### கால்வாய்

**வினா எண் 9856—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கோணப்பட்டி மண்ணாடிப்பட்டி வரையிலான நீர் பாசனத்திற்கு ஈச்சம்பாடி அணையிலிருந்து வரும் கால்வாய் வழியாக நீர்விட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 15-10-2001 முதல் 11-2-2002 வரையில் ஈச்சம்பாடி அணையிலிருந்து தண்ணீர் ஏற்கெனவே திறந்துவிடப்பட்டது.



2003 மே 10]

**163—**

### மேம்பாலம் கட்டுதல்

**வினா எண் 9903—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், மைக்குடி கிராமச் சாலைக்கும் கடக்கோயில் சாலைக்கும் இடையே அமைந்த ஆற்றுப் பாலத்தை மேம்பாலமாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**164—**

### சுற்றுச் சாலை

**வினா எண் 9907—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் சுற்றுச் சாலை (ரிங் ரோடு) திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது துவக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ரூபாய் 111.00 கோடி செலவில் ஈரோடு நகருக்கு வெளிவிட்டச் சாலை ஒன்று அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2003 மே 10

165—

**பாலங்கள் அமைத்தல்**

**வினா எண் 9936—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி சாமிசெட்டிப்பட்டி கடத்திருட்டை சாலையில் வண்ணாம்பள்ளத்தில் இரண்டு பெரிய பாலங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பாலப் பணியானது அரசின் எந்தத் திட்டத்திலும் தற்போது இடம்பெறவில்லை. அரசின் நிதி நிலைக்கேற்ப வரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

166—

**பயணியர் விடுதி**

**வினா எண் 11484—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி தொகுதி, மல்லூரில் பயனியர் விடுதி அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



2003 மே 10]

167—

**கள் ஒழிப்பு**

**வினா எண் 11496—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறையினர் கிராம நிர்வாக அலுவலரின் ஒத்துழைப்புடன் கள்ளச்சாராயம், கள் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு ஆயத்தீர்வையினை அதிகரிக்கச் செய்ய அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 444 (மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), நாள் 23-8-1991, காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் கள்ளச் சாராயத்தை முற்றிலும் ஒழிக்க பொறுப்பேற்க வேண்டும் என அறிவுறுத்துகிறது. அரசாணையில் கூறப்பட்டுள்ள அறிவுரைகள் அனைத்தும், அனைத்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் மாநகரக் காவல் ஆணையாளர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. கள் மற்றும் பதநீர் இறக்குவது சம்பந்தமாக கடும் நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் மாநகரக் காவல் ஆணையாளர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஆகியோருக்கு அறிவுரைகள் கொடுக்கப்பட்டுள்ளன. 2001 ஆம் வருடத்தில் 31-12-2001 வரை 3,33,896 மதுவிலக்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 3,06,104 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், 59,31,644 லிட்டர் கள்ளச்சாராயம், 1,58,58,417 லிட்டர் சாராய ஊறல்,*

4,40,769 லிட்டர் எரிசாராயம், 21,855 லிட்டர் கள் ஆகியவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. 2000 ஆம் வருடத்தில் 1,44,79,878 இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான பெட்டிகள், 1,08,55,973 பீர் பெட்டிகள் விற்பனைக்கு எடுக்கப்பட்டன. 2001 ஆம் வருடத்தில் 1,54,82,551 இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானப் பெட்டிகளும் 1,15,84,499 பீர் பெட்டிகளும் விற்பனைக்கு எடுக்கப்பட்டன. 2000 ஆம் வருடத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது 10,02,673 இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானப் பெட்டிகளும், 7,28,526 பீர் பெட்டிகளும் அதிகமாக விற்பனைக்கு எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக அரசுக்கு வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**168—**

**பாலம் மாற்றியமைத்தல்**

**வினா எண் 11639—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி—புதுப்பேட்டை வழியிலுள்ள வாராதி பாலத்தை மாற்றி அமைக்க, எல்லா பெரிய வாகனங்களும் செல்ல அரசு தக்க நடவக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

திட்டம் ஏதும் இல்லை.

**169—**

**இணைப்புச் சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 11730—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி—மஞ்சக்கொல்லை பின்னலூர் இணைப்புச் சாலை செப்பனிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**170—**

**இணைப்புச் சாலையைச் சீர் செய்தல்**

**வினா எண் 11731—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, மிராளூர்—மஞ்சக்கொல்லை இணைப்புச் சாலையைச் சீர் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வரும் நிதி ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப சாலைகளை முன்னுரிமை கொடுத்துச் சீர் செய்யப் பரிசீலிக்கப்படும்.

**171—**

**சிறைச்சாலையில் அஞ்சல் வழிக் கல்வி**

**வினா எண் 12399—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள சிறைச்சாலைகளில் எத்தனை பேர் அஞ்சல் வழிக் கல்வித் துறையில் பாடம் படித்து வருகிறார்கள்?

[2003 மே 10

(ஆ) படிப்புக்கு உண்டான செலவை அரசே ஏற்றுக்கொள்கிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள சிறைச்சாலைகளில் மொத்தம் 362 பேர் அஞ்சல் வழிக் கல்வித் துறையில் பாடம் படித்து வருகிறார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் தொகுதி 2—இல் விதி எண் 291-ன்படி சிறைவாசிகள் சிறையினுள் உயர் கல்வி கற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி 2001-2002 ஆம் கல்வி ஆண்டில் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் சிறைவாசிகளின் சிறப்புக் கல்வித் திட்டத்தின்கீழ், சிறையிலேயே கல்வி மையம் அமைத்து, அதன் மூலம் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்பினை 257 சிறைவாசிகளும், இந்திராகாந்தி தேசிய திறந்த வெளிப் பல்கலைக்கழகம் சிறையிலேயே கல்வி மையம் அமைத்து அதன் மூலம் கணிப்பொறிக் கல்வியினை 101 சிறைவாசிகளும் மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் தொலைதூர அஞ்சல் வழி பாடத் திட்டத்தின்கீழ் 4 சிறைவாசிகளும், மொத்தம் 362 சிறைவாசிகள் தமிழகத்தில் உள்ள அனைத்து சிறைகளிலும் பயின்று வருகின்றனர்.

(ஆ) ஆம். 2001-2002 ஆம் ஆண்டில் பட்டப் படிப்பிற்காக ரூ.4,69,600/-ம், கணிப்பொறி படிப்பிற்காக ரூ.98,250/-ம் ஆக மொத்தம் ரூ.5,67,850/- ஆகும். இச்செலவினம் அரசால் மேற்கொள்ளப்படுகிறது.

**172—**

**இருவழிப் பாதை**

**வினா எண் 12952—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறைக்குச் சென்று வர ஒரு வழிப் பாதை இருப்பதை இருவழிப் பாதையாக அமைக்க அரசு முன்வருமா?



2003 மே 10]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**173—**

**ஏரி அமைத்தல்**

**வினா எண் 12961—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிச்சிலி கொல்லப்பட்டிக்கு கிழக்கில் மலையூர் மலை மேற்கிலுள்ள ஓடையில் ஏரி ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிச்சிலி கொல்லப்பட்டிக்கு கிழக்கில் மலையூர் மலை மேற்கிலுள்ள ஓடையில் தொடர்ந்து 5 தடுப்பணைகள் உள்ளதாலும் நில அமைப்பும் சரிவாக உள்ளதாலும் மேலும் ஏரி கட்டுவதற்கான சாத்தியக்கூறு இல்லை.

**174—**

**பயணியர் விடுதி**

**வினா எண் 12962—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் பயணியர் விடுதி ஒன்று கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**175—**

**அணை கட்டுதல்**

**வினா எண் 12969—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், தொப்பூர் அருகேயுள்ள பெங்கனவாய்ப்பள்ளத்தின் குறுக்கே அணை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) அதற்கான சாத்தியக்கூறு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



2003 மே 10]

**176—**

**சிறிய அணை**

**வினா எண் 12980—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, கமலநத்தம் அருகே கன்னிமார்மருவன் பள்ளம் குறுக்கே ஒரு சிறிய அணை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**177—**

**மதுவகைகளில் கலப்படம்**

**வினா எண் 13026—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வெளிநாட்டு மதுவகைகளில் கலப்படம் செய்து விற்பனை செய்வதைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

(அ) மற்றும் (ஆ) அயல்நாட்டு மதுபானவகைகள் சுங்கத் துறை மூலமாக இறக்குமதி செய்யப்பட்டு நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு நேரடியாக விநியோகம் செய்யப்படுகின்றன. எனவே, அயல்நாட்டு மதுபானவகைகள் கலப்படம் செய்யப்படுவதற்கு சிறிதும் வாய்ப்பு இல்லை.

2. ஆனால், இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுபான வகைகள் கர்நாடகம், ஆந்திர பிரதேசம், பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு கடத்தப்படுகின்றன. மேலும், போலி மதுபானங்கள் இங்கேயே தயாரிக்கப்பட்டு, இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுபானவகைகளைப் போல் விற்பனை செய்யப்படுகின்றன. அண்டை மாநிலங்களிலிருந்து மதுவகைகள் கடத்தப்படுவதைக் கண்காணிக்க எல்லையோர மாவட்டங்களில் 21 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, அவை நாள் முழுவதும் இயங்கி வருகின்றன. 2000 ஆம் வருடத்தில் 1,065 போலி மற்றும் இரண்டாம்தர மதுபானங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 2,22,422 போலி/இரண்டாம்தர மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 2001 ஆம் வருடத்தில் 2,114 போலி/இரண்டாம்தர மதுபானங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 2,23,647 போலி/இரண்டாம்தர மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 2000 ஆம் வருடத்தில் 45 நான்கு சக்கர வாகனங்களும், 2001 ஆம் வருடத்தில் 76 நான்கு சக்கர வாகனங்களும் போலி/இரண்டாம்தர மதுபான பாட்டில்கள் கடத்தப் பயன்படுத்தியதற்காக கைப்பற்றப்பட்டுள்ளன. நியாய விலை சில்லறை அங்காடிகளில், போலி/இரண்டாம்தர மதுபான பாட்டில்கள் நடமாட்டத்தைக் கண்காணிக்க மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அலுவலர்கள் கூட்டாய்வு செய்து கண்காணித்து வருகிறார்கள்.



3. இந்த ஆண்டு இதுவரை (31 மார்ச் 2002 வரை) பதிவு செய்யப்பட்ட 173 வழக்குகளில், போலி/இரண்டாம்தர மதுபானங்கள் சம்பந்தப்பட்டவற்றில் 13,148 பாட்டில்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட 13 வாகனங்களில், 4 வாகனங்கள் நான்கு சக்கர வாகனங்களாகும். இந்த ஆண்டில் இதுவரை, 175 அயல்நாட்டு மதுபான பாட்டில்களும், 621 போலி அயல்நாட்டு மதுபான பாட்டில்களும் கைப்பற்றப்பட்டன.

4. அயல்நாட்டு மதுபான பாட்டில்கள் சுற்றுலா விசாவில் சிங்கப்பூர், மலேசியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்குச் சென்று வரும் சுற்றுலா பயணிகளால் கடத்தப்படுகின்றன. இவை பர்மா பஜார் மற்றும் பிற இடங்களில் அடிக்கடி கைப்பற்றப்படுகின்றன. எனினும், கலப்படம் செய்யப்பட்ட வெளிநாட்டு மது சம்பந்தப்பட்ட வழக்கு எதுவும் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை.

**178—**

**இரண்டு பாலங்கள்**

**வினா எண் 13076—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி கடத்திகுட்டை சாலையில் வண்ணாம்பள்ளத்தில் இரண்டு பாலங்கள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்கண்ட பணியானது அரசின் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. வரும் நிதியாண்டுகளில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப இப்பணியினைச் செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

**179—**

### அணை கட்டுதல்

**வினா எண் 13077—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பங்குநத்தம் கொட்டாய் அருகே கன்னிமார்மடுவு ஆற்றின் குறுக்கே அணை ஒன்று கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) அவ்வாறு அணை கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**180—**

### ஏரி ஆக்கிரமிப்பு

**வினா எண் 13220—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், போரூர் ஏரியின் நீர்பிடிப்புள்ள இடங்களில் ஆக்கிரமிப்பு செய்து, கொட்டகை போட்டு விற்றிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) போரூர் ஏரியின் நீர்பிடிப்புப் பகுதிகளில் குடிசை போட்டுஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. வருவாய்த் துறை, காவல் துறையின் ஒத்துழைப்புடன் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பொருட்டு போரூர் ஏரியின் எல்லையை வரையறுத்துத் தரும்படியும், ஆக்கிரமிப்பாளர்களின் பெயர் பட்டியலைத் தெரிவிக்கும்படியும் வருவாய்த் துறையினரிடம் கேட்கப்பட்டுள்ளது. 3 துறைகளும் கூட்டாகச் சேர்ந்து நடவடிக்கை எடுத்து, ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்.

**181—**

### கால்வாயை இணைத்தல்

**வினா எண் 13600—திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதியிலுள்ள பவானிசாகர் அணையில் (எல்.பி.ப்பி) இரண்டாம் மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து வெளிவரும் தண்ணீர் வாய்க்கால் வழியாகச் செல்வதை உக்கரம் வழியாகச் செலுத்தி மீண்டும் ஆற்றில் இணைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**182—**

**குறைந்த வருவாயில் மது விற்பனை**

**வினா எண் 14075—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறைந்த விலையில் மது தயாரித்து, அண்டை மாநிலங்களுக்கு அனுப்பி, அரசுக்கு வருவாயை அதிகப்படுத்த அரசு முயற்சிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மலிவு விலை மது திட்டம் 14-04-2002 முதல் அரசால் கைவிடப்பட்ட நிலையில், குறைந்த விலை மது தயாரித்து அண்டை மாநிலங்களுக்கு அனுப்புவது குறித்த வினா எழவில்லை.

**183—**

**சிறைச்சாலை உணவு முறையை மாற்றல்**

**வினா எண் 14111—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக சிறைச்சாலைகளில் வழங்கப்படும் உணவு முறையை மாற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சிறைவாசிகளுக்குச் சுகாதார அடிப்படையில் உணவு தரமானதாகவும் நீராவி அடுப்பின் மூலமாக சுகாதார முறையிலும் முழுநேர சமையலர்களைக் (Cooks) கொண்டு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. சமைக்கப்பட்ட உணவின் தரம் மற்றும் எடை சிறை கண்காணிப்பாளர் மற்றும் சிறை மருத்துவ அலுவலரால் சரிபார்க்கப்படுகிறது. எனவே, சிறை கைதிகளுக்கு நல்ல தரமான உணவே தற்போது வழங்கப்பட்டு வருவதால், தற்போதுள்ள உணவு முறையை மாற்ற அவசியம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

**184—**

**சிறைச்சாலையில் பயிற்சி**

**வினா எண் 14438—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மத்தியச் சிறைச்சாலை பெண்கள் பிரிவில் தையல் பயிற்சி, காலணி தயாரிக்க பயிற்சி போன்ற பயிற்சிகளை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மத்தியச் சிறையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வழக்கமாகச் சிறைப்படும் மற்றும் வழக்கமாகச் சிறைக் குற்றங்கள் புரியும் ஆண் சிறைவாசிகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். இச்சிறையில் பெண் சிறைவாசிகள் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. எனவே இச்சிறையில் பெண் சிறைவாசிக்குத் தொழிற்பயிற்சி அளித்தல் என்ற நேர்வு எழவில்லை.

[2003 மே 10

185—

மது விற்பனை

**வினா எண் 14561—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மதுபானக் கடை உரிமையாளர்கள் நிர்ணய விலையை விட அதிக விலைக்கு விற்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

186—

வருவாய் இழப்பு

**வினா எண் 14562—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுபான உரிமையாளர்கள் பிற இடங்களில் கிளைக் கடைகள் வைப்பதால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பைத் தடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் மதுபான சில்லறை விற்பனை உரிமதாரர்கள் கிளைக் கடைகள் வைத்துக் கொள்ள வழிவகை செய்யப்படவில்லை.

187—

போலி மதுபானங்கள் விற்பதைத் தடுத்தல்

**வினா எண் 14563—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

மதுபானக் கடைகளில் போலி மதுபானங்கள் விற்பதைத் தடுக்க உயர்மட்டக் குழு ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

காவல் துறையின் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினர் மற்றும் கலால் துறை அலுவலர்கள் மதுபானச் சில்லறை விற்பனைக் கடைகளை அடிக்கடி ஆய்வு செய்து, போலி மதுபான விற்பனை நடைபெறுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருவதால் இதற்கென தனியாக உயர்மட்டக் குழு அமைக்க வேண்டிய அவசியமில்லை.

188—

நான்கு வழிச் சாலை

**வினா எண் 14584—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய நெடுஞ்சாலையான உளுந்தூர்பேட்டை சேலம் சாலையில் ஏற்படும் சாலை விபத்தைத் தடுக்க அதனை நான்கு வழிச் சாலையாக மாற்ற மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் போக்குவரத்து 10000 பி.சி.யு.-க்கும் குறைவாக உள்ளது. எனவே, உடனடியாக 4 வழிப் பாதையாக மாற்றப்பட வாய்ப்பில்லை.

189—

நான்கு வழிச் சாலை

**வினா எண் 14586—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய நெடுஞ்சாலை தாம்பரம்-செங்கல்பட்டு நான்கு வழிச் சாலையை செங்கல்பட்டு-திருச்சி வரை நான்கு வழிச் சாலையாக மாற்ற மைய அரசை இவ்வரசு துரித நடவடிக்கை எடுக்க வலியுறுத்துமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை 45—ல் தாம்பரம் முதல் திண்டிவனம் வரை 93 கி.மீ. பாதையை நான்கு வழிப் பாதையாக மாற்ற தேசிய நெடுஞ்சாலை ஆணையக் குழுமத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**190—**

**ஏரியைத் தூர்வாருதல்**

**வினா எண் 14728—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, நாச்சம்பட்டி ஏரியைத் தூர்வாரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**191—**

**இரயில்வே மேம்பாலம்**

**வினா எண் 15096—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூரில் தாரமங்கலம் சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட மேம்பாலப் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தற்போது பரிசீலனையில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதியாக்கம் செய்யப்பட்ட பின்னர் பணி துவங்கப்படும்.

**192—**

**பாலம் புதுப்பித்தல்**

**வினா எண் 15110—திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, திருமுட்டம்-விருத்தாசலம் செல்லும் வழியில் கருவேப்பிலங்குறிச்சி கிராமத்திலுள்ள பாலாற்று பாலத்தைப் & புதியதாக அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இச்சாலையில் கி.மீ. 1/6-8-ல் ஏற்கெனவே அமைந்துள்ள பழுதடைந்த தாம்போகிக்கு பதில் உயர் மட்டப்பாலம் அமைக்கவும் மேற்படி சாலை முழுவதையும் பலப்படுத்தவும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (பகுதி I-ஏ) எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்கான பூர்வாங்கப் பணிகள் முடிவடைந்துள்ளன.

**193—**

**பொதுப் பணித் துறைக் கட்டடங்கள்**

**வினா எண் 15128—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

*தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் கட்டப்பட்டுள்ள பொதுப் பணித் துறைக் கட்டடங்கள் புதுப்பிக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்., தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் கட்டப்பட்டுள்ள பொதுப் பணித் துறை கட்டடமான ஒட்டப்பிடாரம் அரசு மேல்நிலைப் பள்ளி வடக்கு பகுதி கட்டடத்தில் சிறப்பு மராமத்துப் பணியும், ஆய்வகம் மற்றும் வகுப்பறை கட்டடத்தில் சிறப்பு மராமத்துப் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**194—**

**தார்ச் சாலை**

**வினா எண் 15796—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளாத்திகுளம், எட்டயபுரம், கோவில்பட்டி, பருவக்குடி சாலையில் 45/2-6 முதல் 48/2-50 2.80 கி.மீ. சாலையை மராமத்து செய்து தார்ச் சாலை போடப்படும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலை போக்குவரத்திற்கு ஏற்றபடி பராமரிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், திட்டப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதி நிலைமைகளுக்கு ஏற்ப பழுதடைந்த சாலைப் பகுதிகளைச் சீர் செய்து தார்ச் சாலை அமைத்திட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2003 மே 10]

**195—**

**ஏரி குளம் சீரமைத்தல்**

**வினா எண் 15859—திரு. கோ. இரவிராஜ்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், வியாசபுரம் ஏரி, குளம் சீரமைக்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது சீரமைக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ.பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றிய வியாசபுரத்தில் 4 ஏரிகள் உள்ளன. அவற்றில் 1 அகர அரும்பாக்கம் கடப்பேரி தெல்லாசெருவு மற்றும் வியாசபுரம் கணேசபுரம் ஏரி ஆகியவை பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ளன. மீதமுள்ள இரண்டு ஏரிகள் திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் உள்ளன. பொதுப் பணித் துறை பொறுப்பில் உள்ள வியாசபுரம் கணேசபுரம் ஏரியை சீரமைக்க நபார்டு வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நபார்டு வங்கிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் இப்பணி எடுத்துக் கொள்ளப்படும். பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ள மற்றொரு ஏரியான வியாசபுரம் அரும்பாக்கம் கடப்பேரி தெல்லா செருவு சீரமைக்கும் பணியை 2002-2003 ஆம் ஆண்டு போதிய நிதி ஒதுக்கீடு பெறப்பட்டபின் முன்னுரிமை அளித்து பணி எடுத்துக் கொள்ளப்படும்.*

**196—**

**உயிர் இழப்பினைத் தடுத்தல்**

**வினா எண் 16134—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விஷச் சாராய உயிர் இழப்புகளைத் தடுப்பதற்கு கள்ளச் சாராய கிடங்குகளையும் அதன் காரணங்களையும் கண்டுபிடித்து காவல் துறைக்கு அறிவிக்க தனியார் ஆய்வு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்க அரசு முன்வருமா?*

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. ஓ.பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

காவல் துறையும், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவும் கள்ளச்சாராய அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த வலுவான நடவடிக்கை எடுத்து வருகின்றன. 2001 ஆம் ஆண்டில், மொத்தம் 59,31,644 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டில், மொத்தம் 3,06,104 மதுவிலக்குக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். 2002 பிப்ரவரி மாதம் வரை 46,514 மதுவிலக்குக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 2001 ஆம் ஆண்டில் கள்ளச்சாராயக்காரர்கள் சட்டத்தின்கீழ் 1,136 முக்கிய மதுவிலக்குக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். 2002 பிப்ரவரி மாதம் வரை 241 கள்ளச்சாராயக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கள்ளச்சாராயக் குற்றங்கள் குறித்த தகவல்களைப் பெற பொதுமக்கள்/அரசு சாரா நிறுவனங்கள்/தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்பும் பெறப்பட்டு வருகின்றன. தனியார் ஆய்வு நிறுவனங்களுக்கு மதுவிலக்குக் குற்றங்கள் குறித்து துப்பறிய வாய்ப்பளிப்பது ஏற்றதாக இருக்காது. ஏனெனில், அந்நிறுவனங்கள் சட்டத்தின் நேரடிப் பார்வைக்குட்பட்டவையாக இல்லாததால் பல்வேறு குழப்பங்களும், சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சனைகளும் ஏற்படும். 1999 ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட கள்ளச்சாராயச் சாவுகளில் 80% சாவுகள் மெத்தனால் பருகியதால் ஏற்பட்ட சாவுகளாகக் கண்டறியப்பட்டுள்ளதால், அரசு சமீபத்தில் மெத்தனாலை கட்டுப்படுத்தும் தொடர்ச்சியான நீண்டகால நடவடிக்கைகளை எடுத்ததோடல்லாமல், மெத்தனாலை 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் ஆதிக்க வரம்பிற்குள் கொண்டுவந்துள்ளது. மேலும், சாராயத்திற்கு அடிமையான கீழ்நிலை மக்களின் வாங்கும் திறனுக்கேற்ப பாதுகாப்பான மதுவை கிடைக்கச்செய்யும் விதத்தில் மலிவு விலை இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு சாராவி (IMFS) வகைகள் 2002 ஜனவரி முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதே காலத்தில், கள்ளச்சாராயம் மற்றும் மெத்தனாலின் தீமைகள் குறித்த மாநிலந்தழுவிய விழிப்புணர்வு இயக்கமும் நடத்தப்பட்டு வருகின்றது.



2003 மே 10]

**197—**

**உப்பனாற்றின் கரையை உயர்த்துதல்**

**வினா எண் 16155—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள புதுத்துறை ஊராட்சியில் வெள்ளப்பள்ளம் என்ற கிராமம் மழைக் காலங்களில் நீரால் மூழ்கிவிடுவதால் உப்பனாற்றின் கரையை உயர்த்தி பலப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ.பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள புதுத்துறை ஊராட்சியில் வெள்ளப்பள்ளம் கிராமத்தின் அருகே உப்பனாற்றின் கரையைப் பலப்படுத்தும் பணி கடந்த ஜூன் 2000-ல் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**198—**

**வெட்டாறு கரையை உயர்த்துதல்**

**வினா எண் 16157—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சி-தாண்டவன்குளம் ஊராட்சியின் எல்லையாக இருக்கும் (முடவனாறு) வெட்டாறு கரையை உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சி-தாண்டவன்குளம் ஊராட்சியில் எல்லையாக இருக்கும் (முடவனாறு) வெட்டாறு கரையை உயர்த்தும் திட்டம் அரசிடம் இல்லை.

**199—**

### சுங்கக் கட்டணம்

**வினா எண் 16191—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி :** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) செங்கல்பட்டு பாலாற்றின் மீது மேம்பாலம் எந்த ஆண்டு திறக்கப்பட்டது?*

*(ஆ) அதில் வாகனங்களுக்குக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் எத்தனை ஆண்டுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது?*

*(இ) இதைப்போல தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் பாலங்களுக்காகவும் சாலைகளுக்காகவும் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) 631 மீ நீளமான செங்கல்பட்டு பாலாற்று பாலத்தில் கட்டுமானப் பணியானது 1986 ஆம் வருடம் துவங்கப்பட்டு 1989 செப்டம்பர் மாதம் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டது.*

*(ஆ) ஆகஸ்ட் 1995 முதல் மே 2000 வரை தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் வாகனங்களுக்கான கட்டணம் வசூலிக்கப்பட்டு மத்திய அரசுக்கு செலுத்தப்பட்டு வந்தது. 1-6-2000 முதல் இந்தப் பாலத்திற்கு தேசிய நெடுஞ்சாலை குழுமத்தால் (NHAI) சுங்கம் வசூலிக்கப்பட்டு வருகிறது. 27-8-1997 அன்று வெளியிடப்பட்ட தரைவழிப் போக்குவரத்து மத்திய அரசின் விதிமுறைகளின்படி வருடாவருடம் தொடர்ச்சியாக கட்டணம் வசூலிக்கச் சொல்லி இருப்பதனால் தொடர்ந்து கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.*

*(இ) தே.நெ. 7, 7ஏ, 49, 45, 47 மற்றும் 5-ல் உள்ள பாலங்கட்கும் தே.நெ. 47-ல் உள்ள புறவழிச் சாலைக்கும், மதுரை புறவழிச் சாலைக்கும் சோழிங்கநல்லூரிலிருந்து புதுவை எல்லை வரையுள்ள கிழக்கு கடற்கரைச் சாலைக்கும் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.*



**200—**

### நெடுஞ்சாலையைப் பாரமரித்தல்

**வினா எண் 16201—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் தேசிய நெடுஞ்சாலைகள் சரிவர பராமரிக்காமல் உள்ளதை செப்பனிட்டுக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 45ஏ-யில் கி.மீ. 119/4- 134/0 மற்றும் கி.மீ. 151/0-165/4 வரை ஓடுதளம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. கி.மீ 134/0-146/4 வரை மேம்பாடு செய்ய திருத்திய மதிப்பீட்டிற்கு மைய அரசின் ஒப்புகை எதிர்பார்க்கப்படுகிறது. மீதமுள்ள சாலைப் பகுதிகளில் நொடிகள் போடப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளது.*

## பட்டியல் 28

**1—**

### சாலைகள் அமைத்தல்

**வினா எண் 177—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*மன்னார்குடி தொகுதி, ராஜாங்கட்டளை, பண்டாரவாடை, திருநாட்டியத்தான்குடி, ஆதிவிடங்கம் ஆகிய கிராமங்களுக்கு கிராமப்புறச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், சாலைகள் உடன் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மேற்கண்ட பணி நபார்டு வங்கியின் நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து செய்யப்படும்.

2—

**அணை கட்டுதல்**

**வினா எண் 2331—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் கிராமத்திற்கு மேற்கே காணியாற்றின் குறுக்கே அணை கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மேற்கண்ட இடத்தில் அணை கட்டுவதற்குச் சாத்தியக்கூறு இல்லை.

3—

**சாலை அகலப்படுத்துதல்**

**வினா எண் 2362—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி முதல் ஜலகண்டபுரம் வரை உள்ள பிரதான நெடுஞ்சாலைத் துறை சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது செயல்படுத்தப்படும் எந்தத் திட்டத்திலும் இப்பணி இடம் பெறவில்லை.



2003 மே 10]

4—

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 2363—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி முதல் கோனேரிப்பட்டி வரை செல்லும் நெடுஞ்சாலைத் துறை சாலையை தார்ச் சாலையாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

5—

**சாலை அகலப்படுத்துதல்**

**வினா எண் 2366—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி முதல் மகுடஞ்சாவடி வரையிலுள்ள மாவட்ட சாலையில், இன்னும் அகலப்படுத்தப்படாமல் உள்ள சாலையினை எவ்வளவு என கணக்கிட்டு, இந்நிதியாண்டில் அகலப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

பணி முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது.

6—

**ஆற்றின் கரையை உயர்த்துதல்**

**வினா எண் 16209—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புளியந்துறை ஊராட்சியில் உள்ள உப்பாறறங்கரையை உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**7—**

**போக்குவரத்துச் சாலை ஏற்படுத்துதல்**

**வினா எண் 16643—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பணங்காட்டாங்குடியிலிருந்து மகேந்திரப்பள்ளி வரை உள்ள கொள்ளிடக்கரையைப் பலப்படுத்தி போக்குவரத்துச் சாலை ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) அதற்கான திட்டம் ஏதுமில்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

**8—**

**புனர்வாழ்வு நிவாரணத் திட்டம்**

**வினா எண் 16675—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொடர்ந்து கள்ளச்சாராயம் காய்ச்சுகின்ற கிராமங்கள் கண்டறியப்பட்டுள்ளனவா?*

*(ஆ) கள்ளச்சாராயம் காய்ச்சுவதிலிருந்து விலக்க அவர்களுக்கு ஏதாவது புனர்வாழ்வு நிவாரணத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*அறிக்கை*

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு முழுவதிலும், மொத்தம் 3,892 கிராமங்கள், மதுவிலக்குக் குற்றங்களில் தொடர்ந்து ஈடுபடும் கரும்புள்ளி கிராமங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 2,137 கிராமங்கள், கள்ளச்சாராயம் காய்ச்சுவதில் ஈடுபடும் கிராமங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. மாவட்ட வாரியாக உள்ள கரும்புள்ளி கிராமங்களின் விவரம் இணைப்பு 'அ'-ல் கொடுக்கப்பட்டுள்ளது.*

*மாவட்டங்களில், மறுவாழ்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் காவல் துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களால் எடுக்கப்பட்டு, வங்கிகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் மறுவாழ்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள செம்பகவுண்டனூர் கிராம மக்கள் கள்ளச்சாராயம் காய்ச்சுதலை கைவிட முன்வந்தபோது அம்மாவட்ட ஆட்சியரும், காவல் துறைக் கண்காணிப்பாளரும், அம்மக்களின் வாழ்விற்கு மாற்று ஏற்பாடு செய்யும் வகையில் ரூபாய் 5.52 இலட்சம் மதிப்புள்ள கறவை மாடுகளை வழங்கினர். மேலும் 72 குடும்பங்களுக்கு வெள்ளாடுகளையும், மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும் வழங்கினர். தேனி, மதுரை மற்றும் ஈரோடு மாவட்டங்களிலும் மறுவாழ்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தேனி மாவட்டத்தில், பாலாறுப்பட்டியைச் சார்ந்த 5 மதுவிலக்குக் குற்றவாளிகளுக்குக் கறவை மாடுகள் வழங்கப்பட்டன.*

*மாநிலத்திலுள்ள கள்ளச்சாராயப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், ஒவ்வொரு மாவட்த்திலும் ஒரு முறையான அமைப்பை ஏற்படுத்தி, அதன்மூலம் மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கான முறையான மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கருத்துருவானது அரசின் பரிசீலனையில் உள்ளது. மதுவிலக்குக் குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக ஒரு முறையான அமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில், ஒவ்வொரு மாவட்டத்திலும், அம்மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மறுவாழ்வுக் குழுவை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் கட்டுப்பாட்டில் 'மறுவாழ்வு நிதி' இருக்கும்.*

[2003 மே 10

## இணைப்பு-அ

### தமிழ்நாட்டில் உள்ள கரும்புள்ளி கிராமங்கள்

| வ. எண் (1) | மாவட்டங்கள் (2) | கரும்புள்ளி கிராமங்களின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. | விழுப்புரம் | 564 |
| 2. | தஞ்சாவூர் | 240 |
| 3. | கடலூர் | 228 |
| 4. | திருவண்ணாமலை | 210 |
| 5. | தேனி | 195 |
| 6. | நாகப்பட்டினம் | 161 |
| 7. | இராமநாதபுரம் | 153 |
| 8. | ஈரோடு | 141 |
| 9. | தருமபுரி | 141 |
| 10. | செங்கை (கிழக்கு) | 138 |
| 11. | கோயம்புத்தூர் | 137 |
| 12. | காஞ்சிபுரம் | 136 |
| 13. | தூத்துக்குடி | 133 |
| 14. | கன்னியாகுமரி | 127 |
| 15. | சேலம் | 107 |
| 16. | திருவாரூர் | 102 |
| 17. | வேலூர் | 95 |
| 18. | திருவள்ளூர் | 95 |
| 19. | மதுரை | 90 |
| 20. | கரூர் | 85 |
| 21. | அரியலூர் | 82 |
| 22. | விருதுநகர் | 77 |
| 23. | நாமக்கல் | 70 |
| 24. | திருச்சி | 65 |
| 25. | மதுரை (நகரம்) | 58 |
| 26. | திருநெல்வேலி | 53 |
| 27. | திண்டுக்கல் | 46 |
| 28. | சேலம் (நகரம்) | 37 |
| 29. | புதுக்கோட்டை | 31 |
| 30. | சிவகங்கை | 21 |
| 31. | திருச்சி (நகரம்) | 21 |
| 32. | திருநெல்வேலி (நகரம்) | 21 |
| 33. | சென்னை | 19 |
| 34. | பெரம்பலூர் | 15 |
| 35. | நீலகிரி | 0 |
| 36. | கோயம்புத்தூர் (நகரம்) | 0 |
| | மொத்தம் | 3,894 |



2003 மே 10]

9—

சிறைச் சாலை இடவசதி

**வினா எண் 16934—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள கிளைச் சிறைச்சாலைகளில் கைதிகளைச் சிறையில் அடைக்க போதுமான இடவசதிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக இதற்கு மாற்று ஏற்பாடு செய்ய ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) கிளைச் சிறைகளில் கைதிகளை அடைக்க போதுமான இடவசதிகள் இல்லை என்ற நேர்வு எழவில்லை.

(ஆ) கிளைச் சிறைகளில் இட நெருக்கடி ஏற்படும்போது அங்கீகரிக்கப்பட்ட இடவசதிக்கும் அதிகமான சிறைவாசிகள், அருகிலுள்ள மத்திய சிறைகளுக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர்.

10—

போலி மது

**வினா எண் 16944—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் போலி மது தயாரித்தனர் எனக் காவல் துறையினர் எவ்வளவு பேரைக் கைது செய்து உள்ளனர்?

(ஆ) அவர்கள்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில், 2001 ஆம் ஆண்டு மற்றும் 2002 ஆம் ஆண்டு இதுவரை போலி மது தயாரிப்பு சம்பந்தமாக 4 மதுபானக் கடை உரிமையாளர்கள் உட்பட மொத்தம் 44 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில், 5 குற்றவாளிகள், தமிழ்நாடு சட்டம் 14/1982-ன்கீழ் "கள்ளச் சாராயக்காரர்கள்" எனத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

11—

இரயில்வே மேம்பாலம்

**வினா எண் 17273—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சியில் சேதுபாவாசத்திரம் சாலையில் இரயில்வே மேம்பாலம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

12—

ஏரி, குளங்கள் தூர்வாரி ஆழப்படுத்துதல்

**வினா எண் 17815—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) சிங்காநல்லூர் தொகுதி, சர்க்கார் சாமக்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏரிகள், குளங்கள் ஆகியவற்றைத் தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**13—**

**சாலை செப்பனிடுதல்**

**வினா எண் 17885—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், புதுக்கோட்டை முப்பிடார்பட்டி சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை மேம்பாடு செய்ய ரூ.64.00 இலட்சம் தேவைப்படுகிறது. தற்போது இப்பணி எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை.



2003 மே 10]

**14—**

**சாலை செப்பனிடுதல்**

**வினா எண் 17898—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், மதுரை-தேனி ரோட்டில் ஆரியப்பட்டிக்குப் பிரிந்து செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைப் பணிக்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**15—**

**சாலை செப்பனிடுதல்**

**வினா எண் 17901—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், மதுரை-தேனி மெயின் ரோட்டிலிருந்து பிரிந்து அம்பாசமுத்திரம், இ. புதுப்பட்டி செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைப் பணி, மதுரை மாவட்டத்திற்குத் தயாரிக்கப்பட்ட பத்தாவது ஐந்தாண்டு பெருந்திட்டத்தில் (Master Plan) சேர்க்கப்பட்டுள்ளது.

[2003 மே 10

16—

சாலை செப்பனிடுதல்

**வினா எண் 17904—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், கோவிலாங்குளம் திம்மநத்தம் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை கி.மீ. 11/6—13/8 வரை மேம்பாடு செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதி கி.மீ. 4/8—11/6 வரை நபார்டு கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் ஆர்.ஐ.டி.எப். திட்டத்தின்கீழ் ரூ. 84.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.*

17—

சாலை செப்பனிடுதல்

**வினா எண் 17906—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், கொக்குளம்-உத்தப்பநாயக்கனூர் சாலையில் கி.மீ. 2-3, 5-6, 9-10, 12-13, 15-16 ஆகிய சாலைப் பகுதியைச் செப்பனிட முன்வருமா?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் கி.மீ. 2/4-3/6, 5/0-6/0, 12/3-16/8 மற்றும் 9/0-10/0 ஆகியவை மேம்படுத்தப்பட்டுவிட்டன. எஞ்சிய 1.9 கி.மீ. நீளமுள்ள சாலையைச் செப்பனிட ரூ. 9 இலட்சம் தேவைப்படும். தற்போது இதற்கான திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.*

18—

மலிவு விலை மது

**வினா எண் 17976—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு அறிமுகப்படுத்திய மலிவு விலை மது மற்றும் மதுபானங்கள் அரசு நிர்ணயித்த விலைக்கே கடைக்காரர்கள் விற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மலிவு விலை மதுபானங்களின் (100 மி.லி. அளவு கொண்ட சாதாரண "A" வகை மதுபானங்கள்) விற்பனை 2002-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாளுடன் நிறுத்தப்பட்டுவிட்டது. மதுபானச் சில்லறை விற்பனை உரிமதாரர்கள் தாங்கள் வாங்கும் பிறவகை மதுபானங்களுக்கான கொள்முதல் விலைகளுடன் 20 விழுக்காடுகள் தங்கள் இலாபத் தொகையைச் சேர்த்து அம்மதுபானங்களை விற்பனை செய்ய வேண்டும் என விதிகளில் கூறப்பட்டுள்ளது.

19—

### சாலை சீர்செய்தல்

**வினா எண் 17981—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட விருத்தாசலம்-எடச்சித்தூர் சாலையில் உடைந்த பாலம் இன்றுவரை சீர் செய்யப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இப்பாலத்தை உடன் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாலத்தைத் திரும்பக் கட்டும் பணி அரசின் பரிசீலனையில் இல்லை.

20—

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 17985—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சியிலிருந்து பனமங்களம், குமாரநத்தம், மருவத்தூர் வழியாக வைத்தீஸ்வரன்கோயில் செல்லும் சாலையை அகலப்படுத்தி தார்ச் சாலையாக கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) அரசின் நிதிநிலைமைக்கேற்ப வரும் காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

21—

### கிராமச் சாலைகள் அமைத்தல்

**வினா எண் 18094—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேருந்துகள் செல்லும் அனைத்து ஊராட்சி ஒன்றிய சாலைகளையும் கிராமச் சாலைகளாக (நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறை) மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேருந்துகள் செல்லும் அனைத்து ஊராட்சி ஒன்றிய சாலைகளையும் கிராமச் சாலைகளாக (அரசு சாலைகளாக) மாற்றுவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை.

22—

### கால்வாய் சீரமைத்தல்

**வினா எண் 18163—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை வட்டம், குறிச்சி பெரிய ஏரிக்குத் தண்ணீர் வரும் வாய்க்காலிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி கால்வாயைச் சீரமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**23—**

**வாய்க்கால் தூர் வாருதல்**

**வினா எண் 18295—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சியிலுள்ள வாடி உள்வாய்க்காலைத் தூர் வாரி செப்பனிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சியிலுள்ள வாடி உள்வாய்க்கால், மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நிவாரணத் திட்டத்தின்கீழ் தூர் வாரப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

**24—**

**வாய்க்கால் தூர் வாருதல்**

**வினா எண் 18296—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சியிலுள்ள கிருஷ்ணன் வாய்க்காலைத் தூர் வாரி சீர் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சியிலுள்ள கிருஷ்ணன் வாய்க்கால், மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரணத் திட்டத்தின்கீழ் தூர் வாரப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**25—**

**வாய்க்கால்கள் தூர் வாருதல்**

**வினா எண் 18299—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையப்பாளையம் ஊராட்சியில் உள்ள ஆலாடிக்கட்டளை, மூங்கிலடி மற்றும் அய்யன் கோட்டம் வாய்க்கால்களை தூர் வாரி சீர்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

26—

### வாய்க்கால் தூர் வாருதல்

**வினா எண் 18302—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சியில் உள்ள கொடக்காரமூலை கிராமத்தில் உள்ள சித்தாம்பிள்ளை வாய்க்காலை தூர் வாரி சீர் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சியில் கொடக்காரமூலை கிராமத்தில் உள்ள சித்தாம்பிள்ளை வாய்க்கால் மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரணப் பணி திட்டத்தின்கீழ் தூர் வாரப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

27—

### வாய்க்கால்கள் தூர் வாருதல்

**வினா எண் 18307—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கற்கோவில் ஊராட்சியில் உள்ள கோவிந்த காவேரி, பாப்பாவெளி மற்றும் கோவிலான் தெரிசி வாய்க்கால்களை தூர் வாரி சீர் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.





(ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கற்கோவில் ஊராட்சியில் உள்ள கோவிந்த காவேரி, பாப்பாவெளி மற்றும் கோவிலான் தெரிசி வாய்க்கால்கள் தூர் வாரி சீர் செய்யும் பணி மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நிவாரணத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

28—

### புதிய பாலம் அமைத்தல்

**வினா எண் 18398—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி வட்டம், மானியதள்ளி பஞ்சாயத்து, பரிகம் சாலையில், பரங்கி பள்ளத்தில் உள்ள குறுகலான பாலத்தை மாற்றி புதிய பாலம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மேற்கண்ட பாலம் நல்ல நிலையில் உள்ளதாலும், போக்குவரத்து அதிகமில்லையாதலாலும் இப்பாலத்தை அகலப்படுத்த அவசியம் இல்லை.

29—

### மின்விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 18707—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள ஆழியார் அணைக்கட்டு இரவு நேரங்களில் மின்விளக்குகளால் அழகுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

[2003 மே 10

30—

### சாலை சீரமைத்தல்

**வினா எண் 18746—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் இருந்து இரும்பாடி - பாலகிருஷ்ணாபுரம் சாலை, மிகவும் பழுதடைந்துள்ளதால் அரசு அதனை பழுது பார்க்க நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் கி.மீ 3/0-5/8 வரை நபார்டு ஆர்.ஐ.டி.எப். 5 திட்டத்தின்கீழ் ரூ.12 இலட்சம் செலவில் சாலை மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கி.மீ. 0/0-3/0 வரை தொகுதியாட்கள் மூலம் சீர் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.*

31—

### பள்ளிக் கட்டிடங்கள் பராமரிப்பு

**வினா எண் 18764—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள அரசு கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள் நீண்ட நாட்களாக பராமரிக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீரமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் அரசு கட்டடங்களின் பராமரிப்பு பணிக்கென 2001-2002 ஆம் நிதியாண்டில்*



2003 மே 10]

*ஒதுக்கப்பட்ட நிதி அளவிற்குள் அங்குள்ள அரசுக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள் உள்ளிட்ட ஏனைய கட்டடங்களின் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.*

32—

### சாலை செப்பனிடுதல்

**வினா எண் 18803—திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதி, கருவேப்பிலங்குறிச்சியிலிருந்து தொழுதூர் வரையுள்ள நெடுஞ்சாலையை செப்பனிடும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு &ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் 14.40 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 30 கி.மீ. நீளத்திற்கு தார் நறுக்குகள் போடப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளன.*

33—

### நெடுஞ்சாலை பராமரிப்பு

**வினா எண் 19333—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைகளில் தொலைத் தொடர்பு துறையினரால் தோண்டப்படும் இடங்கள் சரியாக மூடப்படவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தோண்டப்படும் இடங்களை சரியாக மூடிவிட அறிவுறுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நெடுஞ்சாலைத் துறை கோட்டங்களின் எல்லைக்குட்பட்ட அரசு சாலைகளில் சாலை மையத்திலிருந்து 15 மீட்டர் தள்ளியோ அல்லது சாலை மொத்த நிலஅகலத்தின் விளிம்பிலிருந்து* (Edge of the—Right of way) *50 மீட்டர் தள்ளி ஏற்கெனவே பாதிக்கப்பட்ட குடிநீர் குழாய், தொலைத் தொடர்பு கேபிள், கழிவுநீர்க் குழாய் போன்றவற்றிற்கு பாதிப்பு ஏற்படாமல் குழிகள் வெட்டி, கண்ணாடி இழைவடம் 1.50 மீட்டர் ஆழத்தில் பதித்து, ஏற்கெனவே அமைந்துள்ள சாலைத் தரத்திற்கு குழிகளை மூடி சரிசெய்யப்பட்டு வருகிறது. மேலும் கூடிய மட்டும் குழிகள் வெட்டாமல் நவீன தொழில்நுட்பமுறையில் கேபிள் பதிக்கவும்* (Trenchless Technology) *பொது மக்களுக்கும் இடைஞ்சல் இல்லாமல் குழிகள் தோண்டி முழுவதும் மூடி செப்பனிடுவதற்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், குழிகள் வெட்டி கேபிள் பதித்த 6 நாட்களுக்குள் சாலையை பழையநிலைக்கு சரிசெய்யவும், சாலையை சரிசெய்த இரண்டு அல்லது மூன்று வாரத்திற்குள் மறுபடியும் குழிகள் மூடி சரிசெய்த பகுதியில் பள்ளம் ஏற்பட்டால் சாலைகளை உடனடியாக மராமத்து செய்யவும் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.*

*2. தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரை தொலைத் தொடர்பு துறையினரால் பள்ளங்கள் சாலை எல்லையின் ஓரத்தில்* (Edge of the Boundary) *அமைக்கப்படுகின்றன. அவையாவும் தோண்டிய பின்னர் நல்லமுறையில் மூடப்பட்டு வருகின்றன.*

**34—**

### ஆற்றின் கரையைச் செப்பனிடுதல்

**வினா எண் 19420—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பாபநாசம் தொகுதி, கொத்தங்குடி ஊராட்சியில் மண்ணியாற்றின் கரை சேதம் அடைந்து உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதனைச் செப்பனிடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பாபநாசம் தொகுதி, கொத்தங்குடி ஊராட்சி, மண்ணியாற்றின் கரையில் சேதம் அடைந்த பகுதியை வருடாந்திர பராமரிப்பு நிதியின்கீழ் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ஜூலை 2002-ல் பணி செய்து முடிக்கப்பட்டு விட்டது.*

**35—**

### புதிய சாலை அமைத்தல்

**வினா எண் 19421—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பாபநாசம் தொகுதிக்கு உட்பட்ட சுவாமிமலை-ஆத்தூர் திருவைகாவூர் சாலை முழுமையாக பழுது அடைந்து உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், மேற்படி சாலையை புதியதாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம்.*

**36—**

### சாலை சீர் செய்தல்

**வினா எண் 19425—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பாபநாசம் தொகுதிக்கு உட்பட்ட திருப்புறம்பியம்-புளியஞ்சேரி சாலை சேதம் அடைந்து உள்ளதை அரசு அறியுமா?*

[2003 மே 10

(ஆ) ஆம் எனில், மேற்படி சாலையை உடனடியாக சரி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**37—**

**சாலை சீர்செய்தல்**

**வினா எண் 19539—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூர்-மோகனூர் வரையில் உள்ள சாலையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இச்சாலையில் பழுதடைந்துள்ள பகுதிகள் தார் நறுக்குகள் போடப்பட்டு வாகன போக்குவரத்திற்கு ஏற்றவகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**38—**

**சாலை சீர்செய்தல்**

**வினா எண் 19541—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதிக்குட்பட்ட கபிலர்மலை ஒன்றியம், சோளகிராமணி, வேலூர் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதை சரி செய்ய அரசு முன்வருமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சாலைகள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**39—**

**இருவழிச் சாலை அமைத்தல்**

**வினா எண் 19719—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரம்-விளாத்திகுளம் சாலையில் 0/0-1/0 வரை 1 கி.மீ. இருவழிச் சாலையாக மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**40—**

**தூர் வாருதல்**

**வினா எண் 19773—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல் நத்தம் ஊராட்சி, மரவத்திப்பள்ளம் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்வி எழாது.

**41—**

**ஏரி செப்பனிடுதல்**

**வினா எண் 20778—திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியத்திலுள்ள லட்சுமிபுரம் அணைக்கட்டு உடைந்துள்ளதால் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பாசனம் தடைப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், ஏரியின் உடைப்பை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* ஆரணியாற்றின் குறுக்கே லட்சுமிபுரம் கிராமத்தின் அருகில் கட்டப்பட்டிருந்த அணைக்கட்டு வெள்ளப் பாதிப்பால் பழுதடைந்த நிலையில் உள்ளது.

*(ஆ)* திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர் ஒன்றியம், லட்சுமிபுரம் கிராமத்தின் அருகில் ஆரணியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பழைய பழுதடைந்த அணைக்கட்டிற்கு அருகில் புதிய அணைக்கட்டு அமைத்திட ரூ.5.28 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நபார்டு வங்கி கடனுதவியின்கீழ் பணி மேற்கொள்ள நபார்டு வங்கி இசைவளித்துள்ளது. இந்த ஆண்டில் இத்திட்டம் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.



**42—**

**ஏரி தூர் வாருதல்**

**வினா எண் 21716—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, திருமேனி ஏரியையும் அதன் மூலம் பாசனம் வழங்கும் திருமேனி ஆற்றையும் முழுமையாக தூர்வாரி கரைகளைப் பலப்படுத்தும் திட்டம் இவ்வாண்டு திட்டத்தில் நிறைவேற்றப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, திருமேனி வடிகால் மற்றும் திருமேனி ஆற்றினை தூர்வாரி பலப்படுத்தும் பணி 2002-2003 ஆம் ஆண்டு நிதி நிலைமைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.

**43—**

**பள்ளிக் கட்டடம் செப்பனிடுதல்**

**வினா எண் 21717—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி & மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மகளிர் மேனிலைப் பள்ளியிலுள்ள அறிவியல் ஆய்வுக்கூட கட்டடம் மிகவும் பழுதடைந்து, கூரை விழுந்து விடும் அபாய நிலையிலுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அந்தக் கட்டடத்தை விரைவாக செப்பனிட்டுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

[2003 மே 10

(ஆ) எடப்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் உள்ள அறிவியல் ஆய்வுக்கூட கட்டட சிறப்பு மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ரூ.5.85 இலட்சங்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணி நிதி நிலைக்கேற்ப 2002-2003 ஆம் நிதி ஆண்டில் முன்னுரிமை கொடுத்து மேற்கொள்ளப்படும்.

**44—**

**வாய்க்கால் மராமத்து**

**வினா எண் 23235—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதியில் உள்ள வாய்க்கால்களையும், ஏரிகளையும் மராமத்து செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**45—**

**அணைக்கட்டு கட்டுதல்**

**வினா எண் 23423—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஏம்பல் கிராமம் அருகே பாம்பாற்றில் அணைக்கட்டு கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது இல்லை. ஆய்வுக்குப்பின் முடிவெடுக்கப்படும்.

**46—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 23478—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம் விக்கிரமங்கலம் பஞ்சாயத்து வையத்தான் ஆற்று குறுக்கே பாலம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது பாலம் இருப்பதால் புதிய பாலம் கட்டும் அவசியம் எழவில்லை.

**47—**

**சாலை மேம்பாடு**

**வினா எண் 23727—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நெடுஞ்சாலை கிராமச் சாலைகள் கோட்டத்தைச் சேர்ந்த கி.மீ. 8/6-ல் உள்ள உடுமலை குமரலிங்கம் சாலையில் பிரிந்து பால் சொசைட்டி வழியாக கிழவன்காட்டூர் செல்லும் சாலையை மேம்பாடு செய்துதர அரசு ஆணையிடுமா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையால் பயனடையும் கிராமம் ஏதும் இல்லையாதலாலும், இச்சாலையில் பேருந்து இயக்கம் இல்லாததாலும், இதை கிராமச் சாலைகள் பிரிவின்கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திட்டத்தின்கீழும் மேம்பாடு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**48—**

**சாலை மேம்பாடு**

**வினா எண் 23733—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத் துறை, கிராமச் சாலைகள் கோட்டத்தைச் சேர்ந்த மானாப்பட்டி-எலையமுத்தூர் சாலை கி.மீ.1/5 முதல் கி.மீ.7/2 வரை மேம்பாடு செய்துதர அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இச்சாலையை கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய பரிந்துரைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**49—**

**சாலை மேம்பாடு**

**வினா எண் 23738—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

நெடுஞ்சாலைத் துறையின் கிராமச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் கோட்டத்திலுள்ள லிங்கம்மாவூர்-தீர்த்தமேடு சாலை கி.மீ.0/0 முதல் கி.மீ. 4/0 வரை மேம்பாடு செய்திட அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையால் பயனடையும் கிராமம் ஏதுமில்லாததாலும், இச்சாலையில் பேருந்து இயக்கம் ஏதும் இல்லாததாலும், இச்சாலையை கிராமச் சாலைகள் பிரிவின்கீழ் மேற்கொள்ளப்படும் யாதொரு திட்டத்தின்கீழும் மேம்பாடு செய்ய பரிந்துரை செய்வதற்கு சாத்தியக்கூறு இல்லை.

**50—**

**சாலை மேம்பாடு**

**வினா எண் 23747—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத் துறை கிராமச் சாலைகள் கோட்டத்தைச் சேர்ந்த எலையமுத்தூர்-பெருமான்புதூர் சாலை கி.மீ. 0/8 முதல் 2/6 வரை மேம்பாடு செய்து தர அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் பயனடைவதாக கூறப்படும் கிராமங்களுக்கு ஏற்கெனவே பிறிதொரு தார்ச் சாலை அமைந்துள்ளதாலும், பேருந்து போக்குவரத்து இல்லாததாலும், இச்சாலையை கிராமச் சாலை திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் எந்தத் திட்டத்திலும் பரிந்துரைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2003 மே 10

51—

## நெடுஞ்சாலை அகலப்படுத்துதல்

**வினா எண் 23877—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பாபநாசம், தொகுதி அய்யம்பேட்டை—பாபநாசம் வரை உள்ள மாநில நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், இந்த ஆண்டில் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இல்லை.

52—

## ஆயுதப்படை நிறுவுதல்

**வினா எண் 24057—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்ட மத்திய சிறைச்சாலை மாநில பெண்கள் சிறைச்சாலை குற்றவாளிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்ல ஆயுதப்படையை வேலூரில் எப்போது அரசு நிறுவும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அவசியம் ஏற்படவில்லை.



2003 மே 10]

53—

## மழை நீர் சேமிப்பு

**வினா எண் 24118—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்தில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப நிலத்தடி நீரின் அளவு குறைந்து வருகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், மழை நீர், நிலத்தடி நீர் இவற்றைச் சேமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* தெரியும்.

*(ஆ)* தமிழகத்தில் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப நிலத்தடி நீரின் அளவு குறைந்து வருகிறது, மழைநீர், நிலத்தடி நீர் இவற்றை சேமிக்க அரசு கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது:

* ஆறுகள் மற்றும் ஓடைகள் குறுக்கே சிறுசிறு அணைகள் (Check Dam) கட்டி மழைநீர் தேக்கப்பட்டு, சேமிக்கப்படுகின்றது.

* ஏரிகள் மற்றும் குளங்கள் தூர்வாரப்பட்டு, அவைகளுடைய ஆழம் அதிகரிக்கப்பட்டு மழைநீர் வீணாகாமல் சேமித்து வைக்கப்படுகின்றது.

* விவசாயப் பொறியியல் துறையினால் தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கசிவுநீர் குட்டைகள் மூலம் மழைநீர் சேமித்து வைக்கப்படுகின்றது.

* மழைநீர் சேகரித்தல் பற்றி பொதுமக்களிடம் எடுத்துக்கூறி, வீட்டிலும் மற்றும் அலுவலகங்களிலும் பெய்யும் மழைநீர், சுற்றியுள்ள தரைப்பகுதிகளில் சேமிக்க செய்யவேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ள நிலநீர்ப் பிரிவு தக்க ஆலோசனைகளை கூறிவருகிறது. நிலநீர்ப் பிரிவு இதற்காக ஒரு கையேடு ஒன்று தயாரித்து வினியோகம் செய்து வருகிறது.

* சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மழைநீர் நிலத்தடி நீராக சேமிக்கப்படுகின்றது.

[2003 மே 10

* மேட்டுநிலங்களை சுற்றி கரைபோன்ற ஒரு தடுப்புச்சுவர் அமைப்பு ஏற்படுத்தி (contour bunding) மழைநீர் சேமிக்கப்படுகின்றது.

* மேற்பரப்பு நீர் மற்றும் நிலநீர் இணைந்து பயன்படுத்தும் திட்டத்தின்கீழ் நிலத்தடிநீர் சேமிக்கப்படுகின்றது. இதற்கான திட்ட அறிக்கை புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கு தயார் செய்து நீர்வள ஆதார ஒருங்கிணைந்த திட்டம் இரண்டாம்கட்டத்தின் (Water Resources Consolidation Project II) கீழ் செயல்முறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மழைநீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடிநீர் பெருக்க ஏதுவான நீர்ப்பெருக்கு அமைப்புகள் நிறுவ வழிவகை செய்யப்பட்டுள்ளது.

* சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் செய்வதன்மூலம் நிலத்தடிநீர் விரயமாவது தவிர்க்கப்பட்டு சேமிப்புக்கு வழி வகுப்பதால் இப்பாசன முறைகள் விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்காக நிலத்தடிநீர் விழிப்புணர்ச்சி முகாம்களை சிற்றூர்களில் நடத்துகின்றது. இந்த விழிப்புணர்வு முகாம்களில் ஒழுங்கான முறையில் நிலத்தடிநீர் பயன்படுத்துதல், மேற்பரப்பு நீர் மற்றும் நிலநீர் இணைந்த கூட்டு உபயோகமுறைகள், செயற்கைமுறையில் நிலத்தடிநீர்ப் பெருக்கம் குறிப்பாக மழைநீர் சேகரிப்பு முறைகள் அதன்பயன்பாடுகள் நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர் மாசுபடுதலைத் தவிர்த்தல் ஆகியவைகளை பொதுமக்கள் மற்றும் வேளாண் மக்கள் நன்கு அறியும்வண்ணம் தெரியப்படுத்தப்படுகின்றது.

* வரைமுறையற்ற நிலநீர் எடுப்பு தவிர்க்கப்பட்டு நிலநீர் சேமிக்கப்படுவதற்கு 'நிலநீர் ஒழுங்குமுறைச் சட்டம்' ஒன்று அரசின் ஆய்விலுள்ளது.

* மேலும் மழை நீரைச் சேமித்து நிலத்தடி நீரைப்பாதுகாத்து அதிகரிக்க ஒரு தொலை நோக்குத் திட்டம் தயாரிக்க டாக்டர் ஏ. வெங்கட்ராமன், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் 11 பேர் கொண்ட வல்லுநர் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு நல்ல யோசனைகளை அளித்து வருகின்றது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஆற்றுப்படுகைகளிலும் நிலத்தடி நீர் பெருக்குவதற்கான அமைப்புகள் அமைத்திட திட்ட கருத்துருக்கள் தேசிய வங்கிக்கு (NABARD) அனுப்பப்பட்டுள்ளது.



2003 மே 10]

**54—**

**கிளைச் சிறைச்சாலை அமைத்தல்**

**வினா எண் 24405—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப்பகுதி என்பதால் வால்பாறையிலேயே கிளை சிறைச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் கிளைச்சிறை அமைக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**55—**

**ஏரிப் பாசன சங்கம் அமைத்தல்**

**வினா எண் 24409—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலக வங்கி திட்டத்தின்கீழ் ஏரிப் பாசன விவசாய சங்கத்தை முறைப்படுத்தி புதியதாக ஏரிப் பாசன சங்கம் அமைத்து செயல்பட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

56—

**பூங்கா பழுது பார்த்தல்**

**வினா எண் 24426—திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதியில் குடகனாறு அணைக்கட்டில் உள்ள பூங்காவின் பழுதை நீக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

குடகனாறு அணைக்கட்டில் பூங்கா ஏதுமில்லை.

57—

**பூங்கா அழகுபடுத்துதல்**

**வினா எண் 24568—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள சோலையார் அணைக்கட்டு பூங்காவை அழகுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



58—

**கைதிகளுக்கு சலுகை**

**வினா எண் 24679—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிளைச் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு ரேஷனின் அளவு மற்றும் இதர சலுகைகளையும் கூடுதலாக அளிக்கும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தற்போது கிளைச் சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்கு வழங்கப்படும் ரேஷன் அளவு மற்றும் இதர சலுகைகள் போதுமானதாக உள்ளதால் இதனை மேலும் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

59—

**சிறிய அணை அமைத்தல்**

**வினா எண் 25353—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கன் அள்ளி ஊராட்சி, பெரியபள்ளம் கொரவனக்கல் என்னும் இடத்தில் சிறிய அணை ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2003 மே 10

60—

**தடுப்புச் சுவர் கட்டுதல்**

**வினா எண் 3719—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டம், கீழ்கோத்தகிரி ஓசஹட்டி கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

அ) மற்றும் ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பணிகள் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதால் கீழ்கோத்தகிரி ஓசஹட்டி கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்டும்பணி நடப்பாண்டில் சேர்க்கப்படவில்லை. இனிவரும் ஆண்டுகளில் மேற்கொள்ள பரிசீலிக்கப்படலாம்.

61—

**பயணிகள் நிழற்கூடம்**

**வினா எண் 3722—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், கரக்கோடு மட்டம் என்ற இடத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயணிகள் நிழற்கூடம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பணிகள் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு



2003 மே 10]

ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதால், நீலகிரி மாவட்டம் கோத்தகிரி ஒன்றியம், கரக்கோடு மட்டம் என்ற இடத்தில் நிழற்கூடம் அமைக்கும் பணி நடப்பாண்டில் சேர்க்கப்படவில்லை. இப்பணியை இனிவருங்காலங்களில் மேற்கொள்ளுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்படும்.

62—

**தடுப்புச் சுவர் அமைத்தல்**

**வினா எண் 3725—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், ஓம் நகரில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தடுப்புச் சுவர் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பணிகள் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதால் நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியத்தில் ஓம் நகரில் தடுப்புச் சுவர் கட்டும் பணியை நடப்பாண்டில் மேற்கொள்ள இயலாது. இனிவரும் காலங்களில் மேற்கொள்ள பரிசீலிக்கப்படலாம்.

63—

**நிழற்கூடம் அமைத்தல்**

**வினா எண் 3726—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், ஓம் நகரில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிழற்கூடம் கட்டித்தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பணிகள் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதால் இப்பணியை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் நடப்பாண்டில் மேற்கொள்ள இயலாது. இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படலாம்.

**64—**

### தார்ச் சாலை

**வினா எண் 3737—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நான்சச் முதல் ட்ருக் வரை தார்ச் சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள நான்சச் முதல் ட்ருக் வரையிலான சாலைப்பகுதி தனியாருக்கு சொந்தமான இடமாகையால் இப்பணியை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்க இயலாது.



2003 மே 10]

**65—**

### தார்ச் சாலை

**வினா எண் 3779—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், நீர்கண்டியிலிருந்து பிள்ளையார் கோயில்வரை தார்ச்சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோத்தகிரி ஒன்றியம், நீர்கண்டியிலிருந்து பிள்ளையார் கோயில்வரை உள்ள தார்ச் சாலை பகுதி தனியாருக்கு சொந்தமான இடமாகையால் இப்பணியை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்க இயலாது.

**66—**

### அரசுத் துறைகளில் ஆட்குறைப்பு

**வினா எண் 7594—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத் துறைகளில் ஆட்குறைப்புச் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுத் துறைகளில் புதியதாகப் பணியிடங்கள் தோற்றுவிக்க தடையாணை, அரசாணை நிலை எண் 463, நிதித் (சி.எம்.பி.சி) துறை, நாள் 23-11-2001-ல் வெளியிடப்பட்டுள்ளது. அரசுப்

[2003 மே 10

பணிகளில் காலியாக உள்ள பதவிகளை நிரப்ப ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் காவலர்கள் நீங்கலாக தடையாணை, அரசாணை நிலை எண் 212, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 29-11-2001-ல் வெளியிடப்பட்டுள்ளது. அரசுத் துறைகளின் செலவுகளைக் குறைப்பதற்கான வாய்ப்புகள் பற்றி பரிசீலிக்க டாக்டர் திரு. ஏ.எம். சுவாமிநாதன், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் தலைமையில் பணியாளர் மற்றும் செலவுச் சீராய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**67—**

### சீட்டுக் கம்பெனிகள்

**வினா எண் 17213—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனுமதி பெறாத சீட்டுக் கம்பெனிகளை அரசு தடை செய்ய முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

1982 ஆம் வருடத்திய சீட்டு நிதிச்சட்டம் பிரிவு 4—ன்படி பதிவு செய்யாமல் நடத்தப்படும் சீட்டுகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சட்டத்தை மீறினால் சீட்டு நிதிச்சட்டம் 76(1)-ன்படி தண்டனைகள் வழங்கவும் சட்டத்தில் இடம் உள்ளது.

**68—**

### கூடுதல் நிதிச்சுமை

**வினா எண் 20213—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பதினொன்றாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளை மைய அரசு செயல்படுத்தியதால், தமிழக அரசிற்கு எதிர்பாராக் கூடுதல் நிதிச்சுமை ஏற்படுத்தி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இக்குறைகளைக் களைய அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பதினோராவது நிதிக் குழுவின் பரிந்துரையினால் பாதிக்கப்பட்ட மாநிலங்களோடும் மற்றும் தனியாகவும் பதினோராவது நிதிக் குழுவின் பரிந்துரை காரணமாக ஏற்பட்ட குறைகளைக் களைய மைய அரசுக்கு வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளது. பதினோராவது நிதிக் குழுவின் பரிந்துரைகள் வளர்ச்சி அடைந்த மற்றும் வளரும் மாநிலங்களுக்கு மைய அரசின் வரிப் பகிர்வில் உரிய பங்கினை அளிக்காததைத் தொடர்ந்து, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை பன்மாநிலக் குழுவினைக் கூட்டி இதுகுறித்து விவாதிக்கவும், மாநிலங்களுக்கு நடுநிலை நோக்கில் உரியதான பங்கினை வழங்குவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளவும் வேண்டுகோள் விடுத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 14-8-2000 அன்று நேர்முகக் கடிதம் அனுப்பப்பட்டது. இதுதவிர, மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் அவர்களால் பதினோராவது நிதிக் குழுவினால் மதிப்பிடப்பட்ட தொகையினை விட குறைவாக மைய அரசின் வரி திரட்டுதல் இருக்கும் நிலையில் பதினோராவது நிதிக் குழுவினால் மதிப்பிடப்பட்ட தொகையாவது அளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நேர்முகக் கடிதம் ஒன்று 2-10-2002-ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நிதிக் குழு நிர்ணயித்த அளவுகோல்களின்படி நிதிச் சீரமைப்பில் முன்னேற்றம் எய்திய மாநிலங்களுக்கு மானியம் அளிக்க நிதிக் குழு ஊக்க நிதியம் (Incentive Fund) ஒன்றினை ஏற்படுத்தி உள்ளது. தமிழ்நாட்டிற்கு ரூ.402.36 கோடியினை ஊக்க நிதியாக 2000-2005 வரையிலான காலத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இத்தொகை நிதிக் குழு நிர்ணயம் செய்த பல்வேறு அளவுகோல்களை நூறு சதவீதம் செயல்படுத்துவதன் மூலமே பெற இயலும். நிதிக் குழு பரிந்துரை செய்த நிதிச் சீர்திருத்தங்களில் 2005 ஆம் ஆண்டில் மாநிலங்கள் வருவாய் பற்றாக்குறையினை பூஜ்ஜியம் என்ற நிலைக்கு கொணர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வருவாய்ப் பற்றாக்குறையினை குறைந்த கால அவகாசத்தில் பூஜ்ஜியம் என்ற நிலைக்குக் கொணர மாநில அரசு பல வழிகளை மேற்கொள்ள வேண்டும். மாநில அரசு எடுக்கின்ற சீர்திருத்த முயற்சிகளினால் ஏற்படும் நிதிச் சுமைகளைக்

[2003 மே 10

கணக்கிடும் போது நிதிக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஊக்க நிதி போதுமானவையாக இல்லை. எனவே நிதிச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள ஊக்க நிதியினை மும்மடங்காக உயர்த்தி வழங்க வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18-10-2002 அன்று புதுதில்லியில் பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநிலங்களின் நிதி நிலை தொடர்பான முதலமைச்சர்களின் மாநாட்டில் வலியுறுத்தியுள்ளார். மேலும் 21-12-2002 அன்று புதுதில்லியில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து குறிப்பிட்டு பதினோராவது நிதிக் குழுவின் பரிந்துரைகளில் உள்ள குறைகளைப் போக்கிட வலியுறுத்தியுள்ளார்கள்.

69—

### வழக்கறிஞர்களுக்கு தனி அறை ஒதுக்குதல்

**வினா எண் 197—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களில் பணிபுரியும் வழக்கறிஞர்களுக்கு நீதிமன்ற வளாகத்திலேயே தனித் தனி அறைகளை அரசு ஒதுக்கீடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளரின் பரிந்துரைக்கேற்ப, வழக்கறிஞர்களுக்கான அறைகள் கொண்ட நீதிமன்றக் கட்டடம் கட்டி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.



2003 மே 10]

70—

### நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 1216—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் இயங்கிக் கொண்டு இருக்கும் நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

71—

### வழக்கறிஞர்கள் சங்கக் கட்டடம்

**வினா எண் 3109—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கக் கட்டடம் தனியாக கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கக் கட்டடம் தனியாகக் கட்டித்தர நீதித்

[2003 மே 10

துறையினரிடமிருந்து கோரிக்கை ஏதும் இதுநாள் வரை இத்துறையால் பெறப்படவில்லை.

72—

**உயர் நீதிமன்றக் கிளை**

**வினா எண் 3593—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் உயர் நீதிமன்றக் கிளை எப்போது தொடங்கப்பெறும்?

(ஆ) அதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பணிக்கான ஒப்பந்ததாரர்கள் 8-3-2001-ல் முடிவு செய்யப்பட்டது. இரண்டு கட்டப் பணிகளாக இவற்றை செய்ய முடிவு செய்யப்பட்டு, பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் முடிவடைந்தபின் உயர் நீதிமன்றக் கிளை செயல்படும்.

73—

**மென்பொருள் ஏற்றுமதி**

**வினா எண் 5332—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து சாப்ட்வேர் எவ்வளவு மதிப்பிற்கு ஏற்றுமதி ஆனது?

(ஆ) அதை அதிகரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்து 1914 கோடி ரூபாய் மதிப்பிற்கான கணினி மென்பொருள் ஏற்றுமதி ஆனது.

(ஆ) சென்னைக்கு அருகில் சிப்காட் நிறுவனம் மூலம் சிறுசேரியில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா, சென்னை தரமணியில் டைடல் இரண்டாவது பூங்கா மற்றும் தனியார் மென்பொருள் தொழில் நுட்பப் பூங்காக்கள் ஆகியவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இம்முயற்சிகளின் மூலம் மென்பொருள் ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்புள்ளது.

74—

**நீதிமன்ற வளாகம்**

**வினா எண் 6538—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதிக்கு உள்ளிட்ட பேரூராட்சி மையத்தில் நீதிமன்ற வளாகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதிக்கு உள்ளிட்ட பேரூராட்சி மையத்தில் நீதிமன்ற வளாகம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசுக்கு இல்லை.

[2003 மே 10

75—

**சார்பு நீதிமன்றம் அமைத்தல்**

**வினா எண் 8197—திரு. மா. ராஜசேகர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், சார்பு நீதிமன்றமும் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

அரசின் நிதி நெருக்கடி காரணமாக ராஜபாளையம் தொகுதியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு தற்பொழுது தள்ளி வைக்கப்பட்டுள்ளது. சார்பு நீதிமன்றம் அமைப்பது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

76—

**நீதிமன்ற பெயர் மாற்றம்**

**வினா எண் 9675—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு "சென்னை உயர் நீதிமன்றத்தை" "தமிழ்நாடு உயர் நீதிமன்றம்" என்று பெயர் மாற்றம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

77—

**மாவட்ட நீதிமன்றம்**

**வினா எண் 9837—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டத்திற்கான மாவட்ட நீதிமன்றம் ஸ்ரீவில்லிப்புத்தூரில் செயல்பட்டு வருவதால் மாவட்டத் தலைநகரான விருதுநகரில் மாவட்ட நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டத்திற்கான மாவட்ட நீதிமன்றம் ஸ்ரீவில்லிப்புத்தூரில் இயங்கி வருவதால், விருதுநகரில் மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்தும் அவசியம் எழவில்லை.

78—

**நீதிபதி பணியிடங்கள் நிரப்புதல்**

**வினா எண் 12856—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியில் உள்ள நீதிமன்றங்களில் நீதிபதிகளின் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது தருமபுரியில் நீதிமன்றங்களில் நீதிபதி பணியிடங்கள் ஏதும் காலியாக இல்லை.

**79—**

**நீதிபதிகளுக்கு வசதி செய்தல்**

**வினா எண் 14103—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புதிய நீதிமன்றக் கட்டடங்கள் கட்டும்போது வழக்கறிஞர்களுக்கு கழிப்பறை வசதியுடன் அறைகள், நீதிபதிக்கு தேவையான வசதிகளுடன் ஓய்வு அறை, பொது மக்களுக்கு கழிப்பறை முதலியவை கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

புதிதாகக் கட்டப்படும் நீதிமன்றக் கட்டடங்களில் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வசதிகள் அனைத்தும் செய்து தரப்படுகிறது.



2003 மே 10]

**80—**

**சட்டக் கல்லூரி துவங்குதல்**

**வினா எண் 15041—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் சட்டக் கல்லூரி நடப்பாண்டில் துவங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

இல்லை.

**81—**

**சட்ட வல்லுநர்கள் நியமனம்**

**வினா எண் 15168—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சட்ட ஆலோசனைகள் வழங்க சட்ட வல்லுநர்களை நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[2003 மே 10

82—

**இணையதள மையங்கள்**

**வினா எண் 16788—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு சார்பில் இணையதள மையங்கள் துவக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இணையதள மையங்கள் (NIC) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அரசின் கொள்கை மற்றும் ஆணைகளை www.tn.govt.in என்ற இணையதளத்தில் காணலாம்.

83—

**சட்டக் கல்லூரி ஏற்படுத்துதல்**

**வினா எண் 17186—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் சட்டக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.



2003 மே 10]

84—

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**வினா எண் 17187—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

85—

**குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**

**வினா எண் 17188—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

இல்லை.

[2003 மே 10

86—

சார்பு நீதிமன்றம்

**வினா எண் 18514—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளிக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் அல்லது சார்பு நீதிமன்றம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் அல்லது சார்பு நீதிமன்றம் எதுவும் ஏற்படுத்தும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

87—

டைடல் பார்க் அமைத்தல்

**வினா எண் 18620—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, எட்டயபுரத்தில் டைடல் பார்க் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உள்கட்டமைப்பு, மனிதவள வாய்ப்புகள் மற்றும் பிற வசதிகள் மூலம் பெரிய அளவிலான முதலீடுகளை ஈர்க்கும் வண்ணம் சென்னையில் Tidel Park அமைக்கப்பட்டது. அடிப்படை வசதிகள் குறைவாகவுள்ள எட்டயபுரத்தில் இதுபோன்று தகவல் தொழில் பூங்கா அமைக்க தனியார் நிறுவனங்கள் முன்வந்தால் அரசு உதவி செய்யும்.



2003 மே 10]

88—

சட்ட நூல்

**வினா எண் 18966—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனம் மூலமாக, சட்டம் மற்றும் தீர்ப்புரைகள் புத்தகங்களை மீண்டும் தமிழில் வெளியிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்த்து புத்தக வடிவில் வெளியிடுதல் சட்டத் துறையிலுள்ள ஆட்சிமொழிப் பிரிவின் பணியாகும். தீர்ப்புரைகளைத் தமிழில் மொழிபெயர்த்து "தீர்ப்புத் திரட்டு" என்ற சட்ட இதழாக வெளியிடுதல், சென்னை, உயர்நீதிமன்றத்தின்கீழ் உள்ள தமிழ் சட்ட இதழ் பிரிவின் பணியாகும். தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் பணி பாட நூல்களை அச்சிட்டு வெளியிடுவதாகும். எனவே, சட்டம் மற்றும் தீர்ப்புரைகளைத் தமிழில், தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வாயிலாக வெளியிடும் வினா எழவில்லை.

89—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

**வினா எண் 19185—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அரசால் கட்டித்தர இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**90—**

**நீதிமன்றங்கள்**

**வினா எண் 19428—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் நீதித் துறை நடுவர் மன்றத்தின் ஆளுகைக்கு உட்பட்ட 69 கிராமங்கள் திருவையாறு மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளதை மீண்டும் பாபநாசம் நீதிமன்றத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

இப்பொருள் சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ளது.

**91—**

**ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்**

**வினா எண் 19801—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) மன்னார்குடி நகரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது இதற்கான செயற்குறிப்புகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**92—**

**அரசு சட்டக் கல்லூரி**

**வினா எண் 21633—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் அரசு சட்டக் கல்லூரி நிறுவ அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

இல்லை.

**93—**

**அரசு சட்டக் கல்லூரி**

**வினா எண் 23977—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) புதுக்கோட்டையில் அரசு சட்டக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**94—**

**சட்டக் கல்லூரி**

**வினா எண் 29855—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியான கந்தர்வகோட்டை பகுதியில் சட்டக் கல்லூரி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

இல்லை.

**95—**

**தமிழ்நாடு சட்ட ஆணையம்**

**வினா எண் 32059—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) தமிழ்நாடு சட்ட ஆணையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் பணிகள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) ஏற்கெனவே அமைக்கப்பட்ட தமிழ்நாடு சட்ட ஆணையத்தின் காலம் முடிவடைந்துவிட்டதால், மேற்படி சட்ட ஆணையத்தை திருத்தியமைப்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ஆங்கிலேயர் காலத்திய சட்டங்கள், அதன் பின்னர் இயற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த காலக்கட்டங்களில் இயற்றப்பட்ட சட்டங்கள் ஒவ்வொன்றையும் பரிசிலனை செய்து, தற்காலத்திற்கு அதன் பொருந்தும் தன்மை, வேண்டிய மாற்றங்கள், திருத்தங்கள் பற்றி அரசாங்கத்திற்கு பரிந்துரைப்பது ஆகும். மேற்சொன்ன சட்டங்களில் உச்ச மற்றும் உயர் நீதிமன்ற முடிவுகளுக்கு ஏற்ப, செய்யவேண்டிய மாற்றங்கள் குறித்து ஆலோசனை கூறுதல் ஆகும்.

மேலும் சட்ட ஆணையமானது,—

1. தற்போது இருந்துவரும் சட்டங்களில் காணப்படும் குற்றங்குறைகளை களைவதற்கு ஏற்ற மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் குறித்து ஆலோசனை கூறும்.

2. பொருத்தமான, சமுதாய, பொருளாதார சட்டமியற்றும் நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை கூறும்.

3. மாநிலங்களுக்கு இடையிலான உறவுகளுக்கும், மைய, மாநில உறவுகளுக்குமான வழிவகைகளைப் பற்றி ஆலோசனை கூறும்.

4. நீதி நிர்வாகத்தின் சீர்திருத்தங்களுக்குச் செம்மையானதும் விரைவானதுமான நடைமுறைகள் பற்றி ஆலோசனை கூறி பரிந்துரை செய்யும்; மற்றும்

5. மாநில சட்டங்களுக்கு மட்டும் அல்லாமல் இந்த மாநிலத்திற்குப் பொருந்தி வரும் மையச் சட்டங்களுக்கும்கூட மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் பற்றி ஆலோசனை கூறும்.

96—

## வணிக வளாகம்

**வினா எண் 544—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி அருள்மிகு ராஜகோபால சுவாமி கோயிலுக்கு எதிரிலுள்ள இடங்களில் வணிக வளாகம் அமைத்து, வருவாயைப் பெருக்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

மன்னார்குடி அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோயிலுக்கு எதிரில் உள்ள திருக்கோயில் இடத்தில் வருவாயை பெருக்கும் பொருட்டு வணிக வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

97—

## செயல் அலுவலர் நியமனம்

**வினா எண் 1247—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நெருப்பூர் அருகேயுள்ள அருள்மிகு முத்தித்தராயசுவாமி திருக்கோயிலை அரசே ஏற்று நடத்திட செயல் அலுவலர் நியமித்தும், இதுவரை பொறுப்பேற்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், உடனடியாக செயல் அலுவலர் பொறுப்பேற்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.



*(ஆ)* தருமபுரி அருள்மிகு சாலை விநாயகர் திருக்கோயிலின் செயல் அலுவலர், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் நெருப்பூர் அருள்மிகு முத்தித்தராயசுவாமி திருக்கோயிலுக்கு செயல் அலுவலராக நியமிக்கப்பட்டும் பரம்பரை அறங்காவலர்கள் மற்றும் ஊர் பொது மக்களும் ஆலய பொறுப்புகளை செயல் அலுவலரிடம் ஒப்படைக்க மறுத்துள்ளனர். இருப்பினும் திருக்கோயில் பொறுப்புக்களை செயல் அலுவலர் 18-6-2000 அன்று சுயமாக ஏற்றுக்கொண்டார். இப்பிரச்சினையைத் தீர்க்க வருவாய் துறையினர், காவல் துறையினர், பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரைக் கொண்ட அமைதிக் குழு ஏற்படுத்தப்பட்டு, அமைதிக் குழு பலமுறை கூடியும் ஒருமித்த கருத்து ஏற்படாமல் கூட்டம் முடிக்கப்பட்டது. எனினும் 16-3-2002 அன்று நடைபெற்ற அமைதிக் குழுக் கூட்டத்தில் ஒருமித்த கருத்து ஏற்பட்டு அதன் அடிப்படையில் நெருப்பூர் அருள்மிகு முத்தித்தராயசுவாமி திருக்கோயிலின் முழு பொறுப்புகளையும் பரம்பரை அறங்காவலரிடமிருந்து 5-4-2002 செயல் அலுவலர் ஏற்றுள்ளார்.

98—

## ஆலயத் திருப்பணி

**வினா எண் 5571—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசமுத்திரம் ஒன்றியம், ஆண்டிக்காடு ருத்திரகோடீஸ்வரசுவாமி ஆலயத்தினை திருப்பணி செய்ய அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

நிதி வசதியில்லாததால் திருப்பணி செய்ய இயலாது.

99—

## கோவிலுக்கு மலைப்பாதை

**வினா எண் 6728—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு இந்து

[2003 மே 10

சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேர்ணாம்பட்டு தொகுதி, உமராபாத் மலையில் ஆண்டிமுருகன் கோயிலுக்கு மலைப்பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், உமராபாத் கிராமம், கைலாசகிரி மலை மேல் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் செல்ல ரூ.59 இலட்சம் மதிப்பீட்டில் "நமக்கு நாமே திட்டத்தின்" மூலம் மலைப்பாதை அமைக்கும் பணிக்கான நடவடிக்கை மாவட்ட ஆட்சியரின் மூலம் ஊரக வளர்ச்சித் துறைக்குப் பரிந்துரைக்கப்பட்டு மேற்படி மதிப்பீட்டில் 25% பொதுமக்கள் நன்கொடை மற்றும் 75% அரசு மானியம் என்றவாறு கணக்கிட்டு பொதுமக்கள் நன்கொடையாக ரூ.14.25 இலட்சமும், அரசு நிதியாக ரூ.44.25 இலட்சமும் நிதி பங்கீடு செய்து, மாவட்ட ஆட்சியரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பொது மக்கள் நன்கொடையான ரூ.14.75 இலட்சத்தில் இதுவரை ரூ.13.50 இலட்சம் வேலூர் மாவட்ட ஆட்சியரிடம் வழங்கப்பட்டு அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி பணி மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை மூலம் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

**100—**

### தெப்பக்குளங்கள் தூர் வாருதல்

**வினா எண் 7407—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, திருமோகூர், காளமேகப்பெருமாள் கோயில் வடக்கே உள்ள இரண்டு (2) தெப்பக்குளங்களையும் தூர் வாரும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், திருமோகூர், அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயிலுக்கு வடக்கேயுள்ள தெப்பக் குளங்கள் இரண்டும் திருமோகூர், அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமானது. இத்திருக்குளங்கள் இரண்டும் நீர் நிறைந்த தெப்பக்குளங்களாக, சுத்தமாகவும், நல்ல நிலையிலும் உள்ளன. மேற்படி திருக்குளம் இரண்டும் பாசிக் குத்தகைக்கு ஏலம் விடப்பட்டுள்ளது. எனவே தற்போதைக்கு தூர் வாரும் அவசியம் ஏற்படவில்லை.

**101—**

### கோயில் திருப்பணி

**வினா எண் 7654—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு திருப்பணிகள் செய்திடவும், பழுதடைந்த தேரை செப்பனிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், விளாத்திகுளம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு பொதுமக்கள் ஒத்துழைப்புடன் திருப்பணி வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டு 24-10-96-ல் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. மேற்படி ஆலயத்தில் தற்போது மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணி வேலைகள் ஏதுமில்லை. மேற்படி திருக்கோயிலுக்கு மூன்று அடுக்குகள் கொண்ட மரத் தேர் உள்ளது. இத்தேரில் அவ்வப்போது ஏற்படும்

பழுதுகளை சரிசெய்து ஆண்டுதோறும் தேர்த் திருவிழா தொடர்ந்து நடைபெற்று வருகிறது. புதிதாக தேர் செய்வதற்கு திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லை. வறட்சியான இப்பகுதியில் பொது மக்கள் நன்கொடை மூலம் இப்பணியை மேற்கொள்வது இயலாததாக உள்ளது. மேலும் திருத்தேர் புதிதாக செய்வதற்கு தொகை முழுவதையும் அரசு மானியமாக வழங்குவதும் சாத்தியமில்லை. இதற்கு பொது மக்கள் நன்கொடை, உபயதாரர்கள் மற்றும் தன்னார்வாளர்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் அவசியமாகும். எனவே, மேற்படி திருக்கோயிலுக்கு புதிதாக தேர் செய்வதற்கு பொது மக்கள்/உபயதாரர்கள் ஆர்வத்துடன் முன்வந்தால் அதனடிப்படையில் துறையும் ஒத்துழைப்பு நல்கும்.

**102—**

**தெப்பக்குளங்கள் தூர் வாருதல்**

**வினா எண் 7970—திரு. ப. பொன்னம்பலம்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சமயநல்லூர் தொகுதி கிழக்கு ஒன்றிய மத்தியில் உள்ள திருமோகூர், கார்மேகப் பெருமாள் கோயிலில் உள்ள இரண்டு தெப்பக்குளங்கள் தூர் வாரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில் எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், திருமோகூர், அருள்மிகு காளமேகப் பெருமாள் திருக்கோயிலுக்கு வடக்கே இரு குளங்கள் உள்ளன. இவை இரண்டும் திருக்கோயிலுக்குச் சொந்தமானதாகும். இத்திருக்குளங்கள் இரண்டும் நீர் நிறைந்த தெப்பக்குளங்களாகவும் நல்ல நிலையிலும் உள்ளன. எனவே இவற்றை தற்போதைக்கு தூர் வாரும் அவசியம் ஏற்படவில்லை.



**103—**

**திருக்கோயில் பணியாளர்களுக்கு நிலம் வழங்குதல்**

**வினா எண் 10279—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் வேலை பார்க்கும் பணியாளர்களுக்குக் குடியிருக்க வீடுகள் கட்டிக் கொள்ள சர்வே செய்யப்பட்ட கோயில் நிலத்தை ஒதுக்கித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**104—**

**கும்பாபிஷேகம்**

**வினா எண் 10358—திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் கும்பாபிஷேகப் பணிகளை விரைந்து முடிக்க திருக்கோயில் நிதியிலிருந்து நிதி ஒதுக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆமெனில், விவரம் என்ன?*

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இத்திருக்கோயிலின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 127 திருப்பணிகள் மொத்தம் ரூ.4,15,98,250/- செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் திருக்கோயில் நிதி ஒதுக்கீடு ரூ.60,93,000/-. மேலும் அனைத்து திருப்பணி வேலைகளும், உபயதாரர்கள் நன்கொடை, திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு விரைந்து முடித்து 27-6-2002 அன்று திருக்குடமுழுக்கு விழா நடத்தப்படவுள்ளது.

**105—**

**ஆலயக் குளத்தை ஆழப்படுத்துதல்**

**வினா எண் 10458—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் அருள்மிகு தேனுபுரீஸ்வரர் ஆலயக் குளத்தை ஆழப்படுத்தி, சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில். தொல்பொருள் துறையினரால் எடுத்துக்கொள்ளப்பட்டு பராமரிப்புப் பணிகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. 30 அடி ஆழமுள்ள இத்திருக்குளத்தில் தண்ணீர் முழுவதும் நிரம்பியுள்ள நிலையில் தூர்வாரி, ஆழப்படுத்தி சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.



2003 மே 10]

**106—**

**கோயில் நிலங்களை மீட்டல்**

**வினா எண் 10813—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில் நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து உடனடியாக மீட்கத் தனிச் சட்டம் இயற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கோயிலுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் மீது இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டம், 1959, சட்டப்பிரிவு, 78 மற்றும் 79-ன்கீழ் நடவடிக்கை எடுக்க வழிவகை உள்ளது. இந்நிலையில், திருக்கோயில் நிலங்களின் ஆக்கிரமிப்புகளை அகற்றத் தனிச் சட்டம் தேவை இல்லை.

**107—**

**வைப்புத் தொகை**

**வினா எண் 10814—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயன்படுத்தாமல் இருக்கும் கோயில் நிலங்களை அரசு சார்ந்த துறைகளுக்கு விற்று அந்நிதியை கோயில்களின் நிரந்தர வைப்புத் தொகையாக வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பயன்படுத்தப்படாமல் இருக்கும் கோயில் நிலங்களை அரசுத் துறைகள் விற்பனைக்குக் கேட்டால், தமிழ்நாடு இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 34-ன்கீழ் பரிசீலித்து விற்பனை செய்யப்பட்டு, விற்பனைத் தொகை வங்கிகள் மற்றும் அரசு நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டு வருகிறது.

**108—**

**கும்பாபிஷேகம்**

**வினா எண் 10830—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டைக் கருங்குளம் கிராமத்தில் வரகுணபாண்டியன் மன்னர் காலத்தில் கட்டப்பட்ட சிவன் கோயில் (ராசிங்க ஈஸ்வரர்) கும்பாபிஷேகம் 100 ஆண்டுகளுக்கு மேல் நடைபெறாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருக்கோயிலில் நிதிவசதி இல்லாத காரணத்தால் திருப்பணி நடைபெறவில்லை. பொதுமக்கள் நன்கொடையின்றி திருப்பணி செய்வது சிரமமானதாகும். திருப்பணிக் குழு அமைத்து பொது மக்கள் நன்கொடை வசூல் மற்றும் உபயதாரர் மூலம் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



**109—**

**கோயில் சொத்துக்களை மீட்டல்**

**வினா எண் 12314—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்திலுள்ள கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களை மீட்டு கோயில்களின் வருவாயை அதிகரிக்கச் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**110—**

**ஆலயம் பழுதுபார்த்தல்**

**வினா எண் 12344—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி, திருவானைக்காவல் ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தை பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் வட்டம், திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 12-7-2000 அன்று குடமுழுக்கு நடத்தப்பட்டது. தற்போது பழுதுபார்க்க வேண்டிய வேலைகள் ஏதுமில்லை.

[2003 மே 10

111—

### குடில்கள் செப்பனிடுதல்

**வினா எண் 12377—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி திருத்தலத்தில் ஆலயம் சார்பாக கட்டப்பட்டுள்ள குடில்கள், தங்கும் விடுதிகள் பழுதடைந்து உள்ளதால், அவைச் செப்பனிட்டு பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலைச் சார்ந்த தங்கும் விடுதிகள் அனைத்தும் மராமத்து செய்யப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

112—

### தேர்கள் புதுப்பித்தல்

**வினா எண் 12488—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயில் திருத்தேர்களை புதுப்பித்தலுக்கு அரசு நிதியுதவி வழங்குமா?

(ஆ) ஆமெனில், அதுகுறித்த தகவல்களை அரசு அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயிலில் உள்ள திருத்தேர்கள் நல்ல நிலையில் உள்ளதால் அதனைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.



2003 மே 10]

113—

### ஆலயத் திருப்பணி

**வினா எண் 12709—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் ஸ்ரீபாலசுப்பிரமணியம் ஆலயத்திற்கு திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், சேதுபாவாசத்திரம், கழனிவாசல், அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் உபயதாரர்கள் மூலம் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

114—

### கோயில் நிலங்களுக்கு வாடகை வசூலித்தல்

**வினா எண் 12712—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான நஞ்சை/புஞ்சை நிலங்களில் 10 வருடங்களுக்கும் மேலாக குடியிருப்பவர்களுக்கு மனை வாடகை நிர்ணயம் செய்து வாடகை வசூலிக்கும் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**115—**

**ஆலயத் திருப்பணி**

**வினா எண் 12753—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ராஜாமடம் ஊராட்சி காசிவிஸ்வநாதசுவாமி ஆலய திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை.

**116—**

**கோயில் புதுப்பித்தல்**

**வினா எண் 13147—திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு வட்டம், சுணைப்பட்டு கிராமம், ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பிக்க அறநிலையத் துறையிலிருந்து 3-1/2 இலட்சம் மதிப்பீடு செய்து அனுப்பப்பட்டு பணி நிறைவேறாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது நிறைவேற்றப்படும்?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உத்தேசமாக ரூ.3.50 இலட்சத்திற்கு கிராம மக்களால் உபயமாக திருப்பணிகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டு விட்டன.

**117—**

**ஆலயத் திருப்பணி**

**வினா எண் 16248—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர் தொகுதியில் சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த திருநாவலூர் பக்தஜனேஸ்வரர் ஆலயத்தை திருப்பணி செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திருக்கோயில் ரூ.4,50,000/- செலவில் முக்கிய திருப்பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

**118—**

**பொது மக்களுக்கு வசதி**

**வினா எண் 16604—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்திற்கு வைகுண்ட ஏகாதசி திருவிழாவின்போது பொது மக்களுக்கு செய்யும் வசதிகள் போதுமானதாக இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தேவையான வசதிகள் செய்து கொடுக்க ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலின் வைகுண்ட ஏகாதசி திருவிழா துவங்குமுன்னர், அனைத்துத் துறை அலுவலர் மற்றும் பொதுமக்கள் கலந்துகொள்ளும் வகையில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் தலைமை மற்றும் முன்னிலையில், ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்பட்டு, அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை ஏற்று அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

**119—**

**பறக்கும்படை அமைத்தல்**

**வினா எண் 16605—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புகழ் வாய்ந்த திருத்தலங்களில் உள்ள கோயில்களில் சிறப்பு கட்டண வழிபாட்டு முறையில் நடைபெறும் தவறுகளை கண்காணிக்க பறக்கும் படை அமைத்துக் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் புகழ்வாய்ந்த திருத்தலங்களில் உள்ள கோயில்களில் சிறப்புக் கட்டண வழிபாட்டு முறையில் நடைபெறும் தவறுகளை கண்காணிக்க பறக்கும் படை அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.



**120—**

**கோயில்மூலம் மருத்துவ வசதி**

**வினா எண் 16888—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள பிரதான பிரசித்தி பெற்ற கோயில்களின் வருமானத்தின் மூலம் ஏழை எளிய மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்க அரசு திட்டம் தீட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள பிரசித்திபெற்ற 8 திருக்கோயில்களில், சித்த மருத்துவமனைகளும் மற்றும் 2 திருக்கோயில்களின் சார்பில் ஆங்கில மருத்துவமனைகளும் செயல்பட்டு வருகின்றன.

**121—**

**திருமண மண்டபம்**

**வினா எண் 17258—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணியில் உள்ள அருள்மிகு நீலகண்ட பிள்ளையார் ஆலயத்திற்குத் திருமண மண்டபம் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை.

[2003 மே 10

122—

## கோயில் கட்டுமானப் பணிகள்

**வினா எண் 17281—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் ஒட்டங்காடு, ஸ்ரீஅய்யனார் சுவாமி கோயில் கட்டுமானப் பணிகள் நிறைவுபெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஒட்டங்காடு அருள்மிகு அய்யனார் சுவாமி திருக்கோயில் திருப்பணி வேலைகளை திருப்பணிக்குழு அமைத்து விரைவில் முடிக்க ஆவன செய்யப்படும்.

123—

## கோயில் திருப்பணி

**வினா எண் 17282—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் "மனோரா" சுற்றுலா தளத்தில் உள்ள ஸ்ரீமாரியம்மன் கோயில் திருப்பணி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மனோரா சுற்றுலா தளத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீமாரியம்மன் திருக்கோயில்



2003 மே 10]

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாதலால் திருப்பணியினை இத்துறை மூலம் செய்ய இயலாது.

124—

## கோவில் தங்கும் வசதி

**வினா எண் 18596—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் தொகுதி, கிராவுத்தநல்லூர் ஊராட்சியிலுள்ள ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோயிலை அபிவிருத்தி செய்து பக்தர்கள் தங்கும் வசதியும், ஏனைய வசதியும் செய்துதர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

மேற்படி திருக்கோயிலுக்குக் குறைந்த வருவாயே வருகிறது. அவ்வருவாய் படித்தரம், ஆலய சிப்பந்திகள் சம்பளம், மின் கட்டணம், திருவிழா செலவு ஆகியவற்றிற்கே போதுமானதாக இல்லை. திருக்கோயில் நிதிநிலை பற்றாக்குறையாக உள்ளதால், பக்தர்களுக்கு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள வசதிகளை செய்துதர இயலாத நிலை உள்ளது.

125—

## கோயில்கள் அபிவிருத்தி

**வினா எண் 18941—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் வெள்ளிமலையில் சிறப்பாக செயல்படும் சிவன் கோயில் மற்றும் காளியம்மன் கோயில், முருகன் கோயில் மற்றும் மாரியம்மன் கோயில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இக்கோயில்கள் நல்ல நிலையில் உள்ளதாலும், 19-06-1995 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளதாலும், கோயில்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை எடுக்கும் அவசியம் எழவில்லை.

**126—**

**கோயில் குளம் தூர் வாருதல்**

**வினா எண் 19097—திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நகரில் உள்ள தில்லையம்மன் காளிகோயில் அருகில் உள்ள குளத்தை தூர் வாரிட அக்கோயிலின் அதிகாரத்தை சில தனியார் கைப்பற்றி அதன் மூலம் இலாபம் அடைய முயற்சிப்போர் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சிதம்பரம் நகரில் உள்ள தில்லையம்மன் காளி திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளத்தின் தூர் வாரும் பணி தொடர்ந்து நடைபெற்று சுமார் 75 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேற்படி திருக்கோயிலின் அதிகாரத்தைக் கைப்பற்ற எவரும் முயற்சி செய்யவில்லை.

**127—**

**கும்பாபிஷேகம்**

**வினா எண் 19192—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகர சுண்ணாம்புப் பேட்டையிலுள்ள புங்கலூர் அம்மன் கோயிலைச் சீரமைத்து கும்பாபிஷேகம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகர், சுண்ணாம்புப் பேட்டையிலுள்ள புங்கலூர் அம்மன் திருக்கோயில் திருப்பணிக்கு ஆகும் முழுத் தொகையையும் அரசு நிதியாக வழங்க இயலாது என்பதாலும், இப்பகுதிவாழ் மக்களில் பெரும்பாலோர் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் என்பதாலும், திருப்பணியில் பொதுமக்களை ஈடுபடுத்தி திருப்பணிக் குழு அமைத்து நிதி திரட்ட வாய்ப்பில்லை என்பதாலும், மேற்படி ஆலயத் திருப்பணியை மேற்கொள்ள தற்போதைக்குச் சாத்தியமில்லை.

**128—**

**திருமண மண்டபம் கட்டுதல்**

**வினா எண் 19833—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் மீனாட்சி சுந்தரேசுவரர்சுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான காலி இடத்தில் வணிகவளாகம், திருமண மண்டபம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்சுவாமி திருக்கோயிலில்

நிதி வசதி இல்லாததால், திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடத்தில் வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**129—**

**ஒலி ஒளி காட்சிகள் அமைத்தல்**

**வினா எண் 19851—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் அக்கோயில் பற்றிய வரலாற்றை ஒலி ஒளி காட்சிகள் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இல்லை.

**130—**

**கோயில் சாலை சீரமைத்தல்**

**வினா எண் 19858—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலின் வடக்கு மற்றும் தெற்கு மதில் சுவர்களை ஒட்டியுள்ள சாலைகளை திருக்கோயில் நிதி மூலம் திண்காரை சாலையாக்க (சிமென்ட் சாலை) அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இல்லை.

**131—**

**கும்பாபிஷேகம்**

**வினா எண் 20230—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, திருவிதாங்கோடு, அருள்மிகு நீலகண்டசுவாமி திருக்கோயில் ஆலய திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்ய அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்று அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, கல்குளம் தாலுகா, திருவிதாங்கோடு, அருள்மிகு நீலகண்டசுவாமி கோயிலில் உபயதாரர்/திருக்கோயில் நிதி மூலம் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகிறது. திருப்பணிகள் முடிவுபெற்றதும் கும்பாபிஷேகம் செய்யப்படும்.

**132—**

**கோயில் வருவாய்**

**வினா எண் 20241—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) செங்கற்பட்டு விநாயகர் கோயிலின் (துணை ஆட்சியர் அலுவலகம்) கடந்த 10 ஆண்டுகள் வருவாய் எவ்வளவு என அரசு அறிவிக்குமா?

(ஆ) அவ்வருவாயில் செலவுகள் மற்றும் இருப்பு எவ்வளவு?

(இ) புதிய வருவாய்க்கு நிர்வாகத் திட்டம் எதாவது நடைமுறைப்படுத்தப்பட உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு நகரில் அமைந்துள்ள விநாயகர் கோயிலின் (துணை ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ளது) கடந்த 10 ஆண்டுகளில் மொத்த வருவாய் ரூ.1,94,10,448.05 ஆகும்.

(ஆ) அவ்வருவாயில் செலவுகள் ரூ.1,93,81,949.55 ஆகும். இருப்பு நிலை முதலீடு ரூ.40,21,000/- ஆகும்.

(இ) திருக்கோயிலில் பெறப்படும் வருமானத்திற்கு ஏற்ப செலவுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதால், நிலையான வருவாய் ஏற்படுத்தப்படக்கூடிய புதிய நிர்வாகத் திட்டம் ஏதுமில்லை.

**133—**

## கோவில் வருமானம்

**வினா எண் 20286—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஒரு இலட்சத்திற்கு மேல் ஆண்டு வருமானம் உள்ள ஆலயங்கள் எத்தனை?

(ஆ) இவற்றைப் பராமரிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் ஒரு இலட்சத்திற்கு மேல் ஆண்டு வருமானம் கிடைக்கப்பெறும் திருக்கோயில்கள் 47 உள்ளன.

(ஆ) இத்திருக்கோயில்களை பராமரிக்க இத்திருக்கோயில்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை பாதுகாக்கவும், திருக்கோயில் வருமானத்தைப் பெருக்கவும், நிர்வாகத்தை சட்டவிதிகளின்படி சீரிய முறையில் நடத்திடவும், சட்டப் பிரிவு 45(1)-ன்கீழ் செயல் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி அனைத்து திருக்கோயில்களிலும் பழக்க வழக்க முறை மற்றும் ஆகம விதிகளின்படி நித்ய பூஜை மற்றும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

**134—**

## அன்னதானத் திட்டம்

**வினா எண் 20365—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், செவ்வாய்ப்பேட்டை அருள்மிகு மாரியம்மன் கோயிலில் மதிய உணவு அன்னதானத் திட்டம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம், செவ்வாய்ப்பேட்டை அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் செவ்வாய்ப்பேட்டை அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயிலின் குழுக் கோயில்களாகும். நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, குழுக்கோயிலின் சார்பாக முதன்மை

கோயிலான பிரசன்ன வெங்கடாசலபதி பெருமாள் திருக்கோயிலில் 15-08-2002 முதல் தினசரி அன்னதானத் திட்டம், செயல்படுத்தப்பட்டு வருவதால் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**135—**

**அன்னதானத் திட்டம்**

**வினா எண் 20446—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம், விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகர், அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயிலில் 15-08-2002 முதல் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**136—**

**கோயில் குடமுழுக்கு**

**வினா எண் 20590—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் கோயிலில் திருப்பணி துவங்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகி உள்ளதால் குடமுழுக்கு வைபவம் எப்போது நடைபெறும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ள ரூ.341 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. 12-12-2002-ல் திருப்பணிக்குழு அமைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. திருப்பணி மதிப்பீடு அங்கீகாரம் செய்யப்பட்டு, உபயதாரர்கள் மற்றும் திருக்கோயில் நிதி இவற்றின் மூலம் திருப்பணிகளை மேற்கொண்டு திருக்குடமுழுக்கு செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**137—**

**கோயில் வருமானம்**

**வினா எண் 20668—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பெசன்ட் நகர், அருள்மிகு அஷ்டலஷ்மி கோயிலில் ஆண்டுக்கு எவ்வளவு வருவாய் வருகிறது?

(ஆ) அக்கோயிலில் எத்தனை பேர் நிரந்தரப் பணியாளர்களாக உள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதி, பெசன்ட் நகர், அருள்மிகு அஷ்டலஷ்மி திருக்கோயில் பசலி 1411-ம் ஆண்டின் வருவாய் ரூ. 31,98,743 ஆகும்.

(ஆ) இத்திருக்கோயிலில் 21 நபர்கள் நிரந்தரப் பணியாளர்களாக உள்ளனர்.

[2003 மே 10

138—

## புதிய விடுதி கட்டுதல்

**வினா எண் 21008—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதியில் சுவாமிமலை சுவாமிநாதசுவாமி தேவஸ்தான பக்தர்கள் தங்கும் விடுதிகள் சேதமடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிதாக விடுதி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பாபநாசம் தொகுதியில் உள்ள சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி தேவஸ்தான பக்தர்கள் தங்கும் விடுதிகள் பழுதுபார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன. பக்தர்கள் தங்க புதிய விடுதி கட்டப்படுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

139—

## தளம் அமைத்தல்

**வினா எண் 21009—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, சுவாமிமலை சுவாமிநாதசுவாமி திருக்கோயில் சுற்றுப்பிரகார தளம் அமைக்கும் பணி முழுமையடைய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலின் சுற்றுப்பிரகாரத்தில் கருங்கல் தளம் அமைக்கும் பணி முழுவதும் நிறைவு செய்யப்பட்டு 25-5-2002 முதல் தங்கரதம் நான்கு புற பிரகாரங்களிலும் முழுச்சுற்று புறப்பாடு நடைபெற்று வருகிறது.

140—

## வணிக வளாகம் கட்டுதல்

**வினா எண் 35776—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, குயப்பேட்டை அருள்மிகு கந்தசாமி ஆலயத்திற்குரிய குயப்பேட்டை வணிக வளாகத்தை புதிதாக கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சென்னை, குயப்பேட்டை அருள்மிகு கந்தசாமி-ஆதிமொட்டையம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான குயப்பேட்டை மார்க்கெட்டை புதிதாக கட்ட தற்போது வாய்ப்பில்லை.

141—

## அரசு ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 1839—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் தொகுதி, வெண்ணந்தூர் ஒன்றியம், போதமலையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவும், அதற்கென கட்டடம் கட்டவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

போதமலையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

**142—**

**செவிலியர் பயிற்சிப் பள்ளி**

**வினா எண் 3269—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அரசே புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளிகளை துவங்கிட முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தற்பொழுதுள்ள அரசின் நிதி நிலைமையில் அரசு சார்பில் புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளிகளைத் துவக்க இயலாது.

**143—**

**தமிழ் மொழி**

**வினா எண் 3323—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழை உயர் தனிச் செம்மொழியாக அறிவிக்க தேசிய செயல் திட்டத்தில் இணைக்க மீண்டும் முயற்சி எடுக்கப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

ஆம்.

**144—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 4479—திரு தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பாச்சாரப்பாளையம் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், பாச்சாரப்பாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**145—**

**தாய் சேய் நல விடுதிக்கு புதிய கட்டடம்**

**வினா எண் 4498—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் குழிப்பாண்தண்டலம் கிராமத்தில் இயங்கும் தாய் சேய் நல விடுதி கட்டடம் இடிந்துவிட்டதால் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் குழிப்பாண்தண்டலம் துணை சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நிலமாற்ற ஆணை கிடைக்கப் பெற்றபின், கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**146—**

**தாய் சேய் நல விடுதிக்கு புதிய கட்டடம்**

**வினா எண் 4499—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், விட்டிலாபுரம், பழுதடைந்த தாய் சேய் நல விடுதிக்கு புதிய கட்டடம் கட்டி புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* காஞ்சிபுரம் மாவட்டம், விட்டிலாபுரம் தாய் சேய் நல விடுதி 17-5-1971 முதல் எவ்வித பழுதுமில்லாமல் செயல்பட்டு வருகிறது.

*(ஆ)* இக்கேள்வி எழவில்லை.

**147—**

**பெண் மருத்துவர் நியமனம்**

**வினா எண் 4612—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சி ஆரம்ப சுகாதார மையத்திற்கு பெண் மருத்துவர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவ அலுவலர் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

**148—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 5766—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், மாதானத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், மாதானம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

149—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 11584—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நடுமேட்டுக்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், நடுமேட்டுக்குப்பம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

150—

### கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 11635—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதிக்குட்பட்ட நத்தம் ஊராட்சி மற்றும் நத்தம் கிராமத்திற்கு ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம்; கந்திலி ஊராட்சி ஒன்றியம், நத்தம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார் நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



151—

### செவிலியர் பயிற்சிப் பள்ளி

**வினா எண் 11749—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் செவிலியர் பயிற்சிப் பள்ளி துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதைய அரசின் நிதிநிலைமையில் விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் செவிலியர் பயிற்சிப் பள்ளி துவங்க இயலாது.

152—

### இசைப் பள்ளிகள்

**வினா எண் 12365—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புதிதாக துவக்கப்பட்ட மாவட்டங்களில் இசைப் பள்ளிகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தற்போது தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவைதவிர, பிற மாவட்டங்களில் அரசு இசைப் பள்ளிகள் தொடங்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 மே 10

153—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 13088—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி, மேட்டுப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், மேட்டுப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

154—

**துவக்கப் பள்ளி ஆரம்பித்தல்**

**வினா எண் 13291—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், பட்டக்காரன் கொட்டாய் கிராமத்தில் நடப்பாண்டில் துவக்கப் பள்ளி துவங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

2002-2003 ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற மைய மாநில அரசின் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம்,



2003 மே 10]

பெண்ணாகரம் ஒன்றியம், பட்டக்காரன் கொட்டாய் கிராமத்தில் புதியதாக துவக்கப்பள்ளி ஒன்று துவக்கப்பட்டுள்ளது.

155—

**நூலகம் அமைத்தல்**

**வினா எண் 13649—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட மேல்மாம்பட்டு கிராமத்தில் நூலகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு கிராமத்தில் ஒரு நூலகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்யாததால், அவ்விடத்தில் நூலகம் அமைக்க இயலவில்லை.

156—

**மருத்துவர்கள் நியமனம்**

**வினா எண் 14077—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வட்ட மருத்துவமனைகளில் ஓமியோபதி மருத்துவர்கள் நியமிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நியமிக்கப்படுவார்களா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் அனைத்து வட்ட மருத்துவமனைகளிலும் இந்திய முறை சிகிச்சைப் பிரிவுகளை தேவையின் அடிப்படையில் தொடங்கவேண்டும் என்ற கொள்கைத் திட்டம் அரசிடம் உள்ளது. இதன் தொடக்கமாக தற்சமயம் 9 வட்ட மருத்துவ மனைகளிலும் தேவை மற்றும் அரசின் நிதிநிலை ஆகியவற்றின் அடிப்படையில் படிப்படியாக ஓமியோபதி மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(ஆ) நடப்பு நிதியாண்டில் ஓமியோபதி மருத்துவப் பிரிவுகள் தொடங்கி ஓமியோபதி மருத்துவர்கள் நியமிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை.

**157—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 14587—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதியிலுள்ள குள்ளம்பட்டியில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கை வசதிகளுடன் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சங்ககிரி தொகுதியிலுள்ள குள்ளம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படவில்லை. துணை சுகாதார நிலையம்தான் செயல்படுகிறது. இத்துணை சுகாதார நிலையத்தினை படுக்கை வசதிகளுடன்கூடிய ஆரம்ப சுகாதார நிலையமாக விரிவுபடுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.



**158—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 15125—திரு. அ. சிவபெருமான்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், கீழமுடிமண் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், கீழமுடிமண் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**159—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 15840—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், உவரி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**160—**

**மருத்துவர்களுக்கு விடு கட்டுதல்**

**வினா எண் 15902—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மதுரை மாவட்டம், தெற்குத் தெருவில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் மற்றும் மருத்துவருக்கு தங்க குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர், குடியிருப்பு கட்டடங்கள் கட்ட தற்போது அரசால் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, மதுரை மாவட்டம் தெற்குத் தெருவில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் மற்றும் மருத்துவர் தங்க குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**161—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 16207—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கூழையார் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், கூழையார் கிராமத்தில் புதிய சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**162—**

**மருந்து தட்டுப்பாடு**

**வினா எண் 16997—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஆரம்ப சுகாதார மையங்களில் உயிர்காக்கும் மருந்து வகைகள் போதுமானதாக இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தேவையான அனைத்து மருந்துகளும், குறிப்பாக உயிர்காக்கும் மருந்துகள், தேவையான அளவு, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் வாயிலாக வழங்கப்பட்டு, தேவையான அளவு இருப்பு வைக்கப்படுகிறது.

**163—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 18304—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், பழையபாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**164—**

**இரத்த வங்கி திறத்தல்**

**வினா எண் 18494—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இரத்த வங்கி மூடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கிக்கு உரிமம் பெறப்படாததால் செயல்படாமல் உள்ளது. இந்த இரத்த வங்கிக்கு உரிமம் பெற முதலில் கட்டணத் தொகை ரூ.1000/- செலுத்தப்பட்டது. கட்டணத் தொகையை மைய அரசு ரூ.7,500/- ஆக உயர்த்தியதால், எஞ்சிய கட்டணத் தொகை ரூ.6,500/- 28-6-2002 அன்று செலுத்தப்பட்டு விட்டது. தற்போது உரிமம் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உரிமம் பெற்றபின் இந்த இரத்த வங்கி செயல்படத் துவங்கும்.



2003 மே 10]

**165—**

**மருத்துவர்களுக்குக் குடியிருப்பு**

**வினா எண் 18591—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்ட மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்ட மருத்துவமனையில் போதிய இடவசதி இல்லை. எனவே அங்கு பணிபுரியும் மருத்துவர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது ஏதும் இல்லை.

**166—**

**தண்ணீர் வசதி**

**வினா எண் 18592—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்ட மருத்துவமனைக்கு போதிய தண்ணீர் வசதி இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது தாம்பரம் அரசு மருத்துவமனையில் தண்ணீர் தட்டுப்பாடு இன்றி 24 மணி நேரம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**167—**

**ஆரம்ப சுகாதார மையம்**

**வினா எண் 18643—திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, அன்மருதை கிராமத்தில் ஆரம்ப சுகாதார மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், அன்மருதை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**168—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 18683—திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் வட்டம், புதுக்கொத்துக்காட்டில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம், புதுக்கொத்துக்காடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**169—**

**இசைக் கல்லூரி**

**வினா எண் 19046—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை இசைக் கல்லூரி நிரந்தரமாக எங்கு, எப்போது நிறுவப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் அரசு, இசைக் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம் ஏற்படுத்த மாவட்ட ஆட்சியரிடம் இடம் கேட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**170—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 19434—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம், மூங்கில்துறைப்பட்டு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**171—**

**விரிவுரையாளர் பணியிடம் நிரப்புதல்**

**வினா எண் 20289—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு கலைக் கல்லூரியில் விரிவுரையாளர் பணியிடம் காலியாக உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடத்தை நிரப்ப அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம்-7, அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் 15 விரிவுரையாளர் பணியிடங்களும், சேலம்-8, அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 10 விரிவுரையாளர் பணியிடங்களும் காலியாக உள்ளன. தற்போது அரசு கல்லூரிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றி அரசு அறிவிப்பு செய்துள்ள நிலையில் இக்கல்லூரிகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கிடையில் மாணவர்கள் நலனைக் கருதி, மேற்படி கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.



**172—**

**இசைப் பயிற்சி**

**வினா எண் 20478—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலை, பண்பாட்டுத் துறை மூலம் வட்ட வாரியாக நடனம், இசை, பயிற்சிகள் நடத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

ஏதுமில்லை.

**173—**

**கிளை நூலகம்**

**வினா எண் 20915—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி யூனியன், எருமார்பட்டி பஞ்சாயத்து, அம்மமுத்தன்பட்டி மக்களுக்கு கிளை நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தின்படி 5,000 முதல் 50,000 மக்கள் தொகை உள்ள பகுதிகளில் கிளை நூலகம் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி யூனியன், எருமார்பட்டி பஞ்சாயத்து, அம்மமுத்தன்பட்டி கிராமத்தின் மக்கள் தொகை 293 ஆகும். எனவே, மக்கள் தொகையின் அடிப்படையில் அம்மமுத்தன்பட்டியில் கிளை நூலகம் அமைக்க தற்போது வாய்ப்பு ஏதும் இல்லை.

[2003 மே 10

**174—**

**செயற்கை ஓடுதளம்**

**வினா எண் 21290—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு அரங்கில் செயற்கை ஓடுதளம் அமைக்கப்படுமா?

*(ஆ)* இது தேசிய அளவிலான விளையாட்டரங்காக மேம்பாடு செய்யப்படுமா? அதற்கான விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மகாத்மா காந்தி விளையாட்டரங்கத்தில் செயற்கை ஓடுதளம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* இந்த விளையாட்டு அரங்கை தேசிய அளவிலான விளையாட்டு அரங்கமாக மேம்பாடு செய்ய செயற்குறிப்பு ஏதும் இல்லை. இருப்பினும், தமிழக அரசின் கொள்கையின்படி, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், ஒரு உள் விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல் குளம் உருவாக்கப்பட வேண்டும். தற்போது நீச்சல் குளம் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. இதன் அடிப்படையில் இந்த விளையாட்டு அரங்கம் இந்த மூன்று வசதிகளையும் கொண்ட தமிழகத்தின் முதல் மாவட்ட விளையாட்டு அரங்கமாகத் திகழும்.

**175—**

**அரசு நூலகம்**

**வினா எண் 22549—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

*(அ)* குறிஞ்சிப்பாடி தொகுதி, தென்குத்து கிராமத்தில் அரசு நூலகம் ஒன்றை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* குறிஞ்சிப்பாடி தொகுதி, தென்குத்து கிராமத்தின் மக்கள் தொகை 1,500 ஆகும். மக்கள் தொகையின் அடிப்படையில் அவ்விடத்தில் ஒரு பகுதி நேர நூலகம் திறக்கலாம். குறிஞ்சிப்பாடி தொகுதி, தென்குத்து கிராமத்தை சேர்ந்த மக்கள் ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்ட கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் அவ்விடத்தில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்கப்படும்.

(1) நூலகம் தற்சமயம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்துத் தரப்பட வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) தலா ரூ. 1,000/- வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(5) ரூ. 2000/- மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

**176—**

**அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்குதல்**

**வினா எண் 22743—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தமிழ்நாட்டில் எந்த அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன?

(ஆ) இன்னும் எத்தனை அறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் அறிவிப்பின் அடிப்படையில் அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் இதுவரையில் 32 அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்க அறிவிப்பு செய்து அதன்படி ஆணையிடப்பட்டன. 2002-2003 ஆம் ஆண்டில் எழுத்தாளர்கள் திரு. புதுமைப்பித்தன், திருமதி கு.ப. சேது அம்மாள் ஆகியோரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. நாட்டுடைமையாக்க வேண்டிய நூல்கள் பற்றிய செயற்குறிப்பு தற்போது அரசிடம் ஏதும் இல்லை.

**177—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 23243—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, கீழப்பட்டு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம், கீழப்பட்டு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



2003 மே 10]

**178—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 23450—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் படுக்கைகள் வசதி மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட ஆறு படுக்கை வசதி, அங்கு சிகிச்சை பெறும் உள்நோயாளிகளுக்குப் போதுமானதாக உள்ளது. எனவே மேலும் கூடுதல் படுக்கை வசதி செய்ய தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் அமைக்கும் கருத்துரு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**179—**

**கூடுதல் படுக்கை வசதி**

**வினா எண் 23461—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் 135 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் சிகிச்சைப் பிரிவு உள்ளது. ஆனால், தற்போது இம்மருத்துவமனையில் தினசரி சராசரி 101

உள்நோயாளிகள் மட்டுமே சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே இம்மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்திட தற்சமயம் அவசியம் எழவில்லை.

**180—**

**மருத்துவ சிகிச்சைக் கட்டடம்**

**வினா எண் 23462—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி அரசுத் தலைமை மருத்துவமனையில் வெளிநோயாளிகள் மருத்துவ சிகிச்சைக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் வெளிநோயாளிப் பிரிவிற்கு கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**181—**

**கூடுதல் படுக்கை வசதி**

**வினா எண் 23468—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், சாத்தங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் படுக்கைகள் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றிய, சாத்தங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் படுக்கைகள் வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**182—**

**விளையாட்டு அரங்கம்**

**வினா எண் 23552—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் கூடைப்பந்து விளையாட்டு அரங்கம் (Indoor Basket Ball Stadium) கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் கூடைப்பந்து உள்ளரங்கம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**183—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 23868—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 32 படுக்கைகளை கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், மானூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 32 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**184—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 23869—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வி.கே. புதூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு 32 படுக்கை உள்ள மருத்துவமனையாக உயர்த்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

வி.கே. புதூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினை 32 படுக்கை உள்ள மருத்துவமனையாக தற்போது தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**185—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 23933—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், கடையநல்லூர் பகுதியில் வேதம்புதூரைத் தலைமையிடமாகக் கொண்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

நெல்லை மாவட்டம், கடையநல்லூர் பகுதியில் வேதம்புதூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் திட்டம் இல்லை.

**186—**

**மருத்துவக் கருவிகள் வழங்குதல்**

**வினா எண் 23964—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஈ.சி.ஜி. கருவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஈ.சி.ஜி. கருவிகள் வழங்க சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது இல்லை.

**187—**

**உதவித் தொகை**

**வினா எண் 24021—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள பயிற்சி மருத்துவர்களுக்கு (House Surgeons) உதவித் தொகையை (stipend) மாதம் ரூ. 5000/- என்று உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

பயிற்சி மருத்துவர்களுக்கு உதவித் தொகை ரூ. 5000/-க்கு உயர்த்தும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**188—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 24455—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், பாலமலைப் பஞ்சாயத்து, பாலமலையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாலமலை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**189—**

**துணை சுகாதார நிலையம்**

**வினா எண் 24498—திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், களக்காடு ஒன்றியம், சிதம்பரபுரம் ஊரில் துணை சுகாதார நிலையம் எப்போது செயல்படுத்தப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், களக்காடு ஒன்றியம், சிதம்பரபுரம் ஊரில் துணைச் சுகாதார நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. நபார்டு நிதி உதவியுடன் துணைக் சுகாதார நிலையக்கட்டடம் கட்ட அரசாணை எண் [illegible] சுகாதாரம், நாள் 23-7-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. விரைவில் கட்டடம் கட்டி முடிக்கப்படும்.

**190—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 24516—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கிருஷ்ணன்குப்பம் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணன்குப்பம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**191—**

**ஆரம்பச் சுகாதார நிலையம்**

**வினா எண் 24598—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) மதுரை ஆணையூர் ஜெ ஜெயலலிதா நகரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், ஆணையூர் ஜெ ஜெயலலிதா கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**192—**

**பெயர் சூட்டுதல்**

**வினா எண் 26723—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு தமிழ் தாத்தா மகாமகோபாத்யாயா டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் பெயரைச் சூட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**193—**

**இரவு நேரக் கல்விச்சாலை**

**வினா எண் 26804—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) தமிழகத்திலுள்ள படிக்காத கிராமப்புற இளைஞர்களுக்கு கல்வியறிவு ஏற்படுத்த இரவு நேர கல்விச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் அறிவொளி இயக்கத்தின் மூலம் முழு எழுத்தறிவுத் திட்டம் மற்றும் தொடர் கல்வித் திட்டத்தின் மூலம் பள்ளி செல்லாதோருக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டும், தற்போது வளர்கல்வித் திட்டம் மூலம் மைய அரசின் நிதியுதவியுடன் மாவட்ட மையங்களில், உதவி மையப் பொறுப்பாளர், எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு, அவர்களுக்கு உகந்த நேரத்தில், எழுதப் படிக்க கற்றுக் கொடுப்பார்கள். வளர்கல்வித் திட்ட கருத்துருக்கள் மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்டு மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டவுடன் மையங்கள் தொடங்கப்பட்டு எழுத்தறிவு அற்றவர்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுத் தரப்படும்.

**194—**

**கலை நிகழ்ச்சிகள்**

**வினா எண் 27139—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் வளர்ச்சி, பண்பாடு சார்பில் தமிழ்ப் பண்பாட்டினை வளர்க்க மாவட்டந்தோறும் கலை நிகழ்ச்சிகள் நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ் வளர்ச்சி-பண்பாடு சார்பில் தமிழ்ப் பண்பாட்டினை வளர்க்க மாவட்டந்தோறும் கலை நிகழ்ச்சிகள் நடத்த

நடப்பாண்டில், ரூ.66.00 இலட்சத்திற்கு அரசு ஒப்பளிப்பு ஆணை வழங்கியுள்ளது. இதில் முதல் தவணையாக ரூ.30.00 இலட்சம் முன்பணம் அரசு நிதி (பட்ஜெட்) துறையினால் விடுவிக்கப்பட்டது. இத்தொகை அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் இயங்கும் மாவட்டக் கலை மன்றங்களின் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டு, தமிழ் பண்பாட்டினை வளர்க்கும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒப்பளிக்கப்பட்ட ரூ.30.00 இலட்சத்தில் சென்னை மாவட்டம் நீங்கலாக மற்ற 28 மாவட்டங்களுக்கு தலா ரூ.75,000/- வீதமும், சென்னை மாவட்ட மற்றும் கலை பண்பாட்டுத் துறைக்கு ரூ.9,00,000/-மும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**195—**

**விளையாட்டுப் போட்டிகள்**

**வினா எண் 27145—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற இளைஞர்களுக்கு கபடி, கைப் பந்து, சிலம்பாட்டம் போன்ற விளையாட்டுப் பயிற்சிகளை அளித்து சுதந்திர தினம் மற்றும் குடியரசு தின விழாக்களில் மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) கிராமப்புற இளைஞர்களுக்கு கபடி, கைப் பந்து, சிலம்பாட்டம் போன்ற விளையாட்டுப் பயிற்சிகளை அளித்து சுதந்திர தினம் மற்றும் குடியரசு தின விழாக்களில் மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



**196—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 27447—திரு பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலச்செவல் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி ஊராட்சி ஒன்றியம், மேலச்செவல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**197—**

**தனியார் மருத்துவக் கல்லூரி**

**வினா எண் 27463—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்க வேண்டி எத்தனை பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு அரசு அனுமதி வழங்க உத்தேசித்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் தனியார் மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டி 17 பேர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர்.

[2003 மே 10

(ஆ) உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற ஆணைப்படி, மீனாட்சி அம்மாள் அறக்கட்டளைக்கு காஞ்சிபுரம் மாவட்டம், ஏனாத்தூரில் மருத்துவக் கல்லூரி தொடங்க அவசியச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மற்ற விண்ணப்பங்களில், 12 விண்ணப்பங்கள், இந்திய மருத்துவக் குழு மற்றும் மாநில அரசின் நெறிமுறைகளை நிறைவு செய்யாததால் நிராகரிக்கப்பட்டுள்ளன. மீதி உள்ள நான்கு விண்ணப்பங்கள் ஆய்வுக் குழுவின் ஆய்வறிக்கை ஆய்வில் உள்ளது.

**198—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 27933—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருநகர் ஊராட்சியில் ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், திருநகர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**199—**

**ஆரம்ப துணை சுகாதார நிலையம்**

**வினா எண் 28222—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சியில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?



2003 மே 10]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், திருநகரி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை. இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

**200—**

**ஆரம்பச் சுகாதார நிலையம்**

**வினா எண் 29090—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சி சோமநாதபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், சோமநாதபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

[2003 மே 10

**பட்டியல் 29**

1—

**மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா எண் 17182—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கல்லூரணிக்காடு, நடுவிக்குறிச்சி ஆகிய ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2—

**மாணவர் விடுதி**

**வினா எண் 17190—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கல்லூரணிக்காடு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதியதாக மாணவ/மாணவியர் விடுதிகள் திறக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

**மாணவியர் விடுதி**

**வினா எண் 19038—திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் ஆதிதிராவிடர் கல்லூரி மாணவிகளுக்கு தங்கும் விடுதி கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூரில் கல்லூரி மாணவியருக்கு என இத்துறை மூலம் விடுதி எதுவும் செயல்படவில்லை. எனவே விடுதி கட்டப்படும் நிலை ஏற்படவில்லை.

4—

**மயான வசதி**

**வினா எண் 19369—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி ஜமீன் எளம்பள்ளி அருந்ததியர் காலனி மக்கள் மயான வசதி இன்றி சிரமப்படுவது அரசுக்குத் தெரியுமா?

[2003 மே 10

(ஆ) ஆம் எனில் மயான வசதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம் ஜமீன் எளம்பள்ளி கிராமத்தில் வசிக்கும் சுமார் 50 குடும்பங்களைச் சேர்ந்த 250 அருந்ததிய மக்கள் தங்கள் குடியிருப்பிலிருந்து சற்று தொலைவில் உள்ள குன்று புறம்போக்கு நிலம் சர்வே எண் 249-ல் சுமார் 2 ஏக்கர் நிலத்தை தற்போது மயானமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

**5—**

**ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி நிலையம்**

**வினா எண் 20298—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பயிற்சி நிலையம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இப்பயிற்சி நிலையம் எப்போது தொடங்கப்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



2003 மே 10]

**6—**

**இறால் வளர்ப்புத் திட்டம்**

**வினா எண் 22275—திரு. ஐ.கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மூலம் சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இறால் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது இலாபகரமாக இயங்குகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மூலம் ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் இறால் வளர்ப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**7—**

**உதவித் தொகை**

**வினா எண் 22814—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மாணவர், மாணவியருக்கு வழங்கி வரும் உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

8—

## மாணவர் விடுதி

**வினா எண் 23539—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி ஒன்றியம், நல்லான்பிள்ளைபெற்றாள் உயர்நிலைப் பள்ளிக்கு ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் மாணவர் விடுதி இக்கல்வியாண்டில் துவக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

புதியதாக மாணவ, மாணவியர் விடுதிகள் திறக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

9—

## மாணவர் விடுதி

**வினா எண் 23542—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி வட்டம், மழவந்தாங்கல் கிராமத்தில் இயங்கும் உயர்நிலைப் பள்ளிக்கு ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் மாணவர் விடுதி இக்கல்வியாண்டில் துவக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

புதியதாக மாணவ-மாணவியர் விடுதிகள் திறக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



10—

## சாதிச் சான்றிதழ்

**வினா எண் 23889—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் பரவலாக வசித்துவரும் பண்டி மற்றும் கொண்டா சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க மறுக்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தில் பண்டி மற்றும் கொண்டா சாதிச் சான்று கோரி கடந்த மூன்று ஆண்டுகளில் எவரும் விண்ணப்பிக்கவில்லை.

11—

## இலவச வீட்டுமனைப்பட்டா

**வினா எண் 24271—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராமம், தீத்தாம்பாளையத்தில் ஆதிதிராவிட மக்களின் பெயரில் எழுதப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டா அவர்களுக்கு வழங்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பட்டா வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், தித்தாம்பாளையத்தில் வசிக்கும் 38 ஆதிதிராவிடர்களுக்கு 1993-ல் நத்தம் புறம்போக்கில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுவிட்டன. இதனால் வெள்ளக்கோவில் கிராமத்தில் புல எண் 1577/1—ல் நில எடுப்பில் தித்தாம்பாளைய ஆதிதிராவிடர்களுக்கு பட்டா வழங்க வேண்டிய நிலை எழவில்லை.*

**12—**

**மனைப் பட்டா**

**வினா எண் 30006—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கற்பட்டு தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் வட்டம் சூராடிமங்கலம் கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் வசித்து வரும் ஆதிதிராவிட மக்களுக்கு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு தொகுதிக்குட்பட்ட திருக்குழுக்குன்றம் வட்டம், சூராடிமங்கலம் கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் வசித்து வரும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக ஏற்கெனவே புல எண் 129/1ஏ, 2 மற்றும் பிறவற்றில் மொத்தம் 1.90 ஏக்கர் விஸ்தீரணத்திற்கு நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நில உரிமையாளர்கள் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு எண் 1024/96 தாக்கல் செய்து தடையாணை பெற்றுள்ளனர். வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.*



**13—**

**அனல் மின் நிலைய சுடுநீர்**

**வினா எண் 18988—திரு. த. ஆறுமுகம்:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வடசென்னை அனல் மின் நிலையத்திலிருந்து வெளிவரும் சுடுநீர் (சாம்பல் சார்ந்தது) பக்கிங்காம் கால்வாயில் வீழ்வதால் அங்குள்ள கிராம மீனவ சமுதாய மக்கள் தொழில் ரீதியாக பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) வடசென்னை அனல் மின் நிலையத்திலிருந்து பக்கிங்காம் கால்வாய் மூலம் வெளியேற்றப்படுவது வெதுவெதுப்பான நீரே தவிர, சாம்பல் கலந்த சுடுநீரல்ல. இதனால் எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**14—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 19173—திருமதி ஆர். சசிகலா:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பஞ்சப்பட்டி ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணி தடைபட்டுள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், பணிகள் எப்பொழுது துவக்கப்படும்?*

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) வாரிய நிதிநிலையைப் பொறுத்து 2003-2007-ல் பத்தாவது பெருந்திட்டத்தின்கீழ் பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.*

**15—**

### கனிமத் துறை அனுமதி

**வினா எண் 30402—திரு. வெ. ஏழுமலை:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசு ஒப்பந்தப் பணிகளுக்கு மணல், ஜல்லி, கிராவல் எடுக்க, ஒப்பந்த நமூனாவில் குறிப்பிட்டுள்ள இடங்களில் எடுக்க கனிமத் துறை அனுமதி வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*அரசு ஒப்பந்தப் பணிகளுக்குத் தேவைப்படும் மணல், ஜல்லி, கிராவல் ஆகிய கனிமங்கள் எடுக்க, ஒதுக்கப்படாத கழிவு நிலம், அரசு புறம்போக்கு நிலம், குடிநீர் உபயோகத்திற்குப் பயன்படும் குளம், ஏரி, இவற்றின் கரைகள் நீங்கலாக, குவாரி பணி செய்து பொது உபயோகத்திற்கு பயன்படுத்தும்பொருட்டு மத்திய அரசு, மாநில அரசு, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிகள் மற்றும் நகராட்சி துறைகள் அல்லது அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு உரிய அனுமதி வழங்குவதற்கு தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதி 1959-ல் விதி எண் 7-ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகிய துறைகளின் வேண்டுகோளுக்கிணங்கி சில கற்குவாரிகள் அந்தந்தத் துறைகளுக்காகவே சில மாவட்டங்களில் ஒதுக்கப்பட்டும் உள்ளது.*



2003 மே 10]

**16—**

### சிறப்புத் திட்டம்

**வினா எண் 8246—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்திலிருந்து வரி வருவாய் பிற மாநிலங்களுக்குச் செல்வதை தடுக்கவும், சமச்சீர் வரி விகிதத்தை நடைமுறைப்ப ந்தவும் அரசிடம் சிறப்புத் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலிருந்து வரி வருவாய் பிற மாநிலங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கும் நோக்கில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டவாறு பல்வேறு பொருட்கள் மீதும் சமச்சீர் தளவரி இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு பல்வேறு பொருட்கள் மீது நுழைவு வரியும் விதிக்கப்பட்டுள்ளது.*

**17—**

### விற்பனை வரி விலக்கு

**வினா எண் 19723—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959, பிரிவு 2(n)-கீழ் உள்ள விளக்கம் 1-ன்படி, கூட்டுறவுச் சங்கமும் ஒரு வணிகராகக் கருதப்படும். கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைகளுக்கு பொதுவான*

[2003 மே 10

வரி விலக்கு அளிக்க இயலாது. தனிப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் வரி விலக்கிற்கு விண்ணப்பிக்கும்போது, அக்கோரிக்கையின் தன்மை மற்றும் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

18—

**நிதியுதவி மற்றும் பிற உதவிகள்**

**வினா எண் 23789—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வறுமையில் வாழும் வணிகர்களுக்கு நிதியுதவி மற்றும் ஏனைய உதவிகள் வழங்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

வறுமையில் வாழும் வணிகர்களுக்கென தனியே நிதி உதவி அல்லது பிற உதவிகள் வழங்கிட நடவடிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

19—

**வணிக வரி அலுவலகம்**

**வினா எண் 25052—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் ஒரு வணிக வரி அலுவலகம் துவக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் வணிக வரி அலுவலகம் துவக்குதல் குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.



2003 மே 10]

20—

**விற்பனை வரி வசூலித்தல்**

**வினா எண் 28560—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தங்க நகைக் கடைகளில் விற்பனை வரியை வசூலிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

தங்க நகைக் கடைகளில் விற்பனை வரியை வசூலிக்க 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் அனைத்து ஆபரண வணிகர்களும் பதிவு செய்து விற்பனை வரி செலுத்த வேண்டும் என்ற சட்டத்திருத்தம் 19-8-2002 முதல் அமலுக்கு வந்துள்ளது. எனவே, இவ்வணிகர்கள் அனைவரும் பதிவு செய்து கொள்ளவும் விற்பனை வரி செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

21—

**வரியைப் பாதியாகக் குறைத்தல்**

**வினா எண் 29881—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொலைக்காட்சி பெட்டிக்கான வரியைப் பாதியாகக் குறைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

சமச்சீர் வரி விகிதப்படி தொலைக்காட்சிப் பெட்டிக்கான வரி 12 சதவிகிதமாகும். அதனைப் பாதியாகக் குறைத்தால் சமச்சீர் வரி விகிதத்திலிருந்து இம்மாநிலம் மாறுபடும் சூழ்நிலை வரும். எனவே தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான வரியினைக் குறைக்க இயலாது.

22—

### சிறு தொழில் துவங்கக் கடன்

**வினா எண் 124—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதியில் உள்ள கூட்டுறவு அமைப்புகளின் மூலம் தகுதியானவர்களுக்கு, சிறுதொழில் துவங்க கடன் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சிறுதொழில் துவங்கவும், ஏற்கெனவே நடத்தப்படும் சிறு தொழிலை மேம்படுத்தவும் கூட்டுறவு வங்கிகள் தகுதியானவர்களுக்கு சிறு தொழில் கடன்கள் வழங்கி வருகின்றன. உடுமலைப்பேட்டை தொகுதியில் 2000-2001 ஆம் ஆண்டில் 322 நபர்களுக்கு ரூ.159.08 இலட்சம் மற்றும் 2001-2002 ஆம் ஆண்டில் 64 நபர்களுக்கு ரூ.21.75 இலட்சம் அளவிற்கு சிறு தொழில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

23—

### வட்டி ஊக்குவிப்புத் தொகை

**வினா எண் 7699—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக விவசாயிகளுக்கு கடந்த ஆண்டு 7 சதவீதம் வட்டி ஊக்குவிப்புத் தொகை வழங்கியதைப்போன்று வரும் ஆண்டிலும் 1-7-2001 முதல், வாய்தாவிற்கு முன்பே கடனைத் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டி ஊக்குவிப்புத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) 1-7-2001 முதல் தவணைத் தேதிக்கு முன்பாக கடனைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு 7 சதவீதம் வட்டி ஊக்குவிப்புத் தொகை வழங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

24—

### கூட்டுறவு தேர்வாணையம்

**வினா எண் 8832—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளில் பணி நியமனம் செய்வதற்கு கூட்டுறவு தேர்வாணையம் ஒன்றை ஏற்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

25—

### கடன் வசதி

**வினா எண் 13714—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் கூட்டுறவு வங்கியின் மூலம் இப்பகுதி விவசாயிகள் விவசாயத்திற்காக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க கடன் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**26—**

**கூட்டுறவுப் பயிற்சி நிலையம் அமைத்தல்**

**வினா என் 13838—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



**27—**

**வேலைவாய்ப்பு**

**வினா என் 14345—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு முறையில் வேலைவாய்ப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

கூட்டுறவு நிறுவனங்களில் இனவாரி சுழற்சி முறை (rotation) கடைப்பிடிக்கப்பட்டு அதன் அடிப்படையில்தான் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.

**28—**

**கூடுதல் அரிசி, சர்க்கரை இதர உணவு தானியங்கள் கிடைக்க முயற்சி**

**வினா என் 14872—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நியாய விலைக் கடைகளில் வருடந்தோறும் விநியோகம் செய்யப்படும் அரிசி, சர்க்கரை, இதர உணவு தானியங்களின் அளவு என்ன?

(ஆ) மத்திய அரசிடமிருந்து கூடுதலாகப் பெற்றிட மாநில அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் நியாய விலைக் கடைகள் மூலம் 2001 ஆம் ஆண்டு விநியோகம் செய்யப்பட்ட அரிசி, சர்க்கரை மற்றும் இதர பொது விநியோகத் திட்டப் பொருட்களின் அளவு பின்வருமாறு:

| | |
|---|---|
| அரிசி | 21,53,428 டன்கள் |
| சர்க்கரை | 2,81,017 டன்கள் |
| கோதுமை | 16,725 டன்கள் |
| மண்ணெண்ணெய் | 8,46,605 கிலோ லிட்டர்கள் |
| தேயிலைத்தூள் | கடந்த ஆகஸ்ட் 2001 முதல் மாதந்தோறும் 300 டன் தேயிலைத்தூள் விற்பனை செய்யப்படுகிறது. |
| அயோடின் கலந்த உப்பு | 2000-2001 ஆம் ஆண்டு 6501 மெட்ரிக் டன்கள் அயோடின் கலந்த உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது. |

(ஆ) கோதுமை, மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்களை கூடுதலாக வழங்கும்படி மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

**29—**

### மண்ணெண்ணெய் வழங்கு நிலையம்

**வினா எண் 15292—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி, ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் தற்சார்புடன் இயங்க, அது மாதம் ஒன்றுக்கு 50,000 லிட்டர் வரை மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட வாய்ப்புள்ளதாக இருக்க வேண்டும். அதேபோல், அந்நிலையத்துடன், 2 கிலோ மீட்டர் தூரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட வேண்டும்.

பாப்பாக்குடி தலைமையிடத்தில் 2 கிலோ மீட்டர் தூரத்திற்குள் 4 நியாய விலைக் கடைகள் உள்ளன. அக்கடைகளுடன் 2680 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கான மாதாந்திர மண்ணெண்ணெய் தேவை 7,582 லிட்டர் மட்டுமே ஆகும். அதேபோல் முக்கூடல் தலைமையிடத்தில் 2 கிலோ மீட்டர் தூரத்திற்குள் 5 நியாய விலைக் கடைகள் உள்ளன. அக்கடைகளுடன் 4,664 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு முறையாக வழங்கப்படும் மண்ணெண்ணெய் மற்றும் விருப்ப மண்ணெண்ணெயும் சேர்த்து மொத்தம் மண்ணெண்ணெய் தேவை 23,007 லிட்டர் மட்டுமே ஆகும்.

எனவே, பாப்பாக்குடி மற்றும் முக்கூடல் தலைமையிடங்களில் போதுமான அளவு மண்ணெண்ணெய் தேவை இல்லையாதலால் இங்கு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க வாய்ப்பில்லை. பாப்பாக்குடி ஒன்றியத்தில் உள்ள ஏனைய நியாய விலைக் கடைகள் தனித்தனியாக சுமார் 5 முதல் 20 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ளது. மேலும், இவை அமைந்துள்ள இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்கும் அளவிற்கு போதுமான அளவு மண்ணெண்ணெய் தேவை இல்லை. எனவே, பாப்பாக்குடி ஒன்றியத்தில் எந்தவொரு பகுதியிலும் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்கும் அளவுக்கு வாய்ப்புகள் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

30—

### நவீன அரிசி ஆலை கட்டும் திட்டம்

**வினா எண் 16734—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் நவீன அரிசி ஆலை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் நவீன அரிசி ஆலை கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

31—

### நுழைவுப் பதிவேட்டில் பதிவு செய்தல்

**வினா எண் 16738—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிறுவனங்கள் சேர்க்கைப் பதிவேட்டில் ஒவ்வொரு உறுப்பினருடைய கையொப்பத்தையும் பெறுவதோடு, ஒவ்வொரு ஆண்டும் உறுப்பினருடைய சரியான முகவரியையும் வயதையும் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று அலுவலர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்படுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

கூட்டுறவு நிறுவனங்கள் சேர்க்கைப் பதிவேட்டில் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகளின் விதி 27(i)-ன்படி விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள படிவம் எண் 16-ல் உறுப்பினராய் சேர விரும்புபவரின் பெயர், தந்தை/கணவர் பெயர், சரியான வயது, முகவரி ஆகிய அனைத்து விவரங்களும் நுழைவுப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு அப்பதிவேடு புத்தகம் நிரந்தரமாகப் பேணப்பட்டு வருகிறது.

32—

### குடும்ப அட்டை

**வினா எண் 16912—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, திருப்பத்தூர் தாலுகாவில் (வட்டாட்சியர்) குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு, உடனடியாக குடும்ப அட்டை கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, திருப்பத்தூர் தாலுகாவில் 1997-98-லிருந்து 31-3-2002 வரை புதிய குடும்ப அட்டை கேட்டு 92,693 விண்ணப்பங்கள் வந்தன. இதில், தகுதியுள்ள 70,081 மனுதாரர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. தகுதியற்ற

22,165 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 447 விண்ணப்பங்கள் மட்டுமே விசாரணையில் உள்ளன.

33—

**கூட்டுறவு அங்காடி**

**வினா எண் 17078—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்டிகை சிறப்புக் காலத் திட்டத்தின்கீழ் கூட்டுறவு அங்காடிகள் மூலம் சன்ன ரக அரிசியை குறைவான விலைக்கு விற்பனை செய்வதால் பொதுமக்கள் அதிகமாக வாங்கிப் பயன்பெற்று வருகிறார்களா?

(ஆ) ஆம் எனில், மேலும் சிறப்பாக இத்திட்டம் செயல்பட அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்டிகை சிறப்புக் காலத் திட்டத்தின்கீழ் கூட்டுறவு அங்காடிகள் மூலம் சன்ன ரக அரிசி குறைவான விலைக்கு விற்பனை செய்யப்படவில்லை.

34—

**வளர்ச்சிப் பணிகள்**

**வினா எண் 17294—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் நபார்டு வங்கியின்மூலம் / தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம்மூலம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள அரசிடம் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

35—

**கூட்டுறவு நாணய சங்கம்**

**வினா எண் 17591—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடகால் ஊராட்சியில் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ள நிலத்தில் கூட்டுறவு நாணய சங்கம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

36—

**நியாய விலைக் கடை கட்டடம்**

**வினா எண் 17644—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) பண்ருட்டி, நகரம்-சிரங்குப்பம் நியாய விலைக் கடைக்கு அரசு சொந்தமாகக் கட்டடம் அமைத்துத்தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டத்தில் உள்ள பண்ருட்டி, வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் திருவதிகை கடை எண் 4 செயல்பட்டு வருகின்றது. இந்த நியாய விலைக் கடையை தாய்க் கடையாகக் கொண்டு சிரங்குப்பம் பகுதியில் ஒரு பகுதிநேரக் கடை தனியார் கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடைக்கு அரசு திட்டங்கள் மூலம் கட்டடம் கட்டுவது இல்லை. அரசு வரைமுறைகளின்படி ஊர் மக்கள் வாடகையின்றிக் கட்டடம் அளித்தால் மட்டுமே பகுதிநேரக் கடை அமைக்க அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

**37—**

## முழுநேர அங்காடி

**வினா எண் 18031—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கெங்காதரபுரம் ஊராட்சி, பாலச்சேரிக்காடு கிராம பகுதிநேர அங்காடியை முழுநேர அங்காடியாகத் தரம் உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கெங்காதரபுரம் ஊராட்சி, பாலச் சேரிக்காடு கிராம பகுதிநேர



2003 மே 10]

அங்காடியில் 497 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், முழுநேர அங்காடிக்குக் கூடுதல் பணியாளர் நியமனம் செய்ய வேண்டியுள்ளதாலும், அதனால் அரசு மானியம் வழங்க நேரிடும் என்பதாலும் அதனை முழுநேர அங்காடியாகத் தரம் உயர்த்த இயலாது.

**38—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 19627—திரு. ஊ. சந்தானம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், போத்தம்பட்டி பஞ்சாயத்து, சிரங்கம்பட்டி பகுதிக்குத் தனியாக பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், போத்தம்பட்டி பஞ்சாயத்து சிரங்கம்பட்டியில் 80 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், குருவிளாம்பட்டியில் செயல்பட்டு வருகிற தாய் நியாய விலைக் கடைக்கும் சிரங்கம்பட்டிக்கும் ½ கிலோமீட்டர் தூரமே உள்ளதாலும், சிரங்கம்பட்டியில் தனியாக பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**39—**

## மண்ணெண்ணெய் பங்க்

**வினா எண் 20165—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 13வது வட்டத்தில் உள்ள உணவு வழங்கல் கடைகளில் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய்யை ஒரே

இடத்தில் விநியோகிக்க மண்ணெண்ணெய் பங்க் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆணையின்படி, ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் இலாபகரமாக தன்னாற்றல் பெற்று செயல்பட மாதம் ஒன்றுக்கு 50,000 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட வேண்டும். ஆனால், சென்னை இராயபுரம் மண்டலப் பகுதியில் உள்ள ஆர்.கே. நகர் தொகுதி 13வது கோட்டத்தில் உள்ள 4 பொது விநியோக அங்காடிகளில் இணைக்கப்பட்டுள்ள சுமார் 4,991 குடும்ப அட்டைகளுக்கான மாதாந்திர மண்ணெண்ணெய் தேவை 39,000 லிட்டராகும். எனவே, குறைவான அளவு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும்பட்சத்தில், மேற்படி மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் இலாபகரமாக செயல்பட வாய்ப்பில்லாமல் போகும் நிலை உள்ளது. மேற்கூறியுள்ள காரணத்தால் சென்னை, ஆர்.கே. நகர் தொகுதியில் 13-வது கோட்டத்தில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**40—**

### ரேஷன் கடை அமைத்தல்

**வினா எண் 20166—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 12—வது வட்டத்திற்குள்ளேயே புதியதாக ரேஷன் கடை அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆர்.கே. நகர் தொகுதி, 12—வது கோட்டத்தில் மொத்தம் 4286 குடும்ப அட்டைகளே உள்ளதாலும் 4 நியாயவிலைக் கடைகள் இயங்கி வருவதாலும், மேலும் புதியதாக நியாயவிலைக் கடை திறப்பதற்கான அவசியம் எழவில்லை.

**41—**

### உணவுப் பங்கீட்டு அட்டை

**வினா எண் 21412—திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடியில் உணவுப் பங்கீட்டு அட்டை மூலமாக விநியோகம் செய்யப்படும் அரிசி மற்றும் மண்ணெண்ணெய் சரியான முறையில் விநியோகம் செய்யப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தூத்துக்குடியில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி மற்றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டு வருகிறது.

**42—**

### கூட்டுறவு வங்கி அமைத்தல்

**வினா எண் 22629—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) அவினாசி டவுன் பகுதியில் அவினாசி நகரக் கூட்டுறவு வங்கி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**43—**

**மண்ணெண்ணெய் விநியோகம்**

**வினா எண் 22745—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள நியாய விலைக் கடைகளில் ஒரே நேரத்தில் குறிப்பிட்ட நாட்களில் மட்டும் மண்ணெண்ணெய் வழங்குவதற்குப் பதிலாக எல்லா நாட்களிலும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் இதர அத்தியாவசியப் பொருட்கள் அனைத்து வேலை நாட்களிலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படுவது போன்றே, மண்ணெண்ணெயும் அனைத்து வேலை நாட்களிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.



2003 மே 10]

**44—**

**சம்பளத் தொகை**

**வினா எண் 23126—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் தனி அலுவலர்களின் சம்பளத் தொகையை அவர்கள் பணியாற்றும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தே அரசு பெற்று வழங்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

ஆம்.

**45—**

**கூட்டுறவுச் சங்கத் தேர்தல்**

**வினா எண் 23142—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை அரசு நடத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விரைவில் நடத்தப்படும்.

[2003 மே 10

46—

## பாமாயில்

**வினா எண் 23167—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சங்கராபுரம் தொகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளில் நிறுத்தப்பட்ட பாமாயில் மீண்டும் வழங்க கருத்துரு அரசுக்கு இருக்கிறதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போதிலிருந்து, எத்தனை கிலோ வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* நியாய விலைக் கடைகள் மூலமாக பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பாமோலின் எண்ணெய் வழங்குவதற்கு கருத்துரு ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

*(ஆ)* கேள்விக்கு இடமில்லை.

47—

## ஆலோசனைக் குழுக்கள்

**வினா எண் 23628—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காக ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்படுமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் பிரிவு 88(2)இன்படி தனி அலுவலர்கள் நியமிக்கப்படும்பொழுது அச்சங்கங்களில் தேர்தலுக்கு நிற்கத் தகுதியுள்ள உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவினை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அமைக்கலாம் என அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எனவே தேவைப்படின் இத்தகைய ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும்.

48—

## கமிட்டி

**வினா எண் 26463—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பல்வகை கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களது பணியைப் பாதுகாக்கவும், அவர்களது கோரிக்கைகளை பரிசீலனை செய்யவும் கமிட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* கேள்வி எழவில்லை.

49—

## பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 26476—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கொம்பாடியூர் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து சாமத்தாளுக்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கொம்பாடியூர் நியாய விலைக் கடை சாமத்தாள் கிராமத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளதாலும், சாமத்தாள் கிராமத்தில் 150 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கான நிபந்தனைகளின்படி சாமத்தாளுக்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**50—**

**கூடுதல் சர்க்கரை**

**வினா எண் 26479—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது விநியோகத் திட்டத்தின்மூலம் மக்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சர்க்கரையின் அளவை உயர்த்தி வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



**51—**

**பகுதிநேர நியாய விலைக் கடை**

**வினா எண் 26483—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஆலமரத்தூர் நியாய விலைக் கடையை பிரித்து பெத்தானூருக்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை ஒன்றை அமைக்க அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஆலமரத்தூர் கிராமத்தில் நியாய விலைக் கடை ஏதுமில்லை. எனவே, ஆலமரத்தூர் நியாய விலைக் கடையைப் பிரித்து பெத்தானூருக்கு புதிய பகுதிநேரக் கடை திறக்க சாத்தியமில்லை.

**52—**

**மண்ணெண்ணெய் பங்க் அமைத்தல்**

**வினா எண் 26486—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அதிகமான குடும்ப அட்டைகள் உள்ள நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் பங்குகள் அமைக்க நடப்பாண்டில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

இல்லை.

53—

### நியாய விலைக் கடை

**வினா எண் 27771—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், பெரிய சோழாண்டி கிராமத்திற்கு நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம் கள்ளக்காரி நியாய விலைக் கடை 528 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வந்தது. இதிலிருந்து 283 குடும்ப அட்டைகளைக் கொண்ட வாகைக்குளம் பகுதிக்கும் 15 குடும்ப அட்டைகளைக் கொண்ட பாசிக்குளம் பகுதிக்கும், 70 குடும்ப அட்டைகளைக் கொண்ட பெரிய சோழாண்டி பகுதிக்கும், கே. யாகைக்குளம் பகுதியில் 368 குடும்ப அட்டைகளுக்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது தாய்க் கடை 160 குடும்ப அட்டைகளுடன் மட்டுமே செயல்பட்டு வருகிறது. தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இல்லாததாலும், பெரிய சோழாண்டி பகுதியில் 200 குடும்ப அட்டைகள் இல்லாததாலும் பெரிய சோழாண்டி பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

54—

### குடிநீர் கிடைத்தல்

**வினா எண் 2895—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட, அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம்.

55—

### சம்பள உயர்வு

**வினா எண் 3231—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் பணிபுரியும் 21 ஊராட்சிகளில் 62 நீர்த்தேக்கத் தொட்டிகளை இயக்குகின்றவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ.65/- முதல் ரூ.85/- வரை மட்டும் வழங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சம்பள உயர்வு எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட ஊராட்சிகளில் பணிபுரியும் 62 டேங்க் ஆப்பரேட்டர்களின் தொகுப்பூதியத்தை உயர்த்தக் கோரும் செயற்குறிப்பு அரசினால் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளது.

56—

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 5519—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை அருகே அமராவதி நகர், பெரும்பள்ளம், இந்திரா நகர், சாயப் பட்டறை, காண்ட்ராக்ட் காலனி ஆகிய பகுதிகளில் குடிநீர்த் தடுப்பாட்டைப் போக்க அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆண்டியகவுண்டனூர் ஊராட்சியில் உள்ள அமராவதி நகர் மற்றும் இந்திராபுரம் ஆகிய 2 குடியிருப்புகளுக்கும் முறையே மானுப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் மின்னிறைப்பான் திட்டம் மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்கான குடிநீர் போதுமான அளவு வழங்கப்படுகிறது. சாயப் பட்டறை, காண்ட்ராக்டர் காலனி, பெரும்பள்ளம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். பெரும்பள்ளம் குடியிருப்புக்கு குடிநீர்த் திட்டம் இராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்கீழ் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை பொதுமக்கள் பங்களிப்புத் தொகை செலுத்தப்படவில்லை. பங்களிப்புத் தொகை பெறப்பட்டவுடன் பணிகள் துவங்கப்படும்.

**57—**

### ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 5543—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, தென் கல்பாக்கம் மதுரா, பின்வத்தூர் கிராமத்திற்கு ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பின்வத்தூர் கிராமத்தில் தற்போது செயல்பாட்டில் உள்ள குடிநீர்த் திட்டங்களே போதுமானதாக உள்ளதால் புதிய ஆழ்துளைக் கிணறு





மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**58—**

### கழிவு நீர் இணைப்பு

**வினா எண் 6870—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 3, 8, 10, 11 ஆகிய வட்டங்களில் உள்ள வீடுகளுக்காக அமைக்கப்பட்டுள்ள பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் வீடுகளுக்கு இலவச இணைப்பு தர அரசு முன்வருமா?

(ஆ) இல்லையெனில், குறைந்த அளவில் மாதத் தவணையில் கட்டணம் செலுத்த ஏற்பாடு செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இலவசமாக வீடுகளுக்குக் கழிவுநீர் இணைப்பு வழங்க இயலாது.

(ஆ) தவணை முறையில் பணம் செலுத்தி கழிவுநீர் இணைப்புப் பெற வாரிய விதிகளில் வகை செய்யப்படவில்லை. இருந்தபோதிலும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் இரண்டு அல்லது மூன்று தவணைகளில் இணைப்புக் கட்டணம் செலுத்துவதற்குப் பரிசீலிக்கப்படும்.

**59—**

### நிதி ஒதுக்கீடு

**வினா எண் 6938—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிதி ஒதுக்கீடு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னையில் ஏற்பட்ட குடிநீர்ப் பிரச்சினை காரணமாக முதல் கட்டமாக ரூபாய் 2.6 கோடி மதிப்பீட்டில் 796 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து இந்தியா மார்க்–2 பம்புகள் பொருத்தப்பட்டும், மற்றும் ரூபாய் 76 லட்சம் செலவில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் 100 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து HDPE தொட்டிகள் நிறுவி, மின் இயங்கி பம்புகள் பொருத்தப்பட்டு குடிநீர் அல்லாத இதர உபயோகத்திற்காக வழங்கப்படுகிறது.

**60—**

**கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம்**

**வினா எண் 7613—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் அரசிடம் தற்போது ஏதும் இல்லை.

**61—**

**கழிவுநீர்க் கால்வாய்கள் அமைத்தல்**

**வினா எண் 7658—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டம், டாக்டர் அம்பேத்கர் நகர் 2, 3, 4, 6 ஆகிய தெருக்களில் கழிவுநீர்க் கால்வாய்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

டாக்டர் அம்பேத்கர் நகரிலுள்ள 6 தெருக்களில் கழிவுநீர்க் குழாய்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. 2, 3, 4 ஆகிய தெருக்களின் கடைசிப் பகுதிகளில் மட்டும் புதியதாகக் குடியிருப்புகள் உருவாக்கப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. அப்பகுதிகள் தாழ்வான பகுதிகளாதலால் அங்கு கழிவுநீர்க் குழாய்கள் அமைப்பது சாத்தியமில்லை.

**62—**

**நியாய விலைக் கட்டடம்**

**வினா எண் 7751—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி பேரூராட்சி, 15-வது வார்டு, கோவிந்தராஜா பட்டணத்தில் நியாய விலைக் கடை அமைக்க கூட்டுறவுத் துறை அனுமதி வழங்கி உள்ளதால் கட்டடம் ஒன்று அரசு கட்டித் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மண்டலம், கன்னங்குறிச்சி பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் நியாய விலைக் கடை கட்டப்படவில்லை.

**63—**

**பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்**

**வினா எண் 7968—திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு நகருக்கு பாதாளச் சாக்கடை அமைத்துத் தரும் திட்டம், அரசு பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**64—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 7983—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட மேலபுரம் தெரு மற்றும் திருவள்ளுவர் தெரு, ரத்தினா திரையரங்கு தென்புறம் ஆகிய இடங்களில் தார்ச் சாலை போடுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட மேலபுரம் தெரு மற்றும் திருவள்ளுவர் தெரு, ரத்தினா திரையரங்கு தென்புறம் ஆகிய இடங்களில் தார்ச் சாலை போடுவதற்கு பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

**65—**

**குடிநீர்**

**வினா எண் 8900—திரு. டி. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர்ப் பற்றாக்குறையைக் களைய நெய்வேலியிலிருந்து கொண்டு வரும் குடிநீர் சரிவர சென்னைக்கு வந்து சேருகிறதா?

(ஆ) இதில் முறைகேடுகள் நடப்பதாகப் புகார் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சென்னை நகரின் பற்றாக்குறையைச் சமாளிக்க நெய்வேலியிலிருந்து 18-6-2001 முதல் 23-10-2001 வரை தினமும் சுமார் 462 லாரிகள் மூலம் சராசரியாக 4.75 மில்லியன் லிட்டர் வீதம் மொத்தம் 603.42 மில்லியன் லிட்டர் குடிநீர் கொண்டுவரப்பட்டு சென்னை நகருக்கு வழங்கப்பட்டது.

(ஆ) முறைகேடுகள் நடந்ததாகப் புகார் ஏதும் வரவில்லை.

(இ) முறைகேடுகள் குறித்துப் புகார் ஏதும் பெறப்படாததால் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**66—**

**குடிநீர்க் குழாய் இணைப்புகள்**

**வினா எண் 8919—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சிப் பகுதி எண் 19 மாச்சம்பாளையம் கோகுலபுரத்திலுள்ள சில வீடுகளுக்கு சிறுவாணி குடிநீர்க் குழாய் இணைப்புகள் கொடுத்தும் 4 ஆண்டுகளாகத் தண்ணீர் வராமலே தண்ணீர் வரி செலுத்துவதால் அந்தப் பகுதிக்குத் தனியாக பிரதானக் குழாய் அமைக்கத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(ஆ) மற்றும் (ஆ) குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட பகுதி எண் 19 மாச்சம்பாளையம் கோகுலபுரத்திலுள்ள சில வீடுகளுக்கு 11-வது நிதிக் குழுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 2.55 இலட்சம் செலவில் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு தற்பொழுது குடிநீர் சீராக விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது.

[2003 மே 10

67—

### புதிய வார்ப்பு இரும்புக் குழாய்கள்

**வினா எண் 9648—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 8-வது வட்டம், மேயர் வாசுதேவர் தெருவில் உள்ள பழுதுபட்ட வார்ப்பு இரும்புக் குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஏற்கெனவே உள்ள வார்ப்பு இரும்புக் குழாய்கள் நல்ல நிலையில் உள்ளன. எனவே, குழாய்களைத் தற்போது மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

68—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10154—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், மேல்நர்மா கிராமப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, அனக்காவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மேல்நர்மா கிராமத்திற்குப் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது பற்றி தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



2003 மே 10]

69—

### ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 10160—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, பெரியகுப்பம் கிராம ..க்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க மேல்நிலை நீர்த்தேக.. தொட்டி மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, பெரியகுப்பம் கிராமக் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தற்பொழுது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, பெரியகுப்பம் கிராமக் குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைப்பது குறித்த கேள்வி எழவில்லை.

70—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 10161—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, சாலவேடு கிராம மேட்டுப்பாளையம் பகுதி குடிநீர்த் தேவை..யை நிறைவேற்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒ[illegible]க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, சாலவேடு ஊராட்சி, மேட்டுப்பாளையம் கிராமக் குடியிருப்பிற்கு, சாலவேடு காலனி மற்றும் சானார்பாளையம் ஆகிய குடிநீர்த் திட்டங்களிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, சாலவேடு கிராமக் குடியிருப்பிற்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும் என்ற கருத்துருவுக்கு இடமில்லை.

**71—**

**கழிவு நீர் அகற்றுதல்**

**வினா எண் 10494—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் முக்கிய சாலைகளில் தேங்கியுள்ள கழிவுநீரை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கழிவு நீர் குழாய்களில் எப்பொழுதாவது அடைப்பு ஏற்படும்பொழுது கழிவு நீர் சாலைகளில் வழிந்தோட வாய்ப்பு உள்ளது. அவ்வாறு வழிந்தோடாமல் இருக்க, கழிவு நீர் குழாய்களில் தடை ஏற்பட்டுள்ளது எனத் தெரிந்தவுடன் அந்தத் தடைகளை நீக்கி சுத்தம் செய்ய அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**72—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 10511—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், இராமன் கோயில் கிராமத்தில் ஆழ்குழாய் பணி பாதியில் நிறுத்தப்பட்டுவிட்டது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், குடிநீர்த் தொட்டி எப்போது முழுமையாக அமைத்து குடிநீர் வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், இராமன் கோயில் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இக்குடிநீர்த் திட்டம், பராமரிப்பிற்காக 1/2002 முதல் ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது.

**73—**

**குடிநீர்த் தொட்டி கட்டும் திட்டம்**

**வினா எண் 16393—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் கூட்டுறவு காலனியில் பத்து லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் கூட்டுறவு காலனியில் பத்து லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டி கட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

74—

## மழைநீரைச் சேமித்தல்

**வினா எண் 16579—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நிலத்தடி நீர் குறையாமல் இருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) மழைநீரைச் சேமிக்க அரசு ஏதேனும் புதிதாக திட்டம் தீட்டியுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் நிலத்தடி நீர் குறையாமல் இருக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. நிலத்தடி நீர் மேம்பாட்டுக்காக, நிலத்தடி நீர் செறிவூட்டலுக்கான பல்வேறு கட்டமைப்புகளை நிறுவி வருகின்றது. மேலும், நிலத்தடி நீர் பயன்பாட்டு கட்டுப்பாட்டிற்காக சென்னை பெருநகரம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் ஒரு சட்டம் இயற்றப்பட்டு நிலத்தடி நீர் பாதுகாப்பை மேம்படுத்தியுள்ளது. தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும் இந்தச் சட்டம் ஏற்படுத்தப்பட பொதுப் பணித் துறையினரால் வரைவு சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

75—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 21922—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாலஜங்கமன அள்ளி ஊராட்சி, தேவர்



ஊத்துப்பள்ளம் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

76—

## பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா எண் 23152—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் பேரூராட்சிக்கு பேருந்து நிலையம் அமைத்துத் தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரணமல்லூர் பேரூராட்சிக்கு பேருந்து நிலையம் அமைப்பதாக இல்லை.

77—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 26050—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி, மேல்காடு கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**78—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 26058—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, வட்டுவன அள்ளி ஊராட்சி, மருக்காரம்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**79—**

**பயிற்சி மையம்**

**வினா எண் 2724—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வந்தவாசி தொகுதியில் கலப்பின செம்மறி ஆடு மற்றும் ஆடு வளர்ப்பு, மீன், கோழி வளர்ப்பிற்கான பயிற்சி மையம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதியில் கலப்பின செம்மறி ஆடு மற்றும் ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பிற்கென பயிற்சி மையம் அமைக்க திட்டம் ஏதும் இல்லை.

**80—**

**புதிய கால்நடை மருத்துவமனை ஏற்படுத்துதல்**

**வினா எண் 5354—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியத்தில் கால்நடை மருத்துவமனை புதியதாக ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டிவனம் கோட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வல்லம் கால்நடை மருத்துவமனை ஒன்று நன்முறையில் செயல்பட்டு வருகிறது.

[2003 மே 10

**81—**

**புதிய கால்நடை மருத்துவ நிலையம்**

**வினா எண் 5452—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், கடும்பாடி கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவ நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், கடும்பாடி கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**82—**

**மருத்துவமனையாக்குதல்**

**வினா எண் 5573—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலம் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.



2003 மே 10]

**83—**

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 7402—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஒன்றியம், வரிச்சியூரில் அமைக்கப்பட்டுள்ள கால்நடை மருந்தகம், நடப்பாண்டில் செயல் படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், வரிச்சியூர் கிராமத்தில் 16-4-1967 முதல் கால்நடை மருந்தகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. 27-5-1999 முதல் மேற்படி கால்நடை மருந்தகத்தில் கால்நடை உதவி மருத்துவர் பணிபுரிந்து வருகிறார்.

**84—**

**கூட்டுறவுச் சங்கக் கட்டடம்**

**வினா எண் 7780—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பச்சனம்பட்டி ஊராட்சியில் உள்ள ஆட்டுக்காரனூர் ஆடுவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இயங்க புதியதாக கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* சாத்தியமில்லை.

*(ஆ)* எழாது.

**85—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 9098—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதி, கருத்தப்பிள்ளையூர் மற்றும் கோவிந்தப்பேரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**86—**

**கால்நடை மருத்துவமனை தொடங்கும் திட்டம்**

**வினா எண் 9157—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புவனகிரி தொகுதி, கொத்தடை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

*(ஆ)* எழாது.

**87—**

**கூடுதல் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 10264—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி நகரிலுள்ள கால்நடை மருத்துவமனை கட்டடத்தில் கூடுதலாக புதிய கட்டடங்களும் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

*(ஆ)* எழாது.

**88—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 10382—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், 18 புதுக்குடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**89—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 10512—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், காவேரிராசபுரம் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**90—**

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 12641—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி, அரசரடிக்குப்பம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**91—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 12694—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

**92—**

**குருவிக்கரம்பையில் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 12725—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**93—**

### கிளை கால்நடை நிலையம்

**வினா எண் 12732—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி, கொள்ளிடம் ஒன்றியம், ஆர்ப்பாக்கத்தில் கிளை கால்நடை நிலையம் அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆர்ப்பாக்கம் கிராமத்திற்கு 5 கி.மீ. தொலைவில் சீர்காழியில் கால்நடை மருத்துவமனை அமைந்துள்ளதால், ஆர்ப்பாக்கம் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவ நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**94—**

### கால்நடை மருந்தகம் அமைத்தல்

**வினா எண் 12754—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஈச்சன்விடுதி வடக்கு பகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**95—**

### ஆட்டுப் பண்ணை அமைக்கும் திட்டம்

**வினா எண் 13169—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி பகுதியில் ஆட்டுப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இல்லை.

**96—**

### கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம்

**வினா எண் 13210—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் கொளத்துப்பாளையத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**97—**

**கால்நடை மருந்தகங்கள் துவக்குதல்**

**வினா எண் 13264—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி பகுதியில் கால்நடை மருந்தகங்கள் துவக்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**98—**

**நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி**

**வினா எண் 13265—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி பகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி இயக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**99—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 13536—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், தண்ணீர்தாசனூரில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர இந்நிதியாண்டில் அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**100—**

**கால்நடைகள் வளர்க்க கடன் தொகை**

**வினா எண் 14451—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், எடப்பாடி ஒன்றியத்தில் கால்நடைகள் வளர்க்க கடன் தொகை வழங்குவதை அரசு அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் மகுடஞ்சாவடி கொங்கணாபுரம், எடப்பாடி ஒன்றியத்தில் கால்நடைகள் வளர்க்க ஏற்கெனவே 146 பயனாளிகளுக்கு வங்கி கடன் மற்றும் மான்யமாக ரூ.13,86,350 வழங்கப்பட்டுள்ளதால் கடன் தொகை வழங்குவதை அதிகரிக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**101—**

### கால்நடை பயிற்சிப் பள்ளி

**வினா எண் 14455—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரியிலுள்ள ஆடு வளர்ப்போர் ஆராய்ச்சி மையத்தில் கால்நடை பயிற்சிப் பள்ளி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திட்டம் ஏதுமில்லை.

**102—**

### செம்மறி ஆடு, மீன், கோழி வளர்ச்சி பயிற்சி மையம்

**வினா எண் 14461—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் கலப்பின செம்மறி ஆடு, மீன், கோழி போன்றவற்றை வளர்ப்பதற்கான பயிற்சி மையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இல்லை.

**103—**

### பெரும் மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்

**வினா எண் 14479—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 50 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் கால்நடை மருத்துவமனைகள் எத்தனை?

(ஆ) அவற்றை பெரும் மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆறு கால்நடை மருத்துவமனைகள் தற்போது இயங்கி வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| வ.எண். | கால்நடை மருத்துவ மனையின் பெயர் | மாவட்டம் | கால்நடை மருத்துவ மனை தொடங்கப் பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | இராணிப்பேட்டை | வேலூர் | 1915-ம் ஆண்டு முதல் |
| 2. | இராஜபாளையம் | விருதுநகர் | 1926-ம் ஆண்டு முதல் |
| 3. | தாராபுரம் | ஈரோடு | 1923-ம் ஆண்டு முதல் |
| 4. | மன்னார்குடி | திருவாரூர் | 1930-ம் ஆண்டு முதல் |
| 5. | திருத்துறைப்பூண்டி | திருவாரூர் | 1926-ம் ஆண்டு முதல் |
| 6. | இலால்குடி | திருச்சி | விவரம் இல்லை. |

(ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

104—

**கால்நடை உதவி மருத்துவர் பணியிடம் நிரப்புதல்**

**வினா எண் 14939—திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, கீரப்பாளையம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனையில் மருத்துவர் இல்லாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அதனை இயக்குவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, கீரப்பாளையம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை இல்லை. ஆனால், கீரப்பாளையம் ஒன்றியத்தில் உள்ள விளாகம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் உள்ளது. அம்மருந்தகத்தில் காலியாயிருந்த கால்நடை உதவி மருத்துவர் பணியிடம் சமீபத்தில் நிரப்பப்பட்டுவிட்டது.

105—

**கால்நடை மருத்துவமனை துவங்குதல்**

**வினா எண் 14977—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனஅள்ளி ஊராட்சி, வெள்ளமன்காட்டில் கால்நடை மருத்துவமனை துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

106—

**நாரணம்மாள்புரம் பகுதியில் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 15049—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாரணம்மாள்புரம் பகுதியில் கால்நடை மருத்துவமனை துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

107—

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 16243—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, தருவைக்குளத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

*(ஆ)* எழாது.

**108—**

**புளியந்துரையில் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 16288—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், புளியந்துரை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

*(ஆ)* எழாது.

**109—**

**திருக்கருகாவூரில் கால்நடை மருத்துவமனை, பகுதிநேர மருத்துவமனை**

**வினா எண் 16509—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, திருக்கருகாவூர் பகுதியில் கால்நடை மருத்துவமனையோ அல்லது பகுதி நேர மருத்துவமனையோ துவங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

*(ஆ)* எழாது.

**110—**

**கால்நடை மருந்தகம், மருத்துவமனை**

**வினா எண் 16510—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் பகுதியில் கால்நடை மருந்தகம் மற்றும் மருத்துவமனை துவங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

*(ஆ)* எழாது.

[2003 மே 10

111—

**தென்னாம்பட்டினத்தில் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 16514—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, தென்னாம்பட்டினம் ஊராட்சி, தென்னாம்பட்டினம் கால்நடை மருத்துவமனை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) எழாது.*

112—

**மருந்துகள் வழங்குதல்**

**வினா எண் 16568—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மழைக்காலங்களில் கால்நடைகளுக்கு வரும் நோயின் தன்மை அறிந்து அதற்குத் தேவையான மருந்துகள் அதிகமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*ஆம்.*



2003 மே 10]

113—

**விஷக் கிருமியை ஒழித்தல்**

**வினா எண் 16575—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் ஆந்த்ராக்ஸ் கிருமி தாக்கி கால்நடைகள் இறந்துள்ளதா?*

*(ஆ) இந்த ஆட்கொல்லி விஷக்கிருமியை ஒழிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். 195 கால்நடைகள்.*

*(ஆ) சிறப்பு கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்கள் மூலமும் நோய் புலனாய்வுப் பிரிவுகள் மூலமும் 8 இலட்சம் தடுப்பூசி போடப்பட்டு கால்நடைகள் பாதுகாக்கப்படுகின்றன.*

114—

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 16694—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதி, ஜோலார்ப்பேட்டை ஒன்றியம், மல்லப்பள்ளி ஊராட்சியிலும், கந்திலி ஒன்றியம் (சப் சென்டர்), பெரியகரம் கிராமத்திலும் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

115—

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 16775—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, புலியூர், பெரிய காட்டுசாகை கிராமத்தில் கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

116—

**கால்நடை மருத்துவமனைக் கட்டடம் பழுது பார்த்தல்**

**வினா எண் 16776—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகரில் கடலூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவமனை கட்டிடம் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால் இதனை சரிசெய்து தர அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகரில் கடலூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவமனை தற்போது புதிய கட்டிடத்தில் இயங்கி வருவதால் பழைய கட்டிடத்தைப் புதுப்பிப்பது எழவில்லை.

(ஆ) எழாது.

117—

**கால்நடை கிளை மருத்துவமனை**

**வினா எண் 16834—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், சித்தூர் கிராமம், புளியம்பட்டியில் கால்நடை கிளை மருத்துவமனை புதிதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

118—

**பசு இனங்கள் பாதுகாத்தல்**

**வினா எண் 16838—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு உள்நாட்டு பசு இனங்களான உம்பளாச்சேரி, காங்கேயம் போன்றவைகளை பாதுகாப்பதற்காக அரசு எடுத்துவரும் சிறப்பான திட்டம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

உம்பளாச்சேரி இனம் அழிந்துவிடாமல் பாதுகாக்க மாவட்ட கால்நடைப் பண்ணை, கொருக்கையிலும் காங்கேய இன கால்நடைகள் அழிந்து விடாமல் பாதுகாக்க மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூரிலும் இதற்கென தனி முக்கியத்துவம் கொடுத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**119—**

**கால்நடை மருத்துவமனை துவக்குதல்**

**வினா எண் 17025—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்க திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.



**120—**

**மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்**

**வினா எண் 17184—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சியிலுள்ள கால்நடை துணை மருத்துவ நிலையங்கள் மருத்துவமனையாக தரம் உயர்த்தி தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**121—**

**கால்நடை மருந்தகம் துவங்குதல்**

**வினா எண் 17185—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெட்டவயல் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் துவங்க அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

[2003 மே 10

122—

**கால்நடை மருத்துவமனை திறத்தல்**

**வினா எண் 17778—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி எண் 144 புதுப்பட்டு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை திறக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதுமில்லை

123—

**கறவை கால்நடைகளின் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 20221—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கறவை கால்நடைகளின் தரத்தை உயர்த்த அரசு திட்டமிட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பரிட்சார்த்தமாக உடுமலைப் பகுதியில் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) அவசியம் எழாது.



2003 மே 10]

124—

**கால்நடை மருத்துவமனை துவங்குதல்**

**வினா எண் 20236—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை வட்டம், வி. களத்தூரில் அரசு கால்நடை மருத்துவமனை துவங்க ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது. செயற்குறிப்பு ஏதுமில்லை.

125—

**அத்தாணியில் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 20439—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அத்தாணியில் கால்நடை மருத்துவமனை தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

[2003 மே 10

126—

விஜய மாநகரத்தில் கால்நடை மருத்துவமனை

**வினா எண் 20449—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் ஒன்றியம், விஜயமாநகரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு இல்லை.

(ஆ) எழாது.

127—

கால்நடை மருந்தகம்

**வினா எண் 20491—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம் ஆத்துறை கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.



2003 மே 10]

128—

கால்நடைப் பண்ணைக்கு உயர்ரகப் பசுக்கள்

**வினா எண் 20632—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலுள்ள கால்நடைப் பண்ணைக்கு உயர்ரகப் பசுக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஆம். ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் இருந்து 30 எண்ணிக்கை உயர்ரகப் பசுக்கள், புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணைக்கு மாறுதல் செய்து வழங்கப்பட்டுள்ளன.

129—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 20650—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியத்திலுள்ள குரைதயனேரியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

130—

### மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குதல்

**வினா எண் 20729—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கால்நடை மருத்துவமனையிலுள்ள மருந்துத் தட்டுப்பாட்டைப் போக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் உள்ள அனைத்துக் கால்நடை நிலையங்களுக்கும் மருந்துகள் தட்டுப்பாடு இல்லாமல் வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

131—

### கால்நடை மருத்துவமனைக் கட்டடம்

**வினா எண் 20952—திரு. மா. சந்தானம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், தும்மக்குண்டில் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டப்பட்ட கட்டடம் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், தும்மக்குண்டில் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டப்பட்ட கட்டடத்தில், வாரத்தில் 3 நாட்கள் பார்வை கிளை நிலையம், 5-3-2002 முதல் செயல்பட்டு வருகிறது.



132—

### கால்நடை மருந்தகம் துவக்குதல்

**வினா எண் 20995—திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியம், பழையனூர் கிராமத்தில் கால்நடை மருத்தகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

133—

### பசுக்களைப் பராமரித்தல்

**வினா எண் 21107—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் செயல்பட்டுவரும் கால்நடைப் பண்ணையின் வருவாயைக் கொண்டு புதிய பசுக்களை வாங்கி பராமரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டையில் செயல்பட்டுவரும் மாவட்டக் கால்நடைப் பண்ணையின் வருவாயைக்கொண்டு, புதிய பசுக்கள் வாங்கி பராமரிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**134—**

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 22847—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஒன்றியம், பிஎன். பட்டி பேரூராட்சியில் கால்நடை மருத்துவனை அமைக்க அரசு [illegible] எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**135—**

### கால்நடை மருத்துவர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 23521—திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மங்களூர் தொகுதி, திட்டக்குடி கால்நடை மருத்துவமனையில் காலியாகவுள்ள மருத்துவர் பணியிடம் எப்போது நிரப்பப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திட்டக்குடி கால்நடை மருத்துவமனையில், தற்போது கால்நடை மருத்துவர் 29-6-2000 முதல் பணிபுரிந்து, வருகிறார்.



**136—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 23523—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், இருந்திராப்பட்டியிலுள்ள மற்றும் குன்றாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம், தென்னதிரையான்பட்டியிலும் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செய்குறிப்பு ஏதும் இல்லை.

**137—**

### ஜம்பையில் கால்நடை மருத்துவமனை

**வினா எண் 23535—திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஜம்பை பேரூராட்சி, ஜம்பையில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[2003 மே 10

138—

**தீவன உற்பத்தி**

**வினா எண் 23892—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாமக்கல் மாவட்டத்தில், கோழிப் பண்ணை தொழில், தீவன விலை உயர்வினால் நசிந்து வருவதைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், கூட்டுறவுத் துறை மூலம் தீவன உற்பத்தி செய்து நியாய விலைக்கு வழங்கும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* கோழிப் பண்ணைத் தொழில் தீவன விலை உயர்வினால் நலிவடையவில்லை.

*(ஆ)* எழாது.

139—

**கால்நடை மருத்துவமனை கட்டுதல்**

**வினா எண் 24257—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியத்தில் கால்நடை மருத்துவமனை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியத்தில் கால்நடை மருந்தகம் நிலையான அரசு கட்டடத்தில் ஏற்கெனவே இயங்குவதால், புதிதாக கால்நடை மருத்துவமனை கட்டத் தேவையில்லை.

*(ஆ)* எழாது.

140—

**மஞ்சாரஅள்ளியில் கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 24288—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

*(ஆ)* எழாது.

141—

**டானிடா உதவித் திட்டம்**

**வினா எண் 25502—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) விளாத்திக்குளத்தில் டானிடா உதவித் திட்டம் மூலம் கால்நடை வளர்ச்சித் திட்டத்தைத் தீவிரமாக செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். விளாத்திக்குளத்தில் டானிடா உதவித் திட்டம் மூலம் கால்நடை வளர்ச்சித் திட்டத்தைத் தீவிரமாக செயல்படுத்திட அரசு 2002-2003-ம் நிதியாண்டில் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(ஆ) ஆம். 2002-2003-ம் ஆண்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**142—**

**கால்நடை மருத்துவக் கல்லூரி**

**வினா எண் 26952—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.



2003 மே 10]

**143—**

**கால்நடை கிளை சுகாதார நிலையம்**

**வினா எண் 27177—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், அழகுசமுத்திரம் கிராமத்தில் கால்நடை கிளை சுகாதார நிலையம் அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், அழகுசமுத்திரம் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது.

**144—**

**கால்நடை மருத்துவக் கல்லூரி**

**வினா எண் 27332—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

145—

**தொழிற்பேட்டை அமைத்தல்**

**வினா எண் 2557—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் தொழிற்பேட்டை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் நடப்பாண்டில் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் தற்சமயம் சிட்கோவிடம் இல்லை.

146—

**மொரப்பூரில் தொழிற்பேட்டை**

**வினா எண் 2594—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பின்தங்கிய பகுதியான மொரப்பூர் தொகுதியில் தொழிற் பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதியில் நடப்பாண்டில் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் இல்லை.

*(ஆ)* இவ்வினாவிற்கு இடமில்லை.



147—

**கடன்**

**வினா எண் 3446—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் பட்டு வளர்ச்சித் தொழில் முனைவோருக்கு மானியத்துடன் கடன் வழங்க அரசு முயற்சி எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் உள்ள எடப்பாடி தொகுதியில் பட்டுத் தொழில் முனைவோருக்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க மானியம், புழு வளர்ப்பு மனை கட்ட மானியம், புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கு மானியம், வீரிய ரக மல்பரி விதைக் குச்சிகள் கொள்முதல் செய்வதற்கு மானியம், தண்டு அறுவடை முறை புழு வளர்ப்பு செய்வதற்கு மானியம் ஆகியவை நேரடியாகவும், வங்கிக் கடனுடன்கூடிய மானியமாகவும் அளிக்கப்படுகின்றன. வங்கிக் கடன் பெற இயலா நிலையிலுள்ள பயனாளிகள் சுய முதலீடு செய்தாலும் மானியம் வழங்கப்படுகின்றது.

148—

**மானியத்துடன் கடன்**

**வினா எண் 4405—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இருப்பாளியில் அதிகமாகக் கிடைக்கும் கோரைப்புல்லைக்கொண்டு பாய் முடைய மானியத்துடன்கூடிய கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்காணும் பொருள் குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**149—**

**பனைத் தொழிற்சாலை**

**வினா எண் 4518—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் வட்டத்திலுள்ள பனைத் தொழிலாளர்கள் நலன் காக்க பனைத் தொழில் சம்பந்தமான தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்காணும் பொருள் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**150—**

**பனைத் தொழிலுக்கு கடனுதவி**

**வினா எண் 5803—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனைத் தொழிலை ஊக்குவிக்க அரசிடம் சிறப்புத் திட்டம் ஏதேனும் உள்ளதா?



2003 மே 10]

(ஆ) ஆம் எனில், அதனை ஊக்குவிக்க மேலும் மானியத்தை உயர்த்தி கடனுதவிகள் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது நிலவி வரும் நிதி நிலைமையின் காரணமாக பனைத் தொழிலை ஊக்குவிக்க அரசிடம் சிறப்புத் திட்டம் ஏதுமில்லை. இருப்பினும், பனைத் தொழிலின் வளர்ச்சிக்காக அரசானது பகுதி-2 திட்டம் மூலமாகவும், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மூலமாகவும் நிதி உதவி அளிக்கிறது. மற்றும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையத்திடமிருந்து மூலதனக் கடன் பெற்றுத் தருகிறது.

**151—**

**காகித அலகுகள்**

**வினா எண் 6940—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்கள் கஷ்டப்படுவதால் 1999-ல் மூடப்பட்ட 15 கதர் கிராம கைமுறைக் காகித அலகுகளை மீண்டும் திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

மேற்காணும் பொருள் குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

152—

**பிங்கான் தொழிற்சாலையைத் திறத்தல்**

**வினா எண் 7194—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலத்திலுள்ள அரசு பீங்கான் தொழிற்சாலையை மீண்டும் திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

153—

**வங்கிகளில் கடன்**

**வினா எண் 8745—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரதமர் நிதியுதவித் திட்டத்தின்கீழ், படித்த இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க வங்கிகளில் கடன் கிடைப்பது நடைமுறையில் எளிதாக இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எளிய முறையில் கடன் பெற அரசு வழிவகை செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாரதப் பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க வங்கிகளிடமிருந்து



எளிய முறையில் கடன் பெற்றிட மாவட்டத் தொழில் மையங்கள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

154—

**காகித அலகு உற்பத்தி**

**வினா எண் 10311—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதிக்குட்பட்ட வெள்ளிச்சந்தையில் உள்ள கைமுறை காகித அலகு தற்பொழுது உற்பத்தி இல்லாமல் மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இதனை மீண்டும் துவக்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த வெள்ளிச்சந்தை கைமுறை காகித அலகு 1-12-1999 முதல் நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டது.

(ஆ) ஏற்கெனவே மூடப்பட்ட வெள்ளிச்சந்தை கைமுறை காகித அலகினை மீண்டும் திறந்து, இயக்கிட இயலாது.

155—

**பொம்மைத் தொழிற்கூடம்**

**வினா எண் 13283—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காகிதக் கூழ்கொண்டு தயாரிக்கும் பொம்மைத் தொழில் கூடங்களை கதர்த் தொழில்கள் வாரியத்தின் மூலமாக பெண்ணாகரத்தில் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் காகிதக் கூழ்கொண்டு தயாரிக்கும் பொம்மை அலகு எதுவும் செயல்படவில்லை. எனவே, பெண்ணாகரத்தில் காகிதக் கூழ்கொண்டு தயாரிக்கும் பொம்மைத் தொழிற்கூடங்கள் அமைத்திடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**156—**

**பட்டு உற்பத்தி**

**வினா எண் 13432—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டத்தில் பட்டு உற்பத்தியினைப் பெருக்க விவசாயிகளுக்குத் தேவையான தரமான பட்டு முட்டைகளைக் குறிப்பிட்ட காலத்தில் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் பட்டு உற்பத்தியைப் பெருக்க அரசு பட்டு முட்டை வித்தகம் மூலமாகத் தரமான பட்டு முட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டுக்கு 5 இலட்சம் முட்டைகள் பெண்ணாகரம் வித்தகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. இது தவிர, கூடுதல் முட்டை தேவை இருப்பினும் வழங்க கட்டமைப்பு வசதிகள் பெண்ணாகரம் வித்தகத்தில் உள்ளன.

**157—**

**பட்டு நூல் தயாரித்தல்**

**வினா எண் 13442—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பட்டு நூல் தயாரித்தல் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பயிற்சி மற்றும் மானியத்துடன்கூடிய கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பட்டு நூல் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பயிற்சி மற்றும் மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**158—**

**தொழிற்கூடங்கள் அமைத்தல்**

**வினா எண் 14043—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி வைகுந்தம், வெள்ளையம்பாளையம் பகுதியில் கட்டில் கயிறு திரிக்கும் தொழிலாளர்களுக்குத் உதவ தொழிற்கூடங்கள் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி வைகுந்தம், வெள்ளையம்பாளையம் பகுதியில் கட்டில் கயிறு திரிக்கும் தொழிலாளர்களுக்காகத் தொழிற்கூடங்கள் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**159—**

**தொழிற்பயிற்சி நிலையம்**

**வினா எண் 14114—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தில் துணி பொம்மைத் தயாரிப்புத் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தில் துணி பொம்மைத் தயாரிப்புத் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்திடும் திட்டம் கதர் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

**160—**

**நைலான் கொசு வலை ஆலையைத் திறத்தல்**

**வினா எண் 15883—திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதி, மகேந்திரமங்கலம் கிராம காகித ஆலையையும், தாத்தையங்கார்பேட்டை ஸ்ரீசித்தி விநாயகர் நைலான் கொசு வலை ஆலையையும் மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

மிகுந்த நட்டத்தில் இயங்கி வந்த திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதி, மகேந்திரமங்கலம் கிராம காகித ஆலையை மீண்டும் திறக்க இயலாது, தாத்தையங்கார்பேட்டை ஸ்ரீசித்தி விநாயகர் நைலான் கொசு வலை ஆலை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்படவில்லை.

**161—**

**மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்**

**வினா எண் 19637—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டத்திலுள்ள கல்ராயன்மலை, பச்சமலை மற்றும் அருநூத்து மலையில் உள்ள பழங்குடியினர் எத்தனை பேர் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்களில் பயன் அடைந்துள்ளனர்?

(ஆ) பயனாளிகளின் எண்ணிக்கையை இந்த ஆண்டு அதிகரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் உள்ள கல்ராயன்மலை, பச்சமலை மற்றும் அருநூத்து மலையில் உள்ள பழங்குடியினரில் மொத்தம் 883 பேர் எட்டாவது மற்றும் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், அதாவது 1992-1993 முதல் 2001-2002 முடிய உள்ள ஆண்டுகளில் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்களில் பயன் பெற்றுள்ளனர்.

தற்போது நிதி ஒதுக்கீடு செய்ய இயலாததால் பட்டு வளர்ச்சித் திட்டம் மேற்கண்ட மலைப் பகுதிகளில் செயல்படுத்தப்படவில்லை. எனவே, சேலம் மாவட்டத்தில் பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**162—**

**பட்டு நூற்பாலை**

**வினா எண் 23014—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, அக்ரகாரம் கிராமத்தில் பட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் பட்டு நூற்பாலை பல வருடங்களாக மூடப்பட்டுள்ளது. அவ்வாலையை அரசு திறக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, அக்ரகாரம் கிராமத்தின் பட்டு கூட்டுறவுச் சங்கத்தில் நூற்பாலை 7-7-1983-ல் பதிவு செய்யப்பட்டது. மேற்படிச் சங்கம் 1-4-1987 முதல் வியாபார ரீதியாக பட்டு நூற்புப் பணி மேற்கொள்ளப்பட்டு செயல்படத் தொடங்கியது. சங்கத்தின் உற்பத்தித் தொடங்கிய ஆண்டிலிருந்தே சங்கத்திற்குப் பெருத்த நிதியிழப்பு ஏற்பட்டு இலாபம் ஈட்டும் தகுதியை இழந்து தற்போது சுய சார்புடன் இயங்கக் கூடிய நிலையில் இல்லை. எனவே, நாட்ராம்பள்ளி பட்டு கூட்டுறவுச் சங்கத்தின் நூற்பாலையைத் தொடர்ந்து நடத்த இயலாது.

(ஆ) இக்கேள்விக்கே இடமில்லை.

163—

### கடனுதவி

**வினா எண் 23024—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள ஆழியார் பகுதி, வேட்டைக்காரன்புதூர், சேத்துமடை போன்ற பகுதிகளிலுள்ள தேங்காய் விலைவீழ்ச்சிக்குப் பிறகு வருமானம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) விவசாயிகளுக்கு வருமானத்தை உருவாக்க கடன் வழங்கி சிறுதொழில்களைத் தொடங்க அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) தென்னை விவசாயிகளின் வருமானத்தை உருவாக்க, தென்னை நார் உற்பத்திக்கு, வங்கி மூலம் கடன் வழங்கிட, மாவட்ட தொழில் மையம் மற்றும் நபார்டு வங்கி மூலம் தேவையான உதவிகள் பெறலாம். மேலும் "புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்னும் புதிய திட்டத்தின்கீழ் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

164—

### தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்

**வினா எண் 23415—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி நகரில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

165—

### பனைபொருள் வளர்ச்சி வாரியத் திட்டப் பணிகள்

**வினா எண் 23546—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் திட்டப் பணிகள் என்ன என்பதை அரசு அறிவிக்குமா?

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) பனைபொருட்களை வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் உற்பத்தி செய்து சந்தையில் போட்டி ஏற்படுத்துவது, பனை வளர்ச்சிக்குத் தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு தொழில் நுட்பங்களை அளித்து பனைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு பனை வாரியத்தின் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் திண்டுக்கல், தேனி, கோவை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பனை விதை நடவு திட்டத்தினைச் செயல்படுத்திட மாவட்டம் ஒன்றுக்கு ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.6.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**166—**

### தொழிற்பேட்டை நிறுவுதல்

**வினா எண் 24005—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, மண்டலவாடி கிராமத்தில் தொழிற்பேட்டை நிறுவ அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**167—**

### தக்காளிச் சாறு தொழிற்சாலை

**வினா எண் 25358—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் தக்காளி சாறு தொழிற்சாலை ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் தக்காளி சாறு தயார் செய்யும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2003 மே 10

168—

**சிறுதொழில் பயிற்சிக் கல்லூரி**

**வினா எண் 25359—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சிறு தொழில் தொடங்க படித்த இளைஞர்களுக்காக தருமபுரியில் சிறு தொழில் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* சிறு தொழில் தொடங்க, படித்த இளைஞர்களுக்காக தருமபுரியில் சிறு தொழில் பயிற்சிக் கல்லூரி அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* இவ்வினாவிற்கு இடம் இல்லை.

169—

**கடனுதவி**

**வினா எண் 27878—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மாவட்ட தொழில் மையங்களில் கடன் கேட்டு விண்ணப்பிக்கும் இளைஞர்களுக்கு உடனுக்குடன் கடனுதவி செய்ய அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* தேவையான நடவடிக்கை உடனுக்குடன் எடுக்கப்படுகிறது.



2003 மே 10]

170—

**சிறுதொழில் தொடங்க கடன்**

**வினா எண் 29836—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியத்தில் ஏழை மக்களுக்கு சிறு தொழில்கள் தொடங்கவும், தையல் இயந்திரங்கள் வழங்கவும் அரசு வங்கிகள் மூலம் கடன் உதவி அளிக்க நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியத்தில் ஏழை மக்களுக்கு சிறு தொழில்கள் தொடங்கவும், தையல் இயந்திரங்கள் வழங்கவும், வங்கிகள் மூலம் கடன் உதவி அளிக்க பாரதப் பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

171—

**உயிரியல் பூங்கா அமைத்தல்**

**வினா எண் 921—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல்லில் உயிரியல் பூங்கா ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், நடப்பாண்டில் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

172—

கூடுதல் நிதி ஒதுக்கீடு

**வினா எண் 1605—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திற்கு வருடந்தோறும் இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருவதால் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி கூடுதலாக ஒதுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி நீர்வள பாதுகாப்பு சோலா காடுகளில் மேம்பாடு, தீத்தடுப்புப் பணிகள் சுற்றுச்சூழலை பாரமரித்து பாதுகாத்தல் போன்ற மிக அத்தியாவசிய பணிகளை மத்திய அரசின் ஒருங்கிணைந்த நீர்நிலை வளர்ச்சி தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு செலவிடப்பட்டு வருகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பணிகளினால் உதகைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏதுவாக பல திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சுற்றுலா மேம்பாட்டிற்காக எட்டாவது ஐந்தாண்டு திட்ட (1992-93 முதல் 1996-97 வரை) காலத்தில் ரூ.133.05 இலட்சமும் ஒன்பதாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (1997-98 முதல் 2001-2002 வரை) ரூ.298.00 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (2002-2003) ரூ.50.00 இலட்சங்களுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டு செலவிடப்பட்டு வருகிறது.



173—

பணி நிரந்தரம்

**வினா எண் 2695—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சந்தனக் கிடங்கில் தினக்கூலிகளாக உள்ளவர்களுக்கு பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

அறிக்கை

திருப்பத்தூர் சந்தன மரக் கிடங்கில் தொகுப்பூதியப் பணியாளர்கள் 44 மற்றும் தினக் கூலி பணியாளர்கள் 41 நபர்கள் பணியில் உள்ளனர். இவர்களின் பணி நிரந்தரம் தொடர்பான கோரிக்கை அரசினால் பரிசீலிக்கப்பட்டு, மாநில அளவிலான சமூக வன ஊழியர் மற்றும் தோட்டக் காவலர்களின் முதுநிலைப் பட்டியலில் இவர்களையும் சேர்க்கும் செயற்குறிப்பினை முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இச்செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

174—

மின் இணைப்பு

**வினா எண் 6700—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம், லோயர் கேம்ப், காணிக் குடியிருப்பு, சேர்வலார் பகுதிகளில் 40 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருக்கும் மக்கள் வீட்டு மின் இணைப்பு பெற ஆட்சேபனை இல்லை என வனத் துறை மின் துறைக்கு தெரிவிக்குமா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

1969 ஆம் வருடம்; திருநெல்வேலி மாவட்ட வன அலுவலரால் 18 காணிக் குடியிருப்பு வசதிக்காக 30 ஏக்கர் வன நிலம் முண்டந்துறை அருகாமையில் பாபநாசம் ஒதுக்குக் காடு பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு வாழ்பவர்கள் அணை கட்டும்போது வந்து குடியேறியவர்கள், சட்டப்பூர்வமாக செட்டில்மெண்ட் செய்யப்படவில்லை. வனப் பாதுகாப்புச் சட்டம் 1980—ல் நடைமுறையில் வந்துவிட்டது. இதன் அடிப்படையில் இவர்களை காட்டுப் பகுதியில் வசிக்க அனுமதிக்க இயலாது. மேற்கூறிய காரணங்களினால் இவர்களுக்கு மின் இணைப்பு வசதி செய்து தர மின் வாரியத்திற்குப் பரிந்துரை செய்ய இயலாது.

**175—**

**வனவிலங்கு சரணாலயம்**

**வினா எண் 7378—திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் அய்யனார் கோவிலில் (மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரம்) வனவிலங்குகள் அதிகம் உள்ளதால் அங்கு வனவிலங்கு சரணாலயம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ராஜபாளையம் அய்யனார் கோவில் பகுதி ஏற்கெனவே 1989 ஆம் ஆண்டு அரசினால் சாம்பல் நிற அணில்கள் சரணாலயம் என்று அறிவிப்பு செய்யப்பட்ட, திருவில்லிபுத்தூர் சாம்பல் நிற அணில் சரணாலயத்திற்கு உட்பட்ட பகுதியாகும். எனவே இப்பகுதியை தனியாக பறவைகள் சரணாலயமாக அறிவிக்க அவசியமில்லை.



2003 மே 10]

**176—**

**கழிவுநீர் கடலில் கலப்பதைத் தடுத்தல்**

**வினா எண் 8390—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியிலுள்ள தொழிற்சாலைகளிலிருந்து கழிவுநீர் கடலில் கலப்பதால் கடல்வாழ் உயிரினங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருப்பது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தூத்துக்குடியிலுள்ள தொழிற்சாலையிலிருந்து கழிவுநீர் கடலில் கலப்பதால் கடல்வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் புகார் வந்துள்ளது.

(ஆ) தூத்துக்குடியில் உள்ள திருவாளர்கள் சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், திருவாளர்கள் தூத்துக்குடி அல்காலிக் கெமிக்கல்ஸ் அண்டு பெர்ட்டிலைசர்ஸ் மற்றும் திருவாளர்கள் டி.சி. டபிள்யூ. லிமிடெட் எரிசோடா தொழிற்சாலை ஆகியவை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை கடலில் வெளியேற்றுகின்றன. இவற்றின் தரம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நிர்ணயித்துள்ள தரத்திற்கு உட்பட்டுள்ளது. அதனால் கடல்வாழ் உயிரினங்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. திருவாளர்கள் தூத்துக்குடி அனல்மின் நிலையம் சாம்பல் கழிவுநீர் மற்றும் டர்பைன் நீராவியை குளிர்விக்கும் நீரையும் கடலில் வெளியேற்றுகின்றது. கடலில் வெளியேற்றப்படும் சுடுநீரின் வெப்பநிலை, நிர்ணயிக்கப்பட்ட வெப்பநிலைக்கு உட்பட்டுள்ளது. சாம்பல்நீர் தெளியவைக்கப்பட்டு, பின்னர் கடலில் வெளியேற்றப்படுகிறது. இவற்றின் தரம் வாரியம் நிர்ணயித்த தரத்திற்கு உட்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கூறிய அறிவுரைகளைச் செயல்படுத்த வேண்டுமென சென்னை உயர் நீதிமன்றம் கூறிய தீர்ப்பின்படி தொழிற்சாலை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

[2003 மே 10

**177—**

### கசிவுநீர்க் குட்டை அமைத்தல்

**வினா எண் 8421—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சிவாடு காட்டுவளவு வனப் பகுதியில் ஓடும் நீரோடைகளின் குறுக்கே கசிவுநீர்க் குட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

### அறிக்கை

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சிவாடு காட்டுவளவு; தொப்பூர் காப்புக்காடு வனப்பகுதியில் அமைத்துள்ளது. இப்போது திட்ட வனப்பகுதியாக எடுக்கப்பட்டுள்ள வனப்பகுதி, சிவாடு காட்டுவளவு என்பதாகும். கசிவுநீர்க் குட்டை அமைக்க வனத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு கீழ்க்கண்ட இடங்களில் நான்கு பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

| | | மதிப்பீடு தொகை | தண்ணீர் கொள்ளளவு கன அடியில் |
|---|---|---|---|
| 1. | ஊத்துப்பள்ளம் குறுக்கே தடுப்பணை | ரூ.5.50 இலட்சம் | 12,15,000 |
| 2. | ஈச்சம்பள்ளம் குறுக்கே கசிவு நீர்குட்டை. | ரூ.5.50 இலட்சம் | 20,25,000 |
| 3. | மாமரத்துப்பள்ளம் குறுக்கே ஆஞ்சநேயர் கோயில் அருகில் | | |
| | 1. தடுப்பணை எண் 1 | ரூ.2.05 இலட்சம் | 32,400 |
| | 2. தடுப்பணை எண் 2 | ரூ.2.10 இலட்சம் | 71.400 |



2003 மே 10]

**178—**

### மேய்ச்சல் நிலம்

**வினா எண் 9094—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் மணிமுத்தாறு மலைப் பகுதிகளில் காடுகள் அழியா வண்ணம், அடிவாரப் பகுதிகளில் மாடுகள் மேய்ப்பதற்கு என்று மேய்ச்சல் நிலம் ஒதுக்க அரசு முன்வருமா?

(ஆ) அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாபநாசம் மணிமுத்தாறு மலைப் பகுதிகள் களக்காடு முண்டந்துறை சரணாலயப் பகுதிக்கு உட்பட்டவையாதலால் அவ்விடங்களில் மாடுகள் மேய்ப்பதற்கு மேய்ச்சல் நிலம் ஒதுக்க இயலாது.

**179—**

### கல் குவாரிகள்

**வினா எண் 10102—திரு. பீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வனத் துறைக்குச் சொந்தமான கல் குவாரிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவைகளில் தாம்பரம் தொகுதியில் எத்தனை உள்ளன?

(இ) அவைகளை ஏலம் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழக வனத் துறைக்குச் சொந்தமான கல் குவாரிகள் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**180—**

**பயணியர் தங்கும் விடுதி**

**வினா எண் 10278—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் நீர்வீழ்ச்சி அருகிலுள்ள வனத் துறையின் பயணியர் தங்கும் விடுதி பராமரிக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இதனை சீர்செய்து சிறப்பாகச் செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) தற்போது ஏதுமில்லை.

**181—**

**கருவேல மரங்களைப் பாதுகாத்தல்**

**வினா எண் 10580—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கிராமத்திலுள்ள ஏரிகளில் வனத் துறை மூலம் வளர்க்கப்பட்ட கருவேல மரங்களை வெட்டி விட்டு பயிர் செய்வதை அரசு தடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கிராமத்தில் உள்ள எந்த ஒரு ஏரியிலும், ஆக்கிரமிப்பு செய்து வனத் துறை மூலம் வளர்க்கப்பட்ட மரங்களை வெட்டிவிட்டு பயிர் ஏதும் செய்யப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**182—**

**சந்தன மரங்களைப் பயிரிடுதல்**

**வினா எண் 11996—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வளம் குன்றிய பாறைப் பகுதிகளிலும் வறட்சியான தரிசு நிலங்களிலும் சந்தன மரங்களைப் பயிரிட அரசு சிறப்புத் திட்டங்களை உருவாக்க முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மழை வளம் குறைந்த பகுதிகளில் வளரும் சந்தன மரங்களிலிருந்து கிடைக்கும் பயன் மிகவும் குறைந்து காணப்படும். எனவே, வளம் குன்றிய பாறைப் பகுதிகளிலும் வறட்சியான தரிசு

நிலங்களிலும் சந்தன மரங்களைப் பயிரிட சிறப்புத் திட்டங்களை உருவாக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**183—**

**சந்தன மரம் வளர்க்க ஆலோசனை மையங்கள்**

**வினா எண் 11997—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சந்தன மரத்தின் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு விளக்கி சந்தன மரம் வளர்க்க ஆலோசனை மையங்கள் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சந்தன மரத்தின் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு விளக்கி சந்தன மரம் வளர்க்க ஆலோசனை மையங்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) 15 வன விரிவாக்க மையங்கள் மற்றும் 4 பெரிய வனவியல் விரிவாக்க மையங்கள் அரசால் அமைக்கப்பட்டு, அம்மையங்களில் மரம் வளர்ப்பதில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு மரங்கள் வளர்ப்பது, மரங்கள் வளர்ப்பதால் மண்வளம் மற்றும் நீர்வளம் மேம்படுவது பற்றியும் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் ஆலோசனை மற்றும் பயிற்சி ஆகியவை விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

**184—**

**பூங்கா மற்றும் சாலையோரங்களில் சந்தன மரங்கள்**

**வினா எண் 11998—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சந்தன மரத்தின் இலைகளை ஆடு, மாடுகள் உணவாக உண்பதில்லை என்பதால், பூங்காக்கள் மற்றும் சாலையோரங்களில் இம்மரங்களை வளர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டிலே அமல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சந்தன மரத்தின் இலைகளை ஆடு, மாடுகள் உண்பதால் பூங்காக்கள் மற்றும் சாலையோரங்களில் சந்தன மரங்களை வளர்க்க இயலாது.

(ஆ) இக்கேள்வி எழாது.

**185—**

**பூங்காவை நவீனமயமாக்கும் திட்டம்**

**வினா எண் 12205—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை நவீனமயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வன விலங்குகள் புனர்வாழ்வு மையம் அமைப்பதற்காக 2000-2001 ஆம் ஆண்டு ரூ.181.75 இலட்சம் மத்திய அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி மையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நுழைவு வாயில் அலங்கார வளைவு அமைக்கும் பணிகள், செயற்கை நீரூற்றுகள் அமைக்கும் பணிகள்

[2003 மே 10

போதிய நிதியுதவியுடன் 2002-2003 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது. மேலும், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை நவீனமயமாக்க 2002-2003-ல் பகுதி-I திட்டப் பணிகளில் ரூ.10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு சிங்கம், புலி, சிறுத்தை, காட்டெருமை, காட்டுக் கழுதை போன்றவற்றிற்கு உலாவிடம் அமைக்கவும், சிங்க உலாவிடத்தில் முள்வேலி அமைக்கவும், நீர்வளம் மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**186—**

**விலங்குகளைப் பாதுகாத்தல்**

**வினா எண் 12598—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மைனாக்கள் போன்ற சாதாரண பறவைகள் கூட அரிதாகிப் போன நிலையில் பறவை, விலங்குகளைப் பாதுகாக்க அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

வன உயிரின பாதுகாப்புச் சட்டம், 1972-ன்படி மைனா போன்ற பறவைகள் மற்றும் வனவிலங்குகளை வேட்டையாடுதல் அல்லது சுடுதல் கடுமையான குற்றமாகும். ஆகவே இதற்கு 3 ஆண்டு முதல் 6 ஆண்டு வரை கடுங்காவலோ அல்லது ரூ.5000/-முதல் ரூ.25,000/- வரை அபராதமோ அல்லது இவை இரண்டுமோ வழங்க வகையுள்ளது. மேற்கண்ட சட்டத்தின்படி அனைத்து வன உயிரினங்கள் அரசின் சொத்தாகக் கருதப்பட்டு அவற்றினை அனுமதியின்றி வைத்திருப்பது, வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. சரணாலயம், தேசியப் பூங்காவைச் சுற்றியுள்ள 10 கிலோ மீட்டர் பகுதியில் துப்பாக்கி உரிமம் வழங்குதல் முறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் பறவைகள், விலங்குகளைப் பாதுகாக்க 5 தேசியப் பூங்காக்கள், 19 சரணாலயங்கள், தமிழ்நாட்டில் மொத்த வனப்பரப்பளவில் 12.5 விழுக்காடு பரப்பளவில் ஏற்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.



2003 மே 10]

**187—**

**வன அலுவலர்களுக்கு குடியிருப்பு**

**வினா எண் 13404—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தின் வன அலுவலர்களுக்கு குடியிருப்பு கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வனச்சரக அலுவலருக்கு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது. வனக்காப்பாளர் மற்றும் காவலர்களுக்கு இணைந்த குடியிருப்பு கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவையான 3.67 ஏக்கர் நிலம், பெண்ணாகரம் பேரூராட்சியிலேயே உள்ளது. அரசின் நிதி நிலைமையைப் பொறுத்து வன அலுவலர்களுக்கு குடியிருப்புகள் அமைத்துத் தரப்படும்.

**188—**

**சாலை வசதி**

**வினா எண் 13413—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, ஒட்டனூரிலிருந்து ஏமனூர் வரை சாலை வசதியே இல்லாத வனப்பகுதியில் வனத் துறை மூலம் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பதன்வாடி காப்புக் காட்டுப் பகுதியில் நெருப்பூரிலிருந்து ஏமனூர் வரை 8.0 கி.மீட்டருக்கு அமைந்துள்ள விறகு கூப்புப் பாதை, உரிமைப் பாதையாக அறிவிக்கப்படவில்லை. மேற்குறிப்பிடும் விறகு கூப்புப் பாதையை விரிவுபடுத்தி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள வனப்பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி மைய அரசின் முன் அனுமதி பெறவேண்டும். சம்பந்தப்பட்ட நாகமரை ஊராட்சி ஒன்றியத்திற்கு, நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து பிரேரணை கிடைக்கப்பெற்றதும் வனத் துறை அதனை பரிசீலிக்கும்.

**189—**

**காட்டுவளம் பெருக்குதல்**

**வினா எண் 13416—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி ஒகேனக்கல் வனப்பகுதியில் செயற்கை முறையில் விதை தூவி காட்டுவளத்தைப் பெருக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) செயற்கை முறையில் விதை தூவும் திட்டம் ஏதும் தற்போது அரசின் செயல்பாட்டில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**190—**

**நச்சுப்புகை கட்டுப்படுத்துதல்**

**வினா எண் 13417—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வாகனங்களிலிருந்து வெளிவரும் நச்சுப்புகையை சென்னை போல் பிற மாவட்டங்களிலும் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், போக்குவரத்துத் துறை மற்றும் காவல் துறை ஆகியவற்றுடன் இணைந்து, பிற மாவட்டங்களிலும் வாகனங்களிலிருந்து வெளிவரும் நச்சுப்புகையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

**191—**

**மரங்களை வளர்த்தல்**

**வினா எண் 13427—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஏரிகள், அணைக்கட்டுகள், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரங்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வனத் துறையில் சுவீடன் நாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட சமூகக்காடுகள் வளர்ப்புத் திட்டம் 1996-ம் ஆண்டு மார்ச் மாதத்துடன் நிறைவு பெற்றது. வெளிநாடுகளிலிருந்து நிதியுதவி பெறும் பொருட்டு ஒரு திட்டம் (Externally Aided Project) மாநில அரசு மூலம் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மைய அரசின் மூலம் வெளிநாடுகளிலிருந்து உதவி கிடைத்த பிறகு, அதனைச் செயல்படுத்த மாநில அரசு ஏரி குளங்களில் மரம் நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

192—

### மருத்துவமனைக் கழிவுகள் அகற்றுதல்

**வினா எண் 13453—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவமனைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை சுற்றுச்சூழல் கெடாதவண்ணம் அழிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில்,. எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஐதராபாத் நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் திருவாளர்கள் ஜி.கே. மல்ட்டிக்கிளேன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின்மூலம் காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், தென்மேல் பாக்கம் கிராமத்தில் பொது மருத்துவக் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்பு அமைக்கப்பட்டு வருகின்றது.

193—

### கெம்பிளாஸ்ட் தொழிற்சாலைக் கழிவுநீர் பாதிப்பு நீக்குதல்

**வினா எண் 13454—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் கெம்பிளாஸ்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுநீரினால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினை நீக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேட்டூர் கெம்பிளாஸ்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுநீரை குழாய் மூலம் எடுத்துச் சென்று காவிரி உபரி நீருடன் கலக்கச் செய்வதைத் தவிர்த்து தொழிற்சாலையின் உபயோகத்திற்குப் பயன்படுத்தி படிப்படியாக காவிரி ஆற்று உபரி நீருடன் கலக்கச் செய்வதை நிறுத்த வேண்டும் என்ற தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுரைப்படி தொழிற்சாலை நாளொன்றுக்கு வெளியேற்றி வந்த சுமார் 5000 கி.லி. கழிவுநீரை தற்போது நாளொன்றுக்கு 2530 கி.லி. அளவுக்குக் குறைத்துள்ளது. மேலும் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் திடக்கழிவு தற்போது நீர்க் கசிவு இல்லாத கான்கிரீட் தொட்டிகளில் சேகரித்து மூடப்படுவதால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே பூமியில் கொட்டி வைக்கப்பட்ட திடக்கழிவுகளும் எடுக்கப்பட்டு கான்கிரீட் தொட்டிகளில் கொட்டி மூடப்பட வேண்டும் என்று வாரியம் அறிவுறுத்தியதின்பேரில், தொழிற்சாலை பழைய திடக்கழிவுகளை எடுத்து நீர்க் கசிவு இல்லாத கான்கிரீட் தொட்டிக்கு மாற்றியுள்ளது. தற்போது நிலத்தடி நீர் பாதிப்படைய வாய்ப்பில்லை.

194—

### கழிவு நீரால் ஏற்படும் மாசுபடுதலைத் தடுத்தல்

**வினா எண் 13455—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பாகல்அள்ளி ஊராட்சி, சவுளூர் கிராமத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரினால் ஏற்படும் சுற்றுப்புற மாசுபடுதலைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது? .

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாளர்கள் சித்தேஷ்வரா & கோ என்னும் பால் குளிரூட்டும் நிலையம், வாரியத்தின் இயங்குவதற்கான இசைவாணையினைப் பெறாமல், இயங்கியதால், அதனை மூடுவதற்கான உத்தரவினையும், மின் இணைப்பினைத் துண்டிப்பதற்கான உத்தரவினையும் 28-11-2002 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வழங்கியது. மேற்படி தொழிற்சாலையின் மின் இணைப்பினை மின்சார வாரியம் 18-12-2002 அன்று துண்டித்தது. இந்தத் தொழிற்சாலை தற்போது இயங்கவில்லை.

**195—**

**காடுகள் பாதுகாத்தல்**

**வினா எண் 13485—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியிலுள்ள காடுகள் அழிந்து வரும் நிலையில் உள்ளதால், சமூகக் காடுகள் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் காடுகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் தொகுதியில் காடுகளைப் பாதுகாக்க சமூகக் காடுககள் பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரில் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும் பெண்ணாகரம் தொகுதியிலுள்ள காப்புக் காடுகள் அனைத்தும் தக்க பாதுகாப்புடன் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றன. இத்தொகுதியினைச் சார்ந்த



2003 மே 10]

வனத்தையொட்டி அமைந்துள்ள கிராமங்கள் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு அவற்றினை ஒட்டிய காப்புக் காடுகள் பகுதியில் தோட்டங்கள் வளர்த்தல், மண் அரிப்பைத் தடுக்க மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் நீர்வளத்தைப் பெருக்க கழிவுநீர்க் குட்டை, தடுப்பணைகள் கட்டுதல் போன்ற பணிகள் 1997-98 முதல் 2001-2002 வரை மேற்கொள்ளப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வன வளம் சிறப்பான முறையில் பேணப்பட்டு வருகிறது.

**196—**

**ஏரி தூர்வாரும் பணி**

**வினா எண் 14475—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காடு ஏரியில் தூர்வாரும் பணியைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஏற்காடு ஏரியில் தூர்வாரும் பணியை வரும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**197—**

**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்**

**வினா எண் 14737—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி பகுதியிலுள்ள சாயப்பட்டறைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் சுத்திகரிக்க முன்மாதிரி சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவ அரசு முன்வருமா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

முழுச் செலவையும் அரசே ஏற்று முன்மாதிரி சுத்திகரிப்பு நிலையம் நிறுவ அரசு திட்டம் ஏதுமில்லை.

**198—**

**கெமிக்கல் மில் மாசுபடுதலைக் கட்டுப்படுத்துதல்**

**வினா எண் 15040—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர், திருவாங்கூர் கெமிக்கல்ஸ் மில்லில் இருந்து அதிகமான அளவில் சாம்பல் பரவுவதால் மாசு ஏற்படுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அதிக அளவில் சாம்பல் பரவுவதைத் தடுக்க திருவாங்கூர் மில்லில் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி அறியும்பொருட்டு 18-7-2002 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆய்வு செய்ததில் கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பது அறியப்பட்டது:

1. சாம்பல் சேமித்து வைக்குமிடம் ஒழுங்குபடுத்தப்பட்டு ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளால் ஆன தடுப்பு எழுப்பப்பட்டுள்ளது.

2. தண்ணீர் சுழல் தெளிப்பான் சாதனங்கள் இரண்டு பொருத்தப்பட்டு இயங்கிவருகிறது. இதனால் சேமித்து வைக்கப்பட்டுள்ள சாம்பல் ஈரமாக இருப்பதால் காற்றில் பரவுவது வெகுவாகத் தடுக்கப்பட்டுள்ளது.





3. இதுவரை சேமித்து வைத்துள்ள சாம்பலை அருகிலுள்ள கிராம விவசாயிகளுக்கு உரமாகப் பயன்படுத்துவதற்கு வழங்கப்படுகின்றது.

4. தொழிற்சாலையிலிருக்கும் இரு கொதிகலன்களில் ஒன்றிற்கு துகள் சேகரிப்பான் மற்றும் தண்ணீர் மூலம் புகையினை சுத்தப்படுத்தும் சாதனமும் பொருத்தப்பட்டு இயங்கி வருவது அறியப்பட்டது. மற்றொரு கொதிகலனுக்கும் புகையினை சுத்தப்படுத்தும் (ஸ்கிரப்பர்) சாதனம் பொருத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட நடவடிக்கைகளால் தொழிற்சாலையிலிருந்து அதிக அளவில் சாம்பல் பரவி மாசு ஏற்படுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**199—**

**தொழிற்சாலைக் கழிவுநீரால் மாசு அடைவதைத் தடுத்தல்**

**வினா எண் 16360—திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், மைக்கேல் நாயக்கன்பட்டி கிராமம், அன்னம் கெமிக்கல்ஸ் தொழிற்சாலை கழிவுநீரால் நிலத்தடி நீர் மாசு அடைவதால் அத்தொழிற்சாலை வேறு இடத்திற்கு மாற்றப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், மைக்கேல் நாயக்கன்பட்டி கிராமத்திலுள்ள திருவாளர்கள் அன்னம் கெமிக்கல்ஸ் தொழிற்சாலை தனது உற்பத்தி முறையில் கழிவுநீர் வெளியேறாவண்ணம் மாற்றி அமைத்துள்ளதால், தற்போது கழிவுநீர் வெளியேற்றமில்லை. ஆகையால் நிலத்தடி நீர் மாசுபட வாய்ப்பில்லை. எனவே, இத்தொழிற்சாலையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

200—

## சர்க்கரை ஆலைக் கழிவுநீரால் மாசுபடுதலை தூய்மைப்படுத்துதல்

**வினா எண் 16522—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், காடாகுடி கிராமத்திற்கு அருகில் ஓடும் ஆற்றில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி சர்க்கரை ஆலையின் கழிவுநீர் கலப்பதால் மாசு ஏற்பட்டுள்ளதை தூய்மைப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

### அறிக்கை

(அ) மற்றும் (ஆ) நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேற்றப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் 13-4-2002 முதல் தொழிற்சாலை வளாகத்தில் உள்ள விவசாய நிலத்தில் தேக்கி வைக்கப்படுகிறது. தேங்கியிருந்த கழிவுநீரை எடுத்து தொழிற்சாலை அதன் பொறுப்பில் சுத்திகரிப்பு செய்து முழுவதையும் விவசாயத்திற்குப் பயன்படுத்தவேண்டும் என்றும் இதனை 10 நாட்களுக்குள் முடிக்க வேண்டும் என்றும் சர்க்கரை ஆலைக்கு 12-7-2002 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆணை பிறப்பித்தது. அதன்படி, தொழிற்சாலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை விவசாயத்திற்கு பயன்படுத்த 24 ஏக்கர் நிலத்தை பயன்படுத்தி வருகின்றது. கரும்பு அரவை பருவம் இல்லாததால் சர்க்கரை ஆலை தற்போது இயக்கத்தில் இல்லை. கடந்த அரவை பருவத்தில் தலைஞாயிறு வாய்க்காலில் வெளியேற்றப்பட்டு தேங்கியிருந்த சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் அகற்றப்பட்டுவிட்டது.



## பட்டியல் 30

1—

### ஆழ்குழாய் அமைத்தல்

**வினா எண் 12075—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மலையன்குளம் ஊராட்சிக்கு உட்பட்ட அரிசன காலனி வடக்குத் தெருவில் ஆழ்குழாய் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, மலையன்குளம் ஊராட்சிக்குட்பட்ட அரிசன காலனி வடக்குத் தெருவில் 2001-2002 ஆம் நிதியாண்டில் ஒரு கையிறைப்பான் (ஆழ்துளைக் கிணறு) அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே அத்தியாவசிய தேவைக்கு போதுமானதாகும். இத்தெருவிற்கு தனியாக ஆழ்குழாய் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

2—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 12078—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, அ.பெ. நாடானூர் ஊராட்சி, சிவஞானபுரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, ஏ.பி. நாடானூர் பஞ்சாயத்து, சிவஞானபுரம் கிராமத்திற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படவுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு உள்ளது. இத்திட்டம் ஜூலை 2003-க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12080—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, கோவிலூத்து கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, வெங்கடாம்பட்டி ஊராட்சி, கோவிலூத்து குடியிருப்பில் தற்போது 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.



4—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12081—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், அ.பெ. நாடானூர் ஊராட்சி, அ.பெ. நாடானூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, அ.பெ. நாடானூர் ஊராட்சி கிராமத்திற்கு 2001-2002 நிதியாண்டில் ரூ. 9.93 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்கெனவேயுள்ள நீருறிஞ்சுக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

5—

### சொக்கலிங்கபுரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12082—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், அ.பெ. நாடானூர் ஊராட்சி, சொக்கலிங்கபுரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, அ.பெ. நாடானூர் பஞ்சாயத்து, சொக்கலிங்கபுரம் கிராமத்திற்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படவுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஜூலை 2003-க்குள் முடிக்க காலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**6—**

**வடமலைப்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 12083—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வெங்கடாம்பட்டி ஊராட்சி, வடமலைப்பட்டி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, வடமலைப்பட்டி குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்புடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான பணிகள் முன்னேற்றத்திலுள்ளது.



2003 மே 10]

**7—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 12086—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வெங்கடாம்பட்டி பஞ்சாயத்து ஒன்றியம், மைலாபுரம் கிராமத்திற்கு பழைய நீர்த்தேக்கத் தொட்டி இடிக்கப்பட்டுள்ளதால், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி பஞ்சாயத்து, மைலாபுரம் குடியிருப்பிற்கு ரூ.4.73 இலட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**8—**

**தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 12093—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, தெற்கு மடத்தூர் பஞ்சாயத்து ஒன்றியம், இராமநாதபுரம் கிராமத்திற்கு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, இராமநாதபுரம் குடியிருப்பிற்கு 2001-2002 நிதியாண்டில் சிறிய மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு பயனில் உள்ளது. மேலும், ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் கடனா ஆற்றுநீர் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளது.

9—

### தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12094—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வெங்கடாம்பட்டி பஞ்சாயத்து ஒன்றியம், சிவஞானபாண்டியபுரம் கிராமத்திற்கு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, சிவஞானபாண்டியபுரம் குடியிருப்பிற்கு வெங்கடாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பண்டாரகுளம் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு அதிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இங்கு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்ட தேவையில்லை.



10—

### தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 12095—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வெங்கடாம்பட்டி பஞ்சாயத்து ஒன்றியம், வெங்கடாம்பட்டி காமராஜ் நகரில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, காமராஜ் நகர் குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் சிறு மின்விசைத் திட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

11—

### தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 12096—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வெங்கடாம்பட்டி பஞ்சாயத்து ஒன்றியம், இராஜா குடியிருப்பு கிராமத்திற்கு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, இராஜா குடியிருப்பிற்கு வெங்கடாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குழாய் நீட்டிப்பு செய்து அத்தியாவசிய தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. இக்குடியிருப்பிற்கு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

12—

**குடிநீர்**

**வினா எண் 12151—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, பாப்பாக்குடி ஒன்றியம், மருதம்புத்தூர் கிராமத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், மருதம்புத்தூர் கிராமத்தில் மருதம்புத்தூர் குடியிருப்பிலுள்ள 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்றுநீர் விநியோகம் செய்யப்படுகிறது. புதிதாக கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஆழ்குழாய் கிணற்று நீர் ஏற்றி விநியோகம் செய்யப்படுகிறது. ஆற்று நீரை



குடிப்பதற்கும், ஆழ்குழாய் கிணற்று நீரை இதர தேவைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் பெறப்படும் நீரை புதிதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றவேண்டிய அவசியம் எழவில்லை.

13—

**வணிக வளாகம்**

**வினா எண் 12206—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் நகரின் மையத்திலுள்ள வனக்கல்லூரி சுற்றுச்சுவர் ஓரங்களில் வணிக வளாகம் கட்டும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் நகரின் மையத்திலுள்ள வனக்கல்லூரி சுற்றுச்சுவர் ஓரங்களில் வணிக வளாகம் கட்டும் கருத்துருக்கள் தற்போது இல்லை.

14—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 12614—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிபாளையம் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அங்குசெட்டிபாளையம் கிராமத்திலுள்ள 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் நல்ல முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கிராமத்தின் மேடான பகுதிகளுக்கு குடிநீர் செல்லாததாலும், மக்கள் தொகை அதிகமாக உள்ளதாலும், மக்கள் பங்களிப்புடன் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் அமைக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**15—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 12696—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழுமங்குடாவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மறக்காவலசை ஊராட்சியில் உள்ள கழுமங்குடா குடியிருப்பிற்கு 2000 ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே இக்குடியிருப்பிற்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**16—**

**நாடாகாடில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 12698—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சி, நாடாகாடு பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சி, நாடாகாடு குடியிருப்பிற்கு 2000-2001 ஆம் ஆண்டு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இக்குடியிருப்பிற்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

**17—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 12705—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பழைய நகரம் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பழைய நகரம் ஊராட்சியைச் சார்ந்த பழைய நகரம், ஜீவன் குறிச்சி மற்றும் தொண்டு புலிக்காடு ஆகிய குடியிருப்புகளுக்கும் 1999-ம் ஆண்டு குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இக்குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது பரிசீலனையில் இல்லை. ஆற்றங்கரை குடியிருப்புக்கு வரும் நிதியாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

18—

மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி

**வினா எண் 12706—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துறையூர் ரெகுநாதபுரம் ஊராட்சியில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

19—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 12707—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கருப்பட்டிக்காடு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

20—

மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 12718—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கங்காதரபுரம் ஊராட்சியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கங்காதரபுரம் ஊராட்சியில் உள்ள பாலசேரிக்காடு, கோட்டைக்காடு, ஓமவயல், குண்டாமரைக்காடு, விளக்கு வெட்டிக்காடு மற்றும் கொல்லங்கரம்மை ஆகிய ஆறு குடியிருப்புகளுக்கும் முறையே 1991, 1993, 1999, 2000 மற்றும் 2001-ம் ஆண்டுகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே கங்காதரபுரம் ஊராட்சியில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

21—

கழுமங்குடாவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12728—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழுமங்குடாவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழுமங்குடா குடியிருப்பிற்கு 2000 ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கத் தேவை இல்லை.

[2003 மே 10

22—

**செங்கொல்லையில் மேல்நிலைத் தொட்டி**

**வினா எண் 12742—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பேராவூரணி பேரூராட்சி, செங்கொல்லையில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சி, செங்கொல்லைக்கு பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட பேரூராட்சியில் இடவசதி மற்றும் நிதி வசதி இல்லாததால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

23—

**புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 12752—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், தென்னங்குடி கிராம ஆதிதிராவிடர் தெருவில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.



2003 மே 10]

24—

**புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 12755—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியங்கோட்டை ஊராட்சி, சாமியத்தோப்பு பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

25—

**இலவசத் தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 12829—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, கே. ஆலம்பாடி கிராமத்தில் உள்ள ஏழை எளிய ஆதிதிராவிடர்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் நிதி ஆண்டில் புவனகிரி தொகுதி கே. ஆலம்பாடி ஊராட்சிக்கு 10 (பத்து) தொகுப்பு வீடுகள் தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

26—

### மேல்நிலைத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 13230—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூசாரிப்பட்டி ஊராட்சியில் அ. நால்ரோட்டில் மேல்நிலைத் தொட்டி கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றித் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பூசாரிப்பட்டி ஊராட்சி அ.நால்ரோடு குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 100 மட்டுமே இருக்கும் காரணத்தினால், ஒரு சிறு மின்விசைத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டப் பணிகளை விரைவில் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

27—

### குடிநீர் வசதி

**வினா எண் 13233—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தலைவாசல் கவுண்டன்புதூருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றித் தரப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், தங்கச்சியம்மாபட்டி ஊராட்சி, தலைவாசல் கவுண்டன்புதூருக்கு 2002-03-ஆம் நிதியாண்டில் விசைபம்பு திட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நீராதாரம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை இவ்வாண்டில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

28—

### மேல்நிலைத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 13237—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மார்க்கம்பட்டி ஊராட்சி, மார்க்கம்பட்டியில் புதிதாக அமைந்துள்ள ஆதிதிராவிடர் காலனிக்கு மேல்நிலைத் தொட்டி கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றித் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், மார்க்கம்பட்டி ஊராட்சியில் மார்க்கம்பட்டி ஆதிதிராவிடர் காலனியில், உள்ளாட்சியினரால் உருவாக்கப்பட்ட இரு ஆழ்துளைக் கிணறுகளில் போதிய நீராதாரம் இல்லாததால், புதிய நீராதாரம் அமைத்து, இக்காலனிக்கு முன்னுரிமை அடிப்படையில் புதிய திட்டம் செயல்படுத்த தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2003 மே 10

29—

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 13245—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை நிறைவேற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதிக்கு தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 1983ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டம் பயனில் உள்ளது. மேலும், பேரூராட்சி மூலம் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு பயனில் உள்ளது. தற்போது வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக உள்ளதால் இப்பேரூராட்சிக்குப் புதிய குடிநீர்த் திட்டம் குறித்த கருத்துரு பரிசீலனையில் இல்லை.

30—

**குளம், ஏரி அமைத்தல்**

**வினா எண் 13248—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதியில் மழைநீர் சேமிக்க புதிய குளம், ஏரி அமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

31—

**நகராட்சியாகத் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 13360—திரு ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், நடப்பாண்டில் தரம் உயர்த்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த அதற்கான நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு வருமானத்திற்குக் கீழ் உள்ளதால், பெண்ணாகரம் பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த இயலாது.

32—

**கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி**

**வினா எண் 13534—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தலவாடியிலிருந்து வையம்பட்டி வரையுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணி எப்போது துவங்கும்?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டத்தைச் சார்ந்த கிருஷ்ணராயபுரம் தொகுதியிலுள்ள கடவூர் மற்றும் கிருஷ்ணராயபுரம் ஒன்றியங்களிலுள்ள 248 மற்றும் 20 குடியிருப்புகள் முறையேயும், திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதியைச் சார்ந்த வையம்பட்டி ஒன்றியத்திலுள்ள 261 குடியிருப்புகள், ஆக மொத்தம் 529 குடியிருப்புகள் பயனுறும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பதற்கான ஆய்வு தொடர்பான களப் பணிகள் முடிக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்டு திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

33—

**உதவித் தொகையை உயர்த்துதல்**

**வினா எண் 13586—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வசித்து வரும் ஏழை எளியவர்களின் வீடுகள் மழைக் காலத்தில் பாதிக்கப்படும்போது வீடு கட்ட பழுது பார்க்கக் கொடுக்கும் ரூபாய் 1000/- உதவித் தொகையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் வசித்து வரும் ஏழை எளியவர்களின் வீடுகள் மழைக் காலத்தில் பாதிக்கப்படும்போது வீடு கட்ட, பழுது பார்க்கக் கொடுக்கும் ரூபாய் 1000/- உதவித் தொகையை உயர்த்தும் நடவடிக்கைகள், பேரூராட்சிகள் துறை சார்ந்தது அல்ல.

(ஆ) வினா எழவில்லை.



34—

**தொகுப்பு விடுகள்**

**வினா எண் 13587—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் மேல் பகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் மேல் பகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர கருத்துரு ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

35—

**தொகுப்பு விடுகள் கட்டுதல்**

**வினா எண் 13624—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதி, விளாத்திக்குளத்தில் அருந்ததியர் காலனியில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[2003 மே 10

36—

**அருந்ததியர் காலனிக்குத் தொகுப்பு விடுகள்**

**வினா எண் 13628—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, நெருப்பூரான் கொட்டாய் அருந்ததியர் காலனிக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் கடந்த 1996-97 முதல் 1999-2000 வரை 4 ஆண்டுகளில் மொத்தம் 46 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இவற்றில் நெருப்பூரான் கொட்டாயின் அருந்ததியர் காலனியில் 13 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

37—

**இலவசத் தொகுப்பு விடுகள்**

**வினா எண் 13643—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கம்பட்டியில் வசிக்கும் அருந்ததியோருக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பிக்கம்பட்டி கிராமம் அடங்கிய பிலியனூர் ஊராட்சியில் வசிக்கும் 7 அருந்ததியர்களில்



2003 மே 10]

ஒருவருக்கு மட்டுமே பட்டா உள்ளதால், தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க தற்போது வாய்ப்பு இல்லை.

38—

**சோடியம் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 14969—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட முக்கிய சந்திப்புகளில் கூடுதலாக சோடியம் விளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் பேரூராட்சிக்கு உட்பட்ட முக்கிய சந்திப்புகளில் கூடுதலாக சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

39—

**திருமண மண்டபம் அமைத்தல்**

**வினா எண் 15201—திரு. அ. சிவபெருமான்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கழுகு மலை சிறப்பு நிலைப் பேரூராட்சியில் ஒரு திருமண மண்டபம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

40—

### குடிநீர் வசதி

**வினா எண் 15593—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், ஆனைகுடி ஊராட்சி 4-வது வார்டு பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்திட புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், ஆனைகுடி ஊராட்சி 4-வது வார்டு, ஆனைகுடி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். ஆனைகுடி குடியிருப்பிற்கு தற்போதுள்ள குடிநீர்த் திட்டங்கள் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்க கருத்துரு இல்லை.

41—

### தொகுப்பு விடுகள் கட்டும் திட்டம்

**வினா எண் 15704—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, புதுப்பட்டு கிராமம், மேட்டுத் தெருவில் வசிக்கும் நலிந்த குடும்பங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் புதுப்பட்டு கிராமம், மேட்டுத் தெருவில் வசிக்கும் நலிந்த குடும்பங்களுக்கு 2002-2003 ஆம் நிதியாண்டில் 5 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.



42—

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 15938—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், சிதம்பராபுரம் கிராமத்தில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், சிதம்பராபுரம் கிராமத்தில் 2001-2002 நிதியாண்டில் ரூ.6.40 இலட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே மேலும் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் பரிசிலனையில் இல்லை.

43—

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 15942—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், அடங்கார்குளம் ஊராட்சி, சண்முகாபுரம் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுத்து குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், அடங்கார்குளம் ஊராட்சி, சண்முகாபுரம் கிராமம், தற்பொழுது

[2003 மே 10

செயலாக்கத்தில் உள்ள நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பயன்பெற உள்ளது.

**44—**

**குடிநீர்**

**வினா எண் 15944—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரி ரெங்காபுரம் ஊராட்சி, வடசேரி காலனி பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கஸ்தூரி ரெங்காபுரம் ஊராட்சி, வடசேரி காலனியில் தற்போதைய மக்கள் தொகை மிகக் குறைவாக உள்ளதால் கையிறைப்பான் போதுமானதாகும். எனவே, வேறு திட்டம் செயல்படுத்த கருத்துரு இல்லை.

**45—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 15946—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, வண்ணார்குளம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கி குடிநீர் பிரச்சனையை தீர்த்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வண்ணார்குளம் குடியிருப்புக்கு இருக்கன்துறை குடியிருப்பிலுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய்



2003 மே 10]

நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்கப்படுகிறது. நாங்குநேரி திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்றுநீர் மேற்படி தொட்டியில் ஏற்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வரும் நிதி ஆண்டுகளில் இக்குடியிருப்புக்கு தகுதி, தேவை மற்றும் நிதியாதார அடிப்படையில், குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

**46—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 15950—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, வண்ணார்குளம் ஆதிதிராவிட காலனியில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, வண்ணார்குளம் ஆதிதிராவிட காலனி வண்ணார்குளம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் சிறிய மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**47—**

**ஜெயமாதாபுரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 15954—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், லெவிஞ்சிபுரம் ஊராட்சி, ஜெயமாதாபுரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், லெவிஞ்சிபுரம் ஊராட்சி ஜெயமாதாபுரம் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (2002-03) புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

48—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 15958—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அணைக்கரை அரிசன காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கிட அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அணைக்கரை அரிசன காலனி என்பது அணைக்கரை குடியிருப்பின் பகுதியாகும். திறந்தவெளிக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

49—

## கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 15961—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தணக்கர்குளம் ஊராட்சி, கோயியான் குளம் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி கொடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தணக்கர்குளம் ஊராட்சி, கோயியான் குளம் குடியிருப்பிற்கு நடப்பு நிதி ஆண்டில் சிறிய மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

50—

## ஆய்வுப் பிரிவு தலைமையிடம்

**வினா எண் 16352—திரு. சே. இராசேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் பிரதான குடிநீர்த் திட்டமாகிய சுமார் 400 கிராமங்களை இணைக்கும் ஆய்வுப் பிரிவு தலைமையிடத்தை பாளையங்கோட்டையிலிருந்து விருதுநகருக்கு மாற்றுவதை அரசு கைவிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திட்டம் ஏதுமில்லை.

51—

## கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்தல்

**வினா எண் 16401—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சிக்குட்பட்ட பாளைவிளை, பஞ்சல் ஆகிய கிராமங்களை தாமிரபரணி-ராதாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சிக்குட்பட்ட பாளைவிளை கிராமத்திற்கு நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் இருக்கன்துறையில் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகின்றபடியால், பஞ்சல் கிராமத்தை மேற்கண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்ப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**52—**

**பாலம் புதுப்பித்தல்**

**வினா எண் 17224—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சி, தேவதாஸ் சாலை குறுக்கே ஆனந்தவல்லிபுரம் வாய்க்காலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்துத் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சி, தேவதாஸ் சாலை குறுக்கே ஆனந்தவல்லிபுரம் வாய்க்காலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்துத் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

**53—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்**

**வினா எண் 17323—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க. உவரி ஊராட்சி, கீழஉவரி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கீழஉவரி கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் (2002-2003) பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

**54—**

**புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 17328—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குமாரபுரம் ஊராட்சி, வாழைத்தோட்டம் கிராமத்திற்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், குமாரபுரம் ஊராட்சியில் வாழைத்தோட்டம் கிராமத்திற்கு 2001-2002 நிதியாண்டில் ரூ.4.99 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்குழாய்க் கிணற்று நீராதாரத்துடன் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

55—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 17353—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரம் ஊராட்சி, சட்டனேரி முத்து நாடார் குடியிருப்பு கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், சமூகரெங்கபுரம் ஊராட்சி, கட்டனேரி முத்து நாடார் குடியிருப்புகளின் குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு, வரும் நிதியாண்டில் தகுதி மற்றும் தேவை அடிப்படையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றுவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

56—

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 18207—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி வட்டம், வேணுகோபாலபுரம் காலனியில் வசிக்கும் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம், வேணுகோபாலபுரம் காலனியில் 2001-2002 ஆம் ஆண்டில் 10 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.



57—

## சாலை சீர் செய்தல்

**வினா எண் 18990—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதியில் உள்ள எண்ணூர் கத்திவாக்கம் நகராட்சிக்கு உட்பட்ட கடற்கரை சாலையில் அமைந்துள்ள பெரியகுப்பம் சாலையை சீர்செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதியில் எண்ணூர் கத்திவாக்கம் கடற்கரை சாலையில் அமைந்துள்ள பெரியகுப்பம் சாலை எண்ணூர் பவுண்டரிக்கு சொந்தமான இடமாகும். இச்சாலை நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டால் அதனைச் சீர்செய்ய நகராட்சி நடவடிக்கை எடுக்கும்.

58—

## கடைகள் அமைத்தல்

**வினா எண் 19189—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரில் பழைய பேருந்து நிலையத்திலுள்ள பயணிகள் தங்குமிடத்தைப் பழுதுபார்த்து, காலியாக உள்ள இடத்தில் கடைகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) குடியாத்தம் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குமிடத்தில் பழுது பார்க்க வேண்டிய பணிகள் எதுவும் தற்போது இல்லை. பழைய பேருந்து நிலையத்தில் காலியாகவுள்ள இடத்தில் கடைகள் கட்டும் திட்டம் இல்லை.

(ஆ) எழவில்லை.

**59—**

**சுகாதார அலுவலர்கள்**

**வினா எண் 19196—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர், தேநீர் கடைகளில் தேநீர் அருந்தும் டம்ளர்களை சுடுநீரில் சுத்தம் செய்து தேநீர் வழங்க நகராட்சியிலுள்ள சுகாதார அலுவலர்கள் ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்வார்களா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள தேநீர் கடைகளில் தேநீர் அருந்தும் டம்ளர்களை சுடுநீரில் சுத்தம் செய்து வழங்க தேநீர் கடை உரிமையாளர்களுக்கு பொது சுகாதார சட்டத்தின் அடிப்படையில் அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்நகராட்சி சுகாதார அலுவலர்களால் அவ்வப்போது ஆய்வு செய்து கண்காணிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**60—**

**ஒத்தப்பாறையில் நிரந்தரக் குடிநீர்**

**வினா எண் 19605—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், வேப்பனூத்து பஞ்சாயத்து, ஒத்தப்பாறைபட்டிக்கு நிரந்தர குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், வேப்பனூத்து கிராமம், ஒத்தப்பாறைப்பட்டியில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

**61—**

**குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிவர்த்தி**

**வினா எண் 19624—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், சடச்சிப்பட்டி பஞ்சாயத்தில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிவர்த்தி செய்து தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், சடச்சிப்பட்டி பஞ்சாயத்தில், ஆழ்குழாய் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு புதிய மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருவதால் குடிநீர்த் தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**62—**

**கூடுதல் கடைகள் மற்றும் மிதிவண்டி நிறுத்தம்**

**வினா எண் 20577—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் சந்தைகளில் மின்விளக்கு வசதி செய்திடவும், கூடுதல் கடைகள் கட்டிடவும், மிதிவண்டி நிறுத்தம் அமைத்தும் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் சந்தையில் உள்ள கடைகளுக்கு நகராட்சியால் ஏற்கெனவே மின்விளக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. சந்தையைச் சுற்றி காலி இடங்கள் இல்லாத காரணத்தால் கூடுதல் கடைகள் மற்றும் மிதிவண்டி நிறுத்தம் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**63—**

**குடிதண்ணீர் வசதி**

**வினா எண் 22533—திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி தொகுதி, சின்னமனூர் நகராட்சியில் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சின்னமனூர் நகராட்சியில் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க ரூ.3.03 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) இப்பணிகள் 2003 ஆம் ஆண்டுக்குள் முடிவடையும்.

**64—**

**மழை நீர் சேகரிப்பு அமைப்பு**

**வினா எண் 22985—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாநகராட்சி, மண்டல அலுவலகங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) இல்லையெனில், அமைப்பு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மழைநீர் சேகரிப்பு வடிவமைப்பு சேலம் மாநகராட்சியின் மைய அலுவலகம் மற்றும் நான்கு மண்டல அலுவலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**65—**

**கடன் வசதி**

**வினா எண் 23031—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஐ.ஆர்.டி.பி. கடனுதவி வழங்கும் திட்டத்தை கடந்த ஆட்சி நிறுத்தி விட்டதை ஐ.ஆர்.டி.பி. திட்டமாகவோ அல்லது விவசாயிகள் கடன் பெறும் வகையில் வேறு திட்டமாகவோ செயல்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஐ.ஆர்.டி.பி. திட்டம் மைய அரசால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். மைய அரசுதான், ஐ.ஆர்.டி.பி. டிரைசம், டோக்ரா, சிட்ரா, மில்லியன் கிணறுகள் திட்டம், கங்கா கல்யாண் யோஜனா போன்ற திட்டங்களை ஒருங்கிணைத்து 1-4-1999 முதல் பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி அத்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. மைய அரசு அறிமுகப்படுத்தும் திட்டத்தில் மாநில அரசு மாற்றம் செய்ய இயலாது. எனவே, இது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

66—

### தண்ணீர்த் தொட்டி பழுதுபார்த்தல்

**வினா எண் 23342—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, சக்கரப்பநாயக்கனூர் பஞ்சாயத்து, எஸ். கிருஷ்ணாபுரம் தரைமட்ட தண்ணீர் தொட்டி பழுதடைந்து சுகாதார கேடு உருவாகும் நிலை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சரி செய்யப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி, சக்கரப்பநாயக்கனூர் பஞ்சாயத்து, எஸ். கிருஷ்ணாபுரம் தரைமட்ட தண்ணீர் தொட்டி சரி செய்யப்பட்டு நல்ல நிலையில் மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

67—

### நியாய விலைக் கடைகள் கட்டுதல்

**வினா எண் 23362—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நியாயவிலைக் கடைகள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி கூட்டுறவு நிறுவனங்களின்படி கூட்டுறவு நிறுவனங்களின்கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகள் கட்ட வழிவகையில்லை.



(ஆ) இக்கேள்வி எழாது.

68—

### இலவச தொகுப்பு வீடுகள்

**வினா எண் 23583—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், அல்லிகுண்டம் பஞ்சாயத்திற்கு இலவச தொகுப்பு வீடுகள் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், அல்லிகுண்டம் ஊராட்சியில் 2001-2002 ஆம் ஆண்டு பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தில் 10 ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த ஊரக குடியிருப்புத் திட்டத்தில் 10 ஆதிதிராவிடர் மற்றும் 5 இதர வகுப்பினர் ஆக மொத்தம் 15 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ஊராட்சி தேர்வு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

69—

### நிபந்தனைகளைத் தளர்த்துதல்

**வினா எண் 24333—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் நிதியைப் பயன்படுத்த அரசின் நிபந்தனைகளைத் தளர்த்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மாநகராட்சி பகுதிகளில் உள்ள சட்டமன்ற தொகுதிகள் உட்பட தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யும் பணிகளை இத்திட்டச் செயலாக்க வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, இத்திட்ட வழிகாட்டி நெறிமுறைகளை இந்த நிதியாண்டில் தளர்வு செய்ய வாய்ப்பேதும் இல்லை.

**70—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 28481—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் யூனியனில் வடக்கு கழுநீர் குளத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம் வடக்கு கழுநீர்குளம் பகுதிக்கு தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**71—**

**வாகன வசதி**

**வினா எண் 16653—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சீர்காழியிலுள்ள வன சரக அலுவலகத்திற்கு சொந்தமாக வாகன வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் வனக்கோட்டத்தில் சீர்காழி வனச்சரகம் நான்கு வனப்பிரிவுகளைக் கொண்டதாகும். இச்சரகம் 89715 எக்டேர் பரப்பளவும், இதில் 1226 எக்டேர் பரப்பளவு காப்புக் காடுகளைக் கொண்டதாகவும் சுமார் ரூ.75 கோடி மதிப்புள்ள தேக்கு/சிசு மரங்களையும் சவுக்கு மரங்களையும் கொண்டதாக உள்ளது. சீர்காழி வனப்பகுதியில் உள்ள வனச்செல்வங்களைப் பாதுகாக்க தஞ்சாவூர் மாவட்ட வன அலுவலரின் கட்டுப்பாட்டில் இரண்டு கூடுதல் ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இச்சரகப் பகுதியில் மரம் வெட்டுதல், மரம் கடத்தல் போன்ற குற்றங்கள் நடைபெறா வண்ணம் பாதுகாக்க திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வனப் பாதுகாப்புப் படை இயங்கி வருகிறது. இந்த வனப் பாதுகாப்புப் படை அவ்வப்போது ரோந்துப் பணிகளில் ஈடுபடுவதால் இச்சரகத்தில் வனப் பாதுகாப்புப் பணி மேலும் தீவிரமாக்கப்படுகிறது. வனப் பாதுகாவலர் திருச்சி மற்றும் மாவட்ட வன அலுவலர், தஞ்சாவூர் கட்டுப்பாட்டில் போதுமான எண்ணிக்கையில் வாகனங்கள் உள்ளதால் எந்த நேரத்திலும் சீர்காழி வனச்சரக பாதுகாப்புப் பணிக்கு தேவைக்கேற்ப வாகனங்கள் அனுப்பப்படும்.

**72—**

**வனத் துறை அலுவலக சொந்தக் கட்டடம்**

**வினா எண் 16654—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) சீர்காழி நகரத்திலுள்ள சீர்காழி சரக வனத் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் வனக் கோட்டத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சீர்காழி வனச்சரக அலுவலகம் தனியார் கட்டடத்தில் 28-ஏ வாய்க்கால் கரை தெரு, சீர்காழி என்ற விலாசத்தில் இயங்கி வருகின்றது. வன விதித் தொகுப்பு பிற்சேர்க்கை 36-ல் வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி மேற்படி சரக கட்டடத்திற்கு மாத வாடகையாக ரூ.750/- வீதம் வனப் பாதுகாவலரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சீர்காழியைச் சுற்றியுள்ள பகுதிகளில் வனத் துறைக்குச் சொந்தமான கட்டடம் கட்டுவதற்கு ஏற்ற நிலம் ஏதும் இல்லாத காரணத்தால் அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**73—**

**நீர் மாசுபடுவதைத் தடுத்தல்**

**வினா எண் 17817—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, திருநீர்மலை பெரிய ஏரியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் மெப்ஸ் பகுதியில் இருந்து வரும் கழிவுநீர் கலப்பதால் நீர் மாசுபட்டு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதியில் அமைந்துள்ள தோல் தொழிற்சாலைகள் கழிவுநீர் திருநீர்மலை பெரிய ஏரியில் கலப்பதில்லை. மெப்ஸ் பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் திருநீர்மலை பெரிய ஏரியில் கலப்பதைத் தடுக்க கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, சுத்திகரிக்கப்படும் கழிவுநீரை தங்களது வளாகத்திற்குள்ளேயே பாசனத்திற்குப் பயன்படுத்துமாறு மெப்ஸ் அதிகாரிகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

**74—**

**கழிவு நீரை வேறு இடம் தேக்கி வைத்தல்**

**வினா எண் 18498—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதிக்குட்பட்ட புலிகுட்டை கிராமத்தில் தனியார் தோல் பதனிடும் தொழிற்சாலையின் கழிவுநீர் ஆற்றில் கலந்து விடுவதால், கழிவுநீரை வேறு இடத்தில் தேக்கி வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்றாம்பள்ளி தொகுதிக்குட்பட்ட புலிகுட்டை கிராமத்தை ஒட்டியுள்ள ஆதியூர் கிராமத்தில் திருவாளர்கள் கோல்டன் லெதர்ஸ் என்ற தனியார் தோல் பதனிடும் தொழிற்சாலை 1984-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், தொழிற்சாலை குத்தகைக்கு எடுத்துள்ள 0.95 ஹெக்டேர் நிலத்தில்

யூகலிப்டஸ் மரங்கள் வளர்க்க உபயோகப்படுத்தப்படுகிறது. எனவே, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது மேற்கூறிய நிலத்தை விட்டு வெளியேற எவ்வித வழிவகையும் இல்லை. புலிக்குட்டை ஏரி என்ற நீர்த்தேக்கக் குட்டையினைச் சென்றடைவதற்கும் வாய்ப்பு இல்லை.

**75—**

### கழிப்பிடம் கட்டித் தருதல்

**வினா எண் 18706—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள டாப்சிலிப்பைப் பார்வையிட பல மாநிலங்களில் இருந்தும் பொதுமக்கள் வருவதால் கழிப்பிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே போதுமான பொதுக் கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் கூடுதல் கழிப்பிட வசதிகள் தேவைப்பட்டால் எதிர்வரும் நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**76—**

### பகாஸ் துகள்கள், சாம்பலால் பாதிக்கப்படுவதைத் தடுத்தல்

**வினா எண் 19033—திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதி, எறையூர் அம்பிகா சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறும் பகாஸ் துகள்கள் மற்றும் சாம்பலால் பொதுமக்கள் பாதிப்படைவதைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஆம். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**77—**

### வன மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 20210—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997 முதல் 2002 வரை ஜப்பான் நாட்டு நிதி நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் வன மேம்பாட்டுத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஆம்.

**78—**

### முந்திரி பயிரிட்டதில் வருமானம்

**வினா எண் 20255—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வனத்தோட்டக் கழகத்தின் மூலமாக தைல மரங்கள் மற்றும் முந்திரி மரங்கள் எத்தனை ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்படுகின்றன?

[2003 மே 10

(ஆ) இதன் வாயிலாக இக்கழகத்திற்கு 2001-2002 ஆம் ஆண்டில் வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 2001 ஆம் ஆண்டு வரை 46,809 ஹெக்டேர் பரப்பில் தைல மரங்களையும் 18,172.38 ஹெக்டேர் பரப்பில் முந்திரி மரங்களையும் வளர்த்துள்ளது. இக்கழகத்திற்கு 2001-2002 ஆம் ஆண்டில் தைல மரங்கள் மூலம் ரூ.910 இலட்சமும், முந்திரி மரங்கள் மூலம் ரூ.430 இலட்சமும் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

**79—**

**கனிம வனக் குவாரிகள்**

**வினா எண் 20684—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான கனிம வனக் குவாரிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவை குத்தகை விடப்பட்டு அரசுக்கு வருவாய் வருகிறதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு வருவாய் வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான கனிம வனக் குவாரிகள் ஏதும் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினா எழவில்லை.



2003 மே 10]

**80—**

**காடுகள் வளர்த்தல்**

**வினா எண் 20685—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது? அவற்றில் எத்தனை ஏக்கர் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளது? தனியார் ஆக்கிரமிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதியில் வனத் துறைக்குச் சொந்தமாக மொத்தம் 1868.83 ஏக்கர் (756.61 ஹெக்டேர்) நிலம் உள்ளது. இதில் 1863.89 ஏக்கர் (754.51 ஹெக்டேர்) பரப்பில் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. தாம்பரம் வனப்பகுதியில் 4.94 ஏக்கர் பரப்புக்கு தனியார் ஆக்கிரமிப்புகள் உள்ளன.

(ஆ) ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற அறிவிப்பு (Eviction Notice) வழங்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருடன் கடிதத் தொடர்பு மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் ஒருசில நில ஆக்கிரமிப்பாளர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்குகள் நிலுவையாக உள்ளன.

**81—**

**கருவேல மர வளர்ப்பைத் தடுத்தல்**

**வினா எண் 20738—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) பாசனக் கண்மாய்களில் கருவேல மரம் வளர்ப்பதை தடை செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணையை அரசு திரும்பப் பெறுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தடையாணை 6-5-2002-ல் நீக்கப்பட்டுவிட்டது.

**82—**

**மரங்கள் வெட்டிச் செல்வதைத் தடுத்தல்**

**வினா எண் 20771—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மேல் பகுதியிலுள்ள வனத் துறைக்கான சோலைக் காட்டில் ஒப்பந்தத்தை மீறி அதிகமாக மரங்களை வெட்டி எடுத்துச் செல்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன? எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை வனச்சோலைக் காட்டில் ஒப்பந்தத்தை மீறி அதிகமான மரங்கள் ஏதும் வெட்டி எடுத்துச் செல்லவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



2003 மே 10]

**83—**

**மூலிகைப் பண்ணை அமைத்தல்**

**வினா எண் 20919—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சிக்குச் சொந்தமான 118 ஏக்கர் நிலம் தரிசாக உள்ளதால், மூலிகைப் பண்ணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) நடைமுறையில் உள்ள அரசுத் திட்டங்களின்படி தரிசு நிலங்களில் மூலிகைப் பண்ணைத் தோட்டங்கள் எழுப்ப தற்போது வாய்ப்புகள் இல்லை. எனவே தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சிக்குச் சொந்தமான 118 ஏக்கர் தரிசு நிலத்தில் மூலிகைப் பண்ணை அமைக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**84—**

**விவசாய நிலங்கள் கையகப்படுத்துவதை தடுத்தல்**

**வினா எண் 21095—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூரில் 30 ஆண்டுகளுக்கு மேலாக விவசாயம் செய்து வாழும் விவசாயிகளை வெளியேற்றி நிலத்தை கையகப்படுத்த வன இலாகாவும், மாவட்ட ஆட்சி நிர்வாகமும் முயற்சிப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூரில் 30 ஆண்டுகளுக்கு மேலாக விவசாயம் செய்து வாழும் விவசாயிகளை வெளியேற்றி நிலத்தை கையகப்படுத்த வனத் துறை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. புதியதாக ஏற்படும் ஆக்கிரமிப்புகளை மட்டுமே வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**85—**

### சந்தனக் கடத்தல் வாகனங்கள் ஏலம்

**வினா எண் 22299—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், தருமபுரி, நாமக்கல் ஆகிய ஒவ்வொரு மாவட்டத்திலும் 2001 ஆம் ஆண்டு சந்தனக் கடத்தலில் ஈடுபட்டு, வனத் துறை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் எத்தனை?

(ஆ) அவ்வாகனங்களை அரசு ஏலம் விட்டதா? எவ்வளவு ரூபாய் வருமானம் கிடைத்தது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) 2001 ஆம் ஆண்டு சந்தனக் கடத்தலில் ஈடுபட்டு வனத் துறை அதிகாரிகளால் சேலம், தருமபுரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் குறித்த விவரம் பின்வருமாறு:



| மாவட்டம் | கைப்பற்றப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சேலம் | 11 |
| தருமபுரி | 15 |
| நாமக்கல் | 05 |
| மொத்தம் | 31 |

(ஆ) அவ்வாகனங்களில் சேலத்தில் மட்டும் 2 வாகனங்கள் பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டு அரசுக்கு வருவாய் ரூ.27,600/- கிடைத்துள்ளது. இவை தவிர மீதமுள்ள 29 வாகனங்களை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**86—**

### விஷக் கழிவினால் உயிர்ச் சேதம் ஏற்படாமல் தடுத்தல்

**வினா எண் 22573—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, மண்டையூர் கிராமத்தில் திருச்சி டிஸ்டில்லரீஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனத்திலிருந்து வெளியாகும் விஷக் கழிவினால் உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

திருவாளர்கள் திருச்சி டிஸ்டில்லரீஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனம் தனது எரிசாராய தொழிற்சாலையில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, மண்டையூர் கிராமத்தில் 40 ஏக்கர் பரப்பளவில் நீர் கசிவு இல்லா வண்ணம் களங்களில் தேக்கி வைத்து சூரிய வெப்பத்தால் ஆவியாக்கி வருகிறது. இக்கழிவுநீர் தேக்கி வைப்பதால் உயிர்ச் சேதங்கள்

ஏதும் ஏற்படவில்லை. இருந்தாலும் கழிவுநீரை களத்தில் தேக்கி வைத்து சூரியவெப்பத்தைக் கொண்டு ஆவியாக்குவதைத் தவிர்த்து உயிரக உரம் (Bio-compost) தயாரிக்க பயன்படுத்த வேண்டும் என்றும், அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கும்வரை எரிசாராய தொழிற்சாலையை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் தனது 5-7-2002 நாளிட்ட ஆணையில் உத்தரவிட்டுள்ளது. அதன்படி தொழிற்சாலையின் எரிசாராய பிரிவு 14-8-2002 முதல் இயக்கத்தில் இல்லை.

87—

### குடும்ப பாதுகாப்பு திட்டம்

**வினா எண் 22875—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வனத் துறையில் பணியாற்றும் சமூக வன ஊழியர்கள், தோட்டக் காவலர்கள் பணியில் இருக்கும்பொழுது இறந்தால் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

வனத் துறையில் பணியாற்றும் சமூக வன ஊழியர்கள் மற்றும் தோட்டக் காவலர்கள் தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களாதலால் பணியில் இருக்கும்போது இறந்தால் நிதி உதவி வழங்க அரசு விதிகளில் வழிவகை இல்லை.

88—

### வன ஊழியர்கள் பணி நிரந்தரம்

**வினா எண் 22877—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



இருபது ஆண்டுகளுக்கு மேலாக தொகுப்பூதிய முறையில் பணிபுரியும் 3400 சமூக வன ஊழியர்கள் மற்றும் தோட்டக் காவலர்கள் வனத்துறையில் நிரந்தரம் செய்யப்படுவார்களா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

### அறிக்கை

தினக்கூலி அடிப்படையில் பல்லாண்டுகளாகப் பணிபுரிந்து வரும் சமூக வன ஊழியர்கள் மற்றும் வனத்தோட்டக் காவலர்களின் பணியினை நிரந்தரப்படுத்துவதற்காக, அரசாணை எண்.64(வனம்.2), சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 8.3.1999 மற்றும் அரசாணை எண். 65, சுற்றுப்புறம் மற்றும் வனத்(வனம்.2)துறை, நாள் 8.3.1999-ன்படி மாநில அளவிலான ஒருங்கிணைந்த முதுநிலை பட்டியல் ஒன்று தயார் செய்யப்பட்டு 1999 டிசம்பரில் வெளியிடப்பட்டது. துறையில் ஏற்கனவே காலியாக இருக்கும் வனக்காவலர் மற்றும் காலி பணியிடங்களிலும் வருங்காலங்களில் ஏற்படப்போகும் காலி பணியிடங்களிலும் மேற்படி பட்டியலில் இடம் பெற்றிருப்பவர்களை நியமிக்கலாம், என்று மேற்படி அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதில் மொத்தம் 5442 நபர்கள் பணிமூப்பு அடிப்படையில் இடம் பெற்றுள்ளனர். இவர்களின் கல்வித் தகுதி பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| பட்டப்படிப்பு படித்தவர்கள் | .. 81 | நபர்கள் |
| +2, பி.யூ.சி. படித்தவர்கள் | .. 400 | நபர்கள் |
| 10வது மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. | .. 2038 | நபர்கள் |
| 10-ம் வகுப்பு கீழ் கல்வி தகுதியுள்ளவர்கள் | .. 2923 | நபர்கள் |
| **மொத்தம்** | .. **5442** | **நபர்கள்** |

மேற்கண்ட பட்டியலில் இருந்து முதல் கட்டமாக 401 நபர்களுக்கு (வனக்காவலர்-377, காலி-24) முறைப்படி பணி நியமனம் செய்ய ஆணை வெளியிடப்பட்டது. இந்த உத்தரவுப்படி 219 நபர்கள் மட்டுமே (வனக்காவலர்-216, காலி-3) பணியில் சேர்ந்துள்ளனர். இந்நிலையில் மேற்கண்ட முதுநிலைப் பட்டியலில் இடம் பெற்றவர்களில் 65 நபர்கள் அரசாணை எண் 332, சுற்றுப்புறம் (ம) வனத் (வ.6) துறை, நாள் 22-12-1994-ன்படி கல்வித்தகுதி உள்ளவர்கட்கு (அதாவது எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு) மட்டுமே நிரந்தரப் பணி வழங்கப்பட வேண்டும் என்றும் அதுவரையில் அரசாணை எண் 64, சுற்றுப்புறம் (ம) வனத் (வ2) துறை, நாள் 8-3-1999-க்கு இடைக்காலத் தடை அளிக்கவேண்டுமென மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுத்தவர் (வழக்கு எண் ஓ.எ.எண் 8191/1999 ஆகும்). தமிழ்நாடு மாநில நிர்வாகத் தீர்ப்பாயம் 6-1-2000 ஆம் நாளிட்ட தீர்ப்பில் பணி ஆணை வழங்கப்படுவதை நிறுத்திவைத்து இடைக்காலத் தடை பிறப்பித்துள்ளது. எனவே, நிரந்தரப்பணி வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட முதுநிலை பட்டியலில் இருந்து தொடர்ந்து பணி ஆணை வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நிர்வாகத் தீர்ப்பாயத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை விலக்கப்பட்ட பின்னர் முதுநிலை பட்டியலில் உள்ளபடி, தொடர்ந்து முறையாக பணி நியமன ஆணை வழங்கப்படும்.

**89—**

### பொதுமக்கள் விழிப்புணர்வு மக்கள் தொடர்பு சாதனங்கள்

**வினா எண் 24188—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம் கரூரில் சாயப்பட்டறை நீர் மாசினைத் தடுப்பது சம்பந்தமான "பொது மக்கள் விழிப்புணர்வு" மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலமாக நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.



(ஆ) கரூர் பகுதி வாழ் பொது மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் மாணவர்களிடையே பேச்சுப்போட்டி அனைத்து மக்களும் பங்கேற்கும் கருத்தரங்கு, பத்திரிகைச் செய்திகள் மூலம் விழிப்புணர்வு மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு என்ற வகையில் மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலமாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**90—**

### மரங்கள் வெட்டுவதைத் தடுத்தல்

**வினா எண் 24191—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சோலைக் காட்டில் விலையுயர்ந்த மரங்கள் வெட்டப்படுவதை தடுத்து நிறுத்த அரசு ஆணையிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஆணையின் காப்பு வனங்களில் மரங்கள் வெட்டப்படுவது முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது. வால்பாறையில் சோலை வனங்களிலும், தனியார் வனங்களிலும் விலை உயர்ந்த மரங்களை வெட்ட ஆணை ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

**91—**

### கருவேல மரங்கள் நடுதல்

**வினா எண் 24306—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏரிகளில் கருவேல மரங்கள் நடப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

இக்கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

**92—**

**வாகனப் புகை கண்காணிப்பு நிலையம்**

**வினா எண் 24316—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வாகனப் புகை கண்காணிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 1998 முதல் இத்திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழாது.

**93—**

**இருவழிப் பாதை அமைத்தல்**

**வினா எண் 26907—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் இருவழிப் பாதை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் இருவழிப் பாதை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**94—**

**புதிய மரக் கன்றுகளை நடும் திட்டம்**

**வினா எண் 26976—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகக் காடுகளில் புதிய மரக்கன்றுகளை நடும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இக்கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

**95—**

**நிழல் தரும் மரங்கள்**

**வினா எண் 31364—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட தலைநகரின் பிரதான சாலைகளில் நிழல் தரும் மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

96—

**பெயர் மாற்றம்**

**வினா எண் 1039—திரு.ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மேற்கு ஒன்றியத்திலுள்ள ஆனையூர் பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியத்தால் ஏற்படுத்தப்பட்ட ஜெ ஜெயலலிதா நகர் பெயர் மாற்றம் செய்யப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அப்பெயர் வைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) பெயர் மாற்றம் செய்யப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

97—

**விடுகள் கட்டுதல்**

**வினா எண் 1468—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

98—

**விடுகள் கட்டுதல்**

**வினா எண் 1588—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டைக்கு அருகில் சிப்காட் பகுதியில் பயன்படாத இடங்களை அரசு எடுத்து அங்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

99—

**விடு கட்டித் தரும் திட்டம்**

**வினா எண் 2780—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் பேரூராட்சியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஏழை மக்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**100—**

**வீடு கட்டும் திட்டம்**

**வினா எண் 2824—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகர வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**101—**

**அடுக்குமாடி வீடுகள் பழுதுபார்த்தல்**

**வினா எண் 3488—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 11-வது தொகுதி 31-வது கோட்டம் அண்ணா நகரில் கட்டப்பட்டிருக்கும் அடுக்குமாடி வீடுகள் மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளன என்பது அரசுக்கு தெரியுமா?



(ஆ) ஆம் எனில், பழுது பார்ப்பது எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் அண்ணா நகரில் கட்டப்பட்ட 400 குடியிருப்புகளில் 291 குடியிருப்புகள் மட்டும் வீட்டு வசதி வாரியத்தின் பராமரிப்பில் உள்ளன. மேற்படி திட்டத்திற்கு 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.6.10 இலட்சமும் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.3.79 இலட்சமும் செலவு செய்து பழுதுகள் சரிபார்க்கப்பட்டன.

**102—**

**கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டம்**

**வினா எண் 6541—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மேட்டுப்பாளையம், ஜமாலியா அருகில் தீ விபத்திலிருந்து தடுக்க கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை, பெரம்பூர், ஜமாலியா பகுதியில் உள்ள அருந்ததியர் காலனியில் கடந்த 8-7-2001 அன்று தீ விபத்து ஏற்பட்டது. இத்தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட 250 குடிசைவாழ் குடும்பங்களுக்கு சுற்றுச்

சுவர்களுடன்கூடிய கல்நார் ஓட்டு கூரை வீடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் 250 வீடுகள் ரூ.37.50 இலட்சங்கள் செலவில் கட்டப்பட்டு, பணிகள் முடிவுற்றுள்ளன.

103—

### அலுவலகம் மாற்றம்

**வினா எண் 6746—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மதுரை அண்ணா நகரில் உள்ள வீட்டு வசதி வாரிய அலுவலகத்தை கூடல்புதூருக்கு மாற்ற அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 1-11-2001 முதல் மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.*

104—

### உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்

**வினா எண் 9669—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி 5-வது வட்டம் கீரைத் தோட்டம் மக்களுக்கு புதிதாக இரவு பாடசாலை உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) அதே பகுதியில் பராமரிப்பு இல்லாத சிறுவர்கள் பூங்கா சீரமைத்துத் தரப்படுமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போதைக்கு இல்லை.*

105—

### குடியிருப்புகள் கட்டுதல்

**வினா எண் 10298—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருப்பூரில் பெருகிவரும் மக்கள் நெருக்கத்தைச் சமாளிக்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் திருப்பூருக்கு அருகில் குடியிருப்புகளைக் கட்டித் தர முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*இல்லை.*

106—

### சாலை புதுப்பித்தல்

**வினா எண் 11940—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சென்னை, கோயம்பேடு அங்காடியிலிருந்து பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையை இணைக்கும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் அச்சாலையைப் புதுப்பிக்க அரசு எப்போது நடவடிக்கை மேற்கொள்ளும்?*

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

கோயம்பேடு மொத்த விற்பனை வளாகத்திலிருந்து பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையை இணைக்கும் சாலைகளைச் செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளுடன் சேர்த்து, வளாகத்தில் உள்ள அனைத்து சாலைகளையும் சீரமைக்கும் பணிக்காக ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.2,47,24,760/- ஏற்றுக்கொள்ளப்பட்டு, 19-9-2002 ஆம் நாளன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, தற்போது பணிகள் துவங்கப்பட்டுவிட்டன.

**107—**

**வீடுகள் கட்டுதல்**

**வினா எண் 12723—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலுள்ள சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**108—**

**குடியிருப்புகள் கட்டுதல்**

**வினா எண் 14992—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் அரசு அலுவலர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாவட்டத் தலைமையிடம் மற்றும் வருவாய் கோட்டத் தலைமை இடங்களில் மட்டுமே அரசு அலுவலர் வாடகை குடியிருப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பெண்ணாகரம் ஒரு தாலுகா தலைமையிடம். எனவே இத்திட்டத்தினைச் செயல்படுத்த இயலாது.

**109—**

**வீடுகள் கட்டுதல்**

**வினா எண் 16439—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உயர் வருவாய்த் துறையினருக்கு அழகாகவும், தரமாகவும், அவர்களே வீடு கட்டிக்கொள்ளத் திறமையும், வாய்ப்பும் இருப்பதால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் முயற்சியைக் கைவிட அரசு முடிவு செய்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

110—

## வீடுகள் விற்கப்படாமல் இருத்தல்

**வினா எண் 16441—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வீட்டு வசதித் துறையினரால் கட்டப்பட்ட ஆயிரக்கணக்கான வீடுகள் விற்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

வீட்டு வசதி வாரியம் நகர்ப்புற வளர்ச்சியைக் கருத்திற்கொண்டும், நகர்ப் பகுதிகளில் இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகவும் புறநகர்ப் பகுதிகளில் அநேக திட்டங்களைச் செயல்படுத்துகிறது. வீடுகள் விற்பனைச் சந்தையில் கடந்த பல வருடங்களாக ஏற்பட்டுள்ள மந்த நிலை காரணமாக, கட்டப்படும் வீடுகளை உடனடியாக விற்பனை செய்ய இயலவில்லை. தற்சமயம் வீட்டு வசதி வாரியத்தினால் கட்டப்பட்டுள்ள 8,463 வீடுகள்/அடுக்கு மாடிக் குடியிருப்புகள் மற்றும் 27,809 மனைகள் விற்பனைக்கு உள்ளன.

111—

## மனைகள் வழங்குதல்

**வினா எண் 16442—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நில உடைமையாளர்களிடமிருந்து சந்தை விலையில் நிலங்களைப் பெற்று மனைகளை மட்டுமே வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

112—

## கான்கிரீட் வீடுகள்

**வினா எண் 16971—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடற்கரைப் பகுதிகளில் கான்கிரீட் வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மணல் மற்றும் தண்ணீரில் உவர் தன்மை இல்லாமல் வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

113—

## வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 18933—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன்மலை ஒன்றியத்தில் வெள்ளிமலை பஞ்சாயத்தில் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**114—**

**அடுக்கு மாடி வீடுகள்**

**வினா எண் 18972—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சியிலுள்ள அம்மன் குளத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்கு மாடி வீடுகள் கட்டும் பணி எப்போது துவக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

அடுக்கு மாடி கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**115—**

**அடுக்கு மாடி வீடுகளைக் கட்டுதல்**

**வினா எண் 19163—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, வ.உ.சி. நகர் 5-வது வட்டம், செல்லியம்மன் கோயில் குடிசைப் பகுதிகளை அடுக்கு மாடி வீடுகளாகக் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தற்போதைக்கு இல்லை.



**116—**

**இலவச தீப்பிடிக்காத கூரை வீடுகள்**

**வினா எண் 19490—திரு. பி.கே.சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 10வது வட்டம், எம்.ஜி.ஆர். நகரில் 125 வீடுகளுக்கும், சந்திரசேகரன் நகரில் 75 வீடுகளுக்கும் இலவச தீப்பிடிக்காத கூரை வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டிற்குள் பணிகள் துவங்கப்படும்.

**117—**

**நிலம் கிரயம் செய்தல்**

**வினா எண் 19863—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சி, அம்மன்குளம் பகுதியில் நலிந்த பிரிவினருக்கு குடிசை மாற்று வாரியம் வழங்கிய நிலத்திற்கு குடியிருப்பவர் முழுத் தொகையும் செலுத்திய பின்பும், அரசாணை 117, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 08-02-1993-இன்படி உயர்த்தப்பட்ட கிரயத் தொகையையும், வட்டியையும் செலுத்தினால்தான் நிலம் கிரயம் செய்து கொடுக்கப்படும் என்று வாரியம் கூறிவருவதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.**

இல்லை.

118—

## குடியிருப்புக்குப் பெயர் வைத்தல்

**வினா எண் 19919—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு, கொல்லம்பாளையம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கு அண்ணா நகர் என்றும், மாணிக்கம்பாளையம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கு டாக்டர் புரட்சித் தலைவர் நகர் என்றும், முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கு புரட்சித் தலைவி நகர் என்றும் பெயர் வைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு, கொல்லம்பாளையம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கு, அண்ணா நகர் என்றும், மாணிக்கம்பாளையம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கு டாக்டர் புரட்சி தலைவர் நகர் என்றும், முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கு புரட்சித் தலைவி நகர் என்றும் பெயர் வைக்கும் திட்டம் ஏதுமில்லை.

119—

## தீப்பிடிக்காத கூரை வீடுகள்

**வினா எண் 20750—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரத்தில் குடிசை வாழ் குடும்பங்களுக்காக தீப்பிடிக்காத கூரை வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் எப்போது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பணிகள் துவங்கப்பட்டு, முன்னேற்றத்தில் உள்ளன.

120—

## வீடுகள் விற்பனை செய்ய நடவடிக்கை

**வினா எண் 21101—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகள் 5 ஆண்டுகள் ஆகியும் விற்பனையாகாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். உடுமலைப்பேட்டை திட்டத்தில் மொத்தம் 316 வீடுகள் (உயர் வருவாய் பிரிவு-22, மத்திய வருவாய் பிரிவு-294) கட்டப்பட்டன. இவ்வீடுகள் அனைத்தும் இன்னும் விற்கப்படவில்லை.

(ஆ) இவ்வீடுகளை விற்க ஆண்டிற்கு ஆண்டு வட்டி முதலாக்கம் செய்வதைத் தவிர்த்து விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. உடுமலைப்பேட்டைப் பகுதியில் 2 விற்பனை முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் இத்திட்டத்தில் விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ளது. விற்பனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

[2003 மே 10

121—

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 24043—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகரில் சாஸ்திரி நகர் பகுதி புறம்போக்கு இடத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டி வாழ்வோருக்குப் பட்டா எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

விரைவில் வழங்கப்படும்.

122—

**குறைந்த வருவாய் வீடுகள் கட்டும் திட்டம்**

**வினா எண் 24207—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை நகராட்சியில் கலீப் நகரில் குறைந்த வருவாய் பிரிவு வீடுகள் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.

123—

**குறைந்த வருவாய் பிரிவு வீடுகள்**

**வினா எண் 24211—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

*(அ)* புதுக்கோட்டை நகராட்சி, பாலன் நகரில் வீட்டு வசதி வாரியத்தால் குறைந்த வருவாய் பிரிவு வீடுகள் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.

124—

**விலை நிர்ணயம்**

**வினா எண் 24221—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மதுரை, ஆணையூர், ஜெ.ஜெ. நகரிலுள்ள விற்கப்படாத வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையைப் போல், ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளுக்கும் விலை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.

125—

**உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை**

**வினா எண் 25594—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டு வசதி வாரியம் மூலம் வழங்கப்படும் தவணை முறை வீடுகளில் உடல் ஊனமுற்றோர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 961, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 3-12-93-ன்படி குலுக்கலில் ஊனமுற்றோர்களுக்கு தவணை முறை வீடுகளில் 1 சதவீத ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

**126—**

**கூட்டுறவு பால் உற்பத்திச் சங்கம்**

**வினா எண் 2841—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, வரதராஜபேட்டை பேரூராட்சியில், கூட்டுறவு பால் உற்பத்திச் சங்கம் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) அங்கு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க இயலாத நிலை உள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு விடை எழவில்லை.

**127—**

**பால் பொருள் கொள்முதல்**

**வினா எண் 3225—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பால் பொருள் கொள்முதல் விற்பனையில் அரசுக்கு ஏற்படும் இழப்பு எவ்வளவு?

(ஆ) இதனை ஈடுசெய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன? .

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) பால் உபபொருள் விற்பனைக்கென தனியாக பாலோ அல்லது பால் பொருட்களோ கொள்முதல் செய்யப்படுவதில்லை. எனவே இதில் இழப்பு ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடை எழவில்லை.

**128—**

**பால் கொள்முதல் உயர்த்தும் திட்டம்**

**வினா எண் 6990—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் பால் கொள்முதல் விலையை உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) 01-12-2001 முதல் லிட்டர் ஒன்றுக்கு 0.50 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது.

**129—**

**பால் கொள்முதல் விலையை உயர்த்துதல்**

**வினா எண் 7030—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தமிழ்நாட்டில் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் விலை நான்காண்டுகளாக உயர்த்தப்படாததால் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) 01-12-2001 முதல் லிட்டர் ஒன்றுக்கு 0.50 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது.

**130—**

**பாலின் தரம்**

**வினா எண் 9672—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சில தனியார் நிறுவனங்கள் பாக்கெட் பால் விற்பனை செய்வதினால் ஆவின் பால் விற்பனை குறைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) தனியார் விற்கும் பால் சுகாதார முறையில் தயாரித்து விநியோகிக்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) சில தனியார் நிறுவனங்கள் பாக்கெட் பால் விற்பனை செய்வதினால் ஆவின் பால் விற்பனை குறைந்திருப்பது அரசுக்குத் தெரியும்.

(ஆ) தனியார் விற்கும் பாலின் தரம் மற்றும் சுகாதார முறை பற்றி சென்னை மாநகராட்சியினால் தொடர்ந்து பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.



2003 மே 10]

**131—**

**கறவை மாடுகள் தீவனம்**

**வினா எண் 10581—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியத்தில் பால் அதிக அளவில் உற்பத்தி செய்வதால் கறவை மாடுகளுக்கு தீவனம் மானியம் விலையில் கொடுக்கப்படுமா?

(ஆ) பால் விலையை ஏற்றிக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கடந்த 1-12-2001 முதல் பசு மற்றும் எருமைப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.0.50 பைசா உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**132—**

**பால் குளிரூட்டும் நிலையம்**

**வினா எண் 10584—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, பச்சூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

133—

**பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 10751—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பேடற அள்ளியில் இயங்கி வந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்து இயங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) வாய்ப்பில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடை எழவில்லை.

134—

**கறவை மாடுகள் வாங்கக் கடன் வழங்குதல்**

**வினா எண் 12542—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) புதுக்கோட்டை, பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாடுகள் வாங்க கடன் வழங்கப்பட்டுள்ளதா?.

(ஆ) ஆமெனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை ஒன்றியத்திலுள்ள பால் உற்பத்தியாளர்களுள் ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு மட்டுமே இதுவரை தாட்கோ மற்றும் ஆதிதிராவிடர் நல திட்டங்களின் கீழ் கறவை மாடுகள் மானியம்/ கடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன. பிற்படுத்தப்பட்ட/ சிறுபான்மையினருக்கு டாசெட்கோ மூலம் கடன் வழங்கப்படுகிறது.

(ஆ) (1) பயனடைந்த ஆதிதிராவிடர் பால் உற்பத்தியாளர்கள் எண்ணிக்கை : 1677

(2) வழங்கப்பட்ட மானியம் : ரூ.40.87 இலட்சம்

(3) வங்கிகள் வழங்கிய கடன் : ரூ.40.87 இலட்சம்

135—

**தானியங்கி பால் விற்பனை நிலையங்கள்**

**வினா எண் 12546—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

தற்சமயம் திட்டம் ஏதுமில்லை.

[2003 மே 10

**136—**

**கூட்டுறவு பால் சங்கம்**

**வினா எண் 12639—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அன்னதானம்பேட்டை கிராமத்தில் கூட்டுறவு பால் சங்கம் ஆரம்பித்து கடன் வசதி பெற்றுத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) கிராம மக்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கு மனு எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) மனு பெறப்பட்டால் அங்கு முன்னுரிமை அளித்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**137—**

**பால் கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 12645—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி, மேலிருப்பு கிராமத்தில் இயங்கி வந்த பால் கூட்டுறவுச் சங்கம் தற்போது இயங்காததால் அதனை மாற்றி மகளிர் மன்றம் குரூப் 1, 2, 3-க்கு சங்கம் ஆரம்பித்து நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) சங்கம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு விடை எழவில்லை.

**138—**

**மாட்டுத் தீவனங்கள்**

**வினா எண் 13329—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பால் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மாட்டுத் தீவனங்கள் மானிய விலையில் விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மானிய விலையில் மாட்டுத் தீவனம் விநியோகம் செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடை எழவில்லை.

**139—**

**பால் உற்பத்தியைப் பெருக்குதல்**

**வினா எண் 13330—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பால் உற்பத்தியை பெருக்க உயர் ரக கன்றுகளை இறக்குமதி செய்து பால் உற்பத்தியாளருக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தியமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடை எழவில்லை.

**140—**

**பாலுக்கு கூடுதல் விலை வழங்குதல்**

**வினா எண் 13331—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களின் மூலம் வழங்கும் பாலுக்கு கூடுதல் விலை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) கூடுதல் விலை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 01-12-2001 முதல் வழங்கப்பட்டுள்ளது.

**141—**

**பால் பொருட்கள் சில்லறை விற்பனை மையம்**

**வினா எண் 13332—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அனைத்து இரயில் நிலையங்களிலும் ஆவின் பால் மற்றும் பால் பொருட்களின் சில்லறை விற்பனை மையங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள முக்கிய இரயில் நிலையங்களில் ஆவின் பாலகங்கள் இயங்கி வருகின்றன. மற்ற இரயில் நிலையங்களில் பாலகங்கள் அமைத்து விற்பனை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணைய நிர்வாக இயக்குநரால் ஆராயப்பட்டு வருகிறது.

**142—**

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 13443—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் கெண்டையன அள்ளி ஊராட்சியில் போடம்பட்டியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடை எழவில்லை.

**143—**

**பால் உற்பத்தியை அதிகரித்தல்**

**வினா எண் 14539—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) சேரன்மகாதேவி, பாப்பாக்குடி ஒன்றியங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி, பாப்பாக்குடி ஒன்றியங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**144—**

**பால் பண்ணைகள் அமைக்க கடனுதவி**

**வினா எண் 15136—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதியில் சிறிய பால் பண்ணைகள் அமைக்கக் கடனுதவி வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**145—**

**பால் குளிரூட்டு நிலையம், ஆவின் பால் விற்பனை நிலையம்**

**வினா எண் 15141—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறில் பால் குளிரூட்டும் நிலையமும், கழுகுமலையில் ஆவின் பால் விற்பனை நிலையமும் அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

வாய்ப்பில்லை.

**146—**

**பால் குளிரூட்டும் நிலையம்**

**வினா எண் 16286—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் கூட்டுறவு பால் உற்பத்தித் துறையின் மூலம் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு பதில் எழவில்லை.

**147—**

**பால் உற்பத்தியை அதிகரித்தல்**

**வினா எண் 16542—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி ஒன்றியத்தைச் சார்ந்த களப் பணியாளர்கள், முதுநிலை ஆய்வாளர் (பால்) ஆகியோர் மூலம் வீரவநல்லூர் பேரூராட்சியில் பால் உற்பத்தியாளர்களைத் தெரிவு செய்து சங்கம் அமைத்து பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**148—**

**பால் கொள்முதல்**

**வினா எண் 16693—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், மல்லப்பள்ளி ஊராட்சியில் கூட்டுறவுத் துறையின் மூலம் பால் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், மல்லப்பள்ளி கிராமப் பொது மக்களிடமிருந்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. ஆகவே, கூட்டுறவுச் சங்கம் மூலம் பால் கொள்முதல் செய்ய தற்பொழுது வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்விக்கு பதில் எழவில்லை.

**149—**

**பால் பணம் பட்டுவாடா**

**வினா எண் 18448—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருநெல்வேலி மாவட்டம் பால் உற்பத்தியாளர் ஒன்றிய உறுப்பினர்களுக்கு பால் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பணம் பட்டுவாடா செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 3-5-2002 அன்று திருநெல்வேலி ஒன்றியத்திற்கு ரூ.208.69 இலட்சம் வழங்கப்பட்டு, சங்கங்களிலிருந்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை குறைக்கப்பட்டுள்ளது. ஆகவே, திருநெல்வேலி மாவட்டப் பால் உற்பத்தியாளர் ஒன்றிய உறுப்பினர்களுக்கு பால் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.

**150—**

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 20215—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் பண்ணைத் துறையில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் பொருட்டு பல்வேறு மாவட்டங்களில் பயன்பெறும் வகையில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தும் திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், உடுமலைப்பேட்டை தொகுதியில் குமரலிங்கம், தேவனார்புதூர், மடத்துக்குளம், தளி, உடுமலை போன்ற பகுதிகளில் இச்சங்கங்கள் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) பால் பண்ணைத் துறையில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் பொருட்டு பல்வேறு மாவட்டங்களில் பயன்பெறும் வகையில் பால்

உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தும் திட்டம் நடப்பாண்டில் செய்ல்படுத்தப்படும்.

(ஆ) தளி, தேவனார்புதூர் ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. குமரலிங்கம் பஞ்சாயத்திற்குட்பட்ட குமரலிங்கம், சாமராயப்பட்டி, பெருமாள்புதூர் ஆகிய கிராமங்களில் ஏற்கெனவே சங்கம் ஆரம்பிக்கப்பட்டு பால் கொள்முதல் அளவு தொடர்ந்து குறைவாக வந்து, சங்கங்கள் நட்டம் அடைந்து வந்த காரணத்தால் தற்போது இச்சங்கங்கள் செயலிழந்துள்ளன. மடத்துக்குளம் வட்டாரத்திற்குட்பட்ட 10 ரெவின்யூ கிராமங்களில் ஏற்கெனவே 14 சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு தற்சமயம் 12 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 2 சங்கங்கள் செயலிழந்துள்ளன. கணேசபுரம், செங்கழனிபுதூர் ஆகிய கிராமங்களில் போதிய பால் உற்பத்தி தற்சமயம் இல்லாத காரணத்தால் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை. உடுமலை அருகே உள்ள கிராமப்புற பகுதிகளில் சங்கம் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

**151—**

**பால் குளிரூட்டும் நிலையம்**

**வினா எண் 20551—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூரில் அரசு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பத்தூரில் அரசு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்விக்கு விடை எழவில்லை.





**152—**

**பால் குளிரூட்டும் மையம்**

**வினா எண் 20626—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் செயல்படாத பால் குளிரூட்டும் மையத்தை மீண்டும் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

மூடிக்கிடக்கும் குளிரூட்டு நிலையத்தினைச் சீர்செய்திட சுமார் ரூ.50 இலட்சம் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. புதுக்கோட்டை ஒன்றியத்தின் தினசரி பால் விற்பனை 10,000 லிட்டராக உயரும்பொழுது இச்செயல்படாத பால் குளிரூட்டும் நிலையத்தினை மீண்டும் செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வாய்ப்புள்ளது.

**153—**

**நினைவிடமாக அறிவித்தல்**

**வினா எண் 3053—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்து மறைந்த இடமான மதுரை திருநகர் வீட்டை அரசு நினைவிடமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

மதுரை, திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்து மறைந்த இடம் பள்ளிக் கட்டடமாக உபயோகப்படுத்தப்பட்டு வருவதால், அவ்விடத்தை அரசு நினைவிடமாக அறிவிக்க இயலாது. மேலும் இந்த இடத்தில் பள்ளிக்கு இடையூறு இல்லாத வகையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் மார்பளவு சிலை வைக்கவும்

[2003 மே 10

அவரது நினைவு தினத்தன்று மரியாதை செய்யவும் தங்களுக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை எனப் பள்ளி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

154—

**மண்டபம் கட்டுதல்**

**வினா எண் 3708—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாப்பாரப்பட்டியிலுள்ள சுப்ரமணிய சிவா நினைவிடத்தில் மண்டபம் கட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு எதுவும் பரிசிலனையில் இல்லை. நினைவிடத்தை ரூ.2 இலட்சம் செலவில் மேம்படுத்தும் கருத்துரு மட்டும் அரசின் பரிசிலனையில் உள்ளது.

155—

**வீடு கட்டித் தரும் திட்டம்**

**வினா எண் 9745—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நலிவுற்ற திரைப்படக் கலைஞர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



2003 மே 10]

156—

**சிலையை அழகுபடுத்துதல்**

**வினா எண் 11355—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மெரினா கடற்கரையிலுள்ள காமராசர் சிலையை அழகுபடுத்த அரசிடம் கருத்துரு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மெரினா கடற்கரையிலுள்ள காமராசர் சிலை, ரூ.80,000 செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) காமராசரின் சிலையிருந்த உடைந்த பீடம் சரி செய்யப்பட்டு பளிங்குக் கற்களைக் கொண்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. பீடத்தைச் சுற்றி, பளிங்குத் தரை போடப்பட்டுள்ளது. சிலைக்கு வருடா வருடம் வர்ணம் பூசுவதைத் தவிர்க்க, "மெட்டல் மிக்ஸர் கிராபைட் பினிஸ்" கொண்டு வர்ணம் பூசப்பட்டுள்ளது. சிலையைச் சுற்றியுள்ள பகுதியில் புல்வெளி அமைக்கப்பட்டுள்ளது.

157—

**மானியத் தொகை**

**வினா எண் 13911—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்ப் படங்களுக்கு தற்போது வழங்கப்படும் மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) இந்த மானியத் தொகையை அதிகரிக்கும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியமாக தலா ரூ.5.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இல்லை.

**158—**

**படங்களின் எண்ணிக்கை அதிகரித்தல்**

**வினா எண் 13912—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதவித் தொகை வழங்கப்படும் படங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் "வீடியோ செய்தி மலர்" ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகவும் திரைக் குழுவின் மூலமாகவும் மக்கள் பயனடைய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் மூலம் தயாரிக்கப்படும் வீடியோ செய்தி மலர்கள் சென்னைத் தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சிகளின் மூலமும் அனைத்து மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலக வீடியோ வேன்கள் மூலமும் பஞ்சாயத்து தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலமும் பொதுமக்களுக்குத் திரையிட்டுக் காட்டப்படுகின்றன.



2003 மே 10]

**159—**

**தேசிய கீதம் இசைத்தல்**

**வினா எண் 14806—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திரையரங்கில் திரைப்படம் முடிந்ததும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு வந்ததை தற்போது திரும்பவும் திரையிட அரசு உதவி செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

பல ஆண்டுகளுக்கு முன்பு திரையரங்கில் ஒவ்வொரு திரைப்படக் காட்சி முடிந்ததும் தேசியகீதம் இசைக்கப்பட்டு வந்தது. நடைமுறையில் திரையரங்குகளுக்கு வந்த பெரும்பாலான மக்கள் தேசிய கீதம் இசைக்கப்படும்போது திரையரங்கை விட்டு வெளியேறி விடுகின்றனர். மக்களுடைய முழு ஒத்துழைப்பு கிடைக்கப்பெறாத நிலையில் தேசிய கீதம் இசைக்கப்படுவது கைவிடப்பட்டது. எனவே திரையரங்குகளில் திரைப்படம் முடிந்ததும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு வந்ததை திரும்பவும் திரையிட அரசிடம் எந்தவிதத் திட்டமும் இல்லை.

**160—**

**சுற்றுலா பொருட்காட்சி**

**வினா எண் 22672—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டங்கள்தோறும் அரசின் செயல்பாடுகளை மக்களுக்குத் தெரிவிக்கும்வண்ணம் சுற்றுலா பொருட்காட்சி நடத்தும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

இதுகுறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**161—**

**தேசிங்கு ராஜா சிலை அமைத்தல்**

**வினா எண் 28766—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சியில் தேசிங்கு ராஜா சிலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் தேசிங்கு ராஜா சிலை அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**162—**

**திரைப்பட விருதுகள்**

**வினா எண் 30481—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2001-2002 ஆம் ஆண்டு தமிழக அரசு எத்தனை தமிழ்த் திரைப்படங்கள் சிறந்தவை என தேர்வு செய்தது?*

*(ஆ) இதற்காக விருதுகள் வழங்க அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாடு திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த திரைப்படங்கள் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை.*

*(ஆ) தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் விருதுகள் வழங்க 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.25,15,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**163—**

**சிட்டா நூல் வழங்குதல்**

**வினா எண் 113—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவாளர் அதிகம் வசிக்கும் கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டை, பொங்கலூர், கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் மிகவும் நலிந்துள்ள நெசவாளர் நலம் பேண அவர்களுக்கு கைத்தறி நெசவுக்கு மானிய விலையில் சிட்டா நூல் வழங்க அரசு போர்க்கால நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

ஆலை வாயில் விலையில் சிட்டா நூல் வழங்கும் திட்டம் தற்போது நடைமுறையிலுள்ளது. இதற்கு தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் முகவராகச் செயல்பட்டு வருகிறது. இதன்படி சகாய விலையில் தரமான சிட்டா நூல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கைத்தறி நெசவாளர் அதிகம் வசிக்கும் கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டை, பொங்கலூர் போன்ற இடங்களிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இதர பகுதிகளிலுள்ள

[2003 மே 10

நெசவாளர்களுக்கு சிட்டா நூல் ஆலை வாயில் திட்டம் மூலம் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.

**164—**

**பட்டு ஆடைகள்**

**வினா எண் 336—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் பட்டு ஆடைகளுக்கு வெளிநாடுகளில் தேவை அதிகம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எந்தெந்த நாடுகளில் தேவைப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் பட்டு ஆடைகளுக்கு வெளிநாடுகளில் தேவை அதிகம் இல்லை.

*(ஆ)* கேள்வி எழவில்லை.

**165—**

**மூடப்பட்ட ஆலையைத் திறத்தல்**

**வினா எண் 1014—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மதுரை மகாலட்சுமி ஆலை கடந்த பல ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளது. அவ்வாலையைத் திறந்து செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* கேள்வி எழவில்லை.

**166—**

**மூடப்பட்ட நூற்பாலைகள் எண்ணிக்கை**

**வினா எண் 1160—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்தில் மூடப்பட்டுள்ள நூற்பாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

*(ஆ)* அவற்றை மீண்டும் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* தமிழகத்தில் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 4 கூட்டுறவு நூற்பாலைகளும் மற்றும் 1650 தனியார் நூற்பாலைகளில் 237 தனியார் ஆலைகளும் மூடப்பட்டுள்ளன.

*(ஆ)* அவற்றை மீண்டும் திறக்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**167—**

**கோ-ஆப்டெக்ஸ் கடை மீண்டும் திறக்கச் செய்தல்**

**வினா எண் 1219—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் நீண்ட காலமாக இயங்கி தற்போது மூடப்பட்டுள்ள கோ-ஆப்டெக்ஸ் கடை மீண்டும் திறக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் நீண்ட காலமாக இயங்கி வந்து தற்போது மூடப்பட்டுள்ள கோ-ஆப்டெக்ஸ் கடையை மீண்டும் திறக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**168—**

**காட்சிக்கூடம் அமைத்தல்**

**வினா எண் 1302—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விசைத்தறித் தொழிலை ஊக்குவிக்க எடப்பாடி வட்டாரத்தில் நூல், விசைத்தறி, உதிரி பாகங்கள் மற்றும் சாயத்தொழிலுக்குத் தேவையான சாயப் பொருட்கள் நியாயமான விலையில் வழங்க அரசு "காட்சிக் கூடம்" அமைக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விசைத்தறித் தொழிலை ஊக்குவிக்க எடப்பாடி வட்டாரத்தில் விசைத்தறி உதிரிபாகங்கள் மற்றும் சாயத் தொழிலுக்குத் தேவையான சாயப்பொருட்கள் நியாயமான விலையில் வழங்க அரசு காட்சிக் கூடம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2003 மே 10]

**169—**

**பஞ்சாலை அமைத்தல்**

**வினா எண் 1735—திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டத்தில் எந்தத் தொழிற்சாலையும் இல்லாததால், குறிப்பாக பஞ்சாலை பெரம்பலூர் பகுதியில் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

கூட்டுறவு நூற்பாலைகள், பஞ்சு விலை, பஞ்சுத் தட்டுப்பாடு, தொழிலாளர் பிரச்சினை, நிதி நெருக்கடி உள்ளிட்ட பல பிரச்சினைகள் காரணமாக, ஏற்கெனவே நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதால், பெரம்பலூர் பகுதியில், புதிய பஞ்சாலையைத் துவக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**170—**

**விசைத்தறிகள் மானிய விலையில் வழங்குதல்**

**வினா எண் 3227—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க விசைத்தறிகள் மானிய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க விசைத்தறிகள் மானிய விலையில் வழங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

[2003 மே 10

171—

## விசைத்தறி தொழிற்சாலை திறத்தல்

**வினா எண் 5386—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியிலுள்ள விசைத்தறி தொழிற்சாலையைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) வீரவநல்லூர் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் செயலிழந்ததால் கலைக்கப்பட்டுவிட்டது. தற்போதுள்ள சங்கத்தின் நிலையைக் கருதி மீண்டும் சங்கத்தைத் திறக்க வாய்ப்பில்லை.

(ஆ) எழவில்லை.

172—

## மலிவு விலை வேட்டி சேலைத் திட்டம்

**வினா எண் 7142—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யும் வேட்டி சேலைகளை விசைத்தறி, கைத்தறி ஆகிய இரண்டிலிருந்தும் கொள்முதல் செய்யப்படுமா?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

இலவச வேட்டி சேலைத் திட்டம் கைவிடப்பட்டு, மாற்று திட்டமாக மலிவு விலை வேட்டி சேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்தித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

173—

## கைத்தறி கூட்டுறவுச் சங்கம் மீண்டும் திறத்தல்

**வினா எண் 10615—திரு. பே.ப. காமராஜ்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தொளசம்பட்டி ஊராட்சி தொளசம்பட்டியிலுள்ள சேலம் மாவட்ட கைத்தறி வளர்ச்சித் திட்டம் மூலம் செயல்பட்டு வந்த மூடப்பட்டுள்ள கைத்தறி கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தொளசம்பட்டியிலுள்ள சேலம் மாவட்ட கைத்தறி வளர்ச்சித் திட்டம் மூலம் செயல்பட்டு வந்த கைத்தறி கூட்டுறவுச் சங்கம் நட்டத்தில் இயங்கி வந்ததன் காரணமாக 27-2-1998-ல் கலைக்கப்பட்டுவிட்டதால் மீண்டும் அச்சங்கத்தைத் திறக்க வாய்ப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2003 மே 10

174—

**கைத்தறி கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் திறத்தல்**

**வினா எண் 10630—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட தொளசம்பட்டியில் மூடப்பட்ட செந்தமிழ் கைத்தறி கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்தை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட தொளசம்பட்டியில் மூடப்பட்ட எஸ்.ஏ.102 செந்தமிழ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் தொடர்ந்து நட்டத்தில் செயல்பட்டு வந்ததன் காரணமாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 பிரிவு 137(1)-ன்கீழ் கலைக்கப்பட்டு விட்டது. சங்கத்தினை மீண்டும் திறக்கும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

175—

**கூட்டுறவுச் சங்கம் மீண்டும் திறத்தல்**

**வினா எண் 10631—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட தொளசம்பட்டியிலுள்ள ஜெயலட்சுமி கைத்தறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட தொளசம்பட்டியிலுள்ள ஜெயலட்சுமி கைத்தறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்து நட்டத்தில் செயல்பட்டு வந்ததன் காரணமாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 பிரிவு 137-ன்கீழ் கலைக்கப்பட்டுவிட்டதால் சங்கத்தினை மீண்டும் திறக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

176—

**விசைத்தறி தொழிற்கூடத்தைத் திறத்தல்**

**வினா எண் 12129—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, வீரவநல்லூர் பேரூராட்சியில் மூடிக் கிடக்கும் அரசு விசைத்தறி தொழிற்கூடத்தைத் திறக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி, வீரவநல்லூர் பேரூராட்சியில் மூடிக்கிடக்கும் டி.என்.எச்.130 வீரவநல்லூர் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கியதால், ஆஸ்திகளைவிட கொடுபட வேண்டிய இனங்கள் அதிகமாக இருந்ததால் அரசு மற்றும் கூட்டுறவு வங்கி நிதிகளுக்கு ஏற்படும் இழப்பினைத் தவிர்க்கவும், மேற்படி சங்கம் 11-1-1999 அன்று கலைக்கப்பட்டுவிட்டது. எனவே இச்சங்கத்தை மீண்டும் திறப்பதற்கு வாய்ப்பில்லை.

(ஆ) எழவில்லை.

[2003 மே 10

177—

தள்ளுபடி திட்டம்

**வினா எண் 12433—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி துணிகளுக்கு வழங்கப்படும் தள்ளுபடி திட்டத்தை வருடம் முழுவதும் நீட்டிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆமெனில், அது பற்றிய விளக்கத்தை அரசு அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாநில சங்கத்தினால் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணி வகைகளின் மொத்த மற்றும் சில்லறை விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 சதவீத தள்ளுபடி மானியம் அரசால் வழங்கப்படுகிறது.

178—

காடா துணி வழங்குதல்

**வினா எண் 12530—திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் வத்திராயிருப்பு ஒன்றியத்திலுள்ள சுந்தரபாண்டியம் பேரூராட்சியில் கூட்டுறவு நெசவாளர்களுக்கு தேவைக்கேற்ப காடா துணி அதிகமாக வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

திருவில்லிபுத்தூர் வத்திராயிருப்பு ஒன்றியத்திலுள்ள சுந்தரபாண்டியம் பேரூராட்சியில் கூட்டுறவு நெசவாளர்களுக்கு தேவைக்கேற்ப காடா துணி உற்பத்தித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.



2003 மே 10]

179—

விசைத்தறி உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை

**வினா எண் 14491—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி, எளம்பிள்ளை பகுதியில் விசைத்தறித் தொழில் நிறைந்துள்ளதால் அங்கு விசைத்தறி உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி எளம்பிள்ளை பகுதியில் விசைத்தறி உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

180—

வேலையின்மையைப் போக்குதல்

**வினா எண் 14700—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதியில் நெசவாளர்களின் வேலையின்மையைப் போக்க அரசிடம் புதிய திட்டம் ஏதாவது உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

சங்ககிரி பகுதியில் உள்ள நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பும், கூலியும் வழங்கப்பட்டு சங்கங்கள் செயல்படுவதால் சங்ககிரி தொகுதியில் வேலையின்மை ஏதும் ஏற்படவில்லை.

181—

**கூட்டுறவு நூற்பாலைகளைத் திறத்தல்**

**வினா எண் 14713—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழகத்தில் மூடிக்கிடக்கும் கூட்டுறவு நூற்பாலைகளைத் திறக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் மூடிக்கிடக்கும் கூட்டுறவு நூற்பாலைகளைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

182—

**வட்டித் தொகை தள்ளுபடி செய்தல்**

**வினா எண் 16343—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எட்டயபுரம் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மிக நலிவடைந்துள்ளதால் அச்சங்கம் கட்ட வேண்டிய வட்டித் தொகையை (31-07-2001) வரை தள்ளுபடி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எட்டயபுரம் டாக்டர் புரட்சித் தலைவர் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேவையான காசுக்கடன் நபார்டு வங்கியின் வழிகாட்டு விதிமுறைகளின்படி தூத்துக்குடி மாவட்ட மத்திய





கூட்டுறவு வங்கியினால் அனுமதிக்கப்பட்டு வருகிறது. மேற்படி காசுக்கடனுக்கு நிர்ணயிக்கப்பட்ட வட்டியை தள்ளுபடி செய்வதற்கு இத்துறையின் மூலம் எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாத நிலை உள்ளது.

183—

**நூற்பாலை உருவாக்குதல்**

**வினா எண் 16608—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் ஒரு நூற்பாலை உருவாக்க திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பஞ்சு விலை, பஞ்சுத் தட்டுப்பாடு, தொழிலாளர் பிரச்சினை, நிதி நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளின் காரணமாக, ஏற்கெனவே துவக்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளை செயல்படுத்துவது கடினமாக உள்ளது. இந்நிலையில் மேலும் ஒரு பஞ்சாலையை அரசு துவக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

184—

**கூட்டுறவு நூற்பாலை**

**வினா எண் 17192—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**185—**

**ஓய்வூதியம் மீண்டும் வழங்குதல்**

**வினா எண் 21000—திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வயதான நெசவாளர்களுக்கு மாதம் ரூ.200/- வழங்கி வந்த ஓய்வூதியம் நிறுத்தப்பட்டதை மறுபடியும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் 60 வயது முடிவடைந்த வயதான நெசவாளர்களுக்கு மாதம் ரூ.200/- வழங்கி வந்த ஓய்வூதியம் நிறுத்தப்படவில்லை. தற்போதும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**186—**

**நூற்பாலை அரசே நடத்துதல்**

**வினா எண் 24717—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், காவேரி நகர் நூற்பாலை தனியார்வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அரசே நடத்த முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**187—**

**இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம்**

**வினா எண் 25529—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம் கைவிடப்பட்ட நிலையில் இதனை மீண்டும் செயல்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2003 மே 10

188—

**பட்டு துணிகள் ஏற்றுமதி**

**வினா எண் 27178—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுத் துணிகளை ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

பட்டுத் துணிகளை ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசிடம் இல்லை.

189—

**பட்டுப் புடவைகளின் மதிப்பு**

**வினா எண் 27184—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகளின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) காஞ்சிபுரம் பட்டு உற்பத்திக்கு புதிய செயல்முறை வகுக்கப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.80.00 கோடி மதிப்பிற்கு பட்டுச் சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) வாடிக்கையாளர்களின் ரசனை மற்றும் கால மாறுதலுக்கு ஏற்றவாறு பல்வேறு வண்ணங்களில் கோ-ஆப்டெக்ஸ் வடிவமைப்பு



2003 மே 10]

மையம், நெசவாளர் சேவா மையம் மற்றும் சங்கங்களில் வடிவமைப்பாளர்கள் மூலம் புதிய வடிவமைப்புகள் பெறப்பட்டு பட்டுச் சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

190—

**மீனவர் துயர் துடைப்பு நிதி**

**வினா எண் 3657—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1991-96-ல் வழங்கப்பட்ட மீனவர் துயர் துடைப்பு நிதி மீண்டும் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் கடல் மீனவர்களுக்கு மீன்பிடிப்பில்லா காலங்களில் வழங்கப்படும் நிவாரண நிதி 2001-2002 ஆம் ஆண்டு திட்டத்திலும் வழங்கப்பட்டுள்ளது.

191—

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 4197—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஊராட்சி ஒன்றியம், நாயக்கம்குப்பம், மடத்துக்குப்பம், நடைக்காடு மீனவர் கிராமத்தில் மீன்வளத் துறை மூலம் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஊராட்சி ஒன்றியம் நாயக்கன் குப்பம், மடத்துக்குப்பம் மற்றும் நடைக்காடு மீனவர் கிராமத்தில் இலவச வீடு வேண்டி கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

**192—**

**மீனவர்களுக்கு காலனி வீடுகள்**

**வினா எண் 5909—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கூழையார் மீனவர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கூழையார் மீனவ கிராமத்திலிருந்து 2001-2002 ஆம் ஆண்டிற்கு வீடுகள் கட்டி வழங்க கோரிக்கை எதுவும் அரசுக்கு வரப்பெறவில்லை.

**193—**

**மீனவர் தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 6268—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினம் ஊராட்சி, சரபேந்திரராஜப்பட்டினம் பகுதிக்கு மீனவர் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**194—**

**கடல் வளப் பாதுகாப்பு ஆராய்ச்சித் திட்டம்**

**வினா எண் 6935—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மன்னார் வளைகுடாவில் கடல் வளப் பாதுகாப்புக்கான ஆராய்ச்சித் திட்டம் செயல்படுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**195—**

**கழிவுநீரால் மீன், இறால் உற்பத்தி அழிவதைத் தடுத்தல்**

**வினா எண் 7153—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடசென்னை, எண்ணூர் அனல்மின் நிலையத்தின் கழிவுநீர் பக்கிங்ஹாம் கால்வாயில் திருப்பிவிடப்பட்டதால் இக்கழிவுகள் மணல் மேடாகியும் மற்றும் மீன், இறால் உற்பத்தி அழிந்து விடுவதால் இதற்கு மாற்று வழி செயல்படுத்தப்படுமா?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

வடசென்னை அனல்மின் நிலையத்தில் உற்பத்தியாகும் சாம்பல் கலந்த நீர் சாம்பல் குளங்களில் சேகரிக்கப்பட்டு அவ்வப்போது சிமெண்ட் தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்கு அகற்றப்படுகிறது. சாம்பல் கழிவு பக்கிங்ஹாம் கால்வாயில் விடப்படுவதில்லை. எனவே, இதனால் இறால் உற்பத்தி அழிந்துவிடும் வாய்ப்பு ஏதும் இல்லை.

**196—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 7439—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கூழையார் மீனவர் பகுதியில் உள்ள கூரை வீடுகளை மாற்றி தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கூழையார் மீனவர் பகுதியில் வீடுகள் வழங்க வேண்டி கருத்துரு ஏதும் அரசுக்கு பெறப்படவில்லை.

**197—**

**மீனவ மக்களுக்குக் குடிநீர் வசதி**

**வினா எண் 10268—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் சின்னகொட்டாய்மேடு பக்கத்தில் தக்சன் அக்வா என்ற இறால் பண்ணை



2003 மே 10]

அமைந்துள்ளதால், குடிநீர் உப்பு நீராக மாறி வருவதால், இறால் பண்ணையை அகற்றி மீனவ மக்களுக்குக் குடிநீர் கிடைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

D
V 211, 31/03
103.51

**198—**

**மீனவ மக்களுக்கு போக்குவரத்து வசதி**

**வினா எண் 10269—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி, தாண்டவன்குளம், சின்னகொட்டாய்மேடு அருகில் தக்சன் அக்வா என்ற இறால் பண்ணை அரசு புறம்போக்கு இடத்தை ஆறாக வெட்டி கடல்நீரை இறால் பண்ணைக்குப் பயன்படுத்துவதால் மீனவ மக்கள் போக்குவரத்து சாலையாகப் பயன்படுத்திய இடத்தை இறால் பண்ணை நிர்வாகம் ஆக்கிரமித்துள்ளதை அகற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) புறம்போக்கு இடத்தை ஆறாக வெட்டி பயன்படுத்தவில்லை. இறால் பண்ணை தனியார் இடத்தில் அமைந்துள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

226057
சென்னை-600 009
நூலகம்

199—

### மீன்பிடி தளம் அமைத்தல்

**வினா எண் 12726—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சியில் மீன்பிடி தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

சேதுபாவாசத்திரம் ஊராட்சியில் மீன்பிடி இறங்குதளம் அமைக்கும் பணிகள் ரூ. 132.32 இலட்சம் செலவில் நடைபெற்று வருகின்றன.

200—

### உலர்மீன் களம் அமைத்தல்

**வினா எண் 12765—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பிள்ளையார் திடல் மீனவர்களுக்கு உலர்மீன் களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.



## பட்டியல் 31

1—

### புதிய இரயில் பாதை அமைத்தல்

**வினா எண் 235—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீடாமங்கலம்-மன்னார்குடி-திருத்துறைப்பூண்டி புதிய இரயில் பாதை அமைத்து, தஞ்சாவூர்-வேதாரண்யம் இணைப்புப் பாதையாக பயன்படுத்த மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்த ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நீடாமங்கலத்திலிருந்து திருத்துறைப்பூண்டி வரை மன்னார்குடி வழியாக புதிய இரயில் பாதை அமைத்து, தஞ்சாவூர்-வேதாரண்யம் இணைப்புப் பாதையாக பயன்படுத்தும் திட்டம் தற்போது எதுவும் இல்லை எனவும், மேலும் இது குறித்து இரயில்வே வாரியத்தால் கொள்கை அளவில் முடிவெடுக்கப்பட வேண்டும் எனவும் தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது.

2—

### புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்குதல்

**வினா எண் 554—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புரசைவாக்கம் தொகுதியில் உள்ள பெரியார் நகர், திருவி.க. நகர் மற்றும் குமரன் நகர் மக்களுக்குப் பயன்படும் வகையில் புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரியார் நகர், திரு.வி.க. நகர் மற்றும் குமரன் நகர் ஆகிய பகுதிகளுக்கு ஏற்கெனவே போதுமான பேருந்து வசதி உள்ளதால் மேற்கொண்டு புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

3—

**பேருந்து வழித்தடங்கள் உயர்த்துதல்**

**வினா எண் 555—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் பொதுமக்களின் நெரிசலைக் குறைக்க பேருந்துகளின் வழித்தடங்கள் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை நகரில் பொதுமக்களின் நெரிசலைக் குறைக்க சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் ஆங்காங்கே வெட்டுத் தடங்கள் இயக்கப்படுகின்றன. எனவே, மேற்கொண்டு பேருந்துகளின் வழித்தடங்களை உயர்த்துவதற்கான திட்டம் எதுவும் தற்போது இல்லை.

4—

**போக்குவரத்துக் கழகத்திற்கு வருமானம் அதிகரித்தல்**

**வினா எண் 558—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் "சிற்றுந்துகள்" (மினி பஸ்) தனியார் மூலம் இயக்கப்படுவதால் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு வருவாய் குறைந்துள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?



(ஆ) ஆம் எனில், வருமானத்தை அதிகரிக்க அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிற்றுந்துகள் இயக்கம் செய்யப்படும் வழித்தடங்களில் இயக்கப்படும் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்கத்தில் கூடுதல் கவனம் செலுத்தி அதிக பயணிகள் ஏற்றி இறக்கி வருவாய் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தனியார் சிற்றுந்துகளின் முறையற்ற இயக்கம் குறித்து கண்காணிக்கப்பட்டு உரிய வழித்தடத்தில் இயக்கச் செய்வதுடன் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அதிகாரி மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் ஆகியோர்களுக்கு நடவடிக்கைக்காக புகார் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5—

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 567—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியம் பேருந்துகளை இயக்காமல் நிறுத்தப்பட்டுள்ள வழித்தடங்கள் எத்தனை?

(ஆ) அவை நிறுத்தப்பட்டதற்கான காரணம் என்ன?

(இ) அவ்வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியிலுள்ள எடப்பாடி ஒன்றியம் மற்றும் மகுடஞ்சாவடி ஒன்றியங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு வரும் எந்தவொரு வழித்தடமும் இயக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

(ஆ) கொங்கணாபுரம் ஒன்றியத்தில் தடம் எண் 2-சி மற்றும் 2-டி (எடப்பாடி- ஜலகண்டாபுரம்) பேருந்துகள் இரும்பாலை சாலையில் சமுத்திரம் முதல் திருமனூர் கிராஸ் ரோடு வரை தண்ணீர் குழாய் போடும் வேலை நடைபெறுவதால், அந்த வழியில் பேருந்துகள் இயக்க இயலாத நிலையில், தற்காலிகமாக மாற்று வழியில் பணிக்கனூர் வழியாக இயக்கப்பட்டு வந்தன.

(இ) சாலை செப்பனிடப்பட்டு விட்டதால், தடம் எண் 2-சி மற்றும் 2-டி (எடப்பாடி-ஜலகண்டாபுரம்) நகரப் பேருந்துகள் 18-2-2002 முதல் இயக்கப்படுகின்றன.

6—

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 573—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து திருச்செங்கோடு, கரூர், திண்டுக்கல் வழியாக மதுரை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து திருச்செங்கோடு, கரூர், திண்டுக்கல் வழியாக மதுரைக்கு நேரடிப் பேருந்துகள் இயக்கப்படவில்லை. இது நீண்ட வழித்தடம். இவ்வழித்தடத்தில் போதிய அளவு பயணிகள் அடர்வு இருக்க வாய்ப்பில்லை. எனினும் இந்த வழித்தடத்தில் பகுதிவாரியாக பேருந்து வசதியுள்ளது. விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| எடப்பாடி-திருச்செங்கோடு | - | 31 பேருந்துகள் |
| திருச்செங்கோடு-வேலூர் | - | 22 பேருந்துகள் |
| வேலூர்-மதுரை | - | 50 பேருந்துகள் |



இப்பேருந்துகள் மூலம் எடப்பாடி-மதுரை வழித்தடம் முழுமைக்கும் போதுமான பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

7—

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 575—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சி மோளப்பாறையூருக்குச் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி-பூலாம்பட்டி (வழி) மூலப்பாசை, தொட்டாவூர், மோளப்பாறையூர் வழித்தடத்தில் நெடுங்குன்றத்திலிருந்து மோளப்பாறையூர் வரை சாலை பழுந்தடைந்ததால், நிறுத்தப்பட்ட பேருந்து, சாலை சரி செய்யப்பட்டுள்ளதால், 26-8-2001 முதல் மீண்டும் இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) எழாது.

8—

**அரசு சிறு பேருந்துகள் இயக்குதல்**

**வினா எண் 598—திரு. அ. நடராஜன் மற்றும் திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் இயங்கிவரும் சிறு பேருந்துகளை (Mini Bus) அரசுப் பேருந்தாக இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கிணத்துக்கடவு தொகுதி, கிணத்துக்கடவு ஒன்றியம், சங்கராயபுரம் மற்றும் வெள்ளேகவுண்டன்புதூர் கிராமங்கள் பிரதான சாலையிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவான தூரத்திலேயே உள்ளது. மேலும் இக்கிராமங்களுக்கு செல்லும் சாலை, போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லாமல் உள்ளது. எனவே இக்கிராமங்களுக்கு பேருந்து வசதிகள் செய்து தருவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இக்கிராமங்கள் பிரதான சாலையிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவான தூரத்தில் உள்ளதால் கிணத்துக்கடவு-முத்துக்கவுண்டனூர் பிரதான சாலையில் இயக்கப்படும் பேருந்துகளின் உதவியால் சங்கராயபுரம் கிராமத்திற்கும், கிணத்துக்கடவிலிருந்து மேட்டுவாவி செல்லும் பிரதான சாலையில் செல்லும் பேருந்துகளின் உதவியால் வெள்ளேகவுண்டன்புதூருக்கும் செல்வதற்கு வசதி உள்ளது.*

**13—**

**சிறு பேருந்துகள் இயக்குதல்**

**வினா எண் 896—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் சிறு பேருந்துகள்* (Mini Bus) *இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் சிற்றுந்து இயக்க மனுக்கள் வரப்பெறின், சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு சிற்றுந்து அனுமதி உரிய அதிகாரியால் வழங்கப்படும்.*





**14—**

**கூடுதல் நகரப் பேருந்து**

**வினா எண் 936—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தொன்னகுட்டஅள்ளிக்கு மாலை நேரங்களில் பள்ளிக் குழந்தைகளுக்காக பெண்ணாகரத்திலிருந்து கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*பெண்ணாகரத்திலிருந்து தொன்னகுட்டஅள்ளி வரை இயங்கும் பேருந்தில் பயணிகளின் அடர்வு 56 விழுக்காடுகளே உள்ளதால் கூடுதல் நகரப் பேருந்து இயக்க இயலாது.*

**15—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 937—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்திலிருந்து நாட்ராம்பள்ளி, கர்நாடக மாநிலம் கனகபுரா வழியாக பெங்களூர் வரை பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நிறைவேற்றப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்திலிருந்து நாட்ராம்பள்ளி, கர்நாடக மாநிலம் கனகபுரா வழியாக பெங்களூர் வரை இயக்கக் கோரிய வழித்தடம்*

[2003 மே 10

பிற மாநில வழித்தடம். தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கு இடையேயான வழித்தட ஒப்பந்த உடன்படிக்கையில்தான் முடிவு செய்ய இயலும். மேலும் ஒகேனக்கல் முதல் நாட்ராம்பாளையம் வரையுள்ள சாலை நிலை பேருந்துகளை இயக்குவதற்கு ஏற்றதாக இல்லை என்பதால், தருமபுரி அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம், வினாவில் கோரியுள்ள வழித்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

16—

### பேருந்து தூரத்தை நீட்டித்தல்

**வினா எண் 938—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டில் ஊராட்சி, நகராட்சிகளில் 30 கிலோ மீட்டர் வரை இயங்கிவரும் நகரப் பேருந்துகளை 40 கிலோ மீட்டர் நீட்டித்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் இயக்கப்பட்டு வரும் நகரப் பேருந்துகளில் வழித்தட தூரத்தை 30 கிலோ மீட்டரில் இருந்து 40 கிலோ மீட்டருக்கு நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

17—

### புதிய பேருந்து இயக்குதல்

**வினா எண் 1402—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

*(அ) ஆண்டிமடம் தொகுதி, சிலம்பூர் கிராமத்திற்கு அரியலூர் பணிமனையிலிருந்து உடையார்பாளையம், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், அழகாபுரம் வழியாக சிலம்பூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கை வழித்தடத்தில் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

18—

### பேருந்து பணிமனை

**வினா எண் 1569—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதி, பாபநாசத்தில் அரசு விரைவுப் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) பாபநாசத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2003 மே 10

19—

### நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 1576—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம்-2 தொகுதி, சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து புதிய பேருந்து நிலையம், ஐந்து ரோடு, அழகாபுரம், காட்டூர், கோழிப்பண்ணை, நகரமலை அடிவாரம், பெருமாள்மலை அடிவாரம் குரங்குசாவடி வழியாக நகரப் பேருந்து இயக்கும் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்ட வழித்தடத்தில் கூடுதலாக புதிய நகரப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

20—

### நகரப் பேருந்து மீண்டும் இயக்குதல்

**வினா எண் 1579—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காஞ்சிபுரம் மாவட்டம் செங்கற்பட்டு, சிங்கப்பெருமாள் கோவில், ரெட்டிபாளையம், வடக்குப்பட்டு சென்று கொண்டிருந்த நகரப் பேருந்து டி60வி இயக்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில் அதனை மீண்டும் இயக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) செங்கற்பட்டிலிருந்து சிங்கப்பெருமாள்கோவில், ரெட்டிபாளையம் வழியாக வடக்குப்பட்டுக்கு தினசரி 5 நடைகள் நகரத் தடம் டி60வி மூலம் இயக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டுக்கு முன்பே, சாலை சரியில்லாததால், இத்தடத்தில் பேருந்து அடிக்கடி பழுது ஏற்பட்டு சரிவர இயங்காமல் இருந்தது. மேலும் தடத்தில் ஒரு சிறு பாலம் உடைந்து பேருந்து இயங்க முடியாமல் போனதால் 1994 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நிறுத்தப்பட்டது. தற்பொழுது இத்தடம் தட எண் டி10 என்ற எண்ணில் கீழ்க்கண்டவாறு இயக்கப்படுகிறது.*





*(1) செங்கற்பட்டு-வடக்குப்பட்டு (வழி: வில்லியம்பாக்கம், பாலூர், ரெட்டிபாளையம், குருவன்மேடு-10 நடைகள்)*

*(2) செங்கற்பட்டு-திருமணி-4 நடைகள்*

*(ஆ) இந்த வழித்தடத்தில் ஆப்பூர் கூட்டுச்சாலையில் இருந்து ரெட்டிபாளையம் வரையிலான சாலை சீரமைக்கப்பட்டால், பாலூர் வழியாக இயக்கும் 5 நடைகள் இத்தடத்தின் வழியாக இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

21—

### இரவு நேரப் பேருந்துகள்

**வினா எண் 1580—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம்-வாலாஜாபாத், செங்கற்பட்டு-திருக்கழுக்குன்றம் மாமல்லபுரம்- கல்பாக்கத்திற்கு இரவு நேரப் பேருந்துகள் விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம்-வாலாஜாபாத், செங்கற்பட்டு-திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம்-கல்பாக்கம் வழித்தடத்தில் முறையே இரவு நேரப் பேருந்துகள் இரவு 10-30 மணிக்கும், 11-50 மணிக்கும், 1-30 மணிக்கும் கடைசியாக இயக்கப்படுகிறது. மேற்கொண்டும் இரவு நேரப் பேருந்துகள் விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

22—

### போக்குவரத்துப் பணிமனை அமைத்தல்

**வினா எண் 1866—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் சார்பாக பேருந்து பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு நடவடிக்கையில் உள்ளது.

(ஆ) சங்கராபுரத்தில் பணிமனை அமைக்க நிலம் பெறுவதற்கான உரிய மொழிவுகள் வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணி நடவடிக்கையில் உள்ளது. நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டவுடன் பணிமனை கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

23—

### பறிமுதல் வாகனங்கள்

**வினா எண் 2061—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வழக்குகள் சம்பந்தமாக பறிமுதல் செய்யப்படும் வாகனங்கள் நீண்டகாலமாக உபயோகப்படுத்தப்படாமல் சேதமடைவதை அரசு அறியுமா?



(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது வாகனங்கள் பயனற்று கழிவு ஆவதைத் தவிர்க்க, வழக்கு சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளர்கள், நீதிமன்றத்தில் வேண்டும்போது மேற்படி வாகனத்தைக் கொண்டு வரும்படி தகுந்த பிணைப்பத்திரம் பெற்று வாகன உரிமையாளரிடம் வாகனம் ஒப்புவிக்கப்படுகிறது.

24—

### பேருந்து அல்லது சிற்றுந்து இயக்குதல்

**வினா எண் 2109—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, புதூர்நாடு-சிங்காரப்பேட்டை சாலையில் பேருந்து (அல்லது) சிற்றுந்து (மினிபஸ்) இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதூர்நாடு-சிங்காரப்பேட்டை சாலை குண்டும் குழியுமாக உள்ளது. பேருந்துகள் மற்றும் சிற்றுந்து இயக்கத்திற்கு இச்சாலை ஏற்றதல்ல. எனவே, இச்சாலையில் பேருந்துகளை இயக்க இயலாது.

[2003 மே 10

25—

**பணிமனைக்கு சொந்தக் கட்டடம்**

**வினா எண் 2113—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் பணிமனைக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நில ஆர்ஜித நடவடிக்கை வருவாய் துறையில் நிலுவையில் உள்ளது. எனவே நில ஆர்ஜிதம் மூலம் நிலம் கிடைத்த பின்னர் ஒட்டன்சத்திரம் பணிமனைக்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

26—

**பேருந்து பயண அட்டை**

**வினா எண் 2118—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தலைமைச் செயலக ஊழியர்களுக்கு அவர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்துகொண்டு, அவர்கள் வசிப்பிடத்தில் இருந்து தலைமைச் செயலகம் வரை பேருந்துப் பயண அட்டை (Bus Pass) வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தலைமைச் செயலக ஊழியர்களுக்கு அவர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்துகொண்டு, அவர்கள் வசிப்பிடத்தில் இருந்து தலைமைச் செயலகம் வரை பேருந்துப் பயண அட்டை (Bus Pass) வழங்குவதற்கான திட்டம் எதுவும் இல்லை.



2003 மே 10]

27—

**கூடுதல் நகரப் பேருந்து**

**வினா எண் 2145—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூரிலிருந்து ஆர். கோபிநாதம்பட்டி கூட்டுரோடு சர்க்கரை ஆலை வழியாக பொம்மிடி வரை செல்லும் பாதையில் கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூரிலிருந்து ஆர். கோபிநாதம்பட்டி, கூட்டுரோடு சர்க்கரை ஆலை வழியாக பொம்மிடி வரை செல்லும் வழித்தடத்தில் தருமபுரி அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நாளொன்றுக்கு 22 நடைகள் இயக்கப்படுகின்றன. இதில் பயணிகள் அடர்வு 62 விழுக்காடுகளே உள்ளதால், மேற்கண்ட வழித்தடத்தில் கூடுதல் நகரப் பேருந்து இயக்கிட இயலாத நிலையுள்ளது.

28—

**பணிமனை மாற்றி அமைத்தல்**

**வினா எண் 2158—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேர்ணாம்பட்டு போக்குவரத்துப் பணிமனை தற்போது ஆம்பூருக்கு மாற்றப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் பேர்ணாம்பட்டிற்கு பணிமனையை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) பேர்ணாம்பட்டு போக்குவரத்துப் பணிமனை எப்போதும் போல் பேர்ணாம்பட்டில்தான் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**29—**

**சேது சமுத்திரத் திட்டம்**

**வினா எண் 2370—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேதுசமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசின் பங்கு என்ன?

(ஆ) அதை இந்த நிதியாண்டில் (2000-2001) விரைவுபடுத்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மைய அரசினைச் சார்ந்த தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின்கீழ் (துறைமுகப் பிரிவு) மைய அரசு திட்டமாக சேதுசமுத்திரம் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

(ஆ) சேதுசமுத்திரம் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தப்படும் சூழ்நிலையில் திட்டத்தினை விரைந்து செயல்படுத்த மைய அரசுக்கு தமிழக அரசு முழு ஒத்துழைப்பு வழங்கும்.

**30—**

**மோட்டார் வாகனப் பகுதி அலுவலகம்**

**வினா எண் 2537—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பென்னாகரத்தில் மோட்டார் வாகனப் பகுதி அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இப்பகுதியில் வாகனங்கள் குறைவாகவே உள்ளதால், புதிய அலுவலகம் அமைக்க அவசியம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**31—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 2615—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி-செம்பூர்-அத்திப்பாக்கம்-சோர்த்தூர்-தெய்யார் வழியாக திண்டிவனத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வந்தவாசி-திண்டிவனம் (வழி) செம்பூர், அத்திப்பாக்கம், சோத்தூர் தெய்யார் வழித்தடத்தில் பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது. இந்த வழித்தடத்தில் நேரடிப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**32—**

**பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 3043—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து உசிலம்பட்டி தொகுதி செல்லம்பட்டி ஒன்றியம், கொடிக்குளம், வடுகப்பட்டி நகரப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் பேருந்தை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையம் கொ.வடுகம்பட்டி தடத்தில் செல்லம்பட்டியிலிருந்து ஜோதில்மாணிக்கம் வரையிலும் மற்றும் கொ. வடுகம்பட்டி விலக்கிலிருந்து கொ. வடுகம்பட்டி வரையிலும் உள்ள சாலைகள் படு சேதமடைந்ததால் நவம்பர் 2000-லிருந்து கொ.வடுகம்பட்டி கிராமத்திற்குப் பேருந்து இயக்கம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. மீண்டும் 2-8-2001 முதல் அக்கிராமத்திற்கு மாற்று வழியில் நகரப் பேருந்து மூலம் 4 தனிச் சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**33—**

### நகரப் பேருந்து

**வினா எண் 3044—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி முதல் ஜோதில்மாணிக்கம் வழியாக சோழவந்தான் சென்றுகொண்டிருந்த நகரப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் பேருந்தை இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி-சோழவந்தான் வழித்தடத்தில் செல்லம்பட்டி முதல் ஜோதில்மாணிக்கம் வரை சுமார் அரை கி.மீ. தூரம் உள்ள சாலை பள்ளங்கள் ஏற்பட்டு சேதமடைந்துள்ளதால் உசிலம்பட்டி முதல் ஜோதில்மாணிக்கம் வழியாக சோழவந்தான் சென்று



2003 மே 10]

கொண்டிருந்த நகரப் பேருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. சாலை சீர்செய்யப்பட்ட பின்பு பேருந்து மீண்டும் இயக்கப்படும்.

**34—**

### கூடுதல் பேருந்து

**வினா எண் 3057—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து கே. நாட்டாபட்டிக்குக் கூடுதல் பேருந்து விட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து கே. நாட்டாபட்டிக்குக் கூடுதல் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**35—**

### பேருந்து விடுதல்

**வினா எண் 3075—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதி, மலை கிராமங்களான அரவட்லா, பாஸ்மார்பண்டை ஆகிய கிராமங்களுக்குப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேரணாம்பட்டு-அரவட்லா வழி பாஸ்மார்பண்டை வழித்தடத்தில் தடுப்புச் சுவர்கள் இல்லாததாலும், மூன்று இடங்களில் பாலம் கட்டும்

பணி நடைபெற்று வருவதாலும் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும் இத்தடம் ஒரு புது வழித்தடமாகும். இந்த வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

36—

**பேருந்துகளில் விளம்பரம்**

**வினா எண் 3701—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேருந்துகளில் விளம்பரம் செய்துகொள்ள தனியாருக்கு அனுமதி அளிப்பதன் மூலம் கூடுதல் வருவாய் கிடைப்பதற்கான முயற்சி தீவிரப்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் விளம்பரம் செய்வதற்கு, திறந்த ஒப்பந்தப் புள்ளி மூலம், தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

37—

**உபரி பேருந்துகள்**

**வினா எண் 3702—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேருந்து கிளைகளிலுள்ள உபரி பேருந்துகளைக் கூட்ட நெரிசல் அதிகமாக உள்ள அலுவலக நேரத்தில் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேருந்து கிளைகளிலுள்ள உபரி பேருந்துகளைக் கூட்ட நெரிசல் அதிகமாக உள்ள அலுவலக நேரத்தில் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், கூட்ட நெரிசல் அதிகமாக உள்ள விழா மற்றும் பண்டிகை காலங்களில் மாற்றுப் பேருந்துகளைக் கொண்டு சிறப்புப் பேருந்துகள் தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இயக்கப்பட்டு வருகின்றன.



38—

**பேருந்துகளைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 3733—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பழுதுபார்க்க சொந்தக் கட்டடத்தில் பணிமனை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பழுதுபார்க்க சொந்த கட்டடத்தில் பணிமனை அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது. கோவை அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலையைப் பொறுத்து கோத்தகிரியில் பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

39—

**திருட்டு வாகனங்களைப் பிடிக்கும் திட்டம்**

**வினா எண் 4012—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணினி உதவியுடன் வாகன சோதனை நடத்தி திருட்டு வாகனங்களை உடனுக்குடன் பிடிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கணினி உதவியுடன் வாகன சோதனை நடத்தி திருட்டு வாகனங்களை மீட்கும் திட்டம் ஏதும் தற்போதைக்கு பரிசீலனையில் இல்லை.

40—

நிவாரணத் தொகை

**வினா எண் 4038—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 2000 ஆம் ஆண்டு நடந்த சாலை விபத்துக்களில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு உடனடியாக நிவாரணத் தொகை வழங்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 2000 ஆம் ஆண்டு நடந்த சாலை விபத்துக்களில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை: 9300.

(ஆ) விபத்தில் உயிரிழந்தவர்களுக்கான நிவாரணத் தொகை அரசாணை எண் 817, உள் துறை, நாள் 8-6-1999-ன்படி தகுந்த வாரிசுதாரர்களை அடையாளம் கண்டு அந்தந்த மாவட்ட ஆட்சியரால் முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்கப்படுகிறது. மேலும் அரசாணை எண் 1432, உள் துறை, நாள் 26-9-1997-ன்படி அரசுப் பேருந்துகளில் பயணம் செய்து விபத்துக்களில் சிக்கி உயிரிழப்போர் குடும்பங்களுக்குத் தலா ரூ.50,000/- வீதம் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கையின் அடிப்படையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.



41—

பேருந்து வசதி

**வினா எண் 4098—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, ஆட்டங்குடிக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை தொகுதி, ஆட்டங்குடிக்கு போதுமான அளவில் பேருந்து வசதி உள்ளது. எனவே கூடுதலாகப் பேருந்து இயக்கத் தேவை இல்லை.

42—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

**வினா எண் 4412—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வட்ட அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளதால், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இந்தச் செயற்குறிப்பினைத் தற்போது பரிசீலிக்க வாய்ப்பில்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**43—**

**மீண்டும் நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 4659—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் பவாணியிலிருந்து பூலாம்பட்டி வரை சென்று கொண்டிருந்த தடம் எண் 9 என்ற நகரப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அந்த நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதியில் உள்ள பூலாம்பட்டிக்கு, பவாணியிலிருந்து தற்காலிகமாக இயக்கப்பட்ட பேருந்து தடம் எண்.9, பயணிகள் அடர்வு குறைவு காரணமாக 1994 ஆம் ஆண்டே நிறுத்தப்பட்டுவிட்டது. அதனை மீண்டும் இயக்க அரசிடம் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**44—**

**புதூர் பகுதிக்கு நகரப் பேருந்து**

**வினா எண் 4661—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து (கோட்டம்-1) 3 ஏ என்ற நகரப் பேருந்து ஒரு வருடமாக புதூர் என்ற பகுதிக்குச் சென்று வரவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் புதூர் பகுதிக்குச் சென்று வர ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்-கோட்டம்-1) தடம் எண் 3 ஏ நகரப் பேருந்து நிறுத்தப்படாமல் புதூர் வழியாக எடப்பாடி-ஆடையூர் தடத்தில் நாளொன்றுக்கு தொடர்ந்து 3 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) எழாது.

**45—**

**நகரப் பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 4662—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கச்சுப்பள்ளி வழியாக விடப்பட்டிருந்த 68 ஏ என்ற நகரப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கச்சுப்பள்ளி வழியாக விடப்பட்டிருந்த 68 ஏ என்ற நகரப் பேருந்து, பாதை செப்பனிடும் பணி காரணமாக நிறுத்தப்பட்டு, பின் 3-1-2002 முதல் மீண்டும் கச்சுப்பள்ளி வரை இயக்கப்பட்டு வருகின்றது.

**46—**

**கே.6 பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 4688—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

53-85—67a

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் கிராமம், அக்கரைப்பட்டி வந்து சென்ற கே-6 என்ற நகரப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் கே.6 நகரப் பேருந்து எடப்பாடியிலிருந்து பி. மேட்டுப்பாளையம், அக்கரைப்பட்டி, வெள்ளாளபுரம் வழியாக தாரமங்கலம் வரை இயக்கப்பட்டு வந்தது. பி. மேட்டுப்பாளையம் என்னும் இடத்தில் குடிநீர் குழாய் இணைப்புப் பணி நடந்து வந்த காரணத்தால் 1-6-2001 முதல் தற்காலிகமாக சின்னப்பம்பட்டி வழியாக தாரமங்கலத்திற்கு இயக்கப்பட்டது. குடிதண்ணீர் குழாய் இணைப்பு வேலை முடிவடைந்ததைத் தொடர்ந்து 23-8-2001 முதல் பேருந்து அதற்குரிய வழித்தடத்தில் பி. மேட்டுப்பாளையம், அக்கரைப்பட்டி, வெள்ளாளபுரம் வழியாக தாரமங்கலத்திற்கு இயக்கப்பட்டு வருகின்றது.

47—

**உரிய வழித்தடத்தில் பேருந்தை இயக்குதல்**

**வினா எண் 4689—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், எடப்பாடியில் இருந்து மேட்டூர், ஐ.சி.எச். செல்லும் 11-இ நகரப் பேருந்து அதற்கென உரிய நேரத்தில் உரிய வழித்தடத்தில் செல்லவில்லை என்று அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், 11-இ நகரப் பேருந்து அதற்குரிய வழித்தடத்தில் சரியான நேரத்தில் செல்ல அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், எடப்பாடியிலிருந்து மேட்டூர் ஐ.சி.எச். செல்லும் 11-இ நகரப் பேருந்து அதற்கென உரிய நேரத்தில் உரிய வழித்தடத்தில் செல்லவில்லை என்பது போன்ற புகார் எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

48—

**மரணமடைந்தோர் வாரிசுகளுக்கு வேலை**

**வினா எண் 4724—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஊழியர்கள், மரணமடைந்தால் அவர்களின் வாரிசுகளுக்கு வேலை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துக் கழக ஊழியர்கள் மரணமடைந்தால் அவர்கள் வாரிசுகளுக்கு வேலை வழங்குவதற்கு அரசு ஆணை (நிலை) எண் 680, போக்குவரத்துத் துறை, நாள்: 28-12-1977-ல் வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

49—

**மாநிலம் முழுவதும் ஒரே போக்குவரத்துக் கழகம்**

**வினா எண் 4725—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்களை இணைத்து மாநிலம் முழுவதும் ஒரே போக்குவரத்துக் கழகமாக அமைக்க அரசு பரிசீலிக்குமா?

[2003 மே 10

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**50—**

**சீர்காழி-நாகப்பட்டினம் பேருந்து விடுதல்**

**வினா எண் 4740—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியிலிருந்து காலை 7–30 மணிக்கு மாவட்டத் தலைநகர் நாகப்பட்டினத்திற்கு பேருந்து இயக்கும் திட்டம் அரசிற்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழியிலிருந்து காலை 7–30 மணிக்கு மாவட்டத் தலைநகர் நாகப்பட்டினத்திற்கு பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**51—**

**தனியார் பேருந்துகள்**

**வினா எண் 4810—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்ட சிறு பேருந்துகள் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு இயக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) இல்லையெனில், அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரு சில சிற்றுந்து உரிமையாளர்கள் அனுமதியில் விதித்துள்ள நிபந்தனைகளின்படி சிற்றுந்துகளை இயக்கவில்லை என்ற புகார் அரசுக்கு வந்துள்ளது. விதிகளின்படி இயக்கப்படாத வாகனங்கள் அவ்வப்போது தணிக்கை செய்யப்பட்டு, சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 21-6-2001 முதல் 26-8-2001 வரை மாநிலம் முழுவதும் நடந்த 100% தணிக்கையில் பல்வேறு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**52—**

**மோட்டல்கள் கட்டும் திட்டம்**

**வினா எண் 4867—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலை ஓரங்களில் பேருந்துப் பயணிகள் வசதிக்காக மேலும் பல மோட்டல்கள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெடுஞ்சாலை ஓரங்களில் மோட்டல்கள் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**53—**

**சுரண்டையில் பணிமனை**

**வினா எண் 4894—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, சுரண்டையில் அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனை ஏற்படுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி மூலம் தென்காசி தொகுதி சுரண்டையில் பணிமனை அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

*(ஆ)* இவ்வினாவிற்கு இடமில்லை.

**54—**

**பேருந்து வசதி**

**வினா எண் 4983—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, நிமூர், பாச்சாரப்பாளையம் பெரிய கோயில்குப்பம் - குறிஞ்சிப்பாடி பேருந்து வசதி செய்து தரப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பண்ருட்டி தொகுதி, பெரியகோயில் குப்பத்திலிருந்து பாச்சாரப்பாளையம் வரையிலான 1.5 கி.மீ. சாலையானது பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**55—**

**விரைவுப் பேருந்துகள் நின்று செல்தல்**

**வினா எண் 4990—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சி புதிய பேருந்து நிலையத்தில் அரசு விரைவுப் பேருந்துகள் நின்று செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு, கல்லிடைக்குறிச்சி புதிய பேருந்து நிலையம் கட்டண நிலை இல்லை. உத்தரவுப்படி, கல்லிடைக்குறிச்சி பேருந்து நிலையம், அதன் வழியாகச் செல்லும் விரைவுப் பேருந்துகள் அனைத்திற்கும் பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, நிறுத்துமிடமாக அறிவித்து, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

**56—**

**அம்மாபட்டிக்கு நகரப் பேருந்து**

**வினா எண் 5002—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து அம்மாபட்டி கிராமத்திற்கு நகரப் பேருந்து எண் 19 (உடுமலை-திருமூர்த்திமலை) அரசுப் பேருந்து வந்து செல்லும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து, அம்மாபட்டி கிராமத்திற்கு, நகரப் பேருந்து எண் 19 (உடுமலை-திருமூர்த்திமலை) பேருந்து வந்து செல்லும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* இக்கேள்வி எழாது.

[2003 மே 10

57—

### போக்குவரத்துக் கழக முன்பதிவு அலுவலகம்

**வினா எண் 5105—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரில் அரசுப் போக்குவரத்துக் கழக முன்பதிவு அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனை நிறைவேற்றுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரத்தின் கட்டுப்பாட்டில் வரும் செங்கற்பட்டு பணிமனையிலிருந்து இயக்கப்படும் அனைத்துத் தடங்களும் 150.00 கி.மீ. தூரத்திற்குள் உள்ளன. எனவே, செங்கற்பட்டு நகரில் இருக்கை முன்பதிவு செய்யும் அலுவலகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் முன்பதிவு அலுவலகம் ஒன்று செயற்பாட்டில் ஏற்கெனவே இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

58—

### கூடுதல் பேருந்துகள்

**வினா எண் 5109—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கம் அரசுப் பேருந்துகள் பணிமனையிலிருந்து எத்தனை பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்று அரசு அறிவிக்குமா?

(ஆ) கூடுதலாக பேருந்துகள் பல தடங்களில் இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கல்பாக்கம் பணிமனையிலிருந்து தற்போது 52 புறநகர் பேருந்துகளும் ஒரு நகரப் பேருந்தும் இயக்கப்படுகிறது.

(ஆ) கல்பாக்கத்தைச் சுற்றியுள்ள மக்களின் போக்குவரத்துத் தேவைக்கு தற்பொழுது இயக்கப்பட்டு வரும் பேருந்துகளே போதுமானது. எனவே கல்பாக்கம் பணிமனையிலிருந்து புதிய தடங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்கும் திட்டம் இல்லை.

59—

### அம்மாபட்டிக்கு 13 ஆம் எண் பேருந்து வருதல்

**வினா எண் 5403—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து, அம்மாபட்டியில் வாளவாடி வரை வரும் பேருந்து எண் 13-ஐ அனைத்து நடைகளையும் (டிரிப்பும்) அம்மாபட்டிக்கு வந்து செல்லும் வசதி செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து, அம்மாபட்டியில் வாளவாடி வரை செல்லும் பேருந்து எண் 13-ன் அனைத்து நடைகளையும் அம்மாபட்டி வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

60—

## இலவச பேருந்து பயண அட்டை

**வினா எண் 5801—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அரசு தனியார் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* வினாவில் கண்டுள்ளதுபோல் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

*(ஆ)* இவ்வினா எழ வாய்ப்பில்லை.

61—

## புதுப் பேருந்துகள் வாங்குதல்

**வினா எண் 5881—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதியில் பேருந்து வசதி செய்து கொடுப்பதற்காக போக்குவரத்துக் கழகத்திற்கு அதிக புதுப் பேருந்துகள் வாங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நடப்பு நிதியாண்டில் திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய பேருந்துகள் ஒதுக்கீடு செய்யும்போது சேரன்மகாதேவி தொகுதியில் இயங்கி வரும் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் முன்னுரிமை அடிப்படையில் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



62—

## போக்குவரத்தை மேம்படுத்துதல்

**வினா எண் 5984—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* போக்குவரத்தை மேம்படுத்த தமிழக அரசு விரிவான திட்டம் ஒன்று தீட்டி வருகிறதா?

*(ஆ)* ஆம் எனில், இது குறித்த விவரங்கள் யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

### அறிக்கை

*(அ)* ஆம்.

*(ஆ)* போக்குவரத்துக் கழகங்களின் இடர்ப்பாட்டைக் களைந்து அவற்றை மேம்படுத்த அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:—

*(1)* சகோதரப் போக்குவரத்துக் கழகங்களுக்கிடையில் தேவையற்ற போட்டியினைத் தவிர்க்கவும், பெருமளவில் செலவினத்தைக் குறைக்கவும், இதுவரை இணைக்கப்படாமல் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களின் கோட்டங்களை இணைப்பதென அரசு முடிவெடுத்து போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைக்கும் வரைவு இணைப்புத் திட்டம் அந்தந்த போக்குவரத்துக் கழகங்களால் மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் நிர்வாகச் செலவு குறைந்து இலாபம் ஈட்ட வழிவகை ஏற்படும்.

(2) நடப்பு நிதியாண்டில், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் 1550 புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வகையில் அரசின் பொறுப்புறுதியுடன் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ.100 கோடி கடன் பெற்று, போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மூலமாக போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கவும், அதன் மூலம் 1000 புதிய பேருந்துகள் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக நடப்பு நிதியாண்டில், வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், டிசம்பர் 2001 முதல் பயணக் கட்டண விகிதம் திருத்தப்பட்டதன் விளைவாக, விழுப்புரம், தருமபுரி, ஈரோடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் இலாபம் ஈட்டத் துவங்கியுள்ளதால், அப்போக்குவரத்துக் கழகங்கள் இதுவரை 305 புதிய பேருந்துகளை வாங்கி அறிமுகப்படுத்தியுள்ளன. பழுதடைந்த பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் இயக்கப்படுவதன்மூலம் வருவாய் பெருக வாய்ப்புள்ளது.

(3) பயணச் சீட்டின்றி பயணம் செய்பவர்களைக் கண்டறிந்து அபராதத் தொகை வசூலிக்கும் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால், தினசரி போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் இழப்பு தவிர்க்கப்பட்டு, ஓரளவுக்கு வருவாய் பெருக வாய்ப்புள்ளது. 25-7-2001 அன்று அதிரடிப் பயணச்சீட்டுச் சோதனை நாள் கடைப்பிடிக்கப்பட்டு, அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் 80,313 சோதனைகள் செய்யப்பட்டு, 3,740 பயணிகள் பயணச்சீட்டு வாங்காமல் இருந்தது கண்டறியப்பட்டு, அவர்களிடமிருந்து ரூ.1.12 இலட்சம் வசூலிக்கப்பட்டது. பேருந்து பயண அட்டை உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

(4) பேருந்துகளை குறித்த நேரத்தில், தடமுடக்கமின்றி இயக்கவும், அனைத்து நிறுத்தங்களிலும் பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்லவும், பாதுகாப்பான, சிறந்த சேவை பொதுமக்களுக்கு வழங்கவும், ஓட்டுநர், நடத்துனர்களுக்கு பிரத்யேகப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(5) தரமான, தேவையான உதிரிப் பாகங்களைக் கொள்முதல் செய்து பேருந்துகளை சிறப்பான முறையில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(6) திருவிழாக் காலங்கள், முகூர்த்த நாட்கள் மற்றும் முக்கியப் பண்டிகை நாட்களில் அதிக எண்ணிக்கையில் பொதுமக்கள் நன்மை





பெறும் வகையில் வசதியான பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(7) கிலோ மீட்டர் திறன், கிலோ மீட்டர் தூரத்திற்கான ஆயுள் திறன், டயருக்கான ஆயுள் திறனும் தீவிர நடவடிக்கைகள் காரணமாக அதிகரித்துள்ளன.

(8) அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் கணினிமயமாக்கப்பட்டதன் மூலம் போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாகச் சீர்திருத்தம் ஏற்பட்டுள்ளது.

(9) நன்றாகப் பராமரிப்பு மேற்கொள்ளாத பணிமனைகளில் வாரத்தில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து மேற்பார்வையிட அனைத்து நிர்வாக இயக்குநர்களும் பணிக்கப்பட்டுள்ளனர். மேலும், வருவாய்த் திறனை அதிகரிக்கவும், பணிமனைகளின் பராமரிப்புத் திறனை மேம்படுத்தவும் தேவையான திருத்த நடவடிக்கைகளை எடுக்கிறார்களா என்று கண்காணிக்கும்படியும் பணிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலத்தில் ஏறக்குறைய 70 கோடி ரூபாய் அளவிற்கு மோட்டார் வாகன விபத்து அதிகரித்துள்ளதால், விபத்துக்களைக் குறைக்கும் வண்ணம், சீரிய முயற்சிகளை மேற்கொள்ள அனைத்து நிர்வாக இயக்குநர்களும் பணிக்கப்பட்டுள்ளனர்.

(10) அலுவல் செலவினங்களைக் குறைக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(11) நிர்வாக இயக்குநர்களிடையே ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் வழித்தடங்கள் மற்றும் இயக்கங்களைச் சீரமைக்கவும், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கிடையே ஏற்படும் கசப்பான போட்டி மனப்பான்மையைத் தவிர்க்கும் வகையிலும் செயல்படுவார்கள். இந்த ஒருங்கிணைப்பு அதிகாரிகள் அந்தந்த வட்டாரத்திலுள்ள கழகங்களில் உள்ள பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வருகிறார்கள்.

(12) விபத்து இழப்பீட்டுத் தொகை 1991-92-ல் ரூ.16.03 கோடியாக இருந்தது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.68.33 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. எனவே, அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஏற்படும் விபத்துக்களைக் குறைக்கும் பொருட்டு, தக்க நடவடிக்கைகளை எடுக்க மிகவும் முக்கியத்துவம் தரப்பட்டு வருகிறது. விபத்தினைத் தவிர்த்து பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் பொருட்டு, சில

நடவடிக்கைகளை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் எடுத்துள்ளன. ஓட்டுநர்களின் கவனக் குறைவினாலேயே பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. யோகாசனப் பயிற்சி, ஓட்டுநர்களுக்கு ஒருமித்த கவனத்தை அளிக்க உதவி புரிவதால் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கும் யோகாசனப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

*(13)* ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் ஓட்டுநர்களுக்கு, விபத்துக்கள் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, பாதுகாப்புப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

*(14)* சாலை விதிகளை மீறும் ஓட்டுநர்களை இனம் கண்டுகொள்ளும் பொருட்டு, தொடர்ந்து சாலைப் பாதுகாப்புச் சுற்றுக் காவல் முறை ஏற்படுத்தப்பட்டு, தவறு செய்பவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*(15)* விபத்தினைத் தவிர்த்து, பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யும் பொருட்டு, அரசு போக்குவரத்துக் கழகங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஓட்டுநர்கள் விபத்தின்றிப் பணிபுரிவது தொடர்பாக பாதுகாப்பு விழிப்புணர்வை அவர்களுக்குப் பயிற்றுவிக்கும் பொருட்டு, பேருந்துகளைப் பாதுகாப்பாக ஓட்டுவதற்கான பரிசுத் திட்டம் ஒன்றை போக்குவரத்துக் கழகங்களில் உருவாக்கியுள்ளார்கள். இத்திட்டம் ஓட்டுநர்கள் நன்முறையில் பேருந்துகளை இயக்கி, விபத்தின்றி ஓட்டியதற்கான பதிவேட்டை உடையவர்களாக இருக்க ஊக்குவிக்கிறது. திறமை வாய்ந்த ஓட்டுநர்களை உருவாக்கும் வகையில், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை நடத்தி வருகின்றன.

*(16)* தொடர்ந்து 10 ஆண்டு காலம் விபத்தில்லாமல் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கும், தொடர்ந்து விபத்தில்லாமல் பணிபுரிந்த ஒவ்வொரு 10 ஆண்டு காலத்திற்கும், ஒரு சிறப்பு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

*(17)* விபத்தினைத் தவிர்க்க வேண்டுமென்ற உணர்வினை ஓட்டுநர்கள் மத்தியில் உருவாக்கும் வகையில், புத்தாக்கப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. அடிக்கடி விபத்தினை ஏற்படுத்தும் ஓட்டுநர்கள், ஓட்டுநர் பணியில் உள்ள குறைகளைச் சரிசெய்து கொள்ளவும், விபத்துக்களைத் தவிர்க்கவும், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில் புத்தாக்கப் பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.



*(18)* பேருந்துகளை சிறப்பாக இயக்கும் திறமை வாய்ந்த ஓட்டுநர்களை உருவாக்கும் நோக்கத்துடன், சாலைப் போக்குவரத்து நிறுவனம், ஓட்டுநர் பயிற்சிக்கென ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், நல்ல உடற்கட்டுள்ள, பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு 12 வாரங்களுக்கு கனரக மோட்டார் வாகனங்களை இயக்குதல், பேருந்தில் ஏற்படும் பழுதுகளைச் சரிபார்த்தல், பொதுமக்களுடன் நல்லுறவு மற்றும் முதலுதவி அளித்தல் ஆகியவற்றில் தீவிர பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் முன்னுரிமை அளிக்கப்படுகின்றன.

*(19)* மோட்டார் வாகன தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகவும், விபத்துக்கள் நேரா வண்ணமும், சாலைப் போக்குவரத்து விதிகளை நன்கு அறிந்து கொள்வதற்கு ஏதுவாகவும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கனரக வாகன ஓட்டுநர்களாக நியமனம் பெறுவதற்குரிய கல்வித் தகுதியை 8 ஆம் வகுப்பிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி/ பத்தாம் வகுப்புத் தேர்ச்சி என உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

*(20)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விபத்துக்களை குறைக்கும் நோக்கத்துடன், ஓட்டுநர்களின் சிரமத்தைக் குறைக்க, அவர்கள் இரவில் மூன்று மணி நேரத்திற்கு மேலாக தொடர்ச்சியாகப் பேருந்துகளை இயக்கக் கூடாது என்று அறிவுறுத்தியுள்ளார். அதற்கேற்ற வகையில், ஓட்டுநர்களை சரியான இடைவெளியில் மாற்றும்படி நடவடிக்கை எடுக்க, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

**63—**

## பேருந்து வழித்தடம் மாற்றம்

**வினா எண் 6029—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி கிளையில் இயங்கிக் கொண்டிருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் 8-ஏ-யை ஆத்தாளூர், நாடாகாடு வழியாக மாற்றி விடும் செயற்குறிப்பு உள்ளதா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி கிளையில் இயங்கிக் கொண்டிருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் 8-ஏ-யை ஆத்தாளூர், நாடாகாடு வழியாக மாற்றி விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**64—**

**அகல இரயில் பாதையை துரிதமாக்குதல்**

**வினா எண் 6275—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருச்சி - நாகூர் - காரைக்கால் அகல இரயில் பாதையை துரிதமாக அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருச்சிராப்பள்ளி - தஞ்சாவூர் - நாகூர் - காரைக்கால் இரயில் பாதையை அகலப் பாதையாக மாற்றும் திட்டத்தைப் பொறுத்தவரை, திருச்சிராப்பள்ளி - தஞ்சாவூர் இணை அகல இரயில் பாதை (50 கிலோ மீட்டர்) முடிக்கப்பட்டு, 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக நாகப்பட்டினம் முதல் வேளாங்கன்னிக்கு (8.6 கி.மீ.) புதிய இரயில் பாதை அமைக்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு பெரும்பாலங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**65—**

**பேருந்து வசதி**

**வினா எண் 6303—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

*(அ)* பண்ருட்டி தொகுதி, முத்தரசன்குப்பம் ஊராட்சியில் பள்ளி நேரங்களில் பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பண்ருட்டியிலிருந்து முத்தரசன்குப்பம் கிராமத்திற்கு நகரத்தடம் டி6, டி18, டி23 ஆகிய பேருந்துகளின் மூலம் நாளொன்றுக்கு 24 நடைகளில் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. மாணவ-மாணவியரும் தற்போது இப்பேருந்து வசதியைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே பள்ளி நேரங்களில் கூடுதல் நடைகளை இயக்கிடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**66—**

**பேருந்து நிரந்தரமாக இயக்குதல்**

**வினா எண் 6377—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, மாளிகம்பட்டு கிராமத்தில் அரசுப் பேருந்து வழித்தடம் எண் 5-ல் நிரந்தரமாக இயக்க இயலுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் மூலம் இயக்கப்படும் நகரப் பேருந்து வழித்தடம் எண் 5, பல்திசை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருவதால், அதன் அனைத்து நடைகளையும் பண்ருட்டி தொகுதி மாளிகம்பட்டு கிராமத்திற்கு நிரந்தரமாக இயக்க இயலாத நிலை உள்ளது.

67—

### பேருந்து வசதி செய்தல்

**வினா எண் 6394—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட ரெட்டிப்பாளையம் ஊராட்சியில் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட ரெட்டிப்பாளையம் ஊராட்சியில் பல்திசை வழித்தடத் திட்டத்தின் அடிப்படையில் தடம் எண் டி5, டி14 மற்றும் டி26 ஆகிய மூன்று நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ரெட்டிப்பாளையம் ஊராட்சியில் தற்பொழுது இயங்கும் பேருந்துகளே இக்கிராமத்திற்குப் போதுமானதாகக் கருதப்படுவதால் கூடுதல் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

68—

### கூடுதல் பேருந்து விடுதல்

**வினா எண் 6427—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கருக்கை கிராமத்திற்கு ஒரு கூடுதல் பேருந்து விட இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கருக்கை கிராமத்திற்கு கூடுதல் பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

69—

### பேருந்து வசதி

**வினா எண் 6428—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுவத்தூர் கிராமத்தில் பேருந்து வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி-சிறுவத்தூர் வழித்தடத்தில் விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்து தடம் எண் டி18 இரண்டு நடைகளில் ஏற்கெனவே இயக்கப்பட்டு வருகிறது. 7-3-2002 முதல் இப்பேருந்து மேலும் இரண்டு கூடுதல் நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

70—

### அரசுப் பேருந்து

**வினா எண் 6429—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) பண்ருட்டி தொகுதி, சாத்தமாம்பட்டு கிராமத்திற்கு அரசுப் பேருந்து விட முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சாத்தமாம்பட்டு கிராமத்திற்கு, பகுதிவாரியாக பேருந்து வசதியளிக்கப்பட்டுள்ளதால், தற்பொழுது அளிக்கப்பட்டு வரும் பேருந்து வசதியே போதுமானதாக உள்ளதென்பதால், கூடுதல் பேருந்து வசதியளிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

71—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 6452—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரம் வழியாக முக்கூடல்-ஹைகிரவுண்ட் (பாளையங்கோட்டை மேட்டுத்திடல்) பேருந்து ஒன்று இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முக்கூடலிலிருந்து திருநெல்வேலிக்கும், திருநெல்வேலியிலிருந்து மேட்டுத்திடலுக்கும் இரு பகுதிகளாக பெருமளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம் வடக்கு அரியநாயகிபுரம் வழியாக முக்கூடல் - ஹைகிரவுண்டுக்கு (பாளையங்கோட்டை மேட்டுத் திடலுக்கு) பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2003 மே 10]

72—

## டபிள்யூ-6 பேருந்தை இயக்குதல்

**வினா எண் 6623—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தடம் எண் டபிள்யூ-6 வந்தவாசி - உத்திரமேரூர் 2 முறையும், வந்தவாசி - இருப்பேடு 2 முறையும் இயங்க, அரசு ஆணை இருந்தும் இயங்காததினால், ஆணைப்படி டபிள்யூ-6 பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் டபிள்யு-6 பேருந்து மூலம் வந்தவாசி - உத்திரமேரூர் (வழி) இருப்பேடு என 6 நடைகளும் மற்றும் வந்தவாசி - இருப்பேடு 2 நடைகளும், ஆக மொத்தம் 8 நடைகள் வேலூர் அரசு போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகிறது.

73—

## பள்ளிக்கூட நேரங்களில் பேருந்தை இயக்குதல்

**வினா எண் 6645—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம்-சிவநாடானூர் வழித்தடம் 5-பி காலை, மாலை பள்ளிக்கூட நேரங்களில் இயக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம்-சிவநாடானூர் வழித்தடம் 5-பி காலை மற்றும் மாலை பள்ளிக்கூட நேரங்களில் மாணவ/மாணவியர்கள் சென்று வருவதற்கு ஏதுவாக முறையாக இயக்கப்பட்டு வருகிறது.

74—

### பேருந்து இயக்கம்

**வினா எண் 6648—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1ஜி, 10ஏ ஆகிய பேருந்து தடம் எண் கொண்ட வீரவநல்லூர்-சேரன்மகாதேவி பேருந்தை பொட்டல், ரெட்டியார்புரம், புதூர் வழியாக இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அக்டோபர் 2001 முதல் 1ஜி, 10ஏ ஆகிய பேருந்துகள் பொட்டல், ரெட்டியார்புரம், புதூர் வழியாக மொத்தம் 8 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது.

75—

### விடியோ கோச் பேருந்துகள்

**வினா எண் 6638—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவியிலிருந்து குற்றாலம், மதுரை வழியாக குளிர்சாதன வசதியுடன் கூடிய வீடியோ கோச் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சேரன்மகாதேவியிலிருந்து குற்றாலம் வழியாக குளிர்சாதன வசதியுடன் கூடிய வீடியோ கோச் பேருந்து இயக்கத் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.



76—

### நிறுத்தப்பட்ட பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 6929—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் கிராமம் வழியாக இயங்கிக் கொண்டிருந்த தடம் எண் 7, தடம் எண் 5பி ஆகிய இரு பேருந்துகளும் நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இப்பேருந்துகள் மீண்டும் இயக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் கிராமம் வழியாக இயங்கிக் கொண்டிருந்த தடம் 7 மற்றும் 5 பி ஆகிய இரு பேருந்துகளும் மிகக் குறைந்த பயணிகள் விகிதாச்சாரம் காரணமாக மிகக் குறைந்த வருவாய் ஈட்டியதால் 10 ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, மீண்டும் மேற்கூறிய வழித்தடங்களை இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

### சிற்றுந்து இயக்கும் திட்டம்

**வினா எண் 6931—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் - பாவூர்சத்திரம் வரை இயங்கும் சிற்றுந்தை சடையப்பபுரம் வழியாக இயக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலப்பாவூர்-தென்காசி தடத்தில் கடப்பாகத்தி வழியாகச் செல்லும் பகுதியில் சடையப்பபுரம் உள்ளது. இத்தடத்தில் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தடம் எண் 1 மற்றும் தடம் எண் 22 ஆகிய நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலப்பாவூர் தேவர் திருமண மண்டபம் முதல் சடையப்பபுரம் வரை பேருந்து செல்லும் பகுதி 1.1 கிலோ மீட்டர் தூரம் ஆகும். மேலப்பாவூர் முதல் பாவூர்சத்திரம் வரை இயக்கப்படும் சிற்றுந்து ஏற்கனவே பேருந்து செல்லும் தடத்தில் 3.9 கிலோ மீட்டர் தூரம் செல்வதாலும், சடையப்பபுரம் வரை பேருந்து செல்லும் கூடுதல் தூரம் 1.1 கிலோ மீட்டர் என்பதாலும், தற்போது பேருந்து செல்லும் பாதையில் (Served Sector) சிற்றுந்து 4 கிலோ மீட்டர் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுவதால், மேலப்பாவூர் முதல் பாவூர்சத்திரம் வரை இயங்கும் சிற்றுந்தை சடையப்பபுரம் வழியாக இயக்க வாய்ப்பில்லை.

**78—**

### பேருந்து

**வினா எண் 6932—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி-கடையம் நகரப் பேருந்து தடம் எண் 16 கல்லூரணி, சின்னதம்பி நாடானூர் வழியாக இயக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கல்லூரணி, சின்னதம்பி நாடானூர் ஆகிய கிராமங்களுக்கு ஏற்கெனவே போதிய பேருந்து வசதி உள்ளதால், தென்காசி-கடையம் நகரப் பேருந்து தடம் எண் 16-ஐ மேற்கூறிய கிராமங்கள் வழியாக இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2003 மே 10]

**79—**

### பேருந்து சீராக இயக்குதல்

**வினா எண் 7004—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடானூருக்கு ஆலங்குளத்தில் இருந்து பூலாங்குளம் ஆவுடையானூர் வழியாக இயங்கிக்கொண்டிருந்த நகரப் பேருந்து வழித்தடம் எண் 5பி-ஐ சீராக இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடானூருக்கு ஆலங்குளத்தில் இருந்து பூலாங்குளம் ஆவுடையானூர் வழியாக இயங்கிக்கொண்டிருந்த நகரப் பேருந்து வழித்தடம் எண் 5பி தினசரி 4 சுற்றுக்கள் சீராக இயக்கப்பட்டு வருகிறது.

**80—**

### 13, 13ஏ பேருந்துகள் இயக்கம்

**வினா எண் 7005—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி - சுரண்டை நகரப் பேருந்து தடம் எண் 13, 13ஏ ஆகிய இரு பேருந்துகளையும் கல்லூரணி, சின்னதம்பி நாடானூர் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தென்காசி - சுரண்டை நகரப் பேருந்து தடம் எண் 13, 13ஏ ஆகிய இரு பேருந்துகளையும் கல்லூரணி, சின்னதம்பி நாடானூர் வழியாக சுற்றுத்தடத்தில் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

81—

### நிறுத்தப்பட்ட 6ஏ, 5பி பேருந்துகள் மீண்டும் இயக்கம்

**வினா எண் 7006—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூரணி வழியாகச் சென்று கொண்டிருந்த நகரப் பேருந்து தடம் எண் 6ஏ, 5பி நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் 6ஏ பேருந்து, குறைவான பயணிகள் அடர்வு காரணமாக மிகக் குறைந்த வருவாய் ஈட்டியதால், நட்டத்தைத் தவிர்க்கும் பொருட்டு ஏப்ரல் 2001 முதல் 11-1-2002 வரை நிறுத்தப்பட்டது. பின்னர் 12-1-2002 முதல் கல்லூரணி வழியாக 7 சுற்றுக்கள் முறையாக இயக்கப்பட்டு வருகிறது. பின்னர் சட்டமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க தடம் எண் 5பி ஆலங்குளம்-முத்துமாலைபுரம் (வழி) மைலப்பபரம், ஆவுடையானூர், பாவூர்சத்திரம், கல்லூரணி தடத்தில் 4 சுற்றுக்கள் சீராக இயக்கப்பட்டு வருகிறது.

82—

### அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்லுதல்

**வினா எண் 7007—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசியிலிருந்து 7 கி.மீ. தொலைவிலுள்ள மத்தளம்பாறையில் அவ்வழியாகச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் நின்று போக அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தென்காசியிலிருந்து மத்தளம்பாறை வழியாக இயக்கப்படும் அனைத்து நகரப் பேருந்துகளும் மற்றும் சாதாரண புறநகர்ப் பேருந்துகளும் மத்தளம்பாறையில் ஏற்கெனவே நின்று செல்கின்றன. 1-12-2001 முதல் விரைவுப் பேருந்துகளும் நின்று செல்லத்தக்கவாறு கட்டண நிலை அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

83—

### பேருந்தை மீண்டும் இயக்குதல்

**வினா எண் 7009—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி சட்டமன்றத் தொகுதியில் உள்ள சுந்தரபாண்டியபுரம், சுரண்டை நகரப் பேருந்து, கடந்த மூன்றாண்டு காலமாக நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் 1பி, சுந்தரபாண்டியபுரத்திலிருந்து திருச்சிற்றம்பலம் ஊருக்குள் செல்லும் பாதை, பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லாததால் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சுந்தரபாண்டியபுரத்திற்கு அப்பால் இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டது. தற்போது சாலை சரிசெய்யப்பட்டதால், 20-8-2001 முதல் மேற்படி பேருந்து உரிய தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றது.

84—

### பேருந்து வசதி

**வினா எண் 7011—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) கீழப்பாவூர் ஒன்றியம், மேலகிருஷ்ணப்பேரியிலிருந்து அத்தியூத்து அடைக்கலப்பட்டணம் வழியாக தென்காசி சென்றுவர பேருந்து வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கீழப்பாவூர் ஒன்றியம் மேலகிருஷ்ணப்பேரியிலிருந்து அத்தியூத்து அடைக்கலப்பட்டணம் வழியாக தென்காசி சென்றுவர பொதுமக்களின் தேவைக்கேற்ப பகுதி, பகுதியாக பேருந்து வசதி உள்ளதால் மேலகிருஷ்ணப்பேரியிலிருந்து நேரடியாக தென்காசி சென்று வரும்படி பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

**விரைவுப் பேருந்து நின்று செல்லுதல்**

**வினா எண் 7017—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி ஒன்றியம், மேலகரம் பேரூராட்சி, நன்னகரம் கிராமத்தில் விரைவுப் பேருந்துகள் அனைத்தும் நின்று போக அரசு ஆணை பிறப்பித்தும் எந்த ஒரு விரைவுப் பேருந்தும் நின்று போகவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு நன்னகரம் கட்டண நிலை இல்லை. தொலைதூரப் பயணிகளின் வசதிக்காக இயக்கப்படும் விரைவுப் பேருந்துகள், நகரப் பேருந்துகளைப் போன்று எல்லா கிராமங்களிலும் நின்று செல்ல இயலாது. எனவே, நன்னகரத்தில் விரைவுப் பேருந்துகள் நின்று செல்ல சாத்தியமில்லை.



2003 மே 10]

86—

**பேருந்துகளை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 7018—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கோட்டையிலிருந்து மைசூர், சேலம், பாண்டிச்சேரி, தஞ்சாவூர், பாலக்கோடு மற்றும் இராமேஸ்வரம் ஆகிய 6 வழித்தடங்களில் இயங்கிக் கொண்டிருந்து, பின்னர் நிறுத்தப்பட்டுள்ள அரசுப் பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை —**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் செங்கோட்டையிலிருந்து மைசூர், சேலம், பாண்டிச்சேரி, தஞ்சாவூர், பாலக்காடு மற்றும் இராமேஸ்வரம் ஆகிய வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

**டயர் புதுப்பிக்கும் பிரிவை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 7019—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விரைவுப் பேருந்து செங்கோட்டை பணிமனையில் மூடப்பட்ட டயர் புதுப்பிக்கும் பிரிவை மீண்டும் இயக்க வேண்டும் என்ற திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மீண்டும் துவக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக செங்கோட்டை பணிமனையில் மூடப்பட்டுள்ள டயர் புதுப்பிக்கும் பிரிவை மீண்டும் இயக்கத் திட்டம் ஏதும் இல்லை.

[2003 மே 10

88—

**பேருந்துகளின் எண்ணிக்கையை உயர்த்துதல்**

**வினா எண் 7139—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் போன்ற மாநகரங்களில் தற்போது இயங்கி வரும் அரசுப் போக்குவரத்து பேருந்துகளின் எண்ணிக்கையை உயர்த்தும் உத்தேசம் உண்டா? அல்லது அரசு, மினி பஸ்களை இயக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் நிதிநிலைமை சீரடையும் வரை, கோயம்புத்தூர் போன்ற மாநகரங்களில் அரசுப் பேருந்துகளின் எண்ணிக்கையினை உயர்த்தும் உத்தேசம் ஏதும் அரசிடம் இல்லை. மேலும், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மினி பேருந்துகளை இயக்குவதற்கு அரசிடம் தற்போது திட்டம் ஏதும் பரிசிலனையில் இல்லை.

89—

**குடிபோதையில் ஓட்டுதலைத் தடுத்தல்**

**வினா எண் 7209— டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இரவு நேரங்களில் வாகன ஓட்டுநர்கள் குடிபோதையில் வாகனங்கள் ஓட்டுவதைத் தடுக்க அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வாகன ஓட்டுநர்கள் குடிபோதையில் வாகனங்களை ஓட்டுகிறார்களா என்பது காவல் துறையினரால் அவ்வப்போது சோதனை செய்யப்பட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2003 மே 10]

90—

**கூடுதலாகப் பேருந்து**

**வினா எண் 7364—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியிலிருந்து மோரமடுகு வரையுள்ள 41 ஆம் எண் பேருந்தின் வழித்தடத்தில் கூடுதலாகப் பேருந்து ஒன்று இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரியிலிருந்து மோரமடுகு வரையுள்ள 41 ஆம் எண் பேருந்தின் வழித்தடத்தில் கூடுதலாகப் பேருந்து ஒன்று இயக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை.

91—

**சொகுசுப் பேருந்து**

**வினா எண் 7575— டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கந்தர்வகோட்டையில் இருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து விடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் கந்தர்வகோட்டையிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்க திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

92—

## மீண்டும் பேருந்தை இயக்குதல்

**வினா எண் 7580—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை-துருசுப்பட்டி, புதுநகர், கொத்தகம் வழியாக சமுத்திரப்பட்டி வரை சென்று கொண்டு இருந்த பேருந்து நிறுத்தப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் இயக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை-சமுத்திரப்பட்டி (வழி) துருசுப்பட்டி, புதுநகர், கொத்தகம் வழித்தடத்தில் இயக்கப்பட்டு பயணிகள் அடர்வு இல்லாததால் நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

93—

## பெரிய கழகங்களுடன் இணைத்தல்

**வினா எண் 7716—திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிர்வாகச் செலவு அதிகரிப்பைத் தவிர்க்க தமிழக அரசின் சிறிய போக்குவரத்துக் கழகங்களைப் பெரிய கழகங்களுடன் இணைக்க அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

நிர்வாகச் செலவுகளைக் குறைக்கவும், தேவையற்ற போட்டியைத் தவிர்க்கவும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைப்பதென அரசு முடிவெடுத்துள்ளது.

2. மாநகர போக்குவரத்துக் கழகக் கோட்டம் 1-உடன் மாநகரப் போக்குவரத்துக் கழகம் கோட்டம், 2-ஐயும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோவை-கோட்டம், 1-உடன் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் கோவை-கோட்டம், 3-ஐயும், ஒருங்கிணைக்கும் பணி 10-1-2001 மற்றும் 7-11-2000-இல் முடிவடைந்து விட்டது. மேலும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு-கோ.1)-உடன், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு-கோ.2)-ஐயும் ஒருங்கிணைக்கும் பணி 12-1-2002-ல் முடிவடைந்துவிட்டது. மீதம் உள்ள பதினாறு போக்குவரத்துக் கழகங்களையும் ஐந்து போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைக்க வேண்டும். தற்போது கீழ்க்கண்டவாறு போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைக்கத் தீர்மானிக்கப்பட்டு வரைவு கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

| வ.எண் | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | ஒருங்கிணைப்பிற்குப்பின் கழகத்தின் பெயர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்-கோட்டம். 1) விழுப்புரம். | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், (விழுப்புரம்), விழுப்புரம். |
| 2. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்-கோட்டம். 2) வேலூர். | |
| 3. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்-கோட்டம். 3) காஞ்சிபுரம். | |
| 4. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்-கோட்டம். 1) சேலம். | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், (சேலம்) சேலம். |
| 5 | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்-கோட்டம்.2) தருமபுரி. | |

| வ.எண் (1) | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் (2) | ஒருங்கிணைப்பிற்குப்பின் கழகத்தின் பெயர் (3) |
|---|---|---|
| 6. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை-கோட்டம். 1) கோயம்புத்தூர். | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், (கோவை) கோயம்புத்தூர். |
| 7. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை-கோட்டம். 2) ஈரோடு. | |
| 8. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்-கோட்டம். 1) கும்பகோணம். | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், (கும்பகோணம்) கும்பகோணம். |
| 9. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்-கோட்டம். 2) திருச்சி. | |
| 10. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்-கோட்டம். 3) காரைக்குடி. | |
| 11. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்-கோட்டம். 4) புதுக்கோட்டை. | |
| 12. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம். 1) மதுரை. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை), மதுரை. |
| 13. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம். 2) திருநெல்வேலி. | |
| 14. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம். 3) நாகர்கோவில். | |
| 15. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம். 4) திண்டுக்கல். | |
| 16. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம். 5) விருதுநகர். | |



**94—**

## வீடியோ வசதி பேருந்து

**வினா எண் 7729—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரசு விரைவுப் பேருந்துகள் அனைத்திற்கும் வீடியோ சாதன வசதி செய்துதர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் பேருந்துகளில், கழக நிதி நிலைமையினைக் கருத்தில் கொண்டு, அவ்வப்பொழுது கழக கூண்டு கட்டும் பிரிவுகளில், 'பாடி' வேலைகள் செய்யப்படும்பொழுது, வீடியோ பேருந்துகளாக மாற்றப்படும்.

**95—**

## மினி பஸ் வசதி

**வினா எண் 7757— டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) விருத்தாசலம் தொகுதியில் பல ஊர்களுக்குத் தகுந்த பஸ் வசதி இல்லாதது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், சிறிய கிராமங்களுக்கு மினி பஸ் வசதியாவது அரசு செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* விருத்தாசலம் தொகுதியில் அடங்கியுள்ள ஊர்களுக்கும், சாதாரணப் பேருந்துகள் இயக்குவதற்குத் தகுதியுள்ள சாலை வசதிகள் பெற்றுள்ள ஊர்களுக்கும், விழுப்புரம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின்மூலம் பேருந்து வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் பேருந்து வசதி பெறாத கிராமம் ஏதும் இல்லை.

*(ஆ)* மினி பேருந்து இயக்குவதற்குத் தகுதியுள்ள சாலை வசதிகள் உள்ள ஊர்களுக்குத் தனியார் மினி பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**96—**

**பேருந்துகளை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 7779—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் முன்பு அரசுப் பேருந்து ஓடிக் கொண்டிருந்து தற்போது நிறுத்தப்பட்டுள்ள வழித்தடங்கள் எத்தனை?

*(ஆ)* அதன் விவரம் என்ன?

*(இ)* ஆம் எனில், அவைகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் இயக்கப்பட்டு வந்த எந்தவொரு வழித்தடப் பேருந்தும் இயக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

*(ஆ)* மற்றும் *(இ)* கேள்வி எழாது.





**97—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 7825—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்கு சேலம் புதிய பஸ் நிலையத்திலிருந்து பழையூர் வழியாக முத்துநாயக்கன்பட்டி, மஞ்சிலாயூர் வழியாக புதூர் காடம்பட்டி, மூலக்கடை பெரிய காடம்பட்டி வழியாக பெரியேரிப்பட்டி, தொளசம்பட்டி வரை புதிய அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வினாவில் கோரப்பட்டுள்ள வழித்தடத்திற்குப் பகுதிவாரியாக போதுமான நகரப் பேருந்து வசதி உள்ளது. இப்பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுவதால், மேலும் ஒரு புதிய அரசு பேருந்து இயக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை.

**98—**

**கூடுதல் பேருந்து**

**வினா எண் 7846—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், இரும்புலிக்குறிச்சி கிராமத்திற்குக் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், இரும்புலிக்குறிச்சி கிராமத்திற்குக் கூடுதல் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**99—**

**ஏலம் விடும் வண்டிகள்**

**வினா எண் 7876—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து ஓட்டுநர் லைசன்ஸ் வைத்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, காலம் கடந்தும் வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு டிஎன்டிசி.-ல் ஏலம் விடும் வண்டிகளைக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்து ஓட்டுனர் லைசன்ஸ் வைத்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, காலம் கடந்தும் வேலை கிடைக்காத இளைஞர்களும் டிஎன்டிசி.-ன் ஏலத்தில் கலந்து கொண்டு, ஏலம் எடுக்கலாம்.

**100—**

**தொலைவு எல்லையை நீட்டித்தல்**

**வினா எண் 8265— திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) தற்போது தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்துகளின் தொலைவு எல்லையை நீட்டிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

**101—**

**நகரப் பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 8303—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், பெரியாக்குறிச்சி கிராமம் வழியாக அரியலூர்-மாத்தூர் இயங்கிக் கொண்டிருந்த நகரப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், பெரியாக்குறிச்சி கிராமம் வழியாக அரியலூர்-மாத்தூர் வழித்தடத்தில் இயங்கிக் கொண்டிருந்த பேருந்து நிறுத்தப்படவில்லை. தற்போது இப்பேருந்து, நடை குறைப்பின்றி தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது.

[2003 மே 10

102—

## வழித்தடம் நீட்டித்தல்

**வினா எண் 8305— திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம்-சிறுகளத்தூர் வரை இயங்கும் பேருந்தை ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், பெரியாகுறிச்சி வழியாக மாத்தூர் வரை நீட்டித்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம்-சிறுகளத்தூர் வரை இயங்கும் பேருந்தை ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், பெரியாக்குறிச்சி வழியாக மாத்தூர் வரை நீட்டிப்பு செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

103—

## பேருந்தை இயக்குதல்

**வினா எண் 8306—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், பெரியாக்குறிச்சி கிராமம் வழியாக ஜெயங்கொண்டத்திலிருந்து திட்டக்குடி வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டத்திலிருந்து பெரியாக்குறிச்சி கிராமம் வழியாக திட்டக்குடி வரை பகுதி பகுதியாகவும், செந்துறையிலிருந்து பெரியாக்குறிச்சி கிராமத்திற்கு நேரடியாகவும் போதுமான பேருந்து வசதி உள்ளது. எனவே, கோரிக்கை வழித்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

104—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 8316—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், மணப்பத்தூர் கிராமத்திற்கு அரியலூரிலிருந்து செந்துறை வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து ஒரு புறநகர் பேருந்தின் மூலம் அரியலூரிலிருந்து செந்துறை, மணப்பத்தூர் வழியாக வங்காரத்திற்கு தினசரி நான்கு தனி நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இதுவே போதுமானதாகும்.

[2003 மே 10

105—

## பேருந்து இயக்கம்

**வினா எண் 8317—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், நத்தக்குழி கிராமத்திற்கு பெண்ணாடம்-அரியலூருக்கு ஆர்.எஸ். மாத்தூர், மணப்பத்தூர், நத்தக்குழி, இலைக்கடம்பூர் வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாடம்-அரியலூர் (வழி) ஆர்.எஸ். மாத்தூர், மணப்பத்தூர், நத்தக்குழி, இலைக்கடம்பூர் புதிய வழித்தடத்தில் பகுதிவாரியாக ஏற்கெனவே பேருந்து வசதி உள்ளதால், திருச்சி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இப்புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

106—

## விரைவுப் பேருந்து வசதி

**வினா எண் 8340—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு உட்பட்ட புதியம்புத்தூர், ஒட்டப்பிடாரம், கீழ்முடிமண்-பசுவந்தனை-கோயில்பட்டி மார்க்கமாக அரசுப் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து வசதி செய்துதர அரசு முன்வருமா?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு புதியம்புத்தூர், ஒட்டப்பிடாரம், கீழ்முடிமண்-பசுவந்தனை-கோயில்பட்டி வழியாக பேருந்து இயக்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

107—

## புதிய வழித்தடத்தில் பேருந்து

**வினா எண் 8474—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மங்கூடல் ஊராட்சியில் சேலம் பஸ் நிலையம், ஜங்ஷன், முத்துநாயக்கன்பட்டி வழியாக ரங்கநாதபுரம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மங்கூடல் ஊராட்சியில் சேலம் பஸ் நிலையம், ஜங்ஷன், முத்துநாயக்கன்பட்டி வழியாக ரங்கநாதபுரம் வரை பகுதிவாரியாக போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் மினி பேருந்துகள் இயக்கப்படுவதால் இப்புதிய வழித்தடத்தில் நேரடிப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 மே 10

வசதிக்குக் கூடுதலாக தனியாக பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

112—

**நிறுத்தப்பட்ட பேருந்து இயக்குதல்**

**வினா எண் 8719—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, வெங்கரை வழியாக பொன்மலர்பாளையம் செல்லும் அரசுப் பேருந்துகள் வி.2, வி.8 இரண்டும் நிறுத்தப்பட்டு உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவை மீண்டும் இயக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தடம் எண் வி.2 வழித்தடப் பேருந்து தற்போது வேலூரிலிருந்து வெங்கரை பொன்மலர்பாளையம் வழியாக சாளர்பாளையம் வரை தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. தடம் எண் வி.8, மேற்கூறிய வழித்தடப் பேருந்து அல்ல.

(ஆ) இக்கேள்வி எழாது.

113—

**புதிய பேருந்துகள்**

**வினா எண் 8844—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், எடப்பாடி கிளைக்கு, சென்ற நிதியாண்டில் (2000-2001) எத்தனை புதிய பேருந்துகள் வழங்கியுள்ளன?



2003 மே 10]

(ஆ) அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக எடப்பாடி கிளைக்கு, சென்ற நிதியாண்டில் (2000-2001) புதிய பேருந்துகள் ஏதும் வழங்கப்படவில்லை. இருப்பினும் இரண்டாம் நிலைப் பேருந்துகள் 13 வழங்கப்பட்டுள்ளன. அனைத்துப் பேருந்துகளும் நன்கு பராமரிக்கப்பட்டு நல்ல நிலையில் இயக்கப்பட்டு வருகின்றன.

114—

**வருவாய் இழப்பு**

**வினா எண் 8889—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-2001 போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட இழப்பிற்கு காரணம் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

**அறிக்கை**

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்கண்ட காரணங்களினால் தொடர்ந்து இழப்பில் இயங்கி வருகின்றன:

i) டீசல் எண்ணெயின் கடுமையான விலையேற்றத்தால் செலவினம் கூடியுள்ளது. அவ்வப்போது டீசல் விலை உயர்ந்தபோதிலும் அதற்கிணையாக பேருந்துகளின் பயணக் கட்டண விகிதம் நவம்பர் 2001 வரை உயர்த்தப்படவில்லை.

[2003 மே 10

2) உதிரிப் பாகங்கள் விலை உயர்வு.

3) மூன்றாண்டுக்கு ஒருமுறை, ஊழியர்களுக்கு ஊதிய விகித ஒப்பந்த அடிப்படையில், ஊதிய உயர்வு/போனஸ் இவற்றால் ஏற்படும் கூடுதல் செலவினம்.

4) போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மற்றும் வங்கிகளிடம் கடன் வாங்கியவகையில் செலுத்தும் அதிகப்படியான வட்டி.

5) மினி பேருந்துகள், முறையற்ற வேன்கள் இயக்கம் இவற்றால் போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் பாதிப்பு.

6) பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் வேண்டுகோளுக்கிணங்க லாபம் ஈட்டாத தடங்களில் பேருந்துகளை இயக்குவதால் ஏற்படும் இழப்பு.

7) மற்ற மாநிலங்களுக்கிணையாக, தமிழ்நாட்டில் பேருந்துக் கட்டண விகிதம் உயர்த்தாதது.

8) மோட்டார் வாகனத் தீர்ப்பாயத்தில் விபத்து சம்பந்தமாக தொடுக்கபட்ட வழக்கிற்கான ஒதுக்கீடு செய்யப்படும் பெரும் தொகையால் இழப்பு.

9) சமவெளியில் இயக்கப்படும் பேருந்துகளைக் காட்டிலும், மலைப்பகுதி இயக்கங்களுக்கு ஏற்படும் அதிகப்படியான இயக்கச் செலவு மற்றும் குறைந்த வருவாய்.

10) மாநிலத்தில் சில பகுதியில் அடிக்கடி நடைபெறும் அரசியல், மத, சாதிக் கலவரங்களினால் பேருந்துகள் எரிப்பு, சேதம் மற்றும் பேருந்துகள் இயக்க முடியாதது.

11) பெரும்பான்மை போக்குவரத்துக் கழகங்களில், பழைய பேருந்துகளை மாற்றாததால், அவற்றிற்கு ஆகும் அதிகப்படியான பராமரிப்புச் செலவு.



2003 மே 10]

12) மாணவர்கள், உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், புற்றுநோயாளிகள், மொழி, எல்லை மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்கள், நாடகக் கலைஞர்கள், பத்திரிகையாளர்களுக்குப் பேருந்துகளில் வழங்கப்படும் இலவச/பகுதிக் கட்டணச் சலுகையால் பேருந்துகளுக்கு ஏற்படும் இழப்பில் போக்குவரத்துக் கழகங்களும் ஒரு கணிசமான தொகையைச் சமுதாயச் செலவாக ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

இழப்பைக் கட்டுப்படுத்தி, போக்குவரத்துக் கழகங்களை மேம்பாடடையச் செய்ய கீழ்க்காணும் நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது:

1) டிசம்பர் 2001 முதல் பேருந்துப் பயணக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

2) சகோதரப் போக்குவரத்துக் கழகங்களுக்கிடையில், தேவையற்ற போட்டியினைத் தவிர்க்கவும், பெருமளவில் செலவினத்தைக் குறைக்கவும், இதுவரை இணைக்கப்படாமல் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் கோட்டங்களை இணைப்பதென அரசு முடிவெடுத்து, செயற்குறிப்பு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பபட்டுள்ளது. இதன் மூலம் நிர்வாகச் செலவு குறைந்து லாபம் ஈட்ட வழிவகை ஏற்படும்.

3) நடப்பு நிதியாண்டில், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் 1550 புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் அரசு காப்புறுதியுடன் ரூ.100 கோடி கடன் பெற்று 1,000 புதிய பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. டிசம்பர் 2001 முதல் பேருந்துக் கட்டண விகிதம் திருத்தியமைக்கப்பட்டதால், விழுப்புரம், தர்மபுரி, ஈரோடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் இலாபம் ஈட்டத் துவங்கியுள்ளன. எனவே, அப்போக்குவரத்துக் கழகங்கள் இதுவரை 305 புதிய பேருந்துகளை வாங்கியுள்ளன.

4) பயணச் சீட்டின்றி பயணம் செய்பவர்களைக் கண்டறிந்து அபராதத் தொகை வசூலிக்கும் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால், தினசரி போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் இழப்பு தவிர்க்கப்பட்டு, ஓரளவுக்கு வருவாய் பெருக வாய்ப்புள்ளது. 25-7-2001 அன்று அதிரடிப் பயணச்சீட்டுச் சோதனை நாள் கடைப்பிடிக்கப்பட்டு, அனைத்துப்

[2003 மே 10

போக்குவரத்துக் கழகங்களிலும் 80,313 சோதனைகள் செய்யப்பட்டு, 3740 பயணிகள் பயணச்சீட்டு வாங்காமல் இருந்தது கண்டறியப்பட்டு, அவர்களிடமிருந்து ரூ.1.12 இலட்சம் வசூலிக்கப்பட்டது. பேருந்து பயண அட்டை உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்துப்பட்டது.

5) பேருந்துகளைக் குறித்த நேரத்தில், தடமுடக்கமின்றி இயக்கவும், அனைத்து நிறுத்தங்களிலும் பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்லவும், பாதுகாப்பான, சிறந்த சேவை, பொதுமக்களுக்கு வழங்கவும், ஓட்டுநர், நடத்துநர்களுக்குப் பிரத்தியேக பயற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

6) தரமான, தேவையான உதிரிபாகங்களைக் கொள்முதல் செய்து பேருந்துகளைச் சிறப்பான முறையில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

7) திருவிழாக் காலங்கள், முகூர்த்த நாட்கள் மற்றும் முக்கியப் பண்டிகை நாட்களில் அதிக எண்ணிக்கையில் பொதுமக்கள் நன்மை பெறும்வகையில் வசதியான பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8) கிலோ மீட்டர் திறன், கிலோ மீட்டர் தூரத்திற்கான ஆயுள் திறன், டயருக்கான ஆயுள் திறனும் தீவிர நடவடிக்கைகள் காரணமாக அதிகரித்துள்ளன.

9) அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் கணினிமயமாக்கப்பட்டதன் மூலம் போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாகச் சீர்திருத்தம் ஏற்பட்டுள்ளது.

10) நன்றாகப் பராமரிப்பு மேற்கொள்ளாத பணிமனைகளில் வாரத்தில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து மேற்பார்வையிட, அனைத்து நிர்வாக இயக்குநர்களும் பணிக்கப்பட்டுள்ளனர். மேலும், வருவாய்த் திறனை அதிகரிக்கவும், பணிமனைகளின் பராமரிப்புத் திறனை மேம்படுத்தவும், தேவையான திருத்த நடவடிக்கைகள் எடுக்கிறார்களா என்று கண்காணிக்கும்படியும் பணிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலத்தில், ஏறக்குறைய 70 கோடி ரூபாய் அளவிற்கு மோட்டார் வாகன விபத்து



2003 மே 10]

அதிகரித்துள்ளதால், விபத்துகளைக் குறைக்கும்வண்ணம், சீரிய முயற்சிகளை மேற்கொள்ள அனைத்து நிர்வாக இயக்குநர்களும் பணிக்கப்பட்டுள்ளனர்.

11) அலுவல் செலவினங்களைக் குறைக்க, கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

12) நிர்வாக இயக்குநர்களிடையே ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் வழித்தடங்கள் மற்றும் இயக்கங்களைச் சீரமைக்கவும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக் கிடையே ஏற்படும் கசப்பான போட்டி மனப்பான்மையைத் தவிர்க்கும் வகையிலும் செயல்படுவார்கள். இந்த ஒருங்கிணைப்பு அதிகாரிகள் அந்தந்த வட்டாரத்திலுள்ள கழகங்களில் உள்ள பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வருகின்றார்கள்.

**115—**

**பேருந்துகளை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 8894—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வந்தவாசி-ஓரத்தி வழியாகவும், கீழ்வில்லிவனம் வழியாகவும் செல்லும் தடம் எண் 104சி, 104ஈ பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வந்தவாசி-ஓரத்தி வழித்தடத்தில் பொதுமக்களின் தேவைக்கேற்ப போதுமான பேருந்து வசதி உள்ளதால், தடம் எண் 104சி, 104ஈ ஆகிய வழித்தடங்களை மீண்டும் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

116—

**வகுத்துப்பட்டிக்குப் பேருந்து**

**வினா எண் 8899—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியத்தில் 6 மாதத்திற்குமுன் பாதை சரியில்லாததால் நிறுத்துப்பட்ட எண் 45 பேருந்தை, பாதை போட்டுள்ள நிலையில், மீண்டும் தருமபுரி, நாயக்கன்கொட்டாய், சவுருப்பட்டி, குட்டூர், மேல்ஆண்டிஹள்ளி, கீழ்ஆண்டிஹள்ளி, ஒன்னியம்பட்டி வழியாக வகுத்துப்பட்டிக்கு இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி ஒன்றியம், சவுருப்பட்டி, குட்டூர், கீழ்ஆண்டிஹள்ளி, ஒன்னியம்பட்டி வழித்தடத்தில், குட்டூர் முதல் ஒன்னியம்பட்டி வரையுள்ள 11 கி.மீ. தூரத்திற்குப் பாதை சரிசெய்யப்படாத நிலையில் உள்ளதால் கோரிக்கை வழித்தடத்தில் நகரப் பேருந்து தடம் எண் டி.45 பேருந்தை தருமபுரி-வகுத்துப்பட்டி தடத்தில் இயக்க இயலாத நிலை உள்ளது.

117—

**ஓய்வூதியம்**

**வினா எண் 8968—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம்-I-ல் 1-9-98-க்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து செயல்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம்-I-ல் 1-9-98-க்கு முன்னால் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

118—

**புதிய வழித்தடம்**

**வினா எண் 9026—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரில் இருந்து திண்டிவனத்திற்குச் செல்ல போக்குவரத்துக் கழகம் மூலம் புதிய வழித்தடம் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போதுள்ள நிதி நெருக்கடியின் காரணமாக தருமபுரி நகரிலிருந்து திண்டிவனத்திற்குப் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

119—

**புதிய பேருந்தை இயக்குதல்**

**வினா எண் 9028—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், மணப்பத்தூர் கிராமத்திற்கு ஜெயங்கொண்டத்திலிருந்து பொன்பரப்பி, பெரியாக்குறிச்சி வழியாக புதிய பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், ஜெயங்கொண்டம்-மணப்பத்தூர் (வழி) பொன்பரப்பி, பெரியாக்குறிச்சி வழித்தடம், புதிய வழித்தடம் ஆகும். தற்போது புதிய வழித்தடங்களில் பேருந்துகள் ஏதும் இயக்க தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம்) பரிசீலனையில் இல்லை.

**120—**

## நகரப் பேருந்து

**வினா எண் 9029—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், இலைக்கடம்பூர் கிராமத்திற்கு செந்துறை-பென்னாடம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டத்தை மையமாக வைத்து நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. செந்துறையை மையமாக வைத்து நகரப் பேருந்துகள் இயக்கம் செய்ய செந்துறை,





அரசால் அங்கீகரிக்கப்படாத இடமாகும். எனவே, அரசு விதிப்படி, செந்துறையை மையமாக வைத்து பென்னாடத்திற்கு நகரப் பேருந்து இயக்க இயலாது. மேலும் புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**121—**

## புதிய பேருந்து

**வினா எண் 9031—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஜெயங்கொண்டம், கூவத்தூர் சா.பட்டு நெட்டலக்குறிச்சி, வரதராஜன்பேட்டை, ராமாபுரம், பாளையங்கோட்டை, சோழதரம், சேத்தியாத்தோப்பு வரை வழித்தடங்களில் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம்-சேத்தியாத்தோப்பு (வழி) கூவத்தூர், சா.பட்டு, நெட்டலக்குறிச்சி, வரதராஜன்பேட்டை, ராமாபுரம், பாளையங்கோட்டை, சோழதரம் வழித்தடம், புதிய வழித்தடம் ஆகும். இந்தத் தடம் பகுதி பகுதியாக நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே, மேற்கண்ட வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**122—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 9147—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், அங்கனூர் கிராமத்திற்கு அரியலூர் முதல் செந்துறை, குழுமூர், அங்கனூர் வரை நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூரில் இருந்து செந்துறை, குழுமூர் வழியாக அங்கனூர் கிராமத்திற்கு நகரப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**123—**

**புதிய நகரப் பேருந்து**

**வினா எண் 9198—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி தருமபுரி-பாலக்காடு வரை புதிய நகரப் பேருந்து வசதி செய்துதர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 'பெண்ணாகரம் தொகுதி, தருமபுரியிலிருந்து பாலக்காடு வரை உள்ள சாலையில் முத்தப்பநகர் கிராஸ் முதல் பாலிக்காடு வரை உள்ள பகுதி, சாலை வசதி இல்லாத காரணத்தால் நகரப் பேருந்து வசதி செய்திட இயலாத நிலை உள்ளது.



2003 மே 10]

**124—**

**ஆதிதிராவிடர் காலனிவரை பேருந்து விடுதல்**

**வினா எண் 9204—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூரில் இருந்து செல்லும் தடம் எண் 106 நகரப் பேருந்தை ஆறு சிங்கிள், தாத்தியம்பட்டி ஆதிதிராவிடர் காலனி வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூரிலிருந்து செல்லும் தடம் எண் 106 நகரப் பேருந்து, தாத்தியம்பட்டி காலனி வரை தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் சராசரி பயணிகள் போக்குவரத்து விகிதம் 18.80% மட்டுமே உள்ளது. எனவே, கூடுதல் நடைகள் இயக்க இயலாத நிலை உள்ளது.

**125—**

**பள்ளி நேரங்களில் பேருந்து வசதி**

**வினா எண் 9219—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, கூனாண்டியூர் பள்ளிக்கு உரிய நேரத்தில் செல்லவும், மாலையில் பள்ளி முடிந்து திரும்பி வந்து சேரவும் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள பேருந்துகள் மூலம் தாரமங்கலம் தொகுதி, கூனாண்டியூருக்கு மாணவர்கள் உரிய நேரத்தில் பள்ளி செல்லவும், மாலையில் பள்ளி முடிந்து திரும்பி வந்து சேரவும் மற்றும் பொதுமக்களின் தேவைகளுக்கும் போதுமான அளவு போக்குவரத்து வசதி செய்யப்படுகிறது.

**126—**

**பேருந்து வசதி**

**வினா எண் 9398—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் நாடார் கூத்தங்குளி கிராமத்திற்குப் பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், நாடார் கூத்தங்குளி கிராமத்திற்கு ஏற்கனவே பொதுமக்களின் தேவைக்கேற்ப போதுமான பேருந்து வசதி உள்ளதால், கூடுதலாக பேருந்து வசதி செய்து கொடுத்திட இயலாத நிலை உள்ளது.

**127—**

**சிற்றுந்து இயக்குதல்**

**வினா எண் 9405—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, தங்கம்மாள்புரம் கிராமத்திற்குச் சிற்றுந்து (Mini Bus) இயக்கிட அரசு முன்வருமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தங்கம்மாள்புரத்திற்குச் சிற்றுந்து இயக்க அனுமதி கேட்டு தனிநபர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்படும்பட்சத்தில், விதிமுறைகளுக்குட்பட்டுப் பரிசீலிக்கப்படும்.

**128—**

**பேருந்து வசதி செய்யும் திட்டம்**

**வினா எண் 9687—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஞ்சேஅள்ளி ஊராட்சி, மெத்தம்பட்டிக்குப் பேருந்து வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் உடன் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஞ்சேஅள்ளி ஊராட்சி, மெத்தம்பட்டி கிராமம், ஏற்கெனவே தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக இரண்டு நகரப் பேருந்துகள் மூலம் பேருந்து வசதி பெற்றுள்ளது.

**129—**

**பண்டஅள்ளிக்குப் பேருந்து வசதி**

**வினா எண் 9689—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பண்டஅள்ளிக்கு பாலக்கோடு-பாப்பாரப்பட்டி, கோம்பட்டி வழியாக பண்டஅள்ளிக்கு பேருந்து வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இந்தப் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பண்டஅள்ளிக்கு, பாலக்கோடு-பாப்பாரப்பட்டி, கோம்பட்டி வழியாக பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**130—**

**கழனிக்காட்டூருக்குப் பேருந்து வசதி**

**வினா எண் 9696—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகர்கூடல் ஊராட்சி, கழனிக்காட்டூர் கிராமத்திற்குப் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் பேருந்து வசதி கோரியுள்ள கழனிக்காட்டூர் பகுதியில் நாகர்கூடல் முதல் கழனிக்காட்டூர் வரையிலான சாலை சரியில்லாத நிலையில், தற்சமயம் தருமபுரி, அரசுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் பேருந்து வசதி அளிக்க இயலாத நிலை உள்ளது.



2003 மே 10]

**131—**

**புதிய பேருந்து வழித்தடம்**

**வினா எண் 9711—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மல்லூரிலிருந்து எண் 3 கொமாரபாளையம், வெண்ணந்தூர், ஆட்டையாம்பட்டி வழியாக திருச்செங்கோட்டிற்குப் புதியதாக பேருந்து வழித்தடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மல்லூரிலிருந்து எண் 3 கொமாரபாளையம், வெண்ணந்தூர், ஆட்டையாம்பட்டி வழியாக திருச்செங்கோட்டிற்குப் பகுதிவாரியாக பேருந்து வசதி உள்ளதால், புதியதாக பேருந்து வழித்தடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**132—**

**புதிய பேருந்து இயக்குதல்**

**வினா எண் 9720—திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லிலிருந்து-சென்னைக்கு வரும் அரசுப் பேருந்தை மாற்றி புதிய பேருந்து இயக்குவதற்கு அரசு வழிவகை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நிதி ஆதாரத்தைக் கருத்தில் கொண்டு புதிய பேருந்துகள் வாங்கப்படும்போது வயது அடிப்படையில் பழைய பேருந்துகள் மாற்றப்பட்டு புதிய பேருந்துகள் இயக்கப்படும்.

**133—**

**இந்திய மருத்துவக் கழக அனுமதி**

**வினா எண் 9909—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறையிலுள்ள போக்குவரத்துக் கழக மருத்துவக் கல்லூரிக்கு அகில இந்திய மருத்துவக் கழகத்தின் அனுமதி கிடைத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆம்.

**134—**

**கூடுதல் பேருந்து வசதி**

**வினா எண் 10955—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மஞ்சக்குடி ஊராட்சிக்குக் கூடுதல் பேருந்து வசதி செய்து தருவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மஞ்சக்குடிக்குப் பொதுமக்களின் தேவைக்கேற்ப போதுமான அளவு பேருந்து வசதி உள்ளதால் இக்கிராமத்திற்குக் கூடுதல் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் பரிசீலனையில் இல்லை.

**135—**

**வடமட்டத்திற்குச் சிற்றுந்து**

**வினா எண் 10969—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், ஆலத்தூர் ஊராட்சியில் உள்ள வடமட்டத்திற்குச் சிற்றுந்து (Mini Bus) செல்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், ஆலத்தூர் ஊராட்சியில் உள்ள வடமட்டத்திற்குச் சிற்றுந்து இயக்க அனுமதி கேட்டு எவரேனும் விண்ணப்பிக்கும்பட்சத்தில், அவ்விண்ணப்பம் விதிமுறைகளுக்குட்பட்டுப் பரிசீலிக்கப்படும்.

**136—**

**நகரப் பேருந்துகள் இயக்குதல்**

**வினா எண் 11041—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், ஊத்தங்கரையிலிருந்து கீழ்க்குப்பம், மூங்கிலேரி, கோணப்பட்டி வழியாக கல்லாவி வரை சென்றுவர நகரப் பேருந்துகள் இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரியுள்ள வழித்தடத்தில் பகுதிவாரியாக எல்லாக் கிராமங்களும் பேருந்து வசதி பெற்றுள்ளதாலும், கோரிக்கை வழித்தடம் சுற்றுத் தடம் என்பதாலும் நேரடி பயணிகள் யாரும் விரும்பி பயணம் செய்யமாட்டார்கள் என்பதால், கோரியுள்ள வழித்தடத்தில் கூடுதல் நகரப் பேருந்து அளித்திடும் திட்டம் ஏதும் இல்லை.

**137—**

**சொகுசுப் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 11048—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி-சென்னை (வழி) விளாத்திக்குளம் அரசு விரைவு சின்னத்திரை சொகுசுப் பேருந்தை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு, விளாத்திக்குளம் வழியாக இயக்கப்படும் சொகுசுப் பேருந்தை, சின்னத்திரை சொகுசுப் பேருந்தாக மாற்றி இயக்க பரிசீலிக்கும்.



2003 மே 10]

**138—**

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 11052—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்டை மாநிலமான ஆந்திரம் குப்பத்திற்கும், நாட்ராம்பள்ளிக்கும் அரசு போக்குவரத்துப் பேருந்து இயக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள குப்பத்திற்கும் நாட்ராம்பள்ளிக்கும் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**139—**

**நாட்ராம்பள்ளி வழியாக பேருந்து இயக்குதல்**

**வினா எண் 11053—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெங்களூர்-சென்னை செல்லும் அரசு (விரைவு) மற்றும் சாதாரண பேருந்துகள் பெரும்பாலும் நாட்ராம்பள்ளி நகரப் பேருந்து நிலையம் வராமலேயே சாலையின் வழியாகவே சென்றுவிடுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதன்மேல் நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி நகரப் பேருந்து நிலையம் உள்ளே விரைவுப் பேருந்து எளிதில் சென்று வெளியே வருவதற்கான சாலை வசதி இல்லாததாலும், தொலைதூரப் பயணிகளின் நலனை கருத்தில் கொண்டும், காலதாமதத்தை தவிர்க்கவும், விரைவுப் பேருந்துகளை நகரப் பேருந்து நிலையத்திற்குள் செலுத்தும் உத்தேசம் இல்லை. ஆனால், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் தருமபுரியின் மூலம் நாட்ராம்பள்ளி வழியாக இயக்கப்படும் சாதாரண பேருந்துகள் அனைத்தும் நாட்ராம்பள்ளி பேருந்து நிலையத்திற்குள் சென்று வருமாறு இயக்கப்பட்டு வருகின்றன.

**140—**

**பேருந்துகளுக்குப் பெயர் சூட்டுதல்**

**வினா எண் 11103—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெடுந்தூரப் பேருந்துகளுக்கு மீண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவியின் பெயர் சூட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இப்பொருள் குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**141—**

**மறைமலைநகர் வரை பேருந்து**

**வினா எண் 11110—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சென்னை-பிராட்வேயிலிருந்து கூடுவாஞ்சேரி செல்லும் நகரப் பேருந்துகள் மறைமலைநகர் வரை நீட்டிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநகரப் போக்குவரத்துக் கழக எல்லைக்கு (36 கி.மீ.) அப்பாற்பட்டுள்ள கூடுவாஞ்சேரிக்கு சென்னையிலிருந்து அரசின் சிறப்பு அனுமதியின் பேரில் பேருந்து இயக்கப்பட்டு வருவதாலும், மறைமலைநகருக்கு ஏற்கெனவே போதிய போக்குவரத்து வசதி உள்ளதாலும், சென்னை கூடுவாஞ்சேரி நகரப் பேருந்துகளை மறைமலைநகர் வரை நீட்டித்து இயக்க இயலாத நிலை உள்ளது.

**142—**

**விரைவுப் பேருந்து மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 11126—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடியிலிருந்து கோயம்புத்தூருக்கு இயக்கப்பட்ட அரசு விரைவுப் பேருந்து நிறுத்தப்பட்டதை, மீண்டும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மன்னார்குடியிலிருந்து கோயம்புத்தூருக்கு இயக்கப்பட்டு வருவாய் இழப்பின் காரணமாக நிறுத்தப்பட்ட அரசு விரைவுப் பேருந்தை, நிதி நெருக்கடியின் காரணமாக மீண்டும் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**143—**

**அரசு விரைவுப் பேருந்து**

**வினா எண் 11127—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடியிலிருந்து மதுரை வழியாக திருநெல்வேலி, கன்னியாகுமாரி வரை அரசு விரைவுப் பேருந்து இயக்கிட ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் மன்னார்குடியிலிருந்து கன்னியாகுமரிக்கு மதுரை, திருநெல்வேலி வழியாக பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**144—**

**நகரப் பேருந்து**

**வினா எண் 11145—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லாம்பள்ளி ஒன்றியம், பட்டகப்பட்டி வழியாக ஏலகிரி நாகாவதி அணைக்கு, நகரப் பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் நடப்பாண்டில் நிறைவேற்றப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரியிலிருந்து நல்லம்பள்ளி, கெங்களாபுரம் வழியாக நாகர்கூடல் வரை தருமபுரி அரசு போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்றும், தனியார் மினி பேருந்துகளும் இயக்கப்படுவதால், கோரிய வழித்தடத்தில், மேலும் ஒரு நகரப் பேருந்து இயக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை.

**145—**

**பேருந்து வசதி**

**வினா எண் 11241—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், கெல்லாண்கொட்டாய் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி-பஞ்சநாயக்கண்அள்ளி தடத்தில் உள்ள பரப்பட்டி பிரிவிலிருந்து கெல்லாண்கொட்டாய் கிராமம் 0.9 கி.மீ. நடை பயண தூரத்தில் மட்டுமே உள்ளதால், அக்கிராமத்திற்குப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**146—**

**நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 11248—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி-பொம்மிடிக்கு நல்லம்பள்ளி பாகல்பட்டி வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகரப் பேருந்து இயக்கக் கோரியுள்ள தருமபுரி-பொம்மிடி (வழி) நல்லம்பள்ளி, பாகல்பட்டி, தடத்தின் நீளம் 35.0 கி.மீ.-க்கும் அதிகமாக உள்ளதால், புதிய நகரப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**147—**

**மதனகோபாலபுரம் வழியாக பேருந்து**

**வினா எண் 11295—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதியில் தடம் எண் 23, 148, 165, 161, ஆகிய பேருந்துகளை மதனகோபாலபுரம் வழியாகச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதியில் தடம் எண் டி23, 148, 165 மற்றும் 161 ஆகிய பேருந்துகளை சுற்று வழித்தடமாகிய மதனகோபாலபுரம் வழியாக தடம் மாற்றி இயக்கினால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை எழ வாய்ப்புண்டாகும். எனவே, மேற்படி பேருந்துகளை மதனகோபாலபுரம் வழியாக தடம் மாற்றி இயக்க இயலாது.



2003 மே 10]

**148—**

**கிராமங்கள் வழியாகப் பேருந்து செல்லுதல்**

**வினா எண் 11296—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பெலாந்தோப்பு கிராமம், தடம் எண் 23, 148, 165, 161 ஆகிய பேருந்துகளை ஆர்.சி. காலனி, சிலுவைப்பாளையம் கோரணம்பட்டி, அப்பியம்பேட்டை மற்றும் எஸ். புதுக்குப்பம் வழியாக செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பெலாந்தோப்பு கிராமம், தடம் எண் டி23, 148, 165 மற்றும் 161 ஆகிய பேருந்துகளை தடம் மாற்றி எஸ். புதுக்குப்பம், சிலுவைப்பாளையம், ஆர்.சி. காலனி, மதன கோபாலபுரம், பெலாந்தோப்பு வழியாக இயக்கினால் நேரடிப் பயணிகள் கூடுதல் தூரத்திற்கான, கூடுதல் கட்டணம் செலுத்தி பயணம் மேற்கொள்ள நேரிடும். இதனால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை எழ வாய்ப்புண்டாகும், எனவே, பேருந்து வசதி கோரியுள்ள கிராமங்கள் வழியாக மேற்படி பேருந்துகளை தடம் மாற்றி இயக்க இயலாது.

**149—**

**புதிய வழித்தடங்கள்**

**வினா எண் 11311—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதியில் அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் பேருந்து பல புதிய வழித்தடங்களில் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதியில் பொதுமக்களின் தேவைக்கேற்ப, ஏற்கெனவே போதுமான பேருந்து வசதி உள்ளதால், புதிய வழித்தடங்கள் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**150—**

**பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 11323—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம் அயன்தத்தனூர் கிராமத்திற்கு, அரியலூர் முதல் வங்காரம் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், அயன்தத்தனூர் கிராமத்திற்கு அரியலூர் முதல் வங்காரம் வரை (வழி) செந்துறை, இலைக்கடம்பூர், மனப்பத்தூர், சோழன்குடிகாடு, அயன்தத்தனூர் வழியாக நடைகுறைப்பின்றி தினமும் நான்கு தனி நடைகள் இயக்கப்பட்டு வந்தன. சோழன்குடிகாட்டிலிருந்து வங்காரம் வரை சாலை சரியில்லாததால், சோழன்குடிகாடு வரை தற்போது பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன.



2003 மே 10]

**151—**

**அரசுப் பேருந்துகள் இயக்கம்**

**வினா எண் 11344—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம் நாட்ராம்புள்ளி தொகுதியில் அனைத்துக் கிராமங்களுக்கும் அரசுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதியில், 1000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை மற்றும் சாலை வசதியுள்ள கிராமங்களுக்கு வேலூர் மற்றும் தருமபுரி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களால் போதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே புதியதாக மற்றும் கூடுதலாக பேருந்து வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**152—**

**அகலப் பாதையாக மாற்றியமைத்தல்**

**வினா எண் 11354—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி-சென்னை இடையே உள்ள இரயில் பாதையை இரட்டை பாதையாக்கவும், திண்டுக்கல்-கோயம்புத்தூர் பாதையை அகலப் பாதையாக மாற்றியமைக்கவும் மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னை-கன்னியாகுமரி இரயில் பாதை வழித்தடத்தின் பயன்பாடு பூரித நிலையை அடையாத காரணத்தால், இதனை இரட்டைப் பாதையாக்கும் உத்தேசம் ஏதும் இல்லை எனவும், திண்டுக்கல் - கோயம்புத்தூர் இடையேயான இரயில் பாதையை அகலப் பாதையாக மாற்ற நில அளவைப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அதன் அடிப்படையில் மேற்படி இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றுவது குறித்து இரயில்வே வாரியத்தினால் முடிவெடுக்கப்படும் எனவும் தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது.

**153—**

**கூடுதல் பேருந்து**

**வினா எண் 11373—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கூடுதல் பேருந்து இயக்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கூடுதல் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**154—**

**பழுதடைந்த பேருந்துகள் மாற்றம் செய்தல்**

**வினா எண் 11469— திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ)* மலைப் பகுதியான ஏற்காட்டிற்கு பழுதடைந்த நிலையில் பேருந்துகள் இயக்கப்படுவது அரசிற்கு தெரியுமா?

*(ஆ)* அதை மாற்றும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மலைப் பகுதியான ஏற்காட்டிற்கு இயக்கப்படும் ஒன்பது பேருந்துகளும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு, இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்வி எழாது.

**155—**

**கடலூருக்குப் பேருந்து**

**வினா எண் 12805—திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சிதம்பரம் தொகுதிக்கு உட்பட்ட திருமுட்டம் பேரூராட்சியிலிருந்து மாவட்டத் தலைநகரான கடலூருக்குப் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சிதம்பரம் தொகுதி, திருமுட்டம்-கடலூர் வழித்தடத்தில் பகுதிவாரியாக விழுப்புரம் தமிழ்நாடு அரசுப்

போக்குவரத்து மற்றும் தனியார் பேருந்துகளால், பேருந்து வசதி உள்ளன. நிதி பற்றாக்குறையின் காரணமாக இவ்வழித்தடத்தில் நேரடியாக அரசுப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

**156—**

**போக்குவரத்து வசதி செய்தல்**

**வினா எண் 12815—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி, வெண்மணக்காடு என்ற கிராமத்திற்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் கெண்டையனஅள்ளி ஊராட்சி, வெண்மணக்காடு என்ற கிராமம் வெண்மணக்காடு கிராஸிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது. இச்சாலை பேருந்து இயக்குவதற்கு ஏற்றதாக இல்லாததால், அக்கிராமத்திற்கு பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது.

**157—**

**இலவச பஸ் பாஸ்**

**வினா எண் 13116—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்திலுள்ள அரசு கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா?



*(ஆ)* ஆம் எனில், நடப்பாண்டில் கல்லூரி மாணவ, மாணவியருக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* தமிழகத்தில் அரசு கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

*(ஆ)* இவ்வினா எழ இடமில்லை.

**158—**

**வாகனப் புகை கண்காணிப்பு மையம்**

**வினா எண் 13240—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளதால், ஒவ்வொரு மாவட்டத்திலும் வாகனப் புகை கண்காணிப்பு மையம் தொடங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* மேற்கண்ட கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

[2003 மே 10

159—

## NOISE POLLUTION-ஐத் தடுத்தல்

**வினா எண் 13243—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் பிரதான பகுதிகளில் மோட்டார் வாகனங்களில் ஹார்ன் அடிப்பதால் Noise Pollution ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னையில் பிரதான பகுதிகளில் மோட்டார் வாகனங்களில் ஹார்ன் அடிப்பதால் Noise Pollution ஏற்படுவதைத் தடுக்க சென்னை நகர போக்குவரத்து காவல் துறையும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

160—

## கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 13630—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், கோணங்கினஅள்ளி வழியாக முருகானந்தபுரம் வரை கூடுதலாக பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், கோணங்கினஅள்ளி வழியாக முருகானந்தபுரம் வரை இயங்கும் பேருந்துகளில், பயணிகள் அடர்வு 40 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளதால், அவ்வழித் தடத்தில் அரசு, கூடுதலாக பேருந்து வசதி செய்து தர இயலாத நிலை உள்ளது.

161—

## பேருந்து இயக்கம்

**வினா எண் 13902—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்து, சென்னையிலிருந்து ஒகேனக்கல் வரை செலுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் ஒரு பேருந்து இயக்க முடியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து ஒகேனக்கல் வரை அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வந்த பேருந்து வருவாய் இழப்பின் காரணமாக 31-3-1991-ல் நிறுத்தப்பட்டதை, மீண்டும் இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

162—

## கண்கவர் வண்ணத்தில் பேருந்துகள்

**வினா எண் 13904—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

தனியார் பேருந்துகளைப்போல அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளுக்கு அழகுமிகு பல வண்ணத்தில் கண்கவர் வடிவில் கூண்டு கட்டிவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தனியார் பேருந்துகளைப்போல அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் அழகுமிகு வடிவில் பல்வேறு கண்கவர் வண்ணத்தில் பேருந்துகள் கட்டி விடப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன.

**163—**

**ஹைடெக் பேருந்துகள் விடுதல்**

**வினா எண் 13919—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து சென்னைக்கு விடப்படும் பேருந்துகளை மாற்றி தனியார் பேருந்துபோல் ஹைடெக் பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் கடந்த இரு ஆண்டுகளாக வடிவமைக்கப்பட்டு, சேலத்திலிருந்து சென்னைக்கு இயக்கப்படும் அனைத்து பேருந்துகளும் ஹைடெக் பேருந்துகளாகும்.

**164—**

**எடப்பாடி-திருவண்ணாமலைக்குப் பேருந்து**

**வினா எண் 14183—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

எடப்பாடி - திருவண்ணாமலைக்குப் பேருந்து போக்குவரத்தை செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடியிலிருந்து திருவண்ணாமலைக்கு நேரடி பயணிகள் போக்குவரத்து போதுமான அளவு இல்லாத நிலையில், பகுதி வாரியாக பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. இப்பேருந்து வசதியே, இவ்வழித்தடத்தில் பொதுமக்களின் போக்குவரத்து தேவையினை நிறைவு செய்ய போதுமானதாக உள்ளது.

**165—**

**பேருந்துப் போக்குவரத்து**

**வினா எண் 14230—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூரில் இருந்து வெள்ளரிவெள்ளி, குள்ளம்பட்டி, தேவூர் வழியாக நேரடியாக பேருந்துப் போக்குவரத்து அரசு அமைத்து தருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூரிலிருந்து வெள்ளரிவெள்ளி, குள்ளம்பட்டி, தேவூர் வழியாக இயங்கும் நேரடி பேருந்துகளே இப்பகுதி மக்களின் போக்குவரத்து வசதியினை பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளது. மேலும், மேற்கூறிய புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 மே 10

166—

**பேருந்து இயக்கம்**

**வினா எண் 14276—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலிருந்து கோபிசெட்டிபாளையத்திற்கு தேவூர், பவானி, ஆப்பக்கூடல், பி.மேட்டூர், கவுந்தபாடி வழியாக பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலிருந்து கோபிசெட்டிபாளையத்திற்கு தேவூர், பவானி, ஆப்பக்கூடல், பி.மேட்டூர், கவுந்தபாடி வழியாக பேருந்து இயக்குவது சுற்று வழித்தடமாகும். இவ்வழித்தடம் பகுதிவாரியாக போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே, இச்சுற்று வழித்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

167—

**போக்குவரத்தில் புதிய மாற்றம்**

**வினா எண் 14281—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருகி வரும் சாலை விபத்துக்களின் காணமாக ஏற்படும் அதிக அளவிலான உயிர் இழப்புகளைத் தடுக்கும் வகையில் சாலைப் போக்குவரத்தில் புதிய மாற்றங்கள் செய்ய அரசு முன்வருமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பெருகி வரும் சாலை விபத்துக்களின் காரணமாக ஏற்படும் அதிக அளவிலான உயிர் இழப்புகளைத் தடுக்க காவல் துறையினர் துணையுடன் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தானியங்கி சிக்னல்கள் மற்றும் போக்குவரத்து குடைகள் அமைத்தும் நெரிசலான சாலைகளில் ஒரு வழிப்பாதைகள் அமைத்தும் நெரிசலைத் தவிர்க்கவும், விபத்துக்களைத் தடுக்கவும் காவல் துறை தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

168—

**வாக்கி டாக்கி உபகரணங்கள் வழங்குதல்**

**வினா எண் 14282—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாகனப் போக்குவரத்து ஆய்வாளர்களுக்கு வாக்கி டாக்கி உபகரணங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வாகனப் போக்குவரத்து ஆய்வாளர்களுக்கு வாக்கி டாக்கி உபகரணங்கள் வழங்குவது குறித்து நடவடிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

169—

**புதிய வழித்தடங்கள் புதிய பேருந்துகள்**

**வினா எண் 14312—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

சேலம் மாவட்டம், ஓமலூரிலிருந்து சென்னை, கோயம்புத்தூர், ஒகனேக்கல் ஆகிய இடங்களுக்கு புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் விட திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பொதுமக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் போதுமான அளவில் பகுதி வாரியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால், ஓமலூர் பேருந்து நிலையத்தை மையமாக வைத்து புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**170—**

**அனுமதியளித்துள்ள இருக்கைகளுக்கு மட்டும் பயணிகள் ஏற்றம்**

**வினா எண் 14360—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் பேருந்து கழகங்கள் நஷ்டத்தில் இயங்குவதை தவிர்க்கும்பொருட்டு தனியார் பேருந்துகள் நெடுஞ்சாலை வழித் தடங்களில் அரசு அனுமதியளித்துள்ள இருக்கைகளுக்கு மட்டும் பயணிகளை ஏற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அனுமதிக்கப்பெற்ற இருக்கைகளுக்கு மேல் பயணிகளை ஏற்றுவது குற்றமானதால், அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.



2003 மே 10]

**171—**

**பேருந்துகளின் தூரத்தைக் கூட்டுதல்**

**வினா எண் 14362—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொதுமக்கள் வசதிக்கேற்ப தற்போது இயங்கி கொண்டு இருக்கும் நகரப் பேருந்துகளின் தூரத்தைக் கூட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்பொழுது இல்லை.

**172—**

**நஷ்டம் தவிர்த்தல்**

**வினா எண் 14372—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கிடையே உள்ள போட்டியினால் ஒரே வழித்தடத்தில் பல பேருந்துகளை ஒரே நேரத்தில் இயக்க அனுமதிப்பதால் நட்டம் ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட போக்குவரத்துக் கழகங்களால் பேருந்துகள் இயக்கப்படும் பொது வழித்தடங்களில் பேருந்துகள் புறப்படும் நேரம் குறித்து சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகங்களிடம் கலந்து பேசி கால அட்டவணை நிர்ணயம் செய்து அதன்படி இயக்கப்படுகிறது.

இதன் மூலம் தேவையற்ற போட்டி தவிர்க்கப்படுவதால் நஷ்டம் ஏற்பட வாய்ப்பில்லை.

**173—**

**சிறுபடகு கட்டுமானத் தொழிலகம்**

**வினா எண் 14488—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், இடத்தகரை கிராமத்தில் சிறுபடகு கட்டுமானத் தொழிலகம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஏதும் இல்லை.

**174—**

**பேருந்துகள் இயக்கம்**

**வினா எண் 14838—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகர் மாவட்டம், கொள்ளேகால் வட்டத்திலுள்ள நெல்லூர், கூடலூர், ஊக்கியம், மார்ட்டள்ளி என்று 20-க்கு மேற்பட்ட கிராமங்களில் தமிழர்கள் வசிப்பதால் ஈரோடு மாவட்டம், அந்தியூரிலிருந்து பர்கூர், தட்டக்கரை, கர்காகண்டி வழியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடம் இரு மாநிலங்களுக்கிடையேயான புதிய வழித்தடமாகும். அதில் அந்தியூர் முதல் கர்காகண்டி வரை மலைப்பாதை மிகவும் மோசமாக உள்ளது. கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகர் மாவட்டம், கொள்ளேகால் வட்டத்திலுள்ள நெல்லூர், கூடலூர், ஊக்கியம், மார்ட்டள்ளி மற்றும் ஈரோடு மாவட்டம் அந்தியூரிலிருந்து பர்கூர், தட்டக்கரை, கர்காகண்டி வழியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**175—**

**பேருந்துகளில் குடிநீர் ஏற்பாடு**

**வினா எண் 14856—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பேருந்துகளிலும் குடிநீர் வைப்பதை கட்டாயமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இருந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படுகின்ற நீண்ட தூர வழித்தடப் பேருந்துகளில் பயணிகளின் தேவைக் கருதி குடிநீர்க் கலம் வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்முறையில் உள்ளதால் தொடர்ந்து பராமரிக்கப்படும்.

176—

**மைசூருக்குப் பேருந்து**

**வினா எண் 14917—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்திலிருந்து நாட்ராம்பாளையம் வழியாக மைசூருக்கு நடப்பாண்டில் பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்திலிருந்து நாட்ராம்பாளையம் வழியாக மைசூருக்கு நடப்பாண்டில் நேரடி பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

177—

**மாதேஸ்வரன் கோயிலுக்குப் பேருந்து**

**வினா எண் 14931—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்திலிருந்து கர்நாடக மாநிலம் ஸ்ரீமலை மாதேஸ்வரன் கோயிலுக்கு அதிக அளவில் பயணிகள் செல்வதால், பெண்ணாகரம் முதல் மேச்சேரி, மேட்டூர், பாலாறு வழியாக மாதேஸ்வரன் கோயிலுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகமும் சேலம் மற்றும் கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகமும் இணைந்து ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி சேலத்திலிருந்து மேச்சேரி வழியாக கர்நாடக மாநிலத்திலுள்ள மாதேஸ்வரன் மலை கோயிலுக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆனால், பெண்ணாகரத்திலிருந்து மாதேஸ்வரன் மலைக்கு பேருந்து இயக்கப்பட இரு மாநில போக்குவரத்துக் கழகங்களும் ஒப்பந்தம் இல்லாததாலும், நிதி நெருக்கடியின் காரணமாகவும் கோரிக்கை தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

178—

**பழனிக்குப் பேருந்து**

**வினா எண் 14932—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் முதல் மேச்சேரி, மேட்டூர், பவானி, பெருந்துறை, சென்னிமலை, காங்கேயம் வழியாக பழனிக்குப் பேருந்துகள் இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பேருந்துகள் இயக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழித்தடம் புதிய வழித்தடமாகும். எனவே, தற்பொழுதுள்ள நிதிநிலையில் புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளது.

179—

**எல்லா நாட்களிலும் அரசுப் பேருந்துகள் இயக்கம்**

**வினா எண் 15148—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கும் தலைமைச் செயலகத்திற்கும் இடையே சட்டமன்றக் கூட்டத் தொடர் காலங்களில் அரசுப் பேருந்துகள் இயக்குவதுபோல் மற்ற நாட்களிலும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கும் தலைமைச் செயலகத்திற்கும் இடையே சட்டமன்ற கூட்டத் தொடர் காலங்களில் அரசுப் பேருந்துகள் இயக்குவதுபோல் மற்ற நாட்களில் இயக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

180—

**புதிய நகரப் பேருந்துகள்**

**வினா எண் 15218—திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதி, தொட்டியம், காட்டுப்புத்தூர், தாத்தையங்கார்பேட்டை, மேட்டுப்பாளையம் பேரூராட்சிகளில் புதிய நகரப் பேருந்துகள் இயக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதி, தொட்டியம், காட்டுப்புத்தூர், தாத்தையங்கார்பேட்டை, மேட்டுப்பாளையம்



பேரூராட்சிகள் தற்போது பகுதி வாரியாக போதியப் பேருந்து வசதி பெற்றுள்ளதால், இப்பகுதிகளில் புதிய நகரப் பேருந்துகள் இயக்கும் செயல் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

181—

**ஆடிட் செய்தல்**

**வினா எண் 15308—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களின் தவறுகளை கண்டுபிடிக்க ஏற்கெனவே வெளியிலிருந்து ஆடிட்டர் ஒருவரை நியமித்து ஆடிட் செய்ததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தற்போது அதேபோல் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது அதேபோல் ஆய்வு செய்வது குறித்த நடவடிக்கைகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

182—

**கூடுதல் பேருந்து**

**வினா எண் 15324—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் போதுமான பேருந்து வசதிகள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

[2003 மே 10

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கூடுதலாக பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதியில் பொதுமக்களின் தேவைக்கேற்ப ஏற்கெனவே போதுமான பேருந்து வசதி உள்ளது. எனவே, கூடுதலாக பேருந்துகள் இயக்கும் அவசியம் எழவில்லை.

**183—**

**புதுக்கோட்டை நகருக்குள் நகரப் பேருந்துகள்**

**வினா எண் 16787—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகர எல்லைக்குள் நகரப் பேருந்து இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகர எல்லைக்குள் நான்கு நகரப் பேருந்துகள் பல்முனைத் திட்டத்தின்கீழ் இயக்கப்படுகின்றன. கூடுதல் நகரப் பேருந்துகள் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**184—**

**போக்குவரத்துக் கழகப் பணிமனை**

**வினா எண் 16794—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வகோட்டையில் அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**185—**

**தானியங்கிப் பணிமனை**

**வினா எண் 18051—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தனியே அரசு தானியங்கிப் பணிமனை அமைத்துக் கொடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்கெனவே அரசு தானியங்கிப் பணிமனை 80 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. புதிய மாவட்டங்களான நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் மிகக் குறைந்த அளவிலான எண்ணிக்கையில் வாகனங்கள் உள்ளதால்,

[2003 மே 10

தற்போது இம்மாவட்டங்களிலுள்ள அரசுத் துறை வாகனங்கள் தஞ்சாவூரிலுள்ள அரசு தானியங்கிப் பணிமனையையே பயன்படுத்தி வருகின்றன. இம்மாவட்டங்களில் அரசுத் துறை வாகனங்களின் எண்ணிக்கை கூடுதலாகும்போது அம்மாவட்டங்களில் பணிமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

(ஆ) எழாது.

**186—**

**பழுதுபார்க்கும் மையம்**

**வினா எண் 18507—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி, கந்தினி, சோலையார்பேட்டை, திருப்பத்தூர் ஒன்றியப் பகுதிகளில் அரசு வாகனங்கள் பழுது அடைந்தால் வேலூருக்குதான் செல்ல வேண்டிய நிலை உள்ளதால் திருப்பத்தூரில் பழுதுபார்க்கும் மையம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஏற்கெனவே திருப்பத்தூரில் பணிமனை ஒன்று இயங்கி வருகிறது.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**187—**

**இலவச பயண அனுமதிச் சீட்டு**

**வினா எண் 18608—திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளி மாணவர்களில் இலவச பேருந்து பயண அனுமதிச் சீட்டு (Bus Pass) பள்ளிகள் துவங்கி இரண்டு மாதம் கழித்துத்தான் அவர்களுக்கு கிடைக்கிறது என்பது அரசுக்கு தெரியுமா?



2003 மே 10]

(ஆ) ஆம் எனில், உடன் கிடைக்க வழிவகை செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அனைத்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அனுமதிச் சீட்டுகளை பள்ளிகள் துவங்கிய உடனேயே அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்து அவற்றை வழங்கியும் உள்ளன.

(ஆ) கேள்வி எழ இடமில்லை.

**188—**

**சிக்னல் மாற்றி அமைத்தல்**

**வினா எண் 19790—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு எதிரில் பயணிகள் சாலையைக் கடக்க சுரங்கப் பாதை இருந்தும் நெரிசல் நேரங்களில் இட நெருக்கடி அதிகம் உள்ளதால் சாலையிலேயே கடந்து செல்ல அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அதற்கேற்ற வகையில் சிக்னல் எரிவதை மாற்றி அமைக்க ஆவன செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு எதிரில் நெரிசல் நேரங்களில் சுரங்கப் பாதையைத் தவிர்த்து பாதசாரிகள் சாலையைக் கடந்து செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

[2003 மே 10

(ஆ) எனவே, சிக்னலை மாற்றியமைக்க அவசியமில்லை.

**189—**

**பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம்**

**வினா எண் 20158—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகரில் அரசு விரைவுப் பேருந்துகளுக்கு தனியாக பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம், புதக்கோட்டை நகரில் விரைவுப் பேருந்துகளுக்காக தனியாக பேருந்து நிலையம் அமைப்பதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**190—**

**போக்குவரத்துக் கிளை ஆரம்பிக்கும் திட்டம்**

**வினா எண் 22638—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேர்ணாம்பட்டு தொகுதி, அரசுப் போக்குவரத்துக் கிளை ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2003 மே 10]

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேர்ணாம்பட்டு தொகுதியில், பேர்ணாம்பட்டில் ஏற்கெனவே தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-2), வேலூரின் கிளை ஒன்று 1975 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது.

**191—**

**இலவச பேருந்து பயண அட்டை**

**வினா எண் 22931—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு பணிக்கு வர இலவச பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தூரத்திற்கு அந்த அனுமதி அளிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) வினாவில் கண்டுள்ள பொருள் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

[2003 மே 10

**192—**

### பேருந்துக் கட்டணம் குறைத்தல்

**வினா எண் 23107—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியதை அரசு டீசல் விலை குறைப்புக்கேற்றவாறு குறைக்க நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியதை அரசு டீசல் விலை குறைப்புக்கேற்றவாறு குறைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**193—**

### பேருந்து பணிமனை அமைத்தல்

**வினா எண் 23374—திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதி, மங்களூரில் புதிதாக பேருந்து பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் கோரியுள்ளது போன்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.



2003 மே 10]

**194—**

### சாலை விபத்தைக் குறைத்தல்

**வினா எண் 23600—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஏற்படும் சாலை விபத்தைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் ஏற்படும் சாலை விபத்துக்களைக் குறைக்க, அரசு, கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது:-

(அ) விபத்து அதிகமாக நடைபெறும் பகுதிகளை அடையாளம் கண்டு, அவ்விடங்களில் விபத்துக்களை தவிர்க்கும்பொருட்டு, போக்குவரத்து குறியீடுகள் பொருத்துதல், சாலையைப் பிரிக்கும் தடுப்புகளை ஏற்படுத்துதல், சாலையை அகலப்படுத்துதல், நெடுஞ்சாலைகளில் ஆக்கிரமிப்புக்களை அகற்றுதல், சாலையோரங்களில் கிணறுகளும், குளங்களும் அமைந்துள்ள இடங்களில் சுற்றுச்சுவர்களைக் கட்டுதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) சாலைகள் தெளிவாகத் தெரியும் வகையில் மின்விளக்குகளை அமைத்தல், சாலை விதிகளை உணர்த்தும் வகையில் குறியீடுகளை வரைதல் ஆகியவை நடைபெறுகின்றன.

(இ) அதிவேகமாக வாகனங்களை ஓட்டுதல், குடித்துவிட்டு ஓட்டுதல், அதிக சுமைகளை ஏற்றிச் செல்லுதல் ஆகியவற்றை தடுக்கும் வகையில் கடுமையான நடவடிக்கைகள எடுக்கப்படுகின்றன.

(ஈ) சாலை விதிகளை மீறும் ஓட்டுநர்களை கண்காணிக்கும் வகையில், சென்னை நகரத்தில் கணினிமயமாக்கப்பட்ட சலான் (Challan) முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

195—

## சென்னைக்குப் புதிய பேருந்து

**வினா எண் 24355—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையிலிருந்து சென்னைக்கு புதிய பேருந்து விட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக, தேன்கனிக்கோட்டையிலிருந்து சென்னைக்குப் புதிய பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

196—

## மின் இயந்திர தானியங்கி நிலை உயர்த்திகள்

**வினா எண் 25150—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலுள்ள தானியங்கிப் பணிமனைகளில் மின் இயந்திர தானியங்கி நிலை உயர்த்திகள் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்பட உள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மோட்டார் வாகன பராமரிப்புத் துறைக்கென சேலத்திலுள்ள அரசு தானியங்கிப் பணிமனையில், ஏற்கெனவே 2000-2001 ஆம் ஆண்டு திட்டப் பணிகள் பாகம் II-ன்கீழ் அரசாணை எண் 60, போக்குவரத்துத் துறை, நாள் 25-5-2000-ன்படி மின் இயந்திர தானியங்கி நிலை உயர்த்தி ஒன்று அமைக்கப்பட்டு, தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மின் இயந்திர தானியங்கி நிலை உயர்த்தி, பயனுள்ளதாகவும் போதுமானதாகவும் உள்ளது. ஆகவே இந்த வகை மின் இயந்திர தானியங்கி நிலை உயர்த்திகள் சேலம் தானியங்கிப் பணிமனையில் புதிதாக அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

197—

## மினி பஸ்கள்

**வினா எண் 26175—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மினி பஸ் எத்தனை ஓடுகிறது?

(ஆ) இதனை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 176 சிற்றுந்துகள் தற்போது இயங்குகின்றன. விண்ணப்பங்கள் பெறப்படுமெனில், விதிப்படி பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படும்.

[2003 மே 10

198—

**பதவி உயர்வு அளித்தல்**

**வினா எண் 14—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 20 ஆண்டுகளாக பணிபுரியும் கணக்கீட்டாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

199—

**சிப்காட் தொழிற்பேட்டை அமைத்தல்**

**வினா எண் 220—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் 'சிப்காட்' தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் இல்லை.

200—

**அனல் மின் உற்பத்தித் திட்டம் மதிப்பீட்டுத் தொகை**

**வினா எண் 497—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணூரில் 1000 மெகாவாட் அனல் மின் உற்பத்தித் திட்டம் எப்பொழுது துவக்கப்பட உள்ளது?

(ஆ) அந்தத் திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) புதிய எண்ணூர் (2 x 500) அனல் மின் நிலையம் அமைப்பதற்கான அட்டவணை:

(1) முதல் அலகு 1 x 500 மெகா வாட் 42 மாதங்கள் பூஜ்ஜிய தேதியிலிருந்து.

* பூஜ்ஜிய தேதியானது இத்திட்டம் அமைப்பதற்கான நிதி உறுதிபாடு செய்வதை அடிப்படையாகக் கொண்டது.

(2) இரண்டாம் அலகு 1 x 500 மெகா வாட் முதல் அலகு செயல்பாட்டுக்கு வந்த பிறகு 9 மாதங்கள்.

(ஆ) திருவாளர்கள் எல் & டி சார்ஜண்ட் & லெண்டி நிறுவனம் தயாரித்த வரைவு செயலாக்க அறிக்கைப்படி இத்திட்ட மதிப்பீடு சுமார் ரூபாய் 4,152 கோடியாகும்.

[2003 மே 10

## பட்டியல் 32

1—

### பணி நிரந்தரம்

**வினா எண் 1135—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நீர் மின் உற்பத்தி வட்டத்தில் பணிபுரியும் 849 ஒப்பந்தப் பணியாளர்களில் 500 பேர் மட்டும் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள 349 பேருக்கு பணி நிரந்தரம் செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

பணி நிரந்தரம் செய்யப்படாத ஒப்பந்தத் தொழிலாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்துள்ளனர். இவ்வழக்குகளின் தீர்ப்பின் அடிப்படையில் இவர்கள் பணி நிரந்தரம் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

2—

### கட்டட வசதி

**வினா எண் 1294—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் மின்சாரப் பொறியாளர்கள் அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) 2001-2002 ஆம் நிதியாண்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம்.

3—

### இலவச மின்சாரம்

**வினா எண் 1311—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி பொறுப்பிலுள்ள குடிநீர் தொட்டிகளுக்கான மின் இணைப்பு கட்டணத்தைக் கட்ட இயலாத நிலையிலுள்ள ஊராட்சிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இயலாது.

4—

### மின் வசதி

**வினா எண் 1418—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி 8வது வார்டு, மன்னராஜா கோவில் தெரு, பழைய பஞ்சாயத்து காலனியில் 40 ஆண்டுகளாக ஓலை வீடுகளில் வசித்து வரும் மக்களுக்கு மின் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

மின் அளவி பொருத்தி மின் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பம் பதிவு செய்தால் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**5—**

**மின் கம்பம்**

**வினா எண் 1448—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, வடக்கு பொன்னிரை கிராமத்தில் புதிய மின் கம்பம் அமைத்து மின் விளக்குகள் போட அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**6—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 1480—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கபிலர் மலை தொகுதி, மோகனூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*



விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மோகனூரிலிருந்து 5 கி.மீ தொலைவிலுள்ள எஸ். வாழவந்தி என்ற இடத்தில் துணை மின் நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான கருத்துரு ஆய்வு செய்யப்படுகிறது. ஆய்வில் துணை மின் நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டால் அத்துணை மின் நிலையம் அமைக்கும் பணி மேட்டூர் மின் பகிர்மாண வட்டத்திற்கான 10-வது திட்டகால மின் செலுத்துகை மற்றும் விநியோக பெருந்திட்டத்தில் சேர்க்கப்பட்டு, அத்துணை மின் நிலையம் நிறுவப்படும். மோகனூரிலும் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களுக்கும் வருங்கால மின் சுமை வளர்ச்சியை எதிர்கொள்ள மோகனூருக்கு இத்துணை மின் நிலையத்திலிருந்து தனி மின்னூட்டி ஒன்றை அமைத்தால் போதுமானது.*

**7—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 1482—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கபிலர் மலை ஒன்றியம், கொத்தமங்கலம், சிறுநல்லிகோவில், குரும்பலாமகாதேவி பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கொத்தமங்கலத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சேடர்பாளையம் என்ற இடத்தில் துணை மின் நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான கருத்துரு ஆய்வு செய்யப்படுகிறது. ஆய்வில் துணை மின் நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டால்*

[2003 மே 10

அத்துணை மின் நிலையம் அமைக்கும் பணி மேட்டூர் மின் பகிர்மாண வட்டத்திற்கான 10-வது திட்டகால மின் செலுத்துகை மற்றும் விநியோக பெருந்திட்டத்தில் சேர்க்கப்பட்டு அத்துணை மின் நிலையம் நிறுவப்படும்.

8—

**மின் உற்பத்தி**

**வினா எண் 1511—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருத்தூர் கிராமத்தில் அடிக்கல் நாட்டிய எரிசக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் நிறைவேற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

ஆம்.

9—

**மணல் வியாபாரம்**

**வினா எண் 1794—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியில் உள்ள காவிரி ஆற்றுப் படுகையில் மணல் அள்ளி வியாபாரம் செய்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், கபிலர்மலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காவிரி ஆற்றுப் படுகையில் அரசு விதிகளுக்கு உட்பட்டு மட்டுமே மணல் எடுக்க டெண்டர் மற்றும் ஏலம் மூலம் குத்தகை உரிமம் மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்டுள்ளது. திருட்டுத்தனமாக மணல் எடுப்பதைத் தடுக்கிற வகையில் மாவட்ட ஆட்சியரால் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

10—

**தொழிற்பேட்டை**

**வினா எண் 2014—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, மிகவும் பின்தங்கியுள்ளதால், பாப்பாரப்பட்டியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டியில் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் இல்லை.

[2003 மே 10

11—

## கிரானைட் கற்கள்

**வினா எண் 2015—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி, சேலம் மாவட்டங்களில் அதிகம் கிடைக்கும் கிரானைட் கற்களை தனியார் முதலாளிகளுக்கு குத்தகைக்கு விடுவதைத் தவிர்த்து கிரானைட் கல் உடைக்கும் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவற்றை குத்தகைக்கு விட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையிலுள்ள விதிகளின்படி, அரசு நிலங்களில் உள்ள கிரானைட் கற்களை வெட்டியெடுக்க ஒப்பந்தப்புள்ளி இணைந்த பொது ஏலமுறையில்தான் குத்தகை வழங்க முடியும். அதனைத் தவிர்த்து கல் உடைக்கும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குத்தகைக்கு விட விதிகளில் வழிவகை இல்லை.

12—

## முன்னுரிமை

**வினா எண் 2019—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பொட்டனேரி சிஸ்கால் தொழிற்சாலையில் உள்ள பணியிடங்களை நிரப்பும்பொழுது அப்பகுதியைச் சார்ந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிஸ்கால் நிறுவனம் இயன்றவரை உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. சிஸ்கால் நிறுவனத்தில் மொத்தம் 677 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களில் 394 பேர் உள்ளூர் மக்கள் ஆவர்.

13—

## தொழிற்பேட்டை

**வினா எண் 2023—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியம், தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கியுள்ளதால் 100 ஏக்கர் நிலத்தில் அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் அரசிடம் இல்லை.

14—

## மின் உற்பத்தி

**வினா எண் 2791—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, ஒகேனக்கல்லில் காவிரி ஆற்றில் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அத்திட்டம் நிறைவேற்றப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம். இத்திட்டம் தேசிய நீர்மின் குழுமத்திடம் உள்ளது.

(ஆ) காவிரி மின் திட்டத்தில் உள்ள ஒகேனக்கல் புனல் மின் திட்டம் (120 மெ.வா) இந்திய அரசின் ஆளுமைக்குட்பட்ட தேசிய நீர்மின் குழுமத்திடம் அமல்படுத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய நீர்மின் குழுமம் மற்றும் காவிரி ஆற்றின் நீர்த்தேக்கங்கள் நிறைந்த நான்கு மாநிலங்களுக்கிடையேயான (அதாவது தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் பாண்டிச்சேரி) உடன்பாட்டு ஒப்பந்தம் கையெழுத்தானவுடன் இந்த புனல் மின் திட்டத்தின் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**15—**

**தொழில் தொடங்குதல்**

**வினா எண் 3112—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில், செல்லம்பட்டி, உசிலம்பட்டி பகுதிகளில் சிப்காட் மூலம் தொழில் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் செல்லம்பட்டி, உசிலம்பட்டி பகுதியில் சிப்காட் மூலம் ஒரு தொழில் வளாகம் தொடங்கும் உத்தேசம் இல்லை.





**16—**

**மின் உற்பத்தி**

**வினா எண் 3253—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியாருக்கு மின் உற்பத்தி செய்ய அரசு அனுமதிக்கிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம். மத்திய அரசு 1991-ஆம் ஆண்டு அறிவித்துள்ள நெறிமுறைகளின்படி தமிழக அரசு மின்சக்தித் துறையில் தனியார் பங்கேற்பை அனுமதித்துள்ளது.

(ஆ) தமிழ்நாட்டில் மின்சார மேம்பாட்டிற்காக மொத்தம் 8070 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய 13 (பதிமூன்று) மின் உற்பத்தித் திட்டங்களை கருத்தளவு ஒப்பந்த நடைமுறை மூலம் தனியார் திட்ட முனைவோரிடம் தமிழ்நாடு அரசு ஒப்படைத்துள்ளது. மேலும், மொத்தம் 5123 மெகாவாட், திறன் கொண்ட 20 குறுகியகால பல திரவ எரிபொருள் மின் திட்டங்கள் மற்றும் 2 சிறப்பு மின் திட்டங்களை தமிழ்நாட்டில் 22 (இருபத்திரெண்டு) இடங்களில் நிறுவ தனியார் திட்ட முனைவோர்களிடம் பன்னாட்டு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தமிழ்நாடு அரசு ஒப்படைத்துள்ளது.

**17—**

**மின் கட்டணம் வசூலிக்கும் மையம்**

**வினா எண் 3358—திரு. டி. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

கன்னியாகுமரி மாவட்டம், களியல் வருவாய் கிராமம், ஆறுகாணி பகுதியில் மின் கட்டணம் வசூலிக்கும் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

ஆம்.

**18—**

## மின் உற்பத்தி

**வினா எண் 3422—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-1997-ல் நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் மின் உற்பத்தி திட்டத்திற்காக பல்வகையாக செய்யப்பட்ட செலவு எவ்வளவு?

(ஆ) அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டதற்கு என்ன காரணம்?

(இ) அதை மீண்டும் துவக்க அரசிடம் கருத்துரு உள்ளதா? அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ரூபாய் 92.81 இலட்சம்.

(ஆ) சில தனி நபர்கள், சென்னை உயர்நீதிமன்றத்தில் 'தமிழ்நாடு மின்சார வாரியம் இத்திட்டத்திற்காக மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் அனுமதியை இன்னும் பெறவில்லை' என்ற வழக்கு தொடர்ந்ததை அடுத்து சென்னை உயர்நீதிமன்றம் 1996 டிசம்பரில் இடைக்கால தடை விதித்தது. எனவே, இத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.



2003 மே 10]

(இ) ஆம். இத்திட்டத்திற்குத் தேவையான 5.5 ஹெக்டேர் வன நிலத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தருவதற்கான ஒப்புதல் மத்திய அமைச்சகத்தின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறையின் ஒப்புதல் மற்றும் உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் அளித்துள்ள சில நடைமுறைகள் ஆகியவை நிறைவுற்ற பின்னர் மீண்டும் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் ஐந்து சிற்றணைகள் கட்டப்படும். இத்திட்டத்திற்குத் தேவையான நில அளவை வேலைகள், மண் பரிசோதனை, இணைப்புச் சாலைகள் போன்ற பூர்வாங்க வேலைகளுக்கு ரூ.92.81 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

**19—**

## கோட்டப் பொறியாளர் மின் அலுவலகம்

**வினா எண் 3474—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் மின் வட்டம், எடப்பாடி நகரில் மின் கோட்டப் பொறியாளர் அலுவலகம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

23—

**வேலைவாய்ப்பு**

**வினா எண் 3767—திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியில் அனல் மின் நிலையம் கட்டியுள்ள இடத்தில் சொந்தக்காரர்களாகிய ஆதிதிராவிட மக்களுக்கு உரிய நஷ்ட ஈடு, வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைத்து நில உரிமையாளர்களுக்கும் நிலம், மரம், கட்டடம் ஆகியவற்றிற்கான இழப்பீட்டுத் தொகை ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது. தகுதியுள்ள நபர்களுக்கு மின் வாரியத்தில் வேலைவாய்ப்பும் அளிக்கப்பட்டு விட்டது.

24—

**சர்க்கரை ஆலை**

**வினா எண் 3976—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியில் கரும்பு அதிகமாகப் பயிரிடப்படுவதால் அங்கு சிறிய சர்க்கரை ஆலை அமைத்துத்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியில் சிறிய சர்க்கரை ஆலை அமைக்க உத்தேசம் ஏதும் இல்லை.



25—

**கூடுதல் மின் வசதி**

**வினா எண் 4108—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

மின் தொகுப்பில் உற்பத்தியைவிட மின் தேவை அதிகம் ஆகும் சமயங்களில் மின் பற்றாக்குறையை சமாளிக்கத் திருவலம் மின் நிலையத்திலிருந்து குடியாத்தத்திற்கு வரும் 110 கே.வி. கம்பித் தொடரில் அவ்வப்போது மின்சாரம் நிறுத்தப்பட்டு, நிலைமை சீரானவுடன் மீண்டும் வழங்கப்படுகிறது. இதுபோன்று தமிழகத்திலுள்ள மற்ற துணை மின் நிலையங்களிலும் செய்யப்படுகின்றன. இதன் காரணமாகத்தான் குடியாத்தம் நகரில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டுள்ளது. மற்ற வேறெந்த காரணங்களுக்காகவும் குடியாத்தம் நகரில் மின்தடை ஏற்படுவதில்லை.

26—

**மின் இணைப்பு**

**வினா எண் 4199—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய நீரிறைக்கும் இயக்கிக்கு மின் இணைப்பு பெற பதிவு செய்து காத்திருப்போர் வரிசையில் உள்ள தமிழ்நாடு விவசாயிகளுக்கு மின் இணைப்பு தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—** [2003 மே 10

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வருடாந்திர குறியீட்டிற்குட்பட்டு மின் இணைப்புகள் வழங்கப்படும்.

**27—**

**மின் இணைப்பு**

**வினா எண் 4205—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் விவசாய நீர் இறைக்கும் இயக்கிக்கு புதிய மின் இணைப்பு உடனடியாக பெற ரூ.50,000/- என்று உயர்த்தியுள்ளதை குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு முழுவதும் நீர் இறைக்கும் இயக்கிக்கு புதிய மின் இணைப்பு உடனடியாகப் பெற ரூ.50,000/- செலுத்த வேண்டும் என்ற திட்டம் எதுவும் வாரியத்திடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2003 மே 10]

**28—**

**புதிய மின்மாற்றி**

**வினா எண் 4268—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கண்ணநல்லூர் ஊராட்சி, முத்துலாபுரம் கிராமத்தில் மின்னழுத்தம் குறைவாக உள்ளதால் புதிய மின்மாற்றி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டு 29-8-2001 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டுவிட்டது.

**29—**

**மின் வசதி**

**வினா எண் 4399—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியத்தில் குறைந்த மின் அழுத்தம் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது.

[2003 மே 10

30—

## தொழிற்பேட்டை

**வினா எண் 4517—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றத்தில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

திருக்கழுக்குன்றத்தில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

31—

## எரிசாராயத் தொழிற்சாலை

**வினா எண் 4802—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், மோகனூரில் உள்ள சர்க்கரை ஆலையில் கிடைக்கும் மொலாசஸைக் கொண்டு எரிசாராயத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஏற்கெனவே ஒரு எரிசாராயத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு 27-12-1993 முதல் இயங்கி வருகிறது.



2003 மே 10]

32—

## மின்மாற்றிகள்

**வினா எண்—5048—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோட்டூர் ஒன்றியம், வல்லூர் ஊராட்சியில் குறைந்த மின் அழுத்தம் உள்ளதால் வீடுகள் மற்றும் விவசாயம் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் திறனுள்ள மின் மாற்றிகள் நிறுவிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஒரு புதிய மின் மாற்றி 24-12-2001 அன்று இயக்கி வைக்கப்பட்டுள்ளது.

33—

## துணை மின் நிலையம்

**வினா எண் 5051—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டை மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டை அருகே ஆவிக்கோட்டையில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்று

[2003 மே 10

பத்தாவது பெருந்திட்டத்தின் (2002-2007) மூலம் அமைக்கப்படவிருக்கிறது. அதே தொகுதியில், உள்ளிக்கோட்டை என்ற இடத்தில் 33/11 கி.வோ. ஆளில்லா துணை மின் நிலையம் அமைக்கவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

**34—**

### கல் உடைக்கும் தொழில்

**வினா எண் 5289—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி ஊரணித்தாங்கல் மலையில் அனுமதியில்லாமல் கல் உடைப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி ஊரணித்தாங்கல் மலையில் அனுமதியின்றி கல் ஏதும் உடைக்கப்படவில்லை. மேலும், அப்பகுதியில் குத்தகை உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை. மலையில் கற்கள் ஏதும் உடைக்காமலிருக்க கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திடீர் தணிக்கை மேற்கொண்டு கள்ளத்தனமாகக் குவாரிப் பணி நடைபெறுகிறதா என்பதும் கண்காணிக்கப்படுகிறது.

**35—**

### ஆற்று மணல்

**வினா எண் 5294—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி சங்கராபரணி ஆற்றில் அனுமதியின்றி மணல் எடுப்பதைத் தடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?



2003 மே 10]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி சங்கராபரணி ஆற்றில் பருவமழை இல்லாததால் மணல் இருப்பு ஏதும் இல்லை. அதனால் அப்பகுதியில் மணல் எவரும் எடுப்பது இல்லை. மேலும் ஆற்றில் அனுமதியின்றி மணல் எடுப்பதைத் தடுக்க புவியியல் மற்றும் சுரங்கத் துறை உதவி இயக்குநர் அலுவலக அதிகாரிகள் மூலமாக அவ்வப்போது மேற்கண்ட பகுதிகளில் திடீர் தணிக்கையின் வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**36—**

### மின் உற்பத்தி

**வினா எண் 5340—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் தமிழ்நாட்டில் எங்கு செயல்படுத்தப்படுகிறது?

(ஆ) அத்திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது:

1. தூத்துக்குடி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| (1) கயத்தார் | 60.505 மெ.வா. | |
| (2) முல்லைக்காடு | 1.155 மெ.வா. | 61.660 மெ.வா. |

[2003 மே 10

2. கன்னியாகுமரி மாவட்டம்—

| | | | |
|---|---|---|---|
| முப்பந்தல் | 419.505 மெ.வா. | 419.505 மெ.வா. |

3. திருநெல்வேலி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| (1) தேவர் குளம் | 18.000 மெ.வா. | |
| (2) புளியங்குளம் | 1.590 மெ.வா. | |
| (3) வன்னிகொண்டலம் | 0.745 மெ.வா. | |
| (4) கீழ்வீராணம் | 10.125 மெ.வா. | 39.460 மெ.வா. |

4. கோயம்புத்தூர் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| (1) கேத்தனூர் | 62.725 மெ.வா. | |
| (2) சுல்தான்பேட்டை | 58.725 மெ.வா. | |
| (3) இடையார்பாளையம் | 23.915 மெ.வா. | |
| (4) இளவந்தி | 11.415 மெ.வா. | |
| (5) நெகமம் | 3.425 மெ.வா. | |
| (6) பூளவாடி | 146.475 மெ.வா. | 306.680 மெ.வா |
| மொத்தம் .. | | 827.305 மெ.வா. |

(ஆ) இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு ஏதுவாக தற்போது காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரத்திற்காக விலை யூனிட் ஒன்றுக்கு ரூ.2.70 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணம் ஐந்து ஆண்டுகள் வரை அமலில் இருக்கும். ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் மறு ஆய்வு செய்யப்படும்.

மேலும், மின்சக்தி சேமிப்பு மற்றும் அனுப்புகைக் கட்டணங்கள் 5 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மின் சக்தியை சேமிப்புக் கணக்கில் வைத்துக் கொள்ளும் கால அளவும் இரண்டு மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.



2003 மே 10]

**37—**

**பணி நியமனம்**

**வினா எண் 5361—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சாரத் துறையில் உதவுபவர் (Helper) என்று பணி நியமனம் செய்து வந்ததை தற்போது ஒப்பந்தப் பணியாளராக ஆக்கியதை நீக்கிவிட்டு மீண்டும் உதவுபவர் (Helper) என்று பணி நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**38—**

**மின்மாற்றி**

**வினா எண் 5384—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், மருத மத்தூர் கிராமத்திற்கு புதிய மின்மாற்றி அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதிய மின்மாற்றி அமைத்து 8-1-2002 அன்று இயக்கி வைக்கப்பட்டுவிட்டது.*

**39—**

**மின்வசதி**

**வினா எண் 5388—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாடகபுரம் கிராம மக்களுக்கு மின்சார வசதி செய்துக் கொடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 4-12-2001 அன்று பணி முடிக்கப்பட்டுவிட்டது.*

**40—**

**மின் இணைப்பு**

**வினா எண் 5472—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பாபநாசம் தொகுதி, சரபோஜி ராஜபுரம் ஊராட்சி, ரயிலடி தெருவிற்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*ஆம்.*

**41—**

**மின் வாரியம்**

**வினா எண் 5567—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மின்சார வாரியம் நட்டத்தில் இயங்கி வந்தது உண்மையா?*

*(ஆ) ஆம் எனில், அதை சரிசெய்ய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) அரசின் சமூகப் பொருளாதார கொள்கைகளால் தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு ஏற்படும் இழப்பீட்டைக் குறைக்க கடந்த 1-12-2001 முதல் மின் கட்டணம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மின் இழப்பைக் குறைக்க புதிய துணை மின் நிலையங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. அவற்றில் கெப்பாசிட்டர்கள் பொருத்தப்படுகின்றன. மின் திருட்டைத் தடுக்க பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது.*

**42—**

**தொழிற்பேட்டை**

**வினா எண் 6195—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவியில் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் தற்சமயம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**43—**

**மின் உற்பத்தி**

**வினா எண் 6707—திரு. டி. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்தில் காற்றாடிகள் மூலம் ஆண்டொன்றுக்கு எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு வருவாய் கிடைத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்தில் 287.47 மெகாவாட் திறனுள்ள காற்றாடிகள் மூலம் ஆண்டொன்றுக்கு 409 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

(ஆ) இதன் மூலம் வருவாய் பெறுவது என்பது காற்று சக்தியின் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்திற்கு தற்பொழுது கொடுக்கப்படும் ஒரு யூனிட்டிற்கு ரூ.2.70 என்று கணக்கிடுகையில் மேற்படி மின் உற்பத்தியின் மதிப்பு ரூ.111.43 கோடி ஆகும்.



2003 மே 10]

**44—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 6718—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியில் புள்ளபூதங்குடி அல்லது திருப்புறம்பியம் என்ற இடத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்புறம்பியம் என்னும் இடத்தில் 110 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்று அமைக்க ஒன்பதாம் ஐந்தாண்டு பெருந்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பணிகள் தொடங்கப்பட்டு தற்போது நடைபெற்று வருகின்றன.

**45—**

**வெளி மாநிலங்களுக்கு மின்சாரம் வழங்குதல்**

**வினா எண் 6936—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு எவ்வளவு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது?

(ஆ) இதனால் அரசுக்கு இழப்பு எவ்வளவு?

(இ) இழப்பினை ஈடுசெய்ய சிறப்பு திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) தமிழகத்திலிருந்து மின்சாரம் வெளி மாநிலங்களுக்கு வழங்கப்படாததால் அரசுக்கோ அல்லது மின்சார வாரியத்திற்கோ இழப்பு ஏதுமில்லை.

**46—**

**மின் இணைப்பு**

**வினா எண் 6956—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மற்றும் கந்தர்வக்கோட்டை வட்டங்களிலும் 20 மணி நேர விவசாய மின் இணைப்பு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மற்றும் கந்தர்வக்கோட்டை வட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு 20 மணி நேர மின்சாரம் வழங்க இயலாது.

**47—**

**மின் உற்பத்தி நிலையம்**

**வினா எண் 6965—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருஞ்சாணி அணையில் கட்டப்பட்டுவரும் மின் உற்பத்தி நிலையம் எப்போது செயல்படத் தொடங்கும்?

(ஆ) இது எந்த மின் பகிர்மான நிலையத்துடன் இணைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) டிசம்பர் 2002-க்குள் பணிகளை முடித்து இயக்கி வைக்க மின் வாரியத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) மேற்படி மின் நிலையம் செயல்படும்போது வியனூர் 110/11 கி.வோ. மின் பகிர்மான நிலையத்துடன் இணைக்கப்படும்.

**48—**

**மின் வசதி**

**வினா எண் 6970—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரம், பேச்சிப்பாறை, மோதிரமலை, சிற்றார், சக்கரபாணி, சிரோயாயிஸ்ட், கோதை ஆறு ஆகிய பகுதிகளில் அடிக்கடி மின் தடை ஏற்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பருவநிலை மாற்றத்தாலும் இயற்கையின் கட்டாயத்தாலும் சில நேரங்களில் மின் தடை ஏற்பட்டது. அதனை நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

[2003 மே 10

49—

**மாற்று வழி**

**வினா எண் 7046—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடசென்னை எண்ணூர் அனல் மின் நிலைய கழிவு நீர் பக்கிங்காம் கால்வாயில் திருப்பிவிடப்பட்டதால் இக்கழிவுகள் மண்மேடாகி மீனவ தொழிலாளர்களின் தொழில் முற்றிலும் பாதிக்கப்படுவதால் இதற்கு மாற்றுவழி செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

வடசென்னை எண்ணூர் அனல் மின் நிலையத்திலிருந்து பக்கிங்காம் கால்வாயில் வெளியேற்றப்படுவது வெதுவெதுப்பான நீரே தவிர கழிவு நீரல்ல. இந்த வெதுவெதுப்பான நீர் பக்கிங்காம் கால்வாயில் சேர்வதால் எந்தவிதமான மணல் மேடும் ஏற்பட வாய்ப்பில்லை.

50—

**அமராவதி மின் திட்டம்**

**வினா எண் 7076—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல் அமராவதி மின் திட்டம் அமைக்கும் பணியை துரிதப்படுத்த அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை. இத்திட்டம் கைவிடப்பட்டது.



2003 மே 10]

51—

**மின் வசதி**

**வினா எண் 7146—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் மற்றும் எண்ணூர் பகுதிகளில் குறைவாக உள்ள மின் அழுத்தத்தை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

ஆம்.

52—

**கூட்டுறவு சர்க்கரை ஆலை**

**வினா எண் 7213—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரைச் சுற்றி கரும்பு சாகுபடி அதிகமாக உள்ளதால் இப்பகுதியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையினை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் பகுதியில் தற்போது கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஏதுமில்லை.

53—

## மின் கம்பிகள்

**வினா எண் 7322—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பார்க்கனேரிகுளம் பகுதியின் வழியாகச் செல்லும் மின் கம்பிகள் அறுந்துவிழும் நிலையில் உள்ளதால் அதை சீர் செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தாலுகா, பார்க்கனேரிகுளம் பகுதியில் உள்ள மின் கம்பிகள் எவ்வித தொய்வான நிலையிலும் இல்லை. எனினும் கூடுதல் பாதுகாப்பிற்காக காப்புவலை கம்பிகள் பொருத்தப்பட்டுவிட்டன.

54—

## புதிய துணை மின் நிலையம்

**வினா எண் 7396—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பஞ்சப்பட்டி கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) வாரிய நிதி நிலையைப் பொறுத்து வரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

55—

## மும்முனை இணைப்பு

**வினா எண் 7533—திரு. கே.கே. உமாதேவன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, தெக்கூர் உபமின் நிலையத்தில் முறையூர் பீடர்-எருமைப்பட்டி வரை உள்ள இருமுனை இணைப்பை 24 மணி நேரமும் மும்முனை இணைப்பாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இயலாது.

56—

## வேலைவாய்ப்பு

**வினா எண் 7604—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்பயிற்சி கல்வி (ஐ.டி.ஐ.) படித்த மாணவர்களுக்கு மின்சாரத் துறையில் வேலைவாய்ப்பு அளிக்க இவ்வரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

[2003 மே 10

57—

**மின் வசதி**

**வினா எண் 7630—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பின்னத்தூர் ஊராட்சி என்.ஜி.எம். நகரில் ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இலவச மின்சாரம் வழங்கக் கோரி விண்ணப்பம் பெறப்பட்டதும் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

58—

**பணி மாற்றம்**

**வினா எண் 7649—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சிவில் இன்ஜினியர் உபரியாக உள்ளதாகக் கூறப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அப்பணியாளர்களை பற்றாக்குறை உள்ள நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித் துறை ஆகியவற்றிற்கு மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

(இ) விவரம் என்ன?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சிவில் இன்ஜினியர் உபரியாக உள்ளதாகக் கூறப்படுவது உண்மையல்ல.

(ஆ) மற்றும் (இ) வினா எழவில்லை.

59—

**கல் உடைக்க அனுமதி**

**வினா எண் 7926—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, பெரும்புகை ஊராட்சி எல்லையிலுள்ள மலையில் உரிமம் இல்லாமல் கல் உடைப்பதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், பெரும்புகை ஊராட்சியில் உள்ள மலைப் பகுதியில் அரசு அனுமதியின்றி கள்ளத்தனமாக கற்கள் உடைக்கப்படுவது பற்றி தற்போது எதுவும் கண்டறியப்படவில்லை. கள்ளத்தனமாக கற்கள் உடைத்தல் தொடர்பாக புகார்கள் வரும்போதும், மேலும் தேவையானபோதும், புலத் தணிக்கைகள் செய்து கள்ளத்தனமாக கற்கள் உடைப்பது தடுக்கப்பட்டு வருகிறது.

**60—**

**ஆற்று மணல்**

**வினா எண் 7933—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், மேல்சேவூர் ஆற்றில் மணல் திருடு போவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், மேல்சேவூர் ஆற்றில் மணல் திருட்டு ஏதும் புலத்தணிக்கையின்போது கண்டறியப்படவில்லை. இருப்பினும், மேற்படி ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள ஊராட்சி மன்றத் தலைவர்கள், கிராம உதவியாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர்களுக்கு மணல் திருட்டைத் தடுக்க, செஞ்சி வட்டாட்சியர் மற்றும் திண்டிவனம் வருவாய் கோட்டாட்சியர் மூலமாக தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், புவியியல் மற்றும் சுரங்கத் துறை மற்றும் வருவாய்த் துறை மூலமாக திடீர் தணிக்கைகள் மேற்கொண்டு மணல் திருட்டைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றது.

**61—**

**மின் இணைப்பு**

**வினா எண் 7949—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதியிலுள்ள விவசாய விசைக்குழாய் அமைப்புகளுக்குத் தற்போது வழங்கி வரும் கிராமப் பகுதி மும்முனை மின் இணைப்பை முழுநேர மின் இணைப்பாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அரசு எவ்வித நடவடிக்கை எடுத்துள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) நடவடிக்கை எடுக்க இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

**62—**

**பணி நியமனம்**

**வினா எண் 7979—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற் பயிற்சி படிப்பு படித்தவர்கள் மின் வாரியத்தில் மின் கம்பியாளர், உதவி கம்பியாளர் வேலைக்குத் தேர்வு செய்வதாக 1998 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தற்போது வாரியத்தில் உள்ள நிதிநிலை நெருக்கடி காரணமாக தொழிற் பயிற்சி படிப்பு படித்தவர்களை மின் கம்பியாளர்களாக நியமிப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை. மேலும், உதவி கம்பியாளர் என்கிற பதவி மின் வாரியத்தில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**63—**

**சர்க்கரை ஆலை**

**வினா எண் 7990—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்புப் பகுதியில் இயங்கி வரும் சர்க்கரை ஆலைக்குப் புரட்சித் தலைவரின் பெயர் சூட்டப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

**64—**

**கனிமங்கள்**

**வினா எண் 8060—திருமதி வி. சிவகாமி:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாராபுரம் தொகுதிக்குட்பட்ட ஒன்றியங்கள்/நகரங்களில் செங்கல் சூளைகள் இயங்கி வருவதால், விவசாய நிலங்களில் கனிமங்கள் எடுக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்கவோ அல்லது வரி விதிக்கவோ அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தாராபுரம் வட்டத்தில் விவசாய நிலங்களில் 2001-2002 ஆம் ஆண்டில் செம்மண் கனிமங்கள் எடுக்க, மொத்தம் 14*



*இனங்களில் மாவட்ட ஆட்சியரால் அனுமதி வழங்கப்பட்டு, அதற்குரிய சீனியரேஜ் கட்டணமாக ரூ.35,400 வசூல் செய்யப்பட்டுள்ளது.*

**65—**

**தொழிலில் பின்தங்கிய பகுதி**

**வினா எண் 8241—திரு பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென் மாவட்டங்களைத் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசிடம் கருத்துரு பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

**66—**

**மின் விளக்கு அமைத்தல்**

**வினா எண் 8409—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் என்.எச்.7 தேசிய நெடுஞ்சாலையிலுள்ள காவிரி ஆற்றுப் பாலத்தில் மின் விளக்கின்றி அதிக அளவில் விபத்துக்கள் ஏற்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**67—**

**துணை மின் உற்பத்தி**

**வினா எண் 8454—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உடுமலை கிழக்குப் பகுதியை தொழில்மயமாக்க குமரலிங்கம் பகுதியில் 110 மெகாவாட் துணை மின் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*இல்லை.*

**68—**

**மின் உற்பத்தி**

**வினா எண் 8902—திரு. டி. மணி:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பம் பாரி சர்க்கரை ஆலை வளாகத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை அரசு வாங்குகிறதா?*

*(ஆ) ஆம் எனில், எவ்வளவு வாங்குகிறது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மாதம் ஒன்றிற்கு சராசரியாக 72 லட்சம் யூனிட்டுகள்.*

**69—**

**மின்சாரம் வழங்குதல்**

**வினா எண் 9015—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பாடகபுரம் மக்களுக்கு மலையான்குளம் மின் மாற்றியிலிருந்து மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) பாடகபுரம் கிராமத்திற்கு முதலிலிருந்தே மலையான்குளம் மின் மாற்றியிலிருந்துதான் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.*

*(ஆ) வினா எழவில்லை.*

**70—**

**கரை எழுப்புதல்**

**வினா எண் 9079—திரு. த. ஆறுமுகம்:** *மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வட சென்னையில் உள்ள திருவொற்றியூர், எண்ணூர் அனல் மின் நிலையங்களில் குளிர்ந்த நீரைப் பயன்படுத்தி மின் உற்பத்தியைப்*

பெருக்கும் வகையில் (Sand bay) கடலும், ஆறும் சந்திக்கும் இடத்தில் மணல் தூர் வாரி ஆழப்படுத்த மின் வாரியத்தில் பல ஆண்டுகளாக பல நூறு கோடி ரூபாய் வீணாவதால் இரு கரைகளிலும் கற்களைக் கொட்டி கரை எழுப்பும் மாற்று திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எண்ணூர் துறைமுகத்தில் கற்சுவர் கட்டும் பணி தமிழ்நாடு மின் வாரியத்தால் செய்ய இயலாது. எண்ணூர் துறைமுகத்தினால் செயல்படுத்தப்பட வேண்டும். எனவே மேற்படி பணியினை விரைவில் முடிக்குமாறு எண்ணூர் துறைமுக அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**71—**

**எரிசக்தி மூலம் மின்சாரம்**

**வினா எண் 9105—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முறைசாரா எரிசக்தி மூலம் மின்சாரம் கிடைக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அளவுத் திறன் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் காற்றாலை மற்றும் மரபு சாரா எரிசக்தி மூலம் கீழ்க்கண்ட அளவில் மின்சாரம் கிடைக்கிறது:



| | காற்றாலை (மெகாவாட்) | உயிரியியல்-சக்தி (மெகாவாட்) | சூரிய-சக்தி (கிலோவாட்) |
|---|---|---|---|
| மொத்த அளவு 31-3-1997 வரை | 676 | 12 | 15 |
| கூடிய அளவு 1997-2001 ஆண்டுகளில் | 137 | 142 | 150 |
| கூடிய அளவு 2001-2002 ஆண்டுகளில் | 14 | — | — |
| | 827 | 154 | 165 |

இதுதவிர, இணை மின் உற்பத்தி மூலம் 142.1 மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது.

**72—**

**பணி நிரந்தரம்**

**வினா எண் 9170—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சாரத் துறையில் 12,000 தினக்கூலிப் பணியாளர்களை நிரந்தரம் செய்யும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மின்சாரத் துறையில் 12,000 தினக்கூலி ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

73—

**அணையிட்டு தடுத்தல்**

**வினா எண் 9172—திரு. அ.இரா. மலையப்பசாமி**: மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலைத் தொகுதி சோழசிராமணி பகுதியில் (Barrage) அணையிட்டுத் தடுக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

மேற்படி திட்டம், அதாவது பவானி கட்டளை தடுப்பணை-3 என்ற பெயரில் ரூ.99.75 கோடி செலவில் அமைப்பதற்கு அரசு 27-3-2002 அன்று மின் வாரியத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

74—

**தொழிலில் பின்தங்கிய தொகுதி**

**வினா எண் 9218—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியைத் தொழில் ரீதியாக பின்தங்கிய தொகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.





75—

**சர்க்கரை ஆலை**

**வினா எண் 9467—திரு. எஸ். நடராஜன்**: மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்தில் சர்க்கரை ஆலை திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்தில் புதிய சர்க்கரை ஆலை அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

76—

**புதிய மின் கேபிள்கள்**

**வினா எண் 9657—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர், தொகுதி 11-வது வட்டம் காமராஜர் நகரில் அடிக்கடி ஏற்படும் மின் வெட்டைக் களைய புதிய மின் கேபிள்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

ஆம்.

77—

**பிளைவுட் நிறுவனம் தொடங்குதல்**

**வினா எண் 9906—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர் தொகுதி, செங்கல்ராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் வெளியாகும் பக்காஸ் மூலம் பிளைவுட் நிறுவனம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்ராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் வெளியாகும் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி பிளைவுட் நிறுவனம் தொடங்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

78—

**மின் வசதி**

**வினா எண் 10093—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மின்சாரமே வழங்கப்படாத கிராமங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) மின் வசதி வழங்கப்படாத கிராமமே இல்லை என்ற இலக்கை அடைய அரசுக்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அரசு அறிவிக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) எதுவும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

79—

**புதிய துணை மின் நிலையம்**

**வினா எண் 10192—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள, முகந்தெரியாக் குப்பம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய துணை மின் நிலையத்தை, விரைவில் செயல்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முகந்தெரியாக்குப்பத்தில் 110/11 கிலோவாட் துணை மின் நிலையம் ஒன்று புதிதாக அமைக்கக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

80—

**பணி வழங்குதல்**

**வினா எண் 10263—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், எமரால்டு வட்டத்தில் அமைந்துள்ள நீர் மின் திட்டம் 6-ல் பணிபுரிந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நீக்கம்

[2003 மே 10

செய்யப்பட்டுள்ளதால், மீண்டும் அத்தொழிலாளர்களைப் பணியில் சேர்த்திட திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**81—**

**மின்சார உற்பத்தியை அதிகரிக்க திட்டம்**

**வினா எண் 10306—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடுத்த 10 ஆண்டு மின்சாரத் தேவையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு மின்சார உற்பத்தியை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பத்தாவது (2002-07) திட்ட முடிவில் ஏற்படும் மின்சாரத் தேவையைக் கணக்கில் கொண்டு கீழ்க்கண்ட கூடுதல் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ளது:-

| | | |
|---|---|---|
| மாநிலத் துறை | : | 499 மெகா வாட் |
| மத்திய துறையிலிருந்து பங்கு | : | 1151 மெகா வாட் |



2003 மே 10]

| | | |
|---|---|---|
| தனியார் துறை | : | 1000 மெகா வாட் |
| மொத்தம் | : | 2650 மெகா வாட் |

பதினொன்றாம் (2007-12) திட்ட காலத்தில் எடுக்கப்பட வேண்டிய மின் திட்டங்கள், பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2X1000 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட அணு மின் நிலையம் கூடங்குளத்தில் இயக்கப்படவிருப்பதால் தமிழ்நாட்டிற்கு இந்தப் பிரிவிலிருந்து பெரும் பங்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**82—**

**பதவி உயர்வு**

**வினா எண் 10316—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக மின் வாரியத்தில் பகுதி நேர பொறியியல் பட்டம் பயின்ற ஊழியர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி உயர்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

ஆம்.

**83—**

**பவர் பிளாண்ட் பணிகள்**

**வினா எண் 10409—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இயற்கை எரிவாயு மூலம் மின்சாரம் தயாரிக்கும் முறையில் மருத்துவர் பவர் பிளாண்ட் (Power Plant) பணிகள் எந்த நிலையிலுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

பாரத மிகு மின் நிறுவனத்திற்கு (BHEL) ஒப்பந்த முறையில், தொழில் நுட்பம், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) ஆகியவற்றின் ஒப்புதல் கடிதம். 23-1-2002 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் தற்போது கட்டுமானப் பணிகளை ஆரம்பித்துள்ளது.

**84—**

**புதிய மின் மாற்றி**

**வினா எண் 10527—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட புலியூர் ஊராட்சியில் புதிய மின் மாற்றி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய மின் மாற்றி 17-8-2001 அன்று நிறுவப்பட்டுவிட்டது.

**85—**

**உதவியாளர் பணி நியமனம்**

**வினா எண் 10590—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் வாரியத்தில் உதவியாளர் பணிக்கென வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் உதவியாளர்களை நியமிக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**86—**

**புதியதாக பணி நியமனம்**

**வினா எண் 10609—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கம்பியாளர் மற்றும் உதவியாளர் பற்றாக்குறையைக் களைய புதியதாக ஆட்களை நியமனம் செய்யும் கருத்துரு அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

**87—**

**புதிய மின் கம்பங்கள்**

**வினா எண் 10710—திரு. டி. பழனிசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், ஒரத்தூரில் பழுதுபட்டுள்ள மின் கம்பங்களுக்குப் பதிலாக புதிய மின் கம்பங்கள் அமைக்க அரசிடத்தில் திட்டம் உள்ளதா?

[2003 மே 10

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புதிய மின் கம்பங்கள் அமைக்கப்பட்டுவிட்டன.

**88—**

**புதிய மின் மாற்றி**

**வினா எண் 10891—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், அச்சம்பாடு ஊராட்சி, கிழவனேரி கிராமத்தில் மின்னழுத்தம் மிகக் குறைவாக உள்ளதால், புதிய மின் மாற்றி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

புதிய மின் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

**89—**

**ஒற்றை விளக்கு வசதி**

**வினா எண் 10982—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தலாம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மஞ்சக்குடி ஊராட்சி மேல மூலங்குடி கிராம குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர அரசு உதவுமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

ஆம்.

**90—**

**மைக்கா தொழில்**

**வினா எண் 11631—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியத்தில் அரசே ஏற்று மைக்கா வெட்டி எடுத்து பல கிராமங்களுக்கு வேலை கிடைக்க வழி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்டராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியத்தில் உள்ள செவ்வாத்தூர் கிராமத்தில் தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனம் மைக்கா சுரங்கத்தை நடத்தி வருகிறது. இச்சுரங்கத்தில் 37 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் 50 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உள்ளது.

**91—**

**செய்தித்தாள் ஏற்றுமதி**

**வினா எண் 11678—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் மூலமாக உற்பத்தியாகும் செய்தித்தாள்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை நாடுகளுக்கு என்னென்ன வகை செய்தித்தாள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 17 நாடுகளுக்கு 5 வகையான தாள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**92—**

**மின் உற்பத்தி**

**வினா எண் 11935—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சூரிய ஒளியின் மூலம் மிகப் பெரிய அளவில் மின் உற்பத்தி செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சூரிய ஒளி மூலம் மிகப்பெரிய அளவில் தமிழகத்தில் மின் உற்பத்தி செய்வதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.



2003 மே 10]

**93—**

**காற்றாலைகள்**

**வினா எண் 11936—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் 10 மெகாவாட் திறனுள்ள காற்றாலைகள் புதிதாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு அமைக்கப்படவுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் புதிய காற்றாலைகள் நிறுவும் எண்ணம் தற்பொழுது அரசுக்கு இல்லை.

**94—**

**கவுன்சிலிங்**

**வினா எண் 12225—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது ஆசிரியர்களுக்கு வழங்கிய "கவுன்சிலிங்" அடிப்படையில் மாறுதல் செய்ததைப் போல் மின்சார வாரியத்தில் உள்ளவர்களுக்கும் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் தற்போது ஆசிரியர்களுக்கு வழங்கிய கவுன்சிலிங் அடிப்படையில் மாறுதல் செய்ததைப்போல் மின்சார வாரியத்தில் உள்ளவர்களுக்கும் வழங்க வாரியத்திடம் திட்டம் ஏதுமில்லை.

[2003 மே 10

95—

**துணை மின் நிலையம்**

**வினா எண் 12296—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலுள்ள துணை மின் நிலையத்தில் தினசரி விநியோகிக்கப்படும் மின் அளவு எவ்வளவு?

(ஆ) அதை அந்த வட்டாரத்தின் வளர்ச்சியைக் கருதி 230 கி.வாட் துணை மின் நிலையமாக மாற்ற அரசு முன்வருமா?

(இ) அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 3,32,376 யூனிட்டுகள்.

(ஆ) மற்றும் (இ) தொழில் நுட்பரீதியாக எடப்பாடியில் தற்போதுள்ள 110 கி.வோ. துணை மின் நிலையத்தை 230 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை.

96—

**மின் உற்பத்தி திட்டங்கள்**

**வினா எண் 12312—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையிலுள்ள மின் உற்பத்தித் திட்டங்கள் எத்தனை?

(ஆ) அதன் விவரம் என்ன?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இரண்டு திட்டங்கள்.

(ஆ) 1. தாமிரபரணி நீர்மின் திட்டம் - 40 மெகாவாட்

2. நரிமணம் எரிவாயு சுழலி - 5 மெகாவாட் மின்திட்டக் கூடுதல் பிரிவு.

97—

**மின் இணைப்புகள்**

**வினா எண் 12576—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம் கீரைக்காரனூர் துவக்கப் பள்ளிக்கு மின்னிணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டில் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உரிய விண்ணப்பம் பெறப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

98—

**துணை மின் நிலையம்**

**வினா எண் 12586—திரு. கா.மு. முனுசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டிணம் பகுதியில் மின்னழுத்தக் குறைவை சரிசெய்ய துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(1) காவேரிப்பட்டிணத்திலுள்ள 33 கே.வி. ஆளில்லா துணை மின் நிலைய மின் மாற்றியின் திறனை 5 எம்.வி.ஏ.யிலிருந்து 8 எம்.வி.ஏ.வாக உயர்த்துவதற்கும் மற்றும்

(2) காவேரிப்பட்டிணத்திற்கு அருகாமையிலுள்ள குட்டிக் கவுண்டனூரில் ஒரு 33 கே.வி. ஆளில்லா துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துருக்கள் தமிழ்நாடு மின்வாரியத்தின் 10-வது பெருந்திட்டத்தின் பரிசீலனையில் உள்ளது.

**99—**

**மின் உற்பத்தி நிலையங்கள்**

**வினா எண் 12595—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வருங்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு புதிய மின் உற்பத்தி நிலையங்கள் துவங்கிட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வரும் பத்தாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் (2002-2007) அமைய இருக்கும் மின் உற்பத்தி நிலையங்கள் கீழே வருமாறு:—

| | |
|---|---|
| மாநிலத் துறை | - 499 மெகாவாட் |
| மத்திய அரசு திட்டங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பங்கு | - 1151 மெகாவாட் |
| தனியார் துறையிலிருந்து பங்கு | - 250 மெகாவாட் |
| மொத்தம் | - 1900 மெகாவாட் |



**100—**

**புனல் மின் உற்பத்தி நிலையம்**

**வினா எண் 12596—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒகேனக்கல்லில் புனல் மின் உற்பத்தி நிலையம் தொடங்கிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

ஆம், காவேரி மின் திட்டத்தின்கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள 4 மின் திட்டங்களில் ஒகேனக்கல் புனல் மின் திட்டமும் (120 மெ.வா.) ஒன்றாகும். இத்திட்டம் இந்திய அரசின் ஆளுமைக்குட்பட்ட தேசிய புனல் மின் குழுமத்திடம் செயல்படுத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய புனல் மின் குழுமம் மற்றும் காவிரி ஆறு சம்பந்தப்பட்ட நான்கு மாநிலங்களுக்கிடையேயான (அதாவது தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் பாண்டிச்சேரி) உடன்பாட்டுக் குறிப்பு கையெழுத்தானவுடன்; இந்த புனல் மின் திட்டத்தின் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும்

**101—**

**மின் கம்பங்கள்**

**வினா எண் 12644—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சொரத்தன்குழி கிராமத்தில் மேற்கு தெருவில் மின் கம்பங்களில் இணைக்கப்பட்டுள்ள தாழ்வான மின் கம்பிகளை உயர்த்தி பொருத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 11-3-2002 அன்று இரண்டு புதிய மின் கம்பங்கள் அமைத்து மின் பாதையின் உயரம் அதிகரிக்கப்பட்டுவிட்டது.

**102—**

**சிப்காட் விரிவாக்கத் திட்டம்**

**வினா எண் 12877—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை, சிப்காட் பேஸ்-3 விரிவாக்க திட்டம் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இராணிப்பேட்டை, சிப்காட் பகுதி-3, விரிவாக்கத் திட்டத்திற்கு 801.96 ஏக்கர் நிலம் அடையாளம் கண்டு இதுவரை 496.07 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

**103—**

**ஏரியில் மணல் எடுப்பதை தவிர்த்தல்**

**வினா எண் 12924—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பூவிருந்தவல்லி தொகுதியில் செம்பரம்பாக்கம் ஏரியில் இரவு நேரங்களில் அனுமதியில்லாமல் மண் எடுப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை தடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பரம்பாக்கம் கிராம ஏரியில், சவுடு மண் எடுக்க அனுமதி பெற்றவர் மட்டுமே மண் எடுக்க அனுமதிக்கப்பட்டு வருகிறார். கள்ளத்தனமாக கனிமங்கள் கடத்தப்படுவது தொடர்பாக, வருவாய்த் துறை மற்றும் கனிமவளத் துறையினரால் அவ்வப்பொழுது கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**104—**

**சர்க்கரை ஆலை**

**வினா எண் 13105—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் புதியதாக சர்க்கரை ஆலை ஒன்று துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் புதியதாக சர்க்கரை ஆலை அமைக்க உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2003 மே 10

105—

மின் கம்பங்களை அகற்றுதல்

**வினா எண் 13226—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஒட்டன்சத்திரம் நகரில் சாலையின் குறுக்கே மின் கம்பங்கள் இருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதை அகற்றுவதற்கு அரசின் நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மின் கம்பங்களை சாலையின் ஓரத்திற்கு இடமாற்றம் செய்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகையை மின் வாரியத்திற்குச் செலுத்தும்பட்சத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.*

106—

மின் இணைப்பு

**வினா எண் 13351—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சியில் பணம் செலுத்தியும் மின் இணைப்பு வழங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?*



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) நிலுவையிலுள்ள மாதாந்திர மின் கட்டணத் தொகை செலுத்தப்பட்டவுடன் மின்னிணைப்புகள் வழங்கப்படும்.*

107—

மின்சார வசதி

**வினா எண் 13367—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, ஆக்கலத்திம்மள்ளிக்கு மின்சார வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மின் இணைப்பு கேட்டு மின் நுகர்வோரிடமிருந்து உரிய விண்ணப்பம் பெறப்படின் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

108—

மின் வசதி

**வினா எண் 13433—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி கேபுதூர் கிராமத்தில் மின்சார வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பணிகள் முடிக்கப்பெற்று 2002-2003 ஆம் ஆண்டுக்கான குறியீட்டில் மின்னிணைப்புகள் வழங்கப்படும்.

**109—**

**மின்சார வசதி**

**வினா எண் 13464—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல் நத்தம் ஊராட்சி, எம்.தண்டா ஜிங்கல் மோடு ஊருக்கு மின்சார வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மின் இணைப்பு வேண்டி உரிய விண்ணப்பம் பெறப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2003 மே 10]

**110—**

**மின் வசதி**

**வினா எண் 13928—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் லிங்க்ரோடு பகுதியில் வாழ்ந்துவந்த மக்களுக்கு மாற்று இடம் பண்ருட்டி நகரம் வி. ஆண்டிக்குப்பத்திற்கு மின் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 11 புதிய தெரு விளக்குகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டன.

**111—**

**தொழிற்சாலை**

**வினா எண் 14074—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒட்டிய பகுதியில் பல்வேறு கிரானைட் வகைகள் கிடைப்பதால் அங்கு கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலை நிறுவப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* எடப்பாடி தொகுதி மற்றும் எடப்பாடி ஒட்டியுள்ள பகுதியில் திப்பு ஒயிட் என்ற பலவண்ண கிரானைட் மட்டுமே கிடைக்கிறது. இந்த ஒரே வகை கிரானைட் கற்களுக்காக மட்டும் தமிழக அரசால் மெருகூட்டும் தொழிற்சாலை நிறுவ வாய்ப்பு இல்லை.

*(ஆ)* எழவில்லை.

**112—**

**கிரானைட் தொழிற்சாலை**

**வினா எண் 14078—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடிக்கு அருகில் வெள்ளை கிரானைட் கற்கள் அதிகம் உள்ளதால் தனியார் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குவதை தவிர்த்து, அரசே கிரானைட் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதியில் எடப்பாடிக்கு அருகில் திப்பு ஒயிட் என்ற வகை கிரானைட் கற்கள் மட்டுமே கிடைக்கின்றன. இந்த ஒரே ஒரு வகை கிரானைட் கற்களுக்காக மட்டும் அரசு கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலை நிறுவ இயலாது.

**113—**

**மின் அளவுகள்**

**வினா எண் 14526—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ)* வீடு மற்றும் தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள மின் கணக்கு மீட்டரில் ஏற்படும் பழுதின் காரணமாக தவறான மின் அளவுகள் எடுக்கப்படுவதால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தடுத்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

*(ஆ)* ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ் நாடு மின்சார வாரியம் உயர்தர மின் அளவிகளை (High Quality meters) வீடு மற்றும் கடைகளில் பொருத்தி வருகின்றது. இம்மின் அளவிகள் மிக துல்லியமாகவும், குறைந்த மின் பளுவையும் கணக்கிடும் தன்மையுடையன. இதேபோல் தொழிற்சாலை மின் இணைப்புகளில் எலெக்ட்ரானிக் மின் அளவிகள் படிப்படியாக பொருத்தப்பட்டு வருகின்றன. உயர்தர மின் அளவிகள் மற்றும் எலக்ட்ரானிக் மின் அளவிகளில் பழுது ஏற்படுவது மிக மிக அரிது. அவ்வாறு பழுது ஏற்படின் அம்மின் அளவிகள் உடனடியாக மாற்றப்பட்டு, நல்ல மின் அளவிகள் பொருத்தப்படுகின்றன. மீட்டர் பழுதடைந்துள்ள குறுகிய காலத்திற்கும் முந்தைய கால அளவின் அடிப்படையில் மின் கட்டணம் கணக்கிடப்பட்டு வசூலிக்கப்படுகிறது. ஆகையால் மின் அளவிகளில் பழுதின் காரணமாக இழப்பு ஏற்பட வாய்ப்பில்லை.

**114—**

**மின் இணைப்பு**

**வினா எண் 14527—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உயர் மின்னழுத்த (எச்.டி) மின் இணைப்பு பெற காலதாமதம் ஏற்படுவதால் இணைப்பு பெற உள்ள விதிமுறைகளை இலகுவாக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் உயர் அழுத்த மின் இணைப்பு வழங்கும் விதிமுறைகளை ஏற்கெனவே எளிமைப்படுத்தியுள்ளது.

(ஆ) 1. விண்ணப்பப்படிவங்களை மேற்பார்வை பொறியாளர் மின் பகிர்மான வட்ட அலுவலகத்தில் பதிவு செய்யும்பொழுதே தாமதங்களை தவிர்க்கும் பொருட்டு வைப்புத் தொகையும் பெறப்படுகிறது.

2. விண்ணப்பப்படிவம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து விண்ணப்பிக்கப்பட்ட பளுவிற்கேற்ப 15 அல்லது 30 நாட்களுக்குள் மதிப்பீடு அனுமதி வழங்கப்படுகிறது.

3. மதிப்பீடு அனுமதி பெற்றவுடன் 30 நாட்களுக்குள் மேம்பாட்டு கட்டணம், மீட்டர் வைப்பு கட்டணம் மற்றும் மின் இணைப்பு கட்டணங்களை செலுத்துமாறும் மற்றும் கட்டணங்கள் செலுத்தும்பொழுதே ஒப்பந்தம் செய்யுமாறும் விண்ணப்பதாரருக்கு அறிவிப்பு கொடுக்கப்படுகிறது.

4. மேலே கூறப்பட்ட தொகை செலுத்தப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டவுடன், மின் இணைப்பு வழங்க செய்யப்பட வேண்டிய வாரியப்பணியின் தன்மை மற்றும் அளவைப் பொறுத்து உயர் மின்னழுத்த மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படுகிறது.

**115—**

### எஃகு உருக்காலை

**வினா எண் 14585—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரில் மூடப்பட்டுள்ள எஃகு உருக்காலையை மீண்டும் செயல்படுத்த திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகரத்திலுள்ள தமிழ்நாடு எஃகு ஆலையை மீண்டும் செயல்படுத்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**116—**

### காவிரி ஆற்று மணல்

**வினா எண் 15064—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், கரூர் வட்டம், நஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி துறையில் காவிரி ஆற்றில் டெண்டர் எல்லைக்கு அப்பாற்பட்டு மணல் எடுப்பதை தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கரூர் வட்டம், நஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் துறையில் காவிரி ஆற்றில் டெண்டர் எல்லைக்கு அப்பாற்பட்டு மணல் ஏதும் எடுக்கப்படவில்லை.

**117—**

### வேலைவாய்ப்பு

**வினா எண் 15108—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) வால்பாறை தொகுதி, ரொட்டிக்கடை பகுதியில் உள்ள கல்குவாரியில் கல் எடுப்பதற்கு தடையுள்ளதால், தொழிலாளர்கள் வேலை இல்லாமல் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் வால்பாறை வட்டம், மலைப்பகுதி பாதுகாப்பு குழுமத்தின் கட்டுப்பாட்டிற்குள் வருவதால் இக்குழுமத்திடமிருந்து தடையில்லா சான்று பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி குவாரியில் பணியாற்றி வந்த பெரும்பாலான தொழிலாளர்கள் தற்போது பொள்ளாச்சி வட்டம், சமதளப்பகுதியில் உள்ள ஓடையகுளம் கிராமத்தில் உள்ள கல்குவாரிகளில் பணியாற்றி வருகின்றார்கள்.

**118—**

**தொழிற்சாலை**

**வினா எண் 16154—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசலிலிருந்து கூழையார்வரை உள்ள கடற்கரையோர நிலங்களில் சிப்காட் மூலம் தொழிற்சாலைகள் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதிக்கு அருகாமையில் உள்ள கடலூர் மாவட்டத்தில் எல்லா அடிப்படை வசதிகளுடன் சிப்காட் தொழில் வளாகம் அமைக்கப்பட்டு நன்கு இயங்கி வருகிறது. எனவே, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசலிலிருந்து கூழையார்வரை உள்ள கடற்கரையோர நிலங்களில் சிப்காட் மூலம் மேலும் ஒரு தொழில்வளாகம் அமைக்கும் உத்தேசம் தற்போது ஏதும் இல்லை.

**119—**

**மின் கட்டணம்**

**வினா எண் 16370—திரு. டி. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின் கட்டணம் வசூலிப்பதற்கான கணக்கெடுப்பினை இரு மாதங்களுக்கு பதிலாக மாதந்தோறும் கணக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இயலாது.

**120—**

**மின் கம்பங்கள்**

**வினா எண் 16478—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) கடம்பத்தூர் ஒன்றியம், பாம்பரம்பாக்கம் கிராமத்தில் அமைக்கப்பட்ட மின் கம்பங்களோடு கூடுதல் மின் கம்பங்கள் அமைத்து மின்னிணைப்பு வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

**விடை-**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசு நிர்ணயிக்கும் குறியீட்டிற்குட்பட்டு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**121—**

**மின்சார இணைப்பு**

**வினா எண் 16481—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பேரம்பாக்கம் கிராமத்திற்கு மின்சார இணைப்பு வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) பேரம்பாக்கம் கிராமத்தில் மின் இணைப்பு கோரி எந்த விண்ணப்பமும் தற்சமயம் நிலுவையில் இல்லை. புதிய மின் இணைப்புகள் வேண்டி விண்ணப்பங்கள் பெறப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2003 மே 10]

**122—**

**புதிய மின் மாற்றி**

**வினா எண் 16482—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பேரம்பாக்கம் காலனியில் தடங்கலின்றி மின் விநியோகம் கிடைப்பதற்கு புதிய மின் மாற்றி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**123—**

**மின் இணைப்பு**

**வினா எண் 16485—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, முத்துகொண்டாபுரம் இருளர் காலனியில் கட்டப்பட்ட புதிய தொகுப்பு வீடுகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மின்னிணைப்பு வழங்கப்படும்?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**124—**

**தொழிற்பேட்டை**

**வினா எண் 16649—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் கிராமத்தில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் கிராமத்தில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**125—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 17207—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெட்டவயல் ஊராட்சியில் துணை மின் நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

**126—**

**சிறுசேரி டைடல் பார்க்**

**வினா எண் 17215—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கு அருகிலுள்ள சிறுசேரி டைடல் பார்க் பணிகள் எப்போது துவங்கும்?

(ஆ) இந்த தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்கு இதுவரை எத்தனை ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது?

**விடை-**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சென்னை அருகிலுள்ள சிறுசேரி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சிப்காட் தொழில்நுட்பப் பூங்காவில் வளர்ச்சிப் பணிகள் 1999 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றன.

(ஆ) இதுவரை இந்த தகவல் தொழில் நுட்ப பூங்காவிற்காக சுமார் 608.50 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளது.

**127—**

**சர்க்கரை ஆலை**

**வினா எண் 17242—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் சர்க்கரை ஆலை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் தற்போது சர்க்கரை ஆலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**128—**

**மானியம்**

**வினா எண் 18924—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முறைசாரா எரிசக்தி (சூரிய ஒளி) மூலம் இயங்கும் மோட்டார் வைக்கும் விவசாயிகளுக்கு மத்திய அரசு மான்யம் வழங்குவது போல் மாநில அரசும் மான்யம் வழங்க முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முறைசாரா எரிசக்தி (சூரிய ஒளி) மூலம் இயங்கும் மோட்டார் வைக்கும் விவசாயிகளுக்கு மாநில அரசின் மான்யம் தற்பொழுது இல்லை.

**129—**

**அனல் மின் நிலையம்**

**வினா எண் 18962—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வட சென்னை அனல் மின் நிலையத்தில் கரி, கன்வேயரில் வருவது போன்று எண்ணூர் அனல் மின் நிலையத்திலும் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வாரிய நிதி நிலைமை மற்றும் லாபகரமாக இயங்குவதற்கான சாத்தியக்கூறுகளை பொறுத்தும் மற்றும் இதர உள் கட்டமைப்பு, நிலம் கையகப்படுத்துதல், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒப்புதல், உப்புத் துறை மற்றும் இரயில்வே துறை ஆகியவற்றின் ஒப்புதலைப் பொறுத்தும் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

**130—**

**மின் நிலையம்**

**வினா எண் 19036—திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதிக்குட்பட்ட திட்டக்குடியிலுள்ள 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் இயங்கி வருவதை 110 கிலோ வோல்ட் மின் நிலையமாக மாற்ற அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

[2003 மே 10

131—

துணை மின் நிலையம்

**வினா எண் 19079—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட "உள்ளிக்கோட்டை" கிராமத்தில் துணை மின்நிலையம் அமைத்திடும் பணிகள் தொடங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம் மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட "உள்ளிக்கோட்டை" கிராமத்தில் புதிதாக துணை மின் நிலையம் அமைத்திட பொருத்தமான இடம் தேர்வு செய்யப்பட்டு நில ஆர்ஜித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) இந்த நிதியாண்டில் (2002-2003) துணை மின் நிலையம் முழுமையாக செயல்படத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

132—

மின் விநியோகம்

**வினா எண் 19080—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டையில் கோயில் களப்பால் எரிவாயு சுழலி திட்டத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் எந்தெந்த பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது? இதில் மன்னார்குடி பகுதிக்கு விநியோகிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கோவில்களப்பால் எரிவாயு மின் சுழலி திட்டத்தின் மூலம் உற்பத்தியாகும் மின்சாரம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, திருவாரூர் பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

(ஆ) திருமக்கோட்டை எரிவாயு மின் சுழலி நிலையம் சராசரியாக 100 மெகாவாட் மின் உற்பத்தி செய்து மன்னார்குடி மற்றும் பட்டுக்கோட்டை 110 கி.வோ. துணை மின் நிலையங்களின் வழியாக விநியோகிக்கப்படுகிறது. இதன் மூலம் மன்னார்குடி பகுதிக்கும் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது.

133—

மின்சார நிலையம்

**வினா எண் 19081—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட கோயில்களப்பால் ஓ.என்.ஜி.சி. மூலம் கிடைக்கும் எரிவாயுவைக் கொண்டு மேலும் ஒரு மின்சார நிலையம் களப்பால் பகுதியில் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கூடுதல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் வாரியத்திடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2003 மே 10

134—

**மின்சார உற்பத்தி**

**வினா எண் 19371—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொமரப்பாளையம் அருகில் காவேரியின் குறுக்கே தடுப்பணை கட்டி மின்சார உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆமெனில், விபரம் என்ன என்பதை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

135—

**புதிய கம்பி வடங்கள்**

**வினா எண் 19467—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி 11-வது வட்டம், சிகிரிந்தபாளையத்தில் அதிகமான இடங்களில் மின்சாரக் கம்பி வடங்கள் சரிவர பராமரிக்கப்படாததால் அடிக்கடி மின் தடை ஏற்படுவதைக் களைய புதிய கம்பி வடங்கள் (கேபிள்) அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.

(ஆ) வினா எழவில்லை.

136—

**துணை மின் நிலையம்**

**வினா எண் 19468—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 12-வது வட்டம், பார்த்தசாரதி பிள்ளை சந்து, ஜமால் சவுக்கார் தெரு, சேசாசல இராமணித் தோட்டம், வீரபத்திர செட்டி தெரு, பார்த்தசாரதி நகர் குடியிருப்பு, நைனியப்ப நாயக்கன் தெரு, தட்டாங்குளம் தெரு ஆகிய இடங்களில் உள்ள மின் கம்பி வடங்கள் அதிகமான இணைப்புகள் கொண்டதால் அடிக்கடி மின் தடை ஏற்படுவதைத் தடுக்க சீரான மின்சாரம் கிடைத்திட துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தற்போது துணை மின் நிலையம் அமைக்க போதுமான சாத்தியக்கூறுகள் இல்லாத காரணத்தினால் துணை மின் நிலையம் அமைக்கும் பணி அடுத்த பெருந்திட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

137—

## புதிய மின் மாற்றி

**வினா எண் 19470—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே.நகர் தொகுதி, 9-வது வட்டம், நல்லப்ப வாத்தியார் தெரு, மொட்டைத் தோட்டம் சந்திப்பில் புதிய மின் மாற்றி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

138—

## மின் விநியோகம்

**வினா எண் 19471—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 11-வது வட்டத்தில், அனந்தநாயகி நகர், சிகிரிந்த பாளையம், பாரதி நகர் ஆகிய இடங்களில் புதிய மின் கம்பி வடங்கள் மற்றும் மின் மாற்றி அமைத்து சீரான மின் விநியோகம் கிடைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.

139—

## மின் கட்டண வசூல்

**வினா எண் 19524—திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில், வீடுகளுக்கும் வியாபார நிறுவனங்களுக்கும் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மீட்டர் கணக்கெடுக்கப்பட்டு மின் கட்டணம் வசூல் செய்யும் முறையை மாற்றி மாதத்திற்கு ஒரு முறை வசூல் செய்யும் முறையைக் கொண்டுவர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

140—

## மணல் எடுப்பதைத் தடைசெய்தல்

**வினா எண் 19737—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியார் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் லாரிகளில் மணல், கற்கள் கடத்துவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி வட்டம், காளியாபுரம், திம்மங்குத்து, மார்ச்சநாயக்கன்பாளையம் பகுதிகளில் மணல் எடுக்கவும், ஓடையகுளம் பகுதிகளில் கல் எடுக்கவும் குத்தகை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு குத்தகை உரிமம் பெற்றவர்கள் அரசுக்கு உரிய சீனியரேஜ் தொகையினை செலுத்தி, அனுமதிச்சீட்டு பெற்று, கனிமங்களை வெளியேற்றி வருகிறார்கள். அவ்வாறு உரிய அனுமதி சீட்டுகள் இல்லாமல் மணல், கற்கள் ஆகியவை ஏற்றிச் செல்லப்படும் வாகனங்கள் உரிய அலுவலர்களால் கைப்பற்றப்பட்டு, அபராதம் முதலியன விதிக்கப்படுகின்றன.

**141—**

### மின் இழப்பு

**வினா எண் 19839—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் கம்பித் தொடர்களில் ஏற்படும் மின் இழப்பு எத்தனை சதவீதம்?

(ஆ) மின்சார வாரியம் இவ்விழப்பைக் குறைக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 16.25 சதவீதம்.

(ஆ) மின்னிழப்பை படிப்படியாக குறைப்பதற்கு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன:—



1. உயர் மின்னழுத்தப் பாதைகளுக்கும் தாழ் மின்னழுத்தப் பாதைகளுக்கும் உள்ள விகிதத்தைக் குறைக்க புதிய உயர் மின்னழுத்தப் பாதைகளை நிர்மாணித்தல்.

2. மின் விநியோகத்திற்கான மின் மாற்றிகளை புதிதாக நிர்மாணித்தல்.

3. புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல்.

4. அதிகத் திறனுடைய மின் கம்பிகளைப் பயன்படுத்தல்.

5. துணை மின் நிலையங்களில் உயரழுத்த மின் தேக்கிகளை நிர்மாணித்தல்.

6. மின் மாற்றிகளின் குறைந்த அழுத்த பக்கத்தில் தாழ் மின் அழுத்த மின் தேக்கிகளை நிர்மாணித்தல்.

**142—**

### மின் உற்பத்தி

**வினா எண் 19842—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மின்சார வாரியத்தின்மூலம் ஆண்டு ஒன்றுக்கு புனல், அனல், எரிவாயு, காற்றாலை மூலமாக எவ்வளவு மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) மத்திய அரசு தொகுப்பிலிருந்து எவ்வளவு மெகாவாட் மின்சாரம் மாநில அரசுக்கு கிடைக்கிறது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 25,562 மி.யூனிட்டுகள் (5213-135 மெகாவாட்).

(ஆ) 1913 மெகாவாட்.

143—

### சித்த மருத்துவர்கள்

**வினா எண் 20360—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியப் பணியாளர்களின் பயனுக்காக இயங்கும் தலைமை மருந்தகத்தில் சித்த வைத்தியம் பெற சித்த மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்களா?

(ஆ) இல்லையெனில், சித்த மருத்துவ சிகிச்சை பெற அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தமிழ்நாடு மின்சார வாரியத் தலைமை மருந்தகத்தில் பணியாளர்களுக்கு சித்த வைத்திய சிகிச்சை அளிக்க டாக்டர் எம். லோகமணி அவர்கள் 5-12-2001 முதல் பகுதி நேர சிறப்பு மருத்துவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) வினா எழவில்லை.

144—

### துணை மின் நிலையங்கள்

**வினா எண் 20400—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் வட்டத்தில் துணை மின் நிலையங்கள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

145—

### மின் நிலையம்

**வினா எண் 20401—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், நாகுடியிலுள்ள துணை மின் நிலையத்தை 110 கிலோ வாட் திறன் கொண்ட மின் நிலையமாக உயர்த்தும் (அப்கிரேடு) திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

146—

### மின் நிலையத்தை தரம் உயர்த்துதல்

**வினா எண் 20432—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் துணை மின் நிலையத்தை தரம் உயர்த்தும் திட்டம் (அப்கிரேடு), அரசின் பரிசீலனையில் உள்ளதா?

53-85—79

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

**147—**

**மின் திருட்டு**

**வினா எண் 20607—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாடு முழுவதும் மின்சார திருட்டைக் கண்டுபிடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* 1983 ஆம் ஆண்டு முதல் மின் திருட்டு தடுப்புக் குழு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இயங்கி வருகிறது.

**148—**

**அனல் மின் நிலையம்**

**வினா எண் 20720—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் தூத்துக்குடியில் 510 மெகா வாட் மின் திறன் கொண்ட அனல் மின் நிலையம் (சூப்பர் தெர்மல்) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம். தூத்துக்குடி அனல் மின் நிலைய வளாகத்தில் 1x500 மெகா வாட் திறனுடைய நிலையம், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அமைக்கும் திட்டம் தமிழக அரசிடம் உள்ளது.

*(ஆ)* இத்திட்டம் தொடங்குவதற்கான பொருளாதார ஒப்பந்தமும், தேசிய மின் ஆணையத்திடமிருந்து தொழில் நுட்ப பொருளாதார அனுமதியும் பெற்றவுடன் செயல்படுத்தப்படும்.

**149—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 21094—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பத்தூர் மற்றும் ஜோலார்பேட்டையில் துணை மின் நிலையங்கள் (சப் ஸ்டேஷன்) விரைவில் அமைக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* திருப்பத்தூரில் ஏற்கெனவே 110/33-11 கிலோ வோட் துணை மின் நிலையம் உள்ளது. கூடுதலாக 33/11 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்றினை பத்தாவது திட்டத்தின்கீழ் மூன்றாம் பகுதியாக 2003-2007-ல் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் திட்ட மதிப்பீடு சுமார் 200 இலட்சங்கள்.

[2003 மே 10

ஜோலார்பேட்டையில் புதிதாக 33/11 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்றினை 10-வது திட்டத்தின்கீழ் மூன்றாம் பகுதியாக 2003-2007-ல் நிர்மாணிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதன் திட்ட மதிப்பீடு சுமார் 225 இலட்சங்கள்.

**150—**

**சிப்காட் நிறுவனம்**

**வினா எண் 23203—திரு. கு.அன்பழகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளப்பட்டி, "சிப்காட்" நிறுவனம் தற்பொழுது இயங்காமல் உள்ளதை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

நிலக்கோட்டை பள்ளப்பட்டி கிராமத்தில் "சிப்காட்" நிறுவனம் 380 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி தொழில் வளாகம் ஒன்று அமைத்துள்ளது. இத்தொழில் வளாகத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு சுமார் 250 ஏக்கர் நிலம் தொழிற்சாலைகள் தொடங்க அபிவிருத்தி செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யத் தயாராக உள்ளது.

**151—**

**கட்டட வசதி**

**வினா எண் 23995—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, .சோலையார் பேட்டை இளநிலை மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சொந்த கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**152—**

**கரும்பு வெட்டுதல்**

**வினா எண் 24066—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உரிய நேரத்தில் முறையாக கரும்பு வெட்டும் உத்தரவு வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு வெட்டும் உத்தரவு உரிய நேரத்தில் முறையாக வழங்கப்பட்டு வருகிறது.

**153—**

**மின் நிலையம்**

**வினா எண் 24213—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆதனக்கோட்டையில் 110 கிலோ வாட் எஸ்.எஸ். மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆதனக்கோட்டையில் தற்போது இருக்கும் 66/22-11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110 கி.வோ. துணை மின் நிலையமாக மேம்படுத்தி அமைக்கும் திட்டப் பணிகள் 5/2002 முதல் நடைபெற்று வருகின்றது. 2/2003-க்குள் இயக்கி வைக்கப்படவுள்ளது.

**154—**

**மின்சாரம் தயாரித்தல்**

**வினா எண் 24224—திரு.ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்புக் கழிவுப் பொருட்களிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். சர்க்கரை ஆலைக் கழிவிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டங்களை ஊக்குவிக்கும் கொள்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் வகுத்துள்ளது. அதன்படி சர்க்கரை ஆலைக் கழிவை, அதாவது கரும்புச் சக்கையை Begasse உபயோகித்து பதினோரு தனியார் சர்க்கரை ஆலைகளிலும் (182.6 மெ.வா.) மூன்று



கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் (20.0 மெ.வா.) இணை மின் உற்பத்தி செய்யப்பட்டு இயக்கத்தில் உள்ளது.

**155—**

**காற்றாலை**

**வினா எண் 24322—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு மலையில் காற்றாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**156—**

**மணல் வாரியம்**

**வினா எண் 25279— திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக்கு நிதி வருவாயைப் பெருக்கும் வகையில் ஆற்று மணல் எடுப்பதை முறைப்படுத்தும் வகையில் மணல் வாரியம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மணல் வாரியம் அமைக்கும் திட்டம் பற்றிய கருத்துருக்கள் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) பதில் எழவில்லை.

**157—**

**மின் இணைப்பு**

**வினா எண் 25488—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் கடற்கரை ஓரங்களில் அமைக்கப்படும் இறால் பண்ணைகளுக்கு உடனடியாக மின் இணைப்பு தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

ஆம்.

**158—**

**மின் திட்டம்**

**வினா எண் 25494—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, அரப்பளீஸ்வரர் கோவில், கெடமலை, ஊமை ஆறு மற்றும் காட்டான் காட்டுப்பட்டி



அணைக்கட்டு நீர் மின் திட்டத்தை நிறைவேற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். நாமக்கல் மாவட்டத்தில், அய்யாறு ஆற்றின் நீரினைப் பயன்படுத்தி 20 மெகா வாட்டுகள் மின் திறன் உற்பத்தி செய்யக்கூடிய கொல்லிமலை புனல் மின் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், ஊமையார் அணை, கோவிலூர் அணை, தெல்லியங்காடு அணை, இருங்குளிப்பட்டி அணை, காடம்பள்ளம் அணை என்ற 5 சிறிய அணைகள் கட்டப்பட்டு இவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் நீரினை உபயோகித்து 20 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு மின் நிலையமும் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கு தமிழக அரசு ஏற்கெனவே 4-9-1995 அன்று ஒப்புதல் வழங்கி உள்ளது. இத்திட்டத்திற்கு புதுடெல்லியிலுள்ள, மத்திய சுற்றுப்புறச் சூழல் மற்றும் வன அமைச்சகத்திடமிருந்து ஒப்புதல் கிடைக்கப்பெறாததால் திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை. ஒப்புதல் கிடைத்தவுடன், கட்டுமானப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**159—**

**இலவச மின்சாரம்**

**வினா எண் 25498—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் வடவாளம் மற்றும் சுற்றியுள்ள கிராம விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை 20 மணி நேரம் (ஒரு நாளைக்கு) வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

**160—**

**மின்சாரம் வழங்குதல்**

**வினா எண் 25763—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள டாப்சிலிப் அருகில் கோழிகமித்தி ஆதிவாசிகள் குடியிருக்கின்ற பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோழிகமித்தியில் உள்ள 105 வீடுகளும் தகர மேற்கூரைகளாலும் மூங்கில் பிரம்புகளினால் ஆன மறைப்புகளாலும் கட்டப்பட்டுள்ளதால், வாரிய விதிகளின்படி "குடிசைக்கு ஒரு விளக்கு" என்ற திட்டத்தின் கீழ் அமையாதவை ஆகும். ஆயினும் மின்சாரம் வழங்கும் பொருட்டு மின் பாதை அமைக்க வனத் துறையின் அனுமதியினைப் பெற்று பரிசிலிக்குமாறும், சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்து முடிவு செய்யும்படியும் தமிழ்நாடு மின்சார வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**161—**

**புதிய அணைகள்**

**வினா எண் 27167—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



புதிய அணைகள் கட்டி தண்ணீர் மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

சிறு அணைகள் கட்டி மின்சாரம் தயாரிப்பதற்கு கீழ்க்கண்ட திட்டங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன:—

(அ) கொல்லிமலை மின் திட்டம் (20 மெகாவாட்) நாமக்கல் மாவட்டம்.

(ஆ) மருதா நதி மின் திட்டம் (5 மெகாவாட்) திண்டுக்கல் மாவட்டம்.

**162—**

**மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**வினா எண் 30103—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் எப்போது, எந்த அடிப்படையில் நிறுவப்பட்டது?

(ஆ) அதன் பணிகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மத்திய அரசின் மின்சார ஒழுங்குமுறை ஆணைய சட்டம் 1998, பிரிவு 17(1)-ன் கீழ் 1999 ஆம் ஆண்டு மார்ச் 17-ந் தேதி அமைக்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் பணிகள் பின்வருமாறு:

[2003 மே 10

மாநிலத்தில் மின்சாரத்தை மொத்தமாகவோ, பேரளவாகவோ மின் கட்டமைப்பு வழிவகையாகவோ அல்லது சில்லறையாகவோ மின்னுகர்வோருக்கு விற்பதற்கான மின் கட்டணத்தை நிர்ணயித்தல்.

மின்சாரம் செலுத்தும் வழிவகை மின் கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்துவதற்கு உரிய மின் கட்டணத்தை நிர்ணயித்தல்.

மாநிலத்தின் மின் அனுப்புகை மற்றும் பகிர்ந்தளிக்கும் பணியிலுள்ள நிறுவனங்கள் வாங்கக்கூடிய மின்சாரத்தின் அளவையும், அதற்கான செயல்முறைகளையும் நெறிப்படுத்துதல், இந்நிறுவனங்கள் மற்ற மின் உற்பத்தி நிறுவனங்களிலிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலையைக் சீராக்குதல்.

மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம் 1998-ல் கூறப்பட்டுள்ள செயல் இலக்குகளையும், குறிக்கோள்களையும் நிறைவேற்ற மின் தொழில் நிறுவனங்களின் செயல்பாடுகளில் போட்டியையும், திறனையும் மற்றும் சிக்கனத்தையும் ஊக்குவித்தல் மற்றும் மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம் 1998, பிரிவு 22 (2)-ல் குறிப்பிட்டுள்ள வேலைகளில் எந்த வேலைகளை தமிழக அரசு செய்யும்படி சொல்கிறதோ அந்த வேலைகளையும் செய்தல்.

**163—**

### கட்டட வசதி

**வினா எண் 591—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, மேலதிருப்பாலக்குடி கிராம வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள இடத்தில் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மேலதிருப்பாலக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்டித்தர தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**164—**

### ரேஷன் கடை பொருட்கள்

**வினா எண் 898—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சட்டமன்ற தொகுதியில் தொழிலாளர்கள் குடியிருக்கும் எஸ்டேட் பகுதி ரேஷன் கடைகளில் ரேஷனின் அளவு குறைவாக போடுகிறார்கள். அக்குறையை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை வட்டத்தில் ஆனைமலை பிளாண்டேஷன் அசோசியேஷன் மூலம் இயங்கி வந்த 27 நியாய விலைக் கடைகளில் 12 நியாய விலைக் கடைகள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டு அக்கடைகளில் அத்தியாவசியப் பொருட்களை சிறப்பாக வழங்க வட்ட வழங்கல் அலுவலர் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார். மீதமுள்ள கடைகளையும் மகளிர் அமைப்புகளுக்கு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**165—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 2456—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, மருதூர், மருதூர், கீழ்ப்பட்டிக்கு நியாய விலைக் கடை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பா. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, மருதூர் கிராமத்தில் முழுநேர நியாய விலைக் கடை அரசு 'நலத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. தற்போது மேற்படி கட்டடம் பழுதடைந்துள்ளதால் வாடகை கட்டடத்தில் இயங்கிவருகிறது. பழுதடைந்த கட்டடத்தை மீண்டும் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மருதூர் கீழப்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை 335 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. இக்கடைக்கு கட்டடம் கட்டுவதற்கு 2002-2003-ல் திட்டமிடப்பட்டுள்ளது.

**166—**

**நியாய விலைக் கடை அமைத்தல்**

**வினா எண் 3797—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மானடிக்குப்பம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், பண்ருட்டி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் ஏற்கெனவே ஒரு முழுநேர நியாய விலைக் கடை மானடிக்குப்பத்தில் செயல்பட்டு வருகிறது. இதில் மானடிக்குப்பம் ஊரைச் சேர்ந்த 285 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. எனவே மானடிக்குப்பம் கிராமத்தில் மற்றொரு நியாயவிலைக் கடை திறக்கும் அவசியம் எழவில்லை.

**167—**

**பகுதி நேர நியாய விலைக் கடை**

**வினா எண் 4278—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழப்பாவூர் ஒன்றியம், ஆவுடையானூர் ஊராட்சி, கொண்டலூரில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி வட்டம், கொண்டலூர் கிராமத்தில், 96 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் அக்கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கும் வாய்ப்பில்லை.

168—

பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 4769—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழப்பாவூர் ஒன்றியம், கீழவெள்ளக்கால் ஊராட்சி, துவரங்காட்டில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கீழவெள்ளக்கால் ஊராட்சி, துவரங்காட்டில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு 3-11-2002-லிருந்து செயல்பட்டு வருகிறது.

169—

பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 4848—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, பாலமார்த்தாண்டபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், பாலமார்த்தாண்டபுரம் கிராம குடும்ப அட்டைகள் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ள கிளாங்காடு தாய்க்கடைக்கும், பாலமார்த்தாண்டபுரம் கிராமத்திற்கும் இடையே 2 கிலோமீட்டருக்கு மேல் தூரம் இல்லாததாலும், இலவசமாக கட்டட வசதி செய்துதர ஊர்மக்கள் யாரும் முன்வராததாலும் பகுதிநேரக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



170—

கூட்டுறவு அங்காடிகள்

**வினா எண் 5103—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, சருக்கை ஊராட்சி, வடசருக்கை கிராமத்திற்கு கூட்டுறவு அங்காடிகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பா. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம். சருக்கை ஊர் நியாய விலைக் கடையைச் சேர்ந்த வடசருக்கைப் பகுதியில் 368 குடும்ப அட்டைகளைக் கொண்ட பகுதிநேர அங்காடி செயல்பட்டு வருகிறது. சருக்கை ஊரில் உள்ள தாய் அங்காடி வாரத்தில் மூன்று நாட்களும், வடசருக்கை பகுதிநேர அங்காடி மூன்று நாட்களும் செயல்பட்டு வருகின்றன.

171—

கட்டட வசதி

**வினா 5646—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கோ. அப்பியம்பேட்டை கிராமத்தில் நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, கோ. அப்பியம்பேட்டை கிராமத்தில் 110 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை இயங்கி வருகிறது. இக்கடை பகுதிநேரக் கடையாக உள்ளதால் அரசு விதிகளின்படி சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**172—**

### குடும்ப அட்டைகள்

**வினா எண் 5649—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதியில் குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு புதியதாக குடும்ப அட்டைகள் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஊர்களில் 30-9-2001 வரை 51,780 குடும்ப அட்டைகள் புழக்கத்திலிருந்தன. 1-10-2001 முதல் 30-9-2002 வரை புதிய குடும்ப அட்டை கோரி வர பெற்ற 523 மனுக்களில் தகுதியின்மை காரணமாக 349 மனுக்கள்





தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. தகுதியானவையெனக் கண்டறியப்பட்ட 174 மனுக்களில் 15 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 159 நபர்களுக்கும் குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**173—**

### கடன் வழங்குதல்

**வினா எண் 5840—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வாத்துக்களை வளர்க்க கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் வாத்துக்களை வளர்க்க தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நபார்டு மறுநிதி உதவி பெற்று கடன் வழங்கி வருகின்றன.

**174—**

### ஓட்டல் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 6604—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓட்டல் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

ஓட்டல் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தும் வகையில் விலை விவரங்களை மாதந்தோறும் சேகரித்து, அரசு கண்காணித்து வருகின்றது. மேலும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்களாலும் மாநில அளவில் நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளராலும் ஓட்டல் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் அவ்வப்போது கூட்டங்களும் நடத்தப்பட்டு விலை உயராதவாறு கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

175—

**தேவையான மாற்றங்கள்**

**வினா எண் 8729—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் விதித் தொகுப்பு, 1988 ஆகியவற்றிற்குத் தேவையான மாற்றங்கள் குறித்து பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்ட குழு அறிக்கை அரசுக்கு கிடைக்கப்பெற்றதா?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(இ) மத்திய வங்கிகளிலுள்ள உபரிநிதி எங்கு முதலீடு செய்யப்படுகிறது?

(ஈ) முதலீடு செய்ய அனுமதி பெறப்பட வேண்டுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடந்து முடிந்து புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவர்களுடன் இது குறித்து விவாதித்து முடிவு எடுக்கலாம் என அரசு தீர்மானித்துள்ளது.

(இ) நிதி உதவி செய்யும் வங்கி, பிற கூட்டுறவு வங்கி, பதிவு செய்யப்பட்ட பிற சங்கங்கள் ஆகிய வங்கிகளின் பங்குகள் மூலமாகவும் இட்டுவைப்பு மூலமாகவும் கடனீட்டுப் பத்திரங்கள் மூலமாகவும் உபரிநிதி முதலீடு செய்யப்படுகிறது. மேலும் கூட்டுறவுச் சங்க சட்டப் பிரிவு மற்றும் விதிகளில் தெரிவித்துள்ளவாறு உபரிநிதி முதலீடு செய்யப்படுகிறது.

(ஈ) நிதி உதவி செய்யும் வங்கி தவிர இதர வகைகளில் முதலீடு செய்ய பதிவாளரின் அனுமதி பெறப்பட வேண்டும்.

176—

**கூட்டுறவு வங்கி**

**வினா எண் 6842—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் ஒரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஆரம்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் புதியதாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**177—**

**சலுகை விலைப் பொருட்கள்**

**வினா எண் 6924—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புற அங்காடிகள் ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் உணவுப் பொருட்களுடன் அன்றாட உணவுப் பொருட்களான மிளகாய், பருப்பு வகை போன்றவற்றை ஏழை எளிய மக்களுக்கு சலுகை விலையில் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

அன்றாட உணவுப் பொருட்களான மிளகாய், பருப்பு வகைகளின் விலைகள் கட்டுப்பாட்டில் உள்ளதால் இவற்றை நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

**178—**

**காய்கறிகள் விற்பனை**

**வினா எண் 6925—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் காய்கறிகளை நேரடியாக கொள்முதல் செய்து அங்காடிகள் மூலம் விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?





**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் காய்கறிகள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**179—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 7792—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடம்பத்தூர் ஒன்றியம், இந்திரா நகரில் ஒரு நியாய விலைக் கடையை அரசு ஏற்படுத்துமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் விடையூர் கூட்டுறவு நியாய விலைக் கடை 611 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையைச் சேர்ந்த இந்திரா நகர் பகுதியில் 71 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இப்பகுதி தாய்க் கடையிலிருந்து 2 கிலோ மீட்டருக்குள் அமைந்துள்ளது. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகளும் 2 கிலோ மீட்டர் தொலைவும் இருக்க வேண்டும் என்ற வரையறைகள் பொருந்தாததால் விடையூர் இந்திரா நகர் பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பு இல்லை.

**180—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 7793—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி வட்டம், நாபளூர் அஞ்சல், டி.ஆர். கண்டிகை மற்றும் கொட்டாநத்தம் கிராமங்களுக்கும் பொதுவான ஓரிடத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருத்தணி வட்டம், நாபளூர் அஞ்சல், டி.ஆர். கண்டிகை மற்றும் கொட்டாநத்தம் கிராம மக்கள் லட்சுமாபுரம் கூட்டுறவு நியாய விலைக் கடையிலிருந்து பொருட்கள் பெற்று வருகின்றனர். தாய்க் கடையில் மொத்தம் 383 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், இவ்விரண்டு கிராமங்களும் தாய்க் கடையிலிருந்து 1-1.5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளதாலும், இவ்விரண்டு கிராமங்களும் சேர்த்து 130 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், இவ்விரண்டு கிராமங்களுக்கும் பொதுவான இடத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**181—**

**இட ஒதுக்கீடு**

**வினா எண் 7861—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் ஆதி திராவிடர்கள் புறக்கணிக்கப்படுவது அரசு கவனத்திற்கு வந்திருக்கின்றதா?

(ஆ) கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் ஆகிய பிரிவினருக்கு உரிய இட ஒதுக்கீடு ஒதுக்கப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகக் குழுவிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீதம் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், பிற்படுத்தப்பட்டோருக்கெனத் தனியாக இட ஒதுக்கீடோ பிரதிநிதித்துவமோ இல்லை.

**182—**

**கடன் உதவி**

**வினா எண் 7873—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் இருக்கும் நிலம் உள்ள படித்த இளம் விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்கும் திட்டம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) கிராமப்புறங்களில் இருக்கும் நிலம் உள்ள படித்த இளம் விவசாயிகளுக்கென்று தனியே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2003 மே 10

183—

அங்காடிகள்

**வினா எண் 7885—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், மாளியக்காடு கிராமத்தில் பகுதிநேர அங்காடி துவங்க அனுமதி அளிக்கப்பட்டும், இதுவரை அங்காடி துவக்கப்படாததால் அதனை உடனே துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், முதல்சேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டுப்பாட்டில் இயங்கும் சேண்டாக்கோட்டை அங்காடியிலிருந்து 224 குடும்ப அட்டைகளைப் பிரித்து மாளியக்காடு பகுதியில், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் ஆணையின்படி 28-8-2001 முதல் பகுதிநேர அங்காடி துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

184—

நியாய விலைக் கடை

**வினா எண் 8279—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கண்ணநல்லூர் ஊராட்சி, தங்கயம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கண்ணநல்லூர் ஊராட்சி, தங்கயம் கிராமத்தில் மொத்தம் 73 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், அக்குடும்ப அட்டைகள் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ள வில்வனம்புதூர் பகுதிநேரக் கடைக்கும் தங்கயம் கிராமத்திற்கும் 1 கிலோமீட்டர் தூரமே உள்ளதாலும், தங்கயம் கிராமத்தில் பகுதிநேரக் கடை திறக்க இயலாது.

185—

நியாய விலைக் கடை

**வினா எண் 8280—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டை கருங்குளம் ஊராட்சி, நம்பிகுறிச்சி கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டை கருங்குளம் ஊராட்சி, நம்பிகுறிச்சி கிராமத்தில் 52 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், அக்கிராமத்திலுள்ள குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள மிட்டாதாரர்குளம் பகுதிநேரக் கடைக்கும் அக்கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டர் என்பதாலும், அரசு விதிகளின்படி நம்பிகுறிச்சி கிராமத்திற்குத் தனியாக நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

186—

### குடும்ப அட்டைகள்

**வினா எண் 8337—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீ விபத்தால் பாதிக்கப்படும் குடிசைப் பகுதிகளில் குடும்ப அட்டை எரிந்துவிட்ட நிலையில், மாற்று குடும்ப அட்டைகள் உடனடியாக வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தீ விபத்தால் பாதிக்கப்படும் குடிசைப் பகுதிகளில் குடும்ப அட்டைகள் எரிந்துவிட்ட நிலையில், அலுவலக ஆவணங்களின் அடிப்படையில், இலவசமாக மாற்று குடும்ப அட்டைகள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

187—

### குடும்ப அட்டைகள்

**வினா எண் 8694—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடும்ப அட்டை இல்லாத உண்மையான நபர்களுக்கு, குடும்ப அட்டை பெற மனு கொடுத்த நாளில் இருந்து, குறிப்பிட்ட கால அளவுக்குள் குடும்ப அட்டை வழங்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

குடும்ப அட்டை கோரும் விண்ணப்பதாரர்கள் குடும்ப அட்டை வழங்கத் தேவையான அனைத்து தகவல்களும் விண்ணப்பத்துடன் வழங்கும் பட்சத்தில் ஒப்புகைச் சீட்டிலேயே குடும்ப அட்டை என்று கிடைக்கும் என்ற தகவல் குறிப்பிடப்படும் என்றும், குடும்ப அட்டை தொடர்பான பல்வேறு வகை மனுக்கள் மீதான முடிவு எத்தனை நாட்களுக்குள் தெரிவிக்கப்படவேண்டும் என்றும் பொது விநியோகத் திட்ட மக்கள் சாசனத்தில் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



188—

### பணிமூப்பு அடிப்படையில் பணி நியமனம்

**வினா எண் 8833—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு முயற்சி மேற்கொள்ளுமா? பணிமூப்பு அடிப்படையில் பணி நியமனம் என்ற அடிப்படையில் பணி நியமனம் செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் பணி நியமனம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள நீதிப் பேராணைகளின் தீர்ப்பு மற்றும் பணிநிலைத்திறன் (Cadre Strength) பரிசீலனைக்குப் பின்னரே காலிப் பணியிடங்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

189—

### உதவியாளர் நியமனம்

**வினா எண் 9259—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்புற நியாய விலைக் கடைகளில் வேலைப்பளு அதிகமாக உள்ளதால் கூடுதலாக ஒரு உதவியாளரை நியமிக்கலாம் என்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நியாய விலைக் கடைகளில் நியமிக்கப்படவேண்டிய கூடுதல் பணியாளர்கள் தொடர்பாக அனுப்பப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் சுற்றறிக்கையின்படி நகர்ப்புறங்களில் செயல்படும் நியாய விலைக் கடைகளில், 500 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக இணைக்கப்பட்டுள்ள கடைகளில் ஒரு விற்பனையாளரும், 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்டுள்ள கடைகளில் ஒரு விற்பனையாளருடன் ஒரு கட்டுனரும் பணியமர்த்தப்பட அனைத்து மண்டல இணைப் பதிவாளர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. நகர்ப்புற நியாய விலைக் கடைகளில் 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்டுள்ள கடைகளில் வேலை கூடுதலாக இருப்பதைக் கருத்தில் கொண்டே இவ்வாணை இடப்பட்டுள்ளது.

**190—**

**நுகர்வோர் நீதிமன்றம்**

**வினா எண் 9562—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் நுகர்வோர் நீதிமன்றம் ஒன்று துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒவ்வொரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் துவங்கப்பட்டுள்ளது. அதன்படி எடப்பாடி நகர் ஒரு மாவட்டத் தலைநகரமாக இல்லாமையால் எடப்பாடி நகரில் புதிதாக ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் நிறுவ சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**191—**

**கூட்டுறவு வங்கி**

**வினா எண் 9783—திரு. ஜா. பச்சைமால்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, அழகன்பாறை, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கொள்ளைபோன நகைகள் மீட்கப்பட்டும் இதுவரை அவை வழங்கப்படாமல் உள்ளதால் அவற்றை உரியவர்களுக்கு உடனே வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

அழகன்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் திருடுபோன நகைகளில், மீட்கப்பட்டவற்றை மொத்த நகைகளாகவோ அல்லது அவற்றின் மதிப்பிற்கான தொகை நீதிமன்றத்திலிருந்தோ அல்லது இழப்பீட்டுத் தொகை காப்பீட்டுக் கழகத்திலிருந்தோ பெறப்பட்டதும் நகை உரியவர்களுக்கு அவை வழங்கப்படும்.

192—

## நிலுவைத் தொகை

**வினா எண் 11056—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரா கோட்ஸ் பண்டகசாலை மூடப்பட்டதால் அதிலுள்ள தொழிலாளர்களுக்குரிய பிராவிடன்ட் பண்ட், கிராஜுவட்டி, வி.ஆர்.எஸ். பணம் போன்ற பாக்கிகளை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரா கோட்ஸ் பண்டகசாலையின் செயல்பாடுகள் 2 ஆண்டுகளுக்கு மேல் அற்றுப்போய்விட்டதால், கலைத்தல் அலுவலர் நியமிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நடவடிக்கை முடிவுக்கு வரும்போது பணியாளர்களுக்குச் சேரவேண்டிய தொகை வழங்க ஆவன செய்யப்படும்.

193—

## சட்டத் திருத்தங்கள்

**வினா எண் 11123—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களுக்கான மத்திய அரசின் மாதிரி கூட்டுறவுச் சட்டத்தைப் பின்பற்றி தமிழகத்தில் உரிய சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

கூட்டுறவுச் சங்கங்களுக்கான மத்திய அரசின் மாதிரி கூட்டுறவுச் சட்டத்திலுள்ள சிறப்பு அம்சங்களைப் பரிசீலித்து இப்பொழுது அமலில் இருக்கிற 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தில் மாறுதல்களை ஏற்படுத்துவதற்குத் தேவையான சட்டத் திருத்தம் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

194—

## புதிய பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 11214—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், இண்டூர் ஊராட்சி, இ.கே.புதூர் கிராமத்திற்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், இண்டூர் ஊராட்சி, இ.கே.புதூர் கிராமத்தில் 82 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், இண்டூரில் இயங்கிவரும் தாய் நியாய விலைக் கடைக்கும் இ.கே.புதூர் கிராமத்திற்கும் இடையே 2 கிலோ மீட்டர் தூரமே உள்ளதாலும், மேற்படி இ.கே.புதூர் கிராமத்திற்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

195—

## புதிய ரேஷன் கார்டுகள்

**வினா எண் 11338—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதியில் புதிய ரேஷன் கார்டு வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு உடனே வழங்க இவ்வரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதியில் புதிய குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பிக்கப்படும் மனுக்கள்மீது உடனுக்குடன் விசாரணை மேற்கொண்டு தகுதியான மனுதாரர்களுக்கு உடனடியாக புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன.

196—

## சேவை மையம்

**வினா எண் 11366—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கண்ணன்தேரி கிராமம், ஒண்டிக்கடையில் எஸ். 407 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, கொங்கணாபுரம் கிளையில் 'சேவை மையம்' ஒன்று துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய தகவல்களை அரசு தெரிவிக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொங்கணாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கிளையினை கண்ணன்தேரி கிராமம் ஒண்டிக்கடையில் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

197—

## நியாய விலைக் கடைகள்

**வினா எண் 11408—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிபபாரா—

தமிழகத்தில் இந்த நிதியாண்டில் மகளிரே பணியில் உள்ள நியாய விலைக் கடைகள் மேலும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

நியாய விலைக் கடைகளை மகளிர் குழுக்களிடம் ஒப்படைக்க அரசு ஏற்கெனவே வகுத்தளித்துள்ள நெறிமுறைகளைக் கடைப்பிடித்து மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

198—

## புதிய குடும்ப அட்டைகள்

**வினா எண் 12852—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) புவனகிரி தொகுதியில் குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு புதிய குடும்ப அட்டை வழங்கிடும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஊர்களிலிருந்து 1999 ஆம் ஆண்டிலிருந்து 30-6-2002 வரை புதிய குடும்ப அட்டை வழங்கக்கோரி வரப்பெற்ற 982 மனுக்களும் விசாரிக்கப்பட்டு தகுதியின்மை காரணமாக நிராகரிக்கப்பட்ட 83 மனுக்கள் தவிர, தகுதியான 899 மனுக்களில் 834 மனுதாரர்களுக்கு ஏற்கெனவே குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 65 மனுக்கள் புதிய குடும்ப அட்டைகள் அச்சிடுவதற்காக அனுப்பப்படவுள்ளன. அவை அச்சிட்டு வரப்பெற்றவுடன் உரியவர்களுக்கு வழங்கப்படும்.

**199—**

### நவீனக் கட்டடம்

**வினா எண் 13578—திரு ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியிலுள்ள குழிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு நவீனக் கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றித் தரப்படும்?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குழிப்பட்டி கிராமத்தை தலைமையிடமாகக் கொண்ட ஐ. முத்துநாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**200—**

### குடும்ப அட்டைகள் வழங்குதல்

**வினா எண் 13620—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு தொகுதியில் குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு குடும்ப அட்டை புதிதாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு தொகுதியில் குடும்ப அட்டை இல்லாத நபர்களுக்கு புதிய குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பேர்ணாம்பட்டு தொகுதியில் 1998-99 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை புதிய குடும்ப அட்டை கோரி வரப்பெற்ற 32,964 மனுக்களில், தகுதியின்மை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்ட 2,353 மனுக்கள் தவிர 30,534 மனுக்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளன. 77 மனுக்கள் விசாரணைக்காக நிலுவையில் உள்ளன.

## பட்டியல் 33

**1—**

### பாலம் மற்றும் இணைப்புச் சாலை வசதி

**வினா எண் 3627—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள கொடியம்பாளையம் கிராமம் தனித்தீவு போல போக்குவரத்து வசதியில்லாமல் இருப்பதால் பாலம் மற்றும் இணைப்புச் சாலை வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**2—**

### சாலை மேம்படுத்தும் திட்டம்

**வினா எண் 3936—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சியில் கண்டமங்கலம், மருதூர் சாலையை மேம்படுத்தும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**3—**

### பாலம் கட்டுதல்

**வினா எண் 4051—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், தெங்குமரஹாடா கிராமத்தின் குறுக்கே மோயாறு ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இப்பகுதியில் பாலம் அமைக்க, வனப்பகுதி நிலத்தினை கையகப்படுத்த வேண்டியுள்ளது. ஆகையால் மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டபின்பு இப்பாலம் கட்டும் பணி துவங்கப்படும்.

**4—**

### பாலம் சீர்செய்தல்

**வினா எண் 4520—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்திலிருந்து செல்லும் சூரப்பன் சாலையில் சதுரங்கப்பட்டிணம் பக்கிங்காம் கால்வாயின் மேல் அமைந்துள்ள பழமை வாய்ந்த பாலம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழுது பார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பணி அரசினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இருப்பினும் நிதி நிலைமைக்கேற்ப பின்னர் பரிசீலிக்கப்படும்.

**5—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 5732—திரு. க. முருகவேல்ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, மாவல்வாடி, வேப்பங்கரணை, தெள்ளார் செல்லும் மிகவும் பழுதடைந்துள்ள சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலை கணிசமாக அதிகரிக்கும்போது இச்சாலையை மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



**6—**

**மரம் நடும் திட்டம்**

**வினா எண் 5808—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலையோரங்களில் மரங்கள் நடும் திட்டம் அரசால் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். 20 அம்சத் திட்டத்தின்கீழ் பனங்கொட்டைகள் மற்றும் நிழல்/கனி தரும் மரங்கள் நடப்படுகின்றன.

**7—**

**தரைப்பாலம்**

**வினா எண் 6556—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, இடையாற்றுமங்கலம் கிராமத்திலிருந்து கிளிக்கூடு வழியாக கல்லணை செல்ல கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 மே 10

8—

## பாலம் கட்டுதல்

**வினா எண் 6590—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், குறவன்குளத்தில் உள்ள பெரியாற்றின் குறுக்கே போக்குவரத்துப் பாலம் கட்ட அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க் முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*தற்போதைய நிதிப் பற்றாக்குறை காரணமாக இத்திட்டத்தை உடனடியாக எடுத்துச் செய்ய இயலாது.*

9—

## புறவழிச் சாலை

**வினா எண் 7193—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலம் நகருக்கு புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) உலக வங்கி நிதி உதவி கிடைத்தபின் திட்டம் செயலாக்கப்படும்.*



2003 மே 10]

10—

## இருவழிச் சாலை

**வினா எண் 7247—திரு. ப. பொன்னம்பலம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒருவழிச் சாலையாக உள்ள மதுரை-நத்தம் சாலையினை இருவழிச்சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ரூ.618.98 இலட்சம் செலவில் இச்சாலையின் கி.மீ. 2/2-11/2 வரையிலான 10 கி.மீ. நீளப்பகுதியை மதுரை ஆரச்சாலைகள் திட்டத்தில் ஹட்கோ வங்கியின் நிதியுதவியுடன் மேம்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. பணி விரைவில் துவங்கப்படும். எஞ்சிய பகுதிகளை இத்திட்டத்தில் இரண்டாம் கட்டப் பணியாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

11—

## ஏரி, குளம் தூர்வாருதல்

**வினா எண் 7373—திரு. செ. அண்ணாதுரை:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செயங்கொண்டம் தொகுதியில் உள்ள சுத்தமல்லி, ஸ்ரீபுரந்தான், பொன்னேரி போன்ற ஏரிகளும், குளங்களும் தூர்வாரப்படுமா?*

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயங்கொண்டம் தொகுதியில் உள்ள சுத்தமல்லி நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 226.28 MCft. (மில்லியன் கன அடி) ஆகும். இந்த நீர்த்தேக்கத்தில் உபரி நீர் ரெகுலேட்டர் அமைக்கப்பட்டு உள்ளதால் தூர் சேர்ந்து கொள்ளளவு குறையவில்லை. எனவே, இந்த நீர்த்தேக்கத்தில் தூர்வாரும் பணி மேற்கொள்ளத் தேவையில்லை. மேலும் ஸ்ரீபுரந்தான், பொன்னேரி போன்ற ஏரிகளை தூர்வாரும் பணி அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப செய்யப்படும்.

12—

**ஏரி, கண்மாய்கள் அமைத்தல்**

**வினா எண் 8024—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மழைநீரை சேமிக்க, புதிய ஏரிகள், கண்மாய்கள் கிராமப்புறங்களில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இக்கேள்வி பொதுவாக உள்ளது. எந்தெந்த இடங்களில் நீர்ப்பாசனத் திட்டங்கள் வேண்டும் என்பதை குறிப்பிட்டுத் தெரிவித்தால் அரசு அதுகுறித்து ஆய்வு செய்யும்.

13—

**தடுப்புச் சுவர்**

**வினா எண் 8510—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



அம்பாசமுத்திரம் அருள்மிகு சின்னசங்கரன் கோவில் செல்லும் கால்வாய்ச் சாலையின் ஒருபுறம் விரிவுபடுத்தி தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ரூ.50.00 இலட்சம் தேவைப்படும் இந்தப் பணி தற்போது எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை.

14—

**தார்ச் சாலை புதுப்பித்தல்**

**வினா எண் 9464—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, புத்துக்கோவில் - ஆவாரங்குப்பம் வரை செல்லும் தார்ச்சாலை பெரிதும் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

15—

**நினைவு மண்டபம்**

**வினா எண் 9868—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் அணை கட்டி முடிக்கப்பட்டு 66 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில், இதற்கு பவள விழா நினைவு மண்டபம் கட்டித்தர அரசு முன்வருமா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மேட்டூர் அணையில் பவள விழா மண்டபம் கட்டுவது குறித்து தோராய மதிப்பீடு ரூ.110 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களின் ஆய்வில் உள்ளது.

**16—**

**சாலை அகலப்படுத்துதல்**

**வினா எண் 11478—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பொன்னம்மாப்பேட்டை முதல் வலசையூர் வரை செல்லும் சாலையை அகலப்படுத்தி புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசின் நிதிநிலைமைக்கேற்ப மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**17—**

**இருவழிச் சாலையாக மாற்றுதல்**

**வினா எண் 11751—திரு என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) பருவக்குடி-வேம்பார் வழி, கோவில்பட்டி, எட்டயபுரம் விளாத்திகுளம் ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**18—**

**நீர் தடுப்புச் சுவர்**

**வினா எண் 11753—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் வைப்பாற்றில் மழைநீர் சேகரிக்க ஒரு தடுப்புச் சுவரும், கடல்நீர் வைப்பாற்றில் வருவதைத் தடுத்திட ஒரு நீர்த் தடுப்புச் சுவரும் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**19—**

**மதுபான விற்பனை**

**வினா எண் 13027—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தமிழகத்தில் வெளிநாட்டு மதுபான ஒப்பந்தக்காரர்கள் நிர்ணயித்த விலையைவிட அதிக விலைக்கு விற்பதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மதுபானக்கடைகளின் ஆய்வின்போது மதுபானங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் உடனுக்குடன் உரிமதாரர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**20—**

**வாய்க்காலில் சிமெண்ட் தளம் அமைத்தல்**

**வினா எண் 13139—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதியிலுள்ள பி.ஏ.பி. பாசன திட்ட வாய்க்காலில் சிமெண்ட் தளம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.



2003 மே 10]

**21—**

**மலிவு விலை மது**

**வினா எண் 14075—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறைந்த விலையில் மது தயாரித்து அண்டை மாநிலங்களுக்கு அனுப்பி அரசுக்கு வருவாயை அதிகப்படுத்த அரசு முயற்சிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மலிவு விலை மது திட்டம் 14-4-2002 முதல் அரசால் கைவிடப்பட்ட நிலையில், குறைந்த விலை மது தயாரித்து அண்டை மாநிலங்களுக்கு அனுப்புவது குறித்த வினா எழவில்லை.

**22—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 15857—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் அணைக்கட்டுப் பகுதியில் மின்விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மின்விளக்குகள் போடப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆழியார் அணைக்கட்டுப் பகுதியில் மின்விளக்குகள் அமைக்க நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

[2003 மே 10

23—

**பயணியர் மாளிகை புதுப்பித்தல்**

**வினா எண் 16233—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் இடியும் தருவாயில் உள்ள பயணியர் மாளிகையைப் புதியதாகக் கட்டி நவீனமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

24—

**சாலை செப்பனிடுதல்**

**வினா எண் 17872—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், திருமங்கலம்-உசிலம்பட்டி சாலையிலிருந்து கள்ளப்பட்டிக்குச் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை மேம்படுத்த நபார்டு பெருந்திட்டப் பட்டியலில் (NABARD MASTER PLAN) சேர்க்கப்பட்டுள்ளது.



2003 மே 10]

25—

**மேம்பாலம் கட்டுதல்**

**வினா எண் 17914—திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டுத் தொகுதியில் கொளமஞ்சனூருக்கு அருகே தருமபுரி-திருவண்ணாமலை மாவட்டங்களை இணைக்கும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

26—

**அணைக்கட்டு**

**வினா எண்-18082—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரம் தாலுகா, நம்பிபுரம் கணவாய்க்கு நீர்வரத்தை அதிகரிக்க வைப்பாற்றில் கீழ்நாட்டுக்குறிச்சி அருகே அணைக்கட்டு கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதிநிலைமைக்கு ஏற்ப செய்யப்படும்.

27—

### ஏரி தூர் வாருதல்

**வினா எண் 18089—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம் இ.வெள்ளனூர் கிராமத்தில் கீழ் ஏரியைத் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், லால்குடி தொகுதி, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், இ.வெள்ளனூர் கிராமத்தில் கீழ்ஏரி, அரசின் நிதி நிலைக்கு ஏற்ப தூர் வாரப்படும்.

28—

### புறவழிச் சாலை அமைத்தல்

**வினா எண் 18567—திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வத்தலகுண்டு நகருக்குள் நுழையும் சாலை நெருக்கடியாக உள்ளதால் புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள புறவழிச் சாலை அமைக்கும் பணி தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை.



29—

### கிளைக் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 18735—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சிக்குட்பட்ட பாண்டியப்பன்குளத்தில் திப்பிறமலையில், பட்டணம்கால் முதன்மைக் கால்வாயிலிருந்து கிளைக் கால்வாய் வெட்டி தண்ணீர்விட்டால் சுமார் 18 குளங்களில் தண்ணீர் நிரப்ப வாய்ப்புள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பட்டணம்கால் கால்வாய் மூலம் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், மேலும் புதிய கால்வாய் வெட்டி 18 குளங்களுக்குப் பாசன வசதி வழங்குவது உசிதமல்ல.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

30—

### பாலத்தை அகலப்படுத்தல்

**வினா எண் 18818—திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) பரமக்குடி நகர், முதுகுளத்தூர் போகும் சாலையில் ரயில்வே இருப்புப்பாதை கடவின் வடபகுதியில் உள்ள பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தற்போது இல்லை.

(ஆ) எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலையினைப் பொறுத்து இப்பாலப் பணியினை எடுத்து செயல்படுத்திட பரிசீலிக்கப்படும்.

**31—**

**தடுப்பணை பாலம்**

**வினா எண் 19540—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதியில் உள்ள சோளசிராமணிக்கும், ஈரோடு மாவட்டம், பிசூருக்கும் இடையே தடுப்பணை பாலம் அமைக்கும் பணி விரைவில் நடைபெற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கபிலர் மலை தொகுதியில் உள்ள சோளசிராமணிக்கும், ஈரோடு மாவட்டம் பிசூருக்கும் இடையே தடுப்பணை பாலம் அமைக்கும் பணி குறித்த திட்டம் ஏதும் பொதுப் பணித் துறையில் இல்லை.



2003 மே 10]

**32—**

**இருவழிச் சாலை அமைத்தல்**

**வினா எண் 19655—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அங்கம்பட்டியிலிருந்து சூரமங்கலம் வரை செல்லும் பாதையின் நடுவில் தடுப்புகள் ஏற்படுத்தி இருவழிச் சாலையாக அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் எப்போது செயல்படவுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

**33—**

**பாண்டியாறு-புன்னம்புழா திட்டம்**

**வினா எண் 19993—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைப் பாசனத் திட்டமாக இல்லாவிடினும் குடிநீர் திட்டமாக ஏற்றுக்கொள்ள, கேரள அரசு இசைவு தந்துள்ளதை தமிழக அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1965ஆம் ஆண்டில் பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின்திட்டம் கேரள அரசின் இசைவோடு துவங்க திட்டமிடப்பட்டது. மின் உற்பத்திக்குப் பிறகு, நீர் கேரள அரசிற்குச் செல்லும், ஆனால் கோயம்புத்தூர் மாவட்ட வேளாண் பெருமக்கள் இந்நீரைப் பாசனத்திற்காகத் திருப்பிவிட கோரிக்கை விடுத்ததன் பேரில் கேரள அரசின் இசைவு கோரப்பட்டது. குடிநீர்த் தேவையானாலும், பாசனத் தேவையானாலும், கேரள அரசின் இசைவு பெற்றுதான் நிறைவேற்ற இயலும். இதுவரையில், கேரள அரசு பாண்டியாறு-புன்னம்புழா நீரைத் திருப்புவதற்கு இசைவு எதுவும் அளிக்கவில்லை.

**34—**

**ஏரிகள் மராமத்து**

**வினா எண் 23235—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதியில் உள்ள வாய்க்கால்களையும், ஏரிகளையும் மராமத்து செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**35—**

**ஏரிகளை ஆழப்படுத்துதல்**

**வினா எண் 23421—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





அறந்தாங்கி தொகுதியில், இரும்பாநாடு, கரூர், சடையாமங்கலம் பொன்பேத்தி, வெளிவயல் ஆகிய பெரிய ஏரிகளைச் சிறப்பு மராமத்து திட்டத்தின் மூலம் ஆழப்படுத்துதல், கரைகளைப் பலப்படுத்துதல் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**36—**

**பொதுப் பணித் துறை கட்டடம்**

**வினா எண் 24456—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேட்டூர், மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைக்கு அருகில் உள்ள பொதுப் பணித் துறை கட்டடம் காலியாகவுள்ளதால் அரசு அதில் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மேட்டூர் தொகுதியில், மேட்டூர், மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைக்கு அருகில் பொதுப் பணித் துறை அலுவலக வளாகத்தில் பொதுப் பணித் துறை கட்டடம் எதுவும் காலியாக இல்லை.

[2003 மே 10

37—

## புதிய நீதிமன்றம் அமைத்தல்

**வினா எண் 11479—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழப்பாடியில் புதியதாக வட்ட நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாழப்பாடியில் புதியதாக நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

38—

## நீதிமன்றங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு

**வினா எண் 19403—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் இந்த ஆண்டில் கட்ட நிதி ஒதுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிதி ஒதுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



2003 மே 10]

39—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 1603— திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் மலையைச் சுற்றிவரும் கிரிவலப் பாதையைத் தார்ச் சாலையாக அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(இ) இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலைச் சுற்றிவரும் கிரிவலப் பாதையைத் தார்ச் சாலையாக அமைக்கும் பணிக்கு, திருக்கழுக்குன்றம் பேரூராட்சிமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ.16.80 இலட்சத்துக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரால் சிறுசேமிப்பு ஊக்கத் தொகையிலிருந்து ரூ.2,56,000 வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையைக் கொண்டு கிரிவலப் பாதையைச் சுற்றி, சிறு பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் இப்பணியினை 'நமக்கு நாமே' திட்டத்தின் மூலம் செயல்படுத்த மதிப்பீட்டுத் தொகையில் நான்கில் ஒரு பங்கினைப் பொதுமக்கள் நன்கொடையாகப் பெற வேண்டும். இதனைத் திருக்கழுக்குன்றம் ஆன்மீகப் பெருமக்களிடம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் இப்பணி துவங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2003 மே 10

40—

## ஆலயத் திருப்பணி

**வினா எண் 5575—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடம் சந்தானராஜகோபாலசாமி ஆலயத் திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை.

41—

## மண்டபத்தைச் செப்பனிடுதல்

**வினா எண் 7409—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, வண்டியூர் வைகை ஆற்றின் நடுவில் உள்ள மண்டப செப்பனிடும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை, வண்டியூர் கிராம எல்லையில், வைகை நதியில் அமைந்துள்ள பழுதுபட்ட மண்டபம், எந்த ஒரு



2003 மே 10]

திருக்கோயிலுக்கும் சொந்தமானதல்ல. தேனூர் கிராமத்தார்களின் பராமரிப்புக்குட்பட்டது. இதனைத் திருக்கோயில் நிதியிலிருந்து செப்பனிடும் திட்டம் ஏதுமில்லை.

42—

## தங்குமிட வசதி

**வினா எண் 10356—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலுக்கு பௌர்ணமி நாளில் அதிக பக்தர்கள் வருவதால் புதிதாக தங்குமிட வசதி கட்டுவதற்கான செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

உயர் நீதிமன்ற ஆணை மற்றும் உயர் நீதிமன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகத் திட்டத்தின்படி திருக்கோயில் மதிற்சுவரினை ஒட்டியும் மலை சுற்றுப் பாதையிலும், பாதையை அடுத்து இருபுறமும் கட்டடங்கள் எதுவும் ஏற்படுத்தக்கூடாது என தடை செய்யப்பட்டுள்ளது. திருக்கோயிலுக்கு அருகில் தங்கும் விடுதி கட்டுவதற்கு திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம் இல்லை. எனவே மேற்படி திருக்கோயிலில் சேவார்த்திகள் தங்கும் வசதிக்காக புதிதாக தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போதைக்கு இல்லை.

43—

## குடமுழுக்குப் பணி

**வினா எண் 19967—திரு. டி. மணி மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாரிலுள்ள பழமைவாய்ந்த ஆதிகேசவப் பெருமாள் கோயிலைச் செப்பனிட்டு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை தேவஸ்வம், திருவட்டார் தொகுதி அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலின் மண்டபங்கள் மேல்தளம் தட்டோடு பதித்தல், விளக்கு அழிமாடம் கதவு, ஜன்னல் பழுதுபார்த்து வர்ணம் பூசுதல், வெளிச்சுற்று கல்தூண்கள் சுத்தம் செய்யும் வேலைகள், நெல்புரை கட்டடம் பழுதுபார்த்தல், இதர மராமத்து ஆகிய திருப்பணி வேலைகள், ரூ.11.20 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு, அரசு நிதி உதவி ரூ.6 இலட்சம் பெற்று முடிக்கப்பட்டன. இத்திருக்கோயிலில் விமானக் கலசங்கள் இல்லாததால் 1995 ஆம் ஆண்டு சுத்தி கலச பூசை நடத்தப்பட்டது. திருக்கோயில் மூலவர் கூரை, செப்புத் தகடுகளால் வேயப்பட்டதாகும். இத்தகடுகள் தற்போது பழுதடைந்துள்ளன. இதனையும் இத்திருக்கோயிலின் மூலிகை ஓவியங்களையும் புதுப்பித்து திருப்பணி செய்ய வேண்டியுள்ளது. மேலும் திருக்கோயிலில் பழுதடைந்த மின் இணைப்புகளை மாற்றி புதிய மின் இணைப்புகள் கொடுக்கப்படவேண்டும். இப்பணிகளுக்கு மதிப்பீடு தயாரித்து பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

44—

## கோயில் வருவாய்

**வினா எண் 20241—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு விநாயகர் கோயிலின் (துணை ஆட்சியர் அலுவலகம்) கடந்த 10 ஆண்டுகள் வருவாய் எவ்வளவு என அரசு அறிவிக்குமா?

(ஆ) அவ்வருவாயில் செலவுகள் மற்றும் இருப்பு எவ்வளவு?

(இ) புதிய வருவாய்க்கு திட்டம் ஏதாவது, நிர்வாகம் நடைமுறைப்படுத்த உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு நகரில் அமைந்துள்ள விநாயகர் கோயிலின் (துணை ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ளது) கடந்த 10 ஆண்டுகளில் மொத்த வருவாய் ரூ.1,94,10,448.05 பைசா ஆகும்.

(ஆ) அவ்வருவாயில் செலவுகள் ரூ.1,93,81,949.55 பைசா ஆகும். இருப்பு நிலை முதலீடு ரூ.40,21,000/- ஆகும்.

(இ) திருக்கோயிலில் பெறப்படும் வருமானத்திற்கு ஏற்ப செலவுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதால், நிலையான வருவாய் ஏற்படுத்தப்படக் கூடிய புதிய நிர்வாகத் திட்டம் ஏதும் இல்லை.

45—

## கோயிலைச் செப்பனிடுதல்

**வினா எண் 20870—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வெங்கடாம்பேட்டை பெருமாள் கோயில், மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், இதனைச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, அருள்மிகு வெங்கடாம்பேட்டை பெருமாள்கோயில், மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்ய சுமார் ரூ. 14.00 இலட்சம் தேவைப்படுவதாலும், திருப்பணி வேலைகளை மேற்கொள்ள திருக்கோயிலில் நிதி வசதி இல்லாததாலும், திருக்கோயில் அமைந்துள்ள

ஊர் கிராமமாக இருப்பதால் உபய திருப்பணி செய்ய உபயதாரர்கள் எவரும் முன்வராததாலும், பொதுமக்களிடம் நன்கொடை பெற்று திருப்பணி வேலைகளை மேற்கொள்ளும் வாய்ப்பு இல்லாத நிலை உள்ளது. திருப்பணி செய்ய பொதுமக்கள் முன்வந்தால், துறை மூலம் மானியம் வழங்கி திருப்பணி மேற்கொள்ளப்படும்.

**46—**

**கட்டட வசதி**

**வினா எண் 4004—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டையில் அரசு சித்த மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை அரசு சித்த மருத்துவமனைக்கு தனிக் கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

**47—**

**தமிழ் ஆராய்ச்சி மையம்**

**வினா எண் 5046—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் மேதை மறைமலை அடிகளார் பிறந்த நாகப்பட்டினத்தில், அவர் பெயரால் தமிழ் ஆராய்ச்சி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏதும் தற்போது இல்லை.

**48—**

**பெண்கள் கல்லூரி**

**வினா எண் 6688—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதியில் பெண்கள் கலை அறிவியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக, புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் துவக்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, லால்குடி தொகுதியில் பெண்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அரசு துவக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**49—**

**கட்டட வசதி**

**வினா எண் 7888—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசு மருத்துவமனையில் "சித்த மருத்துவர்" பிரிவுக்குக் கட்டடம் கட்டிட அரசிடம் செயல்திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவுக்குக் கட்டடம் கட்டிட கருத்துரு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**50—**

**ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

**வினா எண் 9339—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், செட்டிபாளையம் ஊராட்சி, அவினாசி கவுண்டம்பாளையம் மற்றும் முதலிபாளையம் ஊராட்சி, முதலிபாளையம் ஆகிய இரண்டு இடங்களில் உள்ள ஊரக மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், அவினாசி கவுண்டம்பாளையம் மற்றும் முதலிபாளையம் ஆகிய கிராமங்களில் செயல்படும் அரசு மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றும் திட்டம் இல்லை.



**51—**

**நீச்சல் பயிற்சிக் கட்டணம்**

**வினா எண் 11832—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தின் நீச்சல் குளங்களில் பொது மக்கள் நீச்சல் பயிற்சி பெறுவதற்கு அதிக அளவு கட்டணம் வசூலிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில், கட்டணத் தொகையைக் குறைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் உள்ள நீச்சல் குளங்களில் அதிக கட்டணம் வசூலிக்கப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**52—**

**சிறப்பு மருத்துவமனை**

**வினா எண் 12873—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, மேல்விஷாரம் பேரூராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கைகள் கொண்ட சிறப்பு மருத்துவமனையாக மாற்றித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

இராணிப்பேட்டை தொகுதி, ஆற்காடு ஊராட்சி ஒன்றியம், மேல்விஷாரம் ஆரம்ப சுகாதார நிலையத்தினை, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

53—

## சென்ட்ரல் மாஸ்டர் கருவி

**வினா எண் 16239—திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில், இதய சிகிச்சைப் பிரிவிற்கு "சென்ட்ரல் மாஸ்டர் கருவி" ஒன்றை அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை இராயப்பேட்டை மருத்துவமனை இருதய சிகிச்சைப் பிரிவிற்கு "சென்ட்ரல் மாஸ்டர் கருவி" அமைக்கும் திட்டம் இல்லை.

54—

## சிறப்பு ஏற்பாடு

**வினா எண் 16679—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போலி மருந்து தயாரிக்கும் நிறுவனங்களைக் கண்காணிக்க அரசு சிறப்பு ஏற்பாடு செய்துள்ளதா?

(ஆ) இதுவரையில் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இதுவரையில் 57 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

55—

## மகப்பேறு பிரிவு

**வினா எண் 18152—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொ. மல்லாபுரம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு பிரிவில் அறைகள் அதிகப்படுத்தி கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொ. மல்லாபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அரசு, 1996-97 ஆம் ஆண்டு இந்த நிலையத்துக்கு புதிய கட்டடம் கட்ட ஒப்புதல் அளித்தது. ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட என்னென்ன வசதிகள் தேவையோ அத்தனையும் உள்ளடக்கி இப்புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இப்புதிய கட்டடத்தில் தற்போதுள்ள வசதிகள் போதும் எனக் கருதப்படுவதால், மகப்பேறு பிரிவில் அறைகள் அதிகப்படுத்தும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

56—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 18304—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், பழையபாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

57—

## குடியிருப்புகள்

**வினா எண் 18591—திரு. பீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்ட மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்ட மருத்துவமனையில் போதிய இடவசதி இல்லை. எனவே அங்கு பணிபுரியும் மருத்துவர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது ஏதும் இல்லை.

58—

## தண்ணீர் வசதி

**வினா எண் 18592—திரு. பீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்ட மருத்துவமனைக்கு போதிய தண்ணீர் வசதி இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது தாம்பரம் அரசு மருத்துவமனையில் தட்டுப்பாடு இன்றி 24 மணி நேரமும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

59—

## நூல்கள் அரசுடைமை

**வினா எண் 18622—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்ட நத்தம் கிராமத்தில் பிறந்த "கவிராஜ பண்டிதர்" திரு. ஜெகவீரபாண்டியனாரின் நூல்கள் அனைத்தும் அரசுடைமை ஆக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**60—**

மருத்துவமனை

**வினா எண் 18815—திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்திரக்குடி, நயினார்கோவில் மற்றும் பார்த்திபனூர் அரசு மருத்துவமனைகளை 30 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாக்கிட அரசு பரிசீலிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டம், சத்திரக்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. சாயல்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. சாயல்குடி, நயினார்கோவில் மற்றும் பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் வசதிகொண்ட மருத்துவமனையாக்கிட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.



2003 மே 10]

**61—**

**விளையாட்டு மேம்பாடு**

**வினா எண் 19391—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் நகரில் இளைஞர்களை விளையாட்டில் ஊக்குவிக்க நீச்சல் குளம், ஜிம்னாஸ்டிக், உள் அரங்கு அமைத்துத்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பத்தூர் நகரில் நீச்சல் குளம், ஜிம்னாஸ்டிக், உள் அரங்கு அமைத்துத் தருவதற்கான நடவடிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**62—**

**உடற்பயிற்சிக் கூடம்**

**வினா எண் 19820—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், விடையூர் கிராமத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், விடையூர் கிராமத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

63—

## இளைஞர் விடுதி

**வினா எண் 20206—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் புதிதாக இளைஞர் விடுதி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) கோவையில் புதிதாக இளைஞர் விடுதி கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

64—

## பயிற்சி மையம்

**வினா எண் 20344—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய விளையாட்டுக் குழுமம் பயிற்சி மையம் மகளிருக்காக சென்னையில் உள்ளதுபோல் சேலத்திலும் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், அரசு இதனைத் துவங்க நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) இந்திய விளையாட்டுக் குழுமம் சேலத்தில் மகளிருக்காக பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் தற்போதைக்கு இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

65—

## சிகிச்சை வசதி

**வினா எண் 23460—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் அறுவை சிகிச்சை வார்டு (Post Operative Ward) தனியாக அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தற்போது உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை வார்டு (Post Operative Ward) தனியாக கட்டுவதற்கு போதிய இடவசதி இல்லை.

66—

## கட்டட வசதி

**வினா எண் 23462—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் வெளிநோயாளிகள் மருத்துவ சிகிச்சைக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் வெளிநோயாளிப் பிரிவிற்கு கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**67—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 24455—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், பாலமலைப் பஞ்சாயத்து, பாலமலையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாலமலை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**68—**

**குழு அமைத்தல்**

**வினா எண் 24583—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) கோவை மாவட்ட அரசு பெரிய மருத்துவமனை உட்பட அரசு மருத்துவமனைகளையும், அங்கு வழங்கும் உணவுகளையும், மருந்துகளையும், சுத்தமாக இருப்பதை பார்வையிட சட்டமன்ற உறுப்பினர்கள் குழு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட, வட்ட மற்றும வட்டம் சாரா மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும், அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினரை உறுப்பினராகக் கொண்டு அந்தந்த மருத்துவமனை அதிகாரியின் தலைமையின் கீழ் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மருத்துவமனைகளின் பணியினை கண்காணித்து ஆலோசனை கூற ஒரு மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்களில் அந்தந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுகின்றனர். எனவே மருத்துவமனைகளில் வழங்கும் உணவுகளையும், மருந்துகளையும் சுத்தமாக இருப்பதை பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்குவதற்கென தனியாக வேறு ஒரு ஆலோசனைக் குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**69—**

**உணவுப் பொருட்கள்**

**வினா எண் 26472—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவுப் பொருட்களில் கலப்படம் செய்து விற்பவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 1954 ஆம் வருடம் உணவு கலப்பட தடுப்புச் சட்டப் பிரிவு 16 (1A)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கடுமையான தண்டனை அளிக்கப்பட்டு வருகிறது.*

**70—**

**ரப்பர் ஓடுபாதை**

**வினா எண் 27008—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை விளையாட்டு அரங்கத்தில் ரப்பர் ஓடுபாதை (ரன்வே) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை விளையாட்டு அரங்கத்தில் ரப்பர் ஓடுபாதை (ரன்வே) அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**71—**

**தமிழக கிரிக்கெட் வீரர்கள்**

**வினா எண் 27151—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) தமிழக கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு ஆணையம் மூலம் சிறப்பான வெளிநாட்டுப் பயிற்சியாளரைக் கொண்டு பயிற்சி அளித்து சிறந்த வீரர்களாக தயார் செய்து இந்திய கிரிக்கெட் அணியில் தமிழக வீரர்கள் அதிக அளவில் கலந்துகொள்ள அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தமிழக கிரிக்கெட் வீரர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் சிறப்பான வெளிநாட்டுப் பயிற்சியாளரைக் கொண்டு பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**72—**

**துணை சுகாதார நிலையம்**

**வினா எண் 28222—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சியில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், திருநகரி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும்

[2003 மே 10

திட்டம் இல்லை. இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

**73—**

**சிறப்பு மருத்துவ முகாம்கள்**

**வினா எண் 28316—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரத்தசோகை நோயைக் கட்டுப்படுத்த சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

ரத்தசோகை நோயைக் கட்டுப்படுத்த சிறப்பு முகாம்கள் நடத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**74—**

**விளையாட்டு அரங்கம்**

**வினா எண் 32057—திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதியில் விளையாட்டு அரங்கம் கட்டிக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) இராஜபாளையம் தொகுதியில் விளையாட்டு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2003 மே 10]

(ஆ) வினா எழவில்லை.

**75—**

**தொழிலாளர் நல வாரியம்**

**வினா எண் 18099—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியம் தனது செயல்பாட்டை இழந்து நிற்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நல வாரியம் செயல்பட அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியம் செம்மையாகச் செயல்பட்டு வருகின்றது.

**76—**

**புதிய மருத்துவமனை**

**வினா எண் 18574—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் உள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதை படுக்கை வசதியுடன் கூடிய புதிய மருத்துவமனையாகக் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.

**77—**

### தொழிற் பயிற்சி நிலையம்

**வினா எண் 20962—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அவிநாசியில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் (ஐ.டி.ஐ.) அமைத்துத் தரப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இவ்வினா எழ இடமில்லை.

**78—**

### கசிவுநீர்க் குட்டை

**வினா எண் 11043—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், ஈட்டியம்பட்டியை ஒட்டியுள்ள நடைபாதைப் பள்ளம் என்னும் இடத்தில் கசிவுநீர்க் குட்டை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* கசிவுநீர்க் குட்டை கட்ட நிதி ஒதுக்கீடு இல்லாததால், தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், ஈட்டியம்பட்டியை ஒட்டியுள்ள நடைபாதைப் பள்ளம் என்னும் இடத்தில் கசிவுநீர்க் குட்டை அமைக்க வாய்ப்பு இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**79—**

### விவசாயத்தை மேம்படுத்துதல்

**வினா எண் 11107—திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஹரியானா மாநிலம் நம்மைவிட 3 மடங்கு விவசாயப் பொருட்கள் உற்பத்தி செய்யும்போது, தமிழக விவசாயத்தை தற்பொழுது உள்ளதுபோல 9 மடங்கு அதிகரிக்கும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண் உற்பத்தியில் எண்ணெய்வித்து மற்றும் பருத்தி பயிர் தவிர இதர பயிர்களில் தமிழ்நாடு மாநிலம் ஹரியானா மாநிலத்தைவிட அதிக உற்பத்தி செய்து வருகிறது. எனினும், தமிழக விவசாய உற்பத்தியை தற்போது இருப்பதுபோல 9 மடங்கு அதிகரிக்கும திட்டம் ஏதும் இல்லை.

**80—**

### தென்னை மர நோய்கள்

**வினா எண் 15220—திரு. டி. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை மரங்களில் குருந்தோலைகளின் நுனிகள் கரிந்து அழியும் நோயினால் தென்னை

மரங்கள் மற்றும் காய்கள் பாதிப்படைவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தென்னை மரத்தில் குருந்தோலைகள் அழுகி பின்னர் குருத்து முழுவதும் வாடும் நிலை குருத்தழுகல் நோயினால் ஏற்படுகிறது. இது மிகச் சில இடங்களில் மட்டுமே காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் தடுப்பு முறைகள் கருத்தரங்குகளிலும், களப் பணியாளர்கள் மூலம் விவசாயிகள் தோட்டத்தில் செயல் விளக்கமாக செய்து காண்பிக்கப்படுவதுடன், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைச் செய்தி, வானொலிச் செய்தி மூலமாகவும் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

**81—**

**தொழிற்சாலை**

**வினா எண் 23122—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட வேப்பனப்பள்ளி ஒன்றியத்தில் அதிக மாம்பழம், தக்காளி உற்பத்தியாவதால், தக்காளி மற்றும் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை (ஜூஸ் பாக்டரி) தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கிருஷ்ணகிரி தொகுதியில், வேப்பனப்பள்ளி ஒன்றியத்தில் தக்காளி மற்றும் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.



(ஆ) கேள்விக்கிடமில்லை.

**82—**

**விதை சுத்திகரிப்பு மையம்**

**வினா எண் 28783—திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பள்ளிப்பட்டில் விதை சுத்திகரிப்பு மையம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**83—**

**வாகன வசதி**

**வினா எண் 7566—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊனமுற்றோருக்கான கடனுதவி திட்டத்தில் ரூ.2,000/- மான்யம் வழங்குவதை ரூ.5,000/- ஆக அதிகப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஊனமுற்றோர் நல்வாழ்வுத் துறைக்கு வாகன வசதி போன்ற அடிப்படை வசதியை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஊனமுற்றோருக்கான கடனுதவி திட்டத்தில் ரூ.2,000/- மான்யம் வழங்குவதை ரூ.5,000/- ஆக அதிகப்படுத்துவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) ஏற்கெனவே 11 மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலகங்களில் ஜீப்பு உள்ளது. ஜீப்பு வசதி இல்லாத 16 மாவட்ட

[2003 மே 10

ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலகங்களுக்காக, 16 ஈப்புகள் வாங்க படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

**84—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 10525—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி வட்டம், புலியூர்—பெத்தனான்குப்பம் ஊராட்சியில் சத்துணவுக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், புலியூர்—பெத்தனான்குப்பம் என்பது ஒரு குடியிருப்பு. இக் குடியிருப்புப் பகுதிக்கு பள்ளிக்கூடம் ஏதும் இல்லை. இங்கு 43 வீடுகளும் மொத்தம் 98 மக்கள்தொகையும் மட்டுமே உள்ளது. எனவே, மக்கள் தொகை குறைவாக உள்ளதாலும், இங்கு பள்ளிக்கூடம் ஏதும் இல்லாததாலும் சத்துணவுக் கூடம் அமைக்க வாய்ப்பில்லை.

**85—**

**சத்துணவுக் கூடங்களைப் புதுப்பித்தல்**

**வினா எண் 27346—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதியில் பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடங்களைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சிங்காநல்லூர் தொகுதியில் பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடங்களைப் புதுப்பித்துத் தர அரசு முன்வரும் இப்பணி, மேற்படி



2003 மே 10]

தொகுதியில் ரூ.1,38,000/- மதிப்பீட்டில் 7 சத்துணவு மையங்கள் இதுவரை பழுதுநீக்கம் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**86—**

**தங்கும் விடுதி**

**வினா எண் 7404—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, சத்திரப்பட்டி, ஊமச்சிகுளம், ஒத்தகடை ஆகிய ஊர்களில் ஆதிதிராவிடருக்கு உயர்நிலை, மேல்நிலை மற்றும் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு தங்கும் விடுதி கட்டும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**87—**

**விடுதி தொடங்குதல்**

**வினா எண் 8872—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு, ஆதிதிராவிடர் விடுதி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிதாக மாணவ மாணவியர் விடுதிகள் துவங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

**இலவச விட்டுமனைப் பட்டா**

**வினா எண் 10528—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அம்பலவாணன்பேட்டை ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், அம்பலவாணன்பேட்டை ஆதி திராவிடர்களுக்கு 240 வீடுகள் உள்ளன. இதில் மொத்தம் 265 குடும்பங்கள் உள்ளன. 25 குடும்பங்கள் மட்டுமே கூட்டுக் குடும்பமாக வசித்து வருகின்றனர். இவர்களுக்கு சொந்தமாக காலியமனை, வீடு கட்ட தகுதியானதாக உள்ளது என்பதினாலும், வீட்டு மனை கோரும் ஆதிதிராவிடர்கள் மேற்படி கிராமத்தில் அதிகம் இல்லை என்பதினாலும், மேற்படி கிராம ஆதிதிராவிடர்களுக்கு தற்போது வீட்டு மனை வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**89—**

**மாணவிகளுக்கு விடுதி**

**வினா எண் 19038—திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வேலூரில் ஆதிதிராவிடர் கல்லூரி மாணவிகளுக்கு தங்கும் விடுதி கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூரில் கல்லூரி மாணவியருக்கு என இத்துறை மூலம் விடுதி எதுவும் செயல்படவில்லை. எனவே விடுதி கட்டப்படும் நிலை ஏற்படவில்லை.

**90—**

**இட ஒதுக்கீடு**

**வினா எண் 30102—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிறிஸ்தவர்களாகப் பிறந்தவர்கள், இந்துக்களாக மதம் மாறினால், அட்டவணை சாதியினர் என்று சான்றிதழ் பெற மற்றும் இட ஒதுக்கீட்டின் பலனை அடைய முடியாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிறிஸ்தவ பெற்றோர்க்குப் பிறக்கும் குழந்தையும், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்ததே என்றும் பிறப்பால் கிறிஸ்தவர் பின்னாளில் இந்துவாக மாறினாலும், இட ஒதுக்கீட்டுக்குரிய சலுகையைப் பெறுவதற்குத் தகுதியில்லை என மேன்மை தங்கிய உச்ச நீதிமன்றம் 25-1-1996 நாளிட்ட எஸ்.எல்.பி. எண் 27571/95-ல் தீர்ப்பளித்துள்ளது. எனவே மேற்படி தீர்ப்பின்படி பிறப்பால் கிறிஸ்தவர், இந்துவாக மாறினால் ஆதிதிராவிடர் சாதிச் சான்று பெறவோ, இட ஒதுக்கீட்டுக்குரிய சலுகையைத் துய்க்கவோ தகுதி இல்லை என அரசு

கடிதம் (நிலை) எண் 81, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 19-9-2000-ல் தெளிவுரை வெளியிடப்பட்டது. இதனை உயர் நீதிமன்றம் 3-10-2002 நாளிடப்பட்ட ஆணையில் நிறுத்தி வைத்துள்ளது. இவ்வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

91—

**பணிமனை**

**வினா எண் 4894—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, சுரண்டையில் அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனை ஏற்படுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது, கட்டப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி மூலம் தென்காசி தொகுதி சுரண்டையில் பணிமனை அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

92—

**அகல இரயில் பாதைப் பணியை துரிதப்படுத்துதல்**

**வினா எண் 6926—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை-கொல்லம் இரயில் பாதையை அகலப் பாதையாக மாற்றும் திட்டப் பணியை துரிதப்படுத்த அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?



(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை-விருதுநகர் இரயில் பாதை அகல இரயில் பாதையாக மாற்றப்பட்டு 1993 அக்டோபர் முதல் போக்குவரத்து துவங்கப்பட்டது. தென்காசி-திருநெல்வேலி-திருச்செந்தூர், பாதையை அகல இரயில் பாதையாக மாற்றும் திட்டத்துடன் விருதுநகர்-கொல்லம் அகல இரயில் பாதை மாற்றும் திட்டமும் சேர்க்கப்பட்டு, ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. தென்காசி, புனலூர் இடையே உள்ள கூர்மையான வளைவுகள் மற்றும் பாதையைச் சமப்படுத்துவதற்கான நில அளவைப் பணிகள் தற்போது முடிவடைந்துள்ளன. விருதுநகர்-தென்காசி மற்றும் திருநெல்வேலி-திருச்செந்தூர் பிரிவில் சிறிய மற்றும் பெரிய பாலங்கள் அமைத்தல், பாதை வேலைகள் போன்றவை நடைபெற்றுவருகின்றன.

93—

**பேருந்து வசதி**

**வினா எண் 9398—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், நாடார் கூத்தங்குளி கிராமத்திற்கு பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், நாடார் கூத்தங்குளி கிராமத்திற்கு ஏற்கெனவே பொதுமக்களின் தேவைக்கேற்ப போதுமான பேருந்து வசதி உள்ளதால், கூடுதலாக பேருந்து வசதி செய்து கொடுத்திட இயலாத நிலை உள்ளது.

94—

**பணிமனை**

**வினா எண் 23138—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரத்தில் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை ஒன்று புதிதாக துவங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) எட்டயபுரத்தில் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

95—

**புதிய மின் நிலையம்**

**வினா எண் 5052—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகராட்சி மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களில் மின் தேவை அதிகரித்துள்ளதால் 110 மெகாவாட் திறனுள்ள புதிய மின் நிலையம் இவ்வாண்டு திட்டத்தில் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

96—

**சர்க்கரை ஆலை நவினமயம்**

**வினா எண் 5270—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் நலிவை நீக்கிட இந்த ஆலையின் உற்பத்தித் திறனை 1250 டன்னிலிருந்து 2000 டன்களாக உயர்த்த பைபாஸ் மற்றும் கூடுதல் இயந்திர சாதனங்களைப் பொருத்த அரசு பரிசீலிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

ஆம். இதற்கான நிதி வசதி மற்றும் நிலையான கரும்பு உற்பத்திக்கான ஏற்பாடு செய்தபின் ஆலையின் விரிவாக்கம் தொடர்பான மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

97—

**சூரிய ஒளியில் மின்சாரம் தயாரித்தல்**

**வினா எண் 5341—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் உள்ளதுபோல சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் ஆலை நாட்டில் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஜோத்பூரில் உள்ளது போல் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் ஆலை நிறுவும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**98—**

### பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 5492—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்வாரியத்தில் அடிப்படை ஊழியர் (உதவியாளர்) பற்றாக்குறை இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், காலியிடங்களை நிரப்ப நிதியாண்டில் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுதுள்ள நெருக்கடியான வாரிய நிதி நிலை காரணமாக அடிப்படை பதவிகளுக்கு மேலும் புதிதாக ஆட்களை நியமிக்கும் சாத்தியக்கூறு இல்லை.



**99—**

### துணை மின் நிலையம்

**வினா எண் 6304—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஒன்றியம், பேராணூர் அருகே துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

**100—**

### மின் உற்பத்தி

**வினா எண் 6700—திரு. டி. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்தில் காற்றாடிகள் மூலம் ஆண்டொன்றுக்கு எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) இதன் மூலம் அரசுக்கு எவ்வளவு வருவாய் ஆண்டொன்றுக்கு கிடைக்கிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்தில் 103 மெகாவாட் திறனுள்ள காற்றாடிகள் மூலம் ஆண்டொன்றுக்கு 190 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

[2003 மே 10

(ஆ) இதன்மூலம் வருவாய் பெறுவது என்பது காற்று சக்தியின் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்திற்கு தற்பொழுது கொடுக்கப்படும் ஒரு யூனிட்டிற்கு ரூ.2.70 என்று கணக்கிடுகையில் இந்த மின் உற்பத்தியின் மதிப்பு ரூ.82.3 கோடியாகும்.

**101—**

**காற்றாலை அமைத்தல்**

**வினா எண் 7052—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு மேலும் மானியம், உடுமலை அருகே கேத்தனூர், பூளவாடி, பெட்ராத்தி போன்ற பகுதிகளில் காற்றாலைகள் அமைக்க அரசு ஊக்குவிக்குமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து விரிவான விளக்கம் அரசு அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) உடுமலை அருகே கேத்தனூர், பூளவாடி, பெட்ராத்தி போன்ற இடங்களில் மானியம் வழங்குவதன் மூலம் காற்றாலைகள் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசுக்குக் கிடையாது. எனினும் தனியார் துறை மூலம் காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

(ஆ) வினா எழவில்லை.

**102—**

**மின் மாற்றி**

**வினா எண் 7169—திரு. இரா. திருமாவளவன்,** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதி, கொரக்கை கிராமத்தில் ஒரே மின் மாற்றியில் அனைத்து மின் இணைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளதால் அடிக்கடி மின் தடை ஏற்பட்டு மக்கள் அவதியுறுவதை அரசு அறியுமா?

(ஆ) அக்குறையை நீக்க புதியதாக மின் மாற்றி ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். விரைவில் அமைக்கப்பட்டு மின்னூட்டம் அளிக்கப்படும்.

**103—**

**உதவித் தொகை**

**வினா எண் 7171—திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோலார் (சூரிய ஒளியில் மின்சாரம்) திட்டத்தின்கீழ் மின் உற்பத்தி செய்து பயன்படுத்தும் பயனாளிகளுக்கு உதவித் தொகை (சப்சிடி) கொடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை சதவிகிதம்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம், இலாபநோக்கம் இன்றி செயல்படும் நிறுவனங்களுக்கும்/மின் வாரியங்களுக்கும்/ஜில்லா பரிஷத்துக்கும் மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கும் ஒரு கிலோவாட் திறனுள்ள சூரிய ஒளிமின் நிலையம் அமைப்பதற்கு

மானியமாக ரூ.1.80 இலட்சம் வழங்கி வருகிறது. தனிப்பட்ட பயனாளிக்கும், லாப நோக்குடன் செயல்படும் நிறுவனங்களுக்கும் மானியம் கிடையாது.

(ஆ) ஒரு கிலோ வாட் திறனுள்ள சூரிய ஒளி மின் நிலையம், அமைப்பதற்கு ஏறக்குறைய ரூ.4.00 லட்சம் செலவாகிறது. இத்தொகையில் வழங்கப்படும் அரசாங்க மானியம் ஏறக்குறைய 45 விழுக்காடு ஆகும்.

**104—**

**மேட்டூர் அனல் மின் நிலையம்**

**வினா எண் 7543—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் ஐந்தாவது பிரிவு தொடங்கும் உத்தேசம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

**105—**

**தனியார் மைக்கா சுரங்கங்கள்**

**வினா எண் 9458—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, செவ்வாத்தூரில் இயங்கி வரும் தனியார் மைக்கா சுரங்கத்தை அரசு ஏற்று நடத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, செவ்வாத்தூரில் தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனம்தான் (TAMIN) வெர்மிகுலைட் என்ற மைக்கா கனிமத்தை வெட்டியெடுக்கிறது. தனியார் நிறுவனம் எதுவும் அங்கு மைக்கா வெட்டியெடுக்கவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**106—**

**பாட்லிங் யூனிட்**

**வினா எண் 9898—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் கூட்டுறவு எரிசாராய உற்பத்தி ஆலையில் பாட்லிங் (Bottling) யூனிட் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் கூட்டுறவு எரிசாராய உற்பத்தி ஆலையில் பாட்லிங் (Bottling) யூனிட் ஆரம்பிக்க உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

107—

## மின் இணைப்பு

**வினா எண் 12193—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியிலுள்ள அனைத்து துவக்கப் பள்ளிகளுக்கும் மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மின் இணைப்பு வேண்டி கல்வித் துறையிலிருந்து உரிய விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் மின் இணைப்புகள் வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

108—

## தொழிற்சாலை

**வினா எண் 15122—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறில் கனரகத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டபபிடாரம் தொகுதி, கயத்தாறில் கனரகத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

109—

## தொழில் துறையில் பின்தங்கிய தொகுதி

**வினா எண் 16168—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) அவிநாசி தொகுதி தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய தொகுதியாக அறிவிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) அவிநாசி தொகுதியை தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய தொகுதியாக அறிவிக்கும் பிரேரணை ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இட மில்லை.

110—

## மின் இணைப்பு

**வினா எண் 16484—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

திருத்தணி தொகுதி, திருப்பந்தியூர் கிராம இருளர் இன மக்கள் வசிக்கும் பகுதிக்கு மின்னிணைப்பு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

ஆம்.

**111—**

**மின் கம்பிகள்**

**வினா எண் 17205—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சியில் மின்கம்பிகள் பழுதாகிவிட்டதால், புதிய மின் கம்பம் நட்டு மின் கம்பிகளை மாற்றித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

**112—**

**மின் அலுவலகம்**

**வினா எண் 19066—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், களியக்காவிளையிலுள்ள மின் அலுவலகத்தை பிரித்து, புத்தன் சந்தை என்னுமிடத்தில் இன்னொரு அலுவலகம் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயற்படுத்தப்படுமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**113—**

**பணி நியமனம்**

**வினா எண் 20358—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியிலிருக்கும்பொழுது இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுவிட்டதா?

(ஆ) இல்லையெனில் பணி நியமனம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) பணி நியமனம் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 9794 நபர்களுக்கு பணி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**114—**

**கட்டட வசதி**

**வினா எண் 20412—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், மணல்மேல்குடியில் இளமின் பொறியாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

**115—**

**துணை மின் நிலையம்**

**வினா எண் 20646—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ஆய்க்குடி பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

**116—**

**மின் உற்பத்தி நிலையம்**

**வினா எண் 20721—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதியில் நாலாட்டின்புத்தூர், இளையரசனேந்தல் ஆகிய இடங்களில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அரசு சார்பில் நிறுவப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி தாலுகாவில் கயத்தாறில் உள்ள தெற்கு எலந்தன்குளம் மற்றும் அய்யனாரூத்து கிராமப்பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் அரசு சார்பிலும், தனியார் துறையிலும் கீழ்க்கண்ட அளவில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன.

| | | மொத்த காற்றாலை எண்ணிக்கை | காற்றாலைகளில் அளவுதிறன் (மெகாவாட்) |
|---|---|---|---|
| 1. | அரசு சார்பு (தமிழ்நாடு மின் வாரியத்தால் பராமரிக்கப்படும் காற்றாலைகள் | 59 | 10 |
| 2. | தனியார் துறையால் நிறுவப்பட்ட காற்றாலைகள் | 147 | 50 |

ஆகவே கோவில்பட்டி தொகுதியில் நாலாட்டின்புத்தூர், இளையரசனேந்தல் ஆகிய இடங்களில் அரசு சார்பில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**117—**

**கூடுதல் மின் வசதி**

**வினா எண் 21488—திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அம்பத்தூர் பூம்புகார் நகரில் அடிக்கடி மின் வெட்டும், குறைந்த மின் அழுத்தமும் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைக் களைய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**118—**

**நுழைவுச் சீட்டு**

**வினா எண் 14577—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சினிமா தியேட்டர்களில் நுழைவுச் சீட்டு வழங்காமல், வரி ஏய்ப்பு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

திரையரங்குகளில் நுழைவுச் சீட்டு வழங்காமல் வரி ஏய்ப்பு செய்பவர்கள் மீது தமிழ்நாடு கேளிக்கை வரிச்சட்டப் பிரிவு 14(1) (அ) மற்றும் 15-ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**119—**

**கணினிமயம்**

**வினா எண் 23786—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரித் துறையை கணினிமயமாக்க விரிவான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயல்படுத்த உத்தேசித்துள்ள திட்டத்தின் விவரங்கள் யாவை?



விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஏற்கெனவே சென்னை மற்றும் கோயம்புத்தூரில் 140 வரிவிதிப்பு வட்டங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. 11-வது நிதிக்குழுவின் சிறப்பு இடருதவி திட்டத்தின்கீழ் (Special Problems Grant) வணிக வரித் துறையை ரூ.10.51 கோடி மதிப்பீட்டில் முழுமையாக கணினிமயமாக்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது கோவை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வரிவிதிப்பு வட்டங்களைத் தவிர்த்து, துறையின் மேல்முறையீட்டு அலுவலகங்கள் மற்றும் செயலாக்கக் கோட்ட அலுவலகங்களை கணினிமயமாக்குவதற்கு இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளதால் ஒருங்கிணைந்த வணிக வரித் துறை கணினிமயமாக்கும் திட்டம் நிறைவடையும்போது கோவை மாவட்ட அனைத்து வணிக வரி அலுவலகங்களும் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுவிடும்.

**120—**

**கட்டட வசதி**

**வினா எண் 5015—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், பிள்ளைக்குளத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயற்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதியில் சேரன்மகாதேவி தொடக்க வேளாண்மை கூட்டுறவு

[2003 மே 10

வங்கியின்கீழ் செயல்படும் பிள்ளைக்குளம் நியாய விலைக் கடைக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டப்பட்டு 1-10-2002 முதல் புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது.

**121—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 5648—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, ஏரிப்பாளையம் கிராமத்தில் நியாய விலைக் கடையை பொதுவான இடத்திற்கு மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், சிறுவத்தூர் நியாய விலைக் கடையைச் சேர்ந்த ஏரிப்பாளையம் என்ற இடத்தில் 343 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை தனியார் கட்டடத்தில் வாடகை இல்லாமல் செயல்பட்டு வருகிறது. வாடகையின்றி கட்டடம் தர முன் வருகிறவர் கட்டடத்தில்தான் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கப்படுகிறது. வாடகையின்றி கட்டடம் தர முன்வந்தவரின் கட்டடம் ஏரிப்பாளையம் பகுதியிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்து விட்டது. ஆயினும் மிக அதிகமான குடும்ப அட்டைகள் இருக்குமிடத்தில் அல்லது அனைத்து பகுதியினருக்கும் மையமான இடத்தில் வாடகையின்றி கட்டடம் கிடைத்தால் மட்டுமே இப்பகுதிநேரக் கடையை மாற்றி அமைக்க இயலும்.



2003 மே 10]

**122—**

**நியாய விலைக் கிளைக் கடை**

**வினா எண் 5951—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, பண்டாரகுளம் கிராமத்திற்கு நியாய விலை கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு நியாய விலைக் கடைக்கு புதூர் என்ற இடத்தில் ஏற்கெனவே ஒரு பகுதி நேரக் கடை செயல்பட்டு வருகிறது. பண்டாரகுளம் பகுதியில் 130 குடும்ப அட்டைகள் மட்டுமே இருப்பதால் பகுதி நேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற வரையறை பொருந்தவில்லை. எனவே, பண்டாரகுளம் பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**123—**

**கூட்டுறவு அங்காடி அமைத்தல்**

**வினா எண் 6023—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆணைக்காடு பகுதியில் கூட்டுறவு அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், காளகம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் காளகம் அங்காடி செயல்பட்டு வருகிறது. இந்த அங்காடியில் 592 குடும்ப அட்டைகள் உள்ளன. காளகம் அங்காடியின் செயல்பாட்டில் உள்ள ஆணைக்காடு கிராமத்தில் 130 குடும்ப அட்டைகள் உள்ளன. பகுதி நேர நியாய விலை அங்காடி அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பகுதி நேர நியாய விலை அங்காடி அமைத்த பின்பு தாய்க்கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும். இவ்விரண்டு வரையறைகளும் பொருந்தாததால் ஆணைக்காடு பகுதியில் பகுதி நேர அங்காடி அமைக்க வாய்ப்பில்லை.

**124—**

**பகுதி நேர கூட்டுறவு அங்காடி**

**வினா எண் 6248—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பஞ்சநதிபுரம் கிராமத்தில் பகுதி நேர கூட்டுறவு அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆவணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டில் உள்ள அம்மையாண்டி நியாய விலைக் கடை பஞ்சநதிபுரத்தைச் சேர்ந்த 170 குடும்ப அட்டைகள் மற்றும் அம்மையாண்டி ஊரைச் சேர்ந்த 322 குடும்ப அட்டைகள் ஆக மொத்தம் 492 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது.



இத்தாய்க்கடையின்கீழ் 327 குடும்ப அட்டைகள் கொண்டுள்ள பகுதி நேரக் கடை ஏனாதிக்கரம்பையில் செயல்பட்டு வருகிறது. அம்மையாண்டி தாய் அங்காடிக்கும் பஞ்சநதிபுரத்துக்கும் இடைப்பட்ட தொலைவு 11/2 கி.மீ. இப்பகுதியில் 170 குடும்ப அட்டைகளே உள்ளன. தொலைவு, குடும்ப அட்டைகள் மற்றும் பகுதி நேரக் கடை திறந்தபின் தாய்க்கடையில் இருக்க வேண்டிய குடும்ப அட்டைகள் ஆகியனபற்றி அரசு வகுத்த வரையறைகள் பொருந்தாததால் பஞ்சநதிபுரத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**125—**

**நியாய விலைக் கடை அமைத்தல்**

**வினா எண் 6301—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சாத்தமாம்பட்டு ஊராட்சியில் நியாய விலைக் கடை அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில் சிலம்புநாதன் பேட்டை தொடக்க வேளாண்மை வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள புதுப்பாளையம் நியாய விலைக் கடையிலிருந்து 211 குடும்ப அட்டைகளைப் பிரித்து சாத்தமாம்பட்டு கிராமத்தில் பகுதி நேர அங்காடி துவக்கப்பட்டு 3-11-2001 முதல் செயல்பட்டு வருகிறது.

[2003 மே 10

**126—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 6400—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அன்னகாரன்குப்பம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை வரையறைகளின்படி 800 குடும்ப அட்டைகள் உள்ள நியாய விலைக் கடையை மட்டுமே பிரித்து பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க முடியும். எனவே, 418 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ள குடியிருப்பு நியாய விலைக் கடையைப் பிரித்து அன்னகாரன்குப்பம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**127—**

**கூட்டுறவு அங்காடி**

**வினா எண் [illegible]1—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மேலப்பாளையூர் ஊராட்சியில் கிராம கூட்டுறவு அங்காடி அமைத்துத்தர அரசிடம் திட்டம் உள்ளதா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மேலப்பாளையூர் ஊராட்சியில் ஏற்கெனவே ஒரு நியாய விலைக் கடை 238 குடும்ப அட்டைகளுடன் 3-11-1987 முதல் செயல்பட்டு வருகிறது.

**128—**

**புதிய நியாய விலைக் கடை**

**வினா எண் 9208—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மல்லியக்குட்டை ஊராட்சி, மல்லியக்குட்டை நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து அத்திராம்பட்டியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, சின்னசோரகை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தி வரும் மல்லியக்குட்டை நியாய விலைக் கடையில் 761 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் அத்திராம்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 206 குடும்ப அட்டைகள் உள்ளன. மல்லியக்குட்டை நியாய விலைக் கடைக்கும் அத்திராம்பட்டி பகுதிக்கும் இடையே 1 1/2 கி.மீ. தொலைவே உள்ளது. அரசாணையின்படி, தாய்க்கடைக்கும் பகுதி நேரக் கடைக்கும் குறைந்தது 2 கி.மீ. தொலைவு இருக்க வேண்டும் என்ற வரையறை பொருந்தாததால் அத்திராம்பட்டி பகுதிக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

129—

## நியாய விலைக் கிளைக் கடை

**வினா எண் 9230—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சிதம்பரபுரம் ஊராட்சி, ஆத்துக்குறிச்சி கிராமத்தில் நியாய விலைக் கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

ராதாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் சிதம்பரபுரம் நியாய விலைக் கடையில் 498 குடும்ப அட்டைகள் உள்ளன. இவற்றில் 175 குடும்ப அட்டைகள் ஆத்துக்குறிச்சி பகுதியில் உள்ளன. பகுதி நேரக் கடை அமைத்தபின் தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் பகுதி நேரக் கடையில் 200-க்குக் குறையாத குடும்ப அட்டைகளும் இருக்கவேண்டும் என்று அரசு வகுத்த வரையறைகள் பொருந்தாததால் ஆத்துக்குறிச்சி பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

130—

## புதிய கடை

**வினா எண் 9708—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பல்பாக்கி ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து கோமானியூரில் புதிய கடையை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கமலாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் பல்பாக்கி நியாய விலைக் கடையில் 565 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்கடையைச் சேர்ந்த கோமானியூர் பகுதியில் 103 குடும்ப அட்டைகள் உள்ளன. பகுதி நேரக் கடை அமைத்தபின் தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும், பகுதி நேரக் கடையில் 200-க்குக் குறையாத குடும்ப அட்டைகளும் இருக்கவேண்டுமென்ற வரையறைகள் பொருந்தாததால், கோமானியூர் பகுதிக்குப் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

131—

## பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 11176—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பேடறஅள்ளி ஊராட்சி, சோளப்பாடி கிராமத்திற்கு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஓ.சி. அள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கீழ் பேடறஅள்ளி நியாய விலைக் கடை 490 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இத்தாய்க்கடைக்கு ஏற்கெனவே ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை பூச்செட்டிஅள்ளி பகுதியில் 390 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. தற்போது பகுதி

[2003 மே 10

நேரக் கடை கோரும் சோளப்பாடி பகுதியில் 87 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. சோளப்பாடிக்கும் தாய்க்கடையான பேடறஅள்ளி நியாய விலைக் கடைக்கும் இடையே 3/4 கிலோ மீட்டர் தொலைவு மட்டுமே உள்ளது. தொலைவு மற்றும் குடும்ப அட்டைகள் தொடர்பான வரையறைகள் பொருந்தாததால் சோளப் பாடிக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**132—**

### பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 11206—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி, சிவாடி காட்டுவளவில் புதியதாக பகுதி நேர நியாய விலைக் கடை திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், இத்திட்டம் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சிவாடி காட்டுவளவு பகுதியில் 357 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்த தாய்க்கடையைச் சேர்ந்த ஊத்துப்பள்ளம் காட்டுவளவில் 190 குடும்ப அட்டைகள் உள்ளன. இப்பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின் தாய்க்கடையில் 167 குடும்ப அட்டைகளே மிஞ்சும். தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் பகுதி நேரக் கடையில் 200 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் இருக்க வேண்டுமென்ற வரையறைகள் நிறைவு பெறாததால் சிவாடி காட்டுவளவில் புதிய பகுதி நேரக் கடை திறக்க வாய்ப்பில்லை.



2003 மே 10]

**133—**

### பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 11334—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாட்ராம்பள்ளி தொகுதி, தோரணம்பதி ஊராட்சி, தாதக்குள்ளலூர் கிராமத்திற்கு கூடுதல் பகுதி நேர நியாய விலைக் கடை ஒன்று ஏற்படுத்தித்தர இவ்வரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாட்ராம்பள்ளி தொகுதி, தோரணம்பதி ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடையில் 645 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. நடைமுறையில் உள்ள வரையறைகளின்படி பகுதி நேரக் கடையுடன் குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்படவேண்டும். பகுதி நேரக் கடை திறந்தபின் தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருக்கவேண்டும். இவ்வரையறைகள் பொருந்தாததால் தாதக்குள்ளலூரில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**134—**

### கூட்டுறவு நிலவள வங்கி

**வினா எண் 13835—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டார தலைநகராக இருப்பதால் பெண்ணாகரத்தில் கூட்டுறவு நிலவள வங்கியின் கிளை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் கிளை ஒன்றை அமைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**135—**

**உறுப்பினர் சேர்க்கை**

**வினா எண் 16738—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிறுவனங்கள் சேர்க்கை பதிவேட்டில் ஒவ்வொரு உறுப்பினருடைய கையொப்பத்தையும் பெறுவதோடு ஒவ்வொரு ஆண்டும் உறுப்பினருடைய சரியான முகவரியையும் வயதையும் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று அலுவலர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

கூட்டுறவு நிறுவனங்கள் சேர்க்கை பதிவேட்டில் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் விதி 27(1)-ன்படி விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள படிவம் எண் 16-ல் உறுப்பினராய் சேர விரும்புபவரின் பெயர், தந்தை/கணவர் பெயர், சரியான வயது, முகவரி ஆகிய அனைத்து விவரங்களும் நுழைவுப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு அப்பதிவேட்டுப் புத்தகம் நிரந்தரமாகப் பேணப்பட்டு வருகிறது.



**136—**

**மலிவு விலை அரிசி**

**வினா எண் 17066—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம வாரச் சந்தையில் கூட்டுறவு அங்காடிகள் மூலம் மலிவு விலை அரிசி விற்பனையைத் துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எப்போது நடைமுறைக்குக் கொண்டுவரும்?

(இ) இத்திட்டம் துவக்கப்பட்டு நடைபெற்று வந்தால் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) இல்லை.

**137—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 17128—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குல மாணிக்கம் கிராமம், ஆண்டிப்பட்டியில் புதிதாக ஒரு நியாய விலைக் கடை துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், நடுவனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் கண்டர்குல மாணிக்கம் நியாய விலைக் கடை 802 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. ஆண்டிப்பட்டி பகுதியில் 120 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதி நேரக் கடையுடன் இணைக்கப்படவேண்டிய குடும்ப அட்டைகள் குறித்த வரையறை நிறைவு பெறாததால் ஆண்டிப்பட்டியில் புதியதாக ஒரு நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**138—**

### நியாய விலைக் கடை

**வினா எண் 17318—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அணைக்கரை ஊராட்சி, ரம்மதபுரம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அணைக்கரை ஊராட்சி, வடக்கு ரம்மதபுரத்தைச் சேர்ந்த 75 குடும்ப அட்டைதாரர்கள் அணைக்கரை கூட்டுறவு நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ளார்கள். தெற்கு ரம்மதபுரம் மற்றும் நடுவூர் ரம்மதபுரத்தைச் சேர்ந்த 111 குடும்ப அட்டைதாரர்கள் உறுமன்குளம் அமுதம் நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ளார்கள். அமுதம் நியாய விலைக் கடையில் உணவுப்பொருள் பெறுவோர் அணைக்கரை ரம்மதபுரத்தில் கடை அமைக்கப்பட்டால் அங்கு உணவுப்பொருள் பெற மறுப்பு தெரிவித்திருப்பதாலும் இவ்விரு பகுதியினரிடையே கருத்து வேறுபாடு உள்ளதாலும், அணைக்கரை ஊராட்சி, ரம்மதபுரத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.





**139—**

### புதிய கூட்டுறவுக் கடை

**வினா எண் 18257—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், இந்திரா நகரில் புதிய கூட்டுறவுக் கடை ஒன்றைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் விடையூர் கூட்டுறவு நியாய விலைக் கடை 611 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. தாய்க்கடையிலிருந்து 2 கிலோ மீட்டருக்கும் குறைவான தொலைவில் அமைந்துள்ள இந்திரா நகர் பகுதியைச் சேர்ந்த 71 குடும்ப அட்டைகள் விடையூர் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. பகுதி நேரக் கடையுடன் இணைக்கப்படவேண்டிய குடும்ப அட்டைகள் மற்றும் தாய்க்கடைக்கும் பகுதி நேரக் கடைக்கும் இடையே இருக்கவேண்டிய தொலைவு ஆகிய வரையறைகள் நிறைவு பெறாததால், இந்திரா நகர் பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**140—**

### பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 21498—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், முன்னாண்டார் கோயில் ஒன்றியம், பாப்புடையான்பட்டி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், பாப்புடையான்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கீழ் செயல்பட்டு வரும் மின்னாத்தூர் தாய் நியாய விலைக் கடையிலிருந்து 200 குடும்ப அட்டைகளைப் பிரித்து பாப்புடையான்பட்டியில் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க 20-5-2002 அன்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு கடை 11-7-2002 முதல் செயல்படுகிறது.

**141—**

**நவீன அரிசி ஆலை**

**வினா எண் 22152—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர், சேத்துப்பட்டு, பேரூராட்சிப் பகுதியில் நெடுங்குணம் கிராமத்தில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

பெரணமல்லூர், சேத்துப்பட்டு, பேரூராட்சிப் பகுதியில் நெடுங்குணம் கிராமத்தில் தற்சமயம் நவீன அரிசி ஆலை அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.



**142—**

**கூட்டுறவுக் கடை**

**வினா எண் 22510—திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சியில் உள்ள ஆஞ்சநேய நகரில் பகுதி நேர கிராம கூட்டுறவுக் கடை திறக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பள்ளிப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படும் தளவாய்பேட்டை நியாய விலைக் கடையில் 910 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஆஞ்சநேய நகர் பகுதியில் 296 குடும்ப அட்டைகள் உள்ளன. தாய்க் கடைக்கும் ஆஞ்சநேய நகர் பகுதிக்கும் இடையே 1.5 கி.மீ தொலைவுக்கும் குறைவாகவே உள்ளது. நடைமுறையிலுள்ள அரசாணையின்படி தொலைவு குறித்த வரையறை நிறைவு பெறாததால் ஆஞ்சநேய நகர் பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**143—**

**பகுதி நேரக் கடை**

**வினா எண் 22526—திரு. க.ரா. கந்தசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் தொகுதி, தாளவாடி நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து ஓசூரில் ஒரு புதிய பகுதி நேரக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், தாளவாடி நியாய விலைக் கடை சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் 1250 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. இந்த தாய்க்கடையிலிருந்து 367 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு கும்டாபுரத்தில் ஒரு பகுதி நேரக் கடையும், 248 குடும்ப அட்டைகளுடன் மகாராஜன்புரத்தில் ஒரு பகுதி நேரக் கடையும் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் தாய்க் கடையிலிருந்து 380 குடும்ப அட்டைகளைப் பிரித்து ஒசூரில் மூன்றாவது பகுதி நேரக் கடை அமைக்கப்பட்டால் தாய்க்கடையில் 255 குடும்ப அட்டைகள் மட்டுமே மிஞ்சும். மேலும் மூன்றாவது பகுதி நேரக் கடை அமைக்க அரசாணையில் வழிவகையில்லை. ஒரே விற்பனையாளர் நான்கு இடங்களில் கடைகளைக் கண்காணிக்க இயலாது. மேலும் பகுதி நேரக் கடை திறந்தபின் தாய்க் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற வரையறை நிறைவு பெறவில்லை. எனவே ஒசூரில் மூன்றாவது பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

**144—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 22570—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, பேர்பெரியான்குப்பம் கிராமத்தில் நியாய விலைக் கடை திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், பண்ருட்டி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின்*



*கட்டுப்பாட்டில் பேர்பெரியான்குப்பம் கிராமத்தில் 540 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஒரு நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவந்த பேர்பெரியான்குப்பம் நியாய விலைக் கடை 3-6-2002 முதல் அரசு கட்டடத்திற்கு மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.*

**145—**

**பகுதி நேர நியாய விலைக் கடை**

**வினா எண் 23581—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், கல்லூத்து பஞ்சாயத்து கலியாணிப்பட்டிக்கு தனியாக பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத்தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*உசிலம்பட்டி தொகுதி, கல்லூத்து ஊராட்சியிலுள்ள தாய் நியாய விலைக் கடையில் 762 குடும்ப அட்டைகள் உள்ளன. 2 கிலோ மீட்டர் தொலைவில் இக்கடையைச் சேர்ந்த கலியாணிப்பட்டி பகுதியில் 120 குடும்ப அட்டைகள் உள்ளன. பகுதி நேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்ற வரையறை நிறைவு பெறாததாலும் இலவச கட்டட வசதி, அத்தியாவசிய பொருட்களை ஏற்றிச் செல்ல வண்டி வாடகை, ஏற்றுக்கூலி, இறக்குக்கூலி ஆகியவற்றை அப்பகுதி மக்கள் ஏற்றுக் கொள்ள இசைவளிக்காததாலும் கலியாணிப்பட்டி பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

**146—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 25680—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சிறுகுன்றம் எஸ்டேட் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் சிறுகுன்றம் தோட்டப் பகுதி, கீழ்ப் பகுதி மற்றும் மேல் பகுதி என்று இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. சிறுகுன்றம் கீழ்ப் பகுதி தோட்டப் பகுதியில் கடந்த இருபது வருடங்களாக நிரந்தரமான நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்தக் கடையுடன் 567 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்நியாய விலைக் கடை கோயம்புத்தூர் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடியின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

சிறுகுன்றம் மேல் பகுதி தோட்டப் பகுதியில் 250 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. சிறுகுன்றம் மேல் பகுதி மக்கள் 2 கி.மீ. தூரம் நடந்து வந்து மேற்கூறிய கீழ்ப் பகுதி நியாய விலைக் கடையில் உணவுப் பொருள் பெற்று வந்தனர். கடந்த 3 மாதங்களாக பொதுமக்கள் நலன் கருதி ஒவ்வொரு வாரமும் சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களுக்கு மட்டும் சிந்தாமணி நிர்வாகத்தினர் தங்களது லாரி மூலம் மேல் பகுதிக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் சென்று விநியோகத்தை சீராக செய்து வருகின்றனர்.

**147—**

## கட்டட வசதி

**வினா எண் 262—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி நகராட்சி, கோபாலசமுத்திரம் நடுநிலைப் பள்ளிக்கு கட்டட வசதி செய்திட உடன் நிதி ஒதுக்கீடு செய்திட அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மன்னார்குடி நகராட்சி, கோபால சமுத்திரம் நடுநிலைப் பள்ளியில் 2000-2001-ல் மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.3.80 இலட்சத்திற்கும், 2001-2002-ல் நாகப்பட்டினம் நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.4.50 இலட்சத்திற்கும் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**148—**

## சாலை வசதி

**வினா எண் 398அ—திரு. டி. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு வட்டம், களியல் கிராமத்திற்குச் செல்ல சாலை வசதி ஏற்படுத்திக் கொடுக்க இயலுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், கடையல் பேரூராட்சி, களியல் கிராம கருப்பு கால்விளை சாலை 2001-2002 ஆம் ஆண்டு 11-வது நிதிக் குழு திட்டத்தின் கீழ் ரூபாய் 70,000/- மதிப்பீட்டில் ஜல்லி வைத்து கருந்தளம் அமைக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

**149—**

## இலவச வீடு

**வினா எண் 4103—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1991-1996 ஆம் ஆண்டில் பேரூராட்சி பகுதிகளில் ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டதை மீண்டும் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1991-1996 ஆம் ஆண்டில் பேரூராட்சிப் பகுதிகளில் ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டதை மீண்டும் கொண்டுவர திட்டம் ஏதும் இல்லை.

**150—**

**குடிநீர்த் தொட்டி**

**வினா எண் 4273—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி பேரூராட்சியில் 9 மற்றும் 10-வது வார்டு சத்தியா நகர், கக்கன் தெரு பகுதியில் குடிநீர்த் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**151—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 5355—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில் ஊரணி தாங்கல் ஊராட்சியிலுள்ள குடிநீர் பற்றாக்குறையைப் போக்க ஆழ்துளைக் கிணறு அல்லது திறந்த வெளிக் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி ஒன்றியம், ஊரணி தாங்கல் ஊராட்சியைச் சார்ந்த ஊரணி தாங்கல் குடியிருப்பிற்கு தற்சமயம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**152—**

**குடிநீர்**

**வினா எண் 5519—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை அருகே அமராவதி நகர், பெரும்பள்ளம் இந்திரா நகர், சாயப்பட்டறை, காண்ட்ராக்ட் காலனி ஆகிய பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆண்டியக்கவுண்டனூர் ஊராட்சியில் உள்ள அமராவதி நகர் மற்றும் இந்திராபுரம் ஆகிய 2 குடியிருப்புகளுக்கும் முறையே மானுப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் மின்னிறைப்பான் திட்டம் மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்கான குடிநீர் போதுமான அளவு வழங்கப்படுகிறது.

சாயப்பட்டறை காண்டிராக்டர் காலனி, பெரும்பள்ளம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். பெரும்பள்ளம் குடியிருப்புக்கு குடிநீர்த் திட்டம் இராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்கீழ் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை பொதுமக்கள் பங்களிப்புத் தொகை செலுத்தப்படவில்லை. பங்களிப்புத் தொகை பெறப்பட்டவுடன் பணிகள் துவங்கப்படும்.

[2003 மே 10

153—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 5532—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, தூக்குவாடி கிராமத்தில் பள்ளிக்கூடம் அருகில் ஆழ்துளைக் கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, அனக்காவூர் ஒன்றியத்தைச் சார்ந்த தூக்குவாடி கிராமக் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் தற்போது வழங்கப்படுகிறது. எனவே, தூக்குவாடி கிராமத்தில் பள்ளிக்கூடம் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

154—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 5540—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, கீழ் சீசமங்கலம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, கீழ் சீசமங்கலம் கிராம குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை



2003 மே 10]

நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் தற்போது வழங்கப்படுகிறது. எனவே, கீழ் சீசமங்கலம் கிராமத்திற்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

155—

## நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 5543—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, தென் கல்பாக்கம் மதுரா, பின்வத்தூர் கிராமத்திற்கு ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பின்வத்தூர் கிராமத்தில் தற்போது செயல்பாட்டில் உள்ள குடிநீர்த் திட்டங்களே போதுமானதாக உள்ளதால் புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

156—

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 5574—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி, மாரியம்மன் கோயில் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி, மாரியம்மன் கோவில் தெரு, ஊமத்த நாடு குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பில் பொதுக் குழாய்களும், வீட்டு இணைப்புகளும் அதிக அளவில் கொடுக்கப்பட்டு உள்ளதால் இப்பகுதியில் குடிநீர் விநியோகத்தில் சில குறைபாடுகள் உள்ளன. எனினும் தற்போது அத்தியாவசியத் தேவைக்கு ஏற்ற அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. வரும் நிதியாண்டில் தகுதி மற்றும் தேவை அடிப்படையில் நிதி ஆதாரத்திற்கேற்ப புதிய குடிநீர்த் திட்டம் மேற்கொள்வது பரிசீலிக்கப்படும்.

157—

**ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள்**

**வினா எண் 6938—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னையில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், நிதி ஒதுக்கீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* சென்னையில் ஏற்பட்ட குடிநீர்ப் பிரச்சினை காரணமாக முதல் கட்டமாக ரூபாய் 2.6 கோடி மதிப்பீட்டில் 796 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து இந்திய மார்க் 2 பம்புகள் பொருத்தப்பட்டும், மற்றும் ரூபாய் 76 லட்சம் செலவில் குடிசை மாற்று வாரிய



குடியிருப்புகளில் 100 ஆழ்துளை கிணறுகள் அமைத்து HDPE தொட்டிகள் நிறுவி, மின் இயங்கி பம்புகள் பொருத்தப்பட்டு குடிநீர் அல்லாத இதர உபயோகத்திற்காக வழங்கப்படுகிறது.

158—

**குடிநீர் வழங்கல்**

**வினா எண் 7080—திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் மற்றும் சத்திரப்பட்டி, சமுசிகாபுரம் பகுதிகளில் குடிநீர் வழங்க புதிய திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ராஜபாளையம் நகராட்சிக்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடுக்கு நிர்வாக ஒப்புதல் விரைவில் பெறப்பட உள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் பரிசீலிக்கப்படும். சத்திரப்பட்டி மற்றும் சமுசிகாபுரம் குடியிருப்புகளுக்கு தற்பொழுது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் புதிய குடிநீர்த் திட்டம் பற்றிய செயற்குறிப்பு பரிசிலனையில் இல்லை.

159—

**பாதாள சாக்கடை**

**வினா எண் 7344—திரு. பீ.ஆ. வைதியலிங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பம்மல், அனகாபுத்தூர், சிட்லபாக்கம், செம்பாக்கம் மற்றும் மாடம்பாக்கம் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பம்மல், அனகாபுத்தூர், சிட்லபாக்கம், செம்பாக்கம் மற்றும் மாடம்பாக்கம், பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வரும் திட்டம் எதுவுமில்லை.

**160—**

**தெருவிளக்கு வசதி**

**வினா எண் 7382—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம் ஆவடி நகராட்சியில் கோயில் பதாகை கிராமம் பகுதியில் தெரு விளக்கு வசதி ஏற்படுத்தி தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஆவடி நகராட்சி கோயில் பதாகை கிராம பகுதியில் போதுமான தெருவிளக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**161—**

**இலவச வீடுகள்**

**வினா எண் 7536—திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றில் உள்ள வறுமைக் கோட்டிற்குள் உள்ளவர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**162—**

**குழாய் இணைப்பு**

**வினா எண் 7656—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விளாத்திக்குளம் தொகுதி முழுவதும் பயன்பெறும் வகையில் விளாத்திக்குளம்-புதூர்-சிவலப்பேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்-இரண்டாவது குழாய் இணைப்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* விளாத்திக்குளம் தொகுதி முழுவதும் பயன்பெறும் வகையில் விளாத்திக்குளம்-புதூர்-சிவலப்பேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்-இரண்டாவது குழாய் இணைப்பு என்று திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை.

*(ஆ)* எழவில்லை.

**163—**

**கட்டிட வசதி**

**வினா எண் 7751—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி பேரூராட்சி 15-வது வார்டு கோவிந்தராஜா பட்டணத்தில் நியாயவிலை கடை அமைக்க

கூட்டுறவுத் துறை அனுமதி வழங்கி உள்ளதால் கட்டிடம் ஒன்று அரசு கட்டி தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மண்டலம் கன்னங்குறிச்சி பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் நியாய விலைக் கடை கட்டப்படவில்லை.

**164—**

**பாதாள சாக்கடை**

**வினா எண் 7968—திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு நகருக்கு, பாதாள சாக்கடை அமைத்து தரும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**165—**

**தார் சாலை**

**வினா எண் 7983—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாதேவி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட மேலபுரம் தெரு மற்றும் திருவள்ளுவர் தெரு ரத்தினா திரையரங்கு தென்புறம்



ஆகிய இடங்களில் தார்ச் சாலை போடுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மாதேவி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட மேலபுரம் தெரு மற்றும் திருவள்ளுவர் தெரு ரத்தினா திரையரங்கு தென்புறம் ஆகிய இடங்களில் தார் சாலை போடுவதற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

**166—**

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 8414—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், சல்லக்குளம் கிராமத்தில், குடிதண்ணீர் உப்பு நீராகவும், மாசுபட்டும் உள்ளதால் பழனியாண்டவர் கோவில் நீர்த்தேக்கத் திட்டம் அல்லது பெரியார் கால்வாய் திட்டத்திலிருந்தாவது குடிநீர் விநியோகிக்க வழிவகை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சல்லக்குளம் கிராமம், வாடிப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட ஒரு பகுதியாகும். இங்கு விநியோகிக்கப்படும் குடிநீர் குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது. மற்றும் அப்பகுதி மக்களுக்கு தேவைக்கு போதுமான அளவுக்கு குடிநீர் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. வாடிப்பட்டி பேரூராட்சிக்கான மேம்பாட்டுத் திட்டம் ஒன்று நிறைவேற்ற ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளும்போது பழனி ஆண்டவர் கோவில் நீர்த்தேக்கத்

தொட்டி திட்டம் மற்றும் பெரியார் கால்வாய் திட்டம் ஆகியவையும் பரிசீலிக்கப்படும்.

**167—**

**பிரதான குழாய் அமைத்தல்**

**வினா எண் 8919—திரு. மா.ப. ரோகிணி (என்கிற) கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சி பகுதி எண் 19 மாச்சம்பாளையம் கோகுலபுரத்திலுள்ள சில வீடுகளுக்கு சிறுவாணி குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுத்தும் 4 ஆண்டுகளாக தண்ணீர் வராமலே தண்ணீர் வரி செலுத்துவதால் அந்தப் பகுதிக்கு தனியாக பிரதான குழாய் அமைக்க திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட பகுதி எண் 19 மாச்சம்பாளையம் கோகுலபுரத்திலுள்ள சில வீடுகளுக்கு 11-வது நிதிக் குழு திட்டத்தின்கீழ் ரூபாய் 2.55 இலட்சம் செலவில் குடிநீர் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு தற்பொழுது குடிநீர் சீராக விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது.

**168—**

**பேருந்து நிலையம்**

**வினா எண் 9158—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள கிள்ளையில் பேருந்து நிலையம் அமைத்திடும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**169—**

**நீர்த்தேக்க தொட்டி**

**வினா எண் 10154—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், மேல்நர்மா கிராம பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, அனக்காவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மேல்நர்மா கிராமத்திற்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது பற்றி தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**170—**

**ஆழ்துளை கிணறு**

**வினா எண் 10160—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, பெரியகுப்பம் கிராம மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்துளை கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, பெரியகுப்பம் கிராம குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தற்பொழுது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, பெரியகுப்பம் கிராம குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைப்பது குறித்த கேள்வி எழவில்லை.

171—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 10161—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, சாலவேடு கிராம மேட்டுப்பாளையம் பகுதி குடிநீர் தேவையை நிறைவேற்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, சாலவேடு ஊராட்சி, மேட்டுப்பாளையம் கிராம குடியிருப்பிற்கு, சாலவேடு காலனி மற்றும் சாணார்பாளையம் ஆகிய குடிநீர் திட்டங்களிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, சாலவேடு கிராம குடியிருப்பிற்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும் என்ற கருத்துருவுக்கு இடமில்லை.





172—

**கழிவுநீரை அகற்றுதல்**

**வினா எண் 10494—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் முக்கிய சாலைகளில் தேங்கியுள்ள கழிவுநீரை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கழிவுநீர் குழாய்களில் எப்பொழுதாவது அடைப்பு ஏற்படும்பொழுது கழிவுநீர் சாலைகளில் வழிந்தோட வாய்ப்பு உள்ளது. அவ்வாறு வழிந்தோடாமல் இருக்க, கழிவுநீர் குழாய்களில் தடை ஏற்பட்டுள்ளது எனத் தெரிந்தவுடன் அந்தத் தடைகளை நீக்கி சுத்தம் செய்ய அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

173—

**குடிநீர்த் தொட்டி**

**வினா எண் 10511—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், இராமன் கோயில் கிராமத்தில் ஆழ்குழாய் பணி பாதியில் நிறுத்தப்பட்டு விட்டது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் தொட்டி எப்போது முழுமையாக அமைத்து குடிநீர் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம்,

கடம்பத்தூர் ஒன்றியம், இராமன் கோயில் கிராமத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இக்குடிநீர் திட்டம் பராமரிப்பிற்காக 1/2002 முதல் ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**174—**

**மேல்நிலைத் தொட்டி**

**வினா எண் 10515—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், சிற்றம்பாக்கம் ஊராட்சியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்க கோரியுள்ளது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**175—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 13201–திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, வெள்ளக்கோவில் ஒன்றியம், புதுப்பை ஊராட்சி, கஸ்தூரிபாளையம் புதுப்பை, சங்கமேடு போன்ற கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் ஒன்றியம், புதுப்பை ஊராட்சியிலுள்ள கஸ்தூரிபாளையம் புதுப்பை, சங்கமேடு ஆகிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்க புதுப்பை குடிநீர் திட்டம் மே 2002-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**176—**

**வாக்காளர் வசதி**

**வினா எண் 15711—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, நார்த்தவாடா ஊராட்சி, அருந்ததியர் காலனியை அதிலிருந்து பிரித்து அம்மக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக ஜாகீர்மங்கலம் ஊராட்சியில் சேர்ப்பதற்கு அரசு ஆவன புரியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருத்தணி தொகுதி, நார்த்தவாடா ஊராட்சி, அருந்ததியர் காலனியை அதிலிருந்து பிரித்து அம்மக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக ஜாகீர்மங்கலம் ஊராட்சியில் சேர்ப்பது குறித்து செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**177—**

**மின்தகன எரிமேடை**

**வினா எண் 16381—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் மின்தகன எரிமேடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சியில் மின்தகன எரிமேடை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**178—**

**பாதாள சாக்கடை**

**வினா எண் 19188—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் பாதாள சாக்கடை திட்டம் கொண்டு வரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகராட்சியின் நிதிநிலை சரியில்லாததால், பாதாள சாக்கடைத் திட்டத்தை தற்போது செயல்படுத்த நகராட்சியால் இயலவில்லை.

**179—**

**குடிநீர்க் குழாய்**

**வினா எண் 19359—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



நகராட்சிகளில் பொது இடங்களில் குடிநீர்க் குழாய் அமைக்க சென்னையில் உள்ள இயக்குநர் அலுவலகத்தில் அனுமதி பெறுவதற்கு பதிலாக அந்தந்த நகராட்சியிலேயே அனுமதி பெற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அந்தந்த நகர்மன்றமே அனுமதி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

**180—**

**பேருந்து நிலையம்**

**வினா எண் 19859—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம் கீழ்ப்பெண்ணாத்தூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பெண்ணாத்தூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2003 மே 10

**181—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 20244—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் குடிநீர் பற்றாக்குறை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) புதிய குடிநீர்த் திட்டம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

**182—**

**திண்காரை சாலை**

**வினா எண் 20627—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தின் உள்புற தளத்தை திண்காரை (சிமென்ட்) தளமாக மாற்றி அதனை நவீனப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் உட்புற சிமென்ட் தளம் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.



2003 மே 10]

**183—**

**வீட்டு வரி**

**வினா எண் 20789—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மோட்டார் வாகனங்களுக்கு ஆயுட்கால வரி வசூலிப்பதைப் போல தமிழ்நாட்டிலும் புதிதாக கட்டப்படும் வீடுகளுக்கு (One time tax) வசூலிக்கும் முறை கொண்டுவரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வாகனங்களுக்கு ஆயுட்கால வரி விதிப்பதைப்போல், புதிதாக கட்டப்படும் வீடுகளுக்கு ஆயுட்கால வரி (one time tax) வசூலிக்கும் முறை கொண்டுவர இயலாது.

**184—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 21922—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாலஜங்கமனஅள்ளி ஊராட்சி, தேவர் ஊத்துப்பள்ளம் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆமெனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[2003 மே 10

185—

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 22044—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏலகிரி ஊராட்சி, சவுருக்கொட்டாயில் (போலனஅள்ளி) சிறிய குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏலகிரி ஊராட்சி, சவுருக்கொட்டாயில் (போலனஅள்ளி) குடியிருப்புக்கு ஒரு கையிறைப்பான் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே சிறிய குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது தற்போது பரிசீலனையில் இல்லை.

186—

### பொறியாளர்கள் இடமாற்றம்

**வினா எண் 22537—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநகராட்சியில் பணிபுரியும் பொறியாளர்களை இதர மாநகராட்சிகளுக்கும் மாறுதல் செய்ய அரசு வகை செய்யுமா?



2003 மே 10]

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போது நடைமுறையில் உள்ள 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி பணி விதி 38-ன்படி, மாநகராட்சிப் பொறியாளர்களை ஒரு மாநகராட்சியில் இருந்து வேறொரு மாநகராட்சிக்கு மாறுதல் செய்ய இயலாது.

187—

### தனி ஊராட்சி

**வினா எண் 22706—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, மாடத்தட்டுவிளையை தனி ஊராட்சியாக உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மிக விரைவில் அமைக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, மாடத்தட்டுவிளையை தனி ஊராட்சியாக உருவாக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

188—

### இயந்திரம்

**வினா எண் 22980—திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், குப்பை கூளங்களை அப்புறப்படுத்தவும்,

மரப்பேட்டை பள்ளம் ஓடையில் உள்ள கழிவு மண்ணை அவ்வப்போது தூர்வாரவும் ஒரு ஜே.சி.பி. இயந்திரம் வாங்க நகராட்சிக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2002-2003 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**189—**

### பேருந்து நிலையம்

**வினா எண் 23152—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் பேரூராட்சிக்கு பேருந்து நிலையம் அமைத்துத் தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரணமல்லூர் பேரூராட்சிக்கு பேருந்து நிலையம் அமைப்பதாக இல்லை.

**190—**

### குடிநீர் வசதி

**வினா எண் 28050—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி, மேல்காடு கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**191—**

### நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 28056—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, வட்டுவன அள்ளி ஊராட்சி மருக்காரம்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**192—**

### நகராட்சியாக உயர்த்துதல்

**வினா எண் 27376—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை மற்றும் கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிகளையும் இணைத்து பெருந்துறையை நகராட்சியாக உயர்த்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

[2003 மே 10

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத் தொகுதி பிரிவினைகள் பணி தற்போது நடைபெறுவதால் உள்ளாட்சி அமைப்புகளில் எல்லைகளை மாற்றியமைக்க தடை உள்ளது. எனவே ஈரோடு மாவட்டம், பெருந்துறை மற்றும் கருமாண்டி செல்லிபாளையம் ஆகிய இரு பேரூராட்சிகளை இணைத்து நகராட்சியாக தரம் உயர்த்த இயலாது.

**193—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 27814—திரு. ஐ. கணேசன்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் ஊராட்சியில் குடிநீர் குறை தீர்க்க கோயில்பாளையம் காட்டுக்காடு, கிழக்கு காடு, ஆடையூர் ஏரிக்காடு, தாழ்பள்ளம், ஆதிதிராவிடர் தெரு ஆகிய பகுதிகளில் மேல்நிலைத் தொட்டி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆமெனில், அது பற்றிய விவரங்களை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் ஊராட்சிக்கு உட்பட்ட கோயில்பாளையம் காட்டுக்காடு, கிழக்கு காடு, ஆடையூர் ஏரிக்காடு, தாழ்பள்ளம் ஆதிதிராவிடர் தெரு ஆகிய பகுதிகள் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வழியோரக் குடியிருப்புகளாக பயன் பெறுகின்றன. இக்குடியிருப்புகளுக்கு கோயில்பாளையம் மற்றும் தாழ்ப்பள்ளம் ஆகிய குடியிருப்புகளில் அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டிகளின் மூலம் தேவைக்குப் போதுமான அளவு காவேரி குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே,



2003 மே 10]

இப்பகுதிகளுக்கு புதிய மேல்நிலைத் தொட்டி அமைக்கக் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**194—**

**சாலை வசதி**

**வினா எண் 28459—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குரோம்பேட்டை இரயில் நிலையத்தையும் (எம்.ஐ.டி) சிட்லபாக்கம் நெடுஞ்சாலையும் இணைக்கும் இரயில்வே பார்டர் சாலை சீர் கெட்டிருப்பதை அரசு அறியுமா? ஆம் எனில், என்ன நடவடிக்கை?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இந்தச் சாலை ரயில்வேக்கு சொந்தமானதால் மாநில அரசால் சீர் செய்ய இயலாது.

**195—**

**ஊராட்சியைப் பிரித்தல்**

**வினா எண் 30032—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியத்திலுள்ள கோட்டைப்பட்டினம் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியத்திலுள்ள கோட்டைப்பட்டினம் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 மே 10

**196—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 10382—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், 18. புதுக்குடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**197—**

**பயிற்சி**

**வினா எண் 15182—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதியில் ஆண், பெண் இருபாலருக்கும் கால்நடை பராமரிப்பு முறை பயிற்சி கொடுத்து பொருளாதாரம் பெருக்கப்படும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில் நவம்பர், 2002 ஆம் மாதம் முதல் பிப்ரவரி, 2003 ஆம் மாதம் முடியவுள்ள காலத்தில் அறிமுக மக்கள் தொடர்பு முகாம்கள் 55



2003 மே 10]

எண்ணிக்கை நடத்தவும், மேலும் 55 எண்ணிக்கை தொடர்புப் பணியாளர் தம்பதிகளுக்கு ஏப்ரல், 2003 ஆம் மாதத்தில் பயிற்சி அளிக்கவும் உள்ளது.

**198—**

**தொழிற்சாலையை மேம்படுத்துதல்**

**வினா எண் 5260—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பகுதிகளில் தேங்காய் மட்டையிலிருந்து நார் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பல்வேறு காரணங்களால் நலிவடையும் நிலையில் உள்ளன என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்நலிவு நீங்கிட அரசு எடுக்கும் நடவடிக்கை யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டை பகுதிகளில் தேங்காய் நார் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நலிவுறும் நிலையில் இல்லை.

(ஆ) மேற்கண்ட பதிலினடிப்படையில் இவ்வினாவிற்கு இடமில்லை.

**199—**

**தொழிற்பேட்டை**

**வினா எண் 18649—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2003 மே 10

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

**200—**

**பறவைகள் சரணாலயம்**

**வினா எண் 9778—திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, கூந்தங்குளத்தில் ஒரு பறவைகள் சரணாலயம் நவீன முறையில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அத்திட்டத்தை இவ்வாண்டிலாவது, நிறைவேற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் உள்ள கூந்தங்குளம் பறவைகள் சரணாலயம் வன உயிரின (பாதுகாப்பு)ச் சட்டப் பிரிவு 18(1)-ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்டது. 2000-2001-ல் ரூ.5.06 இலட்சத்தில் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.6.38 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.



2003 மே 10]

## பட்டியல் 34

**1—**

**தேக்கு மரக் கன்று**

**வினா எண் 14522—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதிலும் உள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் தேக்கு மரக் கன்று வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

விவசாயிகளுக்கு மானிய விலையில் தேக்கு மரக் கன்று வழங்கும் திட்டம் தற்போது இல்லை.

**2—**

**கைத்துப்பாக்கி**

**வினா எண் 16301—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதியிலுள்ள அடர்ந்த காட்டில் கொடிய வன விலங்குகள் உள்ளதால், வனத் துறை அதிகாரிகளுக்குக் கைத்துப்பாக்கி வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள அடர்ந்த காட்டில் கொடிய வன விலங்குகளிடமிருந்து வனத் துறை அதிகாரிகளைப் பாதுகாக்கவும் மற்றும் சமூக விரோதிகளிடமிருந்து வனப் பகுதிகளைப் பாதுகாக்கவும் தேவையான படைக்கலன்கள் ஏற்கெனவே வன அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதால் இனியும் கைத்துப்பாக்கிகள் வழங்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

3—

### தங்கும் விடுதி

**வினா எண் 16303—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியிலுள்ள டாப் சிலிப் பகுதியில் மக்கள் தங்குவதற்கு தங்கும் விடுதி கட்ட தனியாருக்கு அனுமதி வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

டாப் சிலிப் பகுதி இந்திரா காந்தி வன உயிரின சரணாலயப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதால் தங்கும் விடுதி கட்ட தனியாருக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

4—

### நிலத்தடி நீர் பாதுகாத்தல்

**வினா எண் 16360—திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், மைக்கேல் நாயக்கன்பட்டி கிராமம், அன்னம் கெமிக்கல்ஸ் தொழிற்சாலை கழிவுநீரால் நிலத்தடி நீர் மாசு அடைவதால், அத்தொழிற்சாலை வேறு இடத்திற்கு மாற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், மைக்கேல் நாயக்கன்பட்டி கிராமத்திலுள்ள திருவாளர்கள் அன்னம் கெமிக்கல்ஸ் தொழிற்சாலை தனது உற்பத்தி முறையில் கழிவுநீர் வெளியேறாவண்ணம் மாற்றி அமைத்துள்ளதால், தற்போது கழிவுநீர் வெளியேற்றமில்லை. ஆகையால் நிலத்தடி நீர் மாசுபட வாய்ப்பில்லை. எனவே, இத்தொழிற்சாலையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

5—

### பொது மக்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 16664—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, மேல் பகுதியிலுள்ள பொதுமக்கள், வன விலங்குகளால் குறிப்பாக யானைகள், சிறுத்தைப் புலிகளால் சிலர் மிகவும் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தடுக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) யானைகள், சிறுத்தைகள் மற்றும் புலிகள் குடியிருப்புப் பகுதிகளில் ஊடுருவி வரும்போது அவற்றைக் கையகப்படுத்திட மயக்க

[2003 மே 10

மருந்துகளையும், கூண்டுகளையும் வனத் துறையினர் மூலம் மிகச் சாதுர்யமாகவும், துரிதமாகவும் பயன்படுத்தி அவற்றை அவ்வப்போது மனித நடமாட்டம் இல்லா வனத்திற்குள் விடுவித்து வரப்படுகிறது. மேலும், தேயிலைத் தோட்டப் பணியாளர்கள் தங்களது குடியிருப்பினை ஒட்டிய பகுதிகளில் அவர்களது தேவைக்காக வாழை, கரும்பு போன்ற பயிர்களை வீட்டுத் தோட்டமாகப் பயிரிட்டு வளர்த்து வருவதால், அவற்றால் கவரப்படும் யானைகள் குடியிருப்புப் பகுதிகளை நாடிச் செல்வதால் விபத்துகள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதால் இது போன்ற வீட்டுத் தோட்டங்களைப் பராமரிக்கக் கூடாது எனவும் தனியார் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். இவ்வாறாக வன உயிரினங்களின் பாதிப்பிலிருந்து மக்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

6—

### காடு வளர்ப்பு

**வினா எண் 18964—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம் ஒன்றியம், சிவாடி காட்டு வளவில் காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) உள்ளது.

(ஆ) சிவாடி ஊராட்சிக்குட்பட்ட காளியப்பன் கொட்டாயினை தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டக் கிராமமாக நடப்பாண்டில் (2002-2003) தேர்வு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.



2003 மே 10]

7—

### சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**வினா எண் 19516—திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரமடை ஒன்றியம், மருதூர் கிராமத்திலுள்ள முறையாக அனுமதி பெறாமல் கட்டப்பட்ட சிந்தைட் கெமிக்கல் இண்டஸ்டிரியல் லிமிடெட் கம்பெனியால் சுற்றுச்சூழல் மாசுபட்டு வருவதைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஆம். பொதுமக்களின் புகாரின் அடிப்படையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து மின் இணைப்பு துண்டிக்க ஆணையிட்டது. இதனை எதிர்த்து ஆலை நிர்வாகம் தொடர்ந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் வாரிய ஆணைக்கு எதிராகத் தடையாணை பிறப்பித்தும், நிறுவனம் தொடர்ந்து இயங்க அனுமதியும் வழங்கியுள்ளது. நீதிமன்றம் ஆணையிட்டுள்ளபடி வாரியம் தனது அறிக்கையை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது. வழக்கில் இறுதித் தீர்ப்பு ஏதும் வழங்கப்படவில்லை. வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது.

8—

### மரங்கள் நடுதல்

**வினா எண் 25363—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை நதி உருவாகி வரும் வருஷநாடு பகுதியில் மழை ஆதாரத்தை வலுப்படுத்த மரங்கள் நடும் திட்டம், அதனைப் பராமரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (2002-2003) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 400 எக்டேர் பரப்பளவில் மரக் கன்றுகள் நடவு செய்யவும், அடுத்த நிதியாண்டில் (2003-2004) இதே திட்டத்தின் கீழ் 400 எக்டேர் பரப்பளவில் மரக் கன்றுகள் நடவு செய்து பராமரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

9—

### வீடுகள் கட்டுதல்

**வினா எண் 6657—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2-வது தொகுதி, மிட்டா அய்யம்பெருமாள்பட்டி மற்றும் கன்னங்குறிச்சி கிராமத்தில் 1981-ல் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதில் எத்தனை ஏக்கரில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன? வீட்டின் எண்ணிக்கை எவ்வளவு? எத்தனை வீடுகள் விற்பனையாகி உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

அய்யம்பெருமாள்பட்டி மற்றும் கன்னங்குறிச்சி கிராமத்தில் 1981-ல் 69.91 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அதில் 26 ஏக்கரில் 348 தனி வீடுகளும் மற்றும் அரசு வாடகைக் குடியிருப்புகளும் கட்டப்பட்டன. அவற்றில் அய்யம்பெருமாள்பட்டியில் 44 வீடுகள் விற்பனைக்கு உள்ளன. கன்னங்குறிச்சியில் அனைத்து வீடுகளும் விற்கப்பட்டுவிட்டன.



10—

### வீட்டு வசதி

**வினா எண் 6765—திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் எம்.ஐ.ஜி. சி மற்றும் டி பிரிவு வீடுகள் கட்டி விலைக்குக் கொடுக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

11—

### அடுக்குமாடி வீடு

**வினா எண் 9100—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியம் மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடம் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இவ்வினா எழவில்லை.

**12—**

**வீடுகள் விற்பனை**

**வினா எண் 14974—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு விற்பனையாகாமல் உள்ள வீடுகளை விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* விற்கப்படாமல் உள்ள வீடுகள்/அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் மனைகளை விற்பதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

**13—**

**எடப்பாடியில் வீட்டு வசதி வாரிய வீடுகள்**

**வினா எண் 16593—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம் எடப்பாடியில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?



*(ஆ)* இன்னும் மக்களுக்கு விநியோகம் செய்யப்படாமல் உள்ள வீடுகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* 303.

*(ஆ)* 240.

**14—**

**பெரிய வீடுகள்**

**வினா எண் 16440—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை அம்மன் குளத்தில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி வீடுகள் சிறியதாக இருப்பதால், வருங்காலத்தில் கட்டப்படும் வீடுகளை சற்றுப் பெரியதாகக் கட்டித்தர அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**15—**

**மின் இணைப்பு**

**வினா எண் 18435—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புகளிலுள்ள ஏழைகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் மூலம் மின்னிணைப்பு தரப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல்?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**16—**

**கடன் உதவி**

**வினா எண் 20802—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் வீடு கட்டும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகையை உயர்த்தித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இதுதொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**17—**

**கடன் உதவி**

**வினா எண் 28503—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாட்டில் தற்பொழுது கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலம் வழங்கப்படும் கடன் 8 கி.மீ. வரை கடன் வழங்கலாம் என்று உள்ளதை மேலும் 20 கி.மீ. வரை வழங்கலாம் என அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**18—**

**புதிய திட்டங்கள்**

**வினா எண் 10297—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆவின் நிறுவனத்தைத் தனியாருடன் போட்டிபோடும் அளவுக்குச் செயல்திறனையும், உற்பத்தியையும் அதிகப்படுத்த அரசு புதிய திட்டங்கள் கொண்டுவர ஆய்வு செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

ஆவின் நிறுவனத்தைத் தனியாருடன் போட்டிபோடும் அளவிற்கு அதன் செயல்திறனையும் உற்பத்தியையும் அதிகப்படுத்த புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**19—**

**சிறிய பால் பண்ணைகள்**

**வினா எண் 15136—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதியில் சிறிய பால் பண்ணைகள் அமைக்க கடனுதவி வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**20—**

**ஆவின் பால் விற்பனை நிலையம்**

**வினா எண் 15141—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறில் பால் குளிரூட்டும் நிலையமும் கழுகுமலையில் ஆவின் பால் விற்பனை நிலையமும் அமைக்க அரசு பரிசிலனை செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

வாய்ப்பில்லை.

**21—**

**கட்டுப்பாடு விதித்தல்**

**வினா எண் 1842—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வன்முறையும், கவர்ச்சியும் சமீபகாலத்தில் தொலைக்காட்சி, சினிமா போன்றவற்றில் அதிகமாகக் காட்டப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றின்மீது கட்டுப்பாடு விதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொலைக்காட்சிகளில் காட்டப்பெறும் நிகழ்ச்சிகளை முறைப்படுத்தும் வகையில் மத்திய அரசு தனது கேபிள் டிவி (முறைப்படுத்துதல்) விதிகளில், 1995 'நிகழ்ச்சி வகைப்பாடு'(Programme Code) மற்றும் "விளம்பர வகைப்பாடு" (Advertisement Code) மூலம் சில நெறிமுறைக் கோட்பாடுகளை வகுத்துள்ளது. இந்நெறிமுறைக் கோட்பாடுகளின்படி தொலைக்காட்சிகளில் வன்முறை மற்றும் கவர்ச்சி காட்டுதல் குற்றமாகும். ஆனால், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தணிக்கை செய்ய சட்டத்தில் இடமில்லை. மேலும் வன்முறை, கவர்ச்சி என்பதற்கு எல்லைக் கோடில்லை. திரைப்படங்கள் அனைத்தும் மைய அரசின் தணிக்கைக் குழுவின் சான்றிதழ் பெறப்பட்ட பிறகே, பொதுமக்களுக்குத் திரையிட்டுக் காட்டப்படுகின்றன. எனவே, திரைப்படங்களில் வன்முறை மற்றும் கவர்ச்சிக் காட்சிகள்மீது கட்டுப்பாடு விதிப்பது குறித்து தணிக்கைக் குழுதான் நடவடிக்கை எடுக்க இயலும், மாநில அரசால் எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்க இயலாது.

**22—**

**சிறந்த திரைப்படங்கள்**

**வினா எண் 30481—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டு தமிழக அரசு எத்தனை தமிழ்த் திரைப்படங்களை சிறந்தவை எனத் தேர்வு செய்தது?

(ஆ) இதற்காக விருதுகள் வழங்க அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த திரைப்படங்கள் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை.

[2003 மே 10

(ஆ) தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் விருதுகள் வழங்க 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.25,15,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**23—**

**மீனவர்களுக்கு உதவி**

**வினா எண் 13562—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி, மீன்பிடிப்போர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு இலவசமாக வலையும், உதவித் தொகையும் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

உள்நாட்டு மீனவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் நடைமுறையில் இல்லை.

**24—**

**மீன் பண்ணைகள்**

**வினா எண் 13567—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் மீன் பண்ணை துவக்குபவர்களுக்கு வேண்டிய உதவிகளை உடனடியாக அரசு வழங்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் விதிகளுக்குட்பட்டு மீன் பண்ணை அமைக்க மான்யம் வழங்கப்படுகிறது.



2003 மே 10]

**25—**

**ஓய்வூதியம்**

**வினா எண் 13568—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் எதிர்பாராத விபத்தின் காரணமாக ஊனமுற்றால், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**26—**

**மீனவர்களுக்கு மானியம்**

**வினா எண் 13572—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானிய விலையில் வலை மற்றும் படகுகளை மீனவர்களுக்கு வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

பாரம்பரிய மீனவர்கள் பயன்படுத்தும் வள்ளம், கட்டுமரம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரங்களை மானிய விலையில் வாங்கிய மீனவர்களுக்கு மீன்பிடி வலை வாங்கிக்கொள்ள 50 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ.6,000/- வரை ஒரு மீனவருக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் மீனவர்களுக்கு மானிய விலையில் படகுகள் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது துறையில் இல்லை.

**27—**

**மீன் காட்சி அரங்கம்**

**வினா எண் 13894—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் மீன் காட்சி அரங்கம் ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்து அரசின் திட்டம் ஏதும் தற்போது நிலுவையில் இல்லை.

**28—**

**ஹெலிகாப்டர் வழங்குதல்**

**வினா எண் 13981—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர்களின் பாதுகாப்பிற்காக மீன்வளத் துறைக்கு ஹெலிகாப்டர் வழங்க இந்த ஆண்டில் அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**29—**

**புதிய மீனவர் காலனி**

**வினா எண் 14369—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதிய மீனவர் காலனி கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தர இந்த நிதியாண்டில் திட்டம் திட்டப்பட்டுள்ளது.?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் மீனவர் காலனி கட்டித் தரும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரும் திட்டம் உள்ளது.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டுக்கான வீட்டை, நடப்பு நிதியாண்டில் 3 சென்ட் நிலமுள்ள மற்றும் நிலமில்லாத கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு 4,000 வீடுகள் கட்டித் தரப்பட உள்ளது.

**30—**

**புதிய வீடுகள்**

**வினா எண் 14443—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள மீனவக் கிராமங்களில் 15 ஆண்டுகளுக்கு முன் கட்டிக் கொடுத்த காலனி வீடுகள் பழுதடைந்துள்ளதால், புதிய வீடுகள் கட்டித் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**31—**

**திசை காட்டும் கருவி**

**வினா எண் 14463—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டிச் செல்லாமல் இருக்க திசை காட்டும் கருவி வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

கடலில் திசை காட்டும் கருவி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**32—**

**மீன்பிடிப்புத் துறைமுகம்**

**வினா எண் 14464—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரத்தில் சிறிய மீன்பிடிப்புத் துறைமுகம் ஏற்படுத்த அரசு திட்டம் தீட்டியுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதிக்குட்பட்ட சேதுபாவாசத்திரம் மீனவக் கிராமத்தில் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**33—**

**மீன் இறங்குதளம்**

**வினா எண் 14465—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம், ஆற்காட்டுத் துறை மீனவர் கிராமத்தில் மீன் இறங்குதளம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்குமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆற்காட்டுத் துறையில் மீன் இறங்குதளம் இல்லை என்பது அரசுக்குத் தெரியும்.

(ஆ) ஆற்காட்டுத் துறையில் மீன் இறங்குதளம் அமைத்திட வாய்ப்பில்லை.

**34—**

**கூடுதல் மானியத் தொகை**

**வினா எண் 14467—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் மானியத் தொகையை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

தமிழக மீனவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் டீசல் மானியத் தொகையை அதிகரிக்கும் திட்டம் ஏதும் தற்போது துறையின் பரிசீலனையில் இல்லை.

**35—**

**டீசல் வழங்குதல்**

**வினா எண் 14957—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் விசைப் படகுகளைப் பயன்படுத்தும் அனைத்து மீனவர்களுக்கும் டீசல் தட்டுப்பாடின்றி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் அனைத்து மீனவர்களின் விசைப் படகுகளில் பயன்படுத்தும் டீசல் தற்போது தட்டுப்பாடின்றி கிடைத்து வருகிறது.

**36—**

**கூடுதல் மானியம்**

**வினா எண் 14958—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசலுக்கான மானியத் தொகையினை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழக மீனவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் டீசலுக்கான மானியத் தொகையை அதிகரிக்கும் திட்டம் ஏதும் தற்போது துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**37—**

**மீன் வளர்ப்பு**

**வினா எண் 15006—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வண்ண மீன் வளர்ப்பு தொழிலை ஊக்கப்படுத்தி ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மீன்வளத் துறையைப் பொறுத்தமட்டில், வண்ண மீன் வளர்ப்புத் தொழிலை ஊக்கப்படுத்தி ஏற்றுமதி செய்திட தனியாக திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**38—**

**தொகுப்பு இல்லங்கள்**

**வினா எண் 16718—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, குள்ளஞ்சாவடியில் 120 மீனவ குடும்பங்களுக்குத் தொகுப்பு இல்லங்கள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டு முதல் கடல் மீனவர்களுக்குக் கட்டிக் கொடுப்பதைப் போலவே 3 சென்ட் நிலமுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கும் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முடிவெடுத்துள்ளது. விதிமுறைகளின்படி, தகுதிகள் மற்றும் கோரிக்கையின் அடிப்படையில் குள்ளஞ்சாவடி மீனவ மக்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**39—**

**மீனவர் பாதுகாப்பு**

**வினா எண் 17017—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தூத்தூர் மீனவ கிராமத்திலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்ற 11 மீனவர்கள் திசைமாறி மினிகாய் தீவு கடல் பகுதிக்குள் சென்றதால், கடந்த 9-1-2002 அன்று மாலத்தீவு அதிகாரிகளால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இவர்களையும், படகினையும் மீட்க தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தூத்தூர் மீனவ கிராமத்திலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்ற 11 மீனவர்கள் திசைமாறி மினிகாய் தீவு கடல் பகுதிக்குள் சென்றதால், மாலத்தீவு அதிகாரிகளால் சிறைபிடிக்கப்பட்டது அரசுக்குத் தெரியும்.

(ஆ) இத்துறை மற்றும் மாலத்தீவில் உள்ள இந்திய தூதரகம் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் கைது செய்யப்பட்ட 11 மீனவர்களில் விசைப் படகின் தலைவர் திரு. சுனில் என்பவரைத் தவிர மற்ற 10 மீனவர்களும் 13-2-2002 அன்று மாலத்தீவிலிருந்து விடுவிக்கப்பட்டு பின்பு தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டனர். விசைப் படகின் தலைவர் திரு. சுனில் 1-10-2002 அன்று தாயகம் திரும்பிவிட்டார்.

40—

## இலவச வீடுகள்

**வினா எண் 19579—திரு. எஸ்.எம்..சீனிவேல்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உள்நாட்டு ஏழை மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

ஆம்.



2003 மே 10]

41—

## இறால் பண்ணைகள்

**வினா எண் 26921—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, வேம்பாரில் இறால் பண்ணை அமைத்திட அரசு அனுமதி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) உச்சநீதிமன்ற ஆணையின்படி இந்திய அளவில் மத்திய வேளாண் அமைச்சகத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீர்வாழ் உயிரின ஆணையம் கடலோரப் பகுதியில் இறால் பண்ணைகள் அமைத்திட அனுமதி வழங்குகிறது. விண்ணப்பங்களை பரிசீலிக்க இந்த ஆணையத்திற்கு உதவுவதற்கு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் அரசு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த குழுக்களின் பரிந்துரையின்பேரில் இறால் பண்ணை அமைப்பதற்கு இந்திய நீர்வாழ் உயிரின ஆணையம் அனுமதி வழங்குகிறது.

(ஆ) நீர்வாழ் உயிரினக் குழுமத்தின் அனுமதியை பெறுவதற்கு எப்பொழுது வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம். அந்த விண்ணப்பத்தினை மாவட்டக் குழு, மாநிலக் குழு மற்றும் நீர்வாழ் உயிரின ஆணையத்தின் பரிசீலனைக்குப் பின் அனுமதி வழங்கப்படும்.

42—

## இறால் வளர்ப்பு

**வினா எண் 27173—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) தமிழ்நாட்டில் எவ்வளவு பரப்பளவில் நன்னீர் இறால் வளர்க்கப்படுகிறது?

(ஆ) அரசு, மானியம் ஏதாவது வழங்கியுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 421.64 ஹெக்டேர் பரப்பில் நன்னீர் இறால் வளர்க்கப்படுகிறது.

(ஆ) ஆம்.

**43—**

**கொள்முதல் நிலையம்**

**வினா எண் 30274—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு **மீனவளத்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை வாழ் மீனவர்கள் கடலில் பிடித்து வரும் மீன்களை விற்க ஒட்டுமொத்த கொள்முதல் நிலையம் அமைக்கும் செயல் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

சென்னை வாழ் மீனவர்கள் கடலில் பிடித்து வரும் மீன்களை விற்க ஒட்டுமொத்த கொள்முதல் நிலையம் அமைக்கும் செயல் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

**44—**

**சிறப்புப் பேருந்துகள்**

**வினா எண் 925—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) தமிழகத்தில் அனைத்து சுற்றுலா மையங்களுக்கும் சென்று வர ஒவ்வொரு மாவட்டத்தின் தலைமை இடத்திலிருந்து சுற்றுலா சிறப்புப் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் சில மாவட்ட தலைமை இடங்களிலிருந்து சுற்றுலா சிறப்பு பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஆ) எழவில்லை.

**45—**

**சுற்றுலா மையம்**

**வினா எண் 1591—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சித்தன்னவாசலை சுற்றுலா மையமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

அரசாணை எண் 642 செய்தி மற்றும் சுற்றுலா (தமிழ்) பண்பாட்டு (சுற்றுலா4) துறை, நாள்: 20-9-1983-ன்படி புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சித்தன்னவாசல் ஏற்கெனவே மாவட்ட உலாத்தலமாக அறிவிக்கப்பட்டு சுற்றுலா பயணிகளுக்குத் தேவையான சாலை வசதி, குடிநீர் வசதி, தங்குமிட வசதி மற்றும் கழிப்பிட வசதி போன்ற பணிகள் ரூ.8,77,801 மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பின்கீழ் உள்ளது. மேலும் சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை.

சுற்றுலா முக்கியத்துவம் வாயந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

**46—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 1678—திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, திருமானூர் ஊராட்சி ஒன்றியம், வேட்டைக்குடி ஏரியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

அரியலூர் தொகுதி, திருமானூர் ஊராட்சி ஒன்றியம், வேட்டைக்குடி ஏரியை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாயந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

**47—**

**சுற்றுலா மையம்**

**வினா எண் 2144—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதி, வாணியாறு அணையை சுற்றுலா மையமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதி, வாணியாறு பகுதி ஏற்கெனவே மாவட்ட உலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன. அவ்வகையில் வாணியாறு அணைப் பகுதியில் ரூ.3.50 இலட்சம் செலவில் கழிப்பிட வசதி, சிறுவர் பூங்கா மற்றும் மின் இணைப்புப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**48—**

**சுற்றுலாத் துறை அலுவலகம்**

**வினா எண் 2314—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் சுற்றுலாத் துறை அலுவலகம் எப்பொழுது அமைக்கப்படும்?

(ஆ) சுற்றுலாத் துறை மூலம் வேலூரில் இருந்து சுற்றுலாப் பேருந்துகளை அரசு இயக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) வேலூரில் சுற்றுலாத் துறையின்மூலம் சுற்றுலா தகவல் மையம் விரைவில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) சுற்றுலாத் துறைமூலம் வேலூரில் இருந்து சுற்றுலா பேருந்துகளை இயக்கும் திட்டம் தற்பொழுது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

49—

**குறைந்த கட்டணத்தில் உணவு மற்றும் அறைகள்**

**வினா எண் 2652—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் நடத்தப்படும் ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் குறைந்த கட்டணத்தில் உணவு மற்றும் அறைகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் உணவு மற்றும் அறைகளின் கட்டணம் நடுத்தர வர்க்கத்திற்கு உதவும் வகையிலேயே அமைந்துள்ளது.

(ஆ) எழவில்லை.

50—

**சுற்றுலா மாவட்டம்**

**வினா எண் 3823—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் முழுவதையும் சுற்றுலா மாவட்டம் என அறிவித்து அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய சுற்றுலாக் கொள்கையின் அடிப்படையில் 1998 ஆம் ஆண்டு மத்திய அரசு சுற்றுலாத் துறை தமிழ்நாட்டிலுள்ள சில சுற்றுலாத் தலங்களையும் புனிதத் தலங்களையும் மேம்படுத்துவதற்காக தெரிவு செய்த சுற்றுலாத் தலங்கள் பட்டியலில் கன்னியாகுமரி முதல் இடம் வகிக்கிறது. கன்னியாகுமரியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மத்திய/மாநில அரசு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் கன்னியாகுமரியை சர்வதேச தரம் வாய்ந்த சுற்றுலா மையமாக மாற்ற பெருந்திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.

51—

**தங்கும் விடுதி**

**வினா எண் 4707—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை நீர் வீழ்ச்சியில் சுற்றுலா பயணிகள் தங்கும் விடுதி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் சுற்றுலாத் துறை மூலம் 1987 ஆம் ஆண்டு இளைஞர் விடுதி ஒன்று கட்டப்பட்டு அதனை தற்போது கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம் பராமரித்து வருகிறது. அங்கு மேலும் பயணிகள் தங்கும் விடுதி கட்டும் திட்டம் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

56—

### சுற்றுலாத் தலம்

**வினா எண் 7736—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடிகர் திலகம் சிவாஜி கணேசனால் தமிழக அரசிடம் வழங்கப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட கயத்தாறு இடத்தில் தமிழக அரசின் சார்பில் நினைவிடம் அமைக்கப்படுமா?

(ஆ) அந்த இடத்தை சுற்றுலாத் தலமாக அறிவித்து மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடிகர் திலகம் சிவாஜி கணேசனால் தமிழக அரசிடம் வழங்கப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட கயத்தாறு இடத்தில் நினைவிடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும் அந்த இடத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

57—

### சுற்றுலாத் தலம்

**வினா எண் 7862—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் நகரில் பாடல் பெற்ற தலமாக அருள்மிகு பழமலை நகர் திருக்கோயிலும், அருகில் புகழ்பெற்ற அருள்மிகு திருகொளஞ்சியப்பர் கோயிலும் அமைந்திருப்பதால் இந்நகரை சுற்றுலாத் தலமாக ஆக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

விருத்தாசலம் நகரில் பாடல் பெற்ற தலமாக அருள்மிகு பழமலை நகர் திருக்கோயிலும், அருகில் புகழ்பெற்ற அருள்மிகு திருகொளஞ்சியப்பர் கோயிலும் அமைந்திருப்பதால் இந்நகரை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

58—

### நகரப் பேருந்துகள்

**வினா எண் 8749—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலாத் துறையில் சுற்றுலாப் பேருந்துகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றில் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் விதத்தில் நவீன வசதியுடன் கூடிய பேருந்துகள் எத்தனை உள்ளன?

(இ) இல்லையெனில் நவீனப் பேருந்துகளை சுற்றுலாத் துறையில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) 24 சொகுசுப் பேருந்துகள் உள்ளன.

(ஆ) அனைத்துமே சொகுசுப் பேருந்துகள், வெளி நாட்டுப் பயணிகளைக் கவரும் விதத்தில் உள்ளன.

(இ) மேலும் 13 புதிய நவீன சொகுசுப் பேருந்துகளை வாங்க நடவடிக்கை மேற்கொண்டு முதலில் 4 பேருந்துகள் ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் வாங்கப்பட்டு உள்ளன. அடுத்து 3 புதிய நவீனப் பேருந்துகளை வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2003 மே 10

**59—**

**சிறிய இரயில்**

**வினா எண் 9737—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகாரிலுள்ள சுற்றுலா வளாகத்தில் குழந்தைகள் விளையாடும் பூங்காவில் குழந்தைகள் செல்லும் சிறிய இரயில் ஒன்று விடும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

பூம்புகாரிலுள்ள சுற்றுலா வளாகத்தில் குழந்தைகள் விளையாடும் பூங்காவில் குழந்தைகள் செல்லும் சிறிய இரயில் விடும் திட்டம் பொருளாதார ரீதியில் ஏற்புடையதாக இருக்காது எனக் கருதி சுற்றுலாத் துறையால் கைவிடப்பட்டது.

**60—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 10913—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், நாகவதி அணையை சுற்றுலாத் தலமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், நாகவதி அணையை சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை ஏற்படுத்தி வருகிறது.



2003 மே 10]

**61—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 10914—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கோவிலூர் நகரை சுற்றுலாத் தலமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் நகரை சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

**62—**

**சுற்றுலாக் கண்காட்சி**

**வினா எண் 11111—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும், ஒவ்வொரு ஆண்டும் சுற்றுலாக் கண்காட்சி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும், ஒவ்வொரு ஆண்டும் சுற்றுலா கண்காட்சி அமைக்கும் திட்டம் அரசின்

[2003 மே 10

பரிசீலனையில் இல்லை. சென்னையில் மட்டும் ஆண்டுதோறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படுகிறது. இதில் சுற்றுலாத் துறையும் பங்குகொள்கிறது.

**63—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 11117—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், கோவைக் குற்றாலம் என்னுமிடத்தை செப்பனிட்டு சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், கோவைக் குற்றாலம் என்னுமிடத்தை செப்பனிட்டு சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற் கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

**64—**

**சுற்றுலா மையம்**

**வினா எண் 11130—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வண்டியூர் கண்மாயை அரசு சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்திலுள்ள வண்டியூர் கண்மாயை சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை ஏற்படுத்தி வருகிறது.

**65—**

**குறைந்த வாடகையில் குடில்கள்**

**வினா எண் 11327—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏற்காடு சுற்றுலா தலத்தில் குறைந்த வாடகைக் குடில்களை சுற்றுலாத் துறை மூலம் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

ஏற்காட்டில் சுற்றுலாத் துறை மூலம் குறைந்த வாடகைக் குடில்கள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**66—**

**வினா எண் 11332—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலுள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களுக்கும் சுற்றுலாப் பயணிகள் சென்று வர சுற்றுலாத் துறை மூலம் மினி பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2003 மே 10

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டையிலுள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களுக்கும் சுற்றுலாப் பயணிகள் சென்றுவர சுற்றுலாத் துறை மூலம் மினி பேருந்து இயக்கும் செயற்குறிப்பு தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**67—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 11372—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், பக்காசூரன் மலையை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், பக்காசூரன் மலையை சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை ஏற்படுத்தி வருகிறது.

**68—**

**தங்கும் விடுதி**

**வினா எண் 11375—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

மகாபலிபுரத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான இடத்தில் சுற்றுலாத் துறை மூலம் குறைந்த வாடகை தங்கும் விடுதி கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

மகாபலிபுரத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான இடத்தில் சுற்றுலாத் துறை மூலம் குறைந்த வாடகைக்கு புதிய தங்கும் விடுதி கட்டிக் கொடுக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**69—**

**தங்கும் விடுதி**

**வினா எண் 11376—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகையில் குறைந்த வாடகை தங்கும் விடுதி கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உதகையில் ஏற்கெனவே குறைந்த வாடகையில் இளைஞர் விடுதி ஒன்றை நடத்தி வருகிறது. குறைந்த வாடகை தங்கும் விடுதிகளை மேலும் கட்டிக் கொடுக்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**70—**

**பூங்கா அமைத்தல்**

**வினா எண் 12826—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) சாத்தனூர் அணையைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் வசதியைக் கருதி தனியார் பொழுதுபோக்கு பூங்கா போன்று பொழுதுபோக்கு அம்சம் கொண்ட பூங்கா அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாத்தனூர் அணையைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் வசதியைக் கருதி தனியார் பொழுதுபோக்கு பூங்கா போன்று பொழுதுபோக்கு அம்சம் கொண்ட பூங்கா அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை ஏற்படுத்தி வருகிறது. இதனடிப்படையில் சாத்தனூர் அணைப் பூங்காவில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ரூ.35 இலட்சம் செலவில் உணவு விடுதியுடன் கூடிய தங்கும் விடுதி, பூங்கா பராமரிப்பு, வாகன நிறுத்துமிடம், சாலை மேம்பாடு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**71—**

### தடுப்பு வளையங்கள்

**வினா எண் 13893—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி காவிரி ஆற்றின் நீர்ச்சுழலில் சிக்கி இறந்து விடுவதால், அங்கு சுற்றுலாத் துறையின் மூலம் தடுப்பு வளையங்கள், எச்சரிக்கை போர்டுகள் வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2003 மே 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல்லில் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினைக் கருதி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் குளிக்கும் நீர்வீழ்ச்சிக்கு செல்லும் நடைபாதையை அகலப்படுத்துதல், சிமெண்ட் கைப்பிடிகள் ஏற்படுத்துதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் அடிக்கடி ஏற்படும் மரணத்தினை தவிர்க்க ஊராட்சி மூலம் தற்காலிகப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஊராட்சி ஒன்றியம் மற்றும் வனத் துறை மூலம் தமிழ், ஆங்கிலம், கன்னடம் மொழிகளில் எச்சரிக்கை போர்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

**72—**

### சுற்றுலா மையம்

**வினா எண் 15202—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறிலுள்ள கட்டபொம்மன் சிலை-கட்டபொம்மன் வழிபட்ட அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயில் உள்ள இடத்தை கையகப்படுத்தி சுற்றுலா மையம் ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறிலுள்ள கட்டபொம்மன் சிலை-கட்டபொம்மன் வழிபட்ட அகிலாண்டேஸ்வரி அம்மன் கோவில் உள்ள இடத்தை கையகப்படுத்தி சுற்றுலா மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

73—

**சுற்றுலா மையம்**

**வினா எண் 16721—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையை சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்திலுள்ள வால்பாறையை சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை ஏற்படுத்தி வருகிறது.

74—

**சுற்றுலா மையம்**

**வினா எண் 19562—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொகுதியில் உள்ள செங்காநத்தம் கிராமத்தை சுற்றுலா மையமாக ஆக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் தொகுதியில் உள்ள செங்காநத்தம் கிராமத்தை சுற்றுலா மையமாக ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

75—

**படகு விடுதல்**

**வினா எண் 19563—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் உள்ள கோட்டையைச் சுற்றியுள்ள அகழியில் சுற்றுலாத் துறை மூலம் படகு விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூரில் உள்ள கோட்டையைச் சுற்றியுள்ள அகழியில் சுற்றுலாத் துறை மூலம் படகு விடும் செயற்குறிப்பு தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

76—

**சுற்றுலா மையம்**

**வினா எண் 19564—திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியில் உள்ள வெம்பாக்கம் ஒன்றியத்திலுள்ள மாமண்டூர் ஏரியை தூர்வாரி, சுத்தப்படுத்தி சுற்றுலா மையம் அமைக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியில் உள்ள வெம்பாக்கம் ஒன்றியத்திலுள்ள மாமண்டூர் ஏரியை தூர்வாரி, சுத்தப்படுத்தி சுற்றுலா மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.*

**77—**

### பொருட்காட்சி

**வினா எண் 19566—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருப்பத்தூர் நகரில் அரசு சார்பாக வருடாவருடம் சுற்றுலாப் பொருட்காட்சியை அரசு நடத்துமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*திருப்பத்தூர் நகரில் அரசு சார்பாக வருடாவருடம் சுற்றுலாப் பொருட்காட்சி நடத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*





**78—**

### இழுவை இரயில்

**வினா எண் 19902—திருமதி கு. கலாவதி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு இழுவை இரயில் விடப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு இழுவை இரயில் விடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**79—**

### சுற்றுலா வசதி

**வினா எண் 20169—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*நெல்லை மாவட்டம், கடையநல்லூரிலுள்ள அடவிநயினார் அணை மற்றும் கருப்பா நதி அணைகளை அழகுபடுத்தி சுற்றுலாப் பயணிகளை கவரும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*நெல்லை மாவட்டம், கடையநல்லூரிலுள்ள அடவிநயினார் அணை மற்றும் கருப்பா நதி அணைகளை அழகுபடுத்தி சுற்றுலாப் பயணிகளை கவரும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையின் இல்லை.*

**80—**

**ஒலி-ஒளிக் காட்சி**

**வினா எண் 20592—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் மனோரா சுற்றுலாத் தலத்தில் ஒலி-ஒளிக் காட்சி ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் மனோரா சுற்றுலாத் தலத்தில் ஒலி-ஒளிக் காட்சி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**81—**

**சுற்றுலாப் பகுதி**

**வினா எண் 20661—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, திருநீர்மலை ரங்கநாதப் பெருமாள் கோயில் பகுதியை சுற்றுலாப் பகுதியாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, திருநீர்மலை ரங்கநாதப் பெருமாள் கோயில் பகுதியை சுற்றுலாப் பகுதியாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.





**82—**

**படகுத் துறை**

**வினா எண் 21497—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள புதுக்குளத்தில் கூடுதலாக மோட்டார் படகுகள் வழங்கி சுற்றுலாத் துறையின் படகுத் துறையாக செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள புதுக்குளத்தில் கூடுதலாக மோட்டார் படகுகள் வழங்கி சுற்றுலாத் துறையின் படகுத் துறையாக செயல்படுத்த தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**83—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 22687—திரு. இரா.தா. இன்பத்தமிழன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலை சுற்றுலாத் தலமாக அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலை சுற்றுலாத் தலமாக அரசு அறிவிக்க தற்போதைக்கு எந்தவிதச் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

84—

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 22693—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தாலுகா, மேல்சித்தாமூர் கிராமத்திலுள்ள ஜைன திருக்கோயில் பல்லவர் காலத்தில் கட்டியதை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

செஞ்சி தாலுக்கா, மேல்சித்தாமூர் கிராமத்திலுள்ள ஜைன திருக்கோயில் பல்லவர் காலத்தில் கட்டியதை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

85—

**சுற்றுலா நகர்**

**வினா எண் 22887—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயிலை சுற்றுலா நகராக அறிவித்து வளர்ச்சிப் பணி மேற்கொள்ள அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயிலை சுற்றுலா மையமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில்



இல்லை. இருப்பினும், ஆவுடையார் கோயில் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

86—

**சுற்றுலா மேம்பாடு**

**வினா எண் 23153—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை-கொடைக்கானல்-பழனி-கொழுமம்-அமராவதிநகர்-திருமூர்த்திநகர்-ஆழியார்-அட்டகட்டி-சோலையார் ஆகிய பகுதிகளை இணைத்து விரிவான சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை-கொடைக்கானல்-பழனி-கொழுமம்-அமராவதிநகர்-திருமூர்த்திநகர்-ஆழியார்-அட்டகட்டி-சோலையார் ஆகிய பகுதிகளை இணைத்து விரிவான சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

**சுற்றுலா மையம்**

**வினா எண் 23648—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாது மலை, காவலூர், ஏலகிரி மலை, பாலமதி மலை, கெங்காநத்தம் மலை, அமிர்தி மலைகளை சுற்றுலா மையமாக்கி வசதிகள் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

எந்த ஓர் இடத்தையும் அரசு சுற்றுலா மையம் என தற்போது அறிவிப்பதில்லை. தேவைக்கேற்ப சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரும் இடங்களுக்குத் தேவையான குடிநீர், சாலை வசதி, விளக்கு வசதி, கழிப்பிட வசதி ஆகிய அடிப்படை வசதிகளை நிதிநிலைக்கு ஏற்ப செயல்படுத்தி வருகிறது. ஜவ்வாது மலை, காவலூர், ஏலகிரி மலை, பாலமதி மலை ஆகிய இடங்களில் சுற்றுலா மேம்பாட்டு வசதிகள் செய்து தர அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**88—**

**சுற்றுலா வசதி**

**வினா எண் 25161—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள புதுக்குளம் பூங்கா பகுதிகளை சுற்றுலாத் துறையின் மூலம் மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள புதுக்குளம் பூங்கா பகுதிகளை சுற்றுலாத் துறையின் மூலம் மேம்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**89—**

**வெளிநாடுகளுக்கு சுற்றுலா**

**வினா எண் 25676—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தமிழகத்திலிருந்து குழுக்களாக கட்டணம் செலுத்தி வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்ல விரும்புவோரை அழைத்துச் செல்லும் வழிவகையை சுற்றுலாத் துறை ஏற்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழகத்திலிருந்து குழுக்களாக கட்டணம் செலுத்தி வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்ல விரும்புவோரை அழைத்துச் செல்லும் வழிவகையை சுற்றுலாத் துறை ஏற்பது குறித்த திட்டம் ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**90—**

**சுற்றுலாப் பகுதி**

**வினா எண் 25749—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, டாப்சிலிப்பை சுற்றுலாப் பகுதியாக அறிவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, டாப்சிலிப்பை சுற்றுலாப் பகுதியாக அறிவிக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**91—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 25819—திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 10

(அ) நாமக்கல் கமலாலயக் குளத்தை துப்புரவு செய்து, அதனையடுத்துள்ள மலைக்கோட்டையோடு சேர்த்து சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் கமலாலயக் குளத்தை துப்புரவு செய்து, அதனையடுத்துள்ள மலைக்கோட்டையோடு சேர்த்து சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**92—**

**சுற்றுலா மையங்கள்**

**வினா எண் 25820—திரு. ச. ராமராஜ்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடி தொகுதி, குரங்கனி மற்றும் கம்பம் பகுதியில் சுருளி அருவி ஆகியவற்றை சுற்றுலா மையங்களாக அமைத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், போடி தொகுதி, குரங்கனி பகுதியை சுற்றுலா மையமாக அமைத்திட திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. கம்பம் பகுதி, சுருளி அருவி பகுதியில் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**93—**

**பூங்கா அமைத்தல்**

**வினா எண் 27477—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 10]

(அ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, மன்னச்சநல்லூர் வட்டம் வாத்தலை சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்தவும், பொழுதுபோக்கு அம்சம் கொண்ட பூங்கா அமைக்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் வட்டம் வாத்தலை சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்தவும், பொழுதுபோக்கு அம்சம் கொண்ட பூங்கா அமைக்கவும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**94—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 30297—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதியில் உள்ள பல்லவர் கால குடைவரைக் கோயிலான வல்லம் குடைவரைக் கோயிலை சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதியில் உள்ள பல்லவர் கால குடைவரைக் கோயிலான வல்லம் குடைவரைக் கோயிலை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**95—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 30527—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி அருகேயுள்ள கோடியக்கரையை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி அருகேயுள்ள கோடியக்கரையை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**96—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 30887—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு, திம்மராஜன் கோட்டை பழுதடைந்துள்ளதைச் சீர் செய்து சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும்(ஆ) செங்கல்பட்டு, திம்மராஜன் கோட்டை பழுதடைந்துள்ளதைச் சீர்செய்து சுற்றுலாத் தலமாக மாற்ற திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



**97—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 32652—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தைச் சேர்ந்த பி. நடுப்பட்டி எல்லையைச் சேர்ந்த பி. எட்டிப்பட்டி கிராமத்திற்கு அருகில் தென்பெண்ணையாற்றிலுள்ள தூவல் நீர்வீழ்ச்சியை சுற்றுலாத் தலமாக அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தைச் சேர்ந்த பி. நடுப்பட்டி எல்லையைச் சேர்ந்த பி. எட்டிப்பட்டி கிராமத்திற்கு அருகில் தென்பெண்ணையாற்றிலுள்ள தூவல் நீர்வீழ்ச்சியை சுற்றுலாத் தலமாக அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனயில் இல்லை.

**98—**

**சுற்றுலா மையம்**

**வினா எண் 33233—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், கோவிந்தாபுரம் ஊராட்சி, கோவிந்தாபுரம் ஊரில் புனித அங்குத்தி சுனை உள்ளது. எனவே அவ்வூரைச் சுற்றுலா மையமாக மாற்றும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், கோவிந்தாபுரம் ஊராட்சி, கோவிந்தாபுரம் ஊரில் புனித அங்குத்தி சுனை உள்ளது. எனவே அவ்வூரைச் சுற்றுலா மையமாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

99—

**சுற்றுலா அபிவிருத்தி**

**வினா எண் 34147—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், வெலக்கல் நத்தம் ஊராட்சி, சேட்டேரி அணைப் பகுதியை சுற்றுலாத் துறை அபிவிருத்தி செய்து தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், வெலக்கல் நத்தம் ஊராட்சி, சேட்டேரி அணைப் பகுதியை சுற்றுலாத் துறை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதும் இல்லை.

100—

**சுற்றுலா மையம்**

**வினா எண் 35775—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், திருமூர்த்தி மலை, அமணலிங்கேஸ்வரர் ஆலயம், பஞ்சலிங்க பகுதிகளை சுற்றுலா மையமாக அறிவித்து அடிப்படை வசதிகளை செய்து தர அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், திருமூர்த்தி மலை, அமணலிங்கேஸ்வரர் ஆலயம், பஞ்சலிங்க பகுதிகளை சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாப் பயணிகளின் வருகையை பொறுத்து அந்த இடத்திற்குத் தேவையான குடிநீர், சாலை வசதி, கழிப்பிட வசதி ஆகிய அடிப்படை வசதிகளை இத்துறை செய்து தருகிறது. திருமூர்த்தி மலைப் பகுதிகளில் சுற்றுலாத் துறை மூலம் கீழ்க்கண்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| *1983-ல் நிறைவேற்றப்பட்ட பணிகள்* அமணலிங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து பஞ்சலிங்கம் நீர்வீழ்ச்சி வரை நடைபாதை அமைத்தல் | ரூ.2,00,000/- |
| *1989 மற்றும் 1992-ல் நிறைவேற்றப்பட்ட பணிகள்* வாய்க்கால் மீது நடைபாலம் மற்றும் திருமூர்த்தி நீர்வீழ்ச்சியில் கைப்பிடி வசதிகள் | ரூ.1,56,600/- |
| *1999-லே நிறைவேற்றப்பட்ட பணிகள்* | |
| (அ) பேருந்து நிழற்குடை | ரூ. 30,000/- |
| (ஆ) கழிப்பறை | ரூ.1,00,000/- |
| (இ) உடை மாற்றும் அறை | ரூ.1,20,000/- |
| (ஈ) சிறுவர் பூங்கா | ரூ.1,50,000/- |
| மொத்தம் | ரூ.4,00,000/- |

# இணைப்பு III

*(1 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

***கவன ஈர்ப்பு**

**அனுமதிக்கப் பெற்று அமைச்சர்கள் விவர அறிக்கைகளுடன் (1 முதல் 29 வரை)**

## I. வேலூர்–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் விபத்துகள்

**உறுப்பினர்:** **திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்:** **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை)**

### அறிக்கை

சென்னையில் இருந்து வேலூர், கிருஷ்ணகிரி வழியாக பெங்களூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையை, மாண்புமிகு பாரதப் பிரதமரின் தங்கநாற்கரத் திட்டத்தின்கீழ் (Golden Quadrilateral Programme) அகலப்படுத்தி 4 வழிப் பாதையாக மாற்றியமைக்கும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகளின் விவரம் பின்வருமாறு:—

| எண் | பணி விவரம் | ஒப்பந்த மதிப்பு (ரூபாய் கோடியில்) | பணி ஆரம்பித்த நாள் | முடியும் நாள் | ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| 1. | தே.நெ.எண் 4 பூந்தமல்லி - காஞ்சிபுரம் பிரிவு கி.மீ. 13/8-70/2 | 184.38 | ஜுன், 2001 | டிசம்பர், 2003 | ஆப்கன்ஸ் நிறுவனம், மும்பை |
| 2. | தே.நெ.எண் 4 காஞ்சிபுரம் - வாலாஜா பிரிவு கி.மீ. 70/2-108/4 | 121.57 | ஆகஸ்ட், 2001 | டிசம்பர், 2003 | எல் & டி, சென்னை |

*இப்பட்டியலில் உள்ள கவன ஈர்ப்புகளுக்கான விவர அறிக்கைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.





| எண் | பணி விவரம் | ஒப்பந்த மதிப்பு (ரூபாய் கோடியில்) | பணி ஆரம்பித்த நாள் | முடியும் நாள் | ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| 3. | தே.நெ.எண் 46 கிருஷ்ணகிரி-வாணியம்பாடி பிரிவு கி.மீ. 0/0-49/5 | 163.46 | அக்டோபர், 2001 | டிசம்பர், 2003 | கே.என்.ஆர். பட்டேல் நிறுவனம், பூனா |
| 4. | தே.நெ.எண் 46 வாணியம்பாடி—பள்ளிகொண்டா பிரிவு கி.மீ. 49/5—100/0 | 183.72 | அக்டோபர், 2001 | டிசம்பர், 2003 | ஸ்கான்ஸ்கா சிமென்டேஷன் புராடக்ஸ் நிறுவனம், கல்கத்தா |
| 5. | தே.நெ.எண் 46 பள்ளிகொண்டா—வாணியம்பாடி பிரிவு கி.மீ.100/0-144/5 | 169.28 | ஜுன், 2001 | டிசம்பர், 2003 | ஸ்கான்ஸ்கா சிமென்டேஷன் புராடக்ஸ் நிறுவனம், கல்கத்தா |

மேற்கண்ட பணிகள் அனைத்தும் 31-12-2003-க்குள் முடிக்கப்பட வேண்டும் என்பதால் பணிகள் முழு வேகத்தில் நடைபெற்று வருகின்றன. இப்பணிக்கான ஒப்பந்தத்தில் மூன்று வகையான பணிகள் அடங்கி உள்ளன. 1) தற்போது உள்ள சாலையை தொடர்ந்து பராமரித்தல்; 2) சாலையில் உள்ள மேடு பள்ளங்களை நிரப்பி உடனடியாக சரி செய்தல்; மற்றும் 3) புதிய மேற்பரப்பு அமைத்தல். தற்போது உள்ள சாலையில் அதிக அளவில் வெடிப்புகள் உள்ளதால் சாலை மேடு பள்ளங்களாக மாறி, போக்குவரத்தைப் பாதிக்க அதிக வாய்ப்புள்ளது. எனவே, இதனை மாற்ற தற்போது உள்ள சாலையை பலப்படுத்துவதோடு புதிய மேற்பரப்பு அமைக்கவும் ஒப்பந்தத்தில் வழி செய்யப்பட்டுள்ளது. இதன்படி சாலையில் ஏற்படும் வெடிப்புகள் மற்றும் பள்ளம், படுகுழிகள் அவ்வப்போது ஒப்பந்ததாரர்களால் சரி செய்யப்பட்டு வருகிறது. எனினும் எதிர்பாராதபடி மார்ச் மாத நடுவில் பெய்த மழையினால் ஏற்பட்ட சேதத்தைச் சரிசெய்யவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்பார்வையிடும் ஆலோசகர்களின் அறிவுரையின்படி போதிய அளவு எச்சரிக்கைப் பலகைகளும் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ளன. எனினும், பஸ் மற்றும் லாரி ஓட்டுநர்கள் சாலை விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதில் போதிய அளவு கவனம் செலுத்தாததால் விபத்துகள் ஏற்படுகின்றன. கடந்த மாதத்தில் நடந்த இரு விபத்துகளும் தேசிய நெடுஞ்சாலையின் மேற்பரப்பு நன்றாகவும், அகலமாகவும் இருந்த பகுதியிலேயே ஏற்பட்டதாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சென்னைப் பிரிவு தெரிவித்துள்ளது. எனினும், எதிர்காலத்தில் சாலையில் ஏற்படும் மேடு பள்ளங்களை உடனடியாகச் சரி செய்யவும், எச்சரிக்கைப் பலகைகள் வைக்கவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2003 மே 10

**II அம்பாசமுத்திரம் தொகுதி, இராமநதி அணையில் தூர் வாருதல்**

**உறுப்பினர்: திரு. எம். சக்திவேல் முருகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை)**

**அறிக்கை**

அம்பாசமுத்திரம் வட்டம், கடையம் கிராமத்திற்கு மேற்கே இராமநதி அணை 1974ம் வருடம் பொதுப்பணித் துறையால் கட்டி முடிக்கப்பட்டு கார் மற்றும் பிசானப் பருவங்களில் பாசனத்திற்காக நீர் பகிர்ந்தளிக்கப்பட்டு சித்தாறு வடிநிலக் கோட்டத்தினால் நீர்த் தேக்கம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் உயரம் 84 அடி கொள்ளளவு 152 மி.க.அடி. இந்த அணையின் மூலம் 6,670 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது.

1992-93 ஆம் வருடங்களில் ஏற்பட்ட பெரும் புயல் மழையின் காரணமாகவும், அணையின் தண்ணீர் வரும் பகுதிகளில் ஏற்பட்ட நிலச்சரிவின் காரணமாகவும், வண்டல் கலந்த மண், மரத்தடிகள் மற்றும் உருளை கற்கள் அணைப்பகுதிக்குள் வந்து நிரம்பிவிட்டபடியால் அணையின் கொள்ளளவு சுமார் 1/4 பாகம் குறைந்துவிட்டது. தற்போது முழு நீர்மட்டக் கொள்ளளவு 152 ம.க. அடியிலிருந்து 120 மி.க. அடியாகக் குறைந்துவிட்டது. இதனால் பாசனத்திற்கு நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அணையில் நிரம்பியுள்ள வண்டல் கலந்த மண், மணல், மரத்தடி, உருளைக் கற்கள், இவற்றின் கொள்ளளவு சுமார் 8,88,000 க.மீ. இந்தக் கலவையில் என்னென்ன எவ்வளவு என்பது கணக்கிடுவது சிரமம். இருந்த போதிலும் சுமார் 60 விழுக்காடு மணல், 30 விழுக்காடு வண்டல் மண், 10 விழுக்காடு மரத்தடிகள் மற்றும் உருளைக் கற்கள் கலந்து இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மேற்படி மணல் கலந்த வண்டல் மண்ணை அகற்ற துறைக்கு சுமார் 10 கோடிக்கு மேல் செலவாகும். ஏனென்றால், அவற்றை அணையின் கீழ்ப்புறம் வெகு தொலைவில் வாகனங்கள் மூலம் கொண்டு செல்ல வேண்டி வரும்.



2003 மே 10]

மேற்படி மண், மணல் உருளைக் கற்கள் நிறைந்த கலவை ஆற்று மதகுக் கதவை முழுமையாக மூடவிடாததால் சுமார் விநாடிக்கு 40 கன அடி தண்ணீர் இரண்டாண்டுகளாக கசிந்து கொண்டிருந்து பாசன மேலாண்மைக்கு சவாலாக இருந்தது. அணையில் நிரம்பியுள்ள வண்டல் மண் மற்றும் கற்களின் ஒரு பகுதியை அப்புறப்படுத்துவதற்கு தொகை ரூ.8.80 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சியர் சிறுசேமிப்பு நிதியிலிருந்து நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்த நியமனமும் செய்யப்பட்டுள்ளது. விரைவில் பணியினை முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அணையில் உள்ள ஷட்டரில் தற்போது பழுது ஏதும் இல்லை. ஏற்கெனவே இருந்த சிறிய பழுதுகள் சீரமைக்கப்பட்டுள்ளன. ஷட்டர் அருகில் உள்ள வண்டல் மண் மேடுகளை அகற்றினால் ஷட்டர் தன் இருப்பிடத்திற்கு சரியாக அமர வழி பிறந்து விடும். அதன் பிறகு நீர்க் கசிவு கணிசமான முறையில் குறைந்து விடும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மே மாத இறுதிக்குள் மேற் கண்ட ரூ.5.50 இலட்சத்திற்கான பணி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வண்டல் மண் கலந்த கலவையை அணையிலிருந்து அப்புறப்படுத்த ஒரு வருடத்திற்கு (மழைக் காலம் தவிர) ஒப்பந்த முறையில் கனிமத் துறை விதிகளுக்கு உட்பட்டு பொது ஏலத்திலோ அல்லது குத்தகைக்குவிடவோ தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் தக்க உத்தரவு வழங்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. சில இடங்களில் அதிகபட்சமாக 8 மீட்டர் ஆழத்திற்கு வண்டல் மண் அகற்றப்பட வேண்டியுள்ளது. கனிமத் துறை 1 மீட்டர் ஆழத்திற்கு மேல் வண்டல் மண்ணை எடுப்பதற்கு அனுமதிப்பதில்லை. காட்டுப் பகுதிக்கு 10 கி.மீ. தூரத்திற்குள் உள்ள பகுதிகளில் உள்ள மண், மணல் எடுக்க வனத் துறை ஆட்சேபம் தெரிவிக்கிறது. ஆகையினால் இராமநதி அணை மற்றும் பிற அணைகளில் மண், வண்டல் மண், உருளைக் கற்கள் போன்றவற்றை அகற்றுவதற்கு முடிவு எடுக்க முடியாத நிலை உள்ளது. பொதுப் பணித் துறை மூலம் மேற்படி வண்டல் மண், மரத்தடி. உருளைக் கற்களை அப்புறப்படுத்த ரூ.10 கோடிக்கு மேல் ஆகும்.

[2003 மே 10

**III ஒட்டன்சத்திரம் தொகுதி, நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் தாமதம்**

**உறுப்பினர்: திரு. ஆர். சக்ரபாணி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை)**

**அறிக்கை**

நங்காஞ்சியார் திட்டத்திற்கு இதுவரை ரூ.33 கோடி செலவிடப்பட்டு 85 சதவீத வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வேலைகள் அனைத்தும் முன்னேற்றத்தில் உள்ளன. கலிங்கு கட்டும் பணியில் ஒரு பகுதியும், கால்வாய் வெட்டுமான வேலையில் ஒரு சிறிய பகுதி மட்டுமே பாக்கி உள்ளன. 2002-2003 ஆம் நிதியாண்டில் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.3.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த நிதி ஒதுக்கீட்டைக் கொண்டும், திட்டத்தை முடிப்பதற்காக மேற்கொண்டு தேவைப்படும் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீட்டை திருத்திய நிதி ஒதுக்கீட்டில் கோரிப் பெற்றும், அனைத்து வேலைகளும் மார்ச் 2004-க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**IV. ஊத்தங்கரை வட்டம், பாம்பாறு அணையின் குறுக்கே ஆண்டியப்பனூர் அணை கட்டுவதால் பாசனம், குடிநீர் பாதிப்பு**

**உறுப்பினர்: திரு. வே. கிருஷ்ணமூர்த்தி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை)**

**அறிக்கை**

ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத் திட்டமானது கொட்டாறு மற்றும் பெரியாறு ஆகிய இரண்டு நதிகளின் குறுக்கே கட்டப்பட்டு வருகிறது. பெரியாற்றுக்கு ஆண்டியப்பனூர் ஓடை என்கிற மற்றொரு பெயரும் உள்ளது. எனவே இத்திட்டத்திற்கு ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத் திட்டம் எனப் பெயரிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2003 மே 10]

பாம்பாற்றின் குறுக்கே ஊத்தங்கரை அருகில் 1983 ஆம் ஆண்டு ஒரு நீர்த்தேக்கம் கட்டப்பட்டுள்ளது. இந்த நீர்த்தேக்கத்திற்கு பாம்பாறு, பர்கூர் ஆறு மற்றும் மத்தூர் ஆறு ஆகிய மூன்று ஆறுகளிலிருந்து நீர்வரத்து உள்ளது. இவைகளின் மொத்த நீர்வரத்துப் பகுதி 670.23 சதுர மைல்களாகும். இந்தப் பரப்பிலிருந்து மொத்தம் 2784.25 மில்லியன் கன அடி நீர் தண்ணீர் வரத்து கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் பாம்பாறு நீர்த்தேக்க பாசனப் பகுதிக்குத் தேவைப்படும் நீரின் மொத்த அளவு 560 மில்லியன் கன அடியாகும். ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத் திட்டத்தின் நீர்வரத்துப் பகுதி 20.39 சதுர மைல்கள் ஆகும். இப்பகுதி பாம்பாற்றினுடைய மொத்த நீர்வரத்துப் பகுதியில் சுமார் 3 சதவீதமே ஆகும். மேலும் ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு 260 மில்லியன் கன அடி தண்ணீரே பயன்படுத்தப்படவுள்ளது. பாம்பாறு, தென்பெண்ணையாற்றில் சேரும் இடத்தில் மொத்த உபரித் தண்ணீர் 2791.35 மில்லியன் கன அடியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதால் பாம்பாறு அணைக்கும் மற்றும் வழியிலுள்ள மற்ற பாசன ஆதாரங்களுக்கும் எவ்வித நீர் இழப்பும் ஏற்படாது. மேலும் இத்திட்டம் பாம்பாறு விவசாயிகளின் பாசன உரிமைகளைப் பாதிக்காதவாறுதான் தயாரிக்கப்பட்டுள்ளது. பாம்பாறு அணைக்கு வரும் நீரின் அளவு பாதிக்காத வகையிலும் இத்திட்டம் உள்ளது.

எனவே இத்திட்டம் அனைத்து தொழில்நுட்பக் கூறுகளையும் ஆராய்ந்து, பயனுள்ள திட்டம் என அறிந்த பின்னரே அரசு இதற்கு ஒப்புதல் வழங்கி தற்சமயம் செயலாக்கப்பட்டு வருகிறது. ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத்திட்டம் கட்டுவதால் பாம்பாறு நீர்த்தேக்கத்தின் நீர்வரத்தோ அல்லது பாசன நிலங்களோ எந்தவிதத்திலும் பாதிக்காது.

### V. சிதம்பரம்-பிச்சாவரம் சாலை, விரிவுபடுத்தும் பணி தொடங்கப்படாததால் போக்குவரத்து பாதிப்பு

**உறுப்பினர்: திரு. பி.எஸ். அருள்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை)**

**அறிக்கை**

பழைய கடலூர் சாலை மற்றும் கில்லை சாலை என்பன சிதம்பரம் முதல் பிச்சாவரம் வரை உள்ள 3.70 கி.மீ. நீளமுடைய சாலைகளாகும். இச்சாலைகளை விரிவுபடுத்தும் பணி ஆறு பகுதிகளாகப் பிரித்து திரு. கந்தகுமரன், திருவாளர்கள் மணி & கோ மற்றும் திரு. தேவதாஸ் ஆகிய ஒப்பந்தக்காரர்களிடம் ஜீலை 2002-ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்குத் தேவையான கற்கள் சாலையோரங்களில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. 30-6-2003-க்குள் பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### VI தருமபுரி மாவட்டம், வேப்பனப்பல்லி ஒன்றியத்தில் கங்கை மதகு அணை கட்டும் திட்டம்

**உறுப்பினர்: திரு. வெ. கோவிந்தராஜ்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை)**

**அறிக்கை**

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், வேப்பனப்பல்லி ஒன்றியத்தில் சிங்கிரிப்பள்ளி கிராமத்தில் நாச்சிக்குப்பம் ஆற்றின் குறுக்கே ஒரு ஏரி அமைக்கும் திட்டத்திற்காக ரூ.63500 இலட்சத்திற்கு (2002-2003 விலை விகிதப்படி) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பரிசிலனையில் உள்ளது.

இத்திட்டத்தினால் 866 ஏக்கர் நன்செய் நிலங்களும், சிங்கிரிப்பள்ளி, கங்கை மடுவு, கோலப்பள்ளி, மணவாரனப்பள்ளி மற்றும் பன்னப்பள்ளி



ஆகிய கிராமங்களும் பயன்பெறுகின்றன. இத்திட்டத்திற்கு 79.69 ஏக்கர் பட்டா புன்செய் நிலங்களும், 135 ஏக்கர் புறம்போக்கு நிலங்களும், 57.63 ஏக்கர் வன நிலங்களும் கையகப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்திற்கான பயன், செலவு விகிதம் 1:1.

மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு பெறப்பட்ட பின் இத்திட்டத்திற்கான மதிப்பீடு ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### VII பொள்ளாச்சி நகராட்சி, பெண்கள் பள்ளியை வேறு இடத்திற்கு மாற்றுதல்

**உறுப்பினர்: திரு. வி. ஜெயராமன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. செ. செம்மலை (மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை)**

**அறிக்கை**

பொள்ளாச்சி நகராட்சிப் பகுதியில், கோட்டூர் சாலையை ஒட்டி அமைந்துள்ள நகராட்சிக்குச் சொந்தமான சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்கெனவே நகராட்சி நடுநிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளிக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே இப்பள்ளிக் கட்டடத்தை அகற்றிவிட்டு புதிதாகக் கட்ட வேண்டியுள்ளது.

2. மேலும், பொள்ளாச்சி நகராட்சிப் பகுதியில், உடுமலை சாலையை ஒட்டி அமைந்துள்ள நகராட்சி பெண்க்ள் மேல்நிலைப் பள்ளி சுமார் 1.75 ஏக்கர் பரப்பில் தற்போது இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 2400 மாணவியர் பயின்று வருகின்றனர். மேற்படி பள்ளி இடம் மிகுந்த நெருக்கடியாக உள்ளதாலும், ஒவ்வொரு வகுப்பறையிலும், 40 மாணவிகள் மட்டுமே படிக்க இடவசதி உள்ள வகுப்பறையில் 120 மாணவிகள் இருந்து வருகின்றனர். கூடுதலாக வகுப்பறைகள் கட்ட இடவசதியும் தற்போது இயங்கி வரும் பள்ளியில் இல்லை. கட்டிடம் மிகவும் பழமை வாய்ந்தக கட்டடமாக உள்ளது. மேலும் இப்பள்ளி அமைந்துள்ள இடம் நகரின் மிகுந்த நெரிசல் உள்ள பகுதியாக அமைந்திருப்பதாலும் மேற்படி பள்ளியை அதிகப் பரப்பு கொண்ட இடத்திற்கு மாறுதல் செய்ய வேண்டியுள்ளது.

[2003 மே 10

3. எனவே, கோட்டூர் சாலையை ஒட்டி அமைந்துள்ள இடம் அதிக இடவசதி கொண்டதாக இருப்பதாலும், ஓரளவு போக்குவரத்து நெரிசல் குறைந்த இடமாக இருப்பதாலும், ஏற்கனவே அங்கு இயங்கி வரும் நடுநிலைப் பள்ளி மற்றும் உடுமலை சாலைப் பகுதியை அடுத்து இயங்கி வரும் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய இரண்டையும் கோட்டூர் ரோடு (வால்பாறை ரோடு) அடுத்துள்ள நகராட்சிகளுக்குச் சொந்தமான 10 ஏக்கர் இடத்தில் புதிய பள்ளிக் கட்டடம் கட்ட மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர், கோவை அவர்கள் மாதிரி வரைபடம் 100,00 சதுர அடி பரப்பளவில் தரைதளம், முதல்தளம், இரண்டாம்தளம் ஆகியவற்றுடன் 66 பள்ளி அறைகளுடன் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இதற்கு மதிப்பீடு தயார் செய்ததில் ரூ.2.75 கோடி திட்ட மதிப்பீடாக உள்ளது. நகராட்சிப் பள்ளி நிதியில் ரூ.60 இலட்சம் மட்டும் உள்ளதால் மீதித் தொகை ரூ.2.15 கோடி சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் பெற நகர்மன்றத் தலைவர் முயற்சி எடுத்து வருகிறார். நகராட்சி நிதிப் பற்றாக்குறையால் இத்திட்டத்திற்கு நிர்வாக அனுமதி பெற முடியாமல் உள்ளது. நிதி வசதி பெற்றவுடன் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும். இதற்கிடையில், உள்ள நிதியைக் கொண்டு கட்டடங்கள் கட்டும் பணியினை நகராட்சி நிர்வாகத் துறை மேற்கொள்ளலாம்.

**VIII. முசிறி அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி, குடிநீர்த் தட்டுப்பாடு**

**உறுப்பினர்: திருமதி மல்லிகா சின்னசாமி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. செ. செம்மலை (மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை)**

**அறிக்கை**

முசிறி அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி திருச்சி மாவட்டம், தொட்டியம் சட்டமன்றத் தொகுதி, தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், எம். புதுப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. கல்லூரியின் மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 1170 ஆகும்.



2003 மே 10]

கல்லூரிக்குத் தேவையான தண்ணீர், கல்லூரிக் கிணற்றிலிருந்து 7.5 குதிரைத்திறன் மின் மோட்டார் வாயிலாக, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் ஏற்றப்பட்டு, கல்லூரிக்கு விநியோகம் செய்யப்படுகிறது எனவும், தண்ணீர் போதுமானதாக இல்லை எனக் கல்லூரி முதல்வரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 1500 கேலன் அதாவது, 9500 லிட்டர் தேவை எனவும், கிணற்றில் அந்த அளவுக்குத் தண்ணீர் இல்லை; முசிறி பேரூராட்சியிலிருந்தும் போதுமான தண்ணீர் விநியோகம் இல்லாததால் கல்லூரிக்குத் தண்ணீர் விநியோகம் செய்ய இயலாதுள்ளது. எனினும், ஓரளவிற்கு மாணவர்களின் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. ஆண்டுத் தேர்வுகள் முடிந்த பின் கோடை விடுமுறையை ஒட்டி கல்லூரி மூடப்பட்டுவிடும். எனவே மாணவர்களிடையே பதட்டமான சூழ்நிலை எதுவும் இல்லை.

**IX. வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாலர்களின் பிரச்சினை**

**உறுப்பினர்: திரு. கோவை தங்கம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா (தொழிலாளர் நலத் துறை)**

**அறிக்கை**

தமிழ்நாடு தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தோட்டத் தொழிலில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக, தின ஊதியம் ரூ.76.65-இல் இருந்து ரூ.60/- ஆகக் குறைப்பதாக தொழிற்தகராறு சட்டப் பிரிவு 9-ஏ-ன்கீழ் அளித்த அறிவிப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த உரிமை மனுவினை, செல்லாது என உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பையடுத்து, 8-5-2002 அன்று ஆனைமலை பிளான்டர்ஸ் அசோசியேஷனுக்கும், தொழிற்சங்கங்களுக்குமிடையே சம்பள முன்பணம் குறித்து ஆகஸ்ட் 2002 வரை ஒப்பந்தம் ஏற்பட்டது என்றும், சில நிர்வாகங்கள் உயர் நீதிமன்ற ஆணையை எதிர்த்துத் தொடர்ந்த மேல்முறையீட்டில், டிவிஷன் பெஞ்ச் இடைக்கால உத்தரவு பிறப்பித்து,

சமரசப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப் பணித்தது. இதனைத் தொடர்ந்து தொழிலாளர் ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஒரு சுமுக முடிவு ஏற்படாத நிலையில், அரசுக்கு சமரச முறிவு அறிக்கை அனுப்பப்பட்டு, அரசு ஆணை (டி) எண் 799, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19-9-2002ன்படி தாவாவினை, சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தாவா, தொழிற்தீர்ப்பாயம் முன் நிலுவையில் உள்ளது. இத்தாவாவில் நிர்வாகங்கள், தொழிற்தீர்ப்பாயம் முன்னர் Glaim Statement தாக்கல் செய்துள்ளனர். மேலும், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு ஏற்பட்ட கருத்தொற்றுமைப்படி டிசம்பர் 2002 வரை சம்பள முன்பணம் வழங்கியதாக அறியப்படுகிறது.

2. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஊதியப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளும் விரைவில் தீர்வுகாணும்பொருட்டு, ஏற்கெனவே பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஊதியப் பிரச்சினை மற்றும் பொதுக் கோரிக்கைகள் குறித்து தீர்வுகாணும்பொருட்டு, அரசாணை (டி) எண் 569, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19-7-2002-ல் அமைக்கப்பட்டுள்ள சிறப்புத் தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு மேற்சொன்ன தொழிற்தாவாவை விட அனுமதி அளித்து, அரசாணை (டி) எண் 447, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 22-4-2003-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், அங்கு பதட்ட நிலை ஏதும் நிலவவில்லை என தொழிலாளர் ஆணையர் தெரிவித்துள்ளார்.

## X. ஆம்னி பஸ்கள் நிறுத்த கோயம்பேடு மலர் அங்காடி நிலத்தைப் பயன்படுத்தாமை

**உறுப்பினர்:** **திரு. பி.கே. சேகர்பாபு**

**அமைச்சர்:** **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் (போக்குவரத்துத் துறை)**

### அறிக்கை

சென்னை புறநகர்ப் பேருந்து நிலையம் 18-11-2002-இலிருந்து செயல்படுகிறது. அனைத்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், பிற மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் வெளியூர்



செல்லும் தனியார் பேருந்துகள் ஆகியவை அங்கிருந்து இயக்கப்படுகின்றன.

2. ஆம்னி பஸ்கள் (ஒப்பந்தப் பேருந்துகள்), முன்பு கோயம்பேட்டில் மலர் சந்தைக்காக ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து தற்காலிகமாக இயக்கப்படுகின்றன. இவ்விடம் புதிதாகத் திறக்கப்பட்ட சென்னை புறநகர்ப் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள காளியம்மன் கோயில் தெருவில் உள்ளது (நெசபாக்கம் சாலை). ஆம்னி பஸ்களை இயக்குவதற்கு மூன்று ஏக்கர் பரப்பளவு உள்ள நிலம், மொத்த விற்பனை வணிக வளாகம் (Wholesale Market Complex) அருகே சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கு மோட்டார் வாகன விதிகள் எண் 245-ன்படி பொது நிலையம் ஏற்படுத்த திட்டம் (Scheme) ஒன்று சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினால் போக்குவரத்துத் துறையிடம் அளிக்கப்பட்டது. இதனடிப்படையில் போக்குவரத்துத் துறை இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தற்பொழுது இத்திட்டத்தில் கூறியவாறு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3. சென்னை புறநகர்ப் பேருந்து நிலையம் செயல்பட அறிவிக்கப்பட்டு, அது தொடங்கிய நாள் முதல், ஆம்னி பேருந்துகள் கோயம்பேட்டில் ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்துதான் செயல்பட வேண்டும். இதற்காக ஆம்னி பேருந்துகள் செல்ல வேண்டிய பாதையினை வரையறுத்து மோட்டார் வாகன சட்டப் பிரிவு 115-ன்கீழ் காவல் துறை ஆணையர் ஓர் இடைக்கால ஆணை பிறப்பித்தார். ஏனெனில், புறநகர் மற்றும் விரைவுப் பேருந்துகள் நகருக்குள் வராதபோது, ஆம்னி பேருந்துகள் மட்டும் சென்னை நகருக்குள் வருவது பொருத்தமல்ல. இதன்படி, தென் மாவட்டங்களிலிருந்து வரும் ஆம்னி பேருந்துகள், தாம்பரத்தில் முன்னர் அமைக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலை வழியாக கோயம்பேடு பேருந்து நிலையம் சென்றடைய வேண்டும். இதேபோன்று, திரும்பும்போதும் அதே வழிதான் பின்பற்றப்பட வேண்டும். அதுபோன்று,

பிற மாவட்டங்களிலிருந்து வரும் பேருந்துகளுக்கும் இதற்கான பாதைகள் வரையறுக்கப்பட்டன. பின்னர், இந்த இடைக்காலப் போக்குவரத்து மாற்றம் 17-12-2002 அன்று உறுதி செய்யப்பட்டு, அரசிதழில் வெளியிடப்பட்டது.

4. இது தொடர்பாக, வெளியிடப்பட்ட மாற்றுப் போக்குவரத்து வழிகளை (Change of Traffic Pattern) எதிர்த்து, ஆம்னி பேருந்துகளை இயக்குபவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு (W.P.No. 41608/2002) தாக்கல் செய்தனர். அதில் ஆம்னி பேருந்துகள், குறிப்பாக, தென் மாவட்டங்களிலிருந்து வரும் பேருந்துகளை சென்னை நகருக்குள் இயக்க அனுமதியளிக்குமாறு கோரப்பட்டது. இந்த ரிட் மனு நிலுவையில் உள்ளது. இதற்கு எந்தவிதத் தடையும் விதிக்கப்படவில்லை. மேற்கண்ட ரிட் மனுவின் காரணமாக, ஒருசில ஆம்னி பேருந்துகளை இயக்குபவர்கள் மட்டும் இடைக் காலத் தடை பெற்றுள்ளனர். அப்பேருந்துகளை மட்டும் சென்னை நகருக்குள் இயங்க அனுமதிக்க வேண்டியுள்ளது.

5. இந்நிலையில், இடைக்காலத் தடை பெற்ற ஒருசில ஆம்னி உரிமைதாரர்கள்தவிர, மற்ற அனைவரும் கோயம்பேட்டில், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஒதுக்கீடு செய்த இடத்திலிருந்து மட்டுமே ஆம்னி பேருந்துகளை இயக்க வேண்டும். நீதிமன்றத்தில் உள்ள இடைக்காலத் தடை விலக்கிக்கொள்ளப்பட்டவுடன், அனைத்து ஆம்னி பேருந்துகளும் கோயம்பேட்டிலிருந்து இயக்க வலியுறுத்தப்படும். தற்பொழுது கோயம்பேட்டில் தொடங்கப்பட்ட கட்டுமானப் பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப் பெற்று பயணிகளுக்கான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும். பொதுமக்களின் நலன் கருதி அனைத்து ஆம்னி பேருந்து உரிமைதாரர்களும் அரசின் முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கக் கோரப்படுகின்றனர்.



## XI. எச்சரிக்கை விளக்கு மற்றும் பிரதிபலிப்பான் அட்டை ஒட்டப்படாமல் செல்லும் லாரிகளால் ஏற்படும் விபத்து

**உறுப்பினர்: திரு. தி. வேல் முருகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் (போக்குவரத்துத் துறை)**

### அறிக்கை

மத்திய மோட்டார் வாகன சட்டப் பிரிவு 62-ன்படி பதிவுச் சான்று மற்றும் தகுதிச் சான்று ஆகியவற்றைப் புதுப்பிக்க வாகனங்கள் ஆய்வுக்கு வரும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக ஏற்கெனவே ஒரு அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அட்டவணையில் வரிசை எண்கள் 2, 3, 4ல் முறையே, தலைப்பு விளக்கு, இதர விளக்கு, பிரதிபலிப்பான் போன்றவை வாகனங்களில் எவ்வாறு பொருத்தியிருக்க வேண்டும் என்று தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 105, உட்பிரிவு (2) (1)ன்படி பின்புற சிகப்பு விளக்குகள் 155 மீட்டர் தொலைவில் இருந்து பார்க்கும்போது நன்கு தெரியும்படி பொருத்தப்பட்டு இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு மேற்கூறிய விதிமுறைகளைக் கடுமையாகப் பின்பற்ற தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

2. இரவு நேரங்களில் லாரிகளின் பின்புறம் எச்சரிக்கை விளக்கு (டேஞ்சர் லைட்) மற்றும் பிரதிபலிப்பான் (ரிப்ளக்டர் ஸ்டிக்கர்) ஒட்டப்படாமல் ஓடும் லாரிகளைத் தடுக்க உரிய போக்குவரத்துக் காவல் பணியாளர்களால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சாலைப் பாதுகாப்பு வார விழாக்கள் நடத்தி, அதன் மூலமாக லாரி ஓட்டுநர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களுக்கு டேஞ்சர் லைட் மற்றும் ரிப்ளக்டர் ஸ்டிக்கர் ஒட்டாமல் வாகனங்களை சாலையில் ஓட்டிச் செல்லக் கூடாது என்பது குறித்தும், சாலை விதிமுறைகளை மீறினால் அதன் காரணமாக ஏற்படும் விபத்தின் விளைவுகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மத்திய மோட்டார் போக்குவரத்துச் சட்டம் 1989, பிரிவு 104-ன்படி சரக்கு வாகனங்களின் முன்புறமும், பின்புறமும் 20 மி.மீ. அகலத்திற்குக் குறையாமல் ஒளிரும் சிகப்பு வண்ண ரிப்ளக்டர்கள் பொருத்தப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்யுமாறு அனைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையர்களுக்கு உரிய அறிவுரைகள் காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

XII. வடசென்னை, 13-வது வட்டத்தில் இரண்டு நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் விநியோகம் சரிவர வழங்காமை

**உறுப்பினர்: திரு. பி.கே. சேகர்பாபு**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ப. மோகன் (கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)**

**அறிக்கை**

வடசென்னை 13-வது வட்டத்தில் நான்கு நியாய விலைக் கடைகள் உள்ளன. 2003 ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மண்ணெண்ணெய் மேற்படி நான்கு நியாய விலைக் கடைகளின் குடும்ப அட்டைகளுக்கு முழுவதும் விநியோகம் செய்யப்பட்டது. சில அங்காடிகளில் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்தது போக, மீதமும் இருந்துள்ளது. இம்மண்டலத்தில் இயங்கி வரும் திருவாளர். ஸ்ரீகார்த்திகேயன் ஏஜென்சீஸ் என்ற மண்ணெண்ணெய் மொத்த வணிகருடன் மேற்படி நான்கு நியாயவிலைக் கடைகளும் இணைக்கப்பட்டுள்ளது. இந்த மொத்த வணிகர் எண்ணெய் நிறுவனத்திடம் இருந்து பிப்ரவரி மாதத்தில் தாமதமாக மண்ணெண்ணெய் எடுத்து மேற்படி நியாய விலைக் கடைகளுக்கு விநியோகித்துள்ளார். எனவே இந்த மொத்த வணிகர், மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இவருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் அளவினைக் குறைத்து, அதனை வேறு மண்ணெண்ணெய் மொத்த வணிகருக்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேற்படி மொத்த வணிகர் செய்த முறைகேடுகளுக்காக அவருக்கு ரூ.53,760/ அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. வடசென்னை 13-வது வட்டத்தில் உள்ள 4 நியாய விலைக் கடைகளில் தற்போது மண்ணெண்ணெய் வழங்கும் பணி சீராக உள்ளது மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும்பொழுது எவ்வித சிரமமுமின்றி வழங்கப்படுவதனைத் தீவிரமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.



XIII. வேலூரில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல்

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை)**

**அறிக்கை**

நகர சர்வே எண் 3, 5, 13/1, 13/2, வார்டு எண் 1 பிளாக் எண் 1-ல் உள்ள வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்குச் சொந்தமான 8.75 ஏக்கர் நிலம், தனியார் நில பட்டா சொந்தக்காரர்களின் 9.75 ஏக்கர் நிலம் மற்றும் அரசாங்க கால்வாய் புறம்போக்கு நிலமான 0.77 ஏக்கர் நிலம், ஆக மொத்தம் 19.27 ஏக்கர் நிலத்தில் வேலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆணை (ப) எண் 500, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28-10-1999ல் அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தலைவர், வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக மற்றும் விற்பனை சங்க ஊழியர்கள் ஒன்றியம் மற்றும் 2 இதர ஒன்றியங்கள் உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த மூன்று வழக்குகளின்மீது உயர் நீதிமன்றம் தனது 12-4-2001 ஆம் தேதிய ஆணையில் நில ஆர்ஜித சட்டத்தின் அவசரப் பிரிவின்கீழ் மேற்படி நிலங்களைக் கையகப்படுத்தலாம் என்று உத்தரவிட்டது. மேற்படி உத்தரவினை 10 வாரத்திற்குள் நிறைவேற்றுமாறு கால நிர்ணயம் செய்து ஆணையிட்டது. மாவட்ட ஆட்சியரால் மேற்படி காலவரையறையினை நீட்டிக்க தனியே மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கிடையில், சங்கத்திற்குச் சொந்தமான நிலத்திற்கு உரிய மதிப்பு, அருகில் உள்ள இடங்களின் விற்பனையின் அடிப்படையில் மாவட்ட நிர்வாகம் கடைபிடிக்கும் முறைகளைப் பின்பற்றி மாவட்ட ஆட்சியரால், ரூ.2.50 கோடி எனக் கணக்கிடப்பட்டது. பதிவுத் துறையின் வழிகாட்டி., மதிப்பீட்டின்படி அதே அளவுள்ள நிலத்திற்கு உரிய மதிப்பு ரூ.22.49 கோடியாகும். மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் 8-12-2001 மற்றும் 9-2-2002 ஆகிய தேதிகளில் செய்த ஆய்வின்படி, சர்வே எண் 3,5,13/1 மற்றும் 13/2 நிலத்தில் உள்ள 8.54 ஏக்கர் அளவுள்ள மானாவாரி மற்றும் நஞ்சை நிலத்திற்கு மதிப்பு ரூ.5,39,40,348/- எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 8-2-2002-ல் நடந்த உறுதிமொழிக் குழுக்

[2003 மே 10

கூட்டத்தில் இப்பொருள் விவாதிக்கப்பட்டது. நில ஆர்ஜிதம் சட்டப் பிரிவு 4(1)ல் செய்யப்பட்ட அறிவிக்கை மற்றும் பிரிவு (6)ல் உள்ள வரைவு அறிவிக்கை அரசின் அனுமதிக்காக சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரால் அரசுக்கு அனுப்பப்பட்டது.

எனினும், நிலத்தின் மதிப்பு மிக அதிகமாக உள்ள காரணத்தாலும் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து மேற்படி அதிக விலை கொடுத்து நிலத்தினை வாங்க வேலூர் நகராட்சிக்குப் போதிய நிதி வசதி இல்லாததால் மாற்று இடம் ஒன்றை தேர்வு செய்யுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்ததன் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் நகராட்சி ஆணையருடன் செய்த ஆய்விற்குப் பிறகு 15.97 ஏக்கர் அளவுள்ள மற்றொரு நிலத்தினை உள்ளடக்கிய மாற்றுப் பிரேரணையை தனது 19-2-2002 நாளிட்ட அறிக்கையில் சமர்ப்பித்துள்ளார். மேற்படி மாற்று இடத்தின் மதிப்பு ரூ.2,39,55,000/- என அரசால் நிர்ணயிக்கப்பட்டது. இந்த இடம் பெங்களூர் - சென்னை தேசிய நெடுஞ்சாலை இருவழிப் பாதையின் வடக்குப் புறத்தில் அமைந்துள்ளது. மேற்படி நிலம் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான நிலத்திற்கு 2 கிலோ மீட்டருக்குள்ளும் தற்போதுள்ள பேருந்து நிலையத்திலிருந்து 2.75 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளும் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

எனினும், இவ்விடம் தற்போதுள்ள பேருந்து நிலையத்திலிருந்து 2.25 கி.மீ. தொலைவில் உள்ளதாலும், நகருக்கு ஒதுக்குப்புறமாக இருப்பதாலும் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு மூன்றாவது மாற்று இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட காகிதப் பட்டறை அருகில் தற்போது பேருந்து நிலையத்திற்கான இடத்தின் பரப்பளவு அணுகுசாலைக்கான இடத்தினையும் சேர்த்து 12.56 ஏக்கராகும். அரசு வழிகாட்டிப் பதிவேட்டின்படி இதன் உத்தேச நில மதிப்பு ரூ.1.60 கோடியாகும். இவ்விடம் தற்போது பேருந்து நிலையத்திலிருந்து 2.25 கி.மீ. தூரத்தில் உள்ளது. மேலும் நகரத்தின் கிழக்குப்புற எல்லையை ஒட்டியும், சென்னை-பெங்களூர் புறவழிச் சாலைக்கு வடக்குப் புறமாகவும் அமைகிறது. இந்நிலப் பகுதியின் கீழ்ப்புறம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் அமைந்துள்ளன.



2003 மே 10]

புதிய பேருந்து நிலையம் அமைக்க மேற்குறித்த இடத்தைத் தெரிவு செய்யலாம் என்றும், அங்கு புதிய பேருந்து நிலையம் அமைக்கலாம் என்றும், மேற்படி இடத்தில் புதிய பேருந்து நிலையத்திற்காக தேசிய நெடுஞ்சாலையிலிருந்து அணுகுசாலைக்காகவும் 12.56 ஏக்கர் நிலம் கிரயம் பெறலாம் என்றும், இன்னும் கூடுதலாக நிலம் தேவைப்படின் அதனையும் சேர்த்து கிரயம் செய்யலாம் எனவும், புதிய பேருந்து நிலையம் அமைக்க நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் அல்லது நில ஆர்ஜிதம் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரைக் கேட்டுக்கொள்ளலாம் எனவும், புதிய பேருந்து நிலையத்திற்கான இடத்தை கிரயம் பெற தேவையான நிதியுதவி பெற அரசின் அனுமதி பெறவும் 29-10-2002 ஆம் தேதிய வேலூர் நகர்மன்றத் தீர்மான எண் 1237-ல் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

வேலூர் பேருந்து நிலையம் அமைக்க மூன்றாவது மாற்று இடமாகத் தேர்வு செய்யப்பட்ட நில உரிமையாளர்களின் விவரப் பட்டியல் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டபோது திரு. இராஜன்பாபு, த/பெ. நாகராஜன் (ம) திரு. நாகராஜன், த/பெ. கோபால் ஆகியோர் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு ரிட் மனு எண் 42005 (ம) 42006/02 ரிட் மனு நோட்டீஸ் எண் 2031 (ம) 63032/02-ல் தங்களுக்கு உரிமைப்பட்ட சாத்தப்பட்டதை பகுதி வார்டு எண் 1, பிளாக் எண் 37 நில அளவு எண் 31438, 3155, 3153, 3154 (ம) 3064-ல் உள்ள 87 சென்ட் நிலத்தினை மனுதாரர்கள் ஒப்புதல் இன்றி நில ஆர்ஜித நடவடிக்கைகளுக்குட்படுத்தக் கூடாதென வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேலும் இவ்வழக்கில் 8 வார காலத்திற்குள் தடையாணை உத்தரவு சென்னை உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் தடையாணையினை நீக்கம் செய்ய நகராட்சி சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர்களின் நிலப்பகுதி, உத்தேசப் பேருந்து நிலையத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டு உள்ள இடத்திற்கு அணுகுசாலையாக அமையும். தடையாணை நீக்கம் செய்யப்பட்டவுடன் புதிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2003 மே 10

## XIV. திண்டுக்கல், குடிநீர்ப் பஞ்சம்

**உறுப்பினர்: செல்வி க. பாலபாரதி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை)**

### அறிக்கை

திண்டுக்கல் நகராட்சியின் மக்கள் தொகை (2001 ஆம் வருடக் கணக்கெடுப்பின்படி) 1,96,619 ஆகும். திண்டுக்கல் நகராட்சிக்கு கீழ்க்கண்ட இரு குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

1. காமராசர் அணைக்கட்டினை நீராதாரமாகக் கொண்ட ஆத்தூர் குடிநீர்த் திட்டம்
2. வைகை நதியை நீராதாரமாகக் கொண்ட பேரணை குடிநீர்த் திட்டம்

2. சாதாரணக் காலங்களில் இக்குடிநீர்த் திட்டங்கள் மூலம் மொத்தம் 11.80 மில்லியன் லிட்டர் குடிநீர் திண்டுக்கல் நகராட்சிக்குக் கிடைக்கும். இதன் மூலம் நாளொன்றுக்கு நபரொருவருக்கு 57 லிட்டர் என்ற கணக்கில் குடிநீர் வழங்க இயலும்.

3. தற்போது மழையின்மையால் கடும் வறட்சி நிலவுகிறது. நீர் ஆதாரங்கள் வறண்டுவிட்டதால் இரு தலைப்பிடங்களிலும் நீர் இருப்பு வெகுவாகக் குறைந்துள்ளது. தற்போது மொத்தம் 5.70 மில்லியன் லிட்டர் குடிநீர் மட்டுமே இந்த நககராட்சிக்குக் கிடைக்கிறது.

4. இதன் காரணமாக நகரின் எல்லா மக்களுக்கும் நாளொன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 24 லிட்டர் வீதம் சீராகக் குடிநீர் வழங்கும் வண்ணம் நகரை 10 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் 10 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையினை மேம்படுத்தும் வகையில், வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் தமிழக அரசால் மாவட்ட



2003 மே 10]

ஆட்சித் தலைவர் மூலம் ரூ.52.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் எவ்விதப் பதட்டமும் இன்றி சீராகக் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

5. திண்டுக்கல் நகரில் அடிக்கடி நிலவி வரும் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்கவும், நகரின் வருங்காலக் குடிநீர்த் தேவையைக் கருத்திற்கொண்டும் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு திண்டுக்கல் நகராட்சிக்கும், தாடிக்கொம்பு, வடமதுரை, அகரம் ஆகிய இடங்களுக்கும் சேர்த்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றினை அமைப்புச் செலவு மற்றும் ஆண்டுப் பராமரிப்புச் செலவு முறையே ரூ.85.0418 கோடி மற்றும் ரூ.4.66772 கோடி என்ற அளவில் தமிழக அரசு ஒரு பெருந்திட்டத்திற்கு அரசு ஆணை எண் 16 ந.நி.ம.கு.வ துறை, நாள் 3-3-2003-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்கீழ் காவிரி ஆற்றில் கரூர் அருகே புதுப்பாளையம் மற்றும் ரெங்கநாதன்பேட்டை ஆகிய இடங்களில் 2 நீர் சேகரிக்கும் பெருங்கிணறுகள் அமைக்கப்பட உள்ளன. இவ்விரண்டு நீர் சேகரிக்கும் கிணறுகளிலும் சேகரிக்கப்படும் நீர், 6 இடைநிலை தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு உந்தப்பட்டு, கடைசியில் திண்டுக்கல்லில் அமைக்கப்படவுள்ள 70.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிக்கு 113 கிலோ மீட்டர் நீர் உந்து குழாய் மற்றும் 7 கி.மீ. புவி ஈர்ப்புக் குழாய் மூலம் கொண்டு வரப்படுகிறது. இத்திட்டத்தில் திண்டுக்கல் நகரப் பகுதிகளுக்கு புதியதாக மூன்று மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும் அமைக்கப்பட உள்ளன. இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, திறப்பதற்கான கடைசித் தேதி 7-5-2003 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்படும்போது திண்டுக்கல் நகரில் குடிநீர்ப் பற்றாக்குறை இராது.

[2003 மே 10

XV. **வேலூர், தருமபுரி மாவட்டங்களுக்கு காவிரிக் குடிநீர் வழங்கல்**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை)**

**அறிக்கை**

**வேலூர் மாவட்டம்**

ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேலூர் மாவட்டத்திலுள்ள 9 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள் மற்றும் 14 ஒன்றியங்களிலுள்ள 2722 வழியோரக் குடியிருப்புகள் ஆகியவை பயன்பெறும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் காவிரியாற்றிலிருந்து நாளொன்றுக்கு 277.00 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுத்து, சுத்திகரிப்பு செய்து, இம்மாவட்டத்திலுள்ள 22.27 இலட்சம் மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் நகராட்சிப் பகுதியில் வாழும் மக்களுக்கு நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதமும், பேரூராட்சிப் பகுதியில் வாழும் மக்களுக்கு 70 லிட்டர் வீதமும், ஊரகக் குடியிருப்புப் பகுதியில் வாழும் மக்களுக்கு 40 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு ரூ.750.00 கோடிகளாகும். இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. களப் பணிகள் மார்ச் 2003ல் முடிக்கப்பட்டு, திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**தருமபுரி மாவட்டம்**

ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் மற்றும் சுகாதார வசதியுடன் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றினை தருமபுரி மாவட்டம் முழுவதிலும் உள்ள 3 நகராட்சிகள், பெண்ணாகரம் பேரூராட்சியையும் சேர்த்து 17 பேரூராட்சிகள் மற்றும் 8 ஒன்றியங்களிலுள்ள 5542 குடியிருப்புகளும் பயன்பெறும் வகையில் ரூ.1008.00 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் காவிரியாற்றிலிருந்து நாளொன்றுக்கு 160



2003 மே 10]

மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுத்து, சுத்திகரிப்பு செய்து, இம்மாவட்டத்திலுள்ள 27.00 இலட்சம் மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் நகராட்சிப் பகுதியில் வாழும் மக்களுக்கு நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதமும் பேரூராட்சிப் பகுதியில் வாழும் மக்களுக்கு 70 லிட்டர் வீதமும், ஊரகக் குடியிருப்புப் பகுதியில் வாழும் மக்களுக்கு 55 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 410 கி.மீ. பிரதான குழாய் அமைத்து நகரகப் பகுதிகளுக்கு 20 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும் ஊரகக் குடியிருப்புப் பகுதிகளுக்கு 1500 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், ஊரகக் குடியிருப்புப் பகுதிகளுக்கு 1500 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் அமைத்து குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் தனி நபர் செலவு ரூ.3416/- எனவும், 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.29.20 எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இத்திட்ட மதிப்பீடு ரூ.1008.00 கோடியைக் கருத்தில் கொண்டு ஜப்பான் நாட்டு நிதியுதவி மூலம் இத்திட்டத்தை மேற்கொள்ள திட்ட மதிப்பீடு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் தருமபுரி மாவட்டம் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டம் இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

இத்திட்டம் ஜப்பான் நாட்டு நிறுவனமான ஜே.பி.ஐ.சி. நிதி உதவி கோரும் பொருட்டு கடித எண் 12573.ws.iv.2001 மூலம் 19-12-2001 அன்று அனுப்பப்பட்டு, கீழ்க்கண்ட தடை நீக்கங்கள் (Clearnces) பெறப்பட்டுள்ளன:

1. பெண்ணாகரம் வட்டத்தில் அஞ்சஹாலி கிராமத்தில் சர்வே எண் 673-ல் அடங்கியுள்ள 12.75 எக்டேர் வன நிலத்தை மாற்றி அரசாணை எண் 145, சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத் துறை (எப்ஆர்XI) நாள் 17-6-1999 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

2. 160 மில்லியன் லிட்டர் நாள் ஒன்றிற்கு காவேரி ஆற்றிலிருந்து எடுப்பதற்கு பொதுப் பணித் துறை அரசாணை (நிலை) எண் 746, பொதுப் பணித் (WD2) துறை நாள் 8-12-1997 மற்றும் அரசாணை (நிலை) எண் 45, பொதுப் பணித் (W2) துறை, நாள் 6-2-2002 அன்று வெளியிடப்பட்டது.

இந்திய அரசின் கிராம வளர்ச்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சகம் இத்திட்டத்திற்கான மத்திய திட்டக் குழுவின் பரிசீலனைக்கு சில தெளிவுரைகளை நிதி ஒதுக்கீடு வகையில் (funding angle) கோரியுள்ளது.

இத்திட்டத்தில் வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில்:—

1) அமையப்பெறவுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர் உந்து நிலையம்-I மற்றும் II ஆகியவற்றிற்கான வனத் துறையின் ஒப்புதல்.

2) இத்திட்டத்திற்குத் தேவையான குடிநீரை, உத்தேசிக்கப்பட்டுள்ள நீராதாரத்திலிருந்து பெறுவதற்கான மாநில அரசின் பொதுப் பணித் துறையின் ஒப்புதல்.

3) மத்திய பொது சுகாதாரம், சுற்றுச்சூழல் பொறியியல் துறை (CPHEEO) மற்றும் மத்திய நகர வளர்ச்சித் துறை ஆகியவற்றின் திட்ட தொழில்நுட்ப ஒப்புதல்.

4) இத்திட்டத்தில் பயன்பெறும் கிராமங்களுக்கான மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஒப்புதல் மேல் குறிப்பிட்டவைகளுடன் கீழ்க்கண்ட கூடுதல் விவரங்களையும் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

(i) இத்திட்டத்திற்கான நிதிப் படிவம், காலவரையறை மற்றும் நிதிப்பகுப்பு (Funding Pattern)

(ii) ஆண்டுப் பராமரிப்புத் தொகை மற்றும் இத்தொகையினைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள வருவாய்ப் பெருக்கு நடவடிக்கைகள், வருவாய் மற்றும் ஆண்டுப் பராமரிப்புத் தொகைக்கு இடையேயான இடைவெளியைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

(iii) இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு மாநில அரசின் பங்குத் தொகையினை பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் தொடர் ஆண்டு திட்டங்களில் வழங்க மாநில அரசின் திட்டம் மற்றும் நிதித்துறையின் உத்தரவாதம்.

மேலே குறிப்பிடப்பட்டவை நிதித் துறையுடன் கலந்து ஆலோசித்து இத்துறையில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.





## XVI. கோத்தகிரி பேரூராட்சி, குடிநீர்ப் பஞ்சம்

**உறுப்பினர்: திரு. கா. கந்தசாமி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை)**

### அறிக்கை

கோத்தகிரி சிறப்பு நிலைப் பேரூராட்சியின் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 29184 ஆகும். அதன் பரப்பளவு 30.93 சதுர கிலோ மீட்டர். வார்டுகளின் எண்ணிக்கை 21. குடிநீர் விநியோகத் திட்டங்களின் எண்ணிக்கை 66. கிணற்றுடன் கூடிய விசைப் பம்புகள் திட்டம் 58, வீட்டுக் குடிநீர் இணைப்புகள் 856.

கோத்தகிரி பேரூராட்சிக்குட்பட்ட 46 குக்கிராமங்களில் 4 குக்கிராமங்களில் குடியிருப்போருக்கு காலை மற்றும் மாலை இரு வேளைகளிலும் விநியோகம் (70 LPCD) செய்யப்பட்டு வருகிறது. கீழே குறிப்பிட்டுள்ள ஐந்து நகரப் பகுதிகளில் அடங்கிய இடங்களுக்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை மாலை நேரத்தில் விநியோகம் (35 LPCD) செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பகுதிகளில் தற்போது கடும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. கோத்தகிரி பஜார் | 2. டாண்பாஸ்கோ | ஈனாடா (தடுப்பணை) குடிநீர்த் திட்டம் |
| 3. டானிங்கடன் | 4. கிளப் ரோடு | |
| 5. மிஷன் காட்பவுண்டு | 6. கார்சலி சாலை | |
| 7. ராம்சந்த் | 8. பொட்டுவலம் | |
| 9. தாலுக்கா அலுவலகப் பகுதி | | |
| 10. சக்தி மலை சாலை | | |
| 11. கல்பனா காட்டேஜ் | 12. அணையப்பட்டி | கிணறு விசைப்பம்பு தண்ணீர்த் திட்டம் |

மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கு ஈனாடா குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. இந்த நீர்த்தேக்கத்தில் குடிநீரின் அளவு மிகவும் குறைந்துள்ளது எனவும், தடுப்பணையை ஆழப்படுத்தினாலும் கூடுதலாகக் குடிநீர் பெற வாய்ப்பு இல்லை. பேரூராட்சியின் மொத்த மக்கள் தொகையில் 60 சதவீதம் மக்கள் அப்பகுதியில் வாழ்வதாகவும், இப்பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய கோத்தகிரி பேரூராட்சி எல்லையிலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள ஜக்கனாரை ஊராட்சிக்குட்பட்ட அளக்கரை என்ற இடத்தில் அமைந்துள்ள நீர் அருவியிலிருந்து குழாய்கள் அமைத்து, விசைப்பம்பு அமைத்து பூஸ்டர் நிலையம் மூலமாகக் குடிநீர் பெற்று வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிலையப் பொறியாளர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ரூ.85.00 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது. இப்புதிய குடிநீர்த் திட்டம் முடிவு பெற்ற பின்பு இப்பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்படும். மேலும் இப்பேரூராட்சிப் பகுதிகளில் அடிபம்புகள் மற்றும் திறந்த பொதுக் கிணறு வாயிலாகத் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.

## XVII. வேலூர் நகராட்சிக்கு ஆணையர் நியமனம்

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை)**

### அறிக்கை

அரசாணை (பத்தாண்டு) எண் 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 19-3-2003-ல் கத்திவாக்கம் நகராட்சியில் ஆணையராகப் பணிபுரிந்த திரு. ஏ.எம். சந்தானம் என்பவரை அங்கிருந்து பணி மாறுதல் செய்து வேலூர் நகராட்சி ஆணையராகப் பணியமர்த்தப்பட்டுள்ளது.



## XVIII. வேலூர் குடிநீர்த் தட்டுப்பாடு

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை)**

### அறிக்கை

வேலூர் நகரின் மக்கட்தொகை 1,77,800 ஆகும். நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம், வேலூர் நகரின் குடிநீர்த் தேவை தினசரி 160 இலட்சம் லிட்டர் ஆகும். இவ்வாண்டு பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினால் பாலாற்றுப் படுகையில் குடிநீர் மட்டம் குறைந்துவிட்டது. மேலும், வேலூர் நகரின் மற்றொரு குடிநீர் ஆதாரமான ஓட்டேரியிலும், குடிநீர் மட்டம் குறைந்துவிட்ட காரணத்தினால், நகருக்கு பெறப்பட்டு வந்த குடிநீர் படிப்படியாகக் குறைந்து, டிசம்பர், 2002 ஆம் மாதத்திலிருந்து நாளொன்றுக்கு 40 இலட்சம் லிட்டர் மட்டுமே பெறப்பட்டு நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு '22 லிட்டர் வீதம் 6 நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பற்றாக்குறையை சமாளிக்கும்பொருட்டு இயற்கை இடர்ப்பாடுகள் திட்டத்தின்கீழ் ஓட்டேரியில் 2 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து கூடுதலாக 3.00 இலட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு வருகிறது. நகரில் புதியதாக 119 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வருகின்ற கோடைக் காலத்தில் நிலவக்கூடிய குடிநீர்ப் பற்றாக்குறை நிலையைக் கருத்திற்கொண்டு, கீழ்க்கண்ட பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:

(1) கருகம்புத்தூர் தலைமை நீரேற்றுப் பகுதியில் புதிதாக 5 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் ஒரு குடிநீர் உறிஞ்சு கிணறு அமைத்தல்.

(2) ஓட்டேரி தலைமை நீரேற்று நிலைய இடத்தில் கூடுதலாக 2 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்.

(3) 50 புதிய மின் விசை இறைப்பானுடன்கூடிய சிறு குடிநீர்த் திட்டங்கள் அமைத்தல்.

(4) ஏற்கெனவே உள்ள அனைத்து கையிறைப்பான் ஆழ்துளைக் கிணறுகளில் கூடுதல் குழாய்களைப் பொருத்துதல்.

(5) கையிறைப்பான்கள் எப்போதும் குடிநீர் தரும் வகையில் கைப்பம்புகளுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை வாங்குதல்.

(6) நகரில் குடிநீர்க் குழாய்கள் இல்லாத பகுதிகளுக்கும், வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கும் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல்.

(7) குடிநீர் விநியோகத்தினை சமச்சீராகச் செயல்படுத்த மின்விசை இறைப்பான் மூலம் சட்டத்திற்குப் புறம்பான நீர் இறைப்பினைத் தடுத்தல் மற்றும் அனுமதியற்ற வீட்டிணைப்புகளைத் துண்டித்தல்.

மேலும், வேலூரில் நிலவி வரும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பெண்ணையாற்றிலிருந்து புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று ரூ.191.22 கோடி செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் 9/2003—ல் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. திட்டப் பணிகள் முடிவுற்று, பயன்பாட்டிற்கு வரும்போது நகரின் குடிநீர் நிலவரம் பெருமளவில் முன்னேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## XIX. எடப்பாடி குடிநீர்த் தட்டுப்பாடு

**உறுப்பினர்: திரு. ஐ. கணேசன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை)**

### அறிக்கை

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி எடப்பாடி நகராட்சியின் மக்கள் தொகை 48802 ஆகும். எடப்பாடி நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் இருந்து வரும் காவிரி குடிநீர்த் திட்டத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு 17.00 இலட்சம் லிட்டர் குடிநீரும், நகராட்சி நீர் ஆதாரத்திலிருந்து கிடைக்கும் 5.00 இலட்சம் லிட்டர் குடிநீரையும் சேர்த்து, மொத்தம் 22 இலட்சம் லிட்டர் குடிநீர் 3 தினங்களுக்கு ஒரு முறை நகரில் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. எடப்பாடி நகராட்சியின் கடுமையான நிதி நெருக்கடி காரணமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய குடிநீர்க் கட்டண நிலுவை ரூ.85.98 இலட்சம்



செலுத்த இயலாமல் நிலுவையில் உள்ளது. நகருக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 17.00 இலட்சம் லிட்டர் குடிநீர் தற்போது 12.00 இலட்சம் லிட்டர் குடிநீராகக் குறைக்கப்பட்டுவிட்டது. இதனால் காவிரிக் குடிநீர்த் திட்டம் மூலம் வழங்கப்படும் 12.00 இலட்சம் லிட்டர் குடிநீருடன் நகராட்சி மூலம் பெறப்படும் 5.00 இலட்சம் லிட்டர் குடிநீரையும் சேர்த்து, மொத்தம் 17.00 இலட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே கிடைப்பதால் இந்த நகராட்சியை 5 பகுதிகளாகப் பிரித்து தினம் ஒரு பகுதி வீதம் 5 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பல பகுதிகளிலும் உள்ள கையிறைப்பான்கள்/பிற சிறு குடிநீர்த் திட்டங்கள் மூலமும், தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள இடங்களில் ஆழ்துளைக் கிணறு மற்றும் கைப்பம்பு மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சியின் நிதிநிலை சீரடைந்து குடிநீர் வடிகால் வாரிய நிலுவைத் தொகையைச் செலுத்தியவுடன் அதிக அளவு குடிநீர் பெற்று 3 தினங்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## XX. சென்னை போதிய குடிநீர் வழங்கப்படாமை

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை)**

### அறிக்கை

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் பூண்டி, சோழவரம் மற்றும் செங்குன்றம் ஆகிய ஏரிகளின் மொத்தக் கொள்ளளவான 7412 மில்லியன் கன அடியில் 31-3-2003 அன்று சுமார் 24 விழுக்காடான 1810 மில்லியன் கன அடி நீரே இருந்தது. ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கண்டலேறு நீர்த்தேக்கத்தில் குறைந்த அளவே நீர் உள்ளதால் ஜூன் 2003-ல் எதிர்பார்க்கப்படும் தென் மேற்குப் பருவ மழைக்கு முன்னதாக ஆந்திராவில் இருந்து தெலுங்கு கங்கைத் திட்டத்தின் மூலம் நீர் வர வாய்ப்பில்லை.

அடுத்த பருவ மழை வரும் வரை நீரை சிக்கனமாகப் பயன்படுத்த ஏதாவது, 18-1-2003 முதல் சென்னை நகருக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் 275 மில்லியன் லிட்டரும், குடிநீர் வழங்காத நாட்களில் லாரி

நடைகளுக்காக 25 மில்லியன் லிட்டரும், தொழிற்சாலை மற்றும் மொத்தப் பயனீட்டாளர்களின் உபயோகத்திற்கு நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் லிட்டரும் குடிநீர் வழங்கப்படுகிறது. பருவ மழை வரும்வரை அதாவது 30-9-2003 வரை, ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்க ஏரிகளிலிருந்து எடுக்கப்படும் நீருடன் நாள் ஒன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் நிலத்தடி நீரைக் கூடுதலாக எடுத்து வழங்கிட நீர் வழங்கு மேலாண்மைத் திட்டம் ஒன்று வரையப்பட்டுள்ளது.

சென்னை நகருக்குக் குடிநீர்க் வழங்க செம்பரம்பாக்கம் ஏரி நீரையும் போரூர் ஏரிக்கு எடுத்துச் சென்று சுமார் 150 மில்லியன் கன அடி நீர் உந்து விசை மூலம் சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் கோடைக் காலத்தில் ஏற்படும் குடிநீர்த் தேவையைச் சமாளிக்க சென்னைக் குடிநீர் வாரியத்தின் குழாய்க் கிணறுகளிலிருந்தும், வாடகைக்கு அமர்த்தப்பட்ட விவசாயக் கிணறுகளிலிருந்து கூடுதலாக நிலத்தடி நீரைப் பெற வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. நாள் ஒன்றுக்கு 25 மில்லியன் லிட்டர் பெற சுமார் 75 புதிய விவசாயக் கிணறுகளை வாடகைக்கு அமர்த்த ரூபாய் 5 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கூடுதல் நீரை செங்குன்றத்திற்கு எடுத்துச் செல்ல ரூபாய் 7.58 கோடி செலவில் கட்டமைப்பு மேம்பாட்டு வசதிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு 80 மில்லியன் லிட்டர் நிலத்தடி நீர் எடுத்து வரும் நிலையில், ஏப்ரலில் 90 மில்லியன் லிட்டராகவும், மே முதல் அக்டோபர் வரை 100 மில்லியன் லிட்டராகவும் உயர்த்தப்படும். இது தவிர ஜூன் முதல் அக்டோபர், 2003 வரை தினசரி சுமார் 600 லாரி நடைகள் மூலமாக மாமண்டூர், பாலூர், ஆத்தூர் மற்றும் பூந்தமல்லி பகுதிகளிலுள்ள தனியார் கிணறுகளிலிருந்து நீர் எடுத்து வர ரூபாய் 1,000 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜூன் முதல் அக்டோபர், 2003 வரை 153 நாட்களுக்கு தினசரி கூடுதலாக நாள் ஒன்றுக்கு 5 மில்லிடன் லிட்டர் நீர் கிடைக்கும்.

மேலும் நகரில் தற்போது குடிநீர் வராத, குடிநீர்க் குழாய்கள் இல்லாத பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்காக ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள சுமார் 3400 குடிநீர்த் தொட்டிகளுக்கு தினசரி 1550 லாரி நடைகள் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் கோடைக் காலத்தின் கூடுதல் தேவையை ஈடுகட்ட இந்த லாரி நடைகளின் எண்ணிக்கையைத் தேவைக்கு ஏற்றவாறு உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் வாரியத்திற்குக் கூடுதலாக ரூபாய் 600 இலட்சம் செலவாகும். மேலும் பழுதடைந்துள்ள தொட்டிகளை மாற்ற 300 புதிய பிளாஸ்டிக் தொட்டிகளும், புதிய இடங்களில் 300 பிளாஸ்டிக் தொட்டிகளுமாக மொத்தம் 600 தொட்டிகள் வாங்க ரூபாய் 90 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது.



தற்போது நகரில் 5808 இந்தியா மார்க்–2 குழாய்கள் உள்ளன. ஜூலை 2003-க்குள் மேலும் சுமார் 500 புதிய இந்தியா மார்க்–2 குழாய்கள் அமைக்க ரூபாய் 220 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 2003 ஆம் ஆண்டில் சென்னை நகர குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க மேலே கண்ட பணிகளை உள்ளடக்கி ரூபாய் 5500 இலட்சம் செலவில் திட்டம் ஒன்று வரையப்பட்டு மத்திய அரசின் வறட்சி நிலைமை ஆய்வுக் குழுவுக்கு மத்திய அரசின் நிதி உதவி கோரி அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது அரசு சந்தித்து வரும் மிகக் கடுமையான நிதி நெருக்கடி நிலையிலும், கூடுதல் செலவில் சென்னை நகரில் அனைத்துப் பகுதிகளில் வாழும் மக்களுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்க தமிழகத்திலுள்ள பிற நீர் ஆதாரங்களிலிருந்து லாரிகள் மூலம் கொண்டு வந்து வழங்க வாரியம் தயாராக உள்ளது.

## XXI. கரூர், குடிநீர்த் தட்டுப்பாடு

**உறுப்பினர்: திரு. அ.இரா. மலையப்பசாமி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை)**

### அறிக்கை

கரூர் நகராட்சியின் தற்போதைய மக்கட் தொகை 76,328. கரூருக்கு தற்போது நாளொன்றுக்கு 80 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 105 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. ஆகவே தற்போது அப்பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லை.

[2003 மே 10

## XXII. கடலூர், சிப்காட் பகுதி கிராமங்கள், கூட்டுக் குடிநீர் திட்டம் ஏற்படுத்துதல்

**உறுப்பினர்: திரு. தி. வேல் முருகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை**

### அறிக்கை

கடலூர் சிப்காட் வளாகத்தைச் சுற்றியுள்ள 22 குடியிருப்புகளில் நீரின் தரம் மாசுபட்டுள்ளது. மேற்கண்ட குடியிருப்புகளுக்கு நிரந்தர குடிநீர்த் தீர்வு ஏற்படும் வண்ணம் திருவந்திரபுரம் அருகிலுள்ள சுண்ணாம்பேட்டை மற்றும் அக்ரகாரம் ஏரி என்ற இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து (சுமார் 7 கி.மீ. தூரம்) ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த உத்தேச மதிப்பீடு ரூ.160.00 இலட்சத்திற்குத் தயார் செய்யப்பட்டது. கடலூர் மாவட்டத்தில் தற்போது அனைத்து குடிநீர்த் திட்டங்களும் மக்கள் பங்கேற்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினால் பயன்பெறும் அனைத்து ஊராட்சி மன்றத் தலைவர்களும் இணைந்து தங்களுக்குள் ஒரு பொது குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுவினை அமைத்து அக்குழுவிற்குத் தலைவர் மற்றும் பிற பொறுப்பாளர்களையும் நியமனம் செய்ய வேண்டும். மேற்படி 22 குடியிருப்புகளில் அமைக்கப்படவுள்ள கிளை நீரேற்றுக் குழாய், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், பகிர்மானக் குழாய் ஆகிய பணிகளுக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகையான ரூ.39.00 இலட்சத்தில் மக்கள் பங்களிப்பு 10 சதவீதத் தொகையான ரூ.3.90 இலட்சத்தைப் பெற்று தனி வங்கிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் மீதித் தொகையான நிதி ஆதாரம் மற்றும் முதலீடு பற்றி இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன், திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



2003 மே 10]

## XXIII. வேலூர், பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடங்கப்படாமை

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை)**

### அறிக்கை

வேலூர் நகர பாதாளச் சாக்கடை திட்டம் அமைக்க மெஸர்ஸ் கிர்லாஸ்கர் கம்பெனிக்கு ஆய்வுகள் நடத்தி விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்க ஆகஸ்டு மாதம் 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர உட்கட்டமைப்பு நிதி நிறுவனம் (TNUIFSL), சென்னை, பணி உத்தரவு வழங்கியுள்ளது மெஸர்ஸ் கிர்லாஸ்கர் நிறுவனம், வேலூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் இறுதி செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு நகர உட்கட்டமைப்பு நிதி நிறுவனம்/ வேலூர் நகராட்சியிடம் டிசம்பர் மாதம் 1998 ஆம் ஆண்டு சமர்ப்பித்துள்ளது.

மேற்படி அறிக்கையில் வேலூர் நகராட்சியின் பாதாளச் சாக்கடைத் திட்டம் இரண்டு கட்டங்களில் செயல்படுத்தவும், முதற்கட்ட திட்டம் 1998-99—லிருந்து மூன்றாண்டுகளிலும், இரண்டாவது கட்ட திட்டம் அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் செயல்படுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீடு ரூ.49.71 கோடியாகும். இத்திட்டத்திற்கான நிதியை வேலூர் நகராட்சியின் நிதியிலிருந்தோ அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்தோ மொத்தத் தொகையையும் கடனாகப் பெற்று திருப்பிச் செலுத்த முடியாத நிலைமையில் நகராட்சி இருந்தையால், இத்திட்டம் இதுவரை நகராட்சியில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. கிர்லாஸ்கர் திட்டமானது வேலூர் நகக் முழுமையும் பயன் பெறும் வ்வகையில் வடிவமைக்கப்படாமல், சுமார் மூன்றில் இரண்டு பகுதிக்கு மட்டுமே பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மத்திய மாநில அரசுகளின் மானியம் உள்ளாட்சிப் பங்கு மற்றும் மக்கள் பங்களிப்புடன் பாலாற்றுப் படுகையில் குடிநீர் மாசுபடுவதைத்

தடுக்கும் முகமாக வேலூர் நகராட்சியின் மேற்படி கிர்லாஸ்கர் திட்டத்தில் விடுபட்ட பகுதிகளையும் சேர்த்து (கிர்லாஸ்கர் மதிப்பீட்டில் கழிவுநீர்க் குழாய்களின் நீளம் 148 கி.மீ. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய முன்சாத்தியக்கூறு அறிக்கையின்படி கழிவுநீர்க் குழாய்களின் நீளம் 190 கி.மீ. பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க முடிவு செய்யப்பட்டு முன்சாத்தியக்கூறு அறிக்கை (Pre-feasibility Report) ரூ.76.60 கோடிக்குத் தயாரிக்கப்பட்டது. தொழில்நுட்ப நிலைக் குழுகூட்டத்தில் (Technical Standing Committee) வேலூர் மற்றும் சத்துவாச்சாரி பகுதிகளை இணைத்து திட்டம் தயாரிக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. இவ்வறிவுரைக்கிணங்க இத்திட்டம் 70 விழுக்காட்டுத் தொகையை மத்திய அரசின் மானியமாகவும், மீதமுள்ள 30 விழுக்காட்டுத் தொகையயை தமிழ்நாடு அரசு, நகராட்சி, பேரூராட்சி ஆகியவற்றின் பங்கு மற்றும் மக்களின் பங்களிப்பாகவும் பெற்று நிறைவேற்றுகின்ற வகையில் முன்சாத்தியக்கூறு அறிக்கை பங்களிப்பாகவும் பெற்று நிறைவேற்றுகின்ற வகையில் முன்சாத்தியக்கூறு அறிக்கை வேலூர் மற்றும் சத்துவாச்சாரி நகரங்களில் இணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.99.65 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. வரும் தொழில்நுட்ப நிலைக் குழுக் கூட்டத்தில் இத்திட்ட அறிக்கை பரிசீலிக்கப்பட்டு குழுவின் ஒப்புதல் வழங்கப்பட்ட பின் தமிழ்நாடு அரசு மூலமாக மத்திய அரசின் தேசிய நதிநீர் பாதுகாப்பு இயக்குனரகத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்படவுள்ளது.

முதற்கட்ட சாத்தியக் கூறு அறிக்கைக்கு மத்திய அரசின் அனுமதி பெற்றபின், மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விதிமுறைகளின்படி இத்திட்டத்திற்குத் தேவையான ஆய்வுத் தொகையினை வேலூர் நகராட்சி மற்றும் சத்துவாச்சாரி பேரூராட்சியினர் செலுத்தியபின்தான் விரிவான ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படும். களப் பணி ஆய்வுகள் முடிக்கப்பட்டபின் விரிவானன திட்ட மதிப்பீடு தேசிய நதிநீர் பாதுகாப்பு இயக்ககத்தின் விதிமுறைகளின்படி தயாரிக்கப்பட்டு மீண்டும் மத்திய மாநில அரசுகிளின் நிர்வாக அனுமதி பெற்று திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.



**XXIV. வேலூர்-சத்துவாச்சாரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்,**
**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை**

**அறிக்கை**

வேலூர் நகராட்சி மற்றும் சத்துவாச்சாரி பேரூராட்சி மற்றும் பாலாறு சங்கமிக்குமிடத்தை நீராதாரமாகக் கொண்ட ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசால் ரூ.19.22 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு தற்போது இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், இதுவரை 12 நீர் உறிஞ்சு கிணறுகள் அமைக்கும் பணி, 120 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி, 2 நீர் உந்து நிலைய மின் மோட்டார் அறைகள் மற்றும் 2 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 5.00 இலட்சம் லிட்டர் மற்றும் 3.00 இலட்சம் லிட்டர் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன. பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணிகள் விரைவான முன்னேற்றத்தில் உள்ளன. நீர் உந்து குழாய் பதிக்கும் பணிகள் 23.99 கிலோ மீட்டரில் இதுவரை 11.97 கிலோ மீட்டருக்கு பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பகுதியில் குழாய் பதிப்பதற்கு தேசிய நெடுஞ்சாலைத் துறையின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய நெடுஞ்சாலைத் துறையின் அனுமதி கிடைத்தவுடன் பணிகள் விரைந்து முடிக்கப்படும். 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு சத்துவாச்சாரி பேரூராட்சியினால் நிலம் ஒப்படைக்கப்பட வேண்டியுள்ளது.

இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தினை 9/2003-க்குள் முழுவதுமாக முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[2003 மே 10

## XXV. கோவை மாவட்டம் வால்பாறை தொகுதி உட்பட குடிநீர்ப் பிரச்சினை

**உறுப்பினர்: திரு. கோவை தங்கம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை**

### அறிக்கை

கோவை மாவட்டத்தில், கோவை மாநகராட்சி, திருப்பூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய 4 நகராட்சிகள், 59 பேரூராட்சிகள் மற்றும் 19 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 389 ஊராட்சிகளும் உள்ளன. அவற்றில் கீழ்க்காணும் குடிநீர் திட்டங்களின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது:

### 1. கோவை மாநகராட்சி

சிறுவாணி ஆணையை நீராதாரமாகக் கொண்ட சிறுவாணி குடிநீர்த் திட்டம் மூலம் 87 மில்லியன் லிட்டர் மற்றும் பில்லூர் ஆணையை நீராதாரமாகக் கொண்ட பில்லூர் (அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் மூலம்) 66 மில்லியன் லிட்டர், ஆக மொத்தம் 153 மில்லியன் லிட்டர் குடிநீர் தற்போது 4 நாட்களுக்கு ஒரு முறை நபர் ஒருவருக்கு 95 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

### 2. நகராட்சிகள்

(அ) திருப்பூர் நகராட்சி:

பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட திருப்பூர் முதல் குடிநீர் திட்டம் (5.4 mld) மற்றும் பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட திருப்பூர் இரண்டாம் குடிநீர்த் திட்டம் (24.5 mld) ஆகிய குடிநீர்த் திட்டங்களின் மூலம் தற்போது 5 நாட்களுக்கு ஒரு முறை நபர் ஒருவருக்கு 68 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) பொள்ளாச்சி நகராட்சி:

ஆழியார் ஆற்றை நீராதாரமாகக் கொண்ட பொள்ளாச்சி முதல் குடிநீர்த் திட்டம் (5.6 mld) மற்றும் ஆழியார் ஆற்றை நீராதாரமாகக் கொண்ட பொள்ளாச்சி இரண்டாம் குடிநீர்த் திட்டம் (7mld) ஆகிய குடிநீர் திட்ட்ங்களின் மூலம் தற்போது ஒரு நாள் விட்டு ஒரு நாள் நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



2003 மே 10]

(இ) உடுமலைப்பேட்டை நகராட்சி:

திருமூர்த்தி அணையை நீராதாரமாகக் கொண்ட உடுமலைப்பேட்டை முதல் குடிநீர்த் திட்டம் (3 mld) மற்றும் திருமூர்த்தி அணையை நீராதாரமாகக் கொண்ட உடுமைப்பேட்டை இரணாடம் குடிநீர்த் திட்டம் (8 mld) ஆகிய குடிநீர் திட்டங்களின் மூலம் தற்போது ஒருநாள் விட்டு ஒரு நாள் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(ஈ) மேட்டுப்பாளையம் நகராட்சி:

பவானி ஆற்றை நீராதாமக் கொண்டு மேட்டுப்பாளையம் முதல் குடிநீர்த் திட்டம் (6.5 mld) மற்றும் பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட மேட்டுப்பாளையம் குடிநீர் அபிவிருத்தி திட்டம் (15.44 mld) ஆகிய குடிநீர் திட்டங்களின் மூலம் தற்போது ஒருநாள் விட்டு ஒரு நாள் நபரொருவருக்கு 110 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

### (3) பேரூராட்சிகள்:

இம்மாவட்டத்தில் உள்ள 59 பேரூராட்சிகளில் 36 பேரூராட்சிகளுக்கு முழுமையான அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 23 பேரூராட்சிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் முதல் 65 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2002-03 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் 4 தவணைகளில் ரூ.145.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இவ்வொதுக்கீட்டுத் தொகையில் 221 வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு விட்டன. ஐந்தாவது கட்டத்தில் ரூ.75.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 56 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது இம்மாவட்டத்தில் அனைத்து பேரூராட்சிகளிலும் குடிநீர் தங்குதடையின்றி சீராக விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் வால்பாறை தொகுதிக்குட்பட்ட வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் 55 லிட்டரும், கோட்டூர் பேரூராட்சியில் 48 லிட்டரும், ஆணைமலை பேரூராட்சியில் 63 லிட்டரும், வால்பாறை பேரூராட்சியில் 78 லிட்டரும், தனி நபருக்கு ஒரு நாளுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே கோவை மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடு எந்த பேரூராட்சியிலும் இல்லை.

### (4) ஊராட்சிகள்:

இம்மாவட்டத்தில் உள்ள 19 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 389 ஊராட்சிகளில் 3064 குடியிருப்புகளில் இதுவரை 1986 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் நாள் ஒன்றுக்கு நபரொவருவருக்கு 40 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. 376 குடியிருப்புகளுக்கு இந்த நிதியாண்டில் குடிநீர் வழங்கத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. மீதமுள்ள 702 குடியிருப்புகளுக்கு பொதுமக்கள் பங்கேற்புடன் பகுதி சீரமைப்பு திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க நடவிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் இம்மாவட்டத்தில் மார்ச் மாதம் மூன்றாவது வாரத்தில் சராசரியாக 110 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளதால், மக்கள் பங்கேற்புடன் கட்டப்பட்டுள்ள ஊற்று குளம் மற்றும் தடுப்பணை மூலம் தண்ணீர் தேங்கி அருகிலுள்ள ஆழ்துளைக் கிணறுகள் நீர்ப் பிடிப்பு பெற்று தற்பொழுது குடிநீர் வசதி நிலைசற்று அபிவிருத்தி அடைந்துள்ளது.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்ட வால்பாறை தொகுதிக்குட்பட்ட வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் ஆனைமலை, வால்பாறை மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் பொதுமக்களுக்கு போதுமான அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் பொதுமக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏதும் இல்லை.

மேலும் கோவை மாவட்டத்திலுள்ள குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்தும் வகையில் 2002-2003 ஆம் ஆண்டில் தமிழக அரசு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்த நிதி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல்வேறு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஆகியவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



| உள்ளாட்சி அமைப்புகள் | வறட்சி நிவாரணம் | | | | இதரத் திட்டங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எடுக்கப்பட்ட பணிகள் | முடிக்கப்பட்ட பணிகள் | ஒதுக்கீடு (ரூ. லட்சத்தில்) | செலவு | எடுக்கப்பட்ட பணிகள் | முடிக்கப்பட்ட பணிகள் (ரூ. லட்சத்தில்) | ஒதுக்கீடு | செலவு |
| 1. ஊராட்சிகள் | 631 | 430 | 622 | 430 | 874 | 837 | 477 | 448 |
| 2. பேரூராட்சிகள் | 277 | 221 | 220 | 145 | 182 | 151 | 13293 | |
| 3. நகராட்சிகள் | 66 | 61 | 50 | 45 | - | - | - | - |
| 4. கோவை மாநகராட்சி | 40 | 22 | 68 | - | 291 | 240 | 215 | 40 |
| மொத்தம் | 1014 | 734 | 960 | 620 | 1347 | 1228 | 824 | 581 |

## XXVI. வேலூர் மாவட்டம் குடிநீர் பிரச்சினை

**உறுப்பினர்: திரு. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை**

### அறிக்கை

வேலூர் மாவட்டத்தில் 9 நகராட்சிகளும், 22 நகரப் பேரூராட்சிகளும், 6 ஊரகப் பேரூராட்சிகளும் 20 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 753 ஊராட்சிகளில் 5031 ஊரகக் குடியிருப்புகளும் உள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் பருவ மழை பொய்த்தமையால் கடும் வறட்சி ஏற்பட்டு அனைத்து குடிநீர் ஆதாரங்களிலும் நீர் மட்டம் நாளுக்கு நாள் வெகுவாக குறைந்து வருகிறது. பெரும்பான்மையான உள்ளாட்சி அமைப்புகள் தத்தம் மட்டத்தில் போர்க்கால அடிப்படையில் குடிநீர்ப் பிரச்சினைகள் உள்ள பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து கைபிறைப்பான்கள் பொருத்தியும், லாரிகள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்து வருகின்றன.

[2003 மே 10

மேலும், வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக கீழ்குறித்த பணிகள் நடைபெற்று வருகின்றன:

(அ) நகராட்சிகளைப் பொறுத்தவரையில் 9 நகராட்சிகளிலும், கைப்பம்புகளுடன்கூடிய புதிய ஆழ்துளைக் கணறுகள் அமைக்கும் பணிகள் 121, புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து மின்விசைப் பம்பு பொருத்தும் பணிகள் 12, கைப்பம்புகளுக்கான உதிரி பாகங்கள் வாங்குதல் 6, லாரிகள் மூலம் குடிநீர் பணிகள் 6 ஆக மொத்தம் 145 பணிகள் ரூ.76.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் 119 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் 27 பேரூராட்சிகளிலும், கைப்பம்புகளுடன்கூடிய புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் 100, புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து மின்விசைப் பம்பு பொருத்தும் பணிகள் 43, கைப்பம்புகளுக்கான உதிரி பாகங்கள் வாங்குதல் 40, குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு பணிகள் 4, ஆக மொத்தம் 187 பணிகள் ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் 124 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

(இ) ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரையில், 20 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கிய குடியிருப்புகளிலும், கைப்பம்புகளுடன்கூடிய புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் 579, புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து பம்பு பொருத்தும் பணிகள் 162, கைப்பம்புகளுக்கான உதிரிப் பாகங்கள் வாங்குதல் 19, குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு பணி 1, ஆக மொத்தம் 761 பணிகள் ரூ.380.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை ரூ.264.00 இலட்சம் மதிப்பீட்டில் 511 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், தற்போது நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வறட்சி நிவாரணத் திட்டத்தின்



2003 மே 10]

கீழ்க்குறித்த கூடுதல் பணிகளை மேற்கொள்வதற்கான கருத்துரு தயாரிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளது.

(1) நகராட்சிகளைப் பொறுத்தவரையில் நகராட்சிகளிலும், கைப்பம்புகளுடன்கூடிய புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் 91, புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து மின்விசைப் பம்பு பொருத்தும் பணிகள் 6, குடிநீர் குழாய் விஸ்தரிப்புப் பணிகள் 3, சிறு மின்விசைப் பம்புத் திட்டம் அமைக்கும் பணிகள் 34, லாரிகள் மூலம் குடிநீர் வழங்கும் பணிகள 6 ஆக மொத்தம் 140 பணிகள் ரூ.319.85 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுதல்.

2) அனைத்து 27 பேரூராட்சிகளிலும், கைப்பம்புகளுடன்கூடிய புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் 314, புதிய ஆழ்துளைக் கணறுகள் அமைத்து மின் விசைப்பம்பு பொருத்தும் பணிகள் 42, குடிநீர்க் குழாய் விஸ்திரிப்புப் பணிகள் 15, சிறு மின்விசைப் பம்பு பொருத்தும் பணிகள் 84, லாரிகள் மூலம் குடிநீர் வழங்கும் பணிகள் 2, ஆக மொத்தம் 457 பணிகள் ரூ.262.82 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுதல்.

(3) ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரையில் 20 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கிய 571 ஊராட்சிகளுக்குட்பட்ட, 1253 குடியிருப்புகளில், கைப்பம்புகளுடன்கூடிய புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் 651, புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து மின்விசைப் பம்பு பொருத்தும் பணிகள் 373, குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு பணிகள் 42, சிறு மின்விசைப் பம்பு பொருத்தும் பணிகள் 182, ஆக மொத்தம் 1253 பணிகள் ரூ.1281.85 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுதல்.

இவற்றினைத் தவிர, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நகராட்சிகள் மற்றும், நகர, ஊரகப் பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள குடிநீர்த் திட்டங்கள், மேலும் அவற்றின் தற்போதைய குடிநீர் நிலவரம் குறித்த விவரங்கள் அட்டவணையில் பூர்த்தி செய்யப்பட்டு இத்துடன் கீழே இணைக்கப்பட்டுள்ளன.

[2003 மே 10

## இணைப்பு

| வ. எண் | உள்ளாட்சி அமைப்புகள் | மக்கள் தொகை | வடிவமைக் கப்பட்டபடி வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவவுக்கு லிட்டரில் | தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு லிட்டரில்) | செயலாக்கத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் |
|---|---|---|---|---|---|
| | **நகராட்சிகள்** | | | | |
| 1. | வேலூர் | 177413 | 90 | 20 | ரூ.10.22 கோடி மதிப்பீட்டில் பொன்னை ஆற்றை நீராதாரமாகக் கொண்டு வேலூர், சத்துவாச்சாரி மற்றும் இதர 12 வழியோரக் கிராமக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. |
| 2. | திருப்பத்தூர் | 60803 | 90 | 16 | ரூ.412.50 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தித் திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது. |
| 3. | ஆம்பூர் | 99855 | 90 | 1.50 குடிப்பதற்கு உகந்தவை. 14.00 குடிப்பதற்கு அல்லாதவை. | ரூ.638.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது. |
| 4. | வாணியம்பாடி | 85459 | 90 | 30 | ரூ.994.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தித் திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது. |
| 5. | குடியாத்தம் | 91376 | 90 | 64 | ரூ.413.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தித் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. |



2003 மே 10]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | ஆற்காடு | 50237 | 90 | 65 | — |
| 7. | இராணிப்பேட்டை | 47236 | 90 | 72 | ரூ.105.70 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தித் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. |
| 8. | வாலாஜாப்பேட்டை | 29472 | 90 | 75 | — |
| 9. | அரக்கோணம் | 77463 | 90 | 45 | அபிவிருத்தித் திட்டம் ஏற்படுத்த ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. |
| | **நகர மற்றும் ஊரகப் பேரூராட்சிகள்** | | | | |
| 1. | ஜோலார் பேட்டை | 35477 | 70 | 23 | ரூ.116.70 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தித் திட்டம் செயலுக்கு எடுத்து கொள்ளப்பட உள்ளது. |
| 2. | நாட்றாம்பள்ளி | 9075 | 70 | 39 | ரூ.143.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தித் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. |
| 3. | ஆலங்காயம் | 16846 | 70 | 30 | — |
| 4. | பேரணாம்பட்டு | 41323 | 70 | 24 | ரூ.234.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தித் திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது. |
| 5. | உதேயந்திரம் | 11598 | 70 | 34 | — |
| 6. | பள்ளிகொண்டா | 20678 | 70 | 39 | ரூ.28.99 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. |
| 7. | ஒடுகத்தூர் | 8038 | 70 | 50 | ரூ.88.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. சத்துவாச்சாரி | 45439 | 70 | 20 | ரூ.19.22 கோடி மதிப்பீட்டில் பொன்னை ஆற்றை நீராதாரமாகக் கொண்டு வேலூர் சத்துவாச்சாரி மற்றும் இதர 12 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. |
| 9. சேண்பாக்கம் | 13459 | 70 | 30 | — |
| 10. காட்பாடி | 15925 | 70 | 25 | ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் நீராதாரம் தோற்றுவிக்க பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 11. தாராபடவேடு | 30238 | 70 | 30 | — |
| 12. கழிஞ்சூர் | 16918 | 70 | 49 | — |
| 13. காந்தி நகர் | 9708 | 70 | 39 | ரூ.234.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தித் திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது. |
| 14. அல்லாபுரம் | 26660 | 70 | 26 | ரூ.471.27 இலட்சம் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது. |
| 15. தொரப்பாடி | 14292 | 70 | 24 | |
| 16. மேல்விஷாரம் | 36675 | 70 | 24 | ரூ.178.60 இலட்சங்கள் மதிப்பீட்டில் அபிவிருத்தித் திட்டப் பணிகள் மேற் கொள்ளப்பட உள்ளன. |
| 17. அம்மூர் | 11296 | 70 | 35 | ரூ.172.25 இலட்சம் மதிப்பீட்டில் திட்டப் பணிகள் மேற் கொள்ளப்பட உள்ளன. |



| | | | | |
|---|---|---|---|---|
| 18. விளாப்பாக்கம் | 8053 | 70 | 37 | — |
| 19. திமிரி | 14939 | 70 | 10 | ரூ.721.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. |
| 20. கலவை | 9761 | 70 | 21 | |
| 21. காவேரிப்பாக்கம் | 12514 | 70 | 70 | — |
| 22. மணப்பாக்கம் | 10142 | 70 | 70 | — |
| 23. நெமிலி | 9382 | 70 | 64 | — |
| 24. தக்கோலம் | 10167 | 70 | 44 | — |
| 25. சோளிங்கர் | 26567 | 70 | 38 | ரூ.261.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தித் திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது. |
| 26 திருவலம் | 7945 | 70 | 70 | ரூ.21.06 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. |
| 27 பொள்ளாத்தூர் | 8014 | 70 | 52 | — |

## ஊரகக் குடியிருப்புகள்

இம்மாவட்டத்திலுள்ள 20 ஒன்றியங்களில், 397 ஊரகக் குடியிருப்புகளில் மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு குறைந்துள்ளது. அதற்காக பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் (SRP) 257 ஊரகக் குடியிருப்புகளில் ரூ.234.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும். இரு மாதங்களில் அனைத்துப் பணிகளையும் முடித்து மக்கள் பயனுக்கு ஒப்படைக்கப்படும்.

இதுதவிர, இதர 140 குடியிருப்புகளுக்கு ரூ.177.67 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

[2003 மே 10

## XXVII. வேலூர் மாவட்டம், தோல் தொழிற்சாலைகள் நிபந்தனைகளை பூர்த்தி செய்தும் 'கன்செண்ட்' ஆர்டர் தரப்படாதது

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் (வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை)**

### அறிக்கை

தமிழ்நாட்டிலுள்ள 970 தோல் தொழிற்சாலைகளில், 601 தோல் தொழிற்சாலைகள் வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளன. இவை தோல் பதனிடுவதற்கு, கிழக்கிந்திய பதனிடும் முறை/குரோம் பதனிடும் முறை ஆகியவற்றைப் பின்பற்றுகின்றன. 601 தோல் தொழிற்சாலைகளில் தனியாகவோ அல்லது பொதுவாகவோ கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துள்ள 488 தோல் தொழிற்சாலைகளுக்குத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமானது உச்ச நீதிமன்றம் டபிள்யூ.பி (சிவில்) எண் 914/1991-ன்கீழ் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் டபிள்யூ.பி. எண் 13433/1996-ன்கீழ், வழங்கிய பல்வேறு உத்தரவுகளின்படி 31-3-1999 வரை இசைவாணையை, நிபந்தனைகளுடன் இயங்க அனுமதி வழங்கியுள்ளது. எஞ்சிய 113 தோல் தொழிற்சாலைகள் தனியாகவோ அல்லது பொதுவாகவோ கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காததால், வேலூர் மக்கள் நல்வாழ்வு மன்றம் கொடுத்த வழக்கில் உச்ச நீதிமன்றம் டபிள்யூ.பி(சிவில்) எண் 911/1991-ன்கீழ் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் டபிள்யூ.பி எண் 13433/1996-ன்கீழ் வழங்கிய உத்தரவுகளின்படி மூடப்பட்டுள்ளன.

இயக்கத்திலுள்ள 488 தோல் தொழிற்சாலைகளில் 391 தோல் தொழிற்சாலைகள், வேலூர் மாவட்டத்திலுள்ள வாணியம்பாடி-வளையம்பட்டு, வாணியம்பாடி-உதயேந்திரம், ஆம்பூர்-துத்திப்பட்டு, ஆம்பூர்-மளிகைத்தோப்பு, பேரணாம்பட்டு-பக்காலபள்ளி, இராணிப்பேட்டை-வி.சி. மோட்டூர், இராணிப்பேட்டை-சிட்கோ, இராணிப்பேட்டை-சிப்காட், சிட்கோ மற்றும் மேல்விஷாரம், ஆகிய 9 இடங்களில் இயங்கும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உறுப்பினர்களாக உள்ளன. எஞ்சிய 97, தோல் தொழிற்சாலைகள் தனியாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ளன. தற்போது தனியாகவோ அல்லது பொதுவாகவோ தோல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காத எந்தவொரு தொழிற்சாலையும் இயங்க வாரியம் அனுமதி அளிக்கவில்லை.



2003 மே 10]

மேற்கூறியபடி சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்துள்ள தோல் தொழிற்சாலைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மாதிரிகளின் ஆய்வு அறிக்கையின்படி மொத்த கரைந்துள்ள திடப்பொருட்களின் அளவைத்தவிர, ஏனைய குறியீடுகள் வாரியம் நிர்ணயித்துள்ள அளவுக்கு பொதுவாக உட்பட்டு இருக்கின்றன. மொத்த கரைந்துள்ள திடப்பொருட்களின் அளவு, வாரியம் நிர்ணயித்த அளவான 2100 மி.கி./லிட்டர் அளவைவிட அதிகமாக உள்ளது. இவ்வாறு வெளியேற்றப்படும் அதிக உப்புத் தன்மை கொண்ட கழிவுநீரால் நிலம், நிலத்தடி நீர் மற்றும் விவசாய நிலங்கள் சீர்கேடு அடைந்துள்ளன.

உச்ச நீதிமன்றம் டபிள்யூபி. (சிவில்) எண் 914/91-ன்கீழ் வழங்கிய 28-8-1996 நாளிட்ட தனது உத்தரவில் தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தினால் (NEERI) அங்கீகரிக்கப்பட்டு, வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட மொத்த கரைந்துள்ள திடப்பொருட்களின் அளவான 2100 மி.கி./லிட்டர் என்பது அமலில் இருக்கும் என ஆணையிட்டுள்ளது. மேற்கூறிய தர அளவினை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தோல் தொழிற்சாலைகளும் அடைய வேண்டும். சுற்றுப்புற நீரின் தரத்தைத் தொடர்ந்து பாதுகாக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் நீதிமன்ற ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள தோல் தொழிற்சாலைகள் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (Central Leather Research Institute) இணைந்து பதனிடும் முறைகளை ஆய்வு செய்தும், உள்நடவடிக்கைகளை மேற்கொண்டும், மொத்த கரைந்துள்ள திடப்பொருட்களின் அளவைக் குறைக்க முன்வந்துள்ளன.

மேலும், ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவனமும் (United Nations Industrial Development Organisation) கீழ்க்காணும் தூய தொழில்நுட்ப முறைகளைப் பரிந்துரை செய்துள்ளது.

1. பதனிடப்படாத தோலில் உள்ள உப்புக்களை நீக்கி அவற்றை மீண்டும் பயன்படுத்துதல்.

2. கண்ணாம்பு திரவத்தினை மறு சுழற்சி செய்தல்.

3. குரோமினை திரும்பப் பெற்று மீண்டும் பயன்படுத்துதல்.

4. சல்ஃபைடு அளவினைக் குறைத்து பதனிடுதல்.

தோல் தொழிற்சாலை கழிவுநீரில் அதிக அளவில் இருக்கும் உப்புத் தன்மைக்குக் காரணமான மொத்த கரைந்துள்ள திடப்பொருட்களின் அளவை மட்டுப்படுத்த தோல் தொழிற்சாலைகள் தூய தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், வாரியம் நிர்ணயித்துள்ள மொத்த கரைந்துள்ள திடப்பொருளின் தர அளவான 2100 மில்லிகிராம்/ லிட்டர் அடைய எதிர்மறை சவ்வூடு பரவல் போன்ற முன்னோடி சுத்திகரிப்பு முறையை நிறுவி செயல்படுத்துமாறு வாரியம் தோல் தொழிற்சாலைகளைக் கேட்டுக்கொண்டுள்ளது. மேற்கூறிய முன்னோடி சுத்திகரிப்பு முறையை நிறுவி இயக்கும்பட்சத்தில் வாரிய தரக் கட்டுப்பாட்டை அடைவதோடு, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மீண்டும் உற்பத்தியில் பயன்படுத்துவதன் மூலம் கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலையை அடைய முடியும். மேலும் எதிர்மறை சவ்வூடு பரவல் சுத்திகரிப்பு முறையில் வெளிவரும் கசடுகளை இயந்திர முறையில் ஆவியாக்கி, பின்னர் அவற்றை உரிய பாதுகாப்பான முறையில் அகற்ற வேண்டும்.

எனவே, வாரியம் தோல் தொழிற்சாலைகளை மேற்கூறிய முன்னோடி சுத்திகரிப்பு முறைகளை நிறுவி இயக்கும்படி தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. வேலூர் மாவட்டத்தில் எந்தவொரு தோல் தொழிற்சாலையும் மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவில்லை.

தற்பொழுது வேலூர் மாவட்டத்தில் இரண்டு பெரிய மற்றும் ஒரு நடுத்தர தோல் தொழிற்சாலைகள் எதிர்மறை சவ்வூடு பரவல் சுத்திகரிப்பு முறையை அமைக்க முன்வந்து, அதற்கான வேலைகளை மேற்கொண்டு வருகின்றன. மேற்கூறியபடி, எதிர்மறை சவ்வூடு பரவல் சுத்திகரிப்பு முறையை நிறுவி வாரியம் நிர்ணயித்துள்ள மொத்த கரைந்துள்ள திடப்பொருளின் அளவான 2100 மில்லிகிராம்/லிட்டர் அடையும் பட்சத்தில் தோல் தொழிற்சாலைகளுக்கு இசைவாணையை உரிய நிபந்தனைகளுடன் வாரியம் வழங்கும். எனினும், தற்பொழுது வேலூர் மாவட்டத்தில் தனியாக மற்றும் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைத்துள்ள 488 தோல் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. எனவே, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரில் மொத்த கரைந்துள்ள திடப்பொருளின் அளவான 2100 மில்லிகிராம்/லிட்டர் அடையாத தோல் தொழிற்சாலைகளுக்கு இசைவாணை அளிப்பது மேற்கூறிய நீதிமன்ற ஆணையை அவமதிப்பதாகக் கருத ஏதுவாகும்.



## XXVIII. தூத்துக்குடி, விசைப்படகு மீனவர்களின் மீன் பிடிக்கும் உரிமம் ரத்து

**உறுப்பினர்கள்:** **திரு. ஜே. ஹேமச்சந்திரன்**
**திரு. கே. மகேந்திரன்**

**அமைச்சர்:** **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் (மீன்வளத் துறை)**

### அறிக்கை

தமிழ்நாடு கடல் மீன் பிடிப்பு ஒழுங்குப்படுத்தும் சட்டம் 1983-ன்படி மீன்பிடி விசைப் படகுகள் தங்குதளத்திலிருந்து காலை 5–00 மணிக்கு மீன்பிடித் தொழிலுக்குச் சென்று இரவு 9–00 மணிக்கு முன்னதாக தங்குதளம் வந்தடைய வேண்டும். மேலும் கடற்கரையில் இருந்து 3 கடல் மைல்களுக்கு அப்பால் மீன்பிடித் தொழில் செய்ய வேண்டும். ஆழ்கடல் மீன்படி விசைப் படகுகள் காலை 6–00 மணிக்கு தங்குதளத்திலிருந்து புறப்பட்டு மற்றொரு நாளில் மாலை 6–00 மணிக்குள் தங்குதளம் வந்தடைய வேண்டும். இப்படகுகள் கடற்கரையிலிருந்து 3 கடல் மைல்களுக்கு அப்பாலும் மற்றும் 25 பேதம்ஸ் (1 பேதம்-6 அடி) ஆழத்திற்கு அப்பாலும் மீன் பிடிப்பு செய்ய வேண்டும். கட்டுமரங்கள் மற்றும் நாட்டுப் படகுகளுக்கு மீன் பிடிப்பு நேரம் மற்றும் மீன் பிடிப்பு எல்லை குறித்த வரைமுறைகள் இல்லை. இந்நிலையிலும் தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த 20 ஆண்டுகளாக நாட்டுப் படகு மீனவர்களும் விசைப் படகு மீனவர்களும் அவர்களுக்குள்ளாகவே தொழில் முறை ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு இரவு 11–00 மணி வரை மீன்பிடித்து வந்தனர்.

கடந்த 10-9-2002 அன்று வி.ஓ.சி. 446 எண்ணுடைய விசைப் படகு, வி.ஓ.சி. 3032 எண்ணுடைய நாட்டுப் படகின்மீது இரவு நேரத்தில் மோதியதால் நாட்டுப்' படகில் மீன்பிடித் தொழில் செய்து கொண்டிருந்த 3 மீனவர்கள் உயிரிழந்தனர். இதன் காரணமாக நாட்டுப் படகு மீனவர்கள் விசைப் படகு மீனவர்களுடன் இறுதியாக 22-1-2001 அன்று செய்து கொண்ட தொழில் முறை ஒப்பந்தத்திலிருந்து விலகி, மீன்பிடிக் கலன்கள் அனைத்தும் சட்டவிதிகளின்படியான மீன்பிடிப்பு நேரத்தை பின்பற்ற வேண்டுமென வலியுறுத்தினர். இதன் காரணமாக மீன்பிடி விசைப் படகுகள் மேற்குறித்த நிகழ்வுக்குப்பின் மீன் பிடிப்புக்குச் செல்லவில்லை.

நாட்டுப் படகு மற்றும் விசைப்படகு மீனவர்களுக்கிடையே ஏற்பட்ட தொழில் தகராறு மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு மாவட்ட நிர்வாகம் 30-9-2002, 13-10-2001 ஆகிய தேதிகளில் அமைதிக் கூட்டங்களை நடத்தி இருதரப்பினரும் சட்டவிதிகளில் வரையறை செய்யப்பட்டுள்ள மீன் பிடிப்பு நேரத்தின்படி மீன் பிடிப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். எனினும் சில மீன்பிடி விசைப் படகு மீனவர்கள், அவர்ளது விசைப் படகுகள் 15 மிட்டர் நீளத்திற்கும், 120 குதிரை சக்தி திறனுக்கும் மேற்பட்டது எனக் குறிப்பிட்டு கடலில் இரவு தங்கி மீன் பிடிப்பு செய்வதற்கு ஏதுவாக ஆழ்கடல் மீன் பிடிப்பிற்கு உரிமம் கேட்டு தூத்துக்குடி மீன் துறை உதவி இயக்குநரை அணுகினர். இதற்குத் தேவையான நிபந்தனைகளை நிறைவு செய்திருக்கவில்லை. இதனால் தங்கு கடல் மீன் பிடிப்பு உரிமம் வழங்கப்படவில்லை. துறையின் இந்நடவடிக்கையினை ஆட்சேபித்து தூத்துக்குடி மாவட்ட விசைப் படகு முன்னேற்றச் சங்கம் 12-11-2002 முதல் 5 வழக்குகளை ஒன்றன்பின் ஒன்றாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தும், சட்டவிதிகளை மீறியும் மீன் பிடிப்பு நேரத்தைக் கடைப்பிடிக்காமலும் மீன் பிடிப்பில் ஈடுபட்டன. நாட்டுப் படகு மீனவர்களின் உயிருக்கும் மீன்பிடி சாதனங்களுக்கும் ஏற்படக்கூடிய இழப்பினைக் கருத்தில் கொண்டு சட்டவிதிகளை மீறி மீன் பிடிப்பு செய்து வரும் மீன்பிடி விசைப்படகுகளை முடக்கம் செய்து மீன் துறை உதவி இயக்குநர் 4-12-2002 அன்று விசைப் படகு உரிமையாளர்களுக்கு அறிவிப்பு அனுப்பினார். இவ்வறிவிப்பினைப் பெற மறுத்த விசைப் படகு உரிமையாளர்கள் தொடர்ந்து சட்டவிதிகளை மீறி மீன் பிடிப்பு செய்து வந்தனர். இதனிடையே 17-12-2002 அன்று மாவட்ட நிர்வாக அளவில் அமைதக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு சட்டவிதிகளின்படி மீன் பிடிப்பு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டது. எனினும் விசைப் படகுகள் சட்டவிதிகளை மீறி மீன் பிடிப்பு செய்து வந்தால் தூத்துக்குடி மீன்துறை இணை இயக்குநர் (மண்டலம்), தூத்துக்குடி, இப்பிரச்சினை குறித்து விசாரணைக்கு வருமாறு விசைப் படகு உரிமையாளர்களுக்கு அறிவிப்பு அனுப்பினார். எனினும் விசைப் படகு உரிமையாளர்கள் விசாரணைக்கு வராத நிலையில் மீன்பிடி



விசைப் படகுகளின் மீன் பிடிப்பு உரிமத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து 10-1-2003, 14-1-2003 மற்றும் 22-01-2003 தேதிகளில் (Exparty) தீர்ப்பினை வழங்கினார்.

விசைப் படகு மீனவர்களால் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட 5 வழக்குகள் மீதான இரு தரப்பு வாதங்கள் முடிவடைந்து, 13-2-2003 அன்று தமிழ்நாடு கடல் மீன் பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம், 1983-ன்கீழ் மீன்பிடிக் கலன்களை முறைப்படுத்துவதற்கு அரசினால் வழங்கப்பட்ட ஆணைகள் மற்றும் துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் செல்லத்தக்கன என்றும், மேலும் சட்டவிதிகளைக் கண்டிப்புடன் செயல்படுத்துமாறும் ஆணையிட்டு வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டன. மீன் துறை இணை இயக்குநர் (மண்டலம்), தூத்துக்குடி, மீன்பிடி விசைப் படகுகளின்படி மீன் பிடிப்பு உரிமத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து ஆணையிட்டுள்ளதன் பேரில் கடந்த 11-02-2003 வரை 190 விசைப் படகு மீனவர்கள் சட்டத்தின்கீழ் மேல்முறையீட்டு அதிகாரியான மீன் துறை இயக்குநருக்கு முறையீட்டு மனுக்கள் அனுப்பியிருந்தனர். இந்த மனுக்களின்மீது 18-3-2003 அன்று விசாரணை நடத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பின்படி சட்டவிதிகளை மீறிச் செயல்பட்ட மீன்பிடி விசைப் படகு உரிமையாளர்கள் தண்டத் தொகையை (Penalty Amount) தூத்துக்குடி மாவட்டத்தின் மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் செலுத்தி, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மீன்பிடி உரிமத்தைத் திரும்பப் பெற்று மீன் பிடிப்பில் ஈடுபடலாம். எனவே, சட்டவிதிகளால் வரையறுக்கப்பட்ட மீன்பிடி நேரத்தின்படி மீன்பிடி விசைப் படகுகள் மீன் பிடிப்பு செய்வதற்குத் தடை ஏதும் இல்லை. (எனினும் தற்பொழுது மீன் பிடிக்க ஏப்ரல் 15 முதல் மே 29 ஆம் தேதி வரை தடை காலமாகும்).

13-2-2003 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து விசைப் படகு உரிமையாளர்கள் தொடுத்துள்ள மேல்முறையீட்டு மனு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

[2003 மே 10

## XXIX. நாகப்பட்டினம் மாவட்ட மீனவர்கள், இலங்கை இராணுவம் விடுதலை செய்யாதது

**உறுப்பினர்: திரு. ஜெக. வீரபாண்டியன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் (மீன்வளத் துறை)**

### அறிக்கை

4-3-2003 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், கீச்சாங்குப்பம் பகுதியிலிருந்து க்யூ.டி.எம்.(எஸ்) 1248 என்ற படகில் திருவாளர்கள் இளங்கோவன், ரகு, பரமானந்தன், சுந்தர், பாண்டியன் ஆகிய ஐந்து மீனவர்களும், டி.ஜே.சி. 955 என்ற படகில் மாணிக்கச்சாமி, ராஜா, முருகானந்தம், ரவீந்திரன், சந்திரன் ஆகிய ஐந்து மீனவர்களும், டி.ஜே.எண்.25 என்ற படகில் வேலாயுதம் திருவோணம், பாலு, குமார், சிவகுமா ஆகிய 5 மீனவர்களும், டி.ஜே.சி.747 என்ற படகில் சிவானந்தம், சுந்தரம், மணி, ஆறுமுகம், நவநீதம், சாம்பசிவம் ஆகிய 6 மீனவர்களும், ஆக மொத்தம் 21 மீனவர்கள் நான்கு படகுகளில் கடலில் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்கள் கவனக்குறைவால் சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டிச் சென்று இலங்கை கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் மாநில அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கைகளினாலும், இலங்கையின் மன்னார் மாவட்ட நீதிமன்ற ஆணையின்படியும் 17 மீனவர்கள் மட்டும் 12-3-2003 அன்று விடுவிக்கப்பட்டனர். மீதமுள்ள நான்கு மீனவர்கள்மீது குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் உள்ளதால், தாங்கள் சென்ற நான்கு படகுகளுடன் இலங்கை சிறையில் உள்ளனர். இலங்கை சிறையிலுள்ள தமிழகத்தின் மண்டபம், இராமேஸ்வரம் போன்ற பிற பகுதி மீனவர்களுடன் இம்மீனவர்களையும் படகுகளுடன் விடுவித்து, தாயகம் திருப்பி அனுப்பிட இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நான்கு மீனவர்களுடன் மேலும் 27 மீனவர்கள் (மொத்தம் 31) மற்றும் 41 படகுகள் இலங்கை அரசாங்கத்தின் காவலில் உள்ளனர்.



2003 மே 10]

2) இந்நிலையில் இலங்கையிலுள்ள மன்னார் மாவட்ட நீதிமன்றம், கைப்பற்றப்பட்டுள்ள 41 தமிழகப் படகுகளின் உரிமையாளர்களை மன்னார் நீதிமன்றம் முன் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்துப்பின் தங்களது படகுகளைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் செல்லலாமென உத்தரவிட்டிருந்தது. அவ்வுத்தரவினைத் தொடர்ந்து 41 படகுகளின் உரிமையாளர்கள் இலங்கைக்குச் சென்று மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்து, பின்னர் தங்களது படகுகளை எடுத்து வருவதற்கு அப்படகுகளின் உரிமையாளர்களிடத்தில் கடவுச்சீட்டு போன்ற பத்திரங்கள் இல்லாததால், அவர்கள் இலங்கை செல்ல சிறப்பு அனுமதி வேண்டி மத்திய அரசின் வெளிவிவகாரத் துறையின் ஒப்புதல் வேண்டப்பட்டது. ஆனால் மத்திய அரசின் வெளிவிவகாரத் துறையோ இதுபோன்ற நேர்வுகளின் அயல் நாடுகளுக்கு இந்திய மீனவர்களை அனுப்பி வாக்குமூலம் கொடுக்கச் செய்தால் எதிர்காலத்தில், சிறைப் பிடிக்கப்பட்ட மீனவர்களை மீட்பதில் பின் விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும், இவர்களை நீதிமன்றத்தில் முன் நிறுத்தாமலேயே விடுவிக்க இயலும் எனவும் தெரிவித்து இந்த நடவடிக்கையை கைவிடுமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. இத்தகவல் மீன் துறை இயக்குநர் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இலங்கையில் சிறைப் பிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும் படகுகளையும் மீட்க மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

. . .

226059. V24,31 P13
P03.51
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226059
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.